# சத்திய யுகம்

பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

கோயம்புத்தூர் - 18

வன்பெரு வானகமுய்ய அமரருய்ய

மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய

துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச்

சுகம் வளர அகமகிழும் தொண்டர்வாழ

அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்

அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்

இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்

இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே

ஸ்ரீகுலசேகராழ்வார் திருவடிகள் போற்றி!!

# புத்துலகு செய்வோம்

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்

தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

அமுதே தமிழே அழகிய மொழியே எமதுயிரே

தேனே தெள்ளமுதே தெவிட்டாத இன்பமே எமதறிவே

கனியே முத்தே கற்பகத் தருவே எமதுறவே

நாம் வாழும் இந்தப் பூமி மிகவும் செழிப்பானது. கோடானகோடி உயிர்க்குலங்கள் இங்கே நிறைந்துள்ளன. உயிரினங்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்தே வாழ்கின்றன. பரிணாமத்தில் இனம் அல்லது சிற்றினம் எனப் பெயரிடப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட தொகுதி விலங்குகள் தங்களுக்குள் மிகுந்த ஒத்துழைப்போடும், புரிந்துணர்வோடும் வாழ்ந்து வருகின்றன.

உலகிலுள்ள ஒட்டுமொத்த மனிதரும் ஒரே இனமாகத்தான் கருதப்படுகிறார்கள். பெருங்கூட்டமாக வாழ்ந்துவரும் மனிதர்களுக்குள்ளும் தகுந்த ஒத்துழைப்பும், புரிந்துணர்வும், நட்பும் தொன்றுதொட்டே இருந்து வருகிறது. மனிதரின் இத்தனை முன்னேற்றங்களுக்கும் இந்த ஒத்துழைப்பே காரணம். மனிதர்களுக்குள் வாழ்க்கைத் தேவைகள் சார்ந்து போட்டி, பொறாமை, பகை ஏற்படுவது இயல்பே. எனினும் வாழ்க்கைத் தேவைகள் எதுவுமின்றி, சாதி, மதம் போன்றவற்றிற்காக மனிதருக்குள் வெறுப்பும், பகையும், சண்டையும் உண்டாவதை எப்படி எடுத்துக்கொள்வது.

திருமலைபுரத்தில் தேவர், தேவேந்திரர் என இரண்டு குடிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வாழ்கிறார்கள். இருவரின் தாய்மொழியுமே தமிழ்தான். பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் சடங்குமுறைகளும் ஒன்றுபோலவேதான் உள்ளன. பெரும்பாலான குடும்பங்களின் பொருளாதார நிலையும் ஏறக்குறைய ஒத்திருக்கிறது. இருவரின் குலதெய்வமும் கருப்பசாமியே. இவ்வளவு ஒற்றுமைகள் இருந்தும் அண்மைக் காலங்களில் இருகுடிகளும் ஒன்றுபட்டு, உள்ளார்ந்த நட்பாக இல்லாமல் மனதளவில் பெரிய விலக்கத்தோடு வாழ்கிறார்கள்.

மனிதர் மேலும்மேலுமென முன்னேற்றமடைந்து வரும்போது, மண்ணில் வாழும்காலம் கூடும்போது, வாழ்க்கைக்கான வசதி வாய்ப்புகள் பெருகும்போது, பண்பாடு சிறப்படைந்து வரும்போது, மனிதருக்கிடையேயான உறவும், நட்பும் கூடவேண்டும், சிறக்க வேண்டும் என்பதுதானே உலக இயல்பு. மாறாக, விலக்கமும், பகையும் பெருகுகிறதெனில், மனித வாழ்வில், சமூக அமைப்பில் பிழைகள் நிகழ்கின்றன என்றே பொருளல்லவா.

எமது சிறுவயதில் இரண்டு குடிகளும் அதிக அன்போடு பழகுவார்கள். இது பற்றியெல்லாம் யாம் யார் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளோம். திருமலைபுரம்

என்றில்லாமல் தென்தமிழகம் முழுக்கவே தேவேந்திரர் மற்றும் தேவர் குடிகளுக்குள் நல்லிணக்கம் இல்லை என்பது வருத்தற்குரியது. நல்ல மனம் படைத்தவரான இருகுடியினரும் தமிழின் பெயரில் ஒற்றுமை காணவேண்டியது காலத்தின் கட்டாயம். இருவருக்குமே இனிவரும் காலம் அனைத்திலும் சிறப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இக்கிராமத்தின் ஒற்றுமை தமிழக அளவில் இருபெருங்குடிகளின் சங்கமமாக மாறும் என உறுதியாக நம்புகிறோம். ஆன்மீகத்தில் பெரும்பற்றுக் கொண்ட இரு சமூகத்தவரும் ஒன்றிணைந்து மண்ணில் மனித வாழ்வை மேலும் உயர்த்துவார்கள் என்பது திண்ணம்.

**அன்புள்ள திருமலைபுரம் கிராமத்தாருக்கு,**

கலிமுடிக்கும் தெய்வமான கண்ணன் பெயரில், திருமலைபுரத்தைச் சேர்ந்த தேவர்களுக்கும், தேவேந்திரர்களுக்கும் இந்த சாஸ்திர, வழிபாட்டு நடைமுறைகளை யாம் அறிவிக்கின்றோம்.

பெருமைமிகு இருகுடிகளும் விட்டுக்கொடுத்து தங்களுக்கிடையேயான பிணக்குகளைக் களைந்து ஒற்றுமை காண வேண்டும். திருமலைபுரத்தின் ஒற்றுமை தமிழக அளவில் தேவர்-தேவேந்திரர் ஒற்றுமைக்கான முன்னோட்டமாக இருக்கட்டும். தேவேந்திரரின் கருப்பசாமியும், தேவர்களின் பதினெட்டாம்படிக் கருப்பசாமியும் ஒன்றே. கருப்பசாமிகளுக்குள் வேற்றுமை வேண்டாம்.

தேவர்-தேவேந்திரர் ஒன்றிணைப்புக்கான முதல்படியாக, திருமலைபுரத்தைச் சேர்ந்த தேவேந்திரர் அனைவரும் கருப்பசாமி கோவிலில் காலை நேரத்தில் ஒன்று திரண்டு தேவர் சமூகத்தோடு இணைந்து மண்ணைக் காப்போம் என உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கிருந்து மாலை மற்றும் வஸ்திரங்கள் எடுத்துக்கொண்டு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அத்தனைபேரும் பதினெட்டாம்படி கருப்பசாமி கோவிலுக்கு அமைதியாகச் செல்லவேண்டும்.

கோவில் வாசலை அடைந்து அனைவரும் பதினெட்டாம்படி கருப்பசாமியை சாஸ்டாங்கமாக வணங்கி, எதேனும் தவறு செய்திருந்தால் பிழைபொறுக்குமாறு மனதார வேண்டிக்கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் தேவர்களுக்கெதிராக

வேறுபாடுகள் எழுந்தால் பெரியவர்கள் மூலம் பேசி உரிய தீர்வு காண்போம் எனவும் உறுதிமொழி அளிக்க வேண்டும்.

தேவேந்திரர்களின் உறுதிமொழியை ஏற்று, அவர்களது மாலையும், வஸ்திரங்களும் பதினெட்டாம்படி கருப்பசாமிக்கு சாத்தப்பட வேண்டும். கருப்பசாமி முன்னிலையில் இரு சமூகத்தவரும் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும். தேவர் மீதான வழக்கை தேவேந்திரர் விலக்கிக்கொள்ள வேண்டும். தேவேந்திரர் குடியிறுப்புகளை உடைத்த தேவர்கள் அவற்றை சரிபண்ணுவதோடு உடைக்கப்பட்ட பொருட்களுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை இழப்பீடாகக் கொடுக்க வேண்டும். இருதரப்பும் சுமூகமாகப் பேசுவதோடு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும் போகவேண்டும். இரு தரப்பிலும் அனைவரும் பேசாமல் தலைமைப் பண்புள்ளவரை பேசவிட்டு மற்றவர் அமைதி காப்பது உசிதம். உடன்பாடு எட்டப்பட்டு பதினெட்டாம்படி கருப்பசாமி கோவில் பூட்டப்பட வேண்டும்.

உடன்பாடு எட்டப்பட்டு மாலையில் தேவர்கள், தேவேந்திரர் கருப்பசாமிக்கு மாலைகளும், வஸ்திரங்களும் ஊர்வலமாக எடுத்துவர வேண்டும். வரும் தேவர்களை வரவேற்கும் விதமாக, பத்து தேவருக்கு பரிவட்டம் கட்டி தேவேந்திரர் வரவேற்கவேண்டும். கருப்பசாமிக்கு சிறப்பு வழிபாடு முடித்து கதவு பூட்டப்பட வேண்டும்.

இரு சமூகத்தவரும் மனவிலக்கம் கொள்ளாமல் முன்புபோல் அன்பு பாராட்ட வேண்டும். ஒருவரையொருவர் மதித்தும், நம்பியும் அடுத்தடுத்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஒன்றுபட்ட திருமலைபுரத்தின் முதன்மைத் தெய்வம் திருவேங்கடமுடையான் ஆகுக. திருமலைபுரம் திருமலைபோல் புகழ் பெறுக. திருமலைபுரத்தின் மண் சிறப்புறுக, புவி உயர்க, வானம் மேலும் வளர்க.

மனங்கள் ஒன்றிணைந்த திருமலைபுரம் கிராமத்தார், உலகு சிறப்புறும் பொருட்டும், நன்மைகள் பெறும் பொருட்டும், கலி முடியும்பொருட்டும் முன்னெடுக்க வேண்டிய நடைமுறைகளாவன,

ஒன்றிணைப்பிற்கு அடுத்தநாள் காலையில், தேவா் மற்றும் தேவேந்திரா் இணைந்து முனியப்பசாமிக்கு பொதுப்பொங்கல் வைத்து சிறப்பான வழிபாடு நிகழ்த்த வேண்டும். இரு சமூகத்தவரும் ஒற்றுமைக்கு அடையாளமாக துண்டு மாற்றிக் கொள்ள வேண்டும். குறைந்தது 10 பேர்களாவது மாற்றினாலே அது ஓற்றுமைக்கான முதல்படியாகக் கருதப்பட வேண்டும். அதிகபட்சமாக எத்தனை பேர் வேண்டுமானாலும் மாறறிக் கொள்ளலாம்.

மாலையில் இரு சமூகத்தவரும் வைத்துள்ள விநாயகா் சிலைகள் அகற்றப்பட்டு பீடம் இடிக்கப்பட வேண்டும். தேவேந்திரா் விநாயகா் இருந்த இடத்தில் அரசமரமும், தேவா் விநாயகா் இருந்த இடத்தில் அத்தி மரமும் நடப்பட்டு பேணப்பட வேண்டும். விநாயகா் சிலைகள் புற்றுக் கோவிலில் முறைப்படி நிறுவப்படும். அதுவரை சிலைகள் புற்றுக் கோவிலில் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஊரின் தாய் தெய்வமாக புற்றுக்கோவில் மாரியம்மன் சிறக்கட்டும். அன்னை வாழ்க, அம்மன் அருள் வளா்க.

ஊரில் தலைக்கட்டுக்கு ஆயிரம் உருபா வீதம் வசூலிக்கவேண்டும். பொதுப்பணத்திற்கு இரு சமூகத்திலிருந்தும் ஒரு ஆண், ஒரு பெண் என நான்கு பேர் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். ஊா்களில் பொதுப்பணம் தொடா்பாகவே பல்வேறு வேறுபாடுகளும் எழுகின்றன. எனவே பொதுப்பணத்தின் வரவு செலவுகளுக்கு முறையான கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டும்.

பொதுப்பணத்தில் எட்டு கிராம் அளவில் மாங்கல்யத்தில் கோா்க்கும் இரு காசுகள் செய்யப்பட வேண்டும். காசுகளில் திருமலைபுரம் என தமிழில் பொறிக்கப்பட வேண்டும்.

தேவரிலிருந்து ஒரு குடும்பத்தார் திருச்சானூர் பத்மாவதி தாயார் திருக்கோவிலுக்கு குடும்பத்தோடு சென்று வழிபடவேண்டும். அவரிடம் ஒரு காசு கொடுக்கப்பட்டு, காசு அா்ச்சகா் மூலமாக தாயாா் திருப்பாதத்தில் வைத்து வாழ்த்தப்பட்டு பெறப்பட வேண்டும். திருச்சானூரிலிருந்து இருபதுபடி நல்லெண்ணெய், இருபதுபடி நெய், திருக்கோவில் குளத்திலிருந்து இருபதுபடி தீா்த்தம் கொண்டுவர வேண்டும். திருச்சானூரிலிருந்து புறப்படுவதற்குமுன் திருமலையை நோக்கி கைகூப்பி,

திருமலைபுரத்தைச் சேர்ந்த நாங்கள் புவியை வெற்றிகொண்டு, ஊர்மக்கள் அனைவரும் தந்தையாம் திருமலை தெய்வத்திற்கு புதிய குடை கொண்டுவருவோம் என வேண்டுதல் வைக்க வேண்டும்.

தேவேந்திரரிலிருந்து ஒரு குடும்பத்தார் திருமாலிருஞ்சோலை அழகர் கோவில் சென்று நூபுர கங்கையிலிருந்து இருபதுபடி தீர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும். திருமாலிருஞ்சோலைமலைத் தெய்வமான சுந்தரத் தோளுடையவரை வணங்கி, சுந்தரவல்லித் தாயார் கமலபாதங்களில் மற்றொரு காசை வைத்து வாழ்த்துப்பெற வேண்டும். இருபது பட்டுவேட்டி, பட்டு துண்டு, பட்டு உருமால், பத்து பச்சைநிற பட்டுத்துணி, பத்து வெள்ளைநிற பட்டுத்துணி அழகர்கோவில் பதினெட்டாம்படி கருப்பசாமிக்கு முன்வைத்து கருப்பர் அனைத்து மக்களையும் காக்கவேண்டும் என வேண்டிக்கொள்ள வேண்டும்.

குடும்பத்தாரோடு மற்றவர் செல்வதானால் பத்துப் பேருக்கு மிகக் கூடாது.

ஊர் சார்பாக இருவர் ஸ்ரீரங்கம் அம்மா படித்துறை சென்று இருபதுபடி காவிரி தீர்த்தம் கொண்டுவரவேண்டும். காவிரி தீர்த்தம் பேருந்தில் சென்றும் எடுத்து வரலாம்.

அனைத்து நடைமுறைகளும் முடிந்தபின் ஊரில் காப்புக் கட்ட வேண்டும். ஊரார் அத்தனை பேரும் ஊருக்கு வந்தாக வேண்டும். பணியிலிருப்பவர்கள் விடுமுறை எடுக்கவேண்டும். 1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஊரைவிட்டுச் சென்றவர்கள் ஊருக்கு வர வேண்டியதில்லை. பிறர் ஊருக்கு வர விரும்பினால் ஏற்றுக் கொள்ளலாம். திருமலைபுரத்தில் பிறந்தோம் என சொந்தம் கொண்டாடுபவர்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

ஊரில் கருப்பசாமி, கண்ணன், இராமன் போன்ற விஷ்ணுவின் பெயர் கொண்ட ஆண்கள் மஞ்சள் துணியில் 18 உரூபா காசு வைத்து (ஒரு பத்து உரூபா நாணயம், இரு இரண்டு உரூபா நாணயங்கள், நான்கு ஒரு உரூபா நாணயங்கள்) வலது கையில் காப்புக் கட்ட வேண்டும். மற்ற பெயர் கொண்டவர்கள் 10 உரூபா (இரண்டு ஐந்து உரூபா நாணயம்) காப்புக் கட்ட வேண்டும். ஊரில் காப்புக் கட்டியபின் எந்த ஒரு செயலைச் செய்யும் முன்னும் கோவிந்தா கோவிந்தா கோசம் போடவேண்டும். அவ்வாறே முடிக்கும் போதும் கோவிந்தா கோவிந்தா என முடிக்கவேண்டும்.

கூட்டத்தில் ஒருவர் கோவிந்தநாம சங்கீர்த்தனம் எனச் சொல்லி மற்றவர் கோவிந்தா கோவிந்தா என விண்ணதிரக் கோசமிடுவதும் சிறப்பு. ஜெய கோவிந்தா, ஹரி கோவிந்தா போன்ற கோஷங்களும், இராம நாமங்களும் உவப்பானவையே.

காப்புக் கட்டிய அடுத்தநாள் அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்பாக இருகோவில்களும் திறக்கப்பட்டு ஒரு படி நெய்கொண்டு தீபம் ஏற்றப்பட வேண்டும். பெண்கள் தீபம் ஏற்றுவது சிறப்பு. இருகோவில்களிலும் அடுத்து வரும் பத்து நாட்களும் சாமி கொட்டுமேளம் அடிக்க வேண்டும். கொட்டுக்காரர்கள் ஊரிலேயே தங்குவது உசிதம். இருகோவில்களிலும் ஒலிபெருக்கி கட்டப்பட்டு கருப்பசாமி பாடல்கள் மட்டுமே ஒலிபரப்ப வேண்டும். தேவர் ஒலிபெருக்கியின் முதல் பாடலாக வாராரு வாராரு அழகர் வாராரு பாடலும், தேவேந்திரர் முதல் பாடலாக ஸ்ரீராகவேந்திரர் படத்தில் இடம்பெற்ற ராமநாமம் ஒரு வேதமே பாடலும் இடம்பெற வேண்டும். ஒரு நாளின் இறுதியில் இரண்டு கோவில்களிலும் புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே பாடல் ஒலிக்க வேண்டும்.

இரு கோவில்களிலும் ஒரே நேரத்தில் பூசனைகள் தொடங்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும். முதலில் திருமலைபுரத்தின் நீர் கொண்டு ஒவ்வொரு படியாக 18படி நீர் சிலைகளில் ஊற்றப்பட வேண்டும். திருச்சானூரின் ஒரு படி எண்ணெய் சாத்தப்பட்டு, பத்துப்படி திருச்சானூரின் தீர்த்தம் ஊற்றப்பட வேண்டும். பின்னர் கருப்பசாமி கோவில்களில் வழக்கமாக நடைபெறும் பால், பன்னீர் போன்ற அபிசேகங்கள் செய்யப்பட வேண்டும். தொடர்ந்து தைலக் காப்பு சாத்தப்பட்டு பத்துப்படி நூபுர கங்கை ஊற்றப்பட வேண்டும். அபிஷேகங்களின் முடிவாக 10படி காவிரி தீர்த்தம் கொண்டு நீராட்டப்பட வேண்டும். திருமண் காப்பிடப்பட்டு, புத்தாடைகள் அணிவிக்கப்பட்டு, மாலைகள் சாற்றி அலங்காரங்கள் நிறைவுசெய்யப்பட வேண்டும். அனைத்தும் முடிந்து சாமிகளுக்கு சூடம் காட்டுவதற்கும் கதிரவன் மேலெழுந்து வருவதற்கும் சரியாக இருக்குமாறு பூஜைகளை நேரக்கணக்கோடு திட்டமிட்டு முடிக்க வேண்டும். நைவேத்யமாக தினமும் காலையில் 18படி சர்க்கரைப் பொங்கலும், மாலை 10படி பால் பாயாசமும், இரவு 8படி தேங்காய் அன்னமும் படைக்க வேண்டும்.

திருமலைபுரத்தில் வாழ்ந்த ஐயங்கார்கள், அவர்களின் வாரிசுகள் ஊர் மக்களை ஒன்றுபடுத்துவதற்கும் பூசனைகளை ஒருங்கு செய்வதற்கும் முன்வந்தால்

ஊர்க்காரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் தேவையான வசதிகளும் செய்துதரப்பட வேண்டும்.

முதல்நாள் காலை பூசைகள் முடிந்து சூரிய உதயத்திற்குப்பின் திருமலைபுரத்தின் எல்லைக்குள் எட்டு திசைகளில் எட்டு மரக்கால் மண் எடுத்து வரவேண்டும். இரு சமூகத்தவரும் வெவ்வேறு இடங்களில் எடுக்கலாம். மண் எடுக்கும் இடம், ஊர் எல்லைக்குள் இருந்தால் போதுமானது. செம்மண், கரிசல்மண் என அனைத்து விதமான மண்ணையும் எடுத்துக் கொள்ளலாம். ஒரு அடிக்கு கீழே எடுப்பது சிறப்பு. ஈரமாக இருந்தால் மேல்மண்ணை எடுத்துக்கொள்ளலாம்.

எட்டுத் திசைகளிலும் எட்டு மரக்கால் மண்ணோடு, தேவேந்திரர், கருப்பசாமி கோவிலின் தேற்கிலும் வடக்கிலும் கோவிலை ஒட்டி இரண்டு மரக்கால் மண் எடுக்கவேண்டும். தேவர் பதினெட்டாம்படி கருப்பசாமி கோவிலின் கிழக்கு மேற்காக கோவிலை ஒட்டி இரண்டு மரக்கால் மண் எடுக்கவேண்டும்.

பத்து மரக்கால் மண்ணும் ஒன்றாகக் கலக்கப்படவேண்டும். கால்படாமல் கைகள் கொண்டு கவனமாக மண்ணைப் புரட்ட வேண்டும். மண் ஈரமாக இருந்தால் மின்விசிறி மூலம் ஈரம் போக்கலாம். காய்ந்த மண்ணை சிறுசல்லடை கொண்டு சலிக்க வேண்டும். நன்றாகச் சலித்த மண்ணிலிருந்து 32 படி மண் பித்தளை அண்டாவில் தனியாக எடுக்கப்பட்டு மூடியோடு மஞ்சள் துணி சுற்றப்பட்டு கோவிலுக்குள் பத்திரமாக வைக்கப்பட வேண்டும். மீதமிருக்கும் சலித்த மண்ணை சாக்குப்பையில் கட்டி தனியாக வைக்க வேண்டும்.

மாலையில் சரியாக 4.50 மணிக்கு கருப்பசாமிக்கு தேங்காய் உடைத்து சூடம் காட்டி, திருவேங்கடநாதனைத் துதித்து, கோவிந்தா கோசத்தோடு மண் அண்டாவிலிருந்து பித்தளை நாழியில் ஒருபடி மண் எடுத்துக்கொள்ள வேண்டும். தேவர் நாழி பச்சைப்பட்டாலும், தேவேந்திரர் நாழி வெள்ளைப்பட்டாலும் அடியில் சுற்றப்பட வேண்டும். மிகச்சரியாக 4.58 மணிக்கு மேளதாளத்தோடு தேவர் தேவேந்திரர் கருப்பசாமி கோவிலுக்கும், தேவேந்திரர் தேவர் கருப்பசாமி கோவிலுக்கும் புறப்படவேண்டும். புறப்படும்போது இருதரப்பிலும் அதிர்வெடிகள், சரவெடிகள்

போடலாம். வழியில் வானவெடிகள் மட்டுமே இடம்பெற வேண்டும். வெடி போடுவதில் கவனமாக இருக்க வேண்டும்.

முதல்நாள் நாழி மண்ணைச் சுமப்பவர் யார் என்பதைத் தீர்மானிக்க, மண் சுமக்க விருப்பமாக இருக்கும் திருமணமான கருப்பசாமி பெயர் கொண்டவர்களின் பெயர்கள் அப்பா பெயர்களோடு எழுதப்பட்டு, குடத்திலிடப்பட்டு, மூன்று வயதிற்குட்பட்ட குழந்தை மூலம் சீட்டு எடுக்கப்பட்டு தேர்வுசெய்யப்பட வேண்டும். தேர்வு ஒவ்வொரு நாளும் 4.50 மணிக்குப் பின்னர், குடத்திலிருந்து மண் அள்ளுவதற்கு சற்று முன்னரே நடைபெறவேண்டும்.

கருப்பசாமி பெயர் கொண்டவர்கள் பத்திற்கும் அதிகமாக இருந்தால் முதல் மூன்று நாட்கள் அவர்களிலிருந்தே தேர்வுசெய்யப்பட வேண்டும். குறைவு எனில், அடுத்த நாள் தேவேந்திரரில் இராமன் பெயரைக் கொண்டவர்களும் தேவரில் கண்ணன் பெயர் கொண்டவர்களும் நாழிமண் சுமக்கலாம். தோடர்ந்து ஒருமுறை மண் சுமந்தவர்களின் பெயர்கள் குலுக்கலில் இடம்பெறக் கூடாது. தொடர்ந்து மண் சுமக்க விரும்பும் மற்ற கடவுளர் பெயர் கொண்டவர்களும் இடம்பெறலாம். பத்தாம்நாள் கருப்பசாமி பெயர் கொண்டவரே இடம்பெற வேண்டும்.

நாழி மண் சுமப்பவருக்கு புது வேட்டி, துண்டு அணிய வேண்டும். வேட்டி துண்டால் இறுகக் கட்டப்பட வேண்டும். இரண்டு மலர் மாலைகள் அணிய வேண்டும். நாழி மண் சுமப்பவர் சாமியாடக் கூடாது. ஓடக் கூடாது. கூட்டத்தார் இடிக்குமாறு வரக்கூடாது. கவனமாக இருக்க வேண்டும். கோவிலிலிருந்து புறப்படும்போது தலையிலும், வரும்போது மார்போடும் நாழியை வைத்திருக்க வேண்டும். முடிந்தவரை மண் தரையில் சிந்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காற்று, மழை என எதற்காகவும் ஊர்வலம் தடைபடக் கூடாது. மழை பெய்தால் நாழி சுமப்பவருக்கு மட்டும் குடை பிடித்துக் கொள்ளலாம்.

ஊரில் இறப்பு ஏதேனும் நிகழ்ந்தால் கொட்டு இல்லாமல், நான்கு மணிக்குள் நல்லடக்கம் செய்துவிட வேண்டும். வழக்கம்போல் கோவில் பணிகள் தொடரப்பட வேண்டும்.

சடங்குகள், சடங்குமுறைகள், நேரக்கணக்குகள் போன்றவற்றில் சிக்கல்கள் எழுந்தால் இருதரப்பு பெரியவா்களும் கூடிப்பேசி முடிவுகளை எடுத்துக் கொள்ளலாம். அவா்களது மனதில் தோன்றும் எண்ணங்களுக்கேற்ப அடுத்து நடைபெற வேண்டியவற்றை தீா்மானித்துக் கொள்ளலாம். ஏதேனும் மனச்சங்கடம் எழுந்தால் கண்ணன் பெயரால் இக்காரியம் ஆற்றுகிறோம், அனைத்திற்கும் கண்ணனே பொறுப்பு எனச் சொல்லி திடமான முடிவை எடுத்துவிட வேண்டும். அனைத்தும் சுபமாகவே முடியும். உறுதியாக.

ஊா்வலத்தில் உள்ளூா்க்காரா்கள் மட்டுமே இடம்பெற வேண்டும். அயலூா்க்காரா்கள் ஒதுங்கி நின்று வேடிக்கை பாா்க்கலாம். ஊா்வலத்தில் பங்குகொள்ளக் கூடாது. கிருஷ்ணா, ராமா, கோவிந்தா போன்ற சாமி கோஷங்கள் தவிா்த்து வேறுகோஷங்கள் இடம்பெறக் கூடாது. எக்காரணம் கொண்டும் சாதிப் பேச்சுகள், சாதிக் கோஷங்கள், சாதித் தலைவா்களது வாழ்க கோஷங்கள், பிற சமய கோஷங்கள் கூடாது. ஒவ்வொரு நாள் ஊா்வலம் கிளம்பும் போதும் இது குறித்து முறையான அறிவிப்புகள், வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

திருமலைபுரம் ஊா்மக்கள் காவல்துறையின் உதவியில்லாமல் அனைத்து விதமான ஒழுங்குமுறைகளையும் அவா்களே செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொன்றுக்கும் முறையான குழுக்கள் அமைத்து பணிகள் ஒதுக்கப்பட வேண்டும். குழுக்களில் இரு சமூகத்தவரும் இடம்பெறுமாறு பாா்த்துக்கொள்ள வேண்டும். சமுதாய சமரசம் ஏற்பட்ட உடனேயே காவல்நிலையம் சென்று இரு சமுதாயத்தவரும் ஒற்றுமையாக அடுத்தடுத்த நிகழ்வுகளைச் செய்துகொள்கிறோம் என உறுதிமொழிக் கடிதம் கொடுத்துவிட வேண்டும். இருசமூகத்தவரும் இதை சவாலாக ஏற்று காவலா்கள் இல்லாமல் சிறப்பாக நடத்திக்காட்டி சாதிக்க வேண்டும்.

திருமலைபுரத்தில் இருசமூகத்திலிருந்தும் பலா் இராணுவப் பணியிலிருக்கிறாா்கள். முன்னாள், இந்நாள் வீரா்கள் முன்னின்று பணிகளை ஒருங்கிணைக்கலாம். அனைத்தும் இராணுவம் போன்று துல்லியமான நேரக்கணக்கோடு துவங்கி முடிக்கப்பட வேண்டும். தேவா் வீரத்தால் சற்று வேகமாகவும் வீராப்பாகவும் இருப்பது இயல்பு. தேவேந்திரா் மிக்கபொறுமையோடு காரியங்களை ஆற்ற வேண்டும். தேவேந்திரா் அறிவை முன்னெடுப்பவா் என்பதால்

அவருக்கே கூடுதல் பொறுமையும், கடமையும் இருக்க வேண்டும். தேவேந்திரரில் நிறையப் பேர் பட்டப்படிப்பு முடித்திருக்கிறார்கள். அவர்களும் முன்னின்று அனைத்தும் சிறப்பாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும். கூட்டம் சேர்ந்தால் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணிகளில் அருகாமை ஊர்களிலுள்ள படித்த இளைஞர்கள் ஈடுபடலாம்.

இரண்டு கருப்பசாமி கோவில்களுக்கும் இடைப்பட்ட தூரத்தை எல்லையாக வைத்துக்கொள்ள வேண்டும். அநேகமாக எமது பெரியம்மா வீடு இருக்கும் மேட்டு நிலம் எல்லையாக வரலாம். தூரம் கணக்கிடப்பட்டு அந்த இடம் சமமாக சுத்தம் செய்யப்பட வேண்டும். முக்கியமாக முள்செடிகள் துப்புரவாக அகற்றப்படவேண்டும். இரு தூரங்களுக்கும் மையமான பகுதி குறிக்கப்பட்டு தெற்கு வடக்காக ஒரு அடி உயரம், ஒரு அடி அகலம் மற்றும் பதினெட்டு அடி நீளத்தில் ஒரு மண்சுவர் எழுப்பப்பட வேண்டும்.

மண் சுவரிலிருந்து கிழக்கே சரியாக பத்து அடிகள் தள்ளி 48 அடி நீளத்திற்கு ஒரு மீட்டர் உயரத்தில் தெற்கு வடக்காக கொச்சைக் கயிறு கட்டப்பட வேண்டும். இது தேவேந்திரர் எல்லை. மண் சுவரிலிருந்து மேற்கே இவ்வாறு கட்டப்படுவது தேவர் எல்லை. அவரவர் கோவிலிலிருந்து கிளம்பி அவரவர் எல்லைக்கு வந்துசேர வேண்டும்.

கோவிலிலிருந்து புறப்படும் போது தேவர்கள், பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளை மகாபாரதம் தொடர்பான வேடங்கள் இட்டு ஊர்வலத்தின் முன்பாக ஆடிப்பாடி வருமாறு ஏற்பாடு செய்யலாம். கண்ணன், பலராமன், சுபத்ரை வேடமிட்டவர்கள் தினமும் இடம் பெறுவது சிறப்பு. தினமும் ஆண்டாள் நாச்சியார் வேடம் போடுவதும் அருமை.

தேவேந்திரர் குழந்தைகள் இராமாயணம் தொடர்பான வேடமிட வேண்டும். தினமும் இராமர், லட்சுமணர், சீதா, அனுமன் வேடங்கள் இடம்பெறலாம். விரும்புகிறவர்கள் பிற தெய்வங்களுடைய வேடங்களையும் போட்டுக் கொள்ளலாம். இருவரும் எல்லைக்கு வந்தபின் அடுத்த பத்து நிமிடங்கள் தேவரும் தேவேந்திரரும் அவரவர் எல்லைக்குள் நின்று ஒருவருக்கொருவர் போட்டி போட்டு ஆடலாம். பாடலாம். மற்றவர் எல்லையை நோக்கி பூப்பந்து எறியலாம். துண்டுகளைச் சுருட்டி எறியலாம். தண்ணீர் நிரப்பிய பலூன்களை தூக்கிப் போடலாம். சிலம்பு சுழற்றலாம். புலி வேடமிட்டு

பயங்காட்டலாம். அனைத்தும் நடிப்பிற்காக செய்யப்படவேண்டும். அனைத்தும் விளையாட்டாக நிகழ்த்தப்பட வேண்டும். அவரவர் வீரத்தை வெளிப்படுத்தவும், மன வேறுபாடுகள் நீங்கி தோழமை உணர்வு வெளிப்படவுமே இந்த நடைமுறை. விளையாட்டுகள் இலகுவாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். விளையாட்டுக்களில் சிறுவர் சிறுமியர் பங்குகொள்ளலாம். பெண்கள் கூடாது. விளையாட்டுக்களின்போது நாழி சுமப்பவர் ஊர்வலத்தின் பின்பக்கமாக நின்றுகொள்ள வேண்டும்.

வீரத்தைக் காட்டும் விளையாட்டுகளின்போது இரண்டு சிறுவர்கள் கொச்சைக் கயிற்றை ஒட்டி சாட்டையோடு இருபக்கமும் நின்றுகோள்ள வேண்டும். எவரேனும் கொச்சைக் கயிற்றை இடித்தாலோ, தள்ளுவது, தாண்டுவதுபோல் தெரிந்தாலோ பளார் என விளாசிவிட வேண்டும். தேவர், தேவேந்திரர் இருவரும் சிறுவர்களிடம் சாட்டையடி வாங்காமல் சுயகட்டுப்பாடோடும், மகிழ்ச்சியாகவும், நட்பாகவும் விளையாட வேண்டும்.

விளையாட்டு முடிந்தபின் மண் சுமப்பவர் தவிர மற்றவர்கள் மண் சுவரைச் சுற்றி எதிர்ப் பக்கம் சென்றுவிடவெண்டும். அவரவர் நிற்பதிலிருந்து வலப்பக்கமாகச் சுற்றி எதிர்ப்பக்கம் செல்லவேண்டும். தேவர் நாழியோடு தேவேந்திரரும், தேவேந்திரர் நாழியோடு தேவரும் நிறகவேண்டும். நாழிகள் மண் சுவரில் ஒருஅடி இடைவெளியில் இறக்கி வைக்கப்பட வேண்டும். நாழியை இறக்கும்போது தேவேந்திரர் ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி திருப்பாவை பாடலும், தேவர் அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி பாடலும் பாடவேண்டும். அடுத்த எட்டு நிமிடங்கள் கொட்டுக்காரர்கள் ஒத்திசைவாக கருப்பசாமிக்குரிய கொட்டடிக்க வேண்டும். உருமிமேளம் கூடுதலாக இருப்பது சிறப்பு.

கொட்டு முடிந்த உடன், தேவர் நாழி சுமப்பவர் தேவேந்திரர் நாழி மண்ணையும், தேவேந்திரர் நாழி சுமப்பவர் தேவர் நாழி மண்ணையும் மாற்றி தூக்கிக்கொள்ள வேண்டும். நாழியைத் தூக்கும்போது தேவர் தேவேந்திரர் இருவரும் திருப்பாவை ஐந்தாம் பாடலான மாயனை மன்னு வடமதுரை மைந்தனைப் பாடவேண்டும். நாழி தூக்கிய பின் தேவேந்திரர் அவர்கள் நிற்பதிலிருந்து இடமாகவும், தேவர் அவர்கள் நிற்பதிலிருந்து இடமாகவும் விலகவேண்டும். வந்தது போலவே மேளதாளத்துடன் அவரவர் கோவிலை நோக்கி பயணமாகவேணடும். கோவிலருகே சென்று நேரமிருப்பின் சற்றுநேரம் கொட்டடிக்கலாம். சரியாக 5.58 மணிக்கு நாழி மண்

அதற்கென வைக்கப்பட்டுள்ள எவர் சில்வர் அண்டாவில் கொட்டப்பட்டு மூடியோடு பச்சைத்துணி வைத்து சுற்றிக் கட்டப்பட வேண்டும். இருபது படி மண் பிடிக்குமளவிற்கு புதிதாக ஒரு சில்வர் அண்டா வாங்கிக் கொள்ளலாம்.

6 மணிக்கு ஆராதனை செய்யப்பட்டு பாயாசம் பிரசாதமாகப் படைக்க வேண்டும். மாலை 7 முதல் 8 மணி வரை செண்டைமேளம் வைக்க வேண்டும். காலையில் தேவேந்திரா் கோவிலிலும் இரவு தேவா் கோவிலிலும் செண்டைமேளம் வைத்துக் கொள்ளலாம். இரவு எட்டு மணிக்கு அன்னம் படைக்கப்பட்டு, இரவு 8.10 மணிக்கு கோவில் சாத்தப்பட வேண்டும். அடுத்தநாள் காலை சரியாக 4.10 மணிக்கு கோவில் திறக்கப்பட்டு காலை பூசனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதிகாலை கோவில் திறக்கப்படும்போது கருப்பசாமிக்கு ஸ்ரீராமஜெயம் வாழ்த்தொலியும், பதினெட்டாம்படி கருப்பசாமிக்கு ஓம் நமோ பகவதே வாசுதேவாய வாழ்த்தொலியும் முழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தொடா்ந்து 10 நாட்கள் பெருவிழாவாக, திருவிழாவாக மண் சுமக்கப்பட்டு சில்வா் அண்டாவில் சேகரிக்கப்பட வேண்டும். முன்றாம்நாள் நாழி சுமப்பிற்குப்பின் வீடுதவறாமல் முளைப்பாரி விதைக்க வேண்டும். பதினோறாவதுநாள் காலையில் புற்றுக் கோவில் விழாக்கோலம் பூணவேண்டும். அன்று அதிகாலை இரு சமூகத்தவரின் விநாயகா் சிலைகளும் புற்றுக் கோவிலில் பிரதிட்டை செய்யப்பட வேண்டும். புற்றுக் கோவில் மாரியம்மன் வரும்காலங்களில் மிகவும் சிறப்புற்று புகழுடன் விளங்குவாா். உலகிற்கு அருள்மாமழை பொழிவாா். அம்மனுக்கு பெரியளவில் திருக்கோவில் எழும்பும். இதையெல்லாம் கருத்தில் கொண்டு விநாயகரை எந்த இடத்தில், எப்படி நிறுவவேண்டுமென்பதை ஊரார் கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும்.

எம்மால் சொல்லப்பட்டுள்ளது ஒரு வழியே. சொல்லப்பட்டுள்ளவை இறுதியானவை அல்ல. உறுதியான விதிகள் இல்லை. ஊா்க்காரா்கள் கலந்துபேசி சூழலுக்கேற்றவாறு சடங்குகளில், விழா ஏற்பாடுகளில், கொண்டாட்டங்களில் மாற்றங்கள் செய்யலாம். உதாரணமாக, பத்மாவதி தாயாருக்கும், சுந்தரவல்லி தாயாருக்கும் ஊா்க்காரா்கள் பட்டு சாத்தினால் மிகவும் வரவேற்க வேண்டியதே. அவ்வாறே தினமும் காவிரி நல்நீரோடு நூபுர கங்கையிலிருந்தும் தினமும் புனித நீர் கொண்டுவருவதும் சிறப்பே. மண் சுவற்றிலிருந்து நாழியை எடுக்கும்போது ஊரின்

ஐயங்கார்கள் எடுத்துக்கொடுத்தும் பெற்றுக் கொள்ளலாம். ஊரின் ஐயங்கார்கள் ஒத்துழைத்தால் சடங்குமுறைகளில் அவர்களது கருத்தையும் அறியவேண்டும். அவர்கள் முடிவுகள் நன்மையையே கொடுக்கும். அவர்களது கருத்தறிந்து அவர்களுக்கென்று யாம் சில வைணவ சம்ரதாயங்களை அறிவுறுத்துவோம். அனைவரும் இணைந்து நன்முறையில் திட்டமிடுக. எதுவாக இருந்தாலும் இரு சமூகத்தவரும் கலந்து பேசியே முடுவெடுக்கவேண்டும். ஊர்க்காரர்கள் ஒற்றுமையாகச் செயல்பட்டு ஊருக்கும் உலகுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

தேவேந்திரர் கருப்பசாமி வழிபாட்டு முறைகள் இருதயமுத்து சித்தப்பா தலைமையில் நடைபெறட்டும். சித்தாப்பாவிற்கு முத்தும்கிருஷ்ணன் துணை நிற்க. தெருக்காரர்கள் ஒத்துழைப்பு நல்குக. தேவேந்திரரில் கிறித்தவர் என்ற பாகுபாடு இருந்ததில்லை. இனியும் தேவையில்லை. கிறித்து நாதரும் சிறப்பிக்கப்படுவார். இணைந்து செயல்படுக. முனியசாமி அண்ணனோடு மூத்தவர் ஒருவரும், பட்டம் பெற்ற இளையவர் ஒருவரும் இணைந்து தேவேந்திரரை வழிநடத்துக. மூவரும் தெருக்காரர்களோடு கலந்துபேசி மனதில்படும் எண்ணங்களைக் கவனித்து முடிவெடுங்கள். மூவருக்குள்ளும் முடிவெடுப்பதில் கருத்து வேறுபாடு எழுந்தால் இருவரின் ஒத்த கருத்தை முடிவாகக் கொள்க.

பதினோறாம்நாள் காலையில் தொப்பலாக்கரையிலிருந்து குதிரை வந்துசேரும். இரு சமூகத்தவரின் 18படி நாழி மண் நிரப்பப்பட்டு, மேளதாளங்கள் முழங்க, வேட்டுக்கள் அதிர, முளைப்பாரி ஊர்வலத்தோடு மாரியம்மன் கோவிலுக்கு திருமலைபுரம் கிராமத்தாரால் குதிரை எடுத்துச் செல்லப்படும். ஊர்வலம் மிகச் சரியாக காலை 10. 10 மணிக்குப் புறப்படும்.

## குதிரை தர்மத்தின் வழியாகுக

புரவி காட்டும் வழி மெய் வழியாகுக

பரி சுட்டும் வழி ஞான ஒளியாகுக

அசுவம் கண்ணனின் கருணை விழியாகுக

அச்சுவம் கீதையின் நல்மொழியாகுக

அத்திரி படியளக்கும் அமுதமாகுக

அயம் வெற்றியின் பெயராகுக

குந்தம் கோவிந்த நாதமாகுக

உன்னி பழிபாவம் தீர்க்கும் வழியாகுக

தேனு உயிரைக் காக்கும் மருந்தாகுக

அரி பரமபதம் சேர்க்கும் ஒளியாகுக

கற்கி நாராயணனின் திருநாமம் ஆகுக

## திருமால் சரணம்! பெருமாள் சரணம்! கோவிந்தன் சரணம்!

குதிரை தனம் அள்ளிப் பொழியட்டும்

குதிரை மோட்சத்தின் வழியாகட்டும்

குதிரை உயிர் காத்து மகிழும் மொழியாகட்டும்

குதிரை திருமலை புனித விழியாகட்டும்

## திருவேங்கடமுடையான் பாதம் சரணாகதி!!

வருகுது கண்ணனின் அசுவமேதக் குதிரை. இராமன் வில்அம்பின் நுனி. நாராயணனின் நாமம். கலியழித்து சத்ய யுகத்தை தொடங்கி வைக்கும் குதிரை.

வருவது ஆழகரின் குதிரை. உலகம் காக்கும் குதிரை. கலகம் தீர்க்கும் குதிரை. ஆகாயம் பூமியை ஆட்டி வைக்கும் குதிரை. சமயங்களில் வேற்றுமையை பூட்டி வைக்கும் குதிரை. கோடி கோடி சனங்களை சாதி மறந்து ஒன்றாய் கூட்டி வைக்கும் குதிரை.

## ஆழகர் வாழியவே! மதுரை வாழியவே!

திருமலைபுரத்தாரே,

சத்ய யுகம் தொடங்கிய இடம் திருமலைபுரம் எனும் நீங்காப் புகழ் பெறுக.
கலியுகத்தை முடித்தவர் திருமலைபுரத்தார் என மங்காப் புகழடைக.

தூக்குக கோவிந்தனின் குதிரையை
கிளப்புக திருமலையின் குதிரையை
ஓட்டுக சீனிவாசனின் குதிரையை
தாங்குக கற்கியின் குதிரையை

வாழிய அகரத்துப்பட்டி எனும் அக்ரஹாரத்துப்பட்டி!
நீடு வாழ்க திருமலைபுரம் மக்கள்!!

**அருள்மிகு ஸ்ரீரங்கம் கோவில் நிர்வாகத்தாருக்கு,**

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாயகித் தாயார் சன்னிதிக்குள் நுழையும் ஆண்கள் அனைவருக்கும் திருமண் காப்பு இடப்பட வேண்டும். பிறந்த குழந்தை உட்பட எவருக்கும் விதிவிலக்கில்லை. இஸ்கான் கோவில்களில் இடப்படுவதுபோல் மரத்தாலான தென்கலை நாமம் மூலம் திருமண் காப்பு வைக்கலாம். திருமண் காப்பு வைக்க மறுத்தால் தாயாரைப் பார்க்க அனுமதிக்கக் கூடாது.

ஸ்ரீரங்கநாதரை தரிசிக்க சாதி, மதம், அயல் நாடு எனும் பேதமில்லாமல் அனைவரையும் அனுமதிக்க வேண்டும். கோவிலில் முதல்வாயிலில் உலகின் அனைத்து மக்களும் ஸ்ரீரங்கநாதரைக் கண்குளிரக் காணலாம் எனும் அறிவிப்புப் பலகை இடம்பெற வேண்டும். தாயார் சன்னிதி தவிர திருக்கோவிலின் எக்கடவுளரையும் எவரும் தரிசிக்கலாம் எனும் நிலைமை அறிவிப்புச் செய்யப்பட வேண்டும்.

**அருள்மிகு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் நிர்வாகத்தாருக்கு,**

பார்த்தசாரதி திருக்கோவிலில் தாயார் சந்நிதிக்குள், தாயாரைத் தரிசிக்க மீசை வைத்த எந்த ஆணையும் அனுமதிக்கக் கூடாது. கோவில் பணியாளர் உட்பட.

திருக்கோவிலில் மனிதர்கள், தேவர்கள் என இரண்டு தரிசன வழிகள் அமைக்கப்பட வேண்டும். மனிதர் அனைவரும் மனிதருக்கான வழியில் சுவாமி தரிசனத்திற்குச் செல்லவேண்டும்.

தேவர்களுக்கான வழி தமிழகத்தில் வசிக்கும் தேவேந்திரர் மற்றும் தேவர் சமூகத்தவருக்கு மட்டுமே உரிமையாக்கப்படுகிறது. அவர்கள் மீசையோடு பார்த்தசாரதிப் பெருமாளைத் தரிசிக்கலாம். எனினும், இரண்டு சாதியாரும் இப்போதைக்கு பெருமாளைத் தரிசிக்க தடைவிதிக்கப்படுகிறது. தேவேந்திரர் விண்ணை அளந்தும், தேவர் மண்ணை வென்றும், வெற்றிச் செய்தியை எடுத்துக்கொண்டு பெருத்த மீசையோடு தந்தையாம் கண்ணனைக் காணச் செல்லவேண்டும்.

மண்ணும் விண்ணும் அளக்கப்பட்டபின் பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலில் தேவருக்கான வழி மட்டுமே திறந்திருக்கும். மனிதருக்கான வழி அடைக்கப்படும். பூவுலகின் அனைத்து மக்களும் தேவர்களாகினர் என முறைப்படி அறிவித்த பின்னர் அனைவரும் மீசையுடன் பார்த்தசாரதி திருக்கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவர்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு,**

1. கன்னியாகுமரியம்மன் திருக்கோவிலிலிருந்து 100 மீட்டர் சுற்றளவில் உள்ள அத்தனை கடைகளும் அகற்றப்பட வேண்டும். கோவிலின் தெற்குச் சுற்றுக் சுவருக்குத் தெற்கே 10 மீட்டர்கள் தொலைவில் நான்கு திசைகளிலும் நான்கு கூம்புக் குழாய்கள் நிறுவ வேண்டும்.

மிகச் சரியாக இரவு 9.56 மணிக்கு " முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே" எனும் பாடலும் (4.19 நிமிடங்கள் - திரு. சீர்காழி கோவிந்தராஜன் பாடியது), தொடர்ந்து கலைஞரின் "செம்மொழியான தமிழ்மொழியே" பாடலும் (6.23 நிமிடங்கள்) ஒலிபரப்பப்பட வேண்டும்.

2. தமிழில் வெளியிடப்படும் திரைப்படங்களின் தலைப்புப் பாடலாக ‘‘அச்சம் என்பது மடமையடா’’ இடம்பெற வேண்டும்.

3. ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்தின் காவேரிக் கரையிலிருந்து இடப்புறமும் வலதுபுறமும் ஒரு கிலோமீட்டர் நீளம், 100 மீட்டர் அகலம் என நிலம் சமப்படுத்தப்பட வேண்டும். எவ்விதமான தாவரங்களோ கட்டிடங்களோ இருக்கக் கூடாது. குடியிறுப்புகள் இருந்தால் மாற்று இடம் அளிக்க வேண்டும். அம்மா மண்டபத்தின் பழமையான மண்டபம் மற்றும் காவிரித்தாய் கோவில் தவிர மற்ற அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.

4. ஸ்ரீரங்கம் பெரிய கோபுரத்தின் அகலத்தை அளவாகக் கொண்டு, அங்கிருந்து காவிரியாற்றின் கரை வரையிலும் நேர்கோடாகக் கொண்டு நிலம் சமப்படுத்தப்பட வேண்டும். காந்தி மற்றும் பெரியார் சிலைகள் தவிர மற்ற அனைத்தும் அகற்றப்பட வேண்டும். இடையில் எந்தவிதமான தடையும் இருக்கக்கூடாது.

5. தேவர்கள் பதினெட்டாம்படி கருப்பசாமியைக் குலதெய்வமாக அறிவித்த உடனேயே, தமிழக அரசு உடனடியாக தமிழ்நிலத்திலுள்ள அனைத்துத் தலைவர்களின் சிலைகளையும் அகற்றிவிட வேண்டும். பெரியாருக்கு ஸ்ரீரங்கம் பெரிய கோபுரம்முன் இருக்கும் சிலை தவிர தமிழகத்தில் வேறெங்கும் சிலைகள் இருக்கக் கூடாது.

6. ஸ்ரீரங்கம், மெரினா கடற்கரை, புதுச்சேரி கடற்கரை காந்தி சிலைகள் தவிர தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள அத்தனை காந்தி சிலைகளும் அகற்றப்பட்டு, கல் சிலையாக இருந்தால் பச்சைத்துணி சுற்றப்பட்டும், வெண்கலச் சிலையாக இருந்தால் வெள்ளைத்துணி சுற்றப்பட்டும், மதுரை காந்தி மியூசியத்தில் கிடத்தி வைக்கப்பட வேண்டும். மூன்றடிக்கும் குறைவான சிலைகள் எனில் 18 அடி துணியும், அதற்கும் மேல் எனில் 32 அடி துணியும் பயன்படுத்த வேண்டும்.

7. முத்துராமலிங்கத் தேவரின் அனைத்து கற்சிலைகளும் அகற்றப்பட்டு அரசின் பொறுப்பில் கமுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். வெண்கலச் சிலைகள் அனைத்தும் மதுரை திருப்பரங்குன்றத்தில் அரசின் பொறுப்பில் ஓரிடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

8. கத்திப்பாரா நேரு சிலை தவிர, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நேரு, இந்திரா, ராஜிவ் சிலைகளும் ஸ்ரீபெரும்புதூர் ராஜிவ்காந்தி நினைவிடத்தில் வைக்கப்பட வேண்டும்.

9. திருச்சி இரயில்வே பாலம் அருகே இருக்கும் அம்பேத்கர் சிலை தவிர தமிழகத்திலிருக்கும் அனைத்து அம்பேத்கர் சிலைகளும் அகற்றப்பட்டு, மஞ்சள் துணி சுற்றப்பட்டு திருச்சியில் பாதுகாக்கப்பட வேண்டும்.

10. தமிழகத்தில் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட வ.உ.சிதம்பரனார், கொடிகாத்த குமரன் உட்பட்ட தியாகிகளுக்கு அரசு சார்பில் மணிமண்டபங்கள் கட்டப்பட்டிருந்தால் அங்கே அன்னார்களது சிலைகள் இருக்கலாம். தமிழ் நிலத்தில் அன்னார்களுக்கு ஒரிடத்தில் மட்டுமே சிலை இருக்க வேண்டும். தியாகிகளுக்கு மணிமண்டபம் இல்லாமல் சிலைகள் மட்டும் வைத்திருந்தால், அவை தருமபுரி பாரதமாதா கோவிலுக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கே நிறுவப்பட வேண்டும்.

11. பெரியார், காமராஜர், ராஜாஜி, பக்தவச்சலம், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி  உட்பட தமிழகத்தின் முக்கிய அரசியல் தலைவர்கள், தமிழின் உயர்வுக்கு, தமிழர் நல்வாழ்விற்குப் பாடுபட்ட சான்றோர்களின் சமாதிகளில் அரசு சார்பில் தினமும் அன்னமும் நீரும் மலரும் நிறைவேற்றப்பட வேண்டும். யாருக்கெல்லாம் இவ்வாறு அன்னப்பலி நிறைவேற்ற வேண்டும் என்பதை தமிழக அரசு கண்டறிந்து அவர்களது பெயர்களை அறிவிக்க வேண்டும்.

12. சென்னை மெரினா கடற்கரையில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர், அவ்வையார், இளங்கோ அடிகள், கம்பர்,  வீரமாமுனிவர், ஜி.யூ போப், கால்டுவெல், பாரதியார், பாரதிதாசன், மகாத்மா காந்தி, விவேகானந்தர், அன்னிபெசன்ட், சுபாஸ் சந்திர போஸ் சிலைகளுக்கு தினமும் காலை அன்னமும் நீரும், பூமாலையும், மாலையில் பாலும் பழங்களும் நைவேத்யமாக படைக்கப்பட வேண்டும். சுபாஸ் சந்திர போஸ் சிலை தற்போதைய இடத்திலிருந்து 32 அடிகள் தெற்கே தள்ளிவைக்கப்பட வேண்டும். கண்ணகி சிலை எடுக்கப்பட்டு கடற்கரை சாலை சுங்குவார் சந்திப்பில் ஸ்ரீபார்த்த சாரதி கோவில் கிழக்கு நுழைவாயில் வளைவின் தெற்குப் பகுதியருகே கிழக்கு நோக்கி கண்ணகியம்மன்னாக எழுப்பப்படவேண்டும். பின்னர் விரிவாக்கம்

செய்வதற்கேற்றவாறு இடம் ஒதுக்கப்பட வேண்டும். சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு தமிழகத்தின் பிற அம்மன்கோவில்களின் வழிபாட்டு நடைமுறைகள் கண்ணகியம்மன் கோவிலிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முன்னர் கண்ணகி சிலை வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தெற்கே 10அடிகள் தள்ளி, தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யருக்கு புதிதாக சிலையொன்று நிறவப்பட வேண்டும். தமிழ்த் தாத்தாவுக்கும் காலை மாலை பலிகள் நடைபெற வேண்டும்.

13. இந்திய முதலாவது விடுதலைப்போரில் ஆங்கிலேயரால் கொல்லப்பட்ட, நாட்டின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த தமிழக சுதந்திரப் போராட்ட மாவீரர்களான பூலித்தேவன், அழகுமுத்துக்கோன், கட்டபொம்மன், சுந்தரலிங்கம், மருதிருவர், தீரன் சின்னமலை உள்ளிட்ட சுதந்திரப் போராளிகளின் சிலைகள் 32 அடி பச்சைத்துணியால் சுற்றப்பட வேண்டும். பிறந்த ஊரிலோ அல்லது கொல்லப்பட்ட இடத்திலோ, ஒரேயோரு சிலை மட்டுமே இவ்வாறு சுற்றப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சிலைகள் இருந்தால் மற்றவை காவிரி தீர்த்தம் ஊற்றி ஆசாரிகொண்டு சிறு துண்டுகளாக்கப்பட வேண்டும். இவ்வாறு பெறப்படும் அனைவர் துண்டுகளும் சேகரிக்கப்பட்டு, ஒன்றாகக் கலக்கப்பட்டு, திருவரங்கம் அம்மா மண்டபம் காவிரி ஆற்றின் நடுப்பகுதியில் பத்தடிக்கு ஆழம் தோண்டி கொட்டப்படவேண்டும்.

பச்சைத் துணி சுற்றியபின், மூன்று அடி இடைவெளிவிட்டு சுற்றிலும் பச்சை மூங்கிலால் செங்குத்தாக தடுப்பு அமைக்க வேண்டும். வானம் பார்த்த மேல் பகுதி மட்டும் திறந்திருக்க வேண்டும். மூங்கில் தடுப்பு வெள்ளைத்துணியால் மூடப்பட வேண்டும். மூன்று அடி இடைவெளிவிட்டு வேம்பு ரீப்பர் கட்டைகள்கொண்டு கிடைமட்டமாக இரண்டாவது தடுப்பு அமைக்க வேண்டும். இரண்டாவது தடுப்பு பச்சைத் துணியால் மூடப்பட வேண்டும். தடுப்புகள் காற்றுக்கோ, மழைக்கோ பாதிக்காதவாறு உறுதியாகப் போடப்பட வேண்டும். மறுஉத்தரவு இடப்படும்வரை இந்நிலை தொடரப்பட வேண்டும்.

நடைபெற்ற முதலாவது சுதந்திரப் போரில் யாரெல்லாம் கொல்லப்பட்டார்கள், யாரெல்லாம் தங்கள் இன்னுயிரை மண்ணுக்காக, மண்ணின் விடுதலைக்காக அர்ப்பணித்தார்கள் என்பதை வரலாற்றுத் துறை வல்லுநர்கள் மூலம் கண்டறிந்து,

அவர்களுக்கு மட்டுமே இப்படியான வழிமுறை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது. வரலாறு தெளிவாக, உண்மையானதாக இருக்க வேண்டும். ஊகங்கள் அடிப்படையிலோ, சாதி மதம் சார்ந்தோ இருக்கக் கூடாது.

14. தமிழகத்தில் தெய்வங்கள் தவிர்த்து தனிப்பட்ட முறையில் பெற்றோருக்கோ, தமக்கு வேண்டியவருக்கோ பொதுவெளியில் சிலை வைக்கப்பட்டிருந்தால், அவர்களது சொந்த இடத்தில் வைத்திருந்தாலும், அவை அகற்றப்பட்டு அழிக்கப்பட வேண்டும். சிலைகளை வைத்தவர்கள் விரும்பினால் அவற்றை அவர்களின் வீடுகளுக்குள் தனிப்பட்டு வைத்துக்கொள்ளலாம். தமிழகத்தில் பிறர் நலத்திற்காக, உலக நன்மைக்காகப் பாடுபட்டவர்களுக்கே சிலை வணக்கம்.

15. தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும் வயிராற உண்டு உறங்கச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டியது பெருமைக்குரிய முதல் அமைச்சரின் கடமை. முதலமைச்சர் தமது வீட்டில் உணவருந்தும்முன் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் சாப்பிட்டார்களா எனக் ஒருவார்த்தையாவது கேட்டுவிட்டுச் சாப்பிடுவார்தானே. முதலமைச்சரின் பெரிய குடும்பம் தமிழகமல்லவா. தமிழகத்திலுள்ள அத்தனை மக்களும் முதலமைச்சரின் குடும்ப உறுப்பினர்களல்லவா. எட்டு கோடி குடும்ப உறுப்பினர்களைக் கொண்டுள்ள மதிப்பிற்குரிய முதல்வர், தாம்மட்டும் எப்படி உண்டு உறங்க முடியும். ஒவ்வொரு நாளும் தமிழக முதல்வர் மாநிலத்திலுள்ள அத்தனை மக்களும் இரவு வயிராற உணவு உண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முதல்வர் நினைத்தால் எளிதாக நிறைவேற்றக்கூடியதே. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வட்டாச்சியர்கள், கிராம நிர்வாக அதிகாரிகள் என அனைவரையும் பயன்படுத்தி, இரவு விருந்தினர்கள் உட்பட தமிழ்நாட்டின் எந்த மக்களும் சாப்பிடாமல் பட்டனியாக உறங்கச் செல்லவில்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அறிவிக்க வேண்டும். அதுவே எட்டுக் கோடி தமிழர்களின் தலைவரான முதல்வருக்கு உகந்தது. பெருமையானது. முதல்வர் நாற்காலிக்கும் புகழ் சேர்ப்பது.

தமிழக முதலமைச்சர் தினமும் சரியாக இரவு 8.30 மணிக்கு தொலைக்காட்சி நேரலையில் வரவேண்டும். தமிழகத்தின் அத்தனை தொலைக்காட்சிகளும் முதல்வரின் நேரலையை ஒளிபரப்ப வேண்டும். முதல்வர் தமது இல்லத்தின் சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருக்க வேண்டும். மேசையில் முதல்வருக்கான உணவுகள்

தயாராக இருக்க வேண்டும். முதல்வா் உணவுண்ணும் முன் தமிழக மக்கள் அனைவரும் உணவுண்டார்களா என்பதை அறியும் விதமாக மக்கள் எளிதில் தொடர்புகொள்ளும் விதமான (காவல் 100, அவசர ஊர்தி 108 போல தனித்த எண்கள்) தொலைபேசி எண்களை அளிக்க வேண்டும். தமிழகத்தில் வாழும் மக்களில் யாரேனும் இரவு உணவில்லை எனில் முதல்வரின் எண்ணுக்கு புகாரளித்தால், உடனே போர்க்கால நடவடிக்கையில் உணவு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டாச்சியர் உள்ளிட்ட அனைத்து ஆட்சிப்பணி அலுவலர்களும் 8.00 மணிமுதல் 9.00 மணி வரை அவரவர் அலுவலகங்களில் இருக்க வேண்டும். சாப்பிட உணவில்லை என முதல்வருக்கு வரும் அழைப்புகள் உடனுக்குடன் குறைதீர்க்கப்பட வேண்டும்.

கிராமமெனில் கிராம நிர்வாகி மற்றும் ஊராட்சித் தலைவர் மூலமாக 8 மணி தொடங்கி 8.30 மணிக்குள்ளாக அனைத்து மக்களும் சாப்பிட்டார்கள் என்பதையோ, அனைவருக்கும் உணவுள்ளது என்பதையோ உறுதிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 8.30 மணிக்கு முன்னரே இத்தகைய தகவல்கள் பெற்று மாவட்ட ஆட்சி நிர்வாகம் அந்தந்த மாவட்டங்களில் அனைவரும் உணவுண்டனர் என்பதை உறுதிப்படுத்தலாம்.

நகரங்களில் ஓட்டல்களில் ஆதார் அட்டையைக் காண்பித்து இரவு 50 உரூபாக்கு சாப்பிட்டுக் கொள்ளுமாறு அனுமதிக்கலாம். ஓட்டல்களுக்கு அரசு அடுத்தநாளே பணத்தைக் கொடுத்துவிடவேண்டும். இப்படி இரவு உணவுண்டவர்கள் அடுத்த நாள் தெருவை சுத்தம் பண்ணும் சேவையையோ, அரசு மருத்துவமனை, அரசு கட்டிடங்களை சுத்தம் பண்ணும் பணியோ செய்யவேண்டும்.

ஆதரவில்லாமல், மனநலம் சரியில்லாமல் சாலைகளில் சுற்றுவோர், படுத்திருப்போர் போன்றோருக்கு குறிப்பிட்ட கோவில்கள், சமூக நல அமைப்புகள், சேவை அமைப்புகள் மூலம் உணவு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பிட்ட, தெளிவான எல்லைகள் வகுத்துக்கொண்டு இரவு 8 மணி தொடங்கி ஊர்திகளில் உணவு எடுத்துச் செல்லப்பட்டு வழங்கலாம்.

பேருந்துப் பயணங்களில் இருப்போரிடம் இரவு உணவு தேவைப்படுவோரின் விபரம் சேகரிக்கப்பட்டு, தரமான மோட்டல்கள் மூலமாகவோ அல்லது மகளிர் சேவை குழுக்கள் மூலமாகவோ தரமான, சுத்தமான உணவு கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

16. தெரு நாய்களுக்கும் குறிப்பிட்ட இடங்களில் உணவும் நீரும் வைக்கப்பட வேண்டும்.

17. மதிப்பிற்குரிய முதல்வர் கவனத்தில் கொள்ளவேண்டியது, அனைவரும் உணவருந்தினார்கள் அல்லது அனைவருக்குமான உணவு இருக்கிறது, எவரும் பசியோடு இரவு உறங்கச்செல்லமாட்டார்கள் என்பதே. தமிழகத்திலுள்ள எந்த மனிதரும் தமக்கு உணவில்லை என நினைக்கக்கூடாது. அவருக்கான உணவு நிச்சயமாக இருக்கிறது, உறுதியாகக் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்த வேண்டியது முதல்வரின் தலையாய கடமை.

தமிழக முதல்வருக்கான நேரம் 8.30 முதல் 8.44. முதல்வர் தமக்கான 14 நிமிடங்களுக்குள் அனைவரும் உணவுண்டதை உறுதிப்படுத்த வேண்டும். இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் அன்று பிறந்த குழந்தைகள் விவரம், சுகப்பிரசவம், சிசேரியன் குழந்தைகள், குறைபாட்டோடு பிறந்திருப்பின் அது பற்றிய குறிப்புகள், இறந்தோர் விவரங்கள், வகைகள், முக்கியமாக சாதி, மதம் சார்ந்து சண்டைகள், இறப்புகள் நிகழ்ந்தனவா என்பதைப் பற்றிய அறிக்கை, தமிழகத்தில் அன்று நடைபெற்ற குற்றச் செயல்கள், திருட்டுகள், பிற முக்கிய நிகழ்வுகள், குறிப்பிட்டுச் சொல்லும்படியான நல்ல செயல்கள், தண்டிக்கும், கண்டிக்கும், எச்சரிக்கும் வகையில் நடைபெற்ற சம்பவங்கள், விருந்தினர்கள் உபசரிப்பு, முதல்வரின் தனிப்பட்ட செய்திகள், மக்களுக்கு முதல்வராய் சொல்லவேண்டிய செய்திகள், அறிவுரைகள், வாழ்த்துக்கள் போன்றவற்றை முதல் அமைச்சர் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இறுதியாக, தமிழகத்தில் அன்றைக்கு அனைவரும் வயிறு நிறைய உணவுண்டார்கள் எனும் மகிழ்ச்சியான இனிப்பான செய்தியை மக்களுக்கு அறிவித்துவிட்டு, தமிழின் ஓரிரு புகழ்மொழிகளோடு இரவு வாழ்த்துக்கள் கூறி, முதல்வர் ஒரு இனிப்பு பலகாரம் சாப்பிடுவதோடு முதல்வரின் நேரலை முடிவுக்கு வரவேண்டும்.

18. தவிர்க்க இயலாத காரணங்களினால் தமிழக முதலமைச்சர் அவர்களால் நேரலையில் வரமுடியாவிட்டால், துணைமுதலமைச்சர் நேரலையில் இடம்பெற வேண்டும். முதல்வருக்குக் கூறப்பட்டுள்ள அனைத்தும் துணைமுதல்வருக்கும் பொருந்தும்.

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு ,**

இந்தியத் திருநாட்டிலுள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பகுதிகளில் வாழும் சுமார் 140 கோடி மக்களும் இரவில் வயிராற உண்டு நிம்மதியாக உறங்குவதை உறுதிப்படுத்தும் பெரும்பொறுப்பு நாட்டின் முதல் மனிதர் எனும் முறையிலும், குடியரசின் தலைவர் எனும் முறையிலும், பெருமைமிகு இந்தியக் குடுப்பத்தின் தலைவர் எனும் முறையிலும், மேதகு குடியரசுத் தலைவருக்கு பொறுப்பும் கடமையும் உள்ளது.

நாட்டின் அனைத்து மக்களும், அயல்நாடுகளிலிருந்து வந்துள்ள விருந்தினர்களும், குறைந்தபட்சம் இரவிலாவது உணவுண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவது நாட்டின் தலைவர் எனும் முறையில் குடியரசுத் தலைவரின் கடமையாகிறது. மாநில மற்றும் ஒன்றியப் பகுதிகளின் முதல்வர்கள் அந்தந்த மாநில, ஒன்றியப் பகுதிகளின் அனைத்து மக்களும் இரவு உணவுண்டு உறங்கச் வெல்வதை உறுதி செய்வார்கள். எனினும் நாட்டின் அரசுத் தலைவர் எனும் முறைவில் அதை மேலும் உறுதி செய்வது மேதகு குடியரசுத் தலைவரின் கடமையாகக் கருதப்படுகிறது.

மதிப்பிற்குரிய இந்தியக் குடியரசின் தலைவர், தினமும் 8.45 முதல் 9.03 வரை, 18 நிமிடங்கள் நேரலையில் வரவேண்டும். குடியரசுத் தலைவர் தமது உணவு மேசையில் 8.45 மணிக்கு அமர்ந்திருப்பதை இந்தியாவிலுள்ள அத்தனை தொலைக்காட்சிகளும் நேரடி ஒளிபரப்புச் செய்யவேண்டும். குடியரசுத் தலைவர் தனிப்பட்ட தொலைபேசி, அலைபேசி எண்களைக் கொடுத்து, இந்தியாவின் எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள எந்த மனிதருக்காவது உணவில்லையெனில் தம்மை தொடர்புகொள்ளலாமென்றும், இந்தியத் திருநாட்டிலுள்ள அனைத்து மக்களும் உணவுண்ட பின்பே தாம் உணவுண்ணுவதாகவும் அறிவிக்க வேண்டும். இயற்கைச் சீற்றங்கள், விபத்துக்கள், பட்டினிப் போராட்டங்கள், உணவிருந்தும் வேண்டுமென்றே சாப்பிடாமல் இருப்பது

போன்றவை கணக்கில் கொள்ளப்பட வேண்டியதில்லை. குடியரசுத் தலைவர் கவனத்தில் கொள்ள வேண்டியது, இந்திய மக்கள் அனைவருக்கும் போதுமான உணவு இருக்கிறதா, உணவு முறையாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறதா, மக்கள் உணவில்லாமல் பட்டினியாக படுக்கைக்குச் செல்கிறார்களா என்பதே. எந்த மனித உயிரும் இரவு பட்டினியாய் உறங்கக் கூடாது. அதுவே நாட்டின் தலைவர் எனும் முறையில் குடியரசுத் தலைவரின் மாபெரும் வெற்றி.

காத்திருக்கும் நேரத்தில், குடியரசுத் தலைவர் அன்றைய இந்திய நாட்டின் விவரங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். பிறப்பு, இறப்பு, மருத்துவமனை செய்திகள், மக்களின் உடல்நலம், போக்குவரத்து, விபத்துகள், அன்றைய அலுவல்கள், பிரதம அலுவலக செய்திகள், மக்களின் மனநிலைகள், அறிவிக்க வேண்டிய செய்திகள், மக்களுக்கான வாழ்த்துக்கள், வேண்டுகோள்கள், சாதனைகள், நாளைய திட்டமிடல்கள், உலக நடப்புகள் போன்றவற்றை மக்களோடு பகிர்ந்து கொள்ளலாம். அரசியல் தவிர்த்து பொதுவான தகவல்கள், விருப்பங்கள் இடம்பெறலாம். அனைத்தும் குடியரசுத் தலைவரின் சுதந்திரத்துக்கு உட்பட்டது.

குடியரசுத் தலைவர் வெளிநாட்டு சுற்றுப் பயணத்திலிருந்தால், தவிர்க்க இயலாத காரணங்களினால் நேரலையில் வர இயலாவிட்டால், குடியரசுத் துணைத் தலைவர் இப்பணியினைத் தொடரவேண்டும். விளையாட்டுக்காகவோ, வேண்டுமென்றோ எவரேனும் உணவில்லை என குடியரசுத் தலைவரைத் தொடர்புகொண்டால், அது பெருந்தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட வேண்டும்.

குடியரசுத் தலைவரின் நேரலையின்போது பிரதமர் அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். இந்தியாவில் எங்கிருந்தாவது உணவில்லை என அழைப்பு வந்தால் அதை உடனடியாகத் தீர்க்கவேண்டியது பிரதமர் அலுவலுகமே. எந்த மாநிலம், மாவட்டம், வட்டம், கிராமம் என போர்க்கால நடவடிக்கை எடுப்பது அவசியம். குடியரசுத் தலைவரின் வெற்றி பிரதமரின் வெற்றியே. இந்த 18 நிமிடங்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்திலிருப்பது, அல்லது நேரலையில் கவனமாக இருப்பது உசிதமானது.

வான்புகழ் கொண்ட இந்தியத் தாய்நாட்டில், அனைத்து மக்களும் வயிராற உணவுண்டார்கள், அல்லது நிச்சயமாக உணவுண்ணுவார்கள், அவர்களுக்கான

உயவு தயார்நிலையில் உள்ளது என மேன்மைமிகு குடியரசுத் தலைவர் உறுதிசெய்தபின், ஒருவாய் உணவுண்டவுடன் குடியரசுத் தலைவர் நேரலை முடிய வேண்டும்.

நேரலைக்குப்பின், குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து, வட்டவடிவில் ஒவ்வொன்றும் 32 செ.மீ விட்டம் கொண்டதாய் அமைக்கப்பட்ட ஒன்பது பச்சை நிற லேசர் ஒளிக்கற்றைகள் சரியாக 9.03 நிமிடங்களுக்கு வான் நோக்கி செலுத்தப்பட வேண்டும். வட்டத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள பச்சை நிற ஒற்றை லேசர் ஒளிக்கற்றை சரியாக 9.10 மணிக்கு செலுத்தப்பட வேண்டும். அனைத்து லேசர் ஒளிக்கற்றைகளும் சரியாக 9.11 மணிக்கு அணைக்கப்பட வேண்டும்.

லேசர் ஒளிக்கற்றை அணைக்கப்பட்டபின், 9.11 மணி தொடங்கி 9.21 வரை 10 நிமிடங்கள் வண்ண விளக்குகளால் குடியரசுத் தலைவர் மாளிகை ஒளிரச் செய்யப்பட வேண்டும்.

**அருள்மிகு கும்பகோணம் சாரங்கபாணி திருக்கோவில் நிர்வாகத்தாருக்கு,**

சாரங்கபாணி திருக்கோவிலில் தமிழக முதல்வரின் நேரலையைக் காணும் விதத்தில் 108 செ.மீ. நீளமுடைய ஒரு தொலைக்காட்சிப் பெட்டி நிறுவப்பட வேண்டும். முதல்வரின் நேரலையில் விருந்தினர்கள் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும் உணவுண்டார்கள் என அறிவிக்கப்பட்டால் மட்டுமே ஆராவமுதனின் நடை சாத்தப்பட வேண்டும். முன்னதாக, முதல்வரின் அறிவிப்பை கணக்கில் கொள்ளாமல் தாயாருக்கு மலர்ந்த 18 தாமரை மலர்கள் கொண்ட மாலை சூட்டப்பட்டு வழக்கம்போல் சன்னிதி சாற்றப்பட வேண்டும். அனைவரும் உணவுண்டார்கள் என முதல்வர் அறிவித்தவுடன், ‘‘ஆராவமுதே’’ திவ்யப் பாசுரம் பாடப்பட வேண்டும். பெருமாளுக்கு 48 மலர்ந்த தாமரை பூக்களால் ஆன மாலை சூட்டப்பட வேண்டும். 108 எண்ணிக்கை வரும்விதத்தில் ஏதேனுமொரு இனிப்புவகைப் பண்டம் படையலிடப்பட வேண்டும். ‘‘நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே’’ பாடல் பட்டர்களால் ஓதப்பட வேண்டும். இறுதியாக ஜெய ஜெய ராமா ஜானகி ராமா ஜானகி ராமா ஜெய ஜெய ராமா என மும்முறை அனைவராலும் வாழ்த்தொலிக்கப்பட்டு மூலவர் நடை சாத்தப்பட வேண்டும்.

இவை அத்தனையும் முதல்வர் அறிவிப்பு வெளியான 10 நிமிடங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

திருக்கோவில் வெளிச்சுற்றின் முக்கிய கதவு சாத்தப்பட்டபின், ஒரு கிலோ சூடம் ஏற்றப்பட்டு, 10 கிலோவிற்கு குறையாத பூசணி திருஷ்டி சுற்றி உடைக்க வேண்டும். முடிவாக ஸ்ரீராமஜெயம் விண்ணதிர முழங்கப்பட வேண்டும்.

முதலில் தமிழக அளவில் செயல்படுத்தப்படும் இந்நடைமுறை பின்னர் குடியரசுத் தலைவரின் அறிவிப்பு என இந்தியா அளவிலும், பின்னர் உலக அளவிலும் விரிவுபடுத்தப்படும்.

**அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் கோவில் நிர்வாகத்தாருக்கு,**

மீனாட்சியம்மன் திருக்கோவிலின் தெற்கு வாசல் மட்டுமே திறக்கப்பட வேண்டும். மற்ற வாசல்கள் மறுஅறிவிப்பு வெளியிடப்படும்வரை மூடப்பட்டு, தினமும் குலைகொண்ட வாழை மரங்கள், மாவிலைத் தோரணங்கள் போன்ற மங்கலப் பொருட்களால் அலங்கரிக்கப்பட வேண்டும்.

கோவிலின் வெளிச்சுற்று மதிலின் கடைகள் அனைத்தும் அகற்றப்பட்டு முழுக்கோவிலின் மதிலும் ஒரு மீட்டர் உயரத்திற்கு பச்சைநிறத் துணி கொண்டு சுற்றப்பட வேண்டும். தெற்கு வாசல் நுழைவு வாயில் மட்டுமே விடப்பட வேண்டும்.

தமிழக முதலமைச்சர் நேரலையில் தமிழ்நாட்டிலுள்ள மக்களெல்லாம் இரவு உணவுண்டார்கள் என அறிவித்தவுடன் மீனாட்சியம்மன் திருக்கோவிலைச் சுற்றிவந்து குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடப்பட வேண்டும். இரவு நடை சாத்தப்பட்ட பின்னர் தெற்கு வாசலின் இருபக்க பச்சைத் துணியும் இணைக்கப்பட்டு முழுக்கோவிலும் பச்சைத் துணிக்குள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**அருள்மிகு திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் நிர்வாகத்தாருக்கு,**

தமிழக முதலமைச்சர் தமிழக மக்களெல்லாம் இரவு உணவுண்டார்கள் என அறிவித்த உடன் திருக்கோவிலைச் சுற்றிவந்து சிவபுராணம் பாடப்பட வேண்டும். பாடிவரும் போது 48 வானவெடிகள் வெடிக்கப்பட வேண்டும். திருக்கோவில் நடை

சாற்றப்பட்டு இறுதியாக நான்கு திசைக் கோபுரத்தின் நுழைவு வாயிலை ஒட்டி ஒரு படி நெய் தீபம் ஏற்றப்பட வேண்டும்.

**அன்புள்ள தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தாருக்கு,**

அடுத்த ஒரு ஆண்டில், பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு இந்திரன் பெயரை ஒட்டாகக் கொண்ட பெயர்கள் மட்டுமே சூட்டப்பட வேண்டும். உதாரணமாக அமரேந்திரன், ஜெயேந்திரன், விஜயேந்திரன், மகேந்திரன் போன்ற பெயர்கள். எனினும் தேவேந்திரன் எனும் பெயரை எக்குழந்தைக்கும் வைக்கக் கூடாது.

பிறக்கும் பெண் குழந்தைகள் அத்தனை பேருக்கும் வைஷ்ணவி என்னும் பெயரே சூட்டப்பட வேண்டும்.

இறப்புச் சடங்குகள் முன்போலவே நடைபெறலாம்.

இறந்த 24 மணி நேரத்திற்குள் உடல் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும்.

அருந்ததியரின் கொட்டே இடம்பெற வேண்டும். எக்காரணம் கொண்டும் பறையடித்தல் கூடாது.

நீர்மாலையால் நீராட்டியபின், ஆணாக இருந்தால் தலைமுடி மழிக்கப்பட வேண்டும். தொடர்ந்து 10 படி காவிரி தீர்த்தம்கொண்டு உடலை நனைக்க வேண்டும்.

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தையின் அரிசி மாவால் நனைக்கப்பட்ட கால் பாதங்கள் தலையில் ஒற்றியெடுக்கப்பட வேண்டும்.

பல்லாண்டு பாடல்கள் (1 - 12) பாடப்பட வேண்டும்.

10 படி காவிரி தீர்த்தத்தை சல்லடை மூலம், மாவு ஒற்றப்பட்ட பாதங்களின் மேல் ஊற்ற வேண்டும்.

இறுதியாக 18 அடி நீளமும் 100 செ.மீ. அகலமும் கொண்ட ஒற்றை வெள்ளை கதர் வேட்டியால் உடல் சுற்றப்பட வேண்டும். அளவுகள் சரியாக இருக்க வேண்டும். அளவுகளை இருவர் சரிபார்த்து ஒப்பமளிக்க வேண்டும். கடையில் வேட்டி வாங்கி தைத்துக் கொள்ளலாம்.

பெண்ணுக்கு நீர்மாலை நீராட்டுக்குப்பின், ஒரு படி அரைத்த மஞ்சள் கொண்டு உடல் பூசப்பட வேண்டும். திருப்பாவையின் இரண்டாம் பத்து (பாடல்கள் 11-20) பாடப்பட வேண்டும். தொடர்ந்து, 20 படி காவிரி தீர்த்தத்தை சல்லடை கொண்டு உடல் மீது ஊற்ற வேண்டும். 32 அடி நீளமும் 100 செ.மீ அகலமும் கொண்ட பச்சை நிற பருத்தி சேலையால் உடல் சுற்றப்பட வேண்டும்.

மறைந்தோர் உடலுக்கு மணமுள்ள ஒற்றை மாலை அணிவிக்கவேண்டும்.

எளிமையான பல்லக்கில் வானத்தைப் பார்த்தவாறு கிடத்தப்பட்ட நிலையில் உடல் எடுத்துச் செல்லப்பட வேண்டும். பல்லக்கில் வேறு பூக்கள் இடம்பெறக் கூடாது. வழியிலும் பூக்களைத் தூவக் கூடாது.

இடுகாடு ஒரு கிலோ மீட்டருக்குள் இருந்தால் 8 பெரும், 2 கி. மீ எனில் 16 பேரும் தூக்கிச் செல்ல வேண்டும். பல்லக்குத் தூக்குபவர்கள் எக்காரணம் கொண்டும் மது அருந்தியிருக்கக் கூடாது. உடலை வாகனத்தில் எடுத்துச் செல்லக் கூடாது.

இறப்பு உறுதி செய்யப்பட்டவுடனே, பல்லக்குத் தூக்குபவர்கள் யார் என்பதை முடிவு செய்துவிட வேண்டும். அவ்வாறே காவிரி தீர்த்தத்திற்கும் ஆள் அனுப்ப வேண்டும். காவிரித் தீர்த்தம் திருவரங்கம் அம்மா மண்டபப் படித்துறையில் மட்டுமே அள்ள வேண்டும்.

நல்லடக்கம் செய்வதற்குமுன், குழிக்குள் மல்லிகை, முல்லை, ரோஜா போன்ற மணமுள்ள மலர்கள், உதிரிப் பூக்கள் பரவலாக துூவப்பட வேண்டும். உடலைக் கிடத்தியபின் தாமரை இதழ்கள் உடல்மீது தூவப்பட வேண்டும். பின்னர் உடல்மீது மண்ணைக் கொட்டி நிரப்ப வேண்டும்.

தலைமாட்டில் துளசிச் செடி நடப்படவேண்டும்.

அரைப்படி கொள்ளளவு கொண்ட அகல் விளக்கில், மூன்று திரிகள் ஒன்றாகத் திரிக்கப்பட்டு தலைமாட்டில் நெய்தீபம் ஏற்றப்பட வேண்டும். இறப்புச் சடங்கிற்கு வந்திருப்பவர்கள் தீபம் ஏற்றிய குழியை வலமாக ஒருமுறை சுற்றி இறப்புச் சடங்கினை முடிக்க வேண்டும்.

கொட்டுக்காரர்களை மரியாதையாக நடத்த வெண்டும். அவர்கள் வருவதற்கும் திரும்பச் செல்வதற்கும் வாகனம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நல்லடக்கம் முடிந்தபின் கொட்டுக்காரர்கள் குளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவர்களுக்கு புது வேட்டி, துண்டு அணிவிக்க வேண்டும்.

இறந்தவர் மகனோ அல்லது அவர் நியமிக்கும் இரத்த உறவுடையவரோ கொட்டுக்காரர்கள் காலில் விழுந்து வணங்கி நன்றி தெரிவிக்க வேண்டும்.

பல்லக்குத் தூக்கியவர்களுக்கும் புதுவேட்டி, துண்டு அணிவித்து அவர்களது பாதமும் வணக்கப்பட வேண்டும்.

மூன்றாம் நாள் பால் ஊற்றும் சடங்கு வழக்கம் போல் நடைபெறலாம்.

பதினாறாம் நாளுக்குப் பதிலாக, 18வது நாள் திருப்புல்லாணிக் கடலில் சடங்குகள் நடத்தப்பட வேண்டும்.

48ஆம் நாள், இறந்தோர் நினைவாக குமரிப் படித்துறையில் நீரும், எள்ளும், மலரும், தீபமும் அளிக்க வேண்டும்.

108ஆம் நாள், திருவரங்கம் காவிரி படித்துறையில் நீராடி காவிரித் தாய்க்கு பட்டும், மங்கலப் பொருட்களும் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்.

தேவேந்திர குலத்தாரைப் பொறுத்தவரை,

மக்கள் அனைவரும் நம் மக்கள். அனைத்து நாடுகளும் நம்முடையவை. உலகின் அனைத்து மொழிகளும் நமக்கானவை. அனைத்து கடவுள்களும் நம் கடவுள்கள். தேவேந்திரர் உறுதியாகக் கொள்ளவேண்டியது நம் மக்கள், நம் நாடுகள், நம் மொழிகள், நம் மதங்கள், நம் கடவுள்கள், நம் உலகம். உலகின் மக்களை நாடு, மொழி, மதம், இனம், நிறம், சாதி கொண்டு ஒருபோதும் பிரித்துப் பார்க்கக் கூடாது. தேவேந்திரர்க்கு மனிதர் என்பதே பொது அடையாளம். மனிதர்களை சாதி, மதம் கொண்டு அடையாளம் காணக்கூடாது.

தேவேந்திரர் விண்ணுக்குரியவர். விண்ணையாள்பவர் தேவேந்திரர்.

மண்ணின் வாழ்க்கை காலத்திற்குப்பட்டது. விண்ணுலக வாழ்வு முடிவிலாதது. உலகின் அறிவை உயர்த்துவது விண்ணவர் கடமை.

தேவேந்திரர் முதற்கடமையாகக் கொள்ள வேண்டியது, மக்கள் வயிற்றை நிரப்புவதே. உலகின் பசிப்பிணியை நீக்குவதே.

உலகிற்கு ஏரே முக்கியம். தற்போதைய உலகில் 800 கோடிக்கும் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். அத்தனை மக்களும் இரவு வயிறு நிறைய உணவுண்டு உறங்கச் செல்வதை தேவேந்திரர் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான முதற்படியாக,

தேவேந்திர குலத்தார் எக்காரணம் கொண்டும் பிற மனிதர்மேல் ஆயுதம் ஏந்தக் கூடாது. நமக்கு முதல், நாம் முதன்மையாகக் கொள்ளவேண்டியது ஏரே. உணவைப் பெருக்குவதே நமது முதற்கடமை. ஒருபோதும் மறக்கக் கூடாது.

அடுத்துவரும் ஒரு வருட காலத்திற்கு தேவேந்திர குலத்தார் தங்களிடம் உள்ள கத்தி உள்ளிட்ட அனைத்து விதமான ஆயுதங்களையும் பொது இடத்தில் வைத்துப் பூட்ட வேண்டும். மூன்று பூட்டு போட்டு ஒன்றை சமுதாயத் தலைவரிடமும், ஒன்றை காத்திடமான சமுதாயப் பெண்ணிடமும் கொடுத்துவிட வேண்டும். ஊரில் நாடார் இருந்தால் மூன்றாவது சாவி அவர்களிடமும், இல்லையெனில் பிள்ளைமாரிடமும் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைமாரும் இல்லையெனில் இருக்கும் பிற சாதிக்காரரிடம் கொடுத்துவிட வெண்டும். வீட்டில் அருவாமனை இருக்கலாம். அதை காய்கறி வெட்டும்போது மட்டுமே பயன்படுத்த வேண்டும். மற்ற நேரங்களில் எளிதில் எடுக்க முடியாத இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

கருப்பசாமி கோவில் இருந்தால் அனைத்து ஆயுதங்களையும் ஒன்றாகக் கட்டி கோவிலுக்குள் வைத்துவிட வேண்டும்.

தேவேந்திர குலத்தாருக்கு மறுஅறிவிப்பு வரும் வரை கம்பு மட்டுமே ஆயுதம்.

தேவேந்திர குலத்தாரால் மண்ணில் இரத்தம் சிந்தக் கூடாது.

ஒருவேளை தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழல் வருமேயானால், மனிதரை அடித்துத் திருத்த வேண்டிய சூழல் வருமேயானால், கம்பால் தடுக்கலாம், அடிக்கலாம். அடிக்கும்போதும் தலையில் அடிக்கக் கூடாது.

பிற சமுதாயத்தார்கள்மேல் பதியப்பட்டிருக்கும் அத்தனை வழக்குகளும் உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும். தேவேந்திரர் தம்மை இந்தியராய், மனிதராய் உணர வேண்டும். மற்ற சமூகத்தவரோடு நாம் ஒருதாய் பிள்ளைகள் என தமிழால் இணைய வேண்டும்.

தேவேந்திரருக்கு அண்ணன் தம்பி உறவே மிகவும் பெருமைமிக்கது. அண்ணன் தம்பிகளுக்குள் எந்தவிதமான மனக்கசப்புகள் இருந்தாலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து பேசிக்கொள்ள வேண்டும். மூத்தவர் மதிக்கப்பட வேண்டும். இதற்கு முன் எப்படி இருந்திருப்பினும், இனிவரும் காலங்களில் ஒற்றுமை நிலைத்திருக்க வேண்டும்.

பிரிந்திருக்கும் தம்பதிகள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒன்று சேரவேண்டும். கணவர்மேல் கோவத்திலிருக்கும் பெண்கள், கணவர் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். வீட்டிற்கு வரும் மனைவியை கணவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெண் எத்தகைய தவறு செய்திருந்தாலும் ஒருமுறை மன்னிக்கப்பட வேண்டும். மீண்டும் சொல்லப்படுகிறது. பெண் மன்னிக்கப்பட வேண்டும். மறவாதீர்.

மனைவிமேல் கோவத்திலிருக்கும் கணவர் மனைவி வீட்டிற்குச் சென்று அழைக்கவேண்டும். கணவர் தவறிழைத்ததாகக் கருதும் மனைவி, அவரோடு சமாதானம் கண்டு புதுவாழ்க்கையைத் தொடங்க வேண்டும்.

தேவேந்திரர் மறுஅறிவிப்பு வரும்வரை மது குடிக்கக் கூடாது. மருத்துவ ரீதியாக குடிக்காமல் இருக்கவே முடியாது எனும் நிலையில் எவரேனும் இருப்பாரேயானால், அன்னார் குடும்பத்தார் மற்றும் ஊர்ப் பெரியவர்கள் சம்மதத்தின் பேரில் குடிக்கலாம். குடித்தவர் சுயகட்டுப்பட்டோடு இருக்கவேண்டும். கட்டுப்பாடு மீறினால் குடும்பத்தாரே பொறுப்பு. இறப்பு வீட்டில் ஒரு பாத்திரத்தில் கொஞ்சமாக மது ஊற்றிவைக்கப்பட வேண்டும். துக்கம் தாளவில்லை என நினைப்பவர் குடிக்கலாம். மது குறைந்தால்

மேலும் ஊற்றலாம். மறைவாகக் குடிக்கக் கூடாது. சடங்குகளில் கலந்து கொள்பவர்கள், பெண்கள், சிறுவர்கள் குடிக்கக் கூடாது.

ஏற்கனவே தேதி நிச்சயிக்கப்பட்டுள்ள திருமணங்களை முன்னரே திட்டமிட்ட தேதியில் நடத்தலாம். திருமணங்கள் எளிமையாக நடத்தப்பட வேண்டும். தாலிகட்டும் நிகழ்ச்சியின்போது ஒருபடி அளவுள்ள மூன்று பித்தளைச் செம்பில் நீர் எடுத்துக்கொள்ள வேண்டும். காவிரி நீர் எனில் இன்னும் சிறப்பு. மூன்று செம்பிலும் 48 சுற்றுகள் வெள்ளை நூல் சுற்ற வேண்டும். 12 மாவிலைகளோடு மங்கலத் தேங்காய் வைத்து, முதல் செம்பை மஞ்சள் பட்டாலும், இரண்டாவதை வெள்ளைப் பட்டாலும், மூன்றாவதை பச்சைப் பட்டாலும் அடியில் சுற்றவேண்டும். மூன்று செம்புகளையும் சிறியதொரு மரப்பலகை மேடையில் வைத்து, மூன்றையும் சுற்றி மணமுள்ள ஒற்றை மாலை அணிவிக்க வேண்டும். திருப்பாவையின் நான்காம் பாடலான ‘ஆழிமழைக் கண்ணா’ பாடி, சூடம் காட்டி மணமக்கள், பொதுமக்கள் சார்பில் வேண்டிக்கொள்ள வேண்டும். தாலிகட்டு முடித்த பின்னர், நீரை தாவரங்களுக்கு ஊற்றிவிடலாம். திருமணம் முடிந்த தம்பதிகள் ஒரு வாரத்திற்குள்ளாகவோ, அதிகபட்சமாக பத்து நாட்களுக்குள்ளாகவோ திரப்பரங்குன்றம் முருகப் பெருமான் ஆலயத்திற்குச் சென்று வணங்கி ஆசிகள் பெறுவது சிறப்பு. தேவேந்திரர் மறுஅறிவிப்பு வரும்வரை புது திருமணப் பேச்சை எடுக்க வேண்டாம்.

பெண் வயதிற்கு வந்தால் பதினெட்டாம்நாள் தலைக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். திருப்பாவை பாடல்கள் பாடப்பட வேண்டும் (26வது பாடல் தவிர்த்து). சடங்குகள் இரவில் நடைபெற வேண்டும்.

தேவேந்திரகுல இளைஞர்களின் ஊடகப் பதிவுகள் மெச்சத்தக்கதாக இல்லை. ஒரே அருவாள்களும் சிங்கங்களுமாக இருக்கின்றன. அப்பட்டமான சாதி வெறியாக இருக்கிறது. ஒரு மூடன் வாயில் சிகரெட்டும் தலையில் பச்சை சிவப்பு துண்டும் கட்டி ஆண்ட பரம்பரைன்னா இப்படித்தான் இருக்கும் கண்டுக்காதீங்க எனப் பதிவிட்டுள்ளான். தேவேந்திரரே, ஆண்ட பரம்பரை எப்படி இருக்கும், இருக்கவேண்டும் எனத் தெளியுங்கள். முதலில் நாம் மனிதர்கள். மொழியால் தமிழர்கள். சாதி அடையாளம் வேண்டாம். முகநூல், வலைத்தளம், யூடிப் போன்ற சமூக ஊடகங்களில்

பின்னூட்டங்கள் இடுவதில் மிகுந்த கவனம் தேவை. அசிங்கமான சொற்களும், நாலாந்தரமான வசவுச் சொற்களுமாக பின்னூட்டங்கள் பதிவிடுவது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல.

தேவேந்திர குலத்தவர் சமூக ஊடகங்களில், வலைத்தளங்களில் பதிவிட்டுள்ள சாதி போற்றும் அத்தனை பதிவுகளும், படங்களும், காணொளிகளும் நீக்கப்பட்டாக வேண்டும். சாதிப் பெயரை தலைப்பாகக் கொண்டுள்ள அனைத்தும் மாற்றப்பட வேண்டும்.

தேவேந்திரர் சாதி ஒட்டை ஊடகங்களில் பயன்படுத்துவது தடைசெய்யப்படுகிறது.

உடைகளில் எக்காரணம் கொண்டும் சாதிப்பெயரோ, தலைவர்கள் படங்களோ இடம்பெறக் கூடாது.

தேவேந்திர குலத்தார் சாதி பற்றியோ, மதம் பற்றியோ பொதுவெளியில் பேசுவது, சமூக ஊடகங்களில் பதிவிடுவது தடை செய்யப்படுகிறது.

தேவேந்திர குலத்தார் பெயர்களில் சாதி ஒட்டை பயன்படுத்தக் கூடாது.

வாகனங்களில், வீடுகளில் சாதி ஒட்டு கூடாது.

தேவேந்திரர் விழாக்களில், குடும்ப நிகழ்வுகளில், திருவிழாக்களில் பேனர் அடிப்பது, படங்கள் ஒட்டுவது தடைசெய்யப்படுகிறது. திருமணப் பத்திரிக்கை உள்ளிட்டவற்றில் சாதித் தலைவர்கள் படங்கள் இடம்பெறக் கூடாது. மணமக்களை உண்மையிலேயே வாழ்த்த நினைப்பவர்கள் பதினெட்டு அடி கதர் துணி வாங்கி, அதில் மணமக்கள் படங்களோ, வாழ்த்துக்களோ, கவிதைகளோ வரைந்து கொள்ளலாம். வரைய வேண்டும். எழுத வேண்டும். கண்டிப்பாக அச்சடிக்கக்கூடாது. அதுவும் ஒரு கதர் துணி வாழ்த்து மட்டுமே இடம்பெற வேண்டும்.

இறந்தோருக்கு சமாதி கூடாது. அன்னார் நினைவாக நிலத்தில் ஒருபோதும் கட்டிடம் கூடாது.

தேவேந்திரர் பேட்டியோ, அறிவிப்போ கொடுக்கும்போது, ஊடகங்களைச் சந்திக்கும்போது, பின்புலமாக பூமியின் வரைபடம் அல்லது இந்தியாவின் வரைபடம் அல்லது தமிழின் புகழ்மிக்க வாசகங்கள் மட்டுமே இடம்பெற வேண்டும். இந்திரன் படம் வேண்டாம். சாதியோடு அடையாளப்படுத்தப்படும் தலைவர்கள் படங்களோ, அரசியல் தலைவர்களின் படங்களோ, ஆயுதங்களோ, வேந்தர் பரம்பரைகளோ, ஆன்மீகப் தலைவர்கள், கடவுளர்கள் படங்களோ இருக்கக் கூடாது.

தேவேந்திரருக்கு சாதிப் பெருமிதம் ஒருபோதும் கூடாது. தேவேந்திர குலத்தார் நல்ல விழுமியங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தேவேந்திரர் உலக அமைதி, உலக நன்மை, மழை வேண்டுதல் தவிர பிறவற்றிற்கு இறைவனிடம் பிரார்த்திக்கக் கூடாது. ஒருவேளை தனிப்பட்ட முறையில் பிரார்த்தனை கட்டாயம் என நினைப்பவர்கள் வேண்டுதல், பிரார்த்தனை சொற்களை அடுத்தவருக்குக் கேட்குமாறு சொல்லக்கூடாது. மனதிற்குள் வேண்டிக் கொள்ளலாம். மக்கள் கூட்டத்திலோ, பொதுவான இடங்களிலோ பிரார்த்தனைகள் கூடாது. பொதுக்காரியங்களில், பொதுவிசயங்களில் ஆன்மீக பாவனை கூடாது. தேவேந்திரருக்கு நாளெல்லாம் வேண்டுதல் அவசியமில்லை. நமக்கு நிறையக் கடமைகள், வேலைகள் இருக்கின்றன. நாம் நாள்முழுக்க பிரார்த்தித்துக் கொண்டிருக்க முடியாது. கடவுள் நம்மை நன்றாகவே அறிவார். இறை அறியாதது ஏதொன்றும் இல்லை.

தேவேந்திரருக்கு மனமே முக்கியம். புறப் பாவனைகள் தேவையில்லை.

வழிபாட்டிடங்களில் கடவுளிடம் அழக்கூடாது. கடவுளிடம் கண்ணீர் சிந்தக் கூடாது. கடவுளை சிரிப்பும் மகிழ்ச்சியுமாகக் காண வேண்டும். கடவுளிடம் ஆடலாம், பாடலாம். ஆடுவதிலும் ஒரு சுயகட்டுப்பாடு இருப்பது அவசியம்.

உணவுண்ணும் போதும், உணவுக்கு முன்னும் பின்னும் பிரார்த்தனை கூடாது. உணவு நமது அடிப்படைத் தேவை. நமது உரிமை. உணவுக்காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை. உணவை பிரார்த்தித்தும் பெறக்கூடாது.

தேவேந்திரர் வீடுகளில் இரவு அரிசிச் சோறு உண்பது சிறப்பு. முடிந்தவரைக்கும் ஒரு கைப்பிடி அளவாவது அரிசிக் சோறு உண்ணலாம். சாப்பாட்டிற்குமுன் இனிப்பு சாப்பிடுவதைப்போல் மறுஅறிவிப்பு வரும்வரை சிறிதளவு சோறு உண்பதை பின்பற்றுங்கள். குழப்பு இல்லாமலும் ஒரு கைப்பிடிசோறு உண்டாலும் போதும். ஒரு குவளை கஞ்சியாகக் குடிப்பதும் சிறப்பே.

தேவேந்திரர் எவ்விதமான யாசகமும் பெறக்கூடாது. கல்வியைக்கூட யாசகமாகப் பெறக்கூடாது. குருவுக்குரிய தட்சணை அளித்தே பெறவேண்டும்.

தேவேந்திரர் வீடுகள் சாமியார் மடம்போல் இருக்கக் கூடாது.

வீடுகள் எங்கும் கடவுளர் படங்களாக மாட்டக்கூடாது.

தேவேந்திரர் சாமி பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ சத்தியம் செய்யக்கூடாது. பிறரிடமும் அதை வற்புறுத்தக்கூடாது.

தேவேந்திரர் அறிவியல் பாதையிலேயே என்றும் பயணிக்கவேண்டும்.

இம்மானுவேல் சேகரனார் உட்பட தேவேந்திர குலத்தைச் சேர்ந்த எந்தத் தலைவரின் பாடல்களையும் பொதுவெளியில் ஒலிபரப்பக் கூடாது. நாடகங்களில் சாதிப்பாடல்கள், சாதித்தலைவர் பாடல்கள் இடம்பெறக் கூடாது.

தேவேந்திரரும் தேவரும் ஒன்றே. தேவர் மண்ணுக்குரியவர். மண்ணை வைத்து தேவருக்கு முதல் மரியாதை. தேவேந்திரருக்கு தெய்வங்களிடம் முதல் மரியாதை. தேவேந்திரர் பொறுப்பறிந்து செயல்பட வேண்டும். இதற்கு முன்னர் நடந்தவை நடந்தவையே. எக்காரணம் கொண்டும் தேவேந்திரர் பின்னோக்கிப் போகவேண்டாம். இனி நடப்பவை நல்லவையாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தேவேந்திரரின் பேச்சும் செயலும் நடத்தையும் மெச்சத்தக்கதாக இருக்க வேண்டும். அனைத்துச் சமுதாயத்தாரோடும் இணக்கம் பேணப்பட வேண்டும். அனைவரும் நம் உறவுகளே. மறக்கக்கூடாது.

தேவேந்திரருக்கு சமாதி வணக்கம் கிடையாது. ஞானியர் என அறியப்பட்டவர் மட்டுமே வணக்கத்திற்குரியவர்கள்.

தமிழகத்திலுள்ள தியாகி இம்மானுவேல் சேகரனார் சிலைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும். மண் சிலைகள் 18படி காவிரி தீர்த்தத்தால் முழுக்காட்டப்பட்டு உடைக்கப்பட வேண்டும். உடைக்கப்பட்ட சிலைமண் அந்தச் சிலையிருந்த இடத்தில் குழி தோண்டி கொட்டப்பட்டு, அதன் மேல் ஒரு ஆலமரக் கன்று நடப்பட வேண்டும்.

கல் சிலை நிறுவப்பட்டிருப்பின் 48 படி காவிரி தீர்த்தம் கொண்டு சிலை முழுக்காட்டப்பட வேண்டும். ஆசாரி கொண்டு சிலையின் பாகங்கள் துண்டுகளாக உடைக்கப்பட வேண்டும். உடைக்கப்பட்ட அனைத்து சிலைகளின் துணடுகளையும் ஒன்றாகச் சேர்த்து இம்மானுவேல் சேகரனாரின் சமாதிக்கு முன்பாக கிழக்குத் திசை நோக்கி, 10 சிலைகளுக்கும் குறைவு எனில் முன்று படிகளும், 10க்கும் அதிகமான சிலைகள் எனில் 18 படிகளும் கட்டப்பட வேண்டும். படிகளின் உயரம் ஒரு அடியும், நீளம் மூன்று அடியுமாக இருக்க வேண்டும். தியாகியின் சமாதிக்கு மேல் இராணுவ மரியாதை இடங்களில் உள்ளது போல் ஒரு துப்பாக்கி தலைகீழாக நிறுவப்பட வேண்டும்.

தேவேந்திரர் மண்ணாலான அம்பேத்கர் சிலைகள் நிறுவியிருந்தால் அவற்றை உடைத்து மண்ணுக்குள் கொட்டி மேலே ஒரு அடிக்கும் குறைவான சிறியதொரு வெண்கலப் புத்தர் சிலையை வைத்துவிட வேண்டும். கல் சிலையெனில் தமிழக அரசிடம் ஒப்படைத்து விடவேண்டும்.

தேவேந்திரருக்கு திருப்பாவையின் 26 வது பாடலான ‘‘மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்’’ பாடல் பாடுவது தடை செய்யப்படுகிறது. திருப்பாவை பாடல்கள் தெரிந்த தேவேந்திரர்கள் 26வது பாடல் பாடும்போது வாய்விட்டுப் பாடக் கூடாது. அமைதியாகிவிட வேண்டும். தேவேந்திரரைப் பொருத்தவரை, 29 பாடல்களே. திருவாடிப்பூரத்து செகத்துதித்தாள் வாழி பாடலோடு சேர்த்து 30 பாடல்கள். மறக்க வேண்டாம்.

தேவேந்திர குலத்தாருக்கு அடுத்த ஒரு ஆண்டிற்கு புத்தாடைகள் அணிவது தடை செய்யப்படுகிறது. குழந்தைகள் பிறந்த நாளுக்கு வேண்டுமென விரும்பினால் அவர்களுக்கு மட்டும் பட்டு தவிர்த்து பிற உடைகள் வாங்கலாம்.

தேவேந்திர்களுக்கு உடல் உறுப்பு தானமளிப்பது தடை செய்யப்படுகிறது. இரத்த தானம் செய்யலாம். இறப்பிற்குப்பின் விரும்பினால் கண்தானம், தோல் தானம் கொடுக்கலாம். தோல் தானத்தில் தொடையிலிருந்து மட்டுமே தோல் எடுக்கப்பட வேண்டும்.

தேவேந்திர்கள் வீடுகள் கட்டிக்கொண்டிருந்தால் கட்டுமானம் உடனேயே நிறுத்தப்பட வேண்டும். உள்பூச்சு, வெள்ளையடிப்பது, வர்ணம் பூசுவது மட்டுமே மீதம் எனில் அதை மட்டும் முடித்துக் கொள்ளலாம். மற்றபடி, ஒரு செங்கலைக்கூட வைத்து கட்டுமானம் கூடாது. ஒரு கரண்டி மணல்கூட மேற்கொண்டும் பயன்படுத்தக் கூடாது. வீடுகள் தவிர்த்து பிற கட்டுமானங்கள் உள்ளது உள்ளபடியே நிறுத்தப்பட வேண்டும்.

ஒரு ஊரில் குறைந்தது பத்து தேவேந்திரர் வீடுகளாவது இருக்க வேண்டும் அல்லது குறைந்தது 30 பேராவது இருக்கவேண்டும். இதுவே தேவேந்திரர் குடியிறுப்பாகக் கருதப்படும். ஒவ்வொரு குடியிறுப்புக்கும் ஒரு தலைவர் அதாவது ஊர்க் குடும்பர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். குடும்பர் மதிப்பானவராக இருக்க வேண்டும். இரவில் அனைவரும் உணவுண்டார்களா என்பதை உறுதி செய்ய வேண்டியது ஊர்க்குடும்பரின் தலையாய பணி.

100 பேர்வரை இருக்கும் தேவேந்திரர் குடியிருப்பில் ஒருபடி அரிசி சோறும், 100 பேருக்கு அதிகமான மக்கள் உள்ள குடியிருப்பில் இருபடி அரிசி சோறும் தினமும் இரவு பொதுவில் சமைக்க வேண்டும். எளியதொரு குழம்பு வைக்க வேண்டும். இரவில் எட்டு மணிக்குமேல் தமது தெருவில், தனித்த குடியிறுப்பெனில் ஊரில், யாரேனும் சாப்பிடாமல் இருக்கிறார்களா எனச் சத்தமாகக் கேட்க வேண்டும். அனைவரும் சாப்பிட்டார்கள் என்பது உறுதியானால், சாப்பாடு பொதுவிடத்தில் வைக்கப்பட்டு யாரேனும் சாப்பிடுகிறார்களா எனக் கேட்க வேண்டும். அனைவரும் ஒரு கையளவாவது வாங்கிக் கொள்ள வேண்டும். மீதமிருக்கும் சோற்றை நான்கு பங்காகப் பிரித்து குடியிருப்பின் நான்கு முலைகளிலும் மண் சட்டியில் வைத்துவிட வேண்டும். கூடவே மண் கலயத்தில் நீரும் வைக்க வேண்டும்.

தேவேந்திர குலத்தார் எக்காரணம் கொண்டும் எவருக்கும் பணத்தை பிட்சை போடக்கூடாது. உணவு தவிர வேறு தானம் கூடாது. பழைய உடைகள் தரக்கூடாது.

பசியென்று வந்தால் வயிராற உணவிட வேண்டும். ஊருக்குப் போக பணமில்லை என வந்தால் கட்டண சீட்டு எடுத்துக் கொடுக்கலாம். ஒருபோதும் பணமாகக் கொடுக்கக் கூடாது. மறுபடியும் நினைவூட்டுகிறோம், அடுத்த ஒரு ஆண்டில் தேவேந்திரர் ஒரு உரூபாகூட எவருக்கும் பிட்சையாகக் இடக் கூடாது.

தேவேந்திர குலத்தவர் ஒரு வருட காலத்திற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சடங்கு முறைகள், 32 வழிகாட்டல்கள் எம்மால் அளிக்கப்பட்டுள்ளன. தேவேந்திரர் சார்பாக மேற்குறிப்பிட்டுள்ளவற்றிற்கு ஒப்பமளிக்க மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி, திரு. ஜான்பாண்டியன், திரு. செந்தில் மள்ளர், திரு.முருகவேல் ராஜன், திரு. தங்கராஜ் மற்றும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய, சமூகத்திற்கு சேவையாற்றும் மேலும் 5 பேர் தலைவர்கள் அடையாளம் காணப்பட்டு 10 பேரும் இணைந்து ஒப்பமளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒப்பமளிப்பவர்கள் அனைவருக்கும் திருமணம் நடந்திருக்கவேண்டும். மனைவியை விட்டுப் பிரிந்திருக்கக்கூடாது. ஒப்பமெனில், அனைவரும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியார் திருவடி பணிந்து, ஆலிலைப் பெருமாள் அருள்பெற்று, வானுயர்ந்த கோபுரத்தின்முன் நின்று, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ‘‘நாங்கள் காப்பவர்கள்’’ பாடலை உறுதிமொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே தேவேந்திரர் அடுத்து முன்நகர்த்த வேண்டிய கொள்ளைகள், திட்டங்கள் கலந்து பேசி அறிவிக்கப்படும்.

தமிழகத்தில் வாழும் அத்தனை மனிதர்களும் வயிராற உண்டார்கள் எனும் செய்தியே தேவேந்திர குலத்தவரின் முதல் இலக்கு. என்றைக்கு அப்படி ஒரு நிலை உருவாகிறதோ அன்றிலிருந்து சத்ய யுகம் ஆரம்பமாகிறது.

**தொடங்கட்டும் சத்திய யுகம்!**

நமக்கு முதலில் தமிழர். அடுத்த இலக்கு இந்தியர். பின்னர் உலகின் அனைத்து மக்களும்.

பூமியில் வாழும் அனைத்து மக்களும் வயிராற உண்டார்கள் எனும் அறிவிப்பு வரும் அந்நாளில் இப்புண்ணிய பூமியில் சொர்க்கம் மலரும். நாம் உறுதியாக மண்ணில் சுவர்க்கத்தைப் படைப்போம். சொர்க்கத்தின் வேந்தன் நம் தந்தையன்றோ..

**வாழ்த்துகள் வானுலகினா் தந்தையே!**

தேவேந்திரா் புதிய தமிழகம் படைக்கும்போது புதிய இந்தியா மலரும். பூமி புதிதாகும். புத்துலகம் பிறக்கும். தேவேந்திரா் நிச்சயம் வெல்வாா்.

**புத்துலகு வாழ்த்துக்கள் தேவேந்திரரே..**

**புகழுக்குரிய தேவா் சமூகத்திற்கு,**

தேவா் மண்ணைக் காப்பவா். மண்ணைக் காப்பவருக்கு மண்ணே தெய்வம். மண் அனைத்தையும் அறியும். மண்ணில் தா்மத்தை வளா்ப்பது, நிலைநாட்டுவது தேவா்களின் முதற்கடமையாகிறது.

தேவா்களுக்கு மண்ணே தெய்வமாவதால் சிலை வணக்கம், சமாதி வணக்கம் தேவையில்லை.

மண்ணிலுள்ள மனிதா்கள் சிலைகள், வணக்கத்தலங்களை ஒழுங்குபடுத்துவது தேவா்களது பணி. மண்ணிலுள்ள தெய்வங்களின் சிலைகள், கோவில்களை முறைப்படுத்துவது தேவேந்திரா் பணி.

தேவரும் தேவேந்திரரும் ஒற்றுமை காணவேண்டும். விண்ணும் மண்ணும் ஒன்றே. ஒன்றே இரண்டாக இருக்கிறது. விண்ணும் மண்ணும் நமக்குரியதாவதால் அதைக் காப்பாது நம் முதற்கடமையாகிறது. கடமையை உணா்ந்து இரு சமூகத்தவரும் ஒன்றிணைந்து உலகைக் காக்கும் அறப்பணியை தலையாயதாகக் கொள்ளவேண்டும்

விண்ணும் மண்ணும் நாராயணரின் பெயராலேயே தாங்கப்படுகிறது. காக்கப்படுகிறது. விண்ணாகவும் மண்ணாகவும் நிறைந்திருப்பது ஸ்ரீமந் நாராயணனே.

மண்ணைக் காக்கும் தேவா்களின் பதினெட்டாம்படி கருப்பசாமி ஸ்ரீகிருஷ்ணா் என அறிக. விண்ணைக் காக்கும் தேவேந்திரா்களின் கருப்பசாமி ஸ்ரீராமன் எனத் தெளிக.

இனி, தேவர்களின் குலதெய்வம் ஸ்ரீகிருஷ்ணராகுக! தேவேந்திரர் குலதெய்வம் ஸ்ரீராமனாகுக!

உலகம் உயர்கிறது. உயிர்க்குலங்கள் உய்கின்றன. அறிவு விரிவடைகிறது. உலகம் முன்னிலும் பெரிதாகிறது. அன்பு சிறக்கிறது. ஞானம் செழிக்கிறது. ஆண்மை வலுக்கொள்கிறது.

தேவேந்திரர் முதற்படியிலும் தேவர் பதினெட்டாம்படியிலும் நிலைகொண்டு உயிர்களை உயர்த்துகிறார்கள். கடைத்தேற்றுகிறார்கள். தெய்வங்களின் திட்டம் இதுவே. எவ்வுயிரும் மீதமாகக் கூடாது. வழி தவறக்கூடாது. இருவருக்கும் பெரும்பொறுப்புள்ளது. இணைந்து செயல்படுக.

தேவர்கள் மண்ணைக் காப்பவர்தானா என்பதை அறுதியிட, மறவர், அகமுடையார், கள்ளர் குடிகளிலிருந்து மூன்று மூன்று பேர் என ஒன்பது தலைவர்களை தேர்வுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேர்வு செய்யப்படும் தலைவர்கள் மதிப்பானவர்களாக இருக்க வேண்டும். அரசியல் போராட்டம் தவிர்த்து பிறவற்றிற்காக சிறை சென்றிருக்கக் கூடாது. குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது. சேனை, படை போன்ற பெயர்களில் அமைப்பு வைத்திருக்கக் கூடாது. திருமணம் செய்திருக்க வேண்டும். தமிழர் எனும் பெருமை கொண்டவராக இருக்க வேண்டும். சாதி மதம் கடந்து மனிதநேயத்தை முன்னெடுப்பவராக இருக்க வேண்டும். முடிந்த வரையிலும் திரைத்துறையினரைத் தவிர்ப்பது நன்று. கூடுதலாக, தேவர் சமூகத்தைச் சேர்ந்த எழுத்தாளரொருவர் இடம்பெற வேண்டும். எழுத்தாளர் தேவர் சமூகம் சார்ந்து எதுவும் எழுதியிருக்கக் கூடாது. தமிழ் சார்ந்தும், தமிழர் சார்ந்தும் எழுத்தில் பதிவிட்டிருக்க வேண்டும். பத்துப் பேரும் கலந்துபேசி முடிவெடுத்து, தேவர்களின் குலதெய்வம் யார் என்பதையும், யாம் தேவர் சமூகத்தவருக்கு அறிவித்திருக்கும் 32 வழிமுறைகள் ஒப்பமா என்பதையும் அறிவிக்க வேண்டும். தேவர்கள் எடுக்கும் முடிவைப் பொருத்து அவர்களுக்கான புகழும் வாழ்வும் வளமும் வந்துசேரும்.

தனிப்பட்ட முறைவில் யாம் தேவர் சமூகத்தை மிகவும் மதிக்கிறோம். தேவர்கள் குறித்து மிகவும் பெருமை கொள்கிறோம். தேவர் சமூகத்தவர் நல்ல மனம் கொண்டவர் என்பது திண்ணம். ஒருசில சுயநலவாதிகளால் தேவர்களின் பெருமையும் வீரமும்

களவாடப்படுகிறது. தேவர்கள் வெற்றுப் புகழுக்கு மயங்கக்கூடியவரல்லர் என்பதை காலம் நிரூபிக்கும் என நம்புகிறோம்.

தேவர்கள் உச்சிப் பிள்ளையாரைக் கீழே இறக்கி காவிரியின் வடகரையில் வைத்து ஒரு கோவிலை எழுப்பவேண்டும். மலையுச்சி கோவில் அகற்றப்பட்டு அங்கே 48 அடி தங்கக் கொடிக்கம்பம் நடப்பட்டு, தமிழத் தேசியக்கொடி ஏற்றப்பட வேண்டும்.

தேவர்கள் உச்சிப் பிள்ளையாரை கீழே இறக்க வேண்டாம் என மறுப்பாரேயானால், தேவேந்திரர் கீழிறக்கி காவிரியின் தென்கரையில் வைக்க வேண்டும். உச்சியில் 18 அடி தங்கக்கொடி மரத்தில் இந்திய தேசியக்கொடி 24 மணி நேரமும் பட்டொளி வீசி பறக்க விடப்பட வேண்டும்.

தங்களை முக்குலத்தாரென்றும், தாங்கள் மட்டுமே வீரமானவர்கள் என்றும், தமிழ் நிலத்தை ஆண்டவர்கள் எனவும் வீராப்பு பேசித் திரியும் சில தலைவர்களின் கவனத்திற்கு,

தேவேந்திரரும் வீரமானவரே. புகழுடையவரே. தமிழ் இலக்கியங்கள் சுட்டுவது போல் 1000 வருடங்களுக்குமுன் வரை தமிழகம் செழிப்புற்றே விளங்கியிருக்கிறது. தமிழ் நிலத்தில் விண்ணையாளும் தேவேந்திரர் பெருமதிப்பிற்குரியவராக வணங்கப்பட்டிருக்கிறார். தேவேந்திர குலத்தார் பெருமை இழந்தார். தமிழகமும் பெருமை குறைந்தது. தமிழின் புகழ் மங்கியது. தமிழ்நிலம் அயலவர் வசமானது. தமிழ் மண்ணுக்குரிய அனைத்தும் வளம் குன்றியது. கடந்த அரைநூற்றாண்டுக்கும் குறைவாகவே தேவேந்திரர் அட்டவணையினராகக் குறிப்பிடப்படுகிறார்கள் என்பதை மறக்கவேண்டாம். மண்ணை உழுத தேவர்கள் அறிந்திருப்பார்கள். உழும்போது மேல்மண் கீழே போகும். அடிமண் மேலே வரும். உயர்ந்தவர் கீழே போவதும் கீழே கிடந்தவர் மேலே மேலே போவதும் காலத்தின் கைகளில் உள்ளது. இதோ தேவேந்திரர் மீண்டெழுகிறார். தமிழ் மண்ணைப் புதுப்பிக்கிறார். தமிழ் ஏற்றமடைகிறது. தமிழர் அனைத்திலும் சிறக்கிறார். மூவேந்தர் மரபு மீள்கிறது. தமிழ் மீண்டெழுகிறது. தரணியில் முதன்மை பெறுகிறது. தமிழர் தலை நிமிர்கிறார். இந்தியா ஒளிர்கிறது. உலகு ஓங்கி வளர்கிறது.

தேவேந்திரரோடு முரண் கொள்ளாதீா். நட்புக் கரம் நீட்டும். தேவேந்திரா் வெற்றி தமிழா் வெற்றி. இந்தியா் வெற்றி. மானுடா் வெற்றி. தேவா்களின் மாபெரும் வெற்றி. மறவாதீா்.

மண்ணைக் காக்கும் மாபெரும் வேள்விக்கு தேவா்கள் அழைக்கப்படுகிறாா்கள். தேவா்களே வாருங்கள், நாராயணன் என்னும் நாமத்தால் நமது புண்ணிய மண்ணைக் காத்திடுவோம்.

தேவா் மண்ணைக் காப்பவா் என்பது உண்மையெனில், பத்து தேவா்களும் அழகா்மலை சௌந்தரராஜப் பெருமாளைச் சேவித்து, பதினெட்டாம்படி கருப்பசாமிக்கு முன் ''நாங்கள் காப்பவா்கள்'' பாடலை உறுதிமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தேவா் சமூகத்திற்கு அக்கா தங்கை உறவே பெருமை மிக்கது.

தேவா் சமூகத்திற்கு திருப்பாவை 27 ஆம் பாடல் ''கூடாரை வெல்லுஞ்சீா் கோவிந்தா'' தடை செய்யப்படுகிறது.

மனிதா்களைத் தேவா்களாக்குவது தேவா் மற்றும் தேவேந்திரரின் கூட்டுப் பொறுப்பு. பொறுப்புணா்ந்து செயல்படுங்கள். முரண்பாடுகளை, வேறுபாடுகளை பேசித் தீருங்கள். ஓற்றுமையாக இணைந்து செயல்படுங்கள். வெற்றி நமதே. நமக்கு எந்நாளும் ஆனந்தமே.

தேவா்களின் முடிவிற்குப்பின், மற்ற சிறப்புகள், சாத்திர சம்பிரதாயங்கள் அறிவிக்கப்படும்.

**பெருமைக்குரிய நாடாா் சமூகத்திற்கு,**

தேவேந்திரா் அடி. தேவா் முடி. நாடாா் படி. மண்ணைக் காப்பவா் தேவா். விண்ணைக் காப்பவா் தேவேந்திரா். மக்களைக் காப்பவா் நாடாா். நாடாா்களே, வானும் மண்ணும் அளக்கப்படுகிறது, அடியும் முடியும் அறியப்படுகிறது, விண்ணும் மண்ணும் முடியப்படுகிறது. மக்கள் அனைவரும் காக்கப்படுகிறாா்கள். உயிா்க்குலங்கள் பதினெட்டு படிகளில் ஏறி விண்ணேகுகிறாா்கள்.

நாராயணரின் பெயரால் மக்களைக் காக்க சத்ரிய நாடார்கள் அழைக்கப்படுகிறார்கள். மக்களைக் காப்பதே சத்ரியரின் முதற்கடமை. நாடார் சமூகத்திலிருந்து மதிப்பிற்குரிய எட்டு பேர் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஷத்ரிய நாடார்கள் மக்களைக் காப்பவர்கள் என அறிவிப்புச் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தலைவர்களாக பெண்கள் இடம் பெறுவதும் சிறப்பு. தலைவர்கள் நாடார்களுக்கான 32 வழிமுறைகள் ஒப்பமா என்பதை அறிவிக்க வேண்டும். சமயபுரம் மாரியம்மனோடு நாடார்கள் காளியம்மனையும் சேர்த்துக் கொள்ளலாம். காளியம்மன் மட்டும் போதுமெனில் அதனை அறிவிக்க வேண்டும். நாடார்கள் மக்களைக் காப்பதை பெரும் கடமையாகக் கொண்டால், எட்டுத் தலைவர்களும் நாங்குநேரி வானமாமலை திருக்கோவிலில் ‘‘நாங்கள் காப்பவர்கள்’’ பாடலை உறுதிமொழியாகக் கொள்ள வேண்டும். உறுதிமொழிக்குப்பின் மற்றவை அறிவிக்கப்படும்.

நாடார்களுக்கு மைத்துனர் உறவு பெருமை மிக்கது.

நாடார்களுக்கு திருப்பாவை 25 ஆம் பாடல் ‘‘ ஒருத்தி மகனாய்ப் பிறந்து’’ தடை செய்யப்படுகிறது.

நாடார்களே, தேவர்களே, தேவேந்திரர்களே.. நாம் உறவுடையோர். நாம் தமிழர். தமிழ் தாய்வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர்வழி நின்று நேர்வழி செல்வோம்.

## நாளை நமதே. எந்த நாளும் நமதே..

சுப்ரபாதமே

அரங்கநாதனே

துயில்நீக்கி எழுக சயனக்கோலமே

உடையவருக்கு மங்களம்!! அழகிய மணவாளருக்கு மங்களம்!!

**கருப்பசாமி பெயர் கொண்ட கோவில்களின் நிர்வாகத்தாருக்கு**

தமிழகத்தில் கருப்பசாமி எனும் பெயரிலமைந்த கோவில்களில் மறுஅறிவிப்பு வெளியிடப்படும்வரை சேவல் பலி கூடாது.

கருப்பசாமி சிலைகளுக்கு 108 படி புனித காவிரி நீரால் முழுக்காட்டு நடத்தப்பட வேண்டும். அன்றுதொட்டு, தினமும் காலையில் சர்க்கரைப் பொங்கலும், இரவில் தேங்காய் அன்னமும் படைக்க வேண்டும்.

நாளொன்றுக்கு குறைந்தது ஒரு மலர் மாலையாவது அணிவிக்க வேண்டும்.

**மதிப்பிற்குரிய ஆயிரம் விளக்கு ஜமாத்தாருக்கு,**

தமிழக முதலமைச்சர் தமிழ்நாட்டின் மக்களனைவரும் இரவு வயிராற உணவுண்டார்கள் எனும் நேரலை அறிவிப்பின் போது, தமிழ் நிலத்தில் ஏதேனும் சாதி, மதம் தொடர்பான சண்டைகள், கலவரங்கள், கொலைகள் நிகழ்ந்ததாக அறிக்கையிடுகிறாரா என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும். சாதி, மதம் தொடர்பாக அன்றைக்கு தமிழகத்தில் கொலைகள் நிகழவில்லை என முதல்வர் அறிக்கையிட்டால், உடனடியாக ஆயிரம் விளக்கு தொழுகைக்கூடம் 1001 பச்சை வண்ண விளக்குகளால் ஒளிரச்செய்யப்பட வேண்டும். தொடர்ந்து நிமிடத்திற்கு ஒன்று என 10 பச்சை நிற வானவெடிகள் வெடிக்கப்பட வேண்டும். 10 நிமிடங்களுக்குப்பின் மணமுள்ள பூக்களால் ஆன இரண்டு மாலைகள், வெள்ளை பட்டு வேட்டி, பச்சை பட்டுத் துண்டு போன்றவை பார்த்தசாரதி பெருமாள் கோவிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

திருக்கோவில் நிர்வாகத்தார், வஸ்திர ஊர்வலம் கோவில் முதன்மைவாயிலை நெருங்கியவுடன் இசுலாமிய சொந்தங்களை வரவேற்கும் விதமாக பெருமாள் கோவிலிலிருந்து எட்டு பலவண்ண நிறம் கொண்ட வானவெடிகள் ஒரே நேரத்தில் வெடிக்கப்பட வேண்டும். வரும் இசுலாமிய நண்பர்களில், மணமான 10 பேர் மங்கலப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். இவர்களுக்கு மீசை மழிக்கப்பட்டிருப்பதோடு, அனைவரும் ஒருதார மணம்கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் விரும்பினால் மனைவி மற்றும் குழந்தைகளுடன் செல்லலாம். மற்ற இசுலாமியருக்கு இந்த நேரத்தில் அனுமதியில்லை. கோவிலுக்கு வரும்

இசுலாமியச் சொந்தங்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கக் கூடாது. கடவுளருக்கு வணக்கம் செலுத்துமாறோ, பூசைப் பொருட்களை ஏற்குமாறோ கட்டாயப்படுத்தக் கூடாது. இசுலாமியர் விரும்பினால், பெருமாளை வணங்கலாம். இதை அவர்களது முடிவிற்கே விட்டுவிட வேண்டும். வரும் சொந்தங்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும். பெருமாளின் வழக்கமான இரவு வழிபாட்டு நடைமுறைகளுக்குப்பின், இறுதியாக இசுலாமியர் அளித்த வஸ்திரங்கள் மற்றும் மாலை சாற்றப்பட வேண்டும். ருக்மிணி தாயாருக்கு ஒரு மாலை சாற்றப்பட வேண்டும். தொடர்ந்து பல்லாண்டு பாசுரங்கள் பாடப்பட வேண்டும். முடிவாக, பெரியாழ்வாரின் மாணிக்கம்கட்டி தாலாட்டுப் பாடலகள் பாடி மூலவர் கதவுகள் பத்து மணிக்குள் சாத்தப்பட வேண்டும்.

அனைத்து நடைமுறைகளும் முடிந்து கோவிலின் வெளிப்பிரகார கதவு சாத்தப்பட்டபின், திருக்கோவிலின் பிரதான கதவில் பெரியதொரு துளசிமாலை அணிவிக்கப்பட வேண்டும். திருக்கோவிலை நோக்கியவண்ணம் நின்று பட்டர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து, சகஸ்ர நாமத்தின் தியானம் சுலோகங்களை ஷீரோதன்வத் தொடங்கி ருக்மிணீ சத்யபாமாப்யாம் ஷகிதம் கிருஷ்ணமாச்ரயே வரை பாடவேண்டும். தொடர்ந்து சரம சுலோகம் சொல்லி, இறுதியாக ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் 108 வது சுலோகமான வனமாலீ.. மூன்றுமுறை ஒலிக்க வேண்டும்.

மறுஅறிவிப்பு வெளியிடப்படும்வரை ஒவ்வொரு நாளும் இந்நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். மங்கலப் பொருட்களை ஒவ்வொரு நாளும் புதிதாக 10 பேர்கள் கொண்டுசெல்ல வேண்டும். விருப்பும் மக்களை ஒவ்வொரு பத்து நாளுக்கும் என முன்கூட்டியே தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறப்பு.

ஒருவேளை தமிழகத்தில் சாதிவெறியாலோ, மதப்பகை காரணமாகவோ எவரேனும் கொல்லப்பட்டதாக தமிழக முதல்வர் அறிவித்தால், அன்றிலிருந்து அடுத்த பத்து நாட்களுக்கு அனைத்து நடைமுறைகளும் நிறுத்தப்பட வேண்டும். பார்த்தசாரதிப் பெருமாளுக்கு மங்கலப் பொருள்கள் எடுத்துச் செல்லக் கூடாது. ஆயிரம் விளக்கு ஜமாத் சார்பாக நல்லோர் பத்துப் பேர் அடங்கிய உண்மை கண்டறியும் குழு ஒன்று அமைத்து தனியாக விசாரிக்க வேண்டும். விசாரணையில் சாதி மதத்திற்காக கொலை நிகழவில்லையெனில் வழக்கம்போல் பெருமாளுக்கான நடைமுறைகள் தொடரலாம்.

விசாரித்து சாதி, மதத்திற்காகவே கொலை நடந்தது உறுதியானால், பார்த்தசாரதிப் பெருமாளுக்கான மங்கல நடைமுறைகள் அன்றிலிருந்து நிறுத்தப்பட வேண்டும்.

ஜமாத்தார் அடுத்துச் செய்யவேண்டிய நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**அருள்மிகு திருவில்லிபுத்தூர் கோவில் நிர்வாகத்தாருக்கு,**

அனைத்து மதத்தவரையும் திருக்கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும்.

கோவிலுக்கு வருகைபுரியும் இசுலாமியப் பெண்களுக்கு இருஇணை பச்சைக் கண்ணாடி வளையல்கள் பரிசளிக்க வேண்டும்.

இசுலாமிய ஆண்களுக்கு வெள்ளை துண்டால் உருமால் அணிவிக்க வேண்டும்

இசுலாமிய குழந்தைகள் வந்தால் ஒரு இலட்டு கொடுக்க வேண்டும்.

தினமும் கோவிலுக்கு வருகை புரிந்த இசுலாமிய ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எண்ணிக்கை கோவிலின் வலைத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

**புகழுடைய தினமலர் நிர்வாகத்தாருக்கு**

கடந்த இருபது வருடங்களாக யாம் தினமலர் படித்து வருகிறோம். சமீபகாலமாக செய்திகள் ஏனோ தானோ மனோபாவத்தில் வெளியிடப்படுவதாகப் படுகிறது. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. சிலநேரங்களில் முந்தைய நாளின் செய்தி அப்படியே அடுத்த நாளிலும் இடம் பெறுகிறது. கவனக்குறைவாக செய்தி தயாரிப்பது தெரிகிறது. பொதுமக்கள் இன்னும் நாளிதழ்களில் வரும் செய்தியே உண்மையென நினைக்கிறார்கள். தினமலர் போன்ற செய்தித்தாள்களுக்கு மிகுந்த பொறுப்பும் கடமையும் உள்ளதை மறக்க வேண்டாம்.

நாளிதழில் மிகுதியாக விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. முதல் பக்கம் முழுக்க விளம்பரம் வெளியிடுவது அறப்பிழை என்பதை உணரவேண்டும். நீண்டகால வாசகர் எனும் முறையில், சிலகாலமாகவே நாளிதழின் செய்திகள் அரசியல், மத சார்பு நிலையோடும் வெளியிடப்படுவதை உணர்கிறோம். சிலரைப் பற்றிய செய்திகள் திணிக்கப்படுகின்றன. சிலரது அனைத்துச் செயல்களும் பாராட்டப்படுகின்றன.

தினமலருக்கு என்றில்லாமல் அனைத்து நாளிதழ்களுக்குமே நடுநிலை செய்தியே குறிக்கோளாக இருக்கவேண்டும். நாளிதழ்கள் அரசைப் புகழ்கின்றன. மக்கள் போராட்டங்களைத் திரிக்கின்றன. உண்மையை உரத்துச் சொல்லவேண்டிய செய்தித்தாள்கள், உண்மைகளை மறைத்தும், திரித்தும் வெளியிடுவதோடு, மக்களை ஆளுமை செய்யவும் முயல்கின்றன. மக்களிடம் கொள்கைகளைத் திணிக்கவும் செய்கின்றன. உண்மையைத் தவிர ஒரு நாளிதழுக்கு வேறு சார்புநிலை கூடவே கூடாது. உண்மைகளை அப்படியே மக்களுக்கு உரைப்பதே செய்தி. செய்திகளை வெளியிடுவது பணம் சம்பாதிக்கும் வழியன்று. நாளிதழ் நடத்துவது தொழிலாகாது.

தினமலர் நாளிதழுக்கு எமது வேண்டுகோள், தமிழகத்தில் நடக்கும் கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, கஞ்சா, பண ஏமாற்று போன்ற குற்றச் செயல்களின் செய்திகளை வெளியிடும்போது, அதை நிகழ்த்தியவர்கள் பெயர், பெற்றோர் பெயர், ஊர் மற்றும் அன்னார்களது சாதியையும் வெளியிட வேண்டும். சமீபமாக தமிழகத்தில் ஆண்டபரம்பரை நோய் வெகுவேகமாகப் பரவி வருகிறது. விதிவிலக்கின்றி, தமிழகத்தின் அனைத்துச் சாதியினருமே அவர்கள்தான் தமிழகத்தை ஆண்டதாகச் சொல்கிறார்கள். தமிழகத்திலுள்ள அத்தனை சாதியினருமே ஆண்டபரம்பரையினர் எனில், திருட்டுத் தொழில் செய்வது யார். காசுக்கு கொலை செய்யும் கூட்டம் எது. தமது சாதி ஆண்டபரம்பரை என பெருமை பேசுவது ஏற்புடையது எனில் அதே சாதிக்காரன் திருட்டுத்தொழில் செய்வதாக மாட்டிக்கொண்டால் அன்னார் சாதி திருட்டுச்சாதி என்பதையும் ஏற்றுக்கொள்வதுதானே முறை. முன்னர் ஆண்ட அரசர்கள் நாங்கள்தான் என்போர், எவ்வித குற்றச் செயல்களுமின்றி நாகரிகமடைந்திருக்கவேண்டும் என்பதே நியதி. ஈராயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே ஆண்ட பரம்பரையெனில் எந்தளவிற்கு நாகரிகத்தில் உச்சம் தொட்டிருக்க வேண்டும். நாளிதழ் தயவு தாட்சண்யமே பார்க்கவேண்டாம். செய்தி வெளியிடுவதற்குமுன் சரியான முறையில் விசாரித்து உண்மையான செய்தியை வெளியிட வேண்டும். அவர் சொன்னார், பொதுமக்கள் கருத்தாக உள்ளது, பொதுவில் பேசிக்கொள்கிறார்கள் போன்ற சொல்லாடல்களைத் தவிர்த்து, இன்ன பெயர் கொண்ட நிருபர் குறிப்பிட்ட செய்திக்கு பொறுப்பானவர் என்பதை நாளிதழ் வெளியிட வேண்டும்.

யாம் தினமலர் வெளியிடும் செய்திகளின் அடிப்படையில் சில கருத்தாக்கங்களை, முடிவுகளை மேற்கொள்ளவிருக்கிறோம். அதற்கேற்ப மதிப்பான நாளிதழும் உண்மையிலேயே உண்மையான செய்திகளை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். நாளிதழ் விளம்பரங்களைக் குறைத்து, விலையை அதிகரித்துக்கொள்வது நன்மையானது. நாளிதழ் விலையை பத்து ரூபாய் கூட வைத்துக்கொள்ளலாம். நாளிதழ் நேர்மையான செய்தியை வெளியிடுகிறதெனில் நிச்சயம் மக்கள் மனத்தில் அதன் மதிப்பு உயர்ந்தே இருக்கும். இலாபம் சம்பாதிப்பதைவிட மக்களின் நன்மதிப்பைப் பெறுவதே தினமலர் நாளிதழுக்குப் பெருமையானது என்பது எமது எண்ணம்.

யாம் நீண்ட காலமாக தினமலர் படிப்பதால் தினமலருக்கு எனக் குறிப்பிட்டுள்ளோம். வரும் காலங்களில் பிற நாளேடுகளையும் வாசிக்க முயற்சிக்கிறோம். யாம் அத்தனை செய்தித்தாள்களுக்கும் சேர்த்தே சொல்லுவதாக எடுத்துக்கொள்க.

**அன்புள்ள தொப்பலாக்கரை கிராமத்தாருக்கு,**

புகழுடைய நமது ஊர் புண்ணிய பூமியாகும். நம் ஊரின் மக்கள் பிறவிப் பெருமையுடையோர். நம் ஊர் பெருமாள் கோவில் உய்யவந்த விண்ணகரம் எனக் கல்வெட்டு சான்று புகழ்வதால் நமது ஊரின் பெருமாள் உய்யவந்த விண்ணகரப் பெருமாள் என்னும் திருநாமம் கொள்கிறார். நம் பெருமாளின் உயர்ந்த திருநாமம் கொண்டு, இனி நமது பெருமைமிகு ஊரும் உய்யவந்த விண்ணகரம் எனும் பெயருடன் நீங்காப் புகழடையட்டும்.

**உய்யவந்த விண்ணகரம் வாழி!!**

**உய்யவந்த விண்ணகரப் பெருமாளுக்கு மங்களம் வாழி!**

நாராயணரின் அவதாரமாகப் போற்றப்படும் துவாபர யுகத்தின் கண்ணன், கலியுகத்தில் மீண்டும் அவதாரம் செய்து, கலிமுடித்து, உலகில் என்றென்றும் தர்மம் நிலைத்திருக்கும்படி அருள்புரிவார் எனக் கூறப்பட்டதன் அடிப்படையில், பாரத தேசத்தில் எத்தனையோ பேர் தாங்கள்தான் கண்ணனுடைய பத்தாவது அவதாரம் என வெளிப்படுத்தியிருக்கின்றனர். வேறுபலர் தங்களை கண்ணனின் பத்தாவது அவதாரம்

எனக் குறிப்பிடாமல் தாங்களே நாராயணன் எனவும், நாராயணனின் அவதாரமென்றும் கூறியுள்ளனா். இன்னும் பலா் தாங்களே கடவுளென்று சொல்லி, தங்களுக்குத் தாங்களே சிலைகளையும், கோவில்களையும் உருவாக்கியிருக்கின்றனா். இன்னும் சிலா் தங்களைக் கடவுளென்றோ, கடவுளின் அவதாரமென்றோ கூறாவிட்டாலும். அவா்களது சாதி சாா்ந்தும் மதம் கொண்டும் கடவுளென்று வழிபடப்படுகிறாா்கள். தமிழகம் பழம்பெருமையும், தொல்வரலாறும் கொண்டதென்பதால், தமிழகமும் இதற்கு விதிவிலக்கல்ல. சொல்லப்போனால் தமிழகத்தில்தான் கடவுள்களும், அவதாரங்களும் கூடுதல். தமிழ்நாட்டில்தான் வழிபாட்டிடங்களும் கூடுதல். பக்தியும் கூடுதல். கடவுள் இல்லையென்பாரும் கூடுதல்.

யாம் நமது அன்பான ஊரில் பிறந்து வளா்ந்தவன் என்பதால் எம்மைப் பற்றி பெரும்பாலானவா்களுக்குத் தெரியும். இரண்டாயிரமாண்டுக்குப் பிறகான காலத்தில் பிறந்தவா்கள், எம்மை ஓரளவிற்கே அறிந்திருப்பாா்கள். யாம் நமது அழகான ஊரில் பிறந்ததற்காகப் பெருமிதம் கொள்கிறோம். நம் மண்ணை வணங்குகிறோம். அன்பும் பாசமும் நிறைந்த நம் ஊா்ப் பெரியவா்கள் பாதம் பணிகிறோம்.

எமது குடும்பத்தைப் பற்றி அனைவரும் அறிந்திருப்பீா்கள். எமது பெற்றோா் எம்மைப் பாசமாக வளா்த்தாா்கள். அக்கா எம்மை மிகவும் அன்பாகப் பாா்த்துக்கொண்டாா். இளவயதில் அண்ணனோடு சிறுசிறு சண்டைகள் வந்தாலும் அண்ணனும் அன்பானவரே. பெரியப்பா வீட்டாா், மாமா வீட்டாா், மற்ற உறவினா்கள், ஊா்க்காரா்கள், அகரத்துப்பட்டி பெரியம்மா குடும்பம், மற்ற உறவுக்காரா்கள் என எம்மீது காட்டிய அன்பு அளப்பரியது.

யாம் நன்றாகப் படித்தோம். யாம் நன்றாகப் படித்தோம் என்பதைவிட எம்மை நன்றாகப் படிக்கவைத்தது நமது அறிவான ஊா் என்பதே உண்மை. நாங்கள் நல்லாசிரியா்களை வரமாகப் பெற்றோம். சிறு வயதிலேயே எமக்கும் வேகாவிற்கும் போட்டி வந்துவிட்டது. நாங்கள் படிப்பில்தான் போட்டி போட்டோமே தவிர நாங்கள் இருவரும் அருமையான நண்பா்களாக இருந்தோம். நாங்கள் ஒருவா்மேல் ஒருவா் அன்பும் மரியாதையும் வைத்திருந்தோம்.

யாம் நன்றாக விளையாடினோம். மணிகண்டன், வேல்முருகன், தங்கப்பாண்டி நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். நாங்கள் விளையாடாத விளையாட்டுக்களே இல்லை. எமது சிறுவயதை நினைக்கும்தோறும் எமக்கு விளையாட்டுக்களே நினைவுக்கு வருகின்றன. விடுமுறை நாட்களில் நாங்கள் நாளெல்லாம் விளையாடித் திரிந்தோம். ஊருக்கு மாடுகள் வந்தவுடன் அனைவரும் மாடுமேய்த்து மகிழ்ந்தோம். தோழர்கள் பலரும் பள்ளிக்கூடம் போவதைக்காட்டிலும் மாடுமேய்ப்பதையே மிகவும் விரும்பினோம். மாடுகளைப் பத்திவிட்டுவிட்டு காடுகரையெல்லாம் விளையாடினோம். ஒரு மரத்தையும் விட்டுவைக்கவில்லை. வரும்போது எருமை மாடுகளின்மேல் உட்கார்ந்துகொண்டு ஓட்டப்பந்தயமும் நடத்தினோம்.

தொப்பலாக்கரை, பரளச்சி, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி என எமது படிப்பு தொடர்ந்தது. அரசின் உதவித்தொகையோடு ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான தேர்வில் வெற்றிபெற்று, சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் ஆராய்ச்சி மேற்கொண்டோம். அந்த நேரத்தில் வெளியான அரசுக் கல்லூரி விரிவுரையாளர் தேர்வில் வெற்றிகண்டு, எமது பணி ஆணையை எதிர்நோக்கிக் காத்திருந்தோம்.

1998ஆம் ஆண்டின் கிருஷ்ண ஜெயந்தி நாட்களின்போது எமது எண்ணங்கள் பெருமளவு மாறத் தொடங்கின. ஓய்வில்லாத எண்ணங்கள் எம் மனதை அலைக்கழித்தன. கலியுகத்தில் தர்மத்தை மேலோங்கச் செய்யும் ஸ்ரீகிருஷ்ணனின் கலியுக கல்கி அவதாரம் யாமே என எண்ணங்கள் உதித்தன. எமக்குள் நிகழ்ந்துகொண்டிருந்த எண்ண மாற்றங்களை யாம் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் யாம் மிகுந்த எண்ணங்களுக்கு ஆளானோம். யாம் கண்ணன் எனில் எமது நண்பர்கள் யார், எமது உறவினர்கள் யார், ஊர்க்காரர்கள் யார் எனும் கேள்விகள் எம்முள் எழுந்தன. இவற்றைத் தெரிந்துகொள்ளாமல் இந்த எண்ணமாற்றங்களை எவரிடமும் பேசவேண்டாம் என முடிவெடுத்தோம்.

யாம் கண்ணன் எனில், நாராயணனின் பத்தாவது அவதாரம் எனில், நாம் யார் எனும் எமது தேடலில் எமது பெற்றோர், உற்றோர், ஊர்க்காரர்கள், நண்பர்கள், உடன் பணியாற்றுவோர் என அனைவரையும் உற்று நோக்கினோம். ஸ்ரீகிருஷ்ணரின் கல்கி அவதாரம் எனும் எண்ணம் வந்தது முதல் எமது இயல்பான தூக்கம் தொலைந்தது. யாம் யார், நாம் யார், எமது பிறப்பின் நோக்கம் யாது, கலியை எப்படி முடிப்பது,

பூமியைக் காக்கும் வழிமுறைகள் எவை, தர்மத்தை எதை வைத்து முன்னெடுப்பது, உலகை எப்படி மாற்றியமைப்பது, உலகை எவ்வாறு உயர்த்துவது எனும் எண்ணங்களே எம் மனதை முழுமையாக ஆட்கொண்டன.

எமது வாழ்வில் எது நடந்தாலும், எமக்கு என்ன நேர்ந்தாலும் நாம் யார் எனக் கண்டறிந்தே தீருவது எனும் முடிவில் யாம் உறுதியாக இருந்தோம். 2011 வரை ஏதேதோ செய்தோம். எங்கெங்கோ சுற்றினோம். திருமணம் செய்தோம். குழந்தைகள் பிறந்தார்கள். வீட்டைவிட்டு வெளியேறினோம். காதல்மணம் புரிந்தவளைக் கைவிடக்கூடாது எனத் திரும்பி வந்தோம். பெண்ணாசையை அடக்க முயன்றோம். இல்லறத்தைத் துறந்து காவி உடுத்தி அலைந்தோம். பிச்சை கேட்கக் கூசினோம். எத்தனையோ சறுக்கல்கள். எவ்வளவோ மனக் குழப்பங்கள், மன வேதனைகள்.

சமூகத்தை மாற்றுவதற்கான, உலகினை அடுத்த கட்டத்திற்கு உயர்த்துவதற்கான காலம் வந்துவிட்டதாகக் கருதி, 2011 ஆகஸ்டு ஒன்றாம் தேதி எமது கல்லூரிப் பணியைத் துறந்தோம். அதேநாள் மாலை எமது அன்பு அம்மா, நாற்று நட்டு, களையெடுத்து, உப்புச் சுமந்து, படாதபாடுபட்டு எம்மை வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கிய அன்பின் தெய்வமான பொன்னம்மா மறைந்தார்.

எத்தனை சிறந்த அம்மா.. எமது அம்மா யாரென்று எமக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறே இந்தக் கிட்ணனையும் அம்மாவுக்குத் தெரியும். அன்று காலையில் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த எமது அம்மா கையைப் பற்றிக்கொண்டு யாம் அமர்ந்திருந்தோம். நாங்கள் மனதால் பேசிக்கொண்டோம்.

யாம் சமூகப் பணி செய்வதற்காக வேலையை விட்டது குடும்பத்தாருக்கு பெரிய அதிர்ச்சியாகிவிட்டது. யாம் சமூகப் பணிக்காக எப்போது வேண்டுமானாலும் வேலையை விடவேண்டி வரும் எனத் திருமணத்திற்கு முன்பே தமிழரசியிடம் பேசியிருந்தோம். அவர் ஒத்துக்கொண்டதாலேயே அவரைத் திருமணம் செய்தோம். ஆனாலும் அவரும் எம்மைப் புரிந்துகொள்ளவில்லை. எமது அப்பா எம்மிடம் நேரடியாகப் பேசாவிட்டாலும் எம்மை நினைத்து அவரும் வருந்தினார். யாம் இருபத்தோரு நாட்கள் பணிக்குப் போகாமல் இருந்துவிட்டோம். எமது பணிவிலகல் கடிதத்தில் யாம் முன்வைத்த காலை பின்வைப்பதில்லை எனக் குறிப்பிட்டிருந்தோம்.

இருப்பினும் மனதைத் தேற்றிக்கொண்டு, அடுத்து ஒரு நல்ல சந்தர்ப்பம் வரும் என நினைத்து, மீண்டும் பணியில் சேர்ந்துகொண்டோம்.

எமது அம்மா இருக்கும்போது அவரது அருமை தெரியவில்லை. ஓரிரு மாதங்களில் அவரை நினைத்தாலே கண்ணீர் பெருகியது. அம்மாவை சரியாகக் கவனிக்கவில்லை எனும் குற்றஉணர்வு மனதை என்னவோ செய்தது. உடன் பணியாற்றிய ஒரு தோழி ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று வந்ததாகப் பேசினார். சில நாட்களில் இன்னொரு தோழியும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்குச் சென்று வந்ததாகச் சொன்னார். ஆண்டாள் பற்றிய நினைவுகள் எம்மை நிறைத்தன. முன்னதாக திருமலைபுரம் பாண்டியம்மாள் அக்காள் மகள் ஜெயஸ்ரீயை கிருஷ்ணன் கோவில் அருகே திருமணம் செய்து கொடுத்ததில், திருமணப் பத்திரிக்கை பார்த்து, ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த கவிஞர் கோதையூர் கிருஷ்ணன் எமக்கு சில கடிதங்கள் அனுப்பியிருந்தார். அதற்கும் முன்னதாக திருவண்ணாமலையிலிருந்து பணியிடமாறுதல் பெற்று கோவைக்குக் கிளம்பும் மும்முரத்தில் இருந்தபோது ஆண்டாள் எனும் பெயர்கொண்ட பெண் எமது அலைபேசியில் பேசி எம்மோடு நட்பானார். அதற்கும் முன்னதாக.. எமது வாழ்க்கையில் நிகழ்ந்த அனைத்தும் ஆண்டாளை நினைவுறுத்தியே நடந்ததை யாம் நன்கறிவோம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் நமது மாவட்டத்தில் இருந்தபோதும் சிறுவயதில் யாம் பெரிதாக அறிந்திருக்கவில்லை. பின்வந்த வருடங்களில் ஆண்டாள் பற்றி கொஞ்சம் அறிந்திருந்தோம். ஆனாலும் கோவிலுக்குச் செல்லவேண்டும் எனும் எண்ணம் வந்ததில்லை. எமது அம்மாவின் மறைவிற்குப்பின் பூமித்தாயின் அம்சம் ஆண்டாள் என்பதன் அடிப்படையில் யாம் ஆண்டாளை எமது அம்மா போன்று நினைக்க ஆரம்பித்தோம்.

2011, திசம்பர் 30 ஆம் தேதி, முதன்முதலாக கண்ணன் பாட்டுக்களை வீட்டில் கேட்க ஆரம்பித்தோம். தொடர்ந்து ஏராளமான கணினித் தட்டுக்கள் வாங்கினோம். கண்ணன் பாட்டுக்கள் கேட்பது மனதிற்கு மிகுந்த ஆனந்தமாக இருந்தது. பிப்ரவரி மாத இறுதியில் தொப்பலாக்கரையிலிருந்து 2.30 மணிப் பேருந்தில் முதன்முதலாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் அம்மாவைக் காணச் சென்றோம். எமக்கு நன்றாக நினைவிருக்கிறது. அருப்புக்கோட்டையிலிருந்து கிளப்பியவுடன் பேருந்தில் கண்ணா

உனைத் தேடுகிறேன் பாடல் கேட்டது. பேருந்தில் வாவாவா கண்ணா போன்ற கண்ணன் பாடல்கள் திருவில்லிபுத்தூர்வரை பாடிக்கோண்டே வந்தன.

யாம் முதலில் ஆண்டாள் பிறந்த இடமான நந்தவனத்தில் இருந்த ஆண்டாள் அம்மாவைத் தரிசித்தோம். பின்னர் வடபத்ரசாய் பெருமாளைத் தரிசித்துவிட்டு கொஞ்ச நேரம் கோவிலைச் சுற்றிப் பார்த்தோம். பெருமாள் கோவில் பிரம்மாண்டமாக இருந்தது. ஆண்டாள் அம்மாவிக்கு சிறிய கோவிலாக இருப்பதை நினைத்து எமக்கு வருத்தமாக இருந்தது. பெரிய கோவிலாக இருக்குமென்று படித்திருக்கிறோமே எனவும் நினைத்துக் கொண்டோம். வெளியில் வந்து சுற்றிமுற்றும் பார்த்தோம். அருகாமையில் பெரிய கோவிலொன்றும் தெரியவில்லை. நிறையக் கடைகள்தான் இருந்தன. ஊருக்குக் கிளம்புவதற்காக சிறிது தூரம் நடந்தும் விட்டோம். ஏதோ ஒரு எண்ணம் வந்து எதற்கும் அந்த கடைகளைத் தாண்டிப் போய்ப் பார்போமே எனக் கடைகளைத் தாண்டிச் சென்றால், அங்கே இருந்தது அம்மாவின் மிகப்பெரிய திருக்கோவில். இப்படியுமா கடைகளாக வைத்து அம்மாவின் கோவிலை மறைப்பார்கள் எனத் திட்டிக்கோண்டே, அம்மாவை முதன்முதலாகக் கண்ணாரக் கண்டோம். அம்மாவின் அருளை எண்ணியெண்ணி வியந்தோம். பொன்னம்மாவை எம்மை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டோம். வெகுநேரம் அம்மாவின் திருக்கோவிவில் அமர்ந்திருந்தோம். இரவு திருவில்லிபுத்தூரில் உணவருந்திக் கிளம்பினோம். அருப்புக்கோட்டையில் இறுதிப் பேருந்தைப் பிடித்து விட்டோம். தோப்பலாக்கரை விலக்கில் இறங்கினால் ஒரே கும்மிருட்டாக இருந்தது. பின்வாசலில் ரேடியோ செட் ராஜா இறங்கினார். மதுரையிலிருந்து ஒலிபெருக்கி வாங்கி வந்தார். ஒரு ஒலிபெருக்கியை யாம் வாங்கிக் கொண்டோம். இருவரும் பேசிக்கொண்டே ஊர் வந்து சேர்ந்தோம். யாம் துணைக்கு இருந்தது கண்டு அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஆண்டாள் அம்மாவின் அன்பை வியந்துகொண்டே யாமும் வீடு வந்து சேர்ந்தோம்.

அன்றுமுதல் யாம் ஆண்டாளையே அம்மாவாக வரிந்து கொண்டோம். பொன்னம்மாவின் இடத்தை ஆண்டாளம்மா எடுத்துக் கொண்டார். அம்மா இல்லாத குறை தெரியவில்லை. நாச்சியார் எம்மை அன்பால் நிறைத்தார். அன்னையாக அரவணைத்தார். அரங்கமன்னார் தந்தையானார். முதன் முதலாக திருப்பாவையை ஆழ்ந்து கேட்டோம். கோதையின் பாடல்கள் எம்மை ஆட்கொண்டன.

அதுவரைக்குமான எமது வாழ்க்கை பல அர்த்தங்களைக் கொடுத்தது. உண்மையிலேயே யாம்தான் கண்ணனின் பத்தாவது அவதாரமா என வியப்பு ஏற்பட்டது. இது எப்படி சாத்தியம் எனவும் வியந்தோம்.

யாம் எம்மைக் கண்ணனாக நினைத்துக் கொண்டோமே தவிர வைணவம் பற்றி ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. நிறையப் படித்திருந்தோம். ஆனாலும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் வாசித்திருக்கவில்லை. முன்னதாக வேலையில் சேர்ந்தபின், உளவியல் குறித்தும், மதங்கள் மற்றும் தத்துவம் பற்றியும் தொலைநிலைக் கல்வியில் படித்துப் பட்டங்கள் பெற்றோம்.

விஜயா பதிப்பகம் சென்று நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் தேடினோம். பொன்னம்மாள் எனும் பெயரில் எழுதப்பட்ட பிரபந்தம் பார்த்து எமது மனம் பூரித்தது. மடமடவெனப் படித்தோம். இப்படியொரு தெள்ளமுது இருப்பதே தெரியாமல் எம்மை கண்ணனாக நினைத்துக் கொண்டோமே என நாணினோம். எமக்கான பாடல்கள் என அறிந்தோம். ஆழ்வார்கள் எம்மை ஆட்கொண்டார்கள். வைணவம் பற்றிய புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தோம். முன்னதாக, வேலைக்கு வந்த புதிதில் 1999 ஆம் ஆண்டில் பாண்டிச்சேரி புத்தொளிப் பயிற்சியின்போது. அங்கிருந்த பெருமாள் கோவிலில் சாமி கும்பிட்டு வெளியில் வரும்போது வாசலில் இஸ்கான் பக்தர்களிடமிருந்து வாங்கிய பகவத்கீதை படிப்பதை வாடிக்கையாக வைத்திருந்தோம்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலிருந்து எமக்கு முக்கியமானது எனத் தோன்றிய, மனதில்பட்ட 400 பாடல்களை எழுதிக்கொண்டோம். மனப்பாடம் பண்ணமுடியுமா என சிறு தயக்கம் வந்தது. முடியும் எனும் எண்ணத்தோடு கோடைவிடுமுறைக்கு ஊருக்கு எடுத்து வந்தோம். முதல் நாளிலேயே திருப்பல்லாண்டை மனப்பாடம் செய்துவிட்டோம். அவ்வளவு ஆசை. பெரியாழ்வார் பாடல்கள் 60 எழுதியிருந்தோம். பட்டென அனைத்தையும் முடித்துவிட்டோம். திருப்பாவை பாடல்களை ஒரு வாரத்தில் மனனம் பண்ணிவிட்டோம். நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் 132 பாடல்களைத் தேர்வு செய்திருந்தோம். முதல் பத்தான உயர்வற உயர்நலம் மனதில் இருத்துவது கடினமாக இருந்தது. சிறிது சிறிதாக பொறுமையாகப் படித்தோம். கடைசியாக இராமாநுச நூற்றந்தாதியிலிருந்து பத்து பாடல்களைப் படித்து முடித்து, 400வது பாடலாக

கண்ணிநுன் சிறுத்தாம்பின் அருள் கொண்டாடும் அடியவா் இன்புற முடித்தபோது பெருஞ்சாதனை படைத்தது போன்று மனம் மகிழ்ந்தோம்.

திருப்பாவை பாடல்கள் முடித்தவுடனேயே ஆலிலைப் பெருமாளிடம் சொல்லக் கிளம்பிவிட்டோம். பெருமாளைப் பார்த்துவிட்டுமுன் முன்மண்டபத்தில் உட்கார்ந்து தேனினும் இனிய திருப்பாவை பாடல்களை மனதிற்குள் சொல்கிறோம். பதினெட்டு முடிந்து பத்தொன்பதாவது தொடங்க வேண்டும். பாடலின் தொடக்கம் மறந்துவிட்டது. பாடலின் இரண்டாம் பகுதியின் நான்கு வரிகள் நினைவுக்கு வந்தன. தொடர்ந்து மற்ற அனைத்துப் பாடல்களையும் பாடினோம். ஏன் இந்தப் பாடலின் தொடக்கம் மட்டும் மறந்தது என ஒரே சிந்தனை. பெருமாள் ஏதேனும் காரணம் வைத்திருப்பார் என மனதைத் தேற்றிக் கொண்டோம்.

காவிரிசூழ் பொழில் சோலைகள் நடுவே கண்வளரும் கருமணியை, தந்தையாம் திருவரங்கத்து அமுதத்தை வணங்கி நன்றிகள் சொல்ல, நானூறு திவ்யப் பாசுரங்களோடு 2012, ஆடி மாதம் திருவரங்கத்திற்குப் பயணமானோம். முன்னர் காரைக்குடியிலிருந்தபோது 2001 லில் ஒருமுறை அப்பா, அம்மா, அக்கா, குழந்தைகள் என அனைவரும் பொன்னியில் குளித்து வானளாவக் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதரைத் தரிசித்தோம். இடைப்பட்ட காலத்தில் ஸ்ரீரங்கம் செல்லாமலேயே இருந்துவிட்டது கண்டு பெருத்த ஆச்சரியம் கொண்டோம். அனைத்தும் திரவரங்கத்துச் செல்வனாரின் திருவிளையாடலன்றோ.

பெற்ற தாயினும் நல்லன செய்யும் அரங்கத்தம்மானை, ஆழ்வார்களின் பெருஞ்சொத்தான திருவரங்கப்பெருமானை, திருப்பாணாழ்வார் அருளிச்செய்தவாறு திவ்ய திருவடியையும் திருமுடியையும் கண்ணாரக் கண்டோம். திருவடிகள் பணித்தோம். அரங்கத்தரசிடம் நானூறையும் ஒப்புவித்தோம். திருவரங்கத்தாயார் பாதம் பணிந்தோம். ஆழ்வார்களாலும், ஆச்சார்யர்களாலும் போற்றிப் புகழப்பட்ட புண்ணியனாம் திருவரங்கன் திருவருளை முழுமையாக உணர்ந்தோம். யாம் இராமனின் குலதெய்வமான திருவரங்கரனின் அடியார்க்கு, அவரடியார்க்கு, அவரடியார்க்கு அடியார் எனத் தெளிந்தோம்.

மாதந்தோறும் திருவரங்கம் சென்று வந்தோம். ஆழ்வார்களின் பெருமைகள் அறிந்தோம். ஆச்சார்கள் பற்றி குருபரம்பரை மூலம் தெரிந்தோம். ஆச்சார்யார்கள் ஆற்றிய அருந்தொண்டுகள் தெளிந்தோம்.

வீட்டில் பூஜை செய்ய ஆரம்பித்தோம். எமக்கு மனதில் பட்டவாறு பூசைமுறைகளைப் பின்பற்றினோம். காலையில் பெருமாளை திருப்பள்ளி எழுப்பினோம். இரவு தாலாட்டுப் பாடினோம். சனிக்கிழமை விரதமிருந்தோம். சனிதோறும் 400 பாடல்களையும் பெருமாளிடம் பாடினோம். ஒவ்வொரு பத்து முடிந்ததும் பூக்கள் தூவினோம்.

பிரபந்தம், விஷ்ணுபுராணம், பாகவதம் எனப் பெருமாள் பக்தியில் திளைத்தோம். இங்கு வந்து சேர்வதற்குத்தான் இவ்வளவு போராட்டங்களா எனத் திகைத்தோம். வேளுக்குடி கிருஷ்ணன் சுவாமிகள் பேச்சுக்களை கணினித் தட்டுக்களில் கேட்டு வியந்தோம். பலவகையான பேச்சுக்கள் மூலம் ஸ்ரீவைணவம் பற்றி அறிந்து கொண்டோம். வியப்பான செய்தியாக அடுத்த மாதத்திலேயே சுவாமி கோவைக்கு வந்து ஞானியர் குறித்து உபந்யாசம் நிகழ்த்தினார். ஓடிச்சென்று கிருஷ்ணன் சுவாமியைத் தரிசித்தோம். எமக்காகவே வந்தாரா. இதெல்லாம் உன்னுடைய லீலைதானா கண்ணா. கண்ணனை தலைக்குமேல் தூக்கிவைத்தோம். எம்மை வைத்து உலகத்தவருக்கு எதையோ தெளிவாக்க விரும்புகிறாயா கண்ணா எனக் கண்ணனோடு நெருக்கமானோம். கண்ணன் எம் தந்தையானார். அம்மாவுக்கும் மேலே என உயர்ந்தார். தோழனானார். கண்ணனிருக்க எமக்கென்ன கவலை என உலகைப் பற்றிய கவலையொழித்தோம். யாம் கருவி கண்ணா, நிகழ்துவது நீயே எனத் தெளிந்தோம். கண்ணனின் பெருமைகளை பிரத்யட்சமாக அறிந்தோம். எமக்கு கண்ணனே எல்லாமுமானார்.

எல்லாம் கண்ணனே என மாதவனின் பக்தியில் திளைத்து வந்த வேளையில், ஒருநாள் கோவை சாலிவின் வீதி அருள்மிகு வேணுகோபாலன் திருக்கோவிலைப் பார்த்தவுடன் மனதில் பட்டென ஒரு ஈர்ப்பு எழுந்தது. வேணுகோபாலன் சந்நிதிக்கு குடும்பத்தோடு சென்றோம். ருக்மிணி சத்யபாமா உடனுறை ஸ்ரீவேணுகோபால சுவாமியாம் கண்ணனெனும் கரும்பினைக் கண்டோம். ஸ்ரீமந் நாராயணனான கண்ணனின் ஸ்ரீபாதங்களை சரணடைந்தோம். அப்பா என அகமகிழ்ந்தோம். தகப்பன்

சாமி என உளம் நிறைந்தோம். எந்தையிடம் வந்து சேர்ந்தோமே என மகிழ்ந்தோம். தந்தைக்கு பல்லாண்டு பாடினோம். கண்ணனையே காப்பாகக் கொண்டோம். காப்பு மறந்தறியோம். தந்தையைக் காண தவறாது செல்லலானோம். வைணவம் பற்றியும், வைணவத் திருக்கோவில் நடைமுறைகளையும் ஓரளவிற்கு அறிந்துகொண்டோம்.

ஒருமுறை ஊருக்கு வந்திருந்தபோது நமது ஊரைப் பற்றி வெளியாகியிருந்த தினகரன் செய்தியை அக்கா பையன் பாலு கொடுத்தான். பெருமாள் கோவிலைப் பற்றிய கல்வெட்டுச் செய்தியைப் படித்த உடனேயே நம் ஊர் விண்ணகரப் பெருமாள்தான் கலிமுடிக்க வந்தவரென்று உறுதியாகத் தெரிந்துவிட்டது. வன்பெரு வானகத்தை, அமரரை, மண்ணை, மனுசரை உயர்த்தப் போகிறவர் நம் பெருமாள் என வியப்பும், அளவில்லாத மகிழ்ச்சியும் ஏற்பட்டது. நம் பெருமாள் பற்றி எமது அப்பாவிற்கே கொஞ்சம்தான் தெரிந்திருந்தது. வினையத்தப்புச்சிக்கு தெரிந்திருக்கும் எனக் கேள்விப்பட்டு அப்புச்சியிடம் பேசினோம். நிறைய நேரம் ஆர்வம் பொங்கப் பேசினார். முன்பு நம் பெருமாள் கோவில் மிகவும் புகழுடன் இருந்ததை அறிந்தோம். எனினும் பெருமாள் கோவில் தற்போது இருக்கும் நிலையை எண்ணி மனம் வருந்தியது. குறைந்தபட்சம் மின்விளக்காவது போடலாமே என முயன்றோம். ஊராட்சித் தலைவராக இருந்த திரு.குருசாமி அவர்களிடம் பேசிப்பார்த்தோம். கோவில் நிர்வாகம் அகம்படியார் தெருக்காரர்களிடம் இருப்பதால் நாம் ஒன்றும் செய்ய இயலாது என்றார்.

எமது வாழ்க்கையில் நடைபெற்ற சில நிகழ்வுகள் நம் பெருமாளோடு தொடர்புடையதாக இருந்தது கண்டு ஆச்சரியமடைந்தோம். நம் பெருமாளே திருப்பதியின் ஸ்ரீநிவாசன் என்பதைக் கண்டுகொண்டோம். யாம் காரைக்குடியில் பணியாற்றியபோது சனிக்கிழமை தோறும் அரியக்குடி தென்திருப்பதிக்கு சென்று வழிபடுவோம். பௌர்ணமிக்கு நிலா பெயரில் அர்ச்சனை பண்ணுவோம். நிலா பெயரைச் சொல்லும்போது பட்டரே எம்மை ஒரு மாதிரிதான் பார்ப்பார். யாரேனும் நிலாவுக்கு அர்ச்சனை செய்வரோ. பௌர்ணமி அன்று வானத்தில் நிலவைப் பார்த்த பின்பே உணவருந்துவோம். மழைக்காலமெனில் மழை மேகம் நிலாவை மறைத்துக் கொள்ளும். அம்மாவும் அனுஷ்யாவும் வானத்தில் நிலா தெரிகிறதா எனப் பார்த்து வாசலில் அமர்ந்திருப்பார்கள். நிலா தெரிந்தால் உன்னோட நிலா வந்திருச்சு இனியாவது சாப்பிடப்பா என அம்மா சிரித்துக்கொண்டே சொல்வார்.

ஊரெல்லாம், உலகெல்லாம் திருமலையில் ஶ்ரீநிவாசனை கொண்டாடித் திளைக்கிறது. ஒருநாளுக்கும் மேலாகக் காத்திருந்து சீனிவாசனைத் தரிசிக்கிறார்கள். எப்போதும் அலைமோதும் கூட்டம். ஆண்டு முழுதும் திருவிழாக்கள். பக்தர்கள் பணத்தைக் கொட்டுகிறார்கள். பொன்னும் மணியும் மலைபோல் குவிந்து கிடக்கிறது. ஏழுமலையானுக்கு ஓய்வே இல்லை. நடுச்சாமத்தில் நடை சாத்தி, அதிகாலையில் திருப்பள்ளி எழுப்பிவிடுகிறார்கள். இத்தனை சிறப்பும் பெருமையும் நிறைந்த சீனிவாசனே நம் ஊரிலும் இருக்கிறார். என்னே திருவேங்கடநாதனின் விளையாட்டு.

கலியுக வரதனே கலிமுடிக்கும் பொருட்டு நமது புண்ணிய ஊரில் உய்யவந்த விண்ணகரப் பெருமாளாக அருளுகிறார். என்னே விந்தை.. ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே பெருமாள் தீர்மானித்துவிட்டார் போலும். இந்த ரகசியத்தை ஒருவரும் அறியா வண்ணம் பெருமாள் மிகவும் சாமர்த்தியமாக காரியங்கள் ஆற்றியிருக்கிறார். அவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார். நடந்த அனைத்தும் அவராலே. ஏதோ மிகப் பெரியதொரு திட்டம் வைத்திருக்கிறார்.

**நம் வேங்கடகிருஷ்ணனின் புகழுக்கு நிகர் ஏது..**

ஒரே பெருமாள்தான். இருவரும் சினிவாசன்தான். அங்கு இரவெல்லாம் ஒளிவெள்ளம். இங்கோ ஒரு விளக்குக்குக்கூட வழியில்லை. கொஞ்ச நாட்களாகத்தான் தெருவிளக்கு மின்சார இணைப்பிலிருந்து நேரடியாக மின்சாரம் இழுத்திருக்கிறார்கள். நாள் முழுக்க மின்விளக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. பெருமாள் கோவிலுக்கு ஒரு மின்சார இணைப்பு வாங்கவேண்டும் என ஒருவருக்கும் தோணவில்லையல்லவா.

அங்கும் இங்கம் திருவேங்கடமுடையான்தான். அவருக்கு எத்தனை எத்தனை விதமான உணவுப் பதார்த்தங்கள். படையல்கள். நம் பெருமாளுக்கு? உலகளந்த நம் பெருமாளுக்கு? ஈரேழு பதினான்கு புவனங்களையும் சொத்தாகக்கொண்ட நம்பெருமாளுக்கு?

நல்லது உய்யவந்த விண்ணகரத்தாரே. போனது போனவையாக இருக்கட்டும். நம் பெருமாளைப் பற்றி நாம் அறியாது இருந்தோம். நம் பெருமாளாயிற்றே. தந்தையென நம் பிழை பொறுப்பார். நம் உய்யவந்த விண்ணகரப் பெருமாள் திருவடி தொழுவோம். நம் பெருமாள் எப்போதும் நன்று செய்பவர். எப்போதும் நலமளிப்பவர். நம்

பெருமாள் வையம் காப்பவர். உயிர்களை என்றும் காப்பவர். உலகைக் காப்பதில் நம் பெருமாள் எப்போதும் வெல்வார். நம் பெருமாளே எப்போதும் வென்றான்.

**நம் பெருமாள் போற்றி! நம் எப்போதும் வென்றான் திருவடிகள் போற்றி போற்றி!**

உய்யவந்த விண்ணகரத்தாரே.. நம் ஊரில் காவலர்கள் முகாமிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். நம் ஊர் என்றில்லாமல் பக்கத்து ஊர்களிலும் சிறப்பு காவல்படை முகாமிட்டிருக்கிறதல்லவா. நம் ஊரின் இறங்குமுத்தம்மன் ஊரிலுள்ள சில சாதிக்காரர்களுக்கு மட்டுமே சொந்தம் என வழக்கு நடக்கிறதல்லவா. தெய்வங்கள் அனைவருக்கும்தானே சொந்தமாக இருப்பார்கள். தெய்வங்களுக்கும் சாதி பார்ப்பது தகுமா. நாங்களும் சேர்ந்து சாமி கும்பிடுகிறோம் என நாயக்கர் முன்வந்தால் நல்லதுதானே. ஊரார் அனைவரும் ஒன்றாய் சேர்ந்து அம்மனை வணங்கினால் அம்மனுக்கும் பெருமைதானே. தேவரும் நாயக்கரும் போட்டிபோட்டு ஆளுக்கொரு பூட்டுபோட்டு கோவிலைப் பூட்டி விட்டார்களாம். ஆடித் திருவிழாவும் சரியாகக் கொண்டாடவில்லையாமே. நாயக்கருக்கே இப்படியெனில் எளிய சாதிக்காரர்களை எப்படி ஒன்று சேர்த்து சாமி கும்பிடப் போகிறார்கள் நம் ஊர்காரர்கள்.

எதற்குச் சொல்லவந்தோமெனில் யாம் பாட்டுக்கு நம் ஊர் பெருமாளை நம்பெருமாள் எனக் கூறிவிட்டோம். பெருமாளாவது ஊரார் அனைவருக்கும் பொதுவானவரா, ஊரார் அனைவருக்கும் சொந்தமானவரா அல்லது குறிப்பிட்ட சாதிக்கு மட்டுமே சொந்தமா. நம் பெருமாளை அனைவருக்கும் சொந்தமாக்குங்கள். நம் பெருமாள் வாராது வந்த மாமணி. மாணிக்கத் தேர். நம் ஊர் என்றில்லாமல் உலகினர் அனைவருக்கும் நம்பெருமாள் சொந்தமானவர். ஊர் கூடி, உலகம் இணைந்து கொண்டாடும் பெருமாளாக நம் பெருமாள் என்றென்றும் நிலைத்திருக்கட்டும்.

**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாசாய மங்களம்!**

எம்மைப் பற்றி ஊர்க்காரர்களுக்குக் கொஞ்சமாவது தெரிய வேண்டும் எனும் நோக்கத்திலேயே இவ்வளவும் பகிர்ந்து கொண்டோம். நமது பெருமைமிகு ஊர்க்காரர்களுக்கு எமது வேண்டுகோள்,

உலகாளும் நம் பெருமாள் உலகினா் அனைவருக்கும் சொந்தமாக்கப்படவேண்டும். ஊரிலுள்ள அனைத்து சாதிக்காரா்களும் ஒன்றாகக்கூடி இது குறித்து கலந்துபேச வேண்டும். உலகளந்த நம் பெருமாள், உலகின் அனைத்து சாதிக்காரா்களுக்கும், இனத்தவருக்கும், மொழியினருக்கும், மதத்தவருக்கும், மனிதருக்கும், தேவா்களுக்கும், கடவுள்களுக்கும், ஈரேழு பதினான்கு புவனங்களுக்கும் சொந்தம் என எழுத்துப்பூா்வமாக அறிவிக்க வேண்டும். ஊரார் அனைவரும் கையெழுத்திட்டு அதன் பிரதி பத்திரப்படுத்தப்படவேண்டும். இது குறித்த ஊா் முடிவு அறிவிப்பு பலகையாக கோவில் முகப்பில் இடம்பெறவேண்டும்.

கோவில் நடைமுறைகளில், நிா்வாகத்தில் அகமுடையாருக்கு உரிய பங்களிப்பை அளிக்கலாம். ஆயினும் எந்த ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்கோ, சாதிக்கோ முக்கியத்துவம் கொடுக்காமல் அனைவரும் இணைந்து செயலாற்றுமாறு திட்டமிட வேண்டும். இப்போதைக்கு நம் பெருமாளை உலகமனைத்திற்கும் சொந்தமாக்குங்கள். மற்ற நடைமுறைகளை பின்னா் கலந்துபேசி முடிவெடுத்துக் கொள்ளலாம்.

திருமலைபுரத்திற்கு யாம் கூறியுள்ள நடைமுறைகளை ஏற்று, திருமலைபுரத்தாா்கள் நாழி மண் சுமக்க ஆரம்பித்தவுடன், நம் ஊா்க்காரா்கள் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளாவன,

திருமலைபுரத்தில் முதல் நாள் நாழிமண் சுமக்கும் சுபநிகழ்ச்சி வெற்றிகரமாக முடிந்த அன்று இரவே நம் ஊருக்கு காப்பு கட்டப்பட வேண்டும். காலை சூரிய உதயத்திற்கு முன்னா், பிள்ளைமாா்கள், மறவா்கள் பத்து உரூபாவும், பூசாரிகள், ஆதிதிராவிடா்கள், பதினெட்டு உரூபாவும், அகமுடையாா்கள், ஆசாரிகள், மருத்துவா்கள், நாயக்கா்கள், ஐயங்காா்கள் நாற்பத்தெட்டு உரூபாவும் காப்பாகக் கட்டவேண்டும். தேவேந்திரரில், கருப்பசாமியைக் கும்பிடுபவா்கள் பதினெட்டு உரூபாயும், சோலையப்பசாமியைக் குலதெய்வமாகக் கொண்டவா்கள் நாற்பத்தியெட்டு உரூபாயும் காப்பாகக் கட்டவேண்டும். எமது குடும்பத்தாா் பத்து உரூபா காப்புக் கட்டவேண்டும். நாடாரில் மாடசாமியைக் கும்பிடுபவா்கள் பத்து உரூபாயும், கருப்பசாமியை குலதெய்வமாகக் கொண்டவா்கள் பதினெட்டு உரூபாயும், சோலைசாமியைக் கும்பிடுபவா்கள் நாற்பத்து எட்டு உரூபாயும் காப்புக்கட்ட வேண்டும்.

அருந்ததியரில் கருப்பசாமியைக் கும்பிடுபவர்கள் பதினெட்டு உரூபாயும் மாரியம்மனைக் கும்பிடுபவர்கள் நாற்பத்தி எட்டு உரூபாயும் காப்புக் கட்டவேண்டும்.

மறவரில் கண்ணன், அகமுடையாரில் சீனிவாசன், நாயக்கரில் இராமன், ஐயங்காரில் திருவேங்கடம், நாடாரில் பெருமாள், பிள்ளைமாரில் முருகன், ஆதிதிராவிடரில் சிவன், அருந்ததியரில் மாரியப்பன், தேவேந்திரரில் கருப்பசாமி பெயர் கொண்டவர்கள் பச்சைத் துணியில் காப்புக்கட்ட வேண்டும். ஊரில் குருசாமி, முனியசாமி, வெள்ளைச்சாமி போன்று சாமி என முடியும் பெயர் கொண்டவர்கள் வெள்ளைத்துணியில் காப்புக்கட்ட வேண்டும். மற்றவருக்கு மஞ்சள் துணி.

ஊரின் பழமையான கோவில்களின் முன்பக்கத்தில், ஒரு அடி ஆழத்திலிருந்து ஒரு மரக்கால் மண் எடுத்துக்கொள்ள வேண்டும். சூரியன் உதயமாகும் நேரத்தில் மண் எடுக்க வேண்டும். மண் எடுத்து சாமி முன் வைத்து அவரவர் சாமிகளுக்கு சிறப்பு வழிபாடுகள் செய்ய வேண்டும். வழிபாட்டில் மூன்று குடம் நீர், மூன்று படி பால், மூன்று மாலைகள் என எல்லாமே மூன்றாக இருப்பது சிறப்பு. விரும்புகிறவர்கள் அனைத்தும் பத்து எனவும் எண்ணிக்கை வைத்துக்கொள்ளலாம். கவனத்தில் கொள்ள வேண்டியது எதுவுமே ஒற்றையாக இருக்கக்கூடாது.

மரக்கால் மண் எடுக்கும் நம் ஊரின் கோவில் யாம் பிறப்பதற்கு முன்னரே கோவிலாக வழிபடப்பட்டிருக்க வேண்டும். யாம் பிறந்தது பரிதாபி வருடம் மாசி பத்தாம் நாள். ஆங்கிலத்தில் 22.2.1973. இதற்குப்பின் புதிதாகக் கோவில் எழுப்பியிருந்தால் இக்கோவிலிலிருந்து மண் எடுக்கக்கூடாது. ஒரே சாதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட கோவில் இருந்தாலும் அனைத்துக் கோவில்களிலிருந்தும் மண் எடுத்துக் கொள்ளலாம். மண்ணை எடுப்பவர் அந்தந்த கோவில்களுக்குப் பாத்திரமானவராக இருக்கவேண்டும். நம் ஊர்க்காரர்களுக்குத் தெரிந்து இறந்தோருக்கு கோவில் எழுப்பியிருந்தால் அங்கிருந்து மண் எடுக்கக்கூடாது. பெரியவர்களிடம் கலந்துபேசி நம் ஊரிலிருக்கும் மரபான கோவில்கள் எவை எனத் தீர்மானிக்கவேண்டும்.

மண் எடுக்கத் தோண்டிய பள்ளத்தில் மல்லிகை, முல்லை போன்ற மணமுள்ள பூக்களின் செடிகள் ஊன்றப்பட்டு பாதுகாக்க வேண்டும். விரும்புகிறவர் மாமரம் பலா போன்ற பழவகை மரக்கன்றுகளையும் நட்டுப் பராமரிக்கலாம்.

மண் மரக்கால் மஞ்சள் துண்டால் சுற்றப்பட்டு, மாவிலைத் தோரணம் கட்டி மாலை சாற்றி, தலையில் வைத்து நேராக பெருமாள் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, முன் மண்டபத்தில் வைக்கப்பட வேண்டும். மண் எடுக்கப்பட்ட கோவில்களில் நாடார்களின் காளியம்மன் தவிர மற்ற கோவில்கள் பூட்டப்படவேண்டும். மறுஉத்தரவு வரும்வரை கோவில்கள் திறக்கப்படக் கூடாது.

அகம்படியாரின் கருப்பசாமி கோவிலும், மறவரின் சக்தி கோவிலும் பச்சை தென்னந்தட்டி கொண்டு சுற்றிலும் மறைக்கப்பட வேண்டும். மற்ற கோவில்களில் நுழைவு வாசலில் வாழை மரங்கள், மஞ்சள் கொத்து, மாவிலைத் தோரணம் போன்ற மங்கலங்களால் அலங்கரிக்கப்பட்டு வாசல் பச்சைத் தென்னந்தட்டியால் மூடப்பட வேண்டும். திறப்பாக இருக்கும் கோவில்கள் நான்கு மூலைகளிலும் கம்புகள் நடப்பட்டு பச்சை தென்னந்தட்டிகளால் மறைக்கப்பட வேண்டும். தட்டிகளுக்கு முன்பு முதலில் வேப்பிலையாலும், அடுத்து மாவிலையாலும் தோரணம் கட்ட வேண்டும்.

அனைத்துக் கோவில்களிலிருந்தும் மண் மரக்கால் வந்து சேர்ந்தவுடன் பத்து உரூபா நாணயம் பத்தும், ஒரு உரூபா நாணயம் எட்டும் என 108 உரூபா மஞ்சள் துணியில் வைத்து பெருமாளின் வலது திருக்கையில் காப்புக்கட்ட வேண்டும். காப்புக் கட்டும் போது,

காப்பு மறந்தறியோம் கண்ணனே என்றிருப்பம்

ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும் - ஆக்கை

கொடுத்தளித்த கோனே குணபரனே உம்மை

விடத்துணியோம் மெய் தெளிந்தோமே - பாசுரம் பாட வேண்டும்.

பெருமாள் கோவிலின் கம்பத்திலிருந்து முன்பக்கமாக சரியாகப் பதினெட்டு அடி தள்ளி தரையிலிருந்து முப்பத்தியிரண்டு அடிக் கம்பத்தில் ஆஞ்சனேயர் கொடி பறக்கவிட வேண்டும். கோவிலின் மேற்கில் சுவரிலிருந்து பன்னிரெண்டடிகள் தள்ளி பதினெட்டு அடிக் கம்பத்தில் கருடக்கொடி பறக்கவிட வேண்டும். கோவிலின் தெற்கே எட்டு அடிகள் தள்ளி பதினாறு அடி உயரத்தில் தமிழ் மூவேந்தர் கொடியும், வடக்கே

நான்கு அடிகள் தள்ளி பத்து அடிகள் உயரத்தில் பல்லவர்களின் சிம்மக்கொடியும் பறக்கவிடப்பட வேண்டும்.

மாலையில் பெருமாளுக்கு சிறப்பான வழிபாட்டு முறைகள் நிகழ்த்தப்பட வேண்டும். பெருமாளை 48 படி காவிரி தீர்த்தம் கொண்டும், தாயாரை 18 படி காவிரி தீர்த்தம் கொண்டும் நீராட்ட வேண்டும். தொடர்ந்து நல்லெண்ணெய், பால், தயிர், இளநிர், கரும்புச் சாறு, பன்னீர், மஞ்சள், பஞ்சாமிருதம், தேன் மற்றும் சந்தனம் போன்ற மங்கலப் பொருட்களால் நீராட்டல்கள் செய்ய வேண்டும். நீராட்டல்களின் போது ஊற்றுவதற்கு நமது ஊரின் நீரும், முடிவில் காவிரி நீர் கொண்டும் நீராட்ட வேண்டும். நம் ஊர் ஐயங்கார்கள் பூஜைகள் செய்ய முன்வந்தால் அவர்களே செய்யலாம். அபிசேகத்தில் நல்லெண்ணெய் பெருமாளுக்கு தாயாருக்கு 48 மற்றும் 18 கரண்டிகள் எனவும், பன்னிர், தேன், பஞ்சாமிருதம் பாட்டில்கள் எனவும் மற்றவை 48, 18 படிகள் எனவும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு அபிசேகத்தின் போதும் துளசி மாலை அணிவிக்க வேண்டும். நீராட்டல்களின் போது திருப்பாவை பாடுவது சிறப்பு.

நீராட்டல்கள் முடிந்து தாயாருக்கு மஞ்சள் கொண்டு சிரசு உருவாக்க வேண்டும். சிரசில் அழகான முக அலங்காரம் செய்து, சிரசு உடலோடு இணைந்திருக்கும் வண்ணம் பச்சை நிறத் துணியால் கட்ட வேண்டும். பெருமாளுக்கு வெள்ளைப்பட்டும், தாயாருக்கு பச்சைப்பட்டும் சாத்த வேண்டும். பெருமாளுக்கு பத்துவகையான மணமுள்ள பூக்களால் மாலை சூட்டவேண்டும். தாயாருக்கு மல்லிகை சூடி, துளசிமாலை அணிவிக்க வேண்டும்.

தாயாருக்கு ஊர்க்காரர்கள் சார்பாக எட்டுக் கிராம் அளவில் திருமாங்கல்யத்தில் கோர்ப்பது போன்று 12தங்கக் காசுகள் செய்யவேண்டும். தொப்பலாக்கரை, தொப்புலாக்கரை, ஆதிகுளத்தூர், அளற்றூர் நாட்டுக் குளத்தூர், ஜனநாத நல்லூர், உய்யவந்த விண்ணகரம் என ஒவ்வொரு பெயரும் இரண்டு காசுகளில் பொறிக்கப்பட வேண்டும். 12காசுகளும் மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்குளத்தில் நீராட்டப்பட்டு, செங்கமலத்தாயார் தாமரைப் பாதங்களில் வைத்து நல்லாசிகள் பெறப்பட வேண்டும்.

இராஜகோபாலபுரம் ஊர் சார்பாக இரண்டு எட்டு கிராம் காசுகளில் இராஜகோபாலபுரம் எனப் பொறிக்கப்பட்டு, திருக்குடந்தை காவிரியில் நீராட்டப்பட்டு, ஆராவமுதனின் பிராட்டியான கோமளவல்லித்தாயார் கமல பாதங்களில் வைத்து வணங்கப்பட வேண்டும்.

தொப்பலாக்கரை, திருமலைபுரம் மற்றும் இராஜகோபாலபுரம் கிராம மக்கள் சார்பாக எட்டுக்கிராம் எடையில் சீனிவாசன் பத்மாவதித் தாயார் பொறித்த திருமாங்கல்யம் செய்ய வேண்டும். திருமாங்கல்யத்தை திருவரங்கம் காவிரியில் முழுக்காட்டி ஸ்ரீரங்கத்தாயார் பொற்பாதங்களில் வைத்து ஆசிர்வாதங்கள் பெறவேண்டும்.

திருமலைபுரத்தின் இரு காசுகள், இராஜகோபாலபுரத்தின் இரு காசுகள், நமது ஊரின் பன்னிரெண்டு காசுகள், எமது சார்பாக தமிழ் கிருஷ்ணா பெயரில் இரு காசுகள் என 18 காசுகளும் திருமாங்கல்யத்தில் கோர்க்கப்பட வேண்டும். முதலில் ஜனநாத நல்லூர் பொறிக்கப்பட்ட காசுகளும், தொடர்ந்து ஆதிகுளத்தூர், திருமலைபுரம், தொப்பலாக்கரை, அளற்றூர் நாட்டுக் குளத்தூர், இராஜகோபாலபுரம், தொப்புலாக்கரை, உய்யவந்த விண்ணகரம், மற்றும் தமிழ் கிருஷ்ணா எனும் முறையில் பக்கத்திற்கு ஒன்று என திருமாங்கல்யத்தின் இருபுறமும் கோர்க்க வேண்டும்.

திருமாங்கல்யம் மற்றும் காசுகள் மஞ்சள் நாணில் பூட்டப்பட்டு, மங்கல வாத்தியங்கள், கெட்டிமேளங்கள் முழங்க, நாச்சியாரின் வாரணமாயிரம் ஓத நம் பெருமாள் சார்பாக நம் பத்மாவதித்தாயாருக்கு அணிவிக்க வேண்டும். நம் அலர்மேல்மங்கை அம்மாவுக்கு பதினெட்டு வகையான மணக்கும் பூக்கள் தூவவேண்டும். திவ்யத்தம்பதிகளுக்கு பத்து வகையான மஞ்சளரிசி அர்ச்சதை தூவி வாழ்த்த வேண்டும்.

**மணமக்கள் வாழியே!**

பொன்கொண்ட தேவன் கல்யாணம்; பூலோகம் வைகுந்தம் காணும்!

பூவோடு புகழோடு சுப மங்களம்!

புகழுடைய நம் பூமங்கை வாழியே; புண்ணியனாம் நம் மாதவன் வாழியே!

நானிலமெங்கும் நல்யோகம் நல்கும் நம் நாரணன் வாழியே!

மங்களம் மங்களம் மங்களம் ஸ்ரீகிருஷ்ணருக்கு மங்களம்!

ஸ்ரீராமா ஜெயஜெய சீதம்மா ஜெயமங்களம்!

கல்யாண வைபோகமே லாலி சுப லாலி!

பத்மாவதி கல்யாண வைபோகமே; லட்சுமி கல்யாண வைபோகமே!

தாயார் கல்யாண வைபோகமே; ஸ்ரீரங்கன் கல்யாண வைபோகமே.

**ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே..**

புண்ணிய மணநாண் முடிந்தபின் கோவில் கம்பத்திற்கு 10குடம் காவிரித் தீர்த்தம் ஊற்றவேண்டும். சிம்ம வாகனத்திற்கு 8குடமும், பலி பீடத்திற்கு 4குடமும் ஊற்றவேண்டும். பின்னர் கம்பத்திற்கு 108குடம் பாலும், சிம்மத்திற்கு 18குடம் பாலும், பலிபீடத்திற்கு 8 குடம் பாலும் ஊற்றவேண்டும். தொடர்ந்து, கம்பத்திற்கு 48குடம் நமது ஊர் நீரும், சிம்மத்திற்கு 18, பலிபீடத்திற்கு 10 குடம் நீர் எனவும் ஊற்றவேண்டும். நீராட்டு முடிந்தபின், கம்பத்திற்கு வெள்ளைப் பட்டும், சிம்மத்திற்கு மஞ்சள் பட்டும், பலிபீடத்திற்கு பச்சைப்பட்டும் சாற்றவேண்டும். தொடர்ந்து கம்பத்திற்கு 108 தாமரைப் பூக்கள் கொண்ட மாலையும், சிம்மத்திற்கு 48, பலிபீடத்திற்கு 18தாமரைப்புக்கள் கொண்ட மாலையும் சாற்றவேண்டும். கம்பத்தின் ஆஞ்கநேயருக்கு 108வெற்றிலை மாலையும், கருடாழ்வாருக்கு துளசி மாலையும் சாத்தவேண்டும். தாமரைப் பூக்களின் எண்ணிக்கை சரியாக இருப்பதை உறுதிசெய்யவேண்டும். அபிஷேகங்கள் முடிந்து தூப தீபங்கள் காட்டவேண்டும். தீபத்தின் போது கோவிந்தா கோவிந்தா எனவும், ஸ்ரீராமஜெயம் எனவும் புகழ்மொழிகள் சொல்லவேண்டும். இந்நிகழ்வுகளின் போது நம்மாழ்வாரின் உலகம் உண்ட பெருவாயா (6 - 10), பெரியாழ்வாரின் சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய் (5 - 4) பாடல்கள் பாடவேண்டும்.

**மங்களானாம் நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்!!**

ஆராதனைகள் முடிந்து பெருமாளுக்கு 18வகை இனிப்புகள், 18வகைப் பழங்கள், 48வகை அன்னங்கள் படையலிடவேண்டும். பெருமாளுக்குப் படைத்த அன்னவகைகளிலிருந்து ஒரு ஒரு கரண்டி அன்னமெடுத்து, நான்கு திசைகளிலும் கொடிக்கம்பம் தாண்டி படையலிடவேண்டும். அன்னத்தோடு ஒரு படி அளவுள்ள மண் கலயத்தில் நீரும் வைக்கவேண்டும்.

தூப தீபங்கள் அனைத்தும் முடிந்தவுடன் படையல்கள் எடுக்கப்பட்டு பெருமாள் மற்றும் தாயாருக்கு முன்னே மஞ்சள் பட்டு விரித்து மரக்கால் மண்ணைக் கொட்டவேண்டும். மண்ணைக் குமிக்காமல் சற்று பரப்பி காற்றோட்டமாக வைப்பது நல்லது. மண்ணைக் கொட்டும் வைபவத்தின்போது குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழியின் இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி - பாடல்கள் பாடுவது உசிதமானது.

அனைத்து நிகழ்வுகளும் நல்லபடியாக முடிந்தபின்னர், பெருமாள் கோவில் நடை சாற்றப்பட்டு, வாசல் துளசிமாலைகளால் மூடப்படவேண்டும். துளசியால் நடை சாத்தப்படும்போது திருப்பல்லாண்டு பாடவேண்டும். பல்லாண்டு இசைத்தபின் 18வானவெடிகள் வெடிக்கவேண்டும்.

வானவெடிக்குப்பின் திருமகளும் மண்மகளும் சிறக்க வந்தோன் வாழியே.. மற்றும் பங்கயப்பூவில் பிறந்த பாவைநல்லாள் வாழியே.. வாழிப்பாடல்கள் பாடவேண்டும்.

பெருமாள் திருமஞ்சனம் தொடங்கி பல்லாண்டு வரை அனைத்தையும் நன்கு திட்டமிட்டு உரிய நேரத்தோடு முடிக்கவேண்டும். மாலை ஆறு மணிக்குள் அனைத்து வழிபாட்டு முறைகளும் நிறைவுற வேண்டும். கதிரவன் மறைவதற்குள் அனைத்து வழிபாட்டு முறைகளும் நிறைவுற்றிருக்க வேண்டும்.

காவிரித் தீர்த்தம் ஸ்ரீரங்கம் அம்மா படித்துறையில் அள்ள வேண்டும். ஊர் சார்பாக தண்ணீர் லாரிமூலம் நீர் எடுத்து வரலாம். காவிரி படித்துறையில் நீர் அள்ளியது உறுதிசெய்யப்பட வேண்டும். ஊர்க்காரர்கள் உடன் செல்ல வேண்டும். பெருமாளுக்கு மட்டுமாவது குடங்களில் எடுத்து வருவது சிறப்பு.

பெருமாள் ஆராதனைகளின்போது நாதஸ்வர மங்கலவாத்யம் இடம்பெற வேண்டும்.

பால் குடங்கள் கொடுப்பவர்கள் பட்டியலை முன்கூட்டியே தேர்வுசெய்ய வேண்டும். அதிகமானவர் விரும்பினால் குலுக்கல் முறையில் தேர்வுசெய்ய வேண்டும்.

பெருமாளுக்கான அன்னப்படையல்கள், இனிப்புகள் நம் ஊர்ப் பெண்களே தயார்செய்ய வேண்டும். இனிப்புகள் மற்றும் அன்னங்கள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். பதார்த்தங்கள் செய்ய விரும்புகிறவர்கள் பெயர்பட்டியல் தயாரித்து அவரவர் செய்ய வேண்டிய பதார்த்தங்களை முன்கூட்டியே தெரிவித்துவிட வேண்டும். பெண்கள் குழுக்களாக இணைந்து பதார்த்தங்கள் செய்வது வரவேற்கத்தக்கது.

தலைக்கட்டுக்கு ஆயிரம் உரூபா வசூலிக்கலாம். முறையான கணக்கு வைத்திருக்க வேண்டும். வரவு செலவுக்கு ஊர் சார்பாக பத்துப்பேர் அடங்கிய குழு ஏற்படுத்தப்பட வேண்டும். குழுவில் இரண்டு பெண்களாவது கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.

பெருமாள் கோவில் கல்வெட்டில் பரளச்சி ஊரும் இடம்பெறுவதால், பரளச்சி ஊர்க்காரர்கள் விரும்பினால், அவர்களும் லட்சுமி தாயாருக்கு பரளச்சி எனும் பெயர் பொறித்த இரண்டு காசுகள் அளிக்கலாம். பரளச்சி பெயர் பொறித்த காசுகள் தொப்பலக்கரைக்கு அடுத்து இடம்பெறவேண்டும். காசுகள் காஞ்சி வரதராஜப் பெருமாளின் பிரம்ம தீர்த்தத்தில் நீராடப்பெற்று, தேவராஜப் பெருமாள் நல்லாசிகளோடு, பெருந்தேவித்தாயார் தாமரைப் பாதங்களில் வைத்து பூர்ண ஆசிகள் பெறவேண்டும்.

திருமுழுக்காட்டுக்குப்பின் திருக்கோவிலுக்குள் மின்விளக்கு கூடாது. கோவிலுக்கு வெளியே மூலைக்கு ஒரு விளக்கு என நான்கு மின்விளக்குகள் போடவேண்டும். தினமும் இரவில் நான்குபேர் பெருமாள் கோவில் காவலுக்கு என நியமிக்க வேண்டும். பகலில் தேவை எனில் பகலுக்கும் காவல் போடவேண்டும்.

நம் ஊரின் ஐயங்கார்கள் பெருமாள் கோவிலில் சாமி கும்பிட்டு யாம் பார்த்ததில்லை. நம் ஊரின் அருள்மிகு பெருமாள் திருவேங்கடமுடையான் எனில்

பெருமைமிகு பிராமணர்கள் ஏன் பெருமாளை அறிந்திருக்கவில்லை, ஏன் வணங்கவில்லை, ஏன் வழிபாடுகள் நிகழ்த்தவில்லை, ஏதேனும் காரணம் வைத்திருக்கிறார்களா, மரபாக ஏதேனும் பின்பற்றப்பட்டு வரப்படுகிறதா எனும் வினாக்கள் ஊர் சார்பாக எழுப்பப்பட்டு பதில்கள் பெறப்பட வேண்டும். அவர்களது பதில்களை வைத்தே நமது ஊர் பிராமணர்களை பூஜைகள் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். ஒருவேளை நம் பெருமாளை அறியாமல் இருந்ததாக ஒப்புக்கொண்டால், அனைவரும் திருச்சானூர் சென்று பத்மாவதி தாயார் திருவடிகள் சரணடைந்து அன்புத் தந்தையாம் ஸ்ரீநிவாசனை பொருத்தருளும்படிக்கு வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஒருவேளை நம் ஊர் பிராமணர்கள் இல்லையெனில் பூஜைமுறைகள் அறிந்த பெருமாள் தலவர் போன்ற நம் ஊர்க்காரர்களே அனைத்து பூஜைகளையும் செய்துவிட வேண்டும். நாம் செய்வதே நம் பெருமாளுக்கு வழிபாடுகள். நம் ஊர் பிராமணர்கள் பூஜைகள் செய்தாலும், தமிழ் வேதமான நாலாயிரத் திவ்யபிரபந்தங்கள் கொண்டே வழிபாடுகள் நிகழ்த்த வேண்டும்.

நம் ஊரின் ஆசாரிமார்கள் நம் புகழ்மிக்க பெருமாளுக்கு மரக்குதிரையொன்று உருவாக்க வேண்டும். குதிரை 48 படிகள் மண் கொள்ளும் அளவிற்கு இருக்க வேண்டும். குதிரை நான்கு கால்களையும் ஊன்றி நிற்குமாறும், தலை நன்கு தூக்கி இருக்குமாறும் உருவாக்க வேண்டும். குதிரை செய்யும் மரம், உயரம், நீளம், அகலம் போன்றவற்றை மனத்தில் எழும் எண்ணங்களுக்கு ஏற்ப உருவாக்கலாம். நாம் செய்வதே நம் பெருமாள் குதிரை. தெளிவு தேவையெனில் மரக்குதிரை செய்து பழக்கமான தச்சர்களிடம் கேட்டுக்கொள்ளலாம். எனினும் குதிரை உருவாக்குவது நம் ஊர் விஸ்வகர்மாக்களாகவே இருக்க வேண்டும். குதிரையின் முதுகில் மண் நிரப்பும் துளை இருக்கட்டும். குதிரை தாங்கும் பலகை குதிரையின் அளவு பாாத்து செய்வது சிறப்பு. பலகை 3அடிகள் அகலமும், 4அடிகள் நீளமும் 4செ.மீ தடிமனும் கொண்டதாக இருக்கலாம். குதிரையை பலகையில் உறுதியாக வைப்பதற்கேற்றவாறு பலகையில் அமைப்புகளை உருவாக்க வேண்டும். பலகைக்கு அடியில் பொருத்த 12அடிகள் கொண்ட இரு உருளைக் கட்டைகள் இடம் பெறவேண்டும். குதிரைக்கு வெள்ளை வர்ணம் பூச வேண்டும். குதிரைக்கு கண் மலர் வைப்பதற்கேற்றவாறு கண்கள் சற்று பெரியதாக இருப்பது நல்லது.

குதிரை எட்டு நாட்களுக்குள்ளாக அதாவது திருமலைபுரத்தின் பத்தாம் நாள் நாழிமண் சுமக்கும் வைபவத்துக்குள் நிறைவுற வேண்டும். குதிரை உருவாக்கும் போது மற்றவர்கள் பார்க்காவண்ணம் தடுப்பு அமைத்து உருவாக்க வேண்டும். குதிரை உருவாக்கும்முன் அதாவது நம் பெருமாளுக்கான முதல் நாள் வைபவம் முடிந்த அடுத்த நாள், குதிரை உருவாக்கும் ஆசாரிகள் (முடிந்தவரை நம் ஊர் ஆசாரிகள் அனைவரும்) கூத்தனூர் மகா சரஸ்வதி திருக்கோவிலுக்கு சென்று சரஸ்வதி அன்னைக்கு வெள்ளைப்பட்டும், 108 வெள்ளைத் தாமரை மாலையும் சாற்றி அன்னை அருள்பெற்று பணியைத் துவக்கவேண்டும். மரத்தில் தச்செய்வதற்கு முன், பிரஜாபதியை மனத்தால் வேண்டி குதிரை உருவாக்கும் பணியைத் தொடங்க வேண்டும்.

பெருமாள் திருமுழுக்காட்டுக்கு அடுத்த நாள், காலை பத்து மணிக்கு நான்கு திசைக் கொடிக்கம்புகள் தள்ளி, நான்கு திசைகளிலும் நான்கு படிகள் சர்க்கரைப் பொங்கல் பொங்கவேண்டும். கிழக்கில் பொங்கல் வைப்பவர் ஆஞ்சநேயருக்கும், மேற்கில் பொங்கல் வைப்பவர் கருடருக்கும், தெற்கில் பொங்கல் வைப்பவர் பலிபீடத்திற்கும், வடக்கில் பொங்கல் வைப்பவர் சிம்மத்திற்கும் படையலிட வேண்டும்.

பொங்கல் வைப்பவர்கள் அவரவர் படையலுக்குரிய ஆஞ்சநேயருக்கும், கருடருக்கும், பலிபீடத்திற்கும், சிம்மத்திற்கும் நீராட்டல், எண்ணெய் காப்பு, நீராட்டல், ஒரு படி பால், நீராட்டல் எனும் முறையில் அபிசேகம் நிகழ்த்தி, ஆஞ்சநேயர், கருடருக்கு வெள்ளைப்பட்டு துளசிமாலையும், சிம்மத்திற்கு மஞ்சள் பட்டு வெள்ளைப் பூமாலையும், பலிபீடத்திற்கு பச்சைப் பட்டு தாமரைப் பூக்களும் சாற்றி படையலிட வேண்டும். இந்நடைமுறை அடுத்து வரும் பத்து நாட்களுக்கும் நிறைவேற்றப்பட வேண்டும்.

திசைப் பொங்கல் வைப்பவர்களைத் தேர்ந்தெடுக்க ஊர் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. பெருமாள் கோவில் தொடங்கி இராஜகோபாலபுரம் பாதைக்கு தெற்கே இருப்பவர்கள் தென் திசைப் பொங்கலுக்கும், பெருமாள் கோவில் தொடங்கி நாடார் சங்கமடத்திலிருந்து பேருந்து நிலையத்தின் சுத்தமடம் சாலையின் மேற்கில் உள்ளோர் மேற்கு திசைப் பொங்கலுக்கும், பேருந்து நிலையத்தின் சுத்தமடம், பரளச்சி சாலைக்கு வடக்கே இருப்பவர்கள் வடதிசைப் பொங்கலுக்கும், நாடார் மடம்

தொடங்கி பேருந்து நிலையச் சாலையின் கிழக்கே இருப்பவர்கள் கிழக்குத் திசைப் பொங்கலுக்கும் உரியவராகின்றனர்.

ஒவ்வொரு திசைக்கும் பொங்கல் வைக்க விருப்பமானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதிகமானோர் விரும்பினால் குடவோலைமுறை பின்பற்றப்பட வேண்டும். கூடுதலாக ஒருவர் என ஓவ்வொரு திசைக்கும் 11பேர்கள் தேர்வுசெய்யப்பட வேண்டும்.

நாயக்கர் பேருந்து நிலையத்தில் வைத்திருக்கும் விநாயகர் கோவில் அகற்றப்பட வேண்டும். நம் ஊரின் நாயக்கருக்கு சீதாராமனே குலதெய்வம். நாயக்கர் சமூகத்தினர் விநாயகர் வழிபாடு நிகழ்த்த விரும்பினால், விநாயகரை அவர்களது பட்டத்தரசியம்மன் கோவிலுக்குள் வைத்து வழிபடலாம். அங்கும் கோவில் எழுப்பக்கூடாது. பீடம் கட்டி விநாயகர் சிலை வைக்கலாம். விநாயகர் சிலை வழிபாடு வேணடாம் என முடிவுசெய்தால் சிலையை மஞ்சள் துணி சுற்றி பொதுஇடத்தில் பாதுகாக்க வேண்டும்.

பெருமாள் வைபவத்திற்குப்பின் அடுத்துவரும் பத்து நாட்களும் நாடார்களின் காளியம்மன் சிறப்பாக வழிபடப்பட வேண்டும். அம்மனுக்கு காலை, நண்பகல், மாலை, இரவு என நான்கு வேளையும் பூசைகள் செய்யப்பட வேண்டும். தினமும் அம்மனுக்கு பட்டு சாத்த வேண்டும். அனைத்து பூசைகளிலும், நைவேத்யங்களிலும் மூன்று எண்ணிக்கை வருமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

காளியம்மன் திருக்கோவிலுள் உள்ள விநாயகரை பத்து நாட்களுக்கும் தினமும் காலையில் 18குடம் தீர்த்தம் கொண்டு நீராட்ட வேண்டும். தினமும் வெள்ளைப்பட்டு சார்த்தி, காலையில் சுண்டலும் மாலையில் இனிப்பு கொழுக்கட்டையும் நைவேத்யம் பண்ணவேண்டும்.

அம்மன் கோவிலில் தினமும் இரவு 108தீபங்கள் ஏற்றவேண்டும். அம்மனுக்கான வழிபாடுகளை அனைத்து சமூகத்தவரும் செய்யலாம். அம்மனின் முதல் நாள் பூஜைகள் தேவேந்திர சமூகத்தவர் சார்பில் செய்யப்பட வேண்டும்.

பத்து நாட்களும் மாலை ஆறு மணிக்கு ஊர் சார்பாக ஆசாரி சங்க மடத்தில் பஜனை பாடலாம். பஜனையில் முதலாவதாக கந்தசஷ்டி கவசம் பாடப்பட வேண்டும்.

எல்லோரும் சேர்ந்து குழுவாகப் பாடுவது சிறப்பு. பஜனையில் முருகன் மற்றும் கண்ணன் பாடல்கள் மட்டுமே இடம்பெற வேண்டும். கண்ணனின் நாமசங்கீர்த்தனம் இடம்பெறுவது கூடுதல் சிறப்பு.

பெருமாள் திருவிழாவின் பத்தாம் நாள் சூரிய உதயத்திற்குமுன் குதிரை சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, திருமண் அணிந்து, பச்சை பட்டு உடுத்தி, மங்கல வாத்யங்கள் முழங்க, காலை ஆறு மணிக்கு திருமலைபுரத்திற்குப் புறப்பாடு கண்டருளும். திருமலைபுரத்தார்கள் ஊர் எல்லையில் மேள தாளங்களோடு குதிரையை எதிர்கொள்ள வேண்டும். குதிரை 18 படி திருமண் கொண்டு, கண்ணனெனும் நாமத்தோடு மாரியம்மன் கோவிலுக்கு கொண்டு வரப்படும். அங்கு பிள்ளையார் மற்றும் அம்மன் சார்பாக இரண்டுபடி திருமண் சேர்க்கப்பட்டு, சிறப்புகள் செய்யப்பட்டு, இராமனெனும் நாமம் கொண்டு நமது ஊர்க்காரர்கள் மற்றும் பொதுமக்களால், தேவேந்திரர் கருப்பசாமி கோவிலுக்கு எடுத்து வரப்படும். இராமநாமக் குதிரையை வரவேற்கும் விதத்தில் தேவேந்திரர் கருப்பசாமி கோவில் மாற்றி அமைக்கப்படும்.

குதிரை புறப்பாடு செய்தபின் பெருமாள், தாயார் திருப்பாதங்களில் கொட்டப்பட்டுள்ள திருமண் சிறப்புக்கள் செய்யப்பட்டு அள்ளப்படும். நம் ஊரின் சாமிகள், மக்கள் சார்பாக 18 படிகள் திருமண் குதிரையில் நிரப்பப்பட்டு இராமனுக்குரிய சிறப்புக்கள் செய்யப்படும். சமணம், புத்தம், யூதம், கிறித்தவம், இசுலாம் சார்பாக தலா ஒரு ஒரு படி திருமண்ணும், உலகிலுள்ள பிற மதங்கள் சார்பாக ஒரு படி திருமண்ணும் சேர்க்கப்பட்டு, அனைத்து மதங்கள், கடவுள்கள் சார்பாகவும் குதிரைக்கு சிறப்புகள் செய்யப்படும்.

குதிரை கருப்பசாமி கோவிலிலிருந்து கருப்பசாமி என்னும் நாமம் கொண்டு எங்களது வீடு அருகிலிருக்கும் கோவிலுக்கு சரியாக இரவு பத்து மணிக்கு தூக்கிவரப்படும். இரவு கோவிலில் குதிரை வைக்கப்பட்டு கருப்பசாமி மற்றும் சீலைக்காரியம்மன் சார்பாக ஒரு படி திருமண் சேர்க்கப்பட்டு சிவனுக்குரிய சிறப்புக்கள் செய்யப்படும். குதிரை காலை பத்து மணிக்கு மங்களங்கள் சூழ மேள தாளங்களுடன் நாடாரிடம் கொடுக்கப்படும். நாடார்கள், நாடார் சமுதாயக்கூடத்தில் முருகன் சார்பாக ஒருபடி திருமண் சேர்த்து, முருகனுக்குரிய சிறப்புகள் செய்து, மாலை சரியாக ஆறுமணிக்கு விஸ்வகர்மா சமூகத்திடம் கொடுப்பார்கள். விஸ்வகர்மாக்கள் ஆசாரி

சமுதாயக் கூடத்தில் குதிரைக்கு பிரம்மன் சார்பாக ஒருபடி திருமண் சேர்த்து பிரம்மனுக்குரிய சிறப்புகள் செய்வார்கள். சரியாக இரவு பத்து மணிக்கு குதிரை அகம்படியாரிடம் கொடுக்கப்படும்.

குதிரையில் திருமண் நிரப்பும்போது, குதிரையின் பார்வை இருக்கவேண்டிய திசைகள் - திருமலைபுரம் கிழக்கு, மாரியம்மன் கோவில் - மேற்கு, கருப்பசாமி கோவில் - கிழக்கு, கருப்பசாமி சீலைக்காரியம்மன் கோவில் - தெற்கு, நாடார் மடம் - வடக்கு, ஆசாரி மடம் கிழக்கு. அகம்படியார் - வடக்கு

குதிரைக்கு ஊரின் அனைத்து மக்கள் சார்பாகவுமே சிறப்புகள் செய்யப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அகம்படியார்கள் குதிரைக்கு நீலப்பட்டு சாத்தி, 111 தாமரை மாலைகள் சூட்டி, சரியாகப் பத்து மணிக்கு பெருமாள் சார்பாக நாற்பத்து எட்டாவதுபடி திருமண்ணை நிரப்ப வேண்டும். திருமண் நிரப்பும்போது திருமண்ணின் முதல் பகுதியை வடக்கு நோக்கி குதிரை மண்ணிலிருக்கும்போது நிரப்ப வேண்டும். அடுத்து குதிரையை தரையிலிருந்து மூன்றடிகள் உயர்த்தி வலமாகச் சுற்றி கிழக்குத் திசையில் ஒரு பகுதியும், தெற்கு, மேற்கு, வடக்கு என அடுத்த பகுதிகளும் நிரப்ப வேண்டும். கடைசியாக வடக்கு திசையில் நிரப்பியபின் அப்படியே குதிரையை மேலே தூக்கி முன்னோக்கி சரியாக பத்து எட்டுகள் நடக்க வேண்டும். எட்டு வைக்கும்போது எண்ணிக்கையை சத்தமாகச் சொல்ல வேண்டும். பத்தாவது எட்டை வைத்தபின், பத்து எண்ணிக்கை மனதில் எண்ணிமுடித்து, ஒரு எட்டு மட்டும் பின்னால் வைக்க வேண்டும். குதிரையை அப்படியே இடமாகச் சுற்றி, மிகச் சரியாக 10.10 மணிக்கு கோவிந்த நாமம் விண்ணதிர, நாராயணன் குதிரையை பெருமாள் கோவிலுக்குக் கிளப்ப வேண்டும். மண்ணுலகத்தார் மகிழ்ந்தாட, விண்ணகத்தோர் வியந்தோத, உயிர்களை, உலகங்களை உய்விக்க வந்த நம் உய்யவந்த விண்ணகரப் பெருமாளின் பரி, கிழக்குக் கொடிமரத்தின் முன் சடாரி சாத்தப்பட்டு சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு திருக்கோவிலினுள் கோவிந்தனுக்கு முன்னே இருக்கவேண்டும். அடுத்து நடைபெற வேண்டிய சிறப்புகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**ஸர்வலோக நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்!!**

**பெருமதிப்பிற்குரிய வைணவப் பெரியோர்களுக்கு,**

2013ஆம் ஆண்டில் ஒருமுறை ஸ்ரீவில்லிபுத்தூர் நந்தவன ஆண்டாளம்மாவை வணங்கி கல்தூண் அருகே உட்கார்ந்திருந்தோம். எதிரே இரண்டு கிருஷ்ண பக்தைகள் விஷ்ணு சகஸ்ரநாமம் பாடினார்கள். அவர்களைப் பார்த்து எமக்கும் தந்தையாம் விஷ்ணுவின் ஆயிரம் பெயர்களையும் பாடவேண்டும் எனும் பெருத்த ஆசை உண்டானது. எனினும் சமஸ்கிருதத்தை எப்படிப் பாடுவது எனத் திகைப்பும் வந்தது.

தமிழ் எழுத்துவடிவில் சென்னை ராமகிருஷ்ணர் மடம் வெளியிட்டிருந்த விஷ்ணு சகஸ்ரநாமம் புத்தகம் வாங்கினோம். புத்தகத்தை வைத்துக்கொண்டு கணினித் தட்டை பலமுறை கேட்டோம். எப்படியும் தந்தையின் ஆயிரம் பெயர்களையும் மனப்பாடம் செய்தே தீருவது எனும் தீர்மானத்தோடு, கோடை விடுமுறைக்கு ஊருக்குக் கிளம்பினோம்.

நாள் முழுக்க மனப்பாடம் செய்தோம். மனனம் ஆக ஆக நம்பிக்கை கூடிக்கொண்டே போனது. தியானம் சுலோகங்கள் எளிதாக மனனம் ஆகியது கண்டு வியந்து கொண்டோம். விஷ்வம் விஷ்ணுர் வஷத்காரோ என காவிரிக் கரையில் கண் துயிலும் அரங்கனின் ஆயிரம் பெயர்களை, அலைதுள்ளும் காவிரியில் கண்வளரும் ஸ்ரீராமனின் ஆயிரம் நாமங்களை, அருளை வாரிவழங்கும் ஸ்ரீஹரியின் தித்திக்கும் ஆயிரம் திருநாமங்களை, மங்களங்கள் நிறைந்த நாராயணனின் ஓராயிரம் தேன்மோழிகளைப் படித்து முடித்தபோது மனமெல்லாம் இன்பம் பொங்கியது.

**மாதவனின் மந்திர நாமங்கள் வாழியவே!**

**கண்ணனெனும் கன்னலமுது வரமழை பொழியவே!**

கண்ணனின் ஆயிரம் பெயர்கள் தெரியும் எனும் நினைப்பே பேரின்பத்தைக் கொடுத்தது. அரங்கப் பெருமாளிடம் ஆயிரத்தையும் சமர்ப்பித்தோம். ஒருமுறை யாமும் அச்சுதனும் சென்றிருந்த அன்று சேர்த்தி சேவை நடைபெற்றது. திவ்யத் தம்பதிகளான நம்பெருமாளையும் தாயாரையும் சேர்த்து சேவித்தது அதிசயம் போன்று இருந்தது. அதைவிட அதிசயமாக பட்டர் எம்மை கூப்பிட்டுக் கொடுத்த பூக்கள்.

கண்ணனையும், அரங்கனையும் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதற்கா யாம் பிறந்தோம். கடமை என்னாயிற்று. பதியதோர் உலகம் செய்வதை மறக்கலாமா.

2013 நவம்பரில் பூமித் தாயைக் காப்போம் எனும் பெரிய திட்டத்தோடு வீட்டைவிட்டுக் கிளம்பினோம். முன்னதாக 2008இல் கிளம்பியபோது சரியாகத் திட்டமிடாதது தெரிந்தது. அன்று காமத்தை அடக்கிவிட்டதாகக் கூத்தாடி சட்டென கிளம்பியிருந்தோம். காவி உடுத்தி ருத்ராட்சம் அணிந்து கொண்டோம். அம்மாவை யார் பார்த்துக் கொள்வார்கள் எனும் நினைப்பு வந்து திண்டாடினோம். யாரிடமும் உணவு கேட்கக்கூடாது, அவர்களாகக் கொடுத்தால் மட்டுமே வாங்கிக்கொள்ள வேண்டும் எனத் தீர்மானம் செய்திருந்தோம். கோதண்டராமர் கோவிலில் சுண்டல் கிடைத்தது. கணவர் இன்னும் கொஞ்சம் கொடு எனச் சொல்லியபோதும் மனைவிக்கு அள்ளிக்கொடுக்க மனம் வரவில்லை. ஐயப்பன் கோவிலில் இரவு அரைமூடி தேங்காய் கிடைத்தது. முன்னமே வந்திருந்தால் சாமிக்கு பிரசாதம் கிடைத்திருக்குமே என அங்கிருந்த நல்ல மனிதர் வருந்தினார்.

தேநீர்க் கடையில் வேலை பார்த்த எளியதொரு புண்ணிவான் மட்டுமே தேநீரும், இரண்டு வடையும் கொடுத்தார். இன்னும் வேண்டுமா வேண்டுமா எனக் கேட்ட அந்த மாமனிதர் போன்றோராலே மழை பெய்கிறது போலும்.

மூன்று நாட்களாக நடந்துகொண்டே இருக்கிறோம். பசி. மாபெரும் பசி. தாங்காத தாகம். மதிய வெயிலுக்கு ஒரு நிழற்குடையில் படுத்திருக்கிறோம். காகங்கள் அங்குமிங்கும் பறந்து திரிகின்றன. எமக்கு அருகில் சிறியதொரு வறுத்த கடலைப் பருப்பு பொட்டலம் கிடக்கிறது. சற்று முன்னர் பார்த்தபோது இல்லையே என ஒரே வியப்பு. நாலைந்து பருப்பு தின்ற பின்னரே காகம் கொண்டுவந்து போட்டிருக்குமோ எனும் எண்ணம் வந்தது. காகம் மூலம் எமக்கு கடலைப்பருப்பு கொடுக்கிறாயா கண்ணா என அங்கேயே வைத்து விட்டுக் கிளம்பினோம்.

தாளாத தாகத்தில் ஒரு வீட்டிலிருந்த பெண்ணிடம் தண்ணீர் கேட்டோம். அந்தப் பெண்ணோ கணவரிடம் சொன்னார். கணவர் எமக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு, தண்ணீர் கேட்டால் கொடுக்க மாட்டாயா என மனைவியைச் சத்தம் போட்டார்.

தொடர்ந்து நடக்கிறோம். ஒரு கட்டத்தில் இனியும் முடியாது எனும்நிலை வந்து விட்டது. அடுத்து ஒரு அடி வைத்தாலும் மயங்கி விழுவோம் எனத் தெரிந்தது. அருகிலிருக்கும் நகரத்துக்குச் செல்லலாம் எனில் பேருந்துக்குக் காசு வேண்டுமே. அருகில் ஒரு கிராமத்தின் நுழைவில் சில பேர் நின்றுகொண்டிருந்தார்கள். கண்ணன் படம் போட்டு யாதவர் என பெயர் தட்டி வைத்திருந்தார்கள்.

எப்படி கேட்பது. காசு கொடுங்கள் என எப்படிக் கேட்பது கண்ணா. பிட்சை எப்படிக் கேட்பது. யாம் பேராசிரியரல்லவா. இல்லை எனச் சொல்லிவிட்டால். வெட்கமில்லாமல் பிச்சை எடுக்கிறாயே எனக் கேட்டுவிட்டால்.

சார் பஸ்ஸுக்கு போகணும். கொஞ்சம் காசு தரமுடியுமா. கொடுத்தார் கண்ணா. ஒன்றுமே சொல்லாமல் அந்த உயர்ந்த மனிதர் பத்து உரூபா கொடுத்தார். நன்றி சார்.

பேருந்துக்காக நிற்கிறோம். அழுகையை அடக்கவே முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுகிறோம். கழுத்தில் கிடந்த ருத்ராச்சத்தைக் கழட்டி வீசினோம். அன்பில்லை கண்ணா. உலகில் அன்பு தொலைந்து விட்டது கண்ணா. உலகில் உண்மையான அன்பை வளர்க்கவேண்டும் கண்ணா.

2008வரை யாம் பெரும்பாலும் ருத்ராக்கம் அணிந்தே இருந்தோம். 2001 ஜூலை 4 முதல் 2007 ஏப்ரல் 30வரை யாம் திருவண்ணாமலை அரசுக் கல்லூரியில் பணிபுரிந்தோம். திருவண்ணாமலையில் இருந்த காலத்தில் சிவனது பெரும் பக்தனாகவே வாழ்ந்தோம். தினமும் இரவு வீட்டருகே இருந்த எமலிங்கம் சென்று வணங்கிவிட்டே உணவருந்துவோம். அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் அடிக்கடி செல்வோம். இரவு உண்ணாமுலை அம்மனை பள்ளிகொள்ளக் கொண்டு செல்லும்போது நாங்களும் கூடவே செல்வோம். பால் பிரசாதம் பெற்ற பின்பே வருவோம். ரமணாசிரமம் சென்று பக்தர்களோடு அமர்ந்து அருணாச்சலமென அகமே நினைப்பவர் அகத்தை வேரறுப்பாய் அருணாச்சலா எனப் பாடி உட்கார்ந்திருப்போம். அருணாச்சலா போற்றி பாடிக்கொண்டே முழுநிலவுக்கு கிரிவலம் வந்ததை மறக்க முடியுமா. நேரம் கிடைக்கும் போதெல்லாம் மலைசுற்றும் பாதையில் அண்ணாமலையை நோக்கியவண்ணம் அமர்ந்திருந்தது உண்மைதானே.

கல்லூரியில் அருமையான நண்பர்கள் கிடைத்தார்கள். ஒன்றாகச் சுற்றித் திரிந்தோம். மனம்விட்டுப் பேசினோம். ஒருமுறை யாருமே ஏறியிராத வழியில் நண்பரோடு சேர்ந்து அண்ணாமலை உச்சியை அடைந்தது மிக இனிய அனுபவம். 2003 இல் மறுபடியும் தீவிரமான எண்ணங்களுக்கு ஆளான சமயத்தில் மொத்த கல்லூரி நண்பர்களும் எம்மை அன்போடு பார்த்துக் கொண்டார்கள். எமது குழந்தைகள் திருவண்ணாமலையிலேயே பிறந்தார்கள். மனைவியோடு சண்டைகள். மாமனாரோடு மனக் கசப்புகள். கடன் தொல்லைகள். ஆனாலும் யாம் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தோம். அன்புத் தந்தையாம் சிவன் எம்மை அன்போடு தாங்கினார். அம்மாவோ அன்பைப் பொழிந்தார். பெருமை மிக்க ஊர். அன்பு நிறைந்த மக்கள். ஆனாலும் ஏதோ ஒன்று மனத்தின் ஆழத்தில் அமைதியிழந்து தவித்துக்கொண்டிருந்ததை யாம் அறிந்தேயிருந்தோம். 2002 ஆம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் யாம் பணியிடமாறுதலுக்கு விண்ணப்பித்தும் வந்தோம்.

2008வரை யாம் சிவ வாழ்க்கை வாழ்ந்தோமா. யாம் எம்மை என்றுமே கடவுள் எனக் கருதிக்கொண்டதில்லை. அதற்கேற்ப காரியங்களை ஆற்றவும் இல்லை. ஆனாலும் யாம் யார், யாம் கடவுளெனில், யாம் கண்ணனின் பத்தாவது அவதாரமெனில், நாம் யார் எனும் கேள்வியை ஒருபோதும் விட்டதில்லை.

அன்று கழட்டிய ருத்ராக்கத்தை மறுபடியும் யாம் அணியவில்லை. 2008முதல் 2018வரை வாழ்ந்த பத்தாண்டு வாழ்க்கை பிரம்ம வாழ்க்கையோ. அனைத்தையும் அறிந்த நாராயணர் இதையும் அறிவாரல்லவா. யாம் பிரம்மனா. அதனால்தான் ஆரம்பகாலம்தொட்டே பதிய உலகம் படைக்கவேண்டும் என பெருவிருப்புக் கொண்டிருக்கிறோமா. 2003-ன் ஆன்மீக மாற்றங்களின்போது, அங்கிருந்த பிரம்மம் எனும் புகழ்பெற்ற  யோகியை நண்பர்கள் வீட்டிற்கு அழைத்து வந்திருந்தார்கள். எமது கையைப் பிடித்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தார். சில இடங்களில் தொட்டுப் பார்த்தார். அணுவுக்குள் போயிட்டீங்க, அடிய கண்டுபிடுச்சிட்டீங்க என்றார்.  எமக்கோ தாளாத ஆச்சரியம்.  உண்மையில் அப்போது யாம் அணு குறித்த ஓயாத சிந்னையில்தான் இருந்தோம். கையை மட்டும் பிடித்துப் பார்த்து எமது மனதிலிருப்பதை யோகி எப்படி சரியாக அறிந்தார்.. மனதிலிருப்பதை எப்படி பிரம்மம் அறிந்தார் எனும் ஆவலில், பிரம்மத்தின் யோக வகுப்பிற்கு இரண்டு நாட்கள் சென்று வந்தோம்.

வகுப்பிலிருந்த வெள்ளைக்காரப் பெண்களைக் கண்டு வெட்கப்பட்டு, யோகியின் வகுப்பிற்கு தொடர்ந்து செல்வதை நிறுத்திக்கொண்டோம்.

யாம் கண்ணனெனில் அடியும் முடியும் அறியவேண்டுமோ. முன்னும் பின்னும் காணவேண்டுமோ. அடி முடி காணா அண்ணாமலை யார். விஷ்ணுவாலும் பிரம்மனாலும்கூட அடியையும் முடியையும் அறிய முடியாதா. கண்ணனால் முடியாதா. அறிவால் முடியாததென்று உலகில் ஏதுமுண்டோ. முயன்றால் முடியாதது எது. ஏன் விஷ்ணுவும் பிரம்மனும் அடி முடி காண்கிறார்கள். ஏதேனும் மறைபொருள் உள்ளதா. சொல்லப்பட்டது குறியீட்டு அர்த்தம் கொண்டதோ. கேள்வியின் நாயகனே கிருஷ்ணா..

அன்பை அறிவால் வெல்ல முடியுமா. அன்பு நிறைந்த ஒருவரை அறிவுள்ளவர் தம் அறிவு கொண்டு எளிதாக வெற்றிகொள்ளக் கூடும். எனில், அது வெற்றியாகுமா. அன்பிற்கும் அறிவிற்கும் போட்டி எனில், எது வெல்லும். அன்பை அறிவால் வெல்ல முடியுமா. உலகில் உயர்ந்தது எது. அன்பா.. அறிவா.. உலகில் சிறந்தது எது. உலகில் மதிப்பு மிக்கது அறிவா, அன்பா.

விஷ்ணு சிவன் பாதம் பணிந்தாரா. பாதம் பணிந்துதான் விஷ்ணுவால் அடியை அறிய முடியுமா. அன்புதான் உலகில் பெரியதா. உலகம் அன்பால் தாங்கப்படுகிறதோ. சிவன் அன்பானவரா. எத்தனை அன்பானவர். எவ்வளவு அன்பு நிறைந்தவர் சிவபெருமான்.

வீரம்.. உலகில் வீரத்திற்கான மதிப்பு. உலகை வீரத்தால் வெற்றிகொள்ள முடியுமா. வீரத்தால் வென்றவர் உண்டா. இசுலாமியர் வென்றாரே. அய்ரோப்பியர் வீரத்தால் உலகையே பிடித்தாரே. அறிவால் உலகையே ஆண்டாரே.

உலகின் நிலத்தையெல்லாம் வென்ற ஐரோப்பியரால் மக்களின் மனங்களை வெல்ல முடிந்ததா. உலகினர் மனங்களை வெள்ளையரால் வெல்ல முடிந்ததா. கேயேந்தி நின்றவரை கொன்று குவித்தது வீரமாகுமா. கம்போடு எதிர்த்தவரை துப்பாக்கியால் துளைத்தது மறமாகுமா. எப்படியாவது வெற்றி, எவ்வகையிலாவது வெற்றி, என்னசெய்தாவது வெற்றி வெற்றிகளாகுமா. வீரத்தால் உலகை வெற்றிகொள்ள இயலுமா.

கருணை என்பது என்ன. இறைவன் கருணை நிறைந்தவரென்பதும், கருணையே வடிவானவர் என்பதும் உண்மையா. உலகில் கருணைக்கு ஏதேனும் மதிப்புண்டா.

அணுவை அறிந்தவர் ஐரோப்பியரல்லவா. எப்படி அறிந்தார் ஐரோப்பியர்... ஐரோப்பியரால்தானே உலகம் ஒன்றானது. சின்னஞ்சிறு ஊரென உலகை மாற்றியது யார். அறிவால் முயன்றாரோ. வானை அறிந்ததும் ஐரோப்பியரல்லவா. உலகின் ஒட்டுமொத்த அறிவையும் வாரி வழங்கியது அய்ரோப்பிய நிலமல்லவா. அறிவால் முடியாது எனவுண்டோ.

அறிவு என்றால் என்ன. அறிவு என்பதன் மெய்ப்பொருள் யாது.. அறிவும் ஞானமும் ஒன்றா. வேறா. வேறு எனில் வேறுபாடு எத்தகையது, எவ்வளவு.

அறிவு ஒன்றா. பலவா. சுயநல அறிவு என்பது என்ன. சந்தர்ப்பவாத அறிவு எத்தகையது. பொதுநல அறிவு எத்தன்மையது. வணிக அறிவு உள்ளதா. அறிவை விற்கமுடியுமா. அறிவு விற்பனைப் பொருளா. பொதுநல அறிவுதான் ஞானமா. அய்ரோப்பியர் அறிவுடையவரா. உண்மையெனில், அய்ரோப்பியர் ஞானமுடையவரா. ஐரோப்பியர் அறிவை விற்றாரா ஞானமாக்கினாரா. அறிவை காசு, பணம், நிலமாக்கினாரா அல்லது அறிவை பொதுவுடைமையாக்கினாரா. அய்ரோப்பிய இலக்கிய கர்த்தாக்களின் அறிவு எத்தகையதாக இருந்தது. அறிவை பொதுவுடைமையாக்கினாரா. ஞானமாக்க முன்வந்தாரா.

ஒருவர் அறிவால் பெறும் அனைத்தையும் அன்பாலும் பெறமுடியுமா. அன்பானவர் வாடும் பயிரைப் பார்த்து தாமும் வாடுவார். அன்பு நிறைந்தவர் நோயாளியைக் கண்டு இரக்கம் கொள்வார். அறிவானவர் பயிர் ஏன் வாடுகிறதென்பதை ஆராய்வார். காரணம் என்னவாக இருக்குமென்பதை அறிவார். தண்ணீர் பற்றாக்குறையால் பயிர் வாடினால் தண்ணீர் பெற முயற்சிப்பார். தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடுவார். மாற்று வழிகளை சிந்திப்பார். பயிரை விளைவிக்க தீவிரமாக முயல்வார். மகசூலைப் பெருக்கி மக்களின் பசிப்பிணியையும் போக்குவார். அழுது புலம்பிக் கொண்டிருக்கமாட்டார். அப்படியும் முடியாவிட்டால் அதை அனுபவமாக்கி அடுத்த வருடத்திலாவது நன்கு விளைவிக்க வேண்டுமெனத் திட்டமிடுவார். அறிவானவர் நோயைக் கண்டு கலங்க மாட்டார். எந்த நோய்க்கு என்ன மருந்து

கொடுத்து குணப்படுத்த வேண்டுமென்பதை ஆராய்வார். மருத்துவசாலைகள் அமைப்பார். மக்களின் நோயற்ற வாழ்வை உறுதிசெய்வார். நோய்வந்தவரோடு தாமும் சேர்ந்து புலம்பிக்கொண்டிருக்க மாட்டார்.

அன்பு இரக்கங்கொள்ளும். கலங்கும். ஏங்கும். அழும். மயங்கும். விரும்பும். ஆசைப்படும். அறிவு கலங்காது. அழாது. மயங்காது. ஆசை விலக்கும். தேடும். கண்டடையும்.

அவ்வாறெனில் அறிவுதான் சிறந்ததா. உலகம் அன்பையே சிறந்ததாகக் கண்டுகொண்டிருக்கிறது. அறிவு முயன்று கண்டடையும் அனைத்தையும் அன்பு மிக எளிதாகக் கண்டறியும். அறிவு தேடிக்கண்டடையும் அனைத்தையும் அன்பு இருந்த இடத்திலிருந்தே கண்டு தெளியும். இதெப்படி சாத்தியம். உண்மைதானா.

பயிர்கள் கருகுகின்றனவே, விளைச்சல் இல்லையெனில் மக்கள் பசிக்கு ஆளாவரே, உணவில்லையெனில் உயிர்கள் அழியுமே, தர்மம் குறைந்து போகுமே. இறைவா.. மழையைக் கொடு.. உயிர்களுக்கு அமுதமான மாரித்தாயே.. மண்ணில் இறங்கு. பெய்யுமா. ஏன் பெய்யாதா. பெய் எனில் பெய்யும் மழை.. தமிழர் கேள்விப்பட்டதில்லையா. மும்மாரியில் கற்புடைய பெண்டிருக்கென்று ஒரு மழை என்பது சான்றோர் சொல்லன்றோ.

பெண் அன்பானவளா. கற்புடைய பெண் அன்பானவளா அறிவானவளா. அன்பான பெண்ணெனில் கற்போடு இருக்கமுடியுமா. எப்படியாவது என இரந்தும் ஆணை பெண்ணால் எட்டித்தள்ள முடியுமா. மனவலிமை மிகுந்தவர் ஆணா பெண்ணா. மனமுதிர்ச்சி மிகுந்தவர் ஆணா பெண்ணா. இரக்கம் மிகுந்தவர் ஆணா பெண்ணா. பேராசை நிறைந்தவர் ஆணா பெண்ணா.

அறிவு அன்பாவதே ஞானம் எனலாமா. சரியாக இருக்குமா. உண்மையெனில் ஐரோப்பியர் அறிவு அன்பானதா. அன்பாக மாறியதா. ஐரோப்பியர் உலகில் அன்பை வளர்த்தாரா. சென்ற இடங்களிளெல்லாம் அன்பைப் பெருக்கினாரா. துப்பாக்கியாலும் பீரங்கியாலும் அயலவர் மண்ணைப் பிடித்துக்கொண்டு என்னமாய் அன்பைப் போதித்தார். பிதாவே இவர்களை ரட்சியும். அய்ரோப்பியர் அன்பையும் பரப்பினார் எனில் அதில் ஒளிந்துகொண்டிருப்பது மதமல்லவா. மறுக்கமுடியுமா.

ஐரோப்பியர்களின் கர்த்தர் யாராக இருக்கும். பிரம்மனாக இருப்பாரோ.. அதனால்தான் அடியும் முடியும் அறியவைக்கப்பட்டார்களா. கர்த்தர் பிரம்மன் எனில் இயேசு யார். இயேசுதான் உண்மையான கடவுளா.. அறிவை முன்னெடுத்த அய்ரோப்பியர் இருதயத்தைத் திறந்துகாட்டும் இயேசுவை ஏதனால் ஏற்றுக்கொண்டார். எப்படி மனம் ஒப்பினார்.

யூதர்களின் கடவுளார். யூதர்களின் அறிவு எத்தன்மையுடையது. யூதர் அன்பானவரா. அறிவானவரா. வீரமானவரா. ஞானமுடையவரா.. யூதர் அறிவைப் பொதுவாக்கியதுண்டா. கடவுளை விட மனிதநேயத்திற்கே முதன்மை கொடுத்த மார்க்கை யூதராக உலகம் ஒப்புமா.

அல்லாவிற்கு இணையே இல்லை எனும் இசுலாமியரின் பக்தி எப்படிப்பட்டது. அல்லாவைத் தவிர வேறு கடவுளே இல்லையா. கடவுள் ஒன்றா. ஒருவர்தான் கடவுளாக இருக்கமுடியுமா. கடவுள்கள் சாத்தியமே இல்லையா. அப்பா அம்மா என இருவர் இருக்கும்போது, கடவுளிலும் இருவர் இருக்கக்கூடாதா. ஒன்றே ஏன் இரண்டாகவும் இருக்கக் கூடாது. மூன்றாகவும் இருக்க முடியாது. ஏன் அல்லா படிக்காத நபியைத் தேர்ந்தெடுத்தார். உருவ வழிபாடு ஏன் இல்லாமலாக்கப்பட்டது. அல்லா யார்.

குதிரையில் வந்தார்களல்லவா. குதிரையில் வாளெடுத்து வருவான் என்றதால் சிலர் பத்தாவது எனவும் பேசுகிறார்கள். பத்தாகுமா. பெயரெங்கே. குணமெங்கே.

ஏன் கிறித்தவத்துக்கும் இசுலாமுக்கும் இவ்வளவு பகை. சிந்தாந்தத்திற்கா. மதப் பரப்பலில் போட்டியா. நாடு பிடிப்பதில் சண்டையா. வணிகப் பகையோ. யார் கடவுள் பெரியவர் என்பதற்காக இருக்கலாமோ. யார் பேரியவர், எவர் சிறந்தவர் என்பதில் போட்டியா. உயர்ந்தவர் யார் எனச் சண்டையா. போட்டிக்கு பிரம்மன் சிவன் காரணமா. வேறாரும் உண்டா. சூரிய சந்திரப் போட்டியாகவும் இருக்கலாமோ. இசுலாம் சந்திர வழியைப் பின்பற்றியதற்கு நோக்கம் இருக்குமோ. பெர்சியாவின் சூரிய வழிபாட்டை முடித்ததும் சந்திர மார்க்கமல்லவா.

அண்ணன் தம்பி மதங்கள்தானே. ஒரே பெயர். அங்கே ஆப்ரகாம். இங்கே இப்ராகிம். அதே படைப்புக் கோட்பாடு. அங்கே நோவா. இங்கே நுவா. ஒன்றில் சாலமன் எனில் இன்னொன்றில் சுலைமான். சிலைமானும் உண்டு. ஆனாலும் சிலை வணக்கம்

இல்லை. ஒன்றில் அறவே இல்லை. மூத்ததிலோ பெரியளவில் உண்டு. அதிலும் கிராஸ் மட்டும் எனவும், ஸ்பிரிட் மட்டுமே எனவும் பலதுகள்.

அண்ணன் தம்பி மதங்களுக்கும் கணபதி முருகன் அண்ணன் தம்பிகளுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா. போட்டி பழத்திற்கு மட்டும்தானா. தந்தை, மகன்கள் எனில் கணக்கு சரியாக வருகிறதல்லவா. முதல் மனிதன் யாராக இருக்கும். படைத்தது நான்முகனா. முதல் மனிதன் சிவனா. முதல் பெண் அம்மையா.

ஏன் இசுலாமியரும் ஐரோப்பியரும் இந்தியாவிற்கு ஓடோடி வந்தார். பாரதத்தை வெற்றிகொள்ள முசல்மான்களும், ஈரோப்பியக் கனவான்களும் துடியாய்த் துடித்தது ஏன்.. பாரத தேசத்தை வெற்றிகொண்டால் மாபாரதத்தின் இறைவன்களையும் வெற்றிகொண்டதாகும் என்பதாலா. வந்தாரா அல்லது வரவைக்கப்பட்டாரா. பாரதத்தின் கடவுள்கள் யார். சிவன் பிரம்மன் விஷ்ணு எனும் மூவரும், முத்தேவியருமா. பாரதத்தின் நிலமெங்கும் நிறைந்திருக்கும் கணக்கிலடங்கா தெய்வங்கள் யார்.

சிவன் பிரம்மன் விஷ்ணு மூவரும்தான் கடவுள்களா. மூவரும் ஒன்றா. நண்பர்களா. பெரியவர் யார் எனப் போட்டி போடுவார்களோ. போட்டியா. சண்டைதானா. விளையாட்டாக இருக்குமோ. ஒருவர் திருவிளையாடல்காரர். ஒருவர் தீராத விளையாட்டுப்பிள்ளை. விளையாட்டுப்போல் தெரியவில்லையே. உடையவர் ஓடி ஒளிந்தாரல்லவா. நம்பெருமாளையே தூக்கிக்கொண்டு ஓடினார்களாமே. வந்தவர் அத்தனை வீரமானவரா. எப்படி வந்தது வீரம். யார் கொடுத்த வீரம். ஈரேழு புவனங்களையும் அளந்தவர், ஆள்பவர் என்பதெல்லாம் கதையோ. வீரத்தின் வடிவமாகப் புகழப்பட்ட சோமநாதர் பட்டபாடு கொஞ்சமா நஞ்சமா. எப்படி சாத்தியமானது. வீரம்தான் பெரிதோ. உலகில் பெரிதினும் பெரிது அறிவோ.

அங்கு ஓயாத சண்டைகள். பெரும் போர்கள். ஈராயிரம் ஆண்டு கடந்தும் இன்னும் தொடர்வது உண்மைதானே. இங்கு மூவருக்குள் கடும் போட்டி. அங்கு.. மூவருக்குள் கடும் யுத்தம். இங்கும் அங்கும் ஒத்த போட்டி, சண்டை எனில், இவரும் அவரும் ஒன்றாகுமா.

மூவரையும் பெரிய நடிகர்கள் என்றல்லவா பாரதமண் பேசுகிறது. ஒருவர் தூங்குவது போல் நடிப்பதில் மகா சமர்த்தர். ஒருவர் வேடம் போட்டு கூத்தாடுவதில்

பெரிய கெட்டிக்காரர். நாடகமொன்றில் ராஜா வேசம் போட்டாராம் விவசாயி. கூத்தில் ராஜாவாக இருந்தால் உண்மையான ராஜாவாகிவிடுவாரா. காலையில் வேடம் களைந்து வயலுக்குப் போய்த்தானே ஆகவேண்டும்.

வேடம் களையத்தான் போகிறது தந்தையரே..

பாரத மண்ணின் முத்தேவியர் பெருமை என்ன. கல்விக்கும் செல்வத்திற்கும் வீரத்திற்கும் இந்திய நிலமெங்கும் வணங்கப்படும் மூவரும் யார். தோழிகள்தானே.. மேற்கின் கடவுள் கொள்கை  பெண் கடவுளருக்கு இடமளிக்காதபோது, கிழக்கோ இணை வைத்துப் போற்றுவது எதற்காக. ஆணும் பெண்ணும் ஒன்று என்பதாலா. ஒன்றே இரண்டாக இருப்பதாலா.

அரியும் சிவனும் ஒண்ணு அறியாதவர் வாயில மண்ணு. ஏன் சொல்லப்பட்டது. ஒன்றுதானா. ஆறாம் நூற்றாண்டில் தமிழகம் எப்படி இருந்தது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் யார். அரியாலும் அயனாலும் அறியப்பட முடியாதவர் என  விடாமல் எடுத்துரைத்ததன் நோக்கம் என்னவாக இருக்கும். சொல்லியது உண்மைதானா. நான்முகனுக்கு யாரும் இல்லையா. சமணமும் பௌத்தமும் யாரால்.

அனைத்தும் யாமே எனக் கண்ணன் சொன்னதன் பொருள் என்ன. அனைத்தும் கண்ணன்தானா. அனைத்துக் கடவுள்களும் கண்ணன்தானா. எல்லாமே கண்ணனோ.

கண்ணன் உலகை அளக்கிறான் எனில் அனைத்தையும், அனைவரையும், அத்தனை கடவுள்களையும் வெற்றிகொள்கிறான் எனப் பொருளா. ஏன் உலகை அளக்கிறான் கண்ணன். எப்போதெல்லாம் உலகளக்கிறார் பெருமாள்.

ஈரடியால் உலகளந்த கண்ணனுக்கு ஓரடியால் அளக்க முடியாதா. காலைத் தூக்கித்தான் அளக்கவேண்டுமா. காலைத் தூக்காமல் அளப்பது கண்ணனுக்கு கடினமா.

உலகின் அடி எது. முடி எது. உலகம் யாருடையது. உலகை சொத்தாகக் கொண்டிருப்பவர் யார். பசுக்கள் யார். பசுக்கூட்டத்தை மேய்ப்பவன் யார். நல்ல மேய்ப்பான் எவன்.

பாரதமண் அன்பில் சிறந்ததா. அறிவிலா. பாரதத்தின் புகழுக்குக் காரணம் வீரமா. ஞானமா. ஞானத்தில், உயர் ஞானத்தில் சிறந்தது பாரதம் எனில் காரணம் யார். எதனால் பாரத பூமி ஞானத்தில் சிறப்புற்றிருந்தது. உலகிற்கு ஞானத்தை வாரி வாரி வழங்கிய பாரதம் ஞானம் குறைந்து, ஞானம் நலிந்து போனதற்குக் காரணமென்ன. அயலவரா. வேதத்தாரா. வேற்று மொழிக்காரரா. பேராசைக்காரராலா.

பேராசைக்காரரும், பேராசைபிடித்தோரும், சிறுமதியாளரும், மதிகெட்டவரும், மூடரும், அவசரக்காரரும், கோவக்காரரும், திருடரும், கொள்ளைக்காரரும், குற்றம் புரிவதில் விருப்புள்ளோரும், போகத்தில் திளைப்போரும் உலகை வென்றால் என்னாகும். உலகம் எப்படி இருக்கும். மக்கள் என்னாவர். உயிர்கள் நிலை.

அறிவை பேடன்ட் பண்ணுவதற்கா பாரதத்தின் ஞானியர் காடுகளில் அலைந்தும், வனங்களில் உலவியும், உண்ணாமலும் உறங்காமலும் உண்மைகளைக் கண்டுபிடித்துத் திரிந்தனர். ஒப்பற்ற பாரத ஞானத்தை கடைச்சரக்காக்கி காசுக்கு கூவிக்கூவி விற்கவா பாரதத்தின் தவசீலர்கள் ஆரண்யகங்களில் வாழ்ந்தனர். அண்டத்தின் இரகசியங்களை அறிந்தும் அது மூடர்களின் கைகளுக்குப் போய்விடக்கூடாதே என அனைத்தையும் மறைபொருளாக்கிய அந்த மாமுனிவர்கள் எங்கே.. கொஞ்சம்கூட வெட்கமே இல்லாமல் அந்த மாணிக்கங்கள் அரும்பாடுபட்டு சேர்த்த ஞானத்திற்கு ராயல்டி கேட்கும், வாங்கும் பேராசைக்காரர்கள் எங்கே. வேடம் தரித்தால் முனிவராகிவிட முடியுமா. முனிவராவது அத்தனை எளிதா பாரதீயத்தாரே.

பாரதீய நாடு எதை நோக்கி ஓடுகிறது. யார் பின்னால் ஓடுகிறது. இப்படி ஓடவா இத்தனை ஞானம். இதற்கா இத்தனையாயிரம் தெய்வங்கள். பெருங்கடவுள்கள். எங்கே போகிறது பாரதம். நிலவுக்கா. பின்னர். செவ்வாய்க்கா. அதன் பின்னர். பக்கத்து சூரியனுக்கா. அதையும் கடந்து பால்வீதிக்குச் செல்லுமோ பாரதம். எதற்கு இத்தனை ஓட்டம் ஞானமுள்ள பாரதீயரே. ஓட்டம் நிற்காதா. ஏன் எதற்காக ஓடுகிறோம் எனக் கேள்வி வராதா.

என்றுதான் உண்மையை அறிவது. குறைந்தது எதற்காக ஓடுகிறோம், இலக்கு எது என்பதையாவது அறிந்திருக்க வேண்டுமல்லவா. அவர் ஓடுகிறார். அவரைப் பார்த்து பாரதீயரும் ஓடுகிறார். அவர் அறிவை விற்கிறார். பாரதீயரும் விற்கிறார். அவர்

ஞானத்தை காசாக்குகிறார். நகையாக்குகிறார். பாரதீயரும் விற்பார். அவர் எதற்கோ ஓடுகிறார். பாரதீயரும் அவர் பின்னால் ஓடுவார்.

அவர்க்கு எதிலேயும் போதும் எனத் தோன்றாது. பாரத தேசத்தவரோ அனைத்திலும் நிறைவு காண்பார். போதும் எனும் மனம் கொண்டோர் பாரத தேசத்தார். அவர்க்கோ எதிலும் போதாமை.

கிழக்கு அனைத்திலும் பொதுமை காணும். அனைத்தையும் பொதுவில் வைக்கும். கிழக்கு கூட்டை விரும்பும். கிழக்கிற்கு எப்போதும் நாமே பெரிது. கிழக்கிற்கு அன்பான இதயம். மேற்கோ அனைத்தையும் தனித்தே நோக்கும். எங்கும் தனித்திருக்கும். எதிலும் கூட்டு சேராது. எப்போதும் தாம் என்பதே மேற்கின் மொழி. மேற்கின் மூளை அறிவானது.

கிழக்குக்கு விருப்பமானது மண். மேற்கின் விரும்பமோ விண். கிழக்கிற்கு அனைத்தும் தெய்வம். மேற்கிற்கு ஒன்றே தெய்வம். பெண்ணைக் கொண்டாடுவது கிழக்கு. பெண்ணை போகமென நினைப்பது மேற்கு. இயற்கையோடு இணைவது கிழக்கு. இயற்கையை எதிர்ப்பது மேற்கு.

கிழக்கும் மேற்கும் ஒன்றா. ஒரே நாணயத்தின் இரு பக்கங்களா. ஆம் எனில் ஏன் இரண்டு.. இரண்டும் ஏன் ஒன்றுக்கொன்று மாற்றாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் போல. கிழக்கை பெண் என்றால் மேற்கை ஆண் எனலாமா. ஏன் கிழக்கு ஆணாகவும் மேற்கு பெண்ணாகவும் இருக்கக்கூடாது.. மனித மூளை ஒன்றா. ஒன்று எனில் எதற்காக இரண்டாக இருக்கிறது. சிறுமூளையும் பெருமூளையும் ஒன்றா. ஒரே மூளையா. ஒன்றா வேறுபாடு கொண்டதா. ஒன்று எனில் மூளை அறிஞர் ஒப்புவரா. மூளை ஏன் முன் மூளை பின் மூளை நடு மூளை எனப் பிரிந்திருக்கிறது.. அதன் செல்கள் ஏன் புறப்படை, நடுப்படை. அகப்படை எனப் பிரிகின்றன. அது ஏன் மூன்று அடுக்குகள்.. ஒரடுக்குக் கருக்கோளம் எதனால் மூன்றடுக்குக் கருக்கோளமாக மாறுகிறது. ஒத்த செல்கள்தான். ஒரே அமைப்புக் கொண்டவைதான். ஒரே கருவிலிருந்தும் உண்டானவைதான். இருந்தாலும், எப்படி புற அடுக்குச் செல்கள் மட்டும் மூளை மண்டலமாக மாறுகின்றன.

கிழக்கை p எனில் மேற்கை q எனலாமா. p யும் q வும் ஒன்றா. p தான் q வா. q தான் p யாக இருக்கிறதா. p எதிர் q வா. q வின் மறுவடிவம் p யா.

p q ஒன்றா இரண்டா. இரண்டும் ஒன்றேவா. அத்வைதமா. துவைதமா. இரண்டிற்கும் ஏதேனும் விஷேசம் இருக்கிறதா. p ஆண் எனில் q பெண் எனலாமா. p q ஒன்று எனில் ஆணும் பெண்ணும் ஒன்று எனலாமா. ஆணின் எதிர் வடிவம் பெண்ணா. பெண்ணின் மாற்றுரு ஆணாகுமா. இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர் எனலாமா. எதிர் தானே. எதிரி இல்லையே.

p யும் q வும் இணைந்து ஒன்றாவதாகக் கொண்டால் p + q = 1 என வைத்துக்கொள்ளலாமா. ஆணின் அரையும் பெண்ணின் அரையும் இணைந்து ஒன்றாகிறது. இரண்டும் ஒன்றாகும் போது முழுதாகிறது. ஒன்றாகிறது. உலகம் ஒன்றுதான். இரண்டாகப் பிரிந்திருக்கிறது. உலகம் இரண்டாக இருக்கிறது. இரண்டும் ஒன்றே.

போற்றுதலுக்குரிய கணிதமேதை சீனிவாச இராமானுசனைக் கண்டறிந்தவராகப் புகழப்படும் இங்கிலாந்தின் கணித அறிஞர் ஜி.ஹெச். ஹார்டி மற்றும் ஜெர்மனியின் மகப்பேறு மருத்துவரான வெய்ன்பெர்க் பெயரால் அறியப்படும் ஹார்டி - வெய்ன்பெர்க்கு தத்துவம் p + q = 1 என அறுதியிடுகிறது. அதாவது ஒரு இனக்கூட்டத்தில் காணப்படும் மரபணு சமநிலையைக் கண்டறிய ஹார்டி - வெய்ன்பெர்க்கு விதி பயன்படுகிறது.

உயிரினங்கள் செல்களால் ஆக்கப்பட்டுள்ளன. செல்கள் எனில் சிற்றறைகள் என அர்த்தம். உடல் செல்கள் சிறு சிறு அறைகள் போன்று மிகவும் நெருக்கமாக அமைந்துள்ளன. செல்கள் அதாவது உயிரணுக்கள் எதனால் ஆக்கப்பட்டுள்ளன. அதனினும் சிறிய செல் உட்பொருட்களால். செல் உட்பொருட்கள். பல்வேறு வேதிப்பொருட்களால். அவ்வாறெனில் செல்களை வேதிப் பொருட்கள் எனவும் வேதிப் பொருட்களின் கூட்டமைப்பு எனவும் சொல்லலாமா. தாராளமாக.

வேதிப்பொருட்கள் என்பவை யாவை.. அணுக்களின் கூட்டமைப்பு. அணுக்களின் எண்ணிக்கைக்கேற்ப வேதிப்பொருட்களின் குணம் மாறும். ஹைட்ரஜனும் ஹீலியமும் அணுக்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டும் ஒன்றா.. ஒன்றுதான். இரண்டும் அணுக்கட்டமைப்பில் ஒன்று. இரண்டும் வேறா. ஆம். அணுக்களின் எண்ணிக்கையில் இரண்டுக்கும் மாறுபாடு இருக்கிறது. ஒரேயொரு புரோட்டான் கொண்டது ஹைட்ரஜன்.

ஹீலியத்தில் இரண்டு புரோட்டான்கள் இருக்கும். உயிர் வாயுவான ஆக்ஸிசன் எட்டு புரோட்டான்கள் கொண்டிருக்கும்.

அணுக்கள் இணைந்து முலக்கூறுகளாகின்றன. அணுக்கள் ஏன் இணைகின்றன.. அணுக்களில் போதாமைக் குணம் இருக்கிறது. அதிகமான போதாமைக் குணம் கொண்டது அதிகமாக வினைபுரியும். போதாமைக்குக் காரணம் வெளிச்சுற்றிலுள்ள எலெக்ட்ரான்கள். சோடியமும் குளோரினும் இணைந்து உப்பாவது முலக்கூறு சேர்க்கைக்கு சிறந்த உதாரணம்.

உயிருள்ளவை செல்களால் ஆனவை. செல்கள் வேதியல் முலக்கூறுகளால் ஆனவை. எனில், உயிருள்ளவை அனைத்தும் வேதியல் பொருட்களால் ஆனவை. ஆயின் உயிரற்றவை. உயிரற்றவையும் வேதிப்பொருட்களாலே உருவாக்கப்பட்டுள்ளன. உயிருள்ளவைக்கும் உயிரற்றவைக்கும் இருக்கும் ஒற்றுமை இரண்டும் வேதியல் கூட்டமைப்பு என்பது. வித்தியாசம். உயிருள்ளவை தொடர்ந்து வளரும். இனப்பெருக்கம் செய்யும். உடலினுள் வளர்சிதைமாற்றம் எனும் பல்வேறு வேதியல் மாற்றங்கள் நிகழும். உயிருள்ளவை புறத் தூண்டலுக்கு ஏற்றவாறு செயல்படும். உயிரற்றவை வளராது. ஒரு எழுதுகட்டி தம்மைப் போல இன்னொரு எழுதுகட்டியை ஒருபோதும் உருவாக்காது. மேஜை எத்தனை வருடமானாலும் இன்னொரு மேஜையை உண்டுபண்ணாது. உட்கார்ந்தால் நகராது. ஆணி அடித்தால் வலிக்கிறதென காலை இழுக்காது. ஆனால் தொட்டாற்சிணுங்கியைத் தொட்டால் உடனே இலைகளை மூடிக்கொள்ளும். இரயில் பூச்சியைத் தொட்டால் அப்படியே சுருண்டு படுத்துவிடும்.

புளியமரத்தின் இலைகள் ஏன் அந்தி சாயும்போது மூடிக்கொள்கின்றன.. மாலையாகிவிட்டது என இலைகள் எதைவைத்து அறிகின்றன.. வெளிச்சத்தை வைத்து எனில், இரவு போலவே செயற்கையாக வெளிச்சத்தைக் கொடுத்தால் இலைகள் மூடிக்கொள்ளமா அல்லது திறந்தே இருக்குமா. புளியமரமும், புளியமரத்தின் இலைகளும், சூரியனும் ஒன்றா. சூரியனும் சந்திரனும் ஒன்றா வேறுவேறா. பூமியும் சந்திரனும் சூரியனும் எதைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. வெதிப்பொருட்கள் தானே. அப்படியாயின் உயிருள்ளவை, உயிரற்றவை, பூமி வானம் என அனைத்துமே வேதிப்பொருட்கள் என்பது தெளிவு.

உயிர்கள் செல்கள் எனும் சிற்றறைகளால் ஆக்கப்பட்டுள்ளது போல் உலகம் சூரியன் எனும் நட்சத்திரங்களால் உண்டாக்கப்பட்டுள்ளது. உயிருள்ளவற்றின் அடிப்படை அலகு செல் எனில் உலகின் அடிப்படை அலகு நட்சத்திரம். உயிர்களையும் நட்சத்திரங்களையும் பொருட்களாகக் கொண்டால் உலகம் பொருட்களால் ஆனது எனவும் சொல்லலாம். பொருட்கள் ஆற்றலால் பிணைக்கப்பட்டுள்ளன எனில், உலகம் பொருட்களாலும், பொருட்கள் ஆற்றல்கொண்டும் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவு.

உயிரின் அலகான ஒரு செல்லின் அதாவது ஒரு உயிரணுவின் அமைப்பு, உலகின் அலகான ஒரு நட்சத்திரத்தின் அமைப்பு, உயிர்களையும் உலகையும் கட்டமைக்கும் ஒரு அணுவின் அமைப்பு எப்படி இருக்கிறது.. மூன்றின் தோற்றம் எத்தன்மையது.. ஒப்பிட்டுப் பார்த்தால். ஒற்றுமை வேற்றுமை என்ன. எவ்வளவு.

உயிரணுவை அறிந்தால் உலகை அறிந்ததாக ஆகுமா. அணுவை அறிந்தால் உலகை அறிந்ததாக பொருளாகுமா. அணுவுக்கு உள்ளும் புறமும் உண்டா. அணுவின் உள்ளும் சூரிய மண்டலத்தின் வெளியும் ஒன்றாகுமா. அணுவை மையமாகக் கொண்ட அணுக்குடும்பத்திற்கும், சூரியனை மையமாகக்கொண்ட சூரியக் குடும்பத்திற்கும் உள்ள ஒற்றுமைகள் என்ன. அணுவின் உட்கருவான நீட்ரானுக்கும், செல்லின் உட்கருவான நீக்ளியசுக்கும் உள்ள ஒற்றுமைகள் எத்தன்மையது. பிரபஞ்சமெனும் அண்டவெளியின் அமைப்பிற்கும், அணுவின் அமைப்பிற்கும், செல் உட்கருவின் அமைப்பிற்கும் ஏதேனும் தொடர்பிருக்குமா.

அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உள்ளது என்பதன் பொருளென்ன. அண்டத்தை p என்றால் பிண்டத்தை q எனலாமா. இரண்டும் ஒன்றாகுமா. ஒன்றை அறிந்தால் இன்னொன்றையும் அறிந்ததாக ஆகுமா. ஓன்றின் மாற்றுரு இன்னொன்றா.

மனித குலம் உருவாக்கியுள்ள சமூகம் என்பதன் பொருள் என்ன. அமைப்பு என்ன.. ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு எது. குடும்பம் எனில் குடும்பத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது.

குடும்பம் எனும் அமைப்பு ஏன் தோன்றியது. யாரால் தோன்றியது. எப்போது குடும்ப அமைப்பு உருவாகியது. மானிடகுலத்தின் அத்தனை உயர்வுகளுக்கும்,

மேன்மைகளுக்கும் குடும்ப அமைப்பே காரணமா. மானுட சமூகத்தின் முதல் குடும்பம் எது. குடும்பன் யார். குடும்பி யார். குடும்பனின் பிள்ளைகள் யார். சொந்தங்களாகப் பெரகிறது எப்படி.

குடும்பத்தைப் பிணைத்தது எது.

பசுவா. பதியா. பாசமா.

பதி யார். ரதி யார். மதி யார்.

உலகம் படைக்கப்பட்டது மதியா விதியா.

உலகம் படைக்கப்பட்டதா. உருவாக்கப்பட்டதா. தானே தோன்றியதா. தோற்றுவிக்கப்பட்டதா.

குடும்பம் எப்படி, எப்போது ஊரானது. எப்படி, எப்போது நாடானது. குடும்பத்தின் தலைவர் யாராக இருந்தார். நாட்டின் தலைவராக உருவானது யார். உயிர்களுக்கு மதியா விதியா.

குடும்பம் தெருவானதும், தெருக்கள் ஊரானதும், ஊர்கள் குலமானதும், குலங்கள் கோத்திரமானதும், கோத்திரம் சாதியானதும், சாதிகள் மதங்களானதும் யாராலே..

குடும்பம், ஊர், மாநிலம், நாடு, மண்ணுலகம், விண்ணுலகம் ஒப்பிடலாமா. ஒருவர் குடும்பத்தில் நடப்பதற்கும், ஒரு ஊரில் நடப்பதற்கும், நாட்டில் நடப்பதற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா. குடும்பத்தில் நடப்பதுதான் நாட்டில் நடக்கிறதா அல்லது நாட்டில் நடப்பதுதான் குடும்பத்தில் நடக்கிறதா. மண்ணில் நிகழ்வதுதான் விண்ணிலும் நிகழ்கிறதா. இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதா. ஒன்றையொன்று சாா்ந்துள்ளதா.

விண்ணை p என்றும் மண்ணை q என்றும் கொள்ளலாமா. இரண்டும் ஒன்றா. இரண்டும் சமமா. சமமில்லையெனில் மண் கூடுதலா விண் கூடுதலா. இரண்டுமே கூடுதலாக இருக்கமுடியுமா. ஒன்று குறைந்தால் இன்னொன்று கூடுமா. விண் பெரிதா மண் பெரிதா. மண்ணவர் யார். விண்ணவர் யார். மண்ணில் மட்டுமே உயிர்க்குலம்

உள்ளதா. விண்ணெங்கும் உயிர்கள் செழித்துள்ளனவா. விண்ணெங்கும் உயிர்கள் எனில் மண்ணின் பெருமை எது. மண்ணுயிர்களின் சிறப்பு எது. மனமா. மொழியா. காதலா. அன்பா. அறிவா. வீரமா.

மூளையின் அமைப்பு என்ன. நரம்பு செல்களான நியூரான்களின் மொழி எது.

செல்களின் மூளைதான் உட்கருவா. உட்கரு ஏன் முட்டைபோல் வடிவம் கொண்டுள்ளது. அண்டம் முட்டையா. தட்டுப்போல் உள்ளதா. தட்டையா. உருண்டையா. அடுக்கா. மணியா. நூலா. பாசிபோல் கோர்க்கப்பட்டுள்ளதோ. திருகாக இருக்கலாமோ.

உட்கரு அமிலம் ஏன் திருகு வடிவம் கொண்டுள்ளது. ஏன் இரட்டை திருகுச் சுருள். ஒவ்வொரு திருகுக்கு இடையிலும் ஏன் சரியாக பத்து காரமூலங்கள் எனும் இணைதாங்கிகள் இடம்பெற்றுள்ளன. ஏன் பதினொன்றாக இல்லை. ஏன் சரியாக பத்து ஆம்ஸ்டராங் இடைவெளிகளில் அமைந்துள்ளன. எதனால் இரண்டு உட்கரு அமிலங்களும் ஒன்றுக்கொன்று எதிராக அமைந்துள்ளன. ஒன்று மூன்றிலிருந்து ஐந்து எனில் மற்றது ஐந்திலிருந்து மூன்று என இருப்பதன் மர்மம் என்ன.

யார் சொல்லி டி.என்.ஏ இரட்டிப்பாகிறது. கார்பனும், நைட்ரசனும், ஆக்ஸிஜனும், பாஸ்பரசும் தனித்தனியாக இருக்கும் போது உள்ள குணத்திற்கும், அவற்றின் சேர்க்கையால் உருவாகும் டி.என்.ஏ வுக்குமான வேறுபாடுகள் எவ்வளவு. டி.என்.ஏ இனப்பெருக்கமும், செல் இனப்பெருக்கமும், நுண்ணுயிர் இனப்பெருக்கமும், மனித இனப்பெருக்கமும், தாவர இனப்பெருக்கமும் ஒன்றா. அணுக்கள் இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றனவா. நட்சத்திரங்கள்.

அணு, உயிரணு, மரபணு, பரமணு ஒத்த தன்மையுடையனவா.

செல் குடும்பத்தின் தலைவர் யார். வேலைகளைப் பங்கிடுவது யார். புரதத் தோழிற்சாலையை நிர்வகிப்பது யார். அதற்கிணையான ஒரு தொழிற்சாலையை மனிதர் உருவாக்கியதுண்டா. முடியுமா. எவ்வளவு விரைவு. எத்தனை துல்லியம். எவ்வளவு உழைப்பு. யாரால் நடக்கிறது அத்தனையும்.

அணுக்கள் உயிரணுக்களாக மாற்றம் பெற்றது எப்படி. உயிரணுக்கள் மரபணுக்களாக பண்புகளைக் கடத்துவது எப்போதிலிருந்து. எப்படித் தோன்றியது இவ்வளவு செய்நேர்த்தி. மனிதக் கண்களால் காணமுடியாத அந்த சின்னஞ்சிறு உலகிலா இத்தனை அற்புதங்கள். அறிவானவர் மனிதரா. உடலா. மூளையா.

உடலுலகில் நடப்பது அன்பா. அறிவா.

உடலுக்கு மதியா. விதியா.

உடல் அன்பால் இயங்குகிறதா. அறிவால் இயங்குகிறதா.

உலகம் அன்பால் இயங்குகிறதா. அறிவால் இயங்குகிறதா.

தேவர்கள் அன்பானவரா. அறிவானவரா.

அறிவால் முடியாததுண்டோ. அறிவு கல்வியாகிறது. அறிவு செல்வமாகிறது. அறிவு புகழாகிறது. அறிவு வீரமாகிறது. அறிவு வெற்றியாகிறது. அறிவு உண்மையாகிறது. அறிவே ஞானமாகிறது.

கல்வி அறிவைக் கொடுக்கிறது. கல்வி அறிவை வளர்க்கிறது. கல்வி ஆற்றலைக் கொடுக்கிறது. கல்வி துணிவைத் தருகிறது. கல்வி வீரத்தை ஊட்டுகிறது. கல்வி முயற்சியைக் கொடுக்கிறது. கல்வி நம்பிக்கையை அளிக்கிறது. கல்வி அறிவைப் பெருக்குகிறது. கல்வியால் வெற்றி கிட்டுகிறது.

உடலைப் பேணுவது கல்வி. உயிரை வளர்ப்பது கல்வி. தேடுவது கல்வி. கண்டுபிடிப்பது கல்வி. சோதிப்பது கல்வி. பயனளிப்பது கல்வி. மூலதனமாவது கல்வி. வணிகமாவது கல்வி. பகுத்தறிவது கல்வி. பண்பாட்டிற்குக் காரணம் கல்வி. அஞ்சாமைக்குக் காரணம் கல்வி. நோய் தீர்ப்பது கல்வி. பசி போக்குவது கல்வி. காப்பாவது கல்வி. கற்பாவது கல்வி. இன்பமாவது கல்வி. துன்பம் போக்குவது கல்வி. இருளகற்றுவது கல்வி. பகைமை நீக்குவது கல்வி. மனத்தை நெறிப்படுத்துவது கல்வி. அருளாவது கல்வி. தவமாவது கல்வி.

கல்வி நியாயத்திற்குக் காரணமாகிறது. கல்வி நீதி வழங்குகிறது. கல்வி கலையைப் போற்றுகிறது. கல்வி தொழிலைப் பெருக்குகிறது. கல்வி மனங்களை

ஒன்றிணைக்கிறது. கல்வி அன்பை ஊட்டுகிறது. கல்வி அறியாமையை அகற்றுகிறது. கல்வி ஒளியை ஏற்றுகிறது. கல்வி தீமைகளை அகற்றுகிறது. கல்வி நன்மைகளை விதைக்கிறது. கல்வி நாடுகளை இணைக்கிறது. கல்வி உலகங்களை ஒன்றாக்குகிறது.

கல்வி ஆர்வத்தை அதிகரிக்கிறது. தேடலுக்கு துணையாகிறது. நட்பைப் பேணுகிறது. உண்மையைக் காணவைக்கிறது. ஒழுக்கத்தைத் தருகிறது. பேச்சைத் தருகிறது. படிக்க வைக்கிறது. இலக்கியம் படைக்க வைக்கிறது. வரலாற்றைப் பதிவிடுகிறது. காலத்தை வெல்கிறது.

கல்வி நூலாகிறது. கல்வி கவியாகிறது. கல்வி அறிவாகிறது. கல்வி மொழியாகிறது. கல்வி மதமாகிறது. கல்வி மெய்ஞானமாகிறது. கல்வி உலகை உயர்த்துகிறது. கல்வி அண்டத்தை விரிவாக்குகிறது.

அறிவுடையார் எல்லாம் உடையார். கற்றவரே கண்ணுடையவர். கல்வி கற்றோரே உயர்ந்தோர். கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. அனைவரும் சுற்றத்தார். அனைத்து நாடுகளும் அவருக்குச் சொந்தம். அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. கற்ற கல்வி பிறவித்துணையாகும்.

காட்டுமிராண்டி மனிதரை கணினி மனிதராக மாற்றியது கல்வி. மனிதரை அமரத்துவம் அடைய வைப்பது அறிவு.

அன்பும் அறிவும் ஒன்றா. மாற்றா. எதிரெதிரா. இணையா. அன்புக்கு எல்லையுண்டு. அறிவு எல்லையற்றது. ஒன்று சுருங்கும். ஒன்று விரியும். ஒன்று ஒளியும். ஒன்று தேடும். ஒன்று மூடும். ஒன்று திறந்து வைக்கும். ஒன்று பழமை போற்றும். ஒன்று அனைத்தையும் நவீனமாக்கும். அன்பு p. அறிவு q.

கல்வி மானுட அறிவை தலைமுறை தலைமுறையாகக் கடத்தி வருகிறது. மரபணு உடலறிவை சந்ததிதோறும் கடத்துகிறது. மரபணு எதை, எப்படி கடத்துகிறது.

மரபணு மானுடரின் உடல்பண்புகளைக் கடத்துகிறது. மனிதரின் தோலின் நிறம் ஒரு உடற்பண்பு. அது கருப்பாக இருக்கலாம். வெள்ளையாக இருக்கலாம். பழுப்பாக இருக்கலாம். மஞ்சளாக இருக்கலாம். மொத்தத்தில் வெள்ளை கருப்பு எனும் தூய இரு நிறங்களும் அவற்றின் கலவையாகவும் இருக்கும். தோலின் நிறத்தைத் தீர்மானிக்க

இரண்டு மரபணுக்கள் உள்ளன. உயிரினங்களின் அனைத்து விதமான உடற்பண்புகளுக்கும் இரண்டு மரபணுக்கள் அதாவது ஓரிணை ஜீன்கள் உள்ளன. இந்த ஓரிணை ஜீன்களுக்கு அல்லீல்கள் எனப் பெயர். இரண்டில் ஒன்று அம்மாவிடமிருந்தும் மற்றொன்று அப்பாவிடமிருந்தும் வந்து சேர்கின்றன. இரண்டு அல்லீல்களில் எது வலிமையானதோ, ஓங்கியதோ அதுவே வெளிப்படும். வெளிப்பாடு முதல் தலைமுறைக்கும் இரண்டாம் தலைமுறைக்கும் வேறுபடும்.

தோலின் நிறத்திற்கு இரண்டு ஜீன்கள். ஒன்று கருப்புக்கு. மற்றொன்று வெளுப்புக்கு. ஆகவே இரண்டு. இரண்டில் கருப்பு நிறத்தைத் தீர்மானிக்கும் ஜீனே வலிமையானது. அதுவே முதலாவது தலைமுறையில் வெளிப்படும். கருப்பு நிறத்தைத் தீர்மானிக்கும் ஜீன் ஓங்கு தன்மை ஜீன். வெள்ளை நிறத்தைத் தீர்மானிக்கும் ஜீன் முதல் தலைமுறையில் ஒடுங்குவதால் அது ஒடுங்கு ஜீன்.

மரபணுக்கள் உட்கருவிலுள்ள குரோமோசோம்களில் இறுக்கி, சுருட்டி வைக்கப்பட்டுள்ளன. ஒரு பண்புக்கு ஒரு மரபணு. அது இரண்டாக இருக்கிறது. ஒன்று ஓங்கியது. மற்றொன்று ஒடுங்கியது. மனிதரில் எத்தனை பண்புகள் இருக்கின்றன.. மனித மரபணுத் திட்டத்தில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மரபணுக்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உண்மையெனில், மனிதரில் தெளிவான முப்பதாயிரம் பண்புகள் உள்ளன. அவ்வாறெனில் மரபணுக்களும் முப்பதாயிரம் உள்ளனவா.. மரபணுக்கள் ஒவ்வொரு பண்புக்கும் இரண்டென்பதால் அறுபதாயிரம் உள்ளன. ஆனாலும் ஒன்றே வெளிப்படும் என்பதால் முப்பதாயிரம் செயல்படும் மரபணுக்கள் உள்ளதாகக் கொள்ளலாம். உயிரணுக்களில் எப்போதும் ஒரு மரபணுவே வெளிப்படும்.

ஒரு மனிதர் ஒரே நேரத்தில் நெட்டையாகவும் குட்டையாகவும் இருக்கமுடியுமா.. முடியாதல்லவா. ஒன்று நெட்டை (T). அல்லது குட்டை (t). மனித உயரத்தைத் தீர்மானிக்கும் இரு மரபணுக்களில் நெட்டை மரபணு வெளிப்பட்டால் TT அல்லது Tt நெட்டையாக இருப்பார். குட்டை மரபணு எனில் tt குட்டையாக இருப்பார். குட்டையாக இருப்பதற்கு இரண்டு மரபணுக்களுமே ஒடுங்கிறதாக இருக்க வேண்டும். இரண்டில் ஒன்று ஓங்குதன்மை கொண்டதாக இருந்தாலும் அவர் நெட்டையாகவே இருப்பார். இவ்வளவு சிறப்புமிக்க மரபியல் விதிகளைக் கண்டறிந்தவர் கிரிகர் மெண்டல் எனும்

அறிஞர். எபரும் புகழுக்குரிய அறிஞர் வாழ்ந்த காலத்தில் இந்த அரிய உண்மைகளை அறிவியல் உலகம் அறியவில்லை. மறைந்த பின்போ மரபியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

மனிதரின் தலைமுடி தடித்து சுருட்டையாக இருப்பது ஓங்கு பண்பு. உதாரணமாக கருப்பின மக்கள் தலைமுடி போல. குச்சியாக நேராக இருப்பது ஒடுங்கு பண்பு. ஐரோப்பியர் போல.

பண்புகள் எப்படி யாரால் தீர்மானிக்கப்படுகின்றன.. மரபணுக்கள் தனித்துவமான ஒரு மொழியில் எழுதப்பட்டுள்ளன. கணினியின் அனைத்து நிரல்களும் 0,1 எனும் இரு தசமமாக எழுதப்படுவதுபோல், தமிழ் 247 எழுத்துக்கள் கொண்டு எழுதப்படுவது போல், ஆங்கிலம் 26 எழுத்துக்கள் கொண்டுள்ளது போல், மரபணுக்கள் A G C T - அடினைன் குவானைன் சைட்டோசின் தயமின் எனும் நான்கு வேதியல் எழுத்துக்களால், எழுதப்பட்டுள்ளன. மரபணு அமைப்பை ஒரு திருகு ஏணியாக உருவகம் செய்தால் ஏணியின் இரு கட்டைகளும் சர்க்கரை மற்றும் பாஸ்பரசால் ஆக்கப்பட்டுள்ளன. கிடைமட்டக் கட்டைகள் A-T அல்லது C-G என இருக்கும். ஒவ்வொரு பத்துக் கட்டைக்கும் ஒருமுறை ஒரு திருகு உண்டாகும்.

மரபணு அல்லது ஜீன் எனப்படுவது மரபுப் பொருளான டி.ஏன்.ஏ. வின் ஒரு பகுதியே. அதாவது டிஆக்ஸிரிபோ நியூக்ளிக் அமிலத்தின் ஒரு துண்டுப் பகுதிதான் ஒரு ஜீன். ஒரு ஜீன் எனும் துண்டுப்பகுதியில் 100 முதல் 1000 வரையிலான காரமூலங்கள் அதாவது நியூக்ளியோடைடுகள் இருக்கலாம்.

நான்கு எழுத்துக்களும் ஒரு குறிப்பிட்ட வரிசையில் மூன்று மூன்றாக எழுதப்படுகின்றன. எழுத்துக்களின் வரிசை மாறினால் பொருள் மாறும். அமினோ அமிலம் மாறும். உருவாக்கும் புரதம் மாறும். நொதி மாறும். உதாரணமாக நான்கு என்பதை குன்நா என்றோ ன்குநா என்றோ எழுதினால் பொருள் புரியாதல்லவா. நான்கு எழுத்துக்களையும் மாற்றி மாற்றி எழுதி உடலுக்குத் தேவையான அத்தனை வேதிப்பொருட்களையும் மரபணுக்கள் திறமையாகத் தயாரித்துக்கொள்கின்றன.

சந்ததிகளுக்கு அதாவது இனப்பெருக்கத்தின் மூலமாக அடுத்த தலைமுறைக்கு பண்புகள் கடத்தப்படும்போது மரபணு வரிசைகள் மாறுமா.. மாறாது. பெற்றோரின்

மரபணு வரிசை அப்படியே கடத்தப்படும். எனினும் சிறு அளவில் அப்பா அம்மா மரபணுக்கள் கலந்துவிடும். இல்லையெனில் அச்சு அசலாக குழந்தை அப்பா போன்றோ அம்மா போன்றோ பிறந்துவிடும்.

உடல் மாற்றங்களுக்கு, உடற்பண்புகள் மாற்றத்திற்கு மரபணுக்கள் மட்டுமே காரணமா எனில், சமீபகால ஆய்வுகள் சூழலையும் மிக முக்கியமானதாகக் குறிப்பிடுகின்றன. பண்புகள் மரபணுவால் கட்டுப்படுத்தப்பட்டாலும் சூழ்நிலையாலும் பண்புகள் மாறுபடுகின்றன. ஒரே வகையான தாவரத்தை வெளிச்சத்திலும், இருட்டிலும் வளர்த்தால் என்னாகும்.. வெளிச்சத்தில் வளரும் தாவரம் செழிப்பாக, அடர்த்தியாக, அகலமான இலைகளோடு, குட்டையான கணுக்களோடு வளரும். ஒளி குறைவான இடத்தில் வளரும் தாவரம் அப்படியே எதிராக வளரும். தாவரத்தின் நிறமே வெளிரிப்போய் இருக்கும். ஒரே செடியின் கிளைகளில் ஒருபகுதி வெளிச்சம்படுமாறும், மற்ற பகுதி நிழல்படுமாறும் வளர்த்தால்.. ஒளிபடும் பகுதிக்கும், நிழல்படும் பகுதிக்கும் நிறைய வேறுபாடுகள் தென்படும். ஒரே சேடிதான். ஒரேவிதமான மரபணுதான். இருந்தும் எதனால் மாற்றங்கள் உண்டாகின்றன. மரபணுக்கள் தம்மை வெளிப்படுத்துவதில சூழ்நிலையின் பங்கு என்ன. எவ்வளவு.

பண்புகளைத் தீர்மானிக்கும் மரபணுக்களில் இரண்டு வகைகள் உள்ளன. உடற்பண்புகளைத் தீர்மானிப்பவை உடல் குரோமோசோம்கள். ஆண் பெண் பால் பண்புகளை தீர்மானிப்பவை பால் குரோமோசோம்கள். மனிதருக்கு மொத்தமுள்ள 46 குரோமோசோம்களில் 44 உடல் பண்புகளையும், 2 பால் சார்ந்த பண்புகளையும் தீர்மானிக்கின்றன. ஆண் பெண் இனப்பெருக்கத்தின் போது பால் குரோமோசோம்கள் மட்டுமே அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன. பால் குரோமோசோம்களின் எண்ணிக்கை இனச்செல்களான ஆணின் விந்தணுவிலும் பெண்ணின் சினைமுட்டையிலும் பாதியாக அதாவது 23 ஆக இருக்கும். ஆணும் பெண்ணும் இணைந்து கரு உண்டாகும் போது மீண்டும் 46 ஆகச் சேர்ந்துவிடும். 2 பால் சார்ந்த குரோமோசோம்களில் பெண்ணுக்கு இரண்டும் ஒன்றாக அதாவது xx எனவும், ஆணுக்கு xy எனவும் இருக்கும். பெண்ணின் x குரோமோசோம்களோடு ஆணின் x சேர்ந்தால் பெண் பிள்ளை பிறக்கும். y சேர்ந்தால் ஆண் குழந்தை. இன்னொரு விதத்தில் சொன்னால் ஒரு x உள்ளது ஆண். இரண்டு x கொண்டது பெண்.

ஒரு குழுவில், ஒரு இனக்கூட்டத்தில், குறிப்பிட்ட மக்கள் தொகையில் உள்ள மொத்த மரபணுக்களை, ஓங்குதன்மை, ஒடுங்குதன்மை மரபணுக்களின் எண்ணிக்கையைக் கண்டறிய முடியுமா. p + q = 1 சூத்திரம் கொண்டு எளிதாகக் கண்டறியலாம்.

மொத்த மரபணுக்களின் எண்ணிக்கை எப்போதும் 1 எனக் கொண்டால், p யைக்கொண்டு q வையும், q வைக் கொண்டு p யையும் கணக்கிடலாம். 1000 பேர் கொண்ட ஒரு மக்கள் குழுவில், நெட்டையானவர் (p) 800 பேர் எனில் குட்டையானவர் (q) 200 பேர் இருப்பர். இதையே நெட்டை மரபணு அதாவது ஓங்கு மரபணு p = 0·8 எனவும், குட்டை மரபணு அதாவது ஒடுங்கு மரபணு q = 0·2 எனவும் குறிப்பிடலாம். இரண்டுக்கும் ஒரு சமநிலை நிலவுகிறது. ஒன்றின் எண்ணிக்கை குறைந்தால் மற்றதன் எண்ணிக்கை கூடும். இனக் கூட்டத்தில் இரண்டும் ஓங்கிய மரபணுக்களின், இரண்டும் ஒடுங்கிய மரபணுக்களின், ஓங்கியதும் ஒடுங்கியதுமான மரபணுக்களின் எண்ணிக்கையைக் கண்டறிய $(p+q)^2 = p^2 + 2pq + q^2$ சூத்திரம் பயனாகிறது.

ஓங்கிய ஜீன் p. ஒடுங்கிய ஜீன் q. ஆண் p. பெண் q. ஆணும் பெண்ணும் ஒன்றே. ஒன்றே இரண்டாக இருக்கிறது. இரண்டும் ஒன்றுதான் என்ற போதிலும் வேறுபாடும் இருக்கிறது. வேறுபாடு அதிகரிக்க அதிகரிக்க இரண்டும் வேறாகும். குறையக் குறைய இரண்டும் ஒன்றாகும்.

அது ஏன் இரண்டாக இருக்கிறது.. ஒன்றை ஒன்று அறிய. அறிந்துகொள்ள. ஒளி இல்லையேல் இருட்டு மட்டுமே இருக்கும். ஒளிக்கு காரணமாவது இருட்டு. ஒளியை அறியச்செய்வது இருட்டு. இரவே இல்லையெனில் பகல் மட்டுமே இருக்கும். இரவால் பகலும், பகலால் இரவும் அறியப்படுகின்றன. தம்மை காண, நாமை உணர, உலகை புரிய, உண்மையை அறிய, வளர, உயர, வெல்ல இரண்டு காரணமாகிறது.

இவ்வுலகமும் அவ்வுலகமும் ஒன்றே. கிழக்கும் மேற்கும் ஒன்றே. பூமியும் வானமும் ஒன்றே. சிவனும் விஷ்ணுவும் ஒன்றே. சைவமும் வைணவமும் ஒன்றே. வடகலையும் தென்கலையும் ஒன்றே. விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒன்றே. கருப்பும் வெள்ளையும் ஒன்றே. நீரும் நெருப்பும் ஒன்றே. உள்ளும் வெளியும் ஒன்றே. அகமும்

பறமும் ஒன்றே. குறிலும் நெடிலும் ஒன்றே. இந்துவும் இசுலாமியரும் ஒன்றே. ஆரியரும் திராவிடரும் ஒன்றே. தேவரும் தேவேந்திரரும் ஒன்றே. தமிழும் வடமொழியும் ஒன்றே. திமுக வும் அதிமுக வும் ஒன்றே. உயிரும் மேய்யும் ஒன்றே..

அறிவுதான் அனைத்திலும் சிறந்ததா. பெரியதா. ஈடு இணை இல்லாததா.

எப்படி அறிந்தது மேற்கு. எவ்வாறு அனைத்தையும் அறிந்தது மேற்கு.

மண்ணாலா. மொழியாலா. மதத்தாலா. மேற்கின் பண்பாடா. வீரமாக இருக்கலாமோ. ஆசையோ. இயல்போ.

எங்கிருந்து கற்றார் இத்தனை அறிவையும். அணுவைப் பிளந்தது அவர். செல்லை உடைத்தது அவர். ஆகாயத்தில் பறந்தது அவர்.

கிழக்கின் கண்களுக்குத் தெரியாத உலகம் மேற்கிற்கு தெரிந்ததன் ரகசியம் என்ன.. அறிவைப் பூட்டிக்கொண்ட கிழக்கு போல் அல்லாமல் மேற்கு அனைத்தையும் திறந்து வைத்தது எதனால்.

கிழக்கு ஆயிரம்,ஈராயிரமாண்டுகள் முயன்றதை ஓரிறு நூற்றாண்டுகளில் மேற்கு சாதித்தது எப்படி. அறிவைப் பதுக்கிய கிழக்கிற்கு மாற்றாக அறிவைப் பகுத்ததுதான் காரணமா. அறிவை கருவியாக்கியது யார். அறிவை பொருளாக்கியது யார். அறிவை விரிவாக்கியது யார். அறிவை ஆற்றலாக்கிறது யார். அறிவை விரிவாக்கியது யார். அறிவை உண்மையாக்கியது யார்.

அறிவில் சிறந்திருந்ததாகப் புகழப்படும் கிழக்கு அடிமையானது எப்படி. மொழியை மாற்றியது எப்போது. மதத்தை ஏற்றது எதனால்.

மெய்ஞானத்தைவிட விஞ்ஞானம் பெரியதா. கிழக்கில் இருந்தது மெய்யான ஞானம்தானா.. கிழக்கிற்கு அறிவை விற்கத் தெரியவில்லையா. வானுயர்ந்த கோவில்களை, நெடிதுயர்ந்த கோபுரங்களை உருவாக்கத் தெரிந்த கிழக்கின் ஞானத்திற்கு அதை வணிகமாக்கத் தெரியவில்லையோ.

மேற்கு அறிவியலை முன்னெடுத்து வெற்றி பெற்றதைப் போல் கிழக்கு ஏன் அறத்தை முன்னெடுக்கவில்லை. கிழக்கின் பெருமைமிகு ஞானியர் வழங்கிய

அறத்தை ஏன் கிழக்கு மறந்தது. தொலைத்தது.. அறம் தொலைந்ததால் அல்லவா உலகம் குப்பையானது. புகையானது. கட்டிடமானது. ஆயுதக் கிடங்கானது.

எத்தனை ஞானியர் பிறந்தார். எவ்வளவு அறங்களைப் போதித்தார். பயனென்ன ஞானமுடையோரே. மூவாயிரமாண்டுகளாக சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். திருடாதீர், களவு செய்யாதீர், ஏமாற்றாதீர், பொய்யுரைக்காதீர், புறம் பேசாதீர், கொலை புரியாதீர், பெண்ணைப் பழியாதீர்.

இன்னும் எத்தனையாயிரம் ஞானியர் உதிக்க வேண்டும் கிழக்கின் ஞானவான்களே. இவ்வளவு போதித்ததும் மேற்கின் பயனாளராக ஆவதற்குத்தானா. கல்வியில் உயர்ந்திருந்த கிழக்கு எங்கே. கலைகளில் செழித்திருந்த கிழக்கு எங்கே. இயற்கையைப் பேணிய கிழக்கு எங்கே. இதயமே பெரிதென்ற கிழக்கு எங்கே. அனைத்திலும் பொதுவுடைமை பாராட்டிய கிழக்கு எங்கே.

மேற்கு அறிவானதா. புத்திசாலியானதா. அறிவிற்கும் புத்திசாலித்தனத்திற்குமான வேறுபாடு என்ன. புத்திசாலித்தனமும் சந்தர்ப்பவாதமும் ஒன்றா. தகவல் சேகரிப்பு அறிவாகுமா. முன் பின் அறியாத அறிவு அறிவாகுமா. அனுபவத்திற்கும் அறிவுக்குமான தொடர்பென்ன. அனுபவம் அறிவாகுமா. ஞானமாகுமா.

இந்தியா ஞானமுள்ளதா. சீனா அறிவானதா. கிழக்கின் பழமையிலும் பழமையான இரண்டின் அறிவுக்கும் மேற்கின் அறிவுக்கும் தொடர்பிருந்ததா. முன்னர் பறந்ததாகக் கதைகள் கொண்டிருந்த இரண்டுக்கும் அதை உண்மையாக்கத் தெரிந்ததா. முதலில் பறந்தது மேற்கல்லவா. சிறு பொறி, சிறு முயற்சி, சிறு அறிவு, சிறு நம்பிக்கை உலகை அடியோடு மாற்றிவிட்டதல்லவா. எப்படி முடிந்தது மேற்கால். வானத்தில், மருத்துவத்தில், உழவில், உறவில் முன்னோடியாக இருந்த இரண்டும் பெருமை இழந்ததற்குக் காரணமென்ன. பழமையில் ஊறிக் கிடந்ததா. மூடநம்பிக்கையில் மூழ்கிக் இருந்ததா. பெண்ணாசையில் திளைத்ததா. அறிவை மறந்ததா.

ஆங்கிலேயரால்தான் தமிழ்நாடு முன்னேறியதா. ஆங்கிலத்தால்தான் தமிழருக்கு அறிவு வந்ததா. முதன்முதலில் சென்னைக்கு ஏன் வந்தார். கடல்கடந்து

எங்கோ தொலைதூரத்தில் இருந்தும், தமிழர் பங்காளிச் சண்டைகளில் சிறந்தவர் என்பதை எப்படி அறிந்தார் ஆங்கிலேயர். நம்மைப் போலவே அவர்களும் பங்காளிச் சண்டைகளில் சிறப்புற்றவர் என்பதாலா. இங்கே சேர சோழ பாண்டியர் எனில் அங்கே இங்கிலாந்து காட்லாந்து அயர்லாந்து. ஒன்றுக்கொன்று சளைத்ததல்லவே. தென்னகப் பங்காளிச் சண்டைகளை வைத்துத்தான் அவர் இந்தியாவை அடிமையாக்கினாரல்லவா.

இப்போதும் அதேதானே. தென்னகத்தாரால் மொழியால் இணைய முடியவில்லை. நிலத்தால் ஒன்றாக முடியவில்லை. நீரால் இணைக்க முடியவில்லை. திராவிடத்தால் ஒன்றிணைக்க இயலவில்லை. எமது நீர். உமக்கு உரிமை இல்லை. எங்கள் நிலம். உங்கள் வண்டிகள் ஓடக்கூடாது. எங்களது கொட்டகை. உங்களது படத்தை ஓட்ட மாட்டோம். அடிப்போம். துரத்துவோம். ஓட ஓட விரட்டுவோம். கொழுத்துவோம்.

பேசுவது பேரன்பு பற்றி. எழுதுவது பேரறிவு குறித்து. பாடுவது அறத்தின் மகிமையை.

மழை பொழிவது எல்லோருக்குமல்லவா. ஆமாம். ஆமாம். இயற்கையன்னையின் கொடையன்றோ. அற்புதம். அற்புதம். கடவுளின் கருணையன்றோ. உண்மை. உண்மை.

எங்களுக்கும் தண்ணீர் வேண்டும். அன்பாவது, அறமாவது. அடிங்கடா. யார் அப்பன் வீட்டுத் தண்ணி. எங்கள் மழையடா. எங்கள் நீரடா. எங்களுக்கே சொந்தமடா. ஒரு சொட்டுக் கூட விடமாட்டோமடா.

எண்ட மழ. எண்ட குள. கடலில் விட்டாலும் விடுவோமேயொழிய ஒரு பொட்டுக்கூட தரமாட்டோம். எண்ட மல. எண்ற பூமி.

அன்பானவர் தமிழரா மலையாளத்தாரா. அறிவானவர் தமிழ்நாட்டுக்காரரா கேரளத்துக்காரரா. புத்திசாலி யார். அதிபுத்திசாலி யார். வரலாற்றை மறந்தவர் யார். தொப்புள்கொடி உறவை அறியாதார் யார். தாய் யார். சேய் யார்.

தந்தை யார்..

பூமி யாருடையது. யாருக்குச் சொந்தமானது. ஈரடியால் உலகளந்ததை மற்ற நாட்டினரைவிட மலையாள தேசத்தார் நன்கறிவாரன்றோ. ஓணத்தின் பொருளென்ன. ஓரடியால் பூமியளந்தார் என்பதா. மீண்டும் அளக்கப் போகிறார் என்பதா.

நாயர் ஏன் நம்பூதிரியிடம் அடைக்கலமானார். மலையாள பூமிக்கு குருவாயூரப்பன் எப்போது வந்தார். ஓணம் எப்போதிருந்து கொண்டாடப்படுகிறது. ஏன் தமிழகத்தில் கொண்டாடவில்லை. தமிழர் வாமனமூர்த்தியை அறிந்திருக்கவில்லையா. ஆழ்வார்களும், ஆச்சார்யார்களும் நிறைந்திருந்த தமிழ் நிலத்தில் இல்லாத திருவோணம் சேரளத்தின் பெருமையானது எப்படி..

தமிழர் அறிவுள்ளவரா. அறிவில் சிறந்தவரா. அறிவை மதிப்பவரா. அன்பில் உயர்ந்தவரா. உண்மை என உலகம் ஓப்புமா. திராவிடம் என்னும் ஒரு சான்று போதுமா. ஓராயிரம் வேண்டுமோ.

காணுமிடமெல்லாம் உயர்ந்த கோபுரங்கள். பார்க்குமிடமெல்லாம் பெரிய கோவில்கள். எவ்வளவு கோவில்கள். குளங்கள். குலசாமிகள். தெய்வங்கள். கடவுள்கள். எத்தனை எத்தனை சிவன். எவ்வளவு பெருமாள். எத்தனை கண்ணன்கள். இராமன்கள். அம்மன்கள். ஐயனார்கள். முனியப்பசாமிகள். கருப்பண்ண சாமிகள். முருகன்கள். பிள்ளையார்கள். எப்படி வென்றார் திரவிடத்தார். எதனால் ஜெயித்தார் திராவிடக் கட்சியார். அனைத்துக் கட்சிகளும் திராவிட ஒட்டைக் கொண்டது எப்படி.

கடவுள் இல்லையா. இருக்கிறாரா. உண்மையிலேயே இருக்கிறாரா. நிச்சயமாக இல்லையெனச் சொல்ல முடியுமா. இருக்கிறார் என்பதை உறுதியாக நிரூபிக்க முடியுமா. இல்லை என்பவர் நிரூபிக்க வேண்டுமா. உண்டு என்போர் நிரூபிக்கவேண்டுமா. சான்று இருந்தால் உலகத்தவர் ஏற்றுக்கொள்வாரன்றோ. கடவுள் சான்று கொடுத்துத்தான் தம்மை கடவுள் என நிரூபிக்கவேண்டுமா. புறச்சான்று கொண்டு கடவுள் இருப்பை உணர, அறிய, நிரூபிக்க முடியாதா.

மனிதர் கடவுளை அறிய முடியுமா. பார்க்க முடியுமா. பேச முடியுமா. தொட முடியுமா. கடவுளோடு மனிதர் பேச முடிந்தால் என்னாகும். மனிதரால் தம் மனத்தைக் கட்டுப்படுத்த இயலுமா. கடவுளுக்கு மனமிருக்குமா. கடவுள் மொழி எது. மனிதர் மனதை கடவுள் அறிவாரா. மனத்தின் வலிமை எத்தகையது. மனத்தை அடக்க

முடியுமா. கடவுளை வணங்கிக்கொண்டே இவரெல்லாம் ஒரு கடவுள் என மனித மனம் நினைக்கும் என்பதை கடவுள் அறிந்திருப்பாரா. அதற்கும் மேலும் மனித மனம் என்னுமென்பதும் கடவுளுக்குத் தெரியுமா.

மனிதரால் இல்லை என்றும் பேச முடியும், உண்டு எனவும் பேசமுடியும் என்பது உண்மைதானே. மனம் எவ்வளவு விசித்திரமானது, வியப்பானது, விந்தையானது, அதிசயிக்கத்தக்கது, வலிமையானது என்பதை மனிதர் அறிந்திருக்கிறாரல்லவா.. மனிதர் நினைத்தால் மிக அழகாக, கடவுள் உறுதியாக உள்ளார் எனப் பேசுவார். அதே நாக்கைக்கொண்டு கடவுளென ஒருவர் இல்லவே இல்லை என ஆழமாக அவரால் பேசவும் முடியும். மனிதர் அத்தனைபேரும், அறிவு வந்த மனிதர் அனைவரும் பெரிய வக்கீல்கள் என்பது கடவுளுக்குத் தெரியுமா. அறிவு வந்த மனிதர் கடவுளை நம்ப மாட்டார் என்பதும் கடவுளுக்குத் தெரியாதா. அறிவு எதையும் நம்பாது என்பதுகூடவா தெரியாமல் அவர் கடவுளானார். மனிதரை கடவுளால் பேசிச் செயிக்க முடியுமா.. கடவுளால் மனிதரை விவாதித்து வெல்ல முடியுமா. மனிதர் பொய் பேசி வென்று விடுவாரே, கடவுளால் முடியுமா. மனிதர் கையூட்டுக் கொடுத்தாவது வெல்ல முயல்வாரே, கடவுளால் முடியுமா.

கடவுள் எப்படி இருப்பார். ஒருவரும் பார்த்ததில்லை. நேரில் பார்த்ததாக ஒருவரும் சொல்லியதில்லை. கடவுளின் குணமென்ன. கடவுளால் பொய் சொல்ல முடியாது. திருட முடியாது. அன்புமிக்கவராக இருக்க வேண்டும். அறிவில் நிகரற்றவராக இருக்க வேண்டும். கடலளவுக்கு கருணை வேண்டும். மனிதர் என்ன தவறு செய்தாலும் மன்னிக்கவும் வேண்டும். பிறவியை அறுக்க வேண்டும். மோட்சத்தையும் கொடுக்க வேண்டும். மனிதர் பார்த்து வியக்குமாறு கடவுள் பலப்பல அதிசயங்களும் செய்ய வேண்டும். கடவுள் கையைக் காட்டினால் பணமாகக் கொட்ட வேண்டும். கையை உயர்த்தினால் தங்க மழை பொழிய வேண்டும். கையை சுழற்றினால் தேவலோகக் கன்னிகள் வந்தாலும் நல்லதுதான். நீரில் நடக்க வேண்டும். நெருப்பு சுடக்கூடாது. சட்டெனத் தோன்றி மறையும் வித்தை தெரிந்திருக்க வேண்டும். முக்கியமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் திரளிலும் தம் விசுவாசியை மட்டும் அடையாளம் கண்டு தரிசனம் தரும் வல்லமை பெற்றிருக்க வேண்டும். கடவுளுக்கு பசிக்காது.

தாகமெடுக்காது. உறக்கம் வராது. கடவுளுக்கு இறப்பும் கிடையாது. கடவுள் சத்தா. அசத்தா.

காந்தி கடவுளா. தம்மை கடவுளென்றோ, கடவுளின் அவதாரமென்றோ, கடவுளின் பிரதிநிதியென்றோ காந்தி பேசியதுண்டா. எழுத்தில் பதிவாகியிருக்கிறதா. கடவுள் குறித்து சிந்தித்திருப்பாரல்லவா. கடவுள் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்தார்தானே. அவர் கடவுள் பெயர் உண்மையா. காந்தியின் கடவுள் பெயர் வாய்மையா. அவர் கடவுள் மெய்யா. காந்தி கடவுள் சத்தா. சத் என்றால் சத்தியமா. உண்மையா. அதனால்தான் உண்மையே கடவுள் என்றாரா. உண்மையின் பெயர்தான் கடவுளா. உண்மைதான் கடவுளா. காந்தி உண்மையை சோதித்தாரா. எப்படி சோதித்தார் காந்தி. எதை வைத்து சோதித்தார் காந்தி. உண்மையை சோதித்து அறிய முடியுமா. கடவுளை சோதித்து அறிவது சாத்தியமா. உண்மையும் கடவுளும் ஒன்று என எதைவைத்து அவ்வளவு உறுதியாகச் சொன்னார் காந்தி. அவர் மனம் சொல்லியதா. ஆராய்ச்சி முடிவுகள் காட்டியதா. கடவுள் கருப்பென்றோ வெள்ளையென்றோ, இந்து என்றோ, தமிழர் என்றோ, இராமன் என்றோ சொல்லாமல், கடவுள் உண்மை என ஏன் சொன்னார் காந்தி மகான்.

காந்தி மகானா. தம்மை மகான் என காந்தி அழைத்துக்கொண்டாரா. மற்றவர் மகாத்மா என விளித்தபோது உளம் மகிழ்ந்தாரா. கலியுகத்தை முடிக்கவந்த கண்ணன் தாமே என அறிவித்தாரா. கூர்ஜர மீனவக் கிராமத்துக்காரருக்கு கண்ணனைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்குமல்லவா. அம்மா புத்திலிபாய் சிறந்த வைணவரன்றோ. கண்ணனின் ஊர்க்காரர். பாரம்பரிய வைணவக் குடும்பம். இது போதுமே. பத்தாவது என அறிவித்திருக்க. அறிவிக்கும் முன்னரே மகாத்மா என அழைக்கப்பட்டதால், கண்ணனைவிட மகாத்மா பட்டம் பெரியதென நினைத்து அமைதியாக இருந்துவிட்டாரோ. இராமனைக் கொண்டாடிய மகாத்மா துவரகாதீசரை தூக்கிப்பிடிக்காததன் காரணமென்ன.

ரகுகுல அதிப! ராகவ! அரசே ராமா! எளியோரைக் காத்தருளும் சீதாராமா! சீதாராமா மங்களம்! சீதாராம் வெற்றி!

ஈசுவரன் அல்லா உமது பெயர்கள். அனைவருக்கும் நன்மதியை அருளுவாய் பகவானே. ரகுபதி ராகவ ராஜாராம்!

இராமன் கடவுளா. காந்தி ஏற்றுக் கொண்டாரா. ஓத்துக் கொண்டார் எனில் எப்படி ஒத்துக் கொண்டார். எதனால் ஏற்றுக் கொண்டார். இராமன் அன்பானவன் என்றதாலா. இராமன் தந்தை சொல்படி நடந்தவன் என்பதற்கா. இராமன் மனைவி தவிர பிற பெண்களை ஏற்காதவன் எனபதாலா. இராமன் வாய்மை தவறாதவன் என்றா.

ராஜா பொய்பேச மாட்டார். வாக்குத் தவற மாட்டார். வாய்மையே உண்மை. உண்மையே கடவுள். இராமனே பகவான். மாடு மேய்த்த பிள்ளை. அடுக்காத பொய்களை அவிழ்த்துவிட்ட பிள்ளை. யாம் இராமனெனில் யமுனை வழிவிடட்டும் என்றவுடன் யமுனை வழிவிட்டதாமே. யமுனைக்குத் தெரிந்திருந்தது காந்திக்குத் தெரியவில்லை என அர்த்தமா. கண்ணனும் இராமனும் ஒன்றா. எட்டு என்றும், பதினாறாமாயிரத்து எட்டு என்றும், எண்ணிலடங்கா என்றும் பெயர் வாங்கிய கோபியர்கோமானும், ஒன்றே எனப் பெயரெடுத்த உத்தமரும் ஒருவர்தானா.. இவரேதான் அவருமா.

உத்தமர் யார். உத்தமர் காந்தி எனும் புகழுக்குக் காரணமென்ன. சூட்டியவர் யார். காந்தியடிகள் என அழைத்து மகிழ்ந்தவர் யார். தமிழருக்கு மட்டும் எப்படித் தெரிந்தது வந்திருப்பது உத்தமரென்று.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேரென்ன. அன்றிவ்வுலகம் அளந்தவர் யார். தென்னிலங்கை செற்றவர் யார். சகடத்தை உதைத்தது யார். கன்றாய் வந்தவனை எறிந்தது யார். குன்றை குடையாய் எடுத்தது யார்.

பாரதத்தின் தந்தை யார். இந்தியாவின் தவப்புதல்வன் யார்.

தந்தை யார். உத்தமத் தந்தை யார்.

Who is Great Father. Who is Brave Son.

பெருந்தந்தை யார். வீரமகன் யார்.

யாம் வேலையை ராஜினாமா செய்தபின், மறுபடியும் பணியில் சேர்ந்தோம். 21 நாட்கள் ஈட்டிய விடுப்பிலிருந்தோம், விடுப்பு முடிந்து இன்று, 22.8.2011 முற்பகல் மீளப் பணியில் சேருகிறோம் எனக் கடிதம் எழுதிக் கொடுத்து வேலையில் சேர்ந்தோம். வீட்டிலிருந்து கிளம்பும்போது. அவசரமாக எமது கணினியில், யாம் கண்டடைந்த உண்மைகளை நான்கு சூத்திரங்களாக எழுதி, எமது அச்சுப்பொறியில் இரண்டு படி எடுத்துக்கொண்டோம். ஒன்றை எமது வீட்டின் உள்பக்கக் கதவிலும், இன்னொன்றை கல்லூரியில் யாம் அமருமிடத்திலிருந்த தடுப்பிலும் ஒட்டிவைத்துக் கொண்டோம். ஒட்டியதன் நோக்கம் இவற்றைப் பார்க்கும் போதெல்லாம் யாம் என்ன நோக்கத்திற்காகப் பணியை விட்டோம், பின் மீண்டும் ஏன் பணியில் சேர்ந்தோம், எமது வாழ்வின் நோக்கம் என்ன என்பதை மறக்கக் கூடாது என்பதற்காக. இவற்றைப் பார்த்துவிட்டு என்ன இது எனக் கேட்பவரிடம் யாம் எழுதும் புத்தகம் எனப் பதில் சொல்வதே எமது வாடிக்கை. யாம் என்ன எழுதியிருக்கிறோம் என்பதை ஒருவராலும் புரிந்துகொள்ள இயலவில்லை என்பதே உண்மை. இத்தனைக்கும் யாம் மிகவும் எளிமையாகவே எழுதியிருந்தோம்.

## எப்போதும் வென்றான்

$$p + q = 1$$

# The Story of a Great Father and His Brave Son

## தமிழ் கிருஷ்ணா

**பொருள் புரிகிறதா வைணவப் பெரியோர்களே..** அர்த்தம் அகப்படுகிறதா உலகத்தீரே.. பேரறிவு கொண்ட பேராசிரியப் பெருமக்களுக்காவது மீனிங் தெரிகிறதா.

யாம் மிகுந்த முன்னேற்பாடுகளோடு 2013 நவம்பரில் குடும்பத்தைப் பிரிந்து சென்றோம். கடந்தமுறை போல் எக்காரணம் கொண்டும் திரும்ப வரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். எமது வருங்கால வைப்பு நிதியிலிருந்து நான்கே கால் இலட்சம் உரூபா முன்பணத்திற்கு விண்ணப்பித்தோம். விண்ணப்பித்ததைக்கூட மனைவியிடம் சொல்லவில்லை. உண்மையில் யாம் எம்முள் நிகழ்ந்துகொண்டிருக்கும்

எதைப் பற்றியும் மனைவியிடம் பேசியதில்லை. பேராசிரியரே என்றாலும் எம்மைப் பொறுத்தவரை எமது மனைவி எளிய மனம் கொண்ட பெண்ணே. சராசரி நடுத்தர வர்க்க இயல்புகள் கொண்ட பெண் என்பதே எமது புரிதல். இருவர் மனமும் இருதுருவங்கள் போல. முற்றிலும் வேறு. இன்னும் சொல்லவேண்டுமானால் எதிரெதிர்.

யாம் எப்போது வேண்டுமானாலும் வேலையை விட்டுவிடுவோம், அதற்கு திருமணம் தடையாகிவிடும் என யாம் மறுத்தபோது, யாம் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வோம், நீங்கள் விருப்பம்போல் வாழலாம் எனப் பேசினார். சமூகத்திற்கு சேவை செய்வதே எமது வாழ்வின் இலட்சியம் என்ற போது, தமக்கும் அனாதை ஆசிரமம் ஒன்று ஆரம்பிப்பதே பெருநோக்கம் என்றார். ஆனாலும் எமது மனம் ஆறவில்லை. எமது கடமை யாது. புத்துலகம் செய்யும் நோக்கம் என்னாவது.

யாம் பணிமாறுதல் வாங்கி 2001இல் திருவண்ணாமலைக்குச் சென்றுவிட்டோம். திருமணம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லையென அழகானதொரு கடிதம் அனுப்பிவிட்டு, அப்பா அருணாச்சலா என அகமகிழ்ந்திருந்த வேளை, அப்பளம் சுட்டுப் போடு என இரமணாச்ரமத்தில் பாட்டுப்பாடி மனமகிழ்ந்திருந்த வேளை, நண்பர்களோடு கொஞ்சிப்பேசி அளவளாவிக் கொண்டிருந்த வேளை, எவ்வளவுதான் மதியிருந்தாலும் விதியை வெல்வது கடினமப்பா என்பதுபோல் எம்மைத் தேடி திருவண்ணாமலைக்கு வந்தார் அன்றைய எமது காதலியான மனைவி. பார்வதிதேவி அருணாச்சல மலைமீது தவமியற்றி அண்ணாமலையாரின் இடப்பாகம் பெற்றாராமே. வீட்டில் திருமணப் பேச்சு எடுக்கிறார்கள் உமது நிலையென்ன என்றார். மாமனாரோடு யாமே அனைத்தையும் நேரடியாகப் பேசியிருக்கலாம். ஏகப்பட்ட குளறுபடிகள். மனஸ்தாபங்கள். திருமணத்திற்கு முதல்நாள் காதலர் தினம். நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக்கூட இல்லை. தாலிகட்டும்வரை ஒரே டென்சன். திருமண வரவேற்புக்கு காரைக்குடிக்கு அழைத்த மாமனாரிடம், எம்மைக் கேட்டு, எம்மைக் கலந்தாலோசித்து திருமண வரவேற்பு வைத்தீர்களா என மறுத்தோம். மறுவீடு, தலைதீபாவளி என எதற்கும் மாமனார் வீட்டிற்குச் செல்லவில்லை. பல வருடங்கள் கழித்தே மாமனாரோடு புரிதல் வந்தது அல்லது மாமனார் எம்மைப் புரிந்துகொண்டார்.

யாம் வேலையை விட்டுவிட்டால் எமது அப்பாவை தமிழரசி பார்த்துக் கொள்வாரா. அப்பாவை மண்டபசாலைக்கு அழைத்துச் சென்று அவர் பெயரில்

சேமிப்புக் கணக்குத் துவங்கி ஒரு இலட்ச ரூபாய் வரவு வைத்தோம். அக்காவிடம் ஒரு இலட்ச ரூபாய் கொடுத்தபோது அவர் வாங்கிக்கொள்ள மறுத்தார். வேலைக்கு வந்தபின் ஒருமுறை அக்காவின் வயலில் களையெடுத்துக் கொண்டிருந்தபோது பிள்ளைகளை எப்படி படிக்க வைத்து கட்டிக்கொடுக்கப் போறோமோ எனக் கண்ணீர் விட்டது கண்டு, யாம் அவர் பெயரில் ஒரு ஆயுள் காப்பீடு தொடங்குவதாகவும், அதை வைத்து பிள்ளைகளைப் படிக்கவைக்குமாறும் உறுதியளித்திருந்தோம். அவர் மறுத்தபோது அந்தப் பணம்தான் இது எனச் சொல்லி, பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கு வைத்துக்கொள்ளுமாறு வற்புறுத்திக் கொடுத்தோம். உண்மையில் யாம் அக்காவுக்கென்று அஞ்சல் காப்பீட்டில் பணம் செலுத்தியே வந்தோம். ஆனால் அது முதிர்வடைய இன்னும் காலம் இருந்தது. முன்னதாக அச்சுதனுக்கும் அக்ஷயாவிற்கும் என மனைவியின் சேமிப்புக் கணக்கில் இரண்டு இலக்க ரூபாய் பணத்தை போட்டுவிட்டே யாம் ஊருக்குக் கிளம்பினோம். இந்தளவுக்காவது முடிந்ததே எனவும் நினைத்துக் கொண்டோம்.

அருப்புக்கோட்டை சென்று பெரியதொரு சோல்னாப்பை, பட்டர்கள் கட்டுவதுபோல் பெரிய சரிகை போட்ட இரண்டு வேட்டி, துண்டு, அவசியமான மாத்திரைகள், சிறிய நாட்காட்டி, ஊசி, நூல்கண்டு, பேனா, ஒரு குயர் பேப்பர், தமிழ்நாடு வரைபடம், சிறிய மணி வாங்கிக்கொண்டோம். ஊர் ஊராகப் போகும்போது, வழி நெடுக தட்டி ஏந்திச் செல்லவேண்டும் என நினைத்து, பூமித்தாயைக் காப்போம் என பூமியின் படத்தோடு கூடிய சிறியதொரு பேனரும் அச்சடித்துக் கொண்டோம்.

யாம் இருக்கிறோம் அம்மா. யாம் உங்களைக் காப்பாற்றுவோம். யாம் ஊர் ஊராகப் போய் உங்களைப் பற்றி பேசுவோம் அம்மா. உங்கள் அருமைகளை மக்களிடம் விளக்குவோம் அம்மா. புவி வெப்பமாவதால் உங்களின் பிள்ளைகள் படும்பாட்டை எடுத்துரைப்போம் அம்மா. வெப்பம் கூடினால் என்னாகும் என்பதை யாம் நன்றாக அறிந்திருக்கிறோம் அம்மா. வெப்பம் கூடினாலும் தாவர விலங்கினங்கள் பாதிக்கப்படும், குறைந்தாலும் உயிரினங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை மக்களிடம் யாம் தெளிவாகப் புரியவைப்போம் அம்மா. யாம் இருக்கிறோம் அம்மா. அம்மா யாம் உங்களைக் காப்பாற்றுவோம்.

யாரிடமும் யாசகம் கேட்கக் கூடாது. சேமிப்புக் கணக்கில் முப்பதாயிரத்திற்கும் அதிகமாகவே இருக்கிறது. சாப்பாட்டுக்கு ஒரு நாளைக்கு 100 ரூபாய் போதும். ஒரு மாதத்திற்கு 3000 ரூபாய். முதல் வருடத்தை எப்படியும் சமாளித்து விடலாம். ஒரு நாளைக்கு மூன்று ஊர்கள். மக்கள் கேட்கிறார்களே இல்லையோ பேசுவது கடமை. கடமையைச் செய்துவிட வேண்டும். மற்றதெல்லாம் கண்ணன் பாடு. வாக்குவழி அய்யா.. அப்பாவைப் பார்த்துக்கொள். கண்ணா. புறப்படுகிறோம். உய்ய வந்த விண்ணகரப் பெருமாளே. பூமியைக் காக்க கிளம்புகிறோம். நம் பூமி. நாம் வெல்வோம். நாம் எப்போதும் வெல்வோம் தந்தையே..

எங்கிருந்து தொடங்குவது. நம் ஊரிலிருந்து தொடங்குவதே சரி. இவர்களிடம் எப்படி பேசுவது. எமக்கு ஏதோ ஆகிவிட்டது என நினைப்பார்களே. எமக்கு என்னாயிற்று எனப் பதறுவார்களே. அப்பா என்ன சொல்லுவார். எம்மை நினைத்து வருந்துவாரே. தொடங்குவதற்கு முன்னால் தாய் தந்தை ஆசிகள் பெற்று தொடங்குவோமா. ஆம். அதுதான் சரி. ஸ்ரீரங்கம் சென்று அங்கிருந்து பயணத்தைத் தொடங்குவோம்.

வீட்டாரிடம் ஆசிகள் பெற்று பயணத்தைத் தொடங்கினோம். மதுரை எம்ஜிஆர் பேருந்து நிலையத்தில் வெகுநேரம் நிலவைப் பார்த்து அமர்ந்திருந்தோம். ஏதேதோ நினைவுகள். மனமெல்லாம் கனவுகள். யாம் யார். உண்மையிலேயே யாம் யார்.. யாம் தான் கண்ணனா. யாம் கண்ணனெனில் அச்சுதன் யார். அக்ஷயா யார். எம்மை நினைத்து ஏங்குவார்களோ. எப்போதும் விளையாடிக்கொண்டே இருப்போமே. அப்பாவை எங்கே எனக் கேட்பார்களோ. அக்ஷயா எம்மிடம்தானே உறங்குவாள். கால் வலித்தால் யார் பிடித்துவிடுவது. காலையில் காலுறை யார் மாட்டி விடுவார். எம்மை மன்னியுங்கள் செல்வங்களே. உங்களைவிட எமக்கு உலகம் பெரிதாய் தெரிகிறதே. எம் கடமை இது அன்புக் குழந்தைகளே. யாம் இதற்காகவே பிறந்திருக்கிறோம். கண்ணா.. தமிழரசிக்கு பொறுமையைக் கொடு. எம் குடும்பத்தைப் பார்த்துக்கொள். யாம் மனம் மாறமாட்டோம் கண்ணா. இதோ திருச்சி பேருந்து. நன்றி தந்தையே.

இராமானுஜர் நம்மைப் போல்தான் உலகமே பெரிதென்று முடிவெடுத்தாரோ. எத்தனை உயர்வானவர். எவ்வளவு ஞானம்.. எவ்வளவு அன்புள்ளம் இருந்திருந்தால் எளியோரெல்லாம் சுவர்க்கத்திற்குப் போகவேண்டுமென விரும்பியிருப்பார்.

கருணைக்கடலல்லவா. இல்லறத்தை எப்படித் துறந்தீர்கள் தந்தையே. உங்களைப்போல் எம்மால் ஏன் முடியவில்லை.

கலி தந்த வலியை நலிவுறச் செய்த துளிர்மிக்க செந்நெல்லே. திருமாலின் குடையே. இணையடிகள் போற்றுகிறோம் எம்பெருமானாரே. எமக்குத் துயரில்லை. தந்தையே. உம்துணை..

புத்தா. ஐயனே. அருளே. ராகுலை எப்படிப் பிரிந்தீர்கள் தந்தையே. உண்மையை அறியவா. மக்களின் துயர் போக்கவா. நிப்பனம் அடையவா. ஞானத்தந்தையே.. யாம் யார்.

காஞ்சியில் பெரும்புகழ் பெற்றிருந்த சாக்கியமுனி யார். காஞ்சியின் வைஷ்ணவ மாமுனி யார். தந்தையரே நாம் யார்.

ஸித்தார்த்த ஸித்தசங்கல்ப ஸித்தித ஸித்திசாதனஹ. கண்ணனின் பெயர்கள்தான் எத்தனை இனியவை. அமிர்தத்தைக் காட்டிலும் தித்திப்பான ஆயிரத்தையும் சொல்லிக்கொண்டே அரங்கமாநகர் நோக்கிப் பயணம் தொடர்கிறது.

விடியும் முன்னரே அரங்கத்தை அடைந்துவிட்டோம். ரங்கா கோபுரத்தின் முன் வெகுநேரம் அமர்ந்திருந்தோம். நன்றாக விடிந்தபின் மொட்டை போட்டு பொன்னியில் நீராடி, புது வேட்டி, துண்டு அணிந்துகொண்டோம். தோள்பையை அங்கேயே போட்டு விட்டோம். தந்தையே.. புதுயுகம் படைக்க புறப்பட்டுவிட்டோம். யாம் இருக்கிறோம் தந்தையே. நீங்கள் வாள் எடுக்கவேண்டாம். மக்கள் அன்பானவர்கள். யாம் மக்கள் மனங்களை மாற்றுவோம். எம்மால் முடியும் தந்தையே. எமது முயற்சி வெற்றி பெறட்டும். திருவே தஞ்சம்.. திருவரங்கனே தஞ்சம்.. தஞ்சமடைந்த நம் இராமானுஜனே தஞ்சம்..

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வித் திருக்காப்பு.. பல்லாண்டு பாடிக்கொண்டும், மணியடித்துக்கொண்டும் வானளாவிய உயர்ந்த கோபுரத்தை நோக்கி நடக்கிறோம்.

ஆண்டாள் சந்நிதி சென்று பூமியைக் காப்போம் அம்மா ஆசிர்வாதம் அருளுங்கள் என வேண்டிக் கொண்டோம். ஒவ்வொரு சந்நிதியிலும் வணங்கி ஆசிகள் வேண்டினோம். திருவரங்கத்தாயார் பாதம் பணிந்தோம். தந்தையைக் காண இலவசத் தரிசனத்தில் நின்று கொண்டோம். எப்படியும் இரண்டு மணி நேரமாவது ஆகும். அதற்குள் நானூறையும் சொல்லிவிடலாம். பல்லாண்டு பல்லாண்டு. தாமரைக்கண்ணா. ஸ்ரீஹரி. அரங்கத்து அப்பா அம்மா. புத்துலகம் படைக்க அருளாசிகள் வழங்குங்கள்.

மதியத்திற்கு மேல் கொள்ளிடம் காவிரிக்குச் சென்று சுற்றித் திரிந்தோம். நெடுநேரம் குளித்தோம். ஸ்ரீரங்கத்திலேயே தங்கிவிட்டால் என்னவென்று எண்ணம் வந்தது. விடுதிகளில் விசாரித்துப் பார்த்தோம். கட்டுபடியாகாது எனத் தெரிந்தது. மனம் கொந்தளிக்கத் தொடங்கியது. கோவிலைச் சுற்றி வந்தோம். மண்டபங்களில் உட்கார்ந்தோம். சிலைகளைப் பார்வையிட்டோம்.

மாலையானது. இரவானது. கிளம்ப வேண்டியதுதான். நன்றி கண்ணா.

இதோ இராமனுஜர் சந்நிதி.. இராமனுஜர் சந்நிதியைப் பார்க்காமல் செல்கிறோமோ. இராமனுஜ முனியை வணங்கி வாழ்த்துப் பெற்றுச் சொல்வோம்.

பேரருளாளனை வணங்கி, உடையவரைப் பணிந்து, துளசித் தீர்த்தம் வாங்க கைநீட்டுகிறோம். மனதில் அடுத்து எங்கே போவது தந்தையே எனும் எண்ணம் உதிக்கிறது. கோயம்புத்தூருக்கு எனும் குரல் கேட்டு உடல் சிலிர்த்தது. இதென்ன மாயம்.. அங்கிருந்த யாரோ யாருக்காகவோ சொன்னதுதான் அது. யாம் எங்கே போவது என நினைக்கும்போது ஏன் கோயம்புத்தூருக்கு எனச் சொன்னார்கள். எமக்காகத்தான் சொன்னார்களா. எமக்காகத்தான் சொல்லவைக்கப்பட்டார்களா.. எம் கேள்விக்கான பதிலா இது.. இராமானுஜர் எம்மை கோயம்புத்தூருக்குப் போகச் சொல்கிறாரா.. எப்படிப் போவேன் கண்ணா. எத்தனைமுறைதான் இப்படி வருவதும் போவதுமாக இருப்பது.. மாட்டோம் கண்ணா. யாம் தீர்மானமாக வந்துவிட்டோம். இனி எம்மைப் போகவைக்காதே. உறுதியாக வந்துவிட்டோம் கண்ணா. இதுவே எமக்கான பாதை.

பொருட்காப்பு அறையிலிருந்து துணிப்பையை வாங்கிக்கொண்டோம். யாம் திரும்பிப் போகவேண்டுமா தந்தையே. ஸ்ரீரங்கா கோபுரத்தின் முன் கைகூப்பி

நிற்கிறோம். காலையில் இதே இடத்தில் எவ்வளவு ஆசையோடும், உறுதியோடும் நின்றோம். அரை நாளுக்குள் அனைத்தையும் மாற்றிவிட்டீர்களே தந்தையே.. என்ன ஆனாலும் சரி. யாம் திரும்பிப் போகமாட்டோம் கண்ணா.

பெரிய கோபுரம் தாண்டி நடக்கிறோம். எங்கே போவது. ஏறிட்டுப் பார்த்தால் மருதமலை பேருந்து நிற்கிறது. இதென்ன விந்தை. எத்தனைமுறை வந்திருக்கிறோம். ஒருமுறைகூட ஸ்ரீரங்கத்தில் கோயம்புத்தூர் பேருந்தைப் பார்த்ததில்லையை. இன்றைக்குப் பார்த்து எதனால் இந்தப் பேருந்து நிற்கிறது. கோயம்புத்தூர் போறவங்க ஏறிக்கோங்க. மாயங்கள் செய்யும் கண்ணா. யாம் ஏறமாட்டோம்.

அங்குமிங்கும் நடக்கிறோம். நடைபாதையெங்கும் பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள். உட்கார்ந்தும், படுத்தும், கூடிப்பேசியும். யாம் அவர்களையே பார்த்துக்கொண்டிருக்கிறோம். எம்மால் இப்படி வாழமுடியுமா.. மாட்டோம் தந்தையே. ஒருபோதும் மாட்டோம்.

சத்திரம் நிலையம் செல்வோம். அங்கிருந்து ஏதேனுமொரு பேருந்தில் ஏறிக்கொள்வோம். மற்றதை பின்னர் தீர்மானித்துக் கொள்ளலாம். வீட்டைவிட்டு வந்து ஒருவாரம் ஆகப்போகிறதே. அச்சுதன் கேட்பானோ. அக்ஷயா தேடுவாளோ. அலைபேசியையும் எடுக்காமலேயே வந்துவிட்டோமே. பிள்ளைகளோடு ஒருமுறை பேசிவிட்டுக் கிளம்புவோமா.

அலோ. அச்சுதா. அப்பா எங்க இருக்கீங்க. வீட்டுக்கு வாங்க. அப்பா அக்ஷயா பேசுறோம். நீங்க எங்க இருக்கீங்கன்னு தெரியும். நீங்க எங்கயும் போகக்கூடாது. நேரா வீட்டுக்குத்தான் வரணும். அப்பா. மறுபடியும் சொல்றோம். எங்கயும் போகக்கூடாது. எமக்கு எல்லாமே தெரியும். காலைல நீங்க வீட்ல இருக்கணும். வந்திடுங்க.

இதென்ன பேச்சு. எப்படிக் கண்ணா பேசினாள். அருள்வாக்கு மாதிரியல்லவா பேசிவிட்டாள். யாம் எங்கோ போகிறோம் என்பதை எப்படி அறிந்தாள்.

யமுனையின் நாயகனே. அன்பின் மழையே. எம்மை வீட்டுக்குத் திருப்பியனுப்ப படாதபாடுபடுகிறாயா முகுந்தா. யாம் கஷ்டப்படுவோம் என நினைக்கின்றாயா கண்ணா.

யாம் சுகமாய் வாழவேண்டுமென விரும்புகிறீர்களா தந்தையே. நீங்கள்தான் எப்போதும் வெல்கிறீர்கள் தந்தையே.

ஸ்ரீரங்கநாதா. வைகுந்தப்பதியே. அரங்கத்து அப்பா. யாம் ஊருக்குச் செல்கிறோம். பதியதோர் உலகம் செய்வோம் புத்தகத்தை எழுதி முடித்து வெற்றி மகனாக பூலோக வைகுந்தம் காண வருவோம் தந்தையே. அரங்கத்தரசின் வானுயர்ந்த கோபுரத்தை வணங்கிப் பறப்பட்டோம்.

புத்தகத்தை எழுதத் தொடங்கியது 14.04.2014. ஜய வருடத்தின் சித்திரை ஒன்றாம் நாளில். அமுதினும் இனியனை, அன்பு உளனை, அருள் மிக்கானை, தீராக் காதலனை, புனிதனை, வீரனை, சூரனை, தாயின் நல்லனை, இறையை, ரங்கநாயகியின் மங்களமானவரை, பொங்கும் பொன்னியை மாலைசூடிய நாரணனை, ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தமெனும் தேவாமிருதத்தை நாள்தோறும் பருகும் ஸ்ரீரங்கநாதனை வெற்றிமகனாகப் பணிந்தது விளம்பி ஆண்டு ஆனி முழுநிலவன்று. நான்கு வருடங்களுக்குப்பின் தந்தையைக் காணச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லமுடியுமா. ஸ்ரீபராசரர் அருளிய திவ்யமான ஸ்ரீரங்கநாத அஷ்டகத்தை தந்தையாம் அரங்கருக்கு அர்ப்பணித்தோம். எவ்வளவு மதுரமான அஷ்டகம்.. மதுரம் நம் தந்தை. கண்ணன் மதுரம். இராமன் மதுரம். அகிலம் மதுரம். அனைத்தும் மதுரம்.

ஹரியே ஆனந்தம் பதமே ஆனந்தம் கிரியே ஆனந்தம் ஒளியே ஆனந்தம்

பதியே ஆனந்தம் பரமே ஆனந்தம் பிரம்மம் ஆனந்தம் பிரணவம் ஆனந்தம்

திருமண் ஆனந்தம் திருவடி ஆனந்தம்

அகிலம் ஆனந்தம் அரங்கம் ஆனந்தம்

ஆனந்தம் பேரானந்தம்.. ஆனந்தம் பரமானந்தம்..

இரண்டு வருடங்களில் எமுதி முடித்துவிடலாம் என நினைத்ததற்கு மாறாக, நான்கு வருடங்களுக்கும் மேலான காலத்தை எடுத்துக்கொண்டது எழுத்துப் பணி. முதலாவது தினமும் எழுத முடியவில்லை. அன்றாட கல்லூரிப் பணிகள், வீட்டுமுறைகள், மாணவா் ஆராய்ச்சித் திட்டங்கள், மனைவியின் ஆராய்ச்சிக்கு

உதவி, பிள்ளைகளை சிறப்பு வகுப்பிற்கு அழைத்துப் போவது, திரும்ப அழைத்து வருவது என அனைத்தையும் கவனித்துக்கொண்டே தினமும் எழுதுவது பெரும்பாலும் முடியவில்லை. எழுதுவதற்கு கொஞ்சமேனும் தொடர்ச்சியான நேரம் கிடைப்பது அவசியம். முழுநேர எழுத்தாளராக இருப்பது கூடுதல் வசதி. யாம் தோடர்ச்சியாக எழுதியது குளிர்கால விடுமுறையான நவம்பர் மாதம் மற்றும் ஏப்ரல் தொடங்கி ஜூன் வரை கிடைக்கும் இரண்டரை மாத கோடை விடுமுறைக் காலம். இடையில் வந்த சனி, ஞாயிறு மற்றும் பிற விடுமுறை நாட்களை முழுமையாக எழுத்துப் பணிக்கென ஒதுக்கிக் கொண்டோம்.

நன்கு திட்டமிட்டே எழுதத் தொடங்கினோம். யாம் யார், நாம் யார் மற்றும் புதிய உலகம் செய்வோம் எனும் மூன்று புத்தகங்களை எழுதுவதே முதலில் திட்டமாக இருந்தது. யாம் யார் புத்தகத்தை 2014 கோடை, குளிர் மற்றும் 2015 கோடை விடுமுறை காலத்தில் எழுதி முடித்தோம். எழுவதற்கு முன்பே எதையெல்லாம் எழுதவேண்டும் என்பதைத் தெளிவாகக் குறித்துவைத்திருந்தோம். எம்மைப் பற்றி அதிகம் எழுதிவிடக்கூடாது எனவும் நினைத்தோம். ஊர்க்காரர்கள் அனைவரையும், குறைந்தது அவர்களது பெயர்களையாவது குறிப்பிடவேண்டும் என விரும்பினோம். ஊரில் தங்கி நீண்ட காலமாகிவிட்டிருந்தபடியால் சிலரது பெயர்கள் விடுபட்டன. எமது அக்காவிடம். அப்பாவிடம் கேட்டுத் தெரிந்துகொண்டோம். அவ்வாறே சில பெயர்களை கருப்பசாமி, இராஜாராம், முனியசாமி, சின்னு மற்றும் காங்கேயன் மூலம் தெரிந்து கொண்டோம். சில பெயர்களை ஊரின் வாக்காளர் பட்டியல் கொண்டும் அறிந்தோம். ஒரு ஊராக இருந்தாலும், எமக்கு தனிப்பட்டு சிறிதுதுகூட அறிமுகம் இல்லாதவர் பெயரை யாம் குறிப்பிடவில்லை.

யாம் யார் புத்தகத்தை கல்லூரிக்கு அருகிலிருந்த திருமதி. லெட்சுமியம்மாள் தட்டச்சு செய்தார். மிகுந்த ஈடுபாட்போடு தட்டச்சு செய்த கொடுத்த அம்மையாருக்கு மிக்க நன்றி. பிழை திருத்துவது பெரும்பணியாக இருந்தது. சில நேரங்களில் யாமும் உடனிருந்து உதவி செய்தோம். எத்தனைமுறை பிழை திருத்தினாலும் எழுத்துப் பிழைகள் புதிதாகத் தெரிந்தன.

யாம் யார் புத்தகத்தை எழுதும் காலத்தில் எமது கனவுகளைக் கவனிக்க ஆரம்பித்தோம். சில கனவுகள் தொடர்ச்சியாக வருவதை அறிந்தோம்.

சிறுவயதிலிருந்தே எமது மனம் கனவுகளால் நிறைந்திருப்பதை அறிந்தே வந்தோம். எமது கனவுகளுக்கு குறியீட்டுத் தன்மைகள் உண்டென்றும், ஏதேனும் ஒருவகையில் சமூகத்திற்குப் பயனுள்ளதாக இருக்குமென்றும் மனதில் எண்ணங்கள் ஏற்பட்டன. ஆகஸ்டு மாத இறுதியிலிருந்து எமது கனவுகளை உள்ளது உள்ளபடி எழுத ஆரம்பித்தோம்.

கனவிலிருந்து விழிப்பு வந்தவுடன் அலைபேசியில் கனவுகளை குறிப்புகளாக எழுதிவைத்துக்கொண்டோம். பின்பு நேரம் கிடைக்கும்போது குறிப்புகளை விவரித்து நோட்டில் எழுதி, தட்டச்சு செய்தோம். கனவுகள் முடிந்தவுடன் பெரும்பாலும் விழித்துக்கொண்டோம். கனவுகளின் பின்விளைவாக, கனவிலிருந்து விழித்தவுடன் மேற்கொண்டும் தூங்க முடிந்ததில்லை. கனவு முடிந்து எழுந்தவுடன் அலைபேசியில் காட்டும் நேரத்தை கனவு கண்ட நேரமாகக் குறித்தோம். கனவு கண்டு அதிகாலை மூன்று மணிக்கு அலைபேசிவில் பதிந்துவிட்டோமெனில் அதன்பின் விடியும் வரைக்கும் தூக்கம் வராது. ஏற்கனவே தூக்கம் வராத பிரச்சினையோடு கனவுகளும் சேர்ந்துகொள்ள உடல்நலம் கெட ஆரம்பித்தது. ஆகஸ்டு தொடங்கி ஏப்ரல் வரை தொன்னூறு கனவுகளுக்கும் மேல் எழுதிவிட்டிருந்தோம். 2015 தமிழ்ப் புத்தாண்டோடு கனவுகளை முடித்துக்கொள்ளலாம் எனத் திட்டமிட்டு, கடைசியாக விடிந்தபின் கண்ட பெருமாள் ஊர்வலக் கனவோடு முடித்துக் கொண்டோம்.

கனவுகளை எழுத வேண்டாம் என முடிவெடுத்த பின்னும் கனவுகள் விட்டபாடில்லை. மேலும் சில கனவுகளை குறித்தோம். உறக்கம் வராதது, அதனால் உண்டான உடல்நலப் பாதிப்பைக் கருதி, இனிமேல் கனவுகளை பதியவே கூடாது எனும் தீர்மானமான முடிவை எடுத்தோம். ஓரளவிற்கு உறக்கம் வராததிலிருந்து மீண்டிருக்கிறோம். ஆனாலும் கனவுகள் தொடரத்தான் செய்கின்றன. தற்போதும் மனம் கனவுகளால் நிறைந்திருக்கிறது என்பதே உண்மை.

கண்ட கனவில் முக்கியமானவரையோ, முக்கிய நிகழ்வையோ கனவுக்கான தலைப்பாக வைத்திருக்கிறோம். பெயர்களைக் குறிப்பிடவேண்டாம் என சிலரது பெயர்களை குறியீட்டுப் பெயரில் சுட்டியுள்ளோம். பின்னாட்களில் புத்தகமாக வெளியிடும்போது முடிந்தால் அன்னார்களது சம்மதம் பெற்று உண்மைப் பெயர்களோடு வெளியிடலாம் என நினைத்திருக்கிறோம்.

2015 நவம்பரில் நாம் யார் புத்தகத்தை எழுத ஆரம்பித்தோம். யாம் முன்னரே உலகின் வரலாறு, புவியமைப்பு பற்றி ஓரளவிற்கு அறிந்தே இருந்தோம். சிறுவயது முதலே படிப்பில் ஆர்வமிருந்ததால் உலகைப் பற்றிய ஒரு ஒட்டுமொத்த சித்திரத்தை உள்வாங்கியிருந்தோம். யாம் யார் எழுதத்தொடங்கியபோதுதான் தெரிந்தது கற்றது கைமண்ணுக்கும் குறைவென்று. எதையும் தவறாக எழுதிவிடக்கூடாதே எனும் எண்ணத்தில் ஒவ்வொரு சிறு தகவலையும் சரிபார்க்க வேண்டியிருந்தது. விளைவாக, அனைத்தையும் படித்து, உள்வாங்கி, ஒன்றுக்கும் மேற்பட்ட தரவுகளைத் தேடி, குறிப்பெடுத்து.. எழுதுவது மிகக் குறைவாகவும் படிப்பதோ எந்நேரமும் எனும் நிலையாகிவிட்டது. எவ்வளவு படித்தாலும் போதவில்லை. உலகின் மதங்கள் குறித்து யாம் பட்டம் பெற்றிருந்தும் அது எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை. உலகின் தத்துவங்களோ கடலளவாக இருக்கின்றன.

மணிக்கணக்காக எழுதிக்கொண்டே இருப்பது, தொடர்ந்து வாசிப்பது, நடைப்பயிற்சி போகாதது, பிள்ளைகளோடு விளையாடாதது எல்லாமுமாகச் சேர்ந்து முதுகுவலி, இடுப்புவலியாக மாறிவிட்டது. இதோ முடித்துவிட்டோம், இன்னும் கொஞ்சம்தான், ஒரு மாதத்தில் முடித்துவிடலாம் என உடல்நலத்தைப் பேணாதது கடுமையாக முதுகுவலிக்கு காரணமாகிவிட்டது. ஆனாலும் எழுதுவதை விட்டபாடில்லை.

2016 கோடை விடுமுறையில் தமிழக சட்டமன்றத் தேர்தல் வந்ததால் எழுதுவதில் சுணக்கம் ஏற்பட்டது. தேர்தல் பிரச்சாரங்கள், முடிவுகள், பதவியேற்பு என தமிழக அரசியல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. யாம் யார் புத்தகத்தை அய்யா, அம்மா என தமிழக அரசியலில் ஆரம்பித்து, உலகின் வரலாற்றைச் சொல்லி, அவர்களிலேயே முடிக்கத் திட்டமிட்டிருந்ததால், தமிழக அரசியல் போக்கை யாமும் உன்னிப்பாகக் கவனித்து வந்தோம்.

யாம் யார் பத்தகத்தின் ஏழாம் பிரிவான திராவிடத்தின் மைசூர் வரை எழுதிவிட்டோம். இந்த வேகத்தில் எழுதினால் இன்னும் ஓரிரு மாதங்களில் யாம் யார் புத்தகத்தை முடித்துவிட்டு, நவம்பரில் புதிய உலகம் செய்வோம் தொடங்கிவிடலாம் என மகிழ்ந்திருந்தோம். கோடை விடுமுறையில் மைசூர் உடையார் பற்றி எழுதியிருந்தோம். மகிசூரு தெய்வமான மகிசாசுரவர்த்தினி பற்றி எழுத

ஆரம்பித்தோம். அத்தோடு எழுதுவதில் பெரிய இடைவெளி வந்துவிட்டது. ஏனோ தொடர்ந்து எழுத முடியவில்லை. எப்போது எழுத உட்கார்ந்தாலும் எழுதுவதற்கான மனம் கூடவில்லை. ஏதோ தடங்கல். மனதில் ஏன், என்னாயிற்று எனக் கேள்விகள். புதிய உலகம் செய்வோம் புத்தகத்திற்கான குறிப்புகள் எழுத அரம்பித்தோம். மொத்தமாக மிகப் பெரியதொரு முன்னுரை எழுதவேண்டுமெனும் நோக்கில் முன்னுரைக்கும் குறிப்புகள் எடுக்க ஆரம்பித்தோம்.

நாட்கள் நகர்ந்துகொண்டேயிருக்கின்றன. முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு உடல்நிலை முடியாதது, நெடுநாட்களாக மருத்துவமனையிலிருந்தது, இறந்தபின் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் என தொடர்ந்து எழுதுவதற்கான சூழல் வாய்க்கவில்லை. 2017 மார்ச்சில் மீண்டும் எழுத ஆரம்பித்தோம். ஏப்ரலில் விலங்கியல் துறை சார்பாக கல்லூரி தேர்வுப் பணிகள் இருந்தன. பகல் முழுக்க எழுத முடியவில்லை. 2016 தொடங்கி கிட்டத்தட்ட ஒரு வருடம் படிப்பதும், குறிப்புகள் எழுதுவதுமாகக் கழிந்தது. ஒருவழியாக மைசூரு சாமுண்டியை எழுதி, நான்காம் கிருஷ்ணராஜ அரசர், தசரா, கன்னட இலக்கியம் என எழுதுவதைத் தொடர ஆரம்பித்தோம்.

இதற்கிடையில், புத்துலகம் படைப்பதற்கான காலம் கனிந்துவிட்டதாகக் கருதி, 2017 ஏப்ரல் பதினொன்று அன்று தமிழ் ஹிந்து நாளிதழில் **புத்துலகு வாழ்த்துக்கள்** எனும் விளம்பரம் வெளியிட்டோம்.

2017 மேமாதத் துவக்கத்தில் எட்டாம் பகுதியான சேரளத்தை ஊரில் தொடங்கினோம். மளமளவென்று எழுத்து முன்னேறிச் சென்றது. தொடர்ந்து ஒன்பதாம் பகுதியான காந்தியை ஆரம்பித்தோம். காலம் கருதி வட தென் அமெரிக்க வரலாற்றை சுருக்கமாக எழுதவேண்டி வந்தது. ஆப்பிரிக்க வரலாறு மீண்டும் நீள ஆரம்பித்தது. விரைந்து முடிக்கவேண்டுமே எனும் பதற்றம் தொற்ற ஆரம்பித்தது. எப்படியும் புத்தகத்தை 2017 பதினெட்டாம் பெருக்குக்குமுன் வெளியிட வேண்டும் என முயன்றோம். எழுத்துப் பிழைகள் அதிகமிருந்தன. நாம் யார் புத்தகத்தை தட்டச்சு செய்தது திரு. அரவிந்தன் மற்றும் நவநீத கிருஷ்ணன். இருவருக்கும் நன்றி. நவநீதகிருஷ்ணன் எமது கல்லூரி இயற்பியல் மாணவர். ஐஸ்வர்யா தட்டச்சை தெரிந்துகொண்டு, யாமே பிழை திருத்தும் பணியை மேற்கொண்டோம். கொடுமையான

முதுகுவலியில், நாளெல்லாம் கணினிமுன் அமா்ந்து பிழை நீக்குவது கடுமையான பணி.

2017 ஆகஸ்டு ஒன்றில் **நாங்கள் காப்பவா்கள்** விளம்பரமும், ஆகஸ்டு மூன்றில் உலகை அளக்கட்டுமா - **Shall i measure** விளம்பரமும் தமிழ் ஹிந்துவில் வெளியிட்டோம். உலகை அளக்கட்டுமா விளம்பரம் கோயம்புத்தூா் பதிப்பில் முழுபக்கமும், சென்னை பதிப்பில் பெட்டி விளம்பரமாகவும் வெளியிட்டோம். அா்த்தம் தெரிந்தோ அல்லது அா்த்தம் கேட்டோ யாராவது விசாரித்தால் எமது அலைபேசி எண்ணைக் கொடுங்கள் என விளம்பர முகவரிடம் சொல்லியிருந்தோம். கோவை, சென்னை என ஒருவருக்குக்கூட விளம்பரம் குறித்த செய்தி செல்லாதது வியப்பு. விளம்பரங்களுக்கு மூன்று இலட்சம் வரை செலவானது தெரிந்தால் வாக்குவாதம் வரும் என்பதால் விளம்பரங்கள் குறித்து மனைவியிடம் சொல்லவில்லை.

ஆடி 18க்குள் புத்தகம் முடியாததால், நாம் யாா் புத்தகத்தில் மேற்கொண்டு எழுதவேண்டியவற்றை பரிசீலித்தோம். நிறைய விடுபடல்கள் இருப்பது தெரிந்தது. முன்னா் நாம் யாா் புத்தகத்தை பதினெட்டுப் பாகங்களாகப் பிரித்திருந்தோம். பதினெட்டாவது பாகத்தை எழுதிக்கொண்டிருந்தோம். விரைவில் முடியும் எனும் மகிழ்ச்சியிருந்தாலும், புத்துலகம் செய்வோம் புத்தகத்தையும் எழுதிமுடிக்க வேண்டுமே என சற்று பதற்றமாகவும் இருந்தது. புத்துலகம் செய்வோம் புத்தகத்தை எழுதாமல் மக்களிடம் நேரிடையாகப் பேசினால் என்ன எனும் எண்ணம் வந்தது. அது குறித்து மனதிற்குள் கடும் போராட்டம். இறுதியில் புத்துலகம் செய்வோமை எழுத்தில் பதியக்கூடாது என முடிவெடுத்து, முடிந்தால் பேசுவோம், இல்லையேல் குறிப்புகளை விரிவாக்கி பின்னா் எழுதிக்கொள்ளலாம் எனும் நிலைப்பாட்டை எடுத்தோம்.

2017 ஆம் ஆண்டின் அக்டோபா் மாத இறுதியில் யாம் யாா் புத்தகத்தின் இறுதிப் பகுதியான **தமிழா்களே. நாம் யாா். நமது நாடு எது. நம் மக்கள் யாவா்** பகுதியை எழுத ஆரம்பித்தோம். தாளில் எழுதாமல் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தோம். குளிா் விடுமுறை என்பதால் எழுத்து நவம்பா் மாதம் முழுக்கத் தொடா்ந்தது. உண்மையில் இப்பகுதியை எழுதுவதுதான் பெரும் சவாலாக இருந்தது. ஒவ்வொன்றையும் எழுதுவதற்குமுன், ஏன் எதற்கு எனும் கேள்விகள். இடம், பொருள் அறிய

வேண்டியிருந்தது. எண்ணிக்கையில் கவனம் கொண்டோம். எழுதியது மீள வராமல் பார்த்துக் கொண்டோம். பழற்சொற்களை எடுத்தாண்டோம்.

எமது மனம் முற்றாக மாறிவிட்டிருந்தது. தொடர்ந்த எண்ணக்குவியல்கள். யாம் வேறொருவராகவே மாறிவிட்டிருந்தோம். தூங்க முடியவில்லை. உடல் நலக் குறைகள். எமது குழந்தைகளைப் பரிசீலிக்கும் மருத்துவரைப் பார்த்தோம். மருத்துவர் அதீத இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு என்றார். தெரிந்த மருத்துவர் என்பதால் எமக்கு என்னாயிற்று எனக் கேட்டார். யாம் p+q=1 எனும் பெயரில் ஒரு புத்தகம் எழுதுவதாகவும், அதன் இறுதிப் பகுதியை எழுதிக்கொண்டிருப்பதாகவும், அது குறித்த சிந்தனைகள் மனம் முழுக்க நிறைந்திருப்பதாகவும், உறக்கம் வராததால் சோர்வாக இருப்பதாகவும், நன்றாகத் தூங்கியெழுந்தால் சரியாகிவிடுமென்றும் சொல்லி, முன்னர் பயன்படுத்திய லோனாசெப் மாத்திரைகள் பரிந்துரைக்கக் கேட்டோம். மருத்துவர் மிகவும் யோசித்தார். எமக்கு இதற்கு முன்னரும் இப்படி வந்திருப்பதாகக் கூறினோம். எதற்கும் மனநலமருத்துவரைப் பாருங்களேன் என்றார். ஏகப்பட்ட கேள்விகள் கேட்பார்கள் எனச் சொல்லி, உறங்கினால் சரியாகிவிடும் என்றோம். ஆனாலும் தயங்கித்தான் மாத்திரை எழுதிக் கொடுத்தார். கூடவே இரத்த அழுத்தம் குறைக்கும் மாத்திரைகளும் கொடுத்தார். வாரம் தவறாமல் இரத்த அழுத்தம் பார்க்கவேண்டும் என்றார். புத்தகத்தை முடித்து தமக்கும் ஒரு பிரதி கொடுக்கச் சொன்னார். கண்டிப்பாகக் கொடுக்கிறோம், நன்றி மேடம் எனச் சொல்லி விடைபெற்றோம்.

ஓரளவிற்கு உறங்கியும் மனம் சரியாகவில்லை. எழுதி முடித்தே ஆகவேண்டும், என்ன ஆனாலும் சரி என தொடர்ந்து எழுதினோம். மார்கழி மாதத்திலும் எழுத்துப்பணி தொடர்ந்தது. மருத்துவரிடம் வாராவாரம் இரத்த அழுத்தமும் சரிபார்த்துக் கொண்டோம். கிருஷ்ணமாச்ரயே என யாம் யார் புத்தகத்தை முடித்தபோது மனதில் சாதித்துவிட்டோம் என மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. மனதில் அமைதியும் உண்டானது. ஆச்சரியமான தந்தைக்கு நன்றிகள்.

நாம் யார் புத்தகத்தில் குறிப்பிடப்படுகிறது, கூறப்படுகிறது, கருதப்படுகிறது, அறியப்படுகிறது போன்ற சொற்களை நீக்கிவிட்டால் பக்கங்கள் நிறையவே குறையும் என்பது உறுதி. ஆனாலும் யாம் இந்தச் சொற்களையே அதிகமும் பயன்படுத்தியிருக்கிறோம். காரணம் அடிப்படையான கேள்விதான். நாம் உண்மையான

வரலாற்றைத்தான் எழுதியிருக்கிறோமா. எழுதப்பட்டுள்ளதெல்லாம் வரலாறு என்றாகிவிடுமா. ஒரு வருடத்திற்குள் நிகழ்ந்ததே வேறுமாதிரியான வரலாறாக மாறும்போது, ஆயிரமாயிரம் ஆண்டு வரலாறுகளை, அதுவும் கிடைத்திருக்கும் மிகக்குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு, எப்படி இதுதான் வரலாறு என எடுத்தாள்வது. வெள்ளையர் இந்திய சுல்தான்களை எப்படி வென்றார். இந்தியர் இசுலாமியரை அகற்ற வெள்ளையரோடு சேர்ந்துகொண்டாரா. நமது பாடப்புத்தகங்களில் இப்படியெல்லாம் ஏதேனும் சிந்திப்பதற்கு இடமிருக்கிறதா. வரலாற்றை எழுதுகிறவர்களின் நோக்கம் என்னவாக இருக்கிறது என்பதும் முக்கியமல்லவா. சாதி சார்ந்தும். மொழி, இனம், மதம், புவியியல் சார்ந்தும் ஏராளமான வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. வரலாறு வெட்டியும் ஒட்டியும் கூட்டியும் மாற்றியும் பலவாறாக எழுதப்பட்டுள்ளது என்பதாலேயே குறிப்பிடப்படுகிறது எனும் சொல் பெருவாரியாகக் கையாளப்பட்டிருக்கிறது.

பெரும்பாலும் யாம் விக்கிபீடியா தளத்திலிருந்தே அதிகமான தகவல்களை எடுத்தாண்டிருக்கிறோம். விக்கிபீடியா தளத்திலேயே தமிழில் எழுதப்பட்டுள்ளதற்கும் ஆங்கிலத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. தமிழில் பல இடங்களில் குறிப்பாக வருடங்கள் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. யாம் முடிந்தவரைக்கும் ஆங்கிலம், தமிழ் என இரண்டையும் சரிபார்த்தே எழுதியிருக்கிறோம். கூடுதல் தகவல்களுக்கு ஏதேனுமொரு வலைத்தளத்திலிருந்தும் எடுத்திருக்கிறோம். வலைத்தளங்களை குறிப்பிட்டால் மிக அதிகமாக இருக்கும் என்பதால் பெயர்களைத் தவிர்த்திருக்கிறோம். மதங்கள் குறித்த சொல்லாடல்களை அந்தந்த மதம் சார்ந்து சிறப்பாக எழுதப்பட்டுள்ள வலைத்தள எழுத்தை அப்படியே புத்தகத்தில் கொடுத்திருக்கிறோம். நாம் யார் புத்தகத்தில் எமது சொந்தக் கருத்துக்களை மிக அரிதாகவே குறிப்பிட்டுள்ளோம். குறிப்பாக ஆப்ரிக்க மக்கள் குறித்து, சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்து, ஒரு சில இடங்களில் குறிப்பிட்டுள்ளோம். காரணம் யாமும் அந்த வலியை உணர்ந்தவன் என்பதாலேயே.

நாம் யாரின் பத்தாவது பாகமும் எழுதியாயிற்று. ஆனாலும் போதுமென்ற எண்ணம் வரவில்லை. மேற்கத்திய தத்தவங்கள், தத்துவஞானிகள் குறித்து நிறைய குறிப்புகள் எடுத்திருந்தோம். ஆனாலும் அவற்றை எழுதியிருக்கவில்லை. அதிகமாகப்

படிக்கவேண்டும் என்பதால் பின்னர் பார்க்கலாம் என விட்டிருந்தோம். புத்தகத்தில் நவீன தமிழ் இலக்கியங்களையும், இலக்கிய ஆளுமைகளையும் தவிர்த்திருக்கிறோம். தமிழ் எழுத்துலகம் பெரியது. அனைத்தையும், அனைவரையும் பதிவிடுவது எளிதல்ல. விடுபடல்களைத் தவிர்க்கமுடியாது. அவ்வாறே மனம் குறித்தும், உளவியல், புகழ்பெற்ற உளவியலாளர்கள் குறித்தும் ஒன்றும் குறிப்பிட்டிருக்கவில்லை. இரண்டையும் எழுதத்தொடங்கினால் மேலும் தாமதமாகும் என்பதால் பின்னர் புத்தகமாக வெளியிடும்போது சேர்த்துக்கொள்ளலாம் என முடிவெடுத்துக்கொண்டோம். 2018 தமிழ் பத்தாண்டு தினத்தில் புத்தகங்களை வெளியிடலாம் எனும் அளவிற்கு திட்மிட்டிருந்தோம்.

யாம் யார் புத்தகத்தின் முதல்பிரதியை நகலெடுத்து எமது அப்பாவிடம் படிக்கக் கொடுத்தோம். அந்தவகையில் எமது எழுத்துலகின் முதல் வாசகர் அப்பாவே. ஆய்வேடு எழுதும் பணி இருந்ததால் மனைவி படிக்கவில்லை. மேலும் அவருக்கு புத்தகங்கள் படிப்பதில் சிறிதும் ஆர்வமில்லை என்பதும் உண்மை. நான்கு வருடங்களாக எழுதுகிறோம், என்னதான் எழுதுகிறீர்கள் எனக் கேட்டதே இல்லை.

முதலில் நன்றாக எழுதியுள்ளோம் என மகிழ்ந்தவர், ஊரில் நடைபெற்ற சாதிச்சண்டையைப் படித்ததும் ஏதும் பிரச்சினை வருமோ என நினைத்து நமக்கெதுக்குப்பா ஊர்வம்பு என்றார். எழுதியிருப்பது உண்மை தானேப்பா, பொய்யாக எதையும் எழுதியிருக்கிறோமா என்றோம். உண்மையைத்தான் எழுதியிருக்கே, இருந்தாலும் உண்மைக்கு எங்கே காலமிருக்கிறது என்றார். யாம் ஒருவாரம் விடுமுறை எடுத்து, நாம் யாரின் இறுதிப் பாகத்தை ஊரில் எழுதிக்கொண்டிருந்தோம். பகலெல்லாம் படித்தார். படிக்கப் படிக்க ஊர் பற்றியும் ஊரின் மக்கள் குறித்தும் யாம் பதிவு செய்தது குறித்து அவருக்கு நிரம்பிய சந்தோசம். நல்லா எழுதியிருக்க எனச் சான்றளித்தார். சட்டென அவருக்கு ஒரு ஐயம். நம்ம ஊர் பற்றி மத்தவங்க படிப்பாங்களா, புத்தகம் விக்குமா என வினவினார். புத்தகத்தை விக்கிறதுக்காக எழுதலப்பா, நம்ம ஊர் பற்றி எழுத்துல பதியனும்னுதான் எழுதியிருக்கோம் என்றோம்.

அடுத்து நாம் யாம் புத்தகத்தின் முதல்பாதியை படித்துப் பாருங்கப்பா எனக் கொடுத்தோம். அய்யா, அம்மா பற்றி ஆர்வமாகப் படித்தவர், கொஞ்சம் கொஞ்சமாக அரசியல்வாடை வந்தவுடன் மனம் பதறிவிட்டார். கட்சிக்காரங்களுக்குத் தெரிஞ்சா

போராட்டம் அது இதுன்னு பண்ணிடுவாங்களே என்றார். போராட்டம் பண்றதுக்கு என்ன இருக்கு, ஊருக்கே தெரிஞ்ச உண்மையைத்தானே எழுதியிருக்கோம் என்றோம். ஆமா ஆமா என ஒத்துக்கொண்டார். இருபது முப்பது பக்கங்கள் முடித்தபின்பு அவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. நல்லா எழுதியிருக்க கிட்ணா, நல்லா இருக்கு என மனம்கொள்ளாத மகிழ்சியோடு பாராட்டினார். முதல்பாகமான உயிர் முடித்துவிட்டு அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி. இந்தப் புத்தகம் நல்லா விக்கும் என்றார். கம்யூனிஸ்ட்டு கட்சிக்காரங்க புத்தகத்த ரொம்ப விரும்புவாங்க தம்பி என்றார். எப்படிப்பா சொல்றீங்க என்றோம். அவங்களுக்கு கண்டிப்பா ரொம்ப பிடிக்கும் என்றார். முன்னால் தஞ்சைக்காரராயிற்றே.

யாம் யார் புத்தகத்தின் இரண்டாவது வாசகர் எமது அக்கா. பிள்ளைகளை படிக்கச்சொல்லி கேட்டிருக்கிறார். அவருக்கும் யாம் நன்றாக எழுதியிருப்பதாகவே மகிழ்ச்சி. எப்படி அத்தனையும் ஞாபகம் வச்சி எழுதுன எனப் பெரும் வியப்பு. மார்ச்சில் அண்ணன் மகன் தவனேஷ்வரன் காதுகுத்து விழாவிற்கு ஊருக்குப் போயிருந்தபோது அக்காவோடு புத்தகத்தைப் பற்றி பேச்சு வந்தது. எம்மை யார் என நினைத்தீர்கள்.. யாம்தான் கிருஷ்ணரின் பத்தாவது அவதாரம் என்றோம். சிரித்தார். பிள்ளைகள் அதைவிடச் சிரித்தார்கள். நீங்க நம்புறீங்களாக்கா என்றோம். நம்புறமாதிரியும் இருக்கு நம்பமுடியாத மாதிரியும் இருக்கு என்றார். நல்லவேளை யாம் எமது அப்பாவிடம் யாம்தாம் கண்ணன் எனப் பேசவில்லை. யாம் ஊரில் இருக்கும்போதெல்லாம் உய்யவந்த விண்ணகரப்பெருமாள் கோவில் வாசலில் காலையும் மாலையும் வாழைப்பழங்கள் வைத்துவிட்டு வருவதையே கிண்டலடிப்பார். எம்மிடம் ஒன்றும் சொல்லமாட்டார். எமது மனைவியிடம், எங்கிட்ட கொடுத்தாலாவது சாப்புடுவோம், பூட்டிக்கிடக்கற கோவில் வாசல்ல போயி பழத்த வச்சிட்டு வர்றான் பாரு எனப் பேசிச் சிரிப்பாராம்.

முதல் இரண்டு வாசகர்கள், முதுநிலை பயின்றிருக்கும் எமது அக்கா பிள்ளைகள், யாம் நன்றாக எழதியிருப்பதாகச் சொன்னதில் கொஞ்சம் மகிழ்ச்சிதான். எம்மிடம் புத்தகம் நல்லாயில்லை எனச் சொல்ல முடியுமா என்ன.. எளிய கிராமத்துக்காரர்கள். இளகிய மனம் கொண்டவர்கள். உலக நடப்புகளோ,

இலக்கியங்கள் குறித்தோ ஒன்றும் அறிந்திராதவர்கள். எமது முதல் வாசகர்களுக்கு உளமார்ந்த நன்றிகள்.

**பெருமைமிகு தமிழரே..**

இந்தப் புத்தகங்கள் யாருக்காக எழுதப்பட்டுள்ளன. எழுதியதன் நோக்கமென்ன. தமிழர்களின் இலக்கிய தாகம் அறிந்துதான் இவ்வளவு பெரிய புத்தகம் எழுதப்பட்டுள்ளதா. தமிழர்கள் படிக்கிறார்களா. இலக்கியத்தில் மோகம் கொண்டிருக்கிறார்களா. தமிழ் மண்ணில் இலக்கியத்திற்கும், இலக்கியவாதிகளுக்கும் எத்தகைய மதிப்பிருக்கிறது என அறிந்தபின்னும், நன்றாகத் தெரிந்தபின்னும், எதற்காக இந்தப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்திய, உலக வரலாறு தமிழில் எழுதப்படவில்லையா. பிற மொழிகளிலிருந்து மொழியாக்கம் செய்யப்படவில்லையா. அறிவுப் பெருந்தந்தை எழுதிய கண்டுணர்ந்த இந்தியா, உலக வரலாற்றின் காட்சிகள் பத்தகங்களை விடவா யாம் பெரிதாக உலக வரலாற்றைச் சொல்லிவிடப் போகிறோம். யாம் அறிவாளி, அறிவுஜீவி எனப் பெயரெடுக்கவா. புத்தகத்தை விற்று பெருத்த இலாபம் பார்க்கவா. பரிசும் பாராட்டும் அள்ளவா. விருதுகளை வாங்கிக் குவிக்கவா. யாமும் இலக்கியவாதி எனப் பெயரெடுக்கவா. அல்லது அறிவைக் காட்ட வேண்டும், வெளிப்படுத்தவேண்டும் எனும் ஆசையாலா.

பத்துபைசா பிரயோசனமில்லாததை, பத்துப் பைசாவுக்கு ஆகாததை, பத்துப்பைசாகூட பெறாத ஒன்றை தமிழர்கள் செய்யமாட்டார்களே. தமிழர்கள் சும்மா படிப்பார்களா. அவ்வளவு வெவரமில்லாதவர்களா தமிழர்கள். பேராசிரியத் தமிழர்களே படிப்புவாடையே அடிக்கக்கூடாது என இருக்கும்போது சாதாரணத் தமிழர் எப்படிப் படிப்பார். அப்படியே படித்தாலும் சாதி, மதம் பற்றிப் படிப்பார். உலக வரலாற்றை எப்படிப் படிப்பார். தமிழர் எதையும் படிக்கத்தான் மாட்டாரேயொழிய, பேசிப் பார்த்தால்தான் தெரியும், அன்னாராது உலக அறிவு எத்தகையதென்பதை. உலகை ஆண்டது தமிழர். அனைத்துத் தமிழரும் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார். உலகம் என்பது என்ன, அதன் வரலாறு யாது. அது யாருக்கு வேணும். அத எதுக்கு நாங்க படிக்கணும். எங்களுக்கு என்ன தலையெழுத்தா. எங்க முப்பாட்டன் அந்தக் காலத்துலேயே எல்லாத்தையும் வெளக்கமா சொல்லிட்டுப் போய்ட்டான்.

அறிவை வெளிப்படுத்துவது தா்மமாம். எதையோ படித்துக்கொண்டிருக்கும்போது இந்த வரியைப் படித்தோம். பல வருடங்களாக யாம் மனதிற்குள் போராடியே வந்தோம். எம்மை வெளிப்படுத்த வேண்டுமா. எம்மைப்பற்றி எதற்காகச் சொல்லவேண்டும். எம்மைப்பற்றி ஒன்றும் சொல்லாமலேயே இங்கிருந்து சென்றுவிடலாமே. பாரதத்தின் எத்தனையோ ஞானிகள் அவ்வாறுதானே வாழ்ந்திருக்கிறாா்கள். பெயா் தெரியாத எத்தனை எத்தனையோ ஞானியா் பாதம்பட்ட மண்ணல்லவா இது. அவா்கள் தங்களை கடவுள் என்றோ, ஞானியா் என்றோ சொன்னதுண்டா. பின் எதற்கு யாம் மட்டும். எம்மால் எமது அறிவை அடக்கமுடியவில்லையா. யாம் பெயருக்கு ஆசைப்படுகிறோமா. யாம் புகழ்பெற விரும்புகிறோமா. மற்றவா் எம்மை வணங்க விரும்புகிறோமா.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையைவிட கடவுள் ஆசை பெரிதல்லவா. அதனால்தானே இந்திய ஞானியா் ஒன்றும் சொல்லாமல் கிளம்பிவிடுகிறாா்கள். ஆதியும் அந்தமுமில்லாத இறையை அறிந்தவா்களல்லவா பாரதத்தின் புனித ஞானியா். அவா் சொல்லாததை, அவா் வெளிக்காட்டிக்கொள்ளாத ஒன்றை, யாம் வெளிக்காட்டிக்கொள்ள விரும்புகிறோமா.. பெருந்தந்தையும் அதை வென்றாரல்லவா. பெருந்தந்தை எவ்வளவோ மனதிற்குள் போராடியிருப்பாா்தானே. எதனால் பெருந்தந்தை தம்மை கண்ணனின் பத்தாவது அவதாரமென்றோ, கலி முடிக்கவந்த நாராணனின் கல்கி அவதாரமென்றோ வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. பத்தாவது அவதாரம் எனச் சொல்லியிருந்தால் அன்றைக்கிருந்த மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பாா்தானே. உண்மையில் தந்தைக்குத் தகுதியானதுதானே பத்தாவதும்.

1998 முதல் கிட்டத்தட்ட புத்தகம் எழுத ஆரம்பித்த 2014 சித்திரை வரை, எம்மைப் பற்றி உலகத்திற்குச் சொல்ல யாம் மிகுந்த தயக்கம் கொண்டிருந்தோம். யாம் யாா் என இயற்கைக்கு தெரியுமல்லவா. கடவுள்களுக்கு தெரியுமல்லவா. மனிதருக்கு தெரியாவிட்டால் என்ன. என்றேனும் தெரிந்துகொள்வாா்.

எம்மால் புதிய உலகம் படைக்க முடியுமா. எமக்கு அவ்வளவு அறிவு, ஞானம் உள்ளதா. சிறியதொரு கிராமத்தில், எளிய குடும்பத்தில் பிறந்து, முதல் தலைமுறையாகப் பட்டம் பெற்று, வாழ்க்கையில் முட்டிமோதி, பேராசிரியராகப் பணியாற்றும் எமக்கு, எப்படி இவ்வளவு தன்னம்பிக்கை உண்டாயிற்று. யாம் என்ன

அத்தனை அறிவாளியா. பெரிய ஞானியோ. எமது அப்பத்தா, அம்மாயி கல்வி கற்றாரில்லை. எமது அம்மா கல்வி கற்கவில்லை. அப்பா ஏதோ எழுதப் படிக்கக் கற்றிருக்கிறார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பெருங்கல்வி கற்றுவரும் எத்தனையோ குடும்பங்கள், எவ்வளவோ தமிழர்கள் இருக்கும்போது, குடும்பத்தை, சுற்றத்தாரைக் கவனித்துக்கொள்ள வேண்டிய யாம், இப்படி புத்துலகம் செய்வோம் என இருபது வருடங்களாக வாழ்வது அறிவுடைமைதானா.

இந்தியச் சமூகத்தில் ஞானமுள்ளவரென்றும், அறிவில் சிறந்தவரென்றும், அனைத்திலும் முன்னேறியவர் எனவும் பெயர் பெற்றுள்ள பிராமணர், பிள்ளைமார், முதலியார் போன்ற சமூகத்தவருக்கு வராத ஞானம் எமக்கு வந்துவிட்டதா. வந்திருப்பது உண்மையிலேயே அறிவுதானா. ஞானம்தானா. யாம் கண்ணனின் பத்தாவது அவதாரம் என பிராமணரும், பிள்ளையும் ஒப்புவரா. யாம் முன்னெடுக்க விரும்பும் சமூக மாற்றங்களுக்கு உடன்படுவரா.

அறிவை வெளிப்படுத்துவது தர்மமாகும். எம்மை மாற்றியது இந்த ஒற்றை வாக்கியம். எமது பல்லாண்டு தயக்கத்தை உடைத்தது இந்த ஒற்றை வாக்கியம். எம்மிடம் மனிதர் கடவுளாக முடியுமா எனும் கேள்விக்கான அறிவு இருக்கிறது. அதை மக்கள் பயன்படும் விதத்தில் தெரியப்படுத்த வேண்டும். எமது அறிவால் மக்கள் பயனடைவார்கள். மண் பயனுறும். மானுட வாழ்க்கை மேலும் சிறப்பாகும். உலகின் அறிவு மேலும் செழிப்பாகும். ஆம்.. அறிவை வெளிப்படுத்துவது தர்மமே.

மனிதருக்கு கடவுளாசையை வெல்வதுதான் மிகவும் கடினம் என்பதை தந்தை அறிந்திருந்ததுபோல் மகனாகிய யாமும் அதை அறிந்திருக்கிறோமா. காந்தியின் புகழை, காந்தியின் பெயரை யாம் பயன்படுத்திக் கொள்கிறோமா. காந்தி மகான் எங்கே. யாம் எங்கே. எங்களுக்குள் இருக்கும் உறவென்பது யாது. இருவரும் இந்தியத் திருநாட்டினர். காந்தி இம்மண்ணின் மூத்தோர் எனும் முறையில் எமக்கு தந்தையாகிறார். இந்தியத் தாய்நாட்டிற்கு தந்தை எனப் போற்றப்படுவதால் எமக்கும் தற்தையாகிறார்.

காந்தியை தந்தை என ஏற்றுக்கொள்கிறோமா. ஆம். பெருந்தந்தையாக தலை வணங்கி ஏற்கிறோம். கருப்பையா, பொன்னம்மாவின் மகனாகிய யாம், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை ஞானத்தந்தையாகவும், ஜவஹர்லால் நேருவை அறிவுத்

தந்தையாகவும், பீமாராவ் ராம்ஜி அம்பேத்கரை அன்புத்தந்தையாகவும் உளமாற ஏற்கிறோம். மூன்று தந்தையரும் வாழி. வாழிய பாரதம்.

காந்தி எமக்கு தந்தை மட்டுமா. எமது பேராசான். எமது வழிகாட்டி. தந்தையின் வாழ்க்கை மகனுக்காக. தந்தையின் வாழ்க்கையே மகனுக்கான செய்தி. காந்தி யார். மகனறிவார். காந்தி எத்தனை மகத்தானவர். அன்பு மகன் நன்றாகவே அறிந்திருக்கிறார். காந்தி ஆராய்ச்சிகள் செய்து கடவுளை அறிந்தாரா. மகனும் ஆராய்ந்தே அறிந்தார். தந்தை ஆராய்ச்சிகள் செய்தார். மகன்..

மகனும் ஆராய்ச்சிகள் செய்தார். ஒருவரும் அறிந்திலர். இலவசங்களை மக்கள் மனதார விரும்புகிறார்களா. இலவசங்கள் பெறுவதை, சுயமரியாதையுள்ள மக்களின் மனம் ஏற்றுக்கொள்கிறதா. மகன் தெரிந்துகொள்ள விரும்பினார். சிறியதொரு ஆராய்ச்சி செய்தார். கல்லூரியில் நடைபெறும் அகத்தேர்வு மதிப்பீட்டின் போது மகன் துணிப்பைக்குள் குட்டே, மில்க் பிக்கீஸ், பிப்டி பிப்டி போன்ற பிஸ்கட்களும், இரண்டு குடிதண்ணீர் பாட்டில்களும் எடுத்துச் சென்றார். மாணவர்களுக்கு வினாத்தாள் கொடுக்கும் முன்னர் பிஸ்கட்களையும், தண்ணீரையும் மேசையில் வைத்துவிட்டு, பெரும்பாலான மாணவர்கள் காலையில் சாப்பிடாமல் வருவதாகவும், காலை உணவைத் தவிர்ப்பது தவறென்றும், யாரேனும் சாபிபிடாமல் இருந்தாலோ, பசியை உணர்ந்தாலோ, இங்குள்ள பிஸ்கட்டை எடுத்துக்கொள்ளலாமென்றும், அவரிடம் அனுமதியெல்லாம் கேட்கத் தேவேயில்லை என்றும் சிறிய உரையாற்றினார். மகன் இவ்வாறு இரண்டு அகமதிப்பீட்டுத் தேர்வுகளுக்கு எடுத்துச் சென்றார். உண்மையில் மகன் இதை சோதனைக்காகச் செய்யவில்லை. உணமையிலேயே மாணவர்கள் மேல்கொண்ட அன்பினாலேயே செய்தார். உண்மையில் அன்பிற்காகச் செய்தது அறிவின் களமாகவும் ஆகிப்போனது. சோதனையிலிருந்து மகன் கண்டடைந்த அறிவென்ன.. இரண்டு மாணவர்கள் மட்டுமே பிஸ்கட் எடுத்தார்கள். அதுவும் மிகக்குறைவாக. நிறைய எடுத்துக்கொள்ளச் சொல்லியும் மறுத்துவிட்டனர். மாணவிகள் தண்ணீர் குடித்தார்கள். ஆனாலும் பிஸ்கட் எடுத்ததாக நினைவில்லை. பெரும்பாலும் தேர்வுகளின் போது நன்றி சொல்லாத மாணவர்கள், நன்றி சார், தேங்யூ சார் எனச் சொல்லிச்செல்வதை மகன் கவனித்தார். மகன் செய்த சோதனையின் முடிவு.. மாணவர்கள் இலவசங்களுக்கு விரும்புவரல்லர்.

ஒரு சிறிய அறையில், குறைவான எண்ணிக்கையில், சில நாட்கள் மட்டுமே செய்த பரிசோதனையை ஒட்டுமொத்த மாணவர்களுக்கும் பொருத்திப் பார்க்க முடியுமா.. உண்மையெனில் சுயமரியாதையில் சிறப்பானவராகப் புகழப்படும் தமிழா் எப்படி இலவசங்களுக்கு ஆளாய்ப் பறந்தாா். பறந்தாா் என்பது உண்மையெனில் சுயமரியாதைக்காரர் என்பது உண்மையாக இருக்கமுடியாது. இரண்டில் ஒன்றுதான் உண்மையாக இருக்கமுடியும்.

யாமும் தந்தையும் ஒன்றா. ஒன்று எனில் எதிலெல்லாம் ஒன்று. வெறு எனில் எதில் வேறுபாடு. எங்களிடையே சிறப்பாக, விசேஷமாக ஏதேனும் உண்டா.

இருவரும் ஒன்றா. ஆம். ஒன்றேதான். தந்தையும் மகனும் ஒத்த பண்புள்ளவா்கள். தந்தை சத்திய சோதனை எழுதினாா். மகன் எழுதியுள்ளது சத்திய சோதனை இரண்டாம் பாகம். உண்மையில் தந்தை சத்தியசோதனை இரண்டாம் பாகம் எழுத பெருவிருப்பம் கொண்டிருந்தாா். பலவிதப் பணிகளால் நேரம் போதவில்லை. தந்தையின் விருப்பம் மகனால் நிறைவேற்றப்பட்டுள்ளது. மகன் தந்தைக்காற்றும் கடன். மகனின் வெற்றி தந்தையின் வெற்றி. மகனின் வெற்றியில் தந்தைக்கே பெரும்பங்கிருக்கிறது.

தந்தைக்கு The Story of My Experiments with Truth. மகனுக்கு The Story of My Experiments with God. Since the Great Father has said Truth and God are Equal, Same, Similar, Parallel, Synonymous, Identical,

**We, Both are One. Not only in Books.. also in All.**

மறுபிறவி என ஒன்றிருக்குமானால் அடுத்த பிறவியில் தமிழனாய்ப் பிறப்போம் எனத் தந்தை பேசியதுண்டா. தமிழ்மீதும், தமிழா்மேலும், தமிழகத்தின்பாலும் தந்தைக்கு எத்தகைய பற்று இருந்தது. ஏன் வந்தது பற்று. எதனால் வந்தது பற்று. தந்தையை தமிழா் மறக்கலாம். வெறுக்கலாம். ஒதுக்கலாம். தூற்றலாம். மகன் மறப்பானோ. மகனைவிடத் தந்தையை வேறு யாா் நன்கறிவாா்..

இருவரும் வேறா. வேறுதான். தந்தை காலமும் மகன் காலமும் வேறு. தந்தையின் அறிவும் மகன் அறிவும் வேறு. தந்தை கண்ட உலகு வேறு. மகன் காணும் உலகம் வேறு. தந்தை அன்பில் நிகரற்றவா். தந்தையின் அன்புக்கு மகன் ஒருபோதும்

ஈடாக மாட்டார். தந்தை அனைத்திலும் பெரியவர். அனைத்திலும் சிறந்தவர். அனைத்திலும் உயர்ந்தவர். மகாஞானி. மிகத் திடமானவர். உறுதியானவர். மகனோ தந்தையோடு ஒப்பிடக்கூட தகுதியற்றவர். தந்தை மகனை எல்லாவற்றிலும் வெல்லமுடியும். ஒன்றே ஒன்றைத் தவிர. பிடிவாதத்தில் தந்தையை விஞ்ச எவருமில்லை என்பதே வரலாறு. இருந்தும் தந்தையால் மகனை பிடிவாதத்தில் வெல்வது சற்று கடினமே.

தந்தையும் மகனும் வேறு வேறா. அதெப்படி வேறாக முடியும்.. தந்தை மகனென்னும் உறவிருக்கிறதே. உடலால் வேறாக இருப்பினும் உள்ளம் ஒன்றல்லவா. உணர்ச்சிகள் வேறென்றாலும் உணர்வுகள் பொதுவல்லவா. தந்தையில்லாமல் மகனெப்படி வந்தார். இரண்டாக இருப்பதனால் ஒன்றில்லையென ஆகிவிடுமா. தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவென்ன. தாயில்லாமல் சேயா. பத்து மாதங்கள் சுமந்த அன்னையின் கருப்பையிலிருந்து வெளிவந்தவுடன் அன்னையுடனான உறவு அறுந்துவிடுமா. சேய் மறக்கலாம். தாய் மறப்பாரா.

தந்தையும் மகனும் ஒன்றே. தந்தையும் மகனும் இருவராக இருக்கிறார்கள். இருவரிடையேயும் தந்தை மகனென்னும் விசேஷமான உறவிருக்கிறது.

ஏன் பாரத மண்ணில் ஒன்றா, இரண்டா, இரண்டும் ஒன்றா வேறுவேறா எனும் தத்துவங்கள் முன்னெடுக்கப்பட்டன. காரண காரிய உலகத்தை பாரத மண் ஏற்றுக்கொள்கிறதல்லவா.. மேற்குலகம் பொருட்களைப் பற்றியே சிந்தித்து வந்த வேளையில், கிழக்கின் ஞானியர் ஒன்றா இரண்டா எனச் சிந்தித்தது எத்தனை மகோன்னமானது. மகத்துவம் நிரம்பியது. பாரதத்தார் அறிந்திருக்கிறார்களா. ஞானியரை விவாதிக்க வைத்தது யார். சிந்திக்கத் தூண்டியது எது. கண்ணனுக்காகவா. கண்ணனே ஞானியராகப் பிறந்து, கண்ணனே கேள்விகளாய் மாறி, கண்ணனே பதில்களைக் கண்டறிகிறானா. சொல்லப்பட்ட தத்துவங்கள் யாவும் கண்ணனுக்குத்தானா.

கண்ணன் யார். யாம் யார். நாங்கள் ஒன்றா வேறா. எங்களுக்குள் ஏதேனும் சிறப்பான, விசேஷமான உறவிருக்கிறதா. உலகனைத்தையும் வாசுதேவக் குடும்பமாகக் கொண்டுள்ள வாசுதேவக் கிருஷ்ணரும் கருப்பையா கிருஷ்ணமூர்த்தியும்

ஒன்றா. ஒன்று எனில் எதில் ஒன்று. பெயர் மட்டும் ஒன்றுபோல் இருந்தால் போதுமா. உலகம் ஒப்புமா. இருவரும் மாடுகள் மேயத்தால் ஒன்றாகிவிட முடியுமா. பேராசிரியர் பணி செய்தாலும் கீதையின் ஆசிரியர்போல் ஆகமுடியுமா.

கண்ணன் உலகின் தந்தை எனும் அடிப்படையில் யாம் மகன் என உறவு கொண்டாட முடியுமா. ஆழ்வார்களும் ஆச்சார்யார்களும் கண்ணனே மாதா பிதா எனப் பாடியுள்ளதால் யாமும் கண்ணனை எமது தந்தையாகக் கொள்ளமுடியுமா. நம்மாழ்வார் போன்ற பெரும் ஆழ்வார்களே கண்ணனின் அடியார்க்கு அடியார்க்கு அவர் அடியார்க்கு அடியார் எனக் கூறிக்கொள்ளும்போது, எம்மை கண்ணனின் மகன் எனக் கூறிக்கொள்வது பொருத்தமுடையதுதானா.

நாராயணனான கண்ணன் எமக்குத் தந்தையா. அதனால்தான் யாம் The Story of a Great Father and His Brave Son என எழுதினோமா. Are the Great Father and His Brave son One or Different. Do they have any Special Relationship.

ஏன் தமிழகத்தில் சட்டென ஆழ்வார்களால் கண்ணன் பக்தி பெருக்கெடுக்க வைக்கப்பட்டது. காரணமென்ன. எதற்காக ஆச்சாரியார்கள் வரிசையாக வந்தார்கள். நோக்கமென்ன. காரணமில்லாமல் எதுவும் நிகழாதெனில் தமிழகத்தில் சைவமும் வைணவமும் ஆகப்பெரிய பக்தி இயக்கத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏதனால் வந்தது.

கண்ணன் தமிழகத்திற்கு வரப்போகிறான் என்பதை தமிழ்நிலம் அறிந்திருந்ததா. அதனால்தான் இத்தனை ஏற்பாடா.

கண்ணன் தமிழ்நாட்டிற்கு வரப்போகிறான் என்பதை அறிந்தேதான் ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை பாடினாரா. அனைத்தையும் பாடியுள்ள நாச்சியார், பத்தாவது தமிழ்மண்ணில் நிகழப் போகிறது என்பதைப் பாடியுள்ளாரா. குறைந்தது மறைபொருளாகவாவது பதிவிட்டுள்ளாரா. ஞானமே வடிவானவரல்லவா ஆண்டாள் அம்மா.. திருப்பாவைக்கு விளக்கமளித்தவர்கள், விளக்கமளிப்பவர்கள் இதுபோன்ற நோக்கில் பேசியதோ எழுதியதோ உண்டா. கண்ணன் தமிழ்நாட்டில்தான் என முன்னமே அறியப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும். கம்சன்கள் வரிசை

கட்டியிருப்பரோ. ஏன் மூவேந்தருள்ளும் போர்கள் நிகழ்ந்தன. எது அவர்களைப் போரிட வைத்தது. மண்ணோ பொன்னோ இல்லையெனில் போரிட்டது எதற்காக. சொந்தப் பகையெனில், இவர்களையா தமிழ்புலவர் மரபு போற்றிப் புகழ்ந்துள்ளது.

சைவக்குரவர்கள் அடி முடி காணா அண்ணாமலை எனப் பாடியதன் பொருளென்ன. கண்ணன் வந்தால் அடியும் முடியும் அறிய வேண்டும் என்பதற்கா. சமயக் குறவர்கள் காலத்தில் சீர்கெட்டிருந்த சைவ வைணவ உறவு, பின்னர் மைத்துனர் உறவாக மலர்ந்தது எப்படி. எப்போது பார்வதி நாராயணனின் தங்கையானார். எப்படி முருகன் மாலின் மருகன் ஆனார்.

கட்டித் தயிரும் பாலும் வெண்ணெயும் உண்பதில் பெருவிருப்பம் கொண்டிருந்த அந்த பிருந்தாவனக் கண்ணனால், மண்ணுண்ட வாயில் ஈரேழு புவனங்களையும் காட்டிய அந்த மாயக் கண்ணனால், பிரமனும் இந்திரனும் மனதில் பொறாமை கொள்ளும் அளவிற்கு யசோதை அன்னையால் கட்டுண்டு கிடந்த அந்த தாமோதரக் கண்ணனால் அடியும் முடியும் காணமுடியாதா. எப்போதெல்லாம் அடியும் முடியும் அளக்கப்படுகிறது. எப்போதெல்லாம் ஆதியும் அந்தமும் அறியப்படுகிறது. முடியாதெனில் தமிழர் இறை எனக் கண்ணனை ஒப்புவரா..

உலகில் எங்கு வேண்டுமானாலும் கடவுள் பிறக்கலாம் என்றாலும் தமிழ்நாட்டில் பிறந்தால் உலகை அளக்க வேண்டும் என்பதைக் கண்ணன் அறியமாட்டானா.. முன்னர் உலகமளந்தது கற்பனை என்றா தமிழர் நினைத்தார். அறிவியல் சுட்டும் இவ்வளவு பிரம்மாண்டமான உலகத்தை எப்படி ஈரடியால் அளந்திருக்க முடியும். ஏன் கண்ணனால் முடியாதா. வாமனமூர்த்தி யார். கிருஷ்ணமூர்த்தி யார். நாராயணமூர்த்தி யார்.

Friends.. Shall I measure. Can I. If The Great Father can able to Measure this Majestic World by just Two Feet, His Brave Son can easily by Single Foot. இரண்டு எட்டில் உலகை அளந்தவரால், எட்டு வைக்காமல் அளக்க முடியாதா. சொல்லிவிட்டு அளந்தவர், அளந்து முடித்துவிட்டு சொல்லக்கூடாதா.

Before I measure this World, Shall i measure the Stomach.. How big your Stomach friends.. How big your Brain friends.. How Big your Wisdom..

திரிவிக்ரமமூர்த்தி எமது தந்தையா. நாங்கள் ஒன்றா. தந்தை மகன் என்னும் சிறப்பான உறவு கொண்டுள்ளோமா. தந்தையைப்போல் மகனால் உலகை அளக்க முடியுமா. தந்தையால் முடியும்போது மகனால் முடியாதா. முன்பு உலகை அளந்தவரும், எப்போதும் உலகை அளப்பவருமான உபேந்திரா் யாா். அவரது அண்ணன் யாா். வானாள்பவா் யாா்..

தேவேந்திரா் யாா். தேவேந்திர குலத்தாா் யாா். தேவகுலம் எது. மனித குலம் யாா். கடவுள் குழாம் யாராா்.

சட்டென தேவேந்திர குலத்தாா் பொங்கி எழுந்தது எதனால்.. தங்களுக்கு அட்டவணை சாதி எனும் அடையாளம் வேண்டாம் எனப் பேசுவது எதற்கு.. ஏன் ஏழு குடிகளை ஒன்றிணைத்து தேவேந்திர குல வேளாளா் என அறிவிக்கக் கேட்கிறாா்கள்.. வேளாண்குடிகளான தேவேந்திரா், குறிப்பாக அடுத்தவா் நிலங்களில் வேளாண்மைத் தொழில் செய்து பிழைத்த தேவேந்திரா், மூவேந்தரும் தாங்களே எனப் பேசுவதும் எழுதுவதும் எப்போதிலிருந்து.. எதனால்.. யாரால்..

How big you are Friends.. Which is Big.. Stomach, Brain, World, or Kannan.. Does this Universe bigger than the Magnificent Sri Patham of Kannan.. Can it be..

Big Friends, do you know Pig. ஆங்கிலத்தில் பெரும்புலமை பெற்றிருக்கும் தமிழா் நன்றாகவே அறிவாா். பிக் என்றால் பன்றி. வைணவத்தில் வராகம். பெருமாள் வராகமூா்த்தியாய் பூமாதேவியைத் தூக்கினாா். பூமியை உயா்த்தினாா். பொருளென்ன தமிழரே.

எப்போதும் வென்றான் கோவிலுக்கு முன்னா் பெரும்பாலும் பெரிய உருப்படியையே அதாவது பெரியசாமியை நோ்த்திக்கடனாகக் கொண்டு செல்வாா்கள். பெரிய உருப்படி என்றால் தமிழருக்குத் தெரியும்தானே. நேராகத் தண்ணீா்த் தொட்டிக்குள் தலையை நுழைத்துக் கொள்ளுமாம். பாா்த்தவா் வியந்து போவாா்களாம். எமது அம்மாவின் குலதெய்வம் எப்போதும்வென்றான். ஆனாலும் யாம் சிறுவயதில் கோவிலுக்குப் போனதில்லை. எமது மைத்துனரின் குலதெய்வம் என்பதால், முதல்

குழந்தைக்கு மொட்டை போட எம்எஸ்சி படிக்கும்போது உடன் சென்றோம். சிலவருடங்களுக்கு முன்னர் முனியசாமி அண்ணனின் குழந்தை வரம் வேண்டுதல் நிகழ்வுக்காக எப்போதும் வென்றான் கோவிலில் ஆட்டுக்கறி சாப்பிட்டோம். அதற்கும் முன்னதாகவே யாம் அசைவம் சாப்பிடுவதை நிறத்திவிட்டிருந்தாலும், கோவிலுக்கு வந்தவர்கள், அதிலும் குறிப்பாக நேர்த்திக் கடனுக்கு வந்தவர்கள் அளிக்கும் படையலை மறுக்கக்கூடாதாம்.

யார் இந்த எப்போதும்வென்றான் சோலைசாமி.. வைணவக் கோவில்தான். எளிய மக்களின் குலசாமியாக அருள்பாலிக்கும் எப்போதும்வென்றான் சோலையப்பசாமியின் வரலாறென்ன.

ஸ்ரீவராகமூர்த்தி, ஸ்ரீநரசிம்மமூர்த்தி, ஸ்ரீதிரிவிக்ரமமூர்த்தி, ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி. யார் இவர்கள்.. இவர்கள் ஒன்றா. ஒருவரா. ஒருவரேவா. அதெப்படி இருவர் ஒருவர் போல, ஒருவராக இருக்கமுடியும். அனைவரும் ஒருவரா. ஒத்த தன்மையரா. ஒத்த குணமுள்ளவரா. இந்த ஸ்ரீயின் மூர்த்திகள் அன்பில் ஒன்றா. அறிவில் ஒன்றா. அனைவர் ஞானமும் ஒன்றுதானா. நாராயணர் பத்து அவதாரம் எடுத்துத்தான் உலகை உயர்த்த வேண்டுமா. அதென்ன பத்து. பத்தாவது ஏன் இறுதி. அவ்வாறெனில் பத்தாவது நாராயணருக்குப்பின் உலகின் அனைத்து ஞானமும் தெளிந்துவிடுமா. அறியப்படுமா. நாராயணர் மேலும் பதினொன்று, பன்னிரெண்டு என அவதாரங்களைத் தொடரவேண்டி வராதோ.

**எயிற்றிடை மண்கொண்ட எந்தை இராப்பகல் ஓதுவித்து எம்மைப்**

**பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான் பண்டன்று பட்டிணம் காப்பே..**

எமது அளக்கட்டுமா விளம்பரத்தில் கொடுத்திருக்கும் பெரியாழ்வாரின் பிரபந்த வரிகள் இவை. எயிற்றிடை மண்கொண்ட எந்தை யார்.. யாம் யார். வீர மகனா. அன்பு மாணவனா. எயிற்றிடை மண் கொண்ட எந்தை, இராப்பகலாக எமக்கு ஓதுவித்தது எதை.. எவற்றையெல்லாம். தந்தையும் மகனும் உலகிற்கு உணர்த்தும் செய்தி யாது.. பட்டிணம் காப்பா.

**திருக்காப்பு! திருமண் காப்பு!!**

**திருவரங்கனே காப்பு!!!**

இவையும் அதே விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ளவைதான். அர்த்தம் அறிவார்தானே வைணவர். யார் வைணவர் என்பதை அறிந்திருக்கிறதா வைணவ உலகம். யாம் வைணவரா. வைணவர் என்பதற்கான வரையறை என்ன.. பஞ்ச சம்ஸ்காரம் பண்ணியவர்தான் வைணவரா. கண்ணன் மேல் பக்தி கொண்டவர் வைணவராக முடியுமா. ஸ்ரீவைணவர் யார். வைணவர் யார். வைணவப் பெரியோர் யார். அடியார் யார். பக்தர் யார். மனிதர் யார். தேவர் யார்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்திற்கும் வித்தாகும் கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானுடரை
வையம் சுமப்பதுவும் வம்பு.

வையம் சுமப்பது வம்பு. யாரை. ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானுடரை. ஐயைந்தும் ஐந்தும் என்ன. ஐந்து ஐந்து இருபத்தி ஐந்து, அதோடு மேலும் ஐந்து சேர்ந்து முப்பது. ஆண்டாள் அம்மாவின் முப்பது திருப்பாவைப் பாடல்கள். திருப்பாவை தெரியாதவர்களை, அறியாதவர்களை உலகம் சுமப்பது வீண். சுமப்பது வம்பு. அர்த்தம் சரிதானே வைணவப் பெரியோர்களே.

வைணவர்கள் முப்பதையும் அறிந்திருக்கிறார்களா. சுமப்பது வம்பு எனில், முப்பது தெரியாத வைணவர்களை, வைணவர்கள் என்பதற்காக வையம் அன்போடு சுமக்குமா. மற்றவர்க்கு ஒன்று, வைணவர்க்கு ஒன்றா. உலகம் ஒப்புமா. முப்பது எவருக்குத் தெரிந்திருக்கிறதோ, முப்பதை அறிந்தவர் எவரோ, அவரே வைணவர் என அறுதியிடலாமா. அறுதியிட்டால் குற்றம் வந்து சேருமா. நாராயணன் மேல் ஆசை உள்ளவர் அத்தனை பேரும் வைணவர்தாம் என அறுதியிட்ட இராமனுச மகானை மீறுவதாகாதா. கண்ணன்மேல் ஆசை கொண்டாலே போதும் என்பதற்கு மாற்றாக, முப்பதும் அறிய வேண்டும் என்பது ஏற்புடையதா.

காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் செய்வது ஏற்புடையதே எனில், வைணவர் மாநாடு கூட்டி, இன்றிலிருந்து எவரெல்லாம் திருப்பாவையின் முப்பது பாடல்களையும் அறிந்திருக்கிறாரோ அவர் மட்டுமே மனிதர் என அறிவிக்கலாமா. அதற்கு முன்னதாக

அத்தனை வைணவரும் திருப்பல்லாண்டு மற்றும் திருப்பாவையின் 42 பாடல்கள் அறிவதைக் கட்டாயமாக்கலாமா. அறிந்தவர்தான் அடியார் எனக் கொள்ளலாமா.

திருப்பாவையை அறிவது எனில் எப்படி படித்திருக்க வேண்டுமா. திருப்பாவை பற்றி தெரிந்திருக்க வேண்டுமா. திருப்பாவையின் முப்பது பாடல்களையும் மனப்பாடமாக வைத்திருக்க வேண்டுமா. பெரும்பாலான வைணவர்களே இன்னும் புத்தகத்தை வைத்துக்கொண்டுதான் திருப்பாவை பாடுகிறார்கள். உண்மையெனில், மற்ற மொழிக்காரர்கள், பிற சமயத்தார் நிலை என்னாவது. அவ்வாறெனில், ஒரு குறிப்பிட்ட காலக்கெடு கொடுத்து, வையம் மகிழ்வோடு மனிதரைச் சுமக்கவேண்டுமெனில், அந்தக் குறிப்பிட்ட தேதிக்குள் முப்பதையும் படித்துவிடுங்கள் என அறிவிக்கலாமா. மனிதர் ஏற்பாரா.

தேனையொத்த, திகட்டாத, குளிர்ந்த, மங்களமான, அருள்நிறைந்த, வேதத்தைவிட ஒரு படி கூடுதலான திருப்பாவைப் பாடல்களை மனிதரால் மனப்பாடம் செய்ய இயலாதா. முயன்றால் முடியாததுண்டோ. வைணவத்தின்பால் மாறாப்பற்றுடைய ஞானியரே. அறுதியிடுங்கள். எவருக்கு நம் அன்பு அம்மாவின் முப்பது பாடல்களும் மனப்பாடமாகத் தெரிந்திருக்கிறதோ அவரே இனி மனிதர். முப்பதும் தெரிந்த மானுடர் அடியாருக்கு அடியார் எனும் சிறப்படையட்டும். திவ்யமான பிரபந்தங்களில் நூறு அறிந்தவர் அடியாராகப் புகழ் பெறட்டும். நானூறு கண்டவர் வைணவர் என நிறையட்டும். நாலாயிரமும் கொண்டவர் வைணவப் பெரியோர் என வணங்கப்படட்டும். நாலாயிரத்தோடு பிற வேதங்கள் அறிந்தவர் மகான் என நிலைக்கட்டும். அனைத்தும் அறிந்து உலகில் அன்பே சிறந்தது எனும் ஞானம் தெளிந்தவர் ஞானியாக ஒளி வீசட்டும்.

வைணவப் பெரியோர் பாத வணக்கத்திற்கு உரியவராகட்டும். மகான் வழிகாட்டியாகட்டும். ஞானி இலக்காகட்டும். ஞானம் கடவுளாகட்டும்.

ஆம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானான கண்ணன் யார் என்பதை உலகம் அறியட்டும். நாச்சியார் பெருமை எத்தகையது என்பதை உலகினர் தெளியட்டும். இந்தியாவின் பெருமை என்னவென்பதையும், தமிழின் சிறப்பு எத்தகையதென்பதையும் மானுடம் காணட்டும்.

**அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்றன்னைப்**

**பிறவிப் பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்.**

அறிவில்லாதவா் என நாச்சியாா் யாரைச் சொல்கிறாா். கண்ணனையா. ஆய்க்குலத்தாரையா. தமிழா் சொல்லாராய்ச்சியில் கரைகண்டவரன்றோ. அறிவில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம். பொருள் யாது பெரியோா்களே. ஆய்க்குலத்து கண்ணனைப் பெற்றதால் புண்ணியம் அடைந்தோமா, ஆய்க்குலத்துக் கண்ணனைப் பெறும்போது புண்ணியம் அடைவோமா. அடுத்து இங்குதான் என நாச்சியாா் குறிப்பால் அறிந்து பாடினாரா.

பூமித்தாயாக வணங்கப்படும் ஆண்டாளின் பாடல்களுக்கு இதுதான் பொருள் என அறுதியிடமுடியுமா. காலம் மாறும்போது, இடம் மாறும்போது, மொழி மாறும்போது, மக்கள் மாறும்போது, பொருளும் மாறும்தானே. தமிழ் என்ன காதால் கேட்டுவந்த வேதமா. அச்சு அசலாக அப்படியே இருப்பதற்கு. தமிழா் எப்போதோ எழுத்தை அறிந்துவிட்டாரல்லவா. மொழி திரிவது பேச்சிலா. எழுத்திலா.

ஆண்டாள் ஏன் கண்ணனை துயிலெழுப்புகிறாா். குறையொன்றுமில்லாத கோவிந்தன் துயிலெழுந்தால் என்னாகும். அற்றைத் துயில்கொண்டு இற்றை விழிக்கிறானா. அதனால்தான் கண்ணன் கலிமுடிக்க உறுதியாக வருவோம் என்றானா. சயனக்கோலத்தில் கண்வளரும் கண்ணன் துயில்நீக்கி திருவிழி மலா்ந்தால்.

**இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா..**

எவ்வளவு உறுதியாகச் சொல்கிறாா் ஆண்டாள் அம்மா. திருமலை வராக ஷேத்திரமல்லவா. உலகாளும் ஸ்ரீநிவாசன்தான் கண்ணனா. பாா்த்தசாரதிதான் திருவேங்கடநாதனா. விக்ரமன்தான் வேங்கடத்தானா. சுந்தரராஜன்தான் உய்யவந்த விண்ணகரப்பெருமாளா. ஏழுமலையான்தான் ஸ்ரீஹரியா. தசாவதாரம் கொண்டவன் இராமனா. முல்லையின் திருமால்தான் பரந்தாமனா. தமிழன்தான் பாற்கடல்வாசனா.

முல்லையும் மருதமும் ஒன்றா. குறிஞ்சியும் முல்லையும் வேறா. நானிலத்திற்குள் போட்டியா. ஐந்திணைக்கும் போட்டிபோல் தெரிகிறதே. ஐம்பூதங்களுக்குள்.

தமிழகத்தில் அனைத்துச் சாதியாரும் கலியை முடிக்க முயன்றார். முயன்றவர் கடவுளானார். புது மதத்தை உருவாக்கினார். யாராவது கண்ணன் பெயரைச் சொல்லி கலியை முடித்தாரா எனில் ஒருவரையும் காணோம். ஆரம்பத்தில் கடவுள் பெயரைச் சொல்லி கூட்டம் பாா்த்தவா்கள், பின்னாட்களில் தாங்களே கடவுள் எனச் சிஷ்யகோடிகள் வலம்வர உலகைப் பவனி வந்தார்கள். இந்தியாவெங்கும் ஏராளமான கடவுள்கள்.

உலகின் அனைத்து மதத்தாரும் புத்துலகம் படைக்க விரும்பினார். உலகின் அத்தனை இலக்கிய க்ா்த்தாக்களுக்கும் புத்துலகம் படைப்பதே பெருநோக்கமாக இருந்தது. பேனாவால் புத்துலகம் படைக்க முயன்றவா் ஏராளம். ஒரு புத்தகத்தால் புதுவுலகம் படைக்கக் கிளம்பியோா் அனேகம். தாம் ஒற்றை ஆளாய் உலகை வெல்வோம் என்றவரும் உண்டு.

துவாபர கண்ணனுக்குப்பின் தற்போது வரையிலும் உலகெங்கும் எத்தனையோ மதங்கள் உருவாகின. எவ்வளவோ கடவுள்கள், ஞானிகள், எழுத்தாளர்கள், அறிஞா்கள், மாவீரா்கள் தோன்றினாா்கள். உலகம் என்றால் என்ன என்பதை ஆராய்ந்தவா் ஆயிரமாயிரம் பேர். உலகனைத்தையும் தங்களின் குடைக்குள் கொண்டுவர விரும்பியோரும் பலா்.

உலகில் புத்துலகம் படைப்பதற்கான அறிவும், ஞானமும் தொடா்ந்து முன்னெடுக்கப்பட்டே வந்திருக்கிறது. அறிவு தொடா்ச்சியாகக் கடத்திவரப்பட்டு, எம் காலத்தில் ஒப்பற்ற ஞானமாகத் திரண்டுள்ளது. யாம் அனைவரிலும், அனைத்திலும் கொடுத்துவைத்திருக்கிறோம். யாம் அனைத்திலும் சுகவாசி. மூத்தோா்போல் முயன்று ஞானம் பெறவில்லை. முன்னோா் போன்று காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்து அறிவைப் பயிலவில்லை. புது உலகிற்கான முன்னத்தி ஏா்களைப்போல் யாம் சிறியதொரு தியாகம்கூடச் செய்ததில்லை. இருப்பினும் அரும்பாடுபட்டுக் கொண்டுவரப்பட்டுள்ள அளப்பரிய இந்த உயா்ஞானத்தின் அருமையை, பெருமையை, மகத்துவத்தை தெளிவாகப் புரிந்திருக்கிறோம். எமது பணி எவ்வளவு முக்கியத்துவமானது என்பதையும் அறிந்திருக்கிறோம்.

புத்துலகம் படைக்க முயன்றவர், விரும்பியவர், ஆசைப்பட்டவர் கண்கண்ட கடவுளான கண்ணனின் பெயரில் முயன்றாரா. உலகங்களைக் காக்கும் கடவுளான கண்ணன் யாரென அறிந்தாரா. ஆராய்ந்தாரா. உலகையாளும் அரசு கண்ணனெனும் உண்மை தெரியாமல், சத்தியத்தை அறியாமல், சத்ய யுகம் சாத்தியம்தானா..

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றாரான கண்ணனின்றி புதுயுகம் படைக்கமுடியுமா.. யுகங்களின் அதிபதி யார்.. காலத்தின் தலைவன் யார்.. யார் பெயரில் காலம் ஓடுகிறது.. காலத்தின் ஒடுக்கமும் விரிவும் யாரால்..

**உலகைக் காப்பது யார்.. உயிர்க்கோடி காப்பது யார்..**

வைணவத்தில் குறிப்பாக ஸ்ரீவைணவத்தில் பேரண்டத்தின் ஞானம் பெரும்புதையலாய் குவிக்கப்பட்டிருப்பதை உலகத்தார் அறியவில்லையா. புத்துலகிற்கான வாசல் வைணவத்தில் பொக்கிஷமாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதே, வைணவத்தை அறியாமல் புத்துலகம் எப்படி முடியும். புதுயுகத்தின் மந்திரச்சாவி அரங்கமாநகரில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதே. அரங்கனை தந்தையென அறியாமல் புதுயுகம் படைப்பவர் எவர்..

## பெருந்தந்தையும் வீரமகனும்

யாம் பிரம்மனா. எம் தந்தை அரங்கரா. அரங்கனின் அடியார்க்கு அவர் அடியார்க்கு அவரடியார்க்கு அடியார் என்பதே உத்தமம் என வைணவ உலகம் கண்டுகொண்டிருக்கும்போது, எம்மை மகன் என எப்படிச் சொல்லமுடியும். அடியேன் இராமானுஜதாசன் என்பதே ஸ்ரீவைணவ சம்பரதாயமாக இருக்கும்போது, அதனை நன்றாக அறிந்துள்ள யாம், எம்மை மகன் என்பது அறிவுடைமைதானா. அரங்கத்தின் அரசே உயிர்களனைத்திற்கும் தந்தை என்பதால் அடியேனுக்கும் தந்தையாகின்றார். அன்புள்ள தந்தையும் அரங்கரே.. கருணைமிக்க தாயும் அரங்கரே. சுற்றமும், நட்பும், உறவும், உரிமையும், எல்லாமும் அரங்கத்தம்மானே.

அரங்கனின் அடியோங்களிலேயே மிகச் சிறியோனான அடியேனுக்கு புத்துலகம் படைக்கவேண்டும் என்னும் எண்ணமளித்தது தந்தை. புதுயுகம் படைக்கும் அறிவை வளர்த்தது தந்தை. எமக்கு படிப்பைக் கொடுத்தது தந்தை. ஆசிரியர்களிடம் நல்ல

மாணவன் எனப் பெயரெடுக்க வைத்தது தந்தை. பேச்சு வராத எம்மைப் பேராசிரியராக்கி அழகு பார்த்தது தந்தை. பெண்ணாசைக்கு  ஒடித் திரிந்த எம்மை, எம்மடியார் அது செய்யார் எனப் புத்தி புகட்டியது தந்தை. தவறிழைத்தோமே தந்தையே எனத் தலைகுனிந்தபோது எம்மடியார் தவறு செய்யார், செய்தாரேல் நன்று செய்தார் எனத் தேற்றியவர் தந்தை. கோழையை வீரனாக்கியவர் தந்தை. முயன்று பார் என ஊக்கமளித்தவர் தந்தை. முடியும் எனும் நம்பிக்கையளித்தவர் தந்தை.

எம்மால் முடியுமா. முயன்றவர் எத்தனையோ பேர். முடியும் என்றே ஓடுகிறார். கண்ணனெனும் பெயர்கொண்டு யாமும் பந்தயத்தில் கலந்து கொள்கிறோம். யாம் மிக நன்றாகப் பயிற்சி பெற்றுள்ளோம். எமது ஆசிரியர் வெற்றிக்கான அனைத்தையும் இராப்பகலாக பயிற்றுவித்துள்ளார். பல வருடங்களாக எம்மை சிறப்பாக தயார்ப்படுத்தியிருக்கிறார். யாம் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம்.

புத்துலகின் ஞானம் தொடர் ஓட்டமாக எம்மிடம் தரப்பட்டுள்ளது. ஞானமென்னும் சுடர் ஏந்தி, ஸ்ரீராமனின் வில்லிலிருந்து சீறிப்பாயும் அம்பென, ஸ்ரீகிருஷ்ணரின் அசுவமாக எல்லைக்கோட்டை  நோக்கிப் பாய்கிறோம்.  எத்தனை பேர் ஓடினாலும் எல்லையைத் தொடுபவரே வெற்றியாளர் என்பதை அறிந்திருக்கிறோம். ஓட்டத்தில் முதலாவது வருபவரே வென்றவர். வென்றவருக்கே தங்கப் பரிசு. யாம் போட்டியில் வென்று தங்கமகன் என நிரூபிப்போம்.

யாம் வெல்வோம். திவ்யமான நாலூறும் மங்களமான ஆயிரமும்  ஆனந்தமான அஷ்டகமும், பரமபதமருளும் எட்டெழுத்து மந்திரமும் கொண்டு நிச்சயம் யாம் வெல்வோம்.. வெற்றி மலரை தந்தை மணிமுடியில் சூட்டுவோம்.

Let this Victory be one more Feather in the Crown of Our Great Father.

அரங்கனாகிய எம் தந்தையைக் காப்பாகக்கொண்டு, நாராயணனாகிய எம் தந்தையின் பெயரால், அன்புமகனாகிய யாம் புத்துலகம் படைக்கிறோம். எந்தை எமக்களித்துள்ள அறிவு வழிகாட்டுக.. எந்தை எமக்கருளியுள்ள ஞானம் ஒளியாகுக..

எம் வெற்றி ஆசான் வெற்றி

வெற்றி தமிழர் வெற்றி

பாரத மண்ணின் வெற்றி

இந்திய ஞானத்தின் வெற்றி

மனிதர் வெற்றி

இலக்கியப் பிதாக்களின் வெற்றி

மானுடத்தின் பெருவெற்றி

அமரர்களின் அளப்பரிய வெற்றி

பெருந்தாயார்களின் புகழ்வெற்றி

எம் வெற்றி பெருந்தந்தையர் அருள்வெற்றி

**தாய்மேல் ஆணை! தமிழ்மேல் ஆணை!**

I Swear on my Mother! I Swear on Tamil!

I will open the eyes of blind people.

Heart that live in darkness, come to the light

See how would be the world of good people

இருட்டினில் வாழும் இதயங்களே கொஞ்சம் வெளிச்சத்தில் வாருங்கள்

நல்லோர் உலகம் எப்படி இருக்கும் என்பதைப் பாருங்கள்

கல்லைக் கனியாக்க கனவை நனவாக்க

கையில் ஏர் கொண்டு வருவான்
சாந்தி வழி என்று காந்தி வழி சென்று
கருணைத் தேன் கொண்டு தருவான்
உயிரைத் தமிழுக்கும் உடலை மண்ணுக்கும்
உதவும் நாள் கண்டு துடிப்பான்
சுற்றிப் பகை வந்து சூழும் திருநாளில்
**வெற்றித் தோள் கொண்டு முடிப்பான்!**

தமக்கொரு பாதை வகுக்காமல் தலைவன் வழியிலே நடப்பான்.. அன்புத் தந்தையல்லவா. தந்தையின் வாழ்வு எமக்காகவல்லவா. தந்தை பாடியது எமக்காகவல்லவா.

பெற்றாதால்தான் பிள்ளையா.. தந்தைதானே. எத்தனை அன்பான தந்தை. அதனால்தான் அப்படி ஆசை ஆசையாய் முண்டியடித்துப் போய் பார்த்தோமா. எவ்வளவு நேரம் பார்த்து நின்றோம். போதுமென்று தோணவில்லையே. தந்தைமேல் எளிய மக்கள் கொண்டிருந்தது பேரன்பல்லவா. பெருமதிப்பல்லவா.

தமிழர் இதயங்களை வென்றவரல்லவா தந்தை. தமிழர் மனங்களைக் கவர்ந்தவரல்லவா தந்தை. எப்போதும் வென்றவர் தந்தையல்லவா. ஜெயராமனல்லவா தந்தை..

சேரளத்திலிருந்து எதற்காகத் தந்தை தமிழகத்திற்கு வந்தார். தந்தையின் குடும்பத்தை இலங்கைக்குப் போகவைத்தது எது. குடந்தைக்கு அழைத்து வந்தவர் யார். தந்தை நாடகங்களில் நடிக்க நேர்ந்தது எதனால். தந்தை எத்தகைய கடின முயற்சிக்குப் பின் திரைத்துறையில் நல்லதொரு இடம்பெற்றார். தொடர்ந்து வெற்றிக் கதாநாயகனாக திரைத்துறையில் கோலோச்சியது எப்படி. எது தந்தையை அரசியலுக்கு இழுத்து வந்தது. என்ன மந்திரம் செய்து தந்தை தொடர்ந்து வெற்றிபெற்றார். மருத்துவமனையில் படுத்துக்கொண்டே வென்றாரே தந்தை. தந்தையின் வாழ்வு எதற்காக. யாருக்காக.

எம்மைப் போன்ற ஆயிரமாயிரம் பிள்ளைகளைப் படிக்கவைத்தது தந்தையல்லவா. எங்களைப் போன்ற எளியவர்கள் எப்படிப் படித்தோம். கம்மங்கஞ்சி குடிக்க அடம்பிடித்த எம்மைப் போன்றவர்களை மத்தியானத்தில் பருப்புச்சோறு சாப்பிட்டு தெம்பாகப் படிக்க வைத்தது அன்புத் தந்தையல்லவா. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவராம். தந்தை சத்தான சோறுமட்டுமா போட்டார். எவ்வளவு நல்ல தந்தை. மகன் செறுப்புப் போடாமல் பள்ளிக்கூடம் போவான் என்பதை எப்படி அறிந்தாரோ. செறுப்பு கொடுத்தார். புத்தகம் கொடுத்தார். சீருடை கொடுத்தார். நோய்நொடி வரக்கூடாதென தடுப்பூசி போட்டார். பிள்ளைக்கு நன்றாகக் கண் தெரியட்டுமென மீன் மாத்திரையும் கொடுத்தாரே. எத்தனை உயர்ந்த தந்தை..

**நன்றி தந்தையே!**

எங்கள் கூரைவீட்டுக்கு மின்சாரம் தந்தார். கூரைவீட்டை மாற்றி ஓட்டு வீடு கட்டுவதற்கு கடன்கொடுத்தார். கடனைத் தள்ளுபடியும் செய்தார். கறவை மாடுகள் கொடுத்தார். இலவசப் பட்டா கொடுத்தார். அரிசி கொடுத்தார். அப்பா அம்மாவுக்கு வேட்டியும் சேலையும் கொடுத்தார். தந்தை கொடுத்த சீலையை மூடிக்கொண்டுதான் யாம் உறங்கினோம். ஏழைகள் வாழ்வு முன்னேற பெருவள்ளலாய் கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்கள் தந்தையுடையவை. அளவில்லாமல் அள்ளிக் கொடுப்பதில் தந்தைக்கு இணை அவரே.

தந்தை ஏழை மக்களின் வாழ்வில் மாற்றம் தந்தார். எளியவர்களுக்கு ஏற்றம் தந்தார். நானிலத்திற்கு நன்மை செய்தார். நாட்டிற்கு நலத்திட்டங்கள் தந்தார். காடு திருத்தினார். கழனி பெருக்கினார். பசி போக்கினார். கல்வி வளர்த்தார். அறிவை உயர்த்தினார். தொழில் பேணினார். அமைதி நிலைநாட்டினார். துன்பம் நீக்கினார். இன்பம் ஊட்டினார். தமிழர் மனங்களை வென்றார். அன்பு நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றார். சரித்திர நாயகனாய் புகழடைந்தார்.

நாம் யார் புத்தகத்தின் பத்தாவது பகுதிக்கு எம்.ஜி.ஆர் எனும் தலைப்பு வைத்தோம். மிகப்பொருத்தமான தலைப்பு என மனம் மகிழ்வுற்றது. புத்தகம் எழுதத் துவங்கிய நான்கு வருட காலத்திலுள்ளாக சமூக ஊடங்களில் ஆச்சரியப்படுமளவிற்கு பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டிருந்தன. சட்டென அனைத்தும மாறியது போல.

அனைவர் கைகளிலும் மிடுக்குடைய, படுசுட்டியான, விழிப்பான, உடனடியான, சுறுசுறுப்பான, சுமார்ட் போன்கள். சுமார்ட் போன்களை வைத்துக்கொண்டு சும்மா இருப்பார்களா. ஊர்வம்பு. உலக நடப்பு. கூடவே சாதி மதத் துவேசம். நான்கு வருடத்திற்குள் தமிழர்கள் எவ்வளவு மாறிவிட்டார்கள். இன்றைய தமிழகம் பற்றியும் எழுத வேண்டுமோ.

தமிழர் யார் புத்தகத்தை மிகுந்த தயக்கத்தோடே 2018 மார்ச்சு இறுதியில் ஆரம்பித்தோம். தமிழர்களின் சாதிப்பற்றையும் மதவெறியையும் எழுதப்போகிறோம் என்பதே பெரியதொரு உளச் சோர்வை அளித்தது. மனதில் உள்ளதை அப்படியே எழுத முடியுமா. எழுதினால் என்னாகும். சாதிப்பகை வருமோ. மதவாதிகள் எதிப்பார்களோ. தமிழகத்தில் துணிந்து எழுத முடியுமா. நோக்கம் சாதியை வளர்ப்பதோ, மதத்தைத் தூண்டுவதோ அல்லவே. உண்மையைச் சொல்வதில், உண்மையை எழுதுவதில் என்ன தயக்கம். எழுதுவது உண்மைதானே. நிச்சயமான உண்மைதானே. தந்தை உண்மையைத் துணிந்து எதிர்கொண்டாரே. எமக்கு தந்தையைவிட துணிச்சல் குறைவா. தந்தை வெள்ளையரையே எதிர்கொண்டார். எம்மால் சொந்தத் தமிழர்களையே எதிர்கொள்ள முடியாதா.

மனதிலிருப்பதை மடமடவென்று எழுதினோம். ஞானத்தில் சிறந்த பிராமணர்களைக் குறை சொல்லலாமா. பிள்ளைகளின் தமிழ்ப்பற்று வியக்க வைப்பதல்லவா. குற்றம் காணலாமா. தேவர்களைப் பற்றி சிறு விமர்சனமும் சொல்லமுடியாதே. நாடார்கள் அரும்பாடுபட்டு முன்னேறியவர்களல்லவா. எல்லாம் சரிதான். நாம் எப்போது தமிழராய், மனிதராய் ஒன்றிணைவது. தமிழர்தம் அறிவு கொண்டு என்றைக்கு உலகத்தை மாற்றியமைப்பது.

எதற்காக தமிழர் உலகை மாற்றவேண்டும். காலம் தமிழரை அதற்காகவே தயார்படுத்தி வந்துள்ளது. உலகை நேர்வழியில் நடத்தும் அறிவு தமிழர்க்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழர் ஞானம் உலகில் மிகச்சிறந்தது. தமிழ் தமிழர்க்கு மிகப்பெரிய பொறுப்பைக் கொடுத்துள்ளது. தற்போதைய உலகில் முன்னத்திஏர் பிடிப்பதற்கு தமிழரே தகுந்தவர். எத்தனையோ நாட்டினர் முயன்றார். எத்தனையோ மதத்தினர் முயன்றார். எத்தனையோ பண்பாடுகள் முட்டிமோதின. ஆனாலும் ஏதோ ஒன்றை அவர்கள் அறிந்திருக்கவில்லை. உலகத்தவர் அறியாவண்ணம் அந்த ஒன்று

தமிழில் கட்டிக்காக்கப்பட்டு வந்திருக்கிறது. மறைபொருளாகப் பாதுகாக்கப்பட்டு வந்த அந்த மதிப்புமிக்க ஒன்று தமிழரின் ஆன்மீகச் செல்வம். உலகின் ஏன் எனும் கேள்விகளுக்கான அனைத்துப் பதில்கள் கிடைக்குமிடம் தமிழகம். விடைகளை கண்ணின் இமைபோல் காத்து வருவது தமிழ்..

தமிழின் பெருமையை, சிறப்பை, மேன்மையை, தமிழின் அறிவை தமிழா் உணா்ந்திருக்கிறாரா.. சங்க காலப் புலவா் தொடங்கி தற்போதையை காலம்வரை அத்தனை இலக்கிய ஆளுமைகளும் அறிந்திருந்தாா். அறிந்திருந்ததாலேயே தமிழ் ஒப்பிலா மொழி எனக் கொண்டாடினாா். தமிழே உலகின் முதுமொழி எனப் போற்றினாா். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி எனப் புகழ்ந்தாா்.

தமிழ் உலகின் சிறப்புற்ற மொழி எனில். எப்படி வந்தது அந்தச் சிறப்பு. தமிழின் பெருமைக்குக் காரணம் யாா். எதனால் வந்தது தமிழுக்கு இத்தனை ஏற்றம். மதிப்பு. உயா்வு.

உலகின் மும்மூா்த்திகள் எனப் போற்றிப் புகழப்படும் பெருந்தந்தையரை தமிழா் அறிந்துகொண்டிருக்கிறாரா. தமிழா் மூன்று தந்தையரின் வல்லமையைப் புரிந்துகொண்டிருக்கிறாரா. வேதங்களாலும் புகழ முடியாத நம் பெருந்தந்தையருக்கு ஈடான வல்லமை கொண்டவா்கள் பெருந்தாயாா்கள் என்பதை தமிழா் தெரிந்திருக்கிறாரா.

மானுடா் ஒருவருக்கொருவா் தொடா்புகொள்ளும் ஒரு கருவியே மொழி எனும் வரையறையை மாற்றி, தமிழா்க்கு தமிழ் உயிரினும் மேல் என்றாகியது எப்படி.. திடீரென்று திராவிட இயக்கத்தாா் தோன்றியது எப்படி.. பிதா உலகின் ஒருமொழி என்ன, மகன்களோ உலகின் ஒப்பற்ற ஒரேமொழி எம்மொழி என முழங்கியது ஏன். ஓட்டுத்தானா. உண்மையான மொழிப்பற்றா.

கடவுள் இல்லை என்ற பிதாவுக்கு எப்படி வந்தது இவ்வளவு பெரிய ஞானம். தமிழரே அது ஞானம்தானா. சுதந்திர தினத்தன்று கருப்புகொடி ஏற்றுவோம். அந்த வசந்த நாளுக்காகப் பாரதத்தாா் எவ்வளவு பாடுபட்டாா்.

இந்தியா அடைந்தது சுதந்திரம்தானா. யாருக்கு சுதந்திரம் கிடைத்தது. யாருக்கெல்லாம் கிடைக்கவில்லை. யாருக்கெல்லாம் மறுக்கப்பட்டது. யாருக்கெல்லாம் இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. சுதந்திரக் காற்றை விற்றவர், விற்பவர் யார் யார். சுதந்திர மூச்சுக்காற்று கிடைக்காதவர் யார். பெற்ற சுதந்தித்தைப் பேணத் தெரியாதார் யார். காக்கக் தவறியவர் யார்.

சுதந்திரம் வாங்கியது பாரதமா. இந்தியாவா. சுதந்திரம் கண்டது மண்ணா மக்களா. சுதந்திரம் பெற்றது மேல்தட்டா. அடித்தட்டா. சுதந்திரமடைந்தது கிழக்கா மேற்கா. சுதந்திரம் பெற்றது பிராமணரும் பிள்ளையுமா அல்லது பள்ளரும் பறையருமா. ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரமடைந்தது கவுண்டரா அருந்ததியரா. அவர் போராடிப் பெற்றதனால் சுதந்திரத்தைக் கைப்பற்றிக் கொண்டாரோ. உண்மையில் சுதந்தித்திற்காகப் போராடியது யார். இன்னுயிர் நீத்தது யார். வெள்ளையருக்கு சாமரம் வீசித் திரிந்தது யார். போட்டி போட்டு வெள்ளையரிடம் பதவிகள் வாங்கியது யார். பதவிகளுக்காக கட்டிப்புரண்டது யார். சுதந்திரமண்ணில் பதவிகளை அள்ளியது யார் யார். வெள்ளைக்காரர் பரவாயில்லை எனும் அளவிற்கு நாட்டைக் கொள்ளையிட்டது யார் யார். வெள்ளையைவிட கூடுதலாக கருப்பைப் பதுக்கியது யார்.

சுதந்திரமடைந்தது இந்தியாவா. ஒருவேளை நியூஇந்தியாவாக இருக்குமோ. புதுடெல்லியல்லவா. டெல்லியா தில்லியா. தில்லியா தெல்லியா. தெல்லியா தெள்ளியா. தமிழ்ப் பெயரோ. பேரை மாடனாக வைத்தால், இந்தியாவின் நாடும் நகரமும், ஊரும் உலகமும், இந்தியரின் மனமும் எண்ணமும், உறவும் உள்ளமும் நவீனமாகிவிடுமா.

உலகின் ஒப்புயர்வற்ற பாரததேசம் சுதந்திரம் பெற்று எழுபத்தொரு ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டது. இன்னமும் இந்தியக் கிராமங்கள் எப்படி இருக்கின்றன. கிடைத்தது யாருக்கான சுதந்திரம்.

சுதந்திரம்பெற்று கால்நூற்றாண்டுக்குப்பின் பிறந்த யாம் சுதந்திரக் காற்றை சுவாசித்தோமா. எங்கள் ஊரிலேயே முடிவெட்டுபவர் இருந்தார். ஆனாலும் எமக்கு வெட்டமாட்டார். ஏன் பாரதத்தீரே. ஊரில் இருந்த குறிப்பிட்ட சாதிக்காரர் முடியெல்லாம் தங்கத்தாலும் வைரத்தாலும் இருந்து எமது தலைமுடிமட்டும் வெள்ளியால் இருந்ததா.

முடிதிருத்தும் கூலியைக் கொடுக்கமாட்டோம் என நினைத்து வெட்டவில்லையோ. அவர் எமக்கு முடிதிருத்தாததற்கான காரணம் என்னவாக இருக்கும். காரணத்தைத் தெரிந்திருக்கிறாரா பாரதத்தார். அறிந்திருக்கிறாரா தமிழகத்தார்.

ஊராருக்கெல்லாம் துணிகளை அயர்ன் செய்து கொடுத்தவர் எமது உடைகளை அயர்ன் பண்ண மறுத்துவிட்டது எதற்காக ஞானத்தில் சிறந்த பாரதத்தாரே. அறிவில் எல்லை கண்ட தமிழரே.

யாம் யார். எமது குடும்பத்தார் யார். நாங்கள் என்ன வேலைகள் செய்தோம். எமது அம்மாவும், அக்காவும் பறித்த கத்தரிக்காயை சாப்பிட்டார். நாற்று நட்டு, களையெடுத்து, நீர்ப்பாய்ச்சி, அறுத்து, சுமந்து, அடித்து, புடைத்து. அள்ளி, அவித்து, குத்தி. கல்நீக்கிக் கொடுத்த அரிசியை பொங்கிச் சாப்பிட்டார். உலையில் போடுவதுவரை அரிசியை அரும்பாடுபட்டு உண்டுபண்ணியது நாங்கள். அந்த அரிசி ஒத்துக்கொள்ளும். அரிசியை சோறாக்கினால். ஒத்துக்கொள்ளாது. ஒத்துக்கொள்ளாது.

ஏஏ கருப்பு. எமக்கு இன்னும் நினைவுள்ளது ஞானமுள்ளோரே. பெயர் கருப்பையா. அழகான பெயர். நல்ல மனிதரும்கூட. வீட்டைக் கட்டிக்கொடுக்கும் கருப்பையா அந்த வீட்டின் திண்ணையில்கூட உட்கார முடியாது. உண்மைதானே. மறுக்க முடியுமா.

மற்றவருக்கெல்லாம் ஒருவித தேநீர் குவளை. எமது உறவினருக்கு வேறொன்று. அவர்கள் மேஜைமீது உட்கார்ந்து சாப்பிட, இவர்களோ கீழே தரையில் அமர்ந்து சாப்பிட்டார்கள்.

அவர்கள் வயலில் இவர்கள் களையெடுத்தார்கள். இருவரும் மனிதர்தான். ஒரே ஊர். உடை ஒன்று. நிறம் ஒன்று. மொழி ஒன்று. ஆனாலும் அவர் இவருக்கு குவளையில் தண்ணீர் தரவில்லை. அவர் இவருக்கு கையில் ஊற்றி, இவர் குடித்தார். எமது காலத்திலேயே இருந்தது, எமது கண்ணாலேயே பார்த்தோமெனில், தந்தை காலத்தில் எப்படி இருந்திருக்கும்.

அவரும் இவரும் ஒன்றா. அவாளும் இவாளும் ஒன்றாக முடியுமா. இருவரும் தமிழராக முடியுமா. அவா எத்தனை உயர்வு. எதிலெல்லாம் உயர்வு. அறிவில் எத்தனை உசத்தி. பேசியது அத்துவிதம். கண்டடைந்தது இருவரும் ஒன்றல்ல.

நீர் எத்தனை படித்து என்ன பயன். எவ்வளவு எழுதி என்ன பிரயோசனம். அளவில்லா ஞானம் பெற்றும் என்ன நன்மை. நீர் வானத்தைவிட உயர்ந்தவராகவே இரும். சக மனிதரை மனிதரென்று அறியாத உமது அறிவு அறிவாகுமா. உமக்கு அது அறிவாகத் தெரிந்தாலும் அது உண்மையான அறிவாகுமா. உமது ஞானம் உண்மையான ஞானமாகுமா.

கொள்ளையரைத் திருத்தாமல் வெள்ளையரிடமிருந்து பெறுவது சுதந்திரமாகாது, அது வெறும் அதிகார மாற்று என்பதை மிகச் சரியாகக் கண்டறிந்த ஞானி யார். எத்தனை ஞானம். முன்பு மேடைதோறும் முழங்கினார். இன்றோ விவாதங்களில் ஆக்ரோசமாகப் பேசுகிறார். இந்தியா முன்னேறிவிட்டதாம். எதிலய்யா இந்தியா முன்னேறியிருக்கிறது. அனைத்திலும் மேற்கை நகலெடுப்பதுதான் ஞானமா. இந்த ஞானத்தை அடையத்தான் பரதகண்டத்தார் தவமாய் தவமிருந்தாரா.

மகாத்மாகூட தாமதமாகத்தான் புரிந்துகொண்டார் போல. அனேகமாக சுதந்திரம் உறுதி என்றானவுடன், சுயநலக்காரர்கள் பதவிகளுக்கு அடித்துக்கொண்டதைப் பார்த்து அறிந்திருப்பார். பாரதத்தின் ஞானம் எத்தகையது என்பதை நவகாளியில் ஒற்றை ஆளாய் ஓடித்திரிந்தபோது கண்டிருப்பார். தந்தை இந்திய ஞானத்தின்மீது எவ்வளவு பெருமதிப்பு வைத்திருந்தார். பாரத ஞானமல்லவா தந்தையை இசுலாமியர்மேல் அளப்பரிய அன்பு காட்டச் சொன்னது. பாரதமண்ணின் பரந்த ஞானமல்லவா தந்தையை இயேசு மீது நல்லெண்ணம் கொள்ளவைத்தது. இந்திய ஞானமல்லவா தந்தையை சர்வசமய பிரார்த்தனை கொள்ளச் செய்தது.

ஒற்றைக் கேள்வியில் பிறந்துவிடாதா ஞானம். ஞானம் பெற முதல் தகுதி அன்பல்லவா. அன்பற்றார் அடைவது ஒருபோதும் ஞானமாகாது மானுடரே..

ஒரு மாதத்திற்குள் எழுதி முடித்துவிடலாம் என நினைத்ததற்கு மாறாக, சற்று அதிக நாட்களை எடுத்துக்கொண்டது தமிழர் யார் புத்தகம். மிக மிகச் சுருக்கமாக எழுதவேண்டும் என விரும்பியும் நீளத்தைத் தவிர்க்க முடியவில்லை.

வலுக்கட்டாயமாகப் போதும் என நிறுத்திக் கொண்டோம். பிழை திருத்தி, நீக்கல், சேர்த்தல் முடிக்க ஏப்ரல் இறுதியாகிவிட்டது. கோடைவிடுமுறைக்கு ஊருக்குச் சென்று சில வீட்டுவேலைகளை மேற்கொண்டோம்.

நான்கு புத்தகங்களையும் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பக்கங்களில் எழுதிவிட்டிருந்தோம். ஒருவழியாக எழுத விரும்பிய புத்தகங்களை ஓரளவிற்கு எழுதிவிட்டோம் என மகிழ்ச்சி கொண்டோம். ஒருமுறை படித்துப் பார்த்து, திருத்தம் செய்தோம். எமது அக்கா பிள்ளைகள் கௌசல்யா மற்றும் அனுஷ்யா அனைத்துப் புத்தகங்களையும் படித்து எழுத்துப் பிழைகளை குறித்துக் கொடுத்தார்கள். பிழை நீக்கி யாமும் முடிந்தவரை வாசித்துப் பார்த்து, சாதி மதம் சார்ந்த எழத்துக்களை முடிந்தவரைக்கும் குறைத்து ஒரு முழுமையான வடிவத்திற்குக் கொண்டுவந்தோம். கடைசியாக, ஐந்தாவது புத்தகமான புத்துலகம் செய்வோம் பகுதிகளை தட்டச்சு செய்தோம். அப்பாடா என்றுதான் இருந்தது. இனியாவது முதுகுவலியைக் கவனிக்கவேண்டும் என நினைத்துக் கொண்டோம்.

புத்தகங்களை யாம் நன்கு திட்டமிட்டே எழுதியுள்ளோம். மனதில் தோன்றுவதை அப்படியே எழுத்தில் கொண்டுவர வேண்டும் என விரும்பினோம். மேலும் ஒருமுறைதான் எழுதுவது என்பதையும் தீர்மானித்துக்கொண்டோம். அடித்து, திருத்தி, மீண்டும் எழுதக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். அவ்வாறே புத்தகமும் எழுதப்பட்டுள்ளது. எழுத்துப்பிழை நீக்கும்போது, சில வரிகளை மாற்றி எழுதியதோடு சரி. புத்தகங்களை எமது மனம் எனக் கொள்ளலாம்.

புத்தகங்களில் சில சொல்லாடல்களை முற்றாகத் தவிர்த்திருக்கிறோம். யாம் யார் புத்தகத்தில் எம்மைப்பற்றி அனைத்தையும் சொல்லிவிடவில்லை. வரைமுறைக்குட்பட்டே சொல்லப்பட்டுள்ளது. சொல்லாமல் விடப்பட்டுள்ளவையும் இருக்கின்றன. நல்லனவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம். அடுத்தவர் மனம் வருந்துமென்றோ, அவரது மரியாதைக் குறையுமென்றோ கருதியவை முற்றாகத் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

புத்தகத்தில் எமது காதலும் காமமும் சொல்லப்படவில்லை. அதைச் சொல்லாமல் எம்மைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் எழுதியதாகாது. இன்னொருவர்

அந்தரங்கத்தை அறிவதில் மனிதருக்கிருக்கும் ஆர்வத்தை யாம் அறிந்தே இருக்கிறோம். எமது காதல், காதல்களைச் சொல்வதற்கு எம்மிடமும் நிறைய சங்கதிகள் உள்ளன. பள்ளி சென்ற வயதில், தலைவனென, கண்ணனென எமது வீட்டுத் திண்ணையில் யாம் உட்கார்ந்திருக்க, தலைவியோடு வரும் கோபியர் கூட்டம் எம்மை கிண்டலடித்துச் சென்றதை நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது. காதல் என்றால் என்னவென்று புரியாத வயது. காமத்தைப் பற்றி ஒருசிறிதும் அறியாத வயசு. ஆனாலும் தலைவி எப்படா வருவாள் என அவலோடு உட்கார்ந்திருந்தது எப்படியோ.

மேல்நிலை படிக்கும்போதுதான் எமது முதல்காமத்தை அறிந்தோம். அறிந்த புதிதில் கொஞ்சம் துள்ளித் திரிந்தோம் என்பதே உண்மை. நல்லவன் எனப் பெயரெடுத்திருக்கிறோமே, அதைக் கெடுத்துக் கொள்ளலாமா. ஒழுங்காகப் படிக்க ஆரம்பித்தோம். பன்னிரெண்டாம் வகுப்பில் அய்வுக்கூடம் பின்னால் உட்கார்ந்து சில தோழர்கள் ஆர்வமாக ஏதோ புத்தகம் படிக்க, யாம் என்ன புத்தகமென்று கேட்க, யாமெல்லாம் அதைப் படிக்கக்கூடாது, படித்தால் கெட்டுவிடுவோம் என்று சொல்ல, யாம் வழக்கம்போல் பொதுநூலகத்திற்குச் சென்று, அம்புலிமாமா புத்தகம் படித்ததை நினைத்தால் சற்று வெட்கமாகத்தான் இருக்கிறது.

இளவயதில் வருவது ஆர்வம்போல. அடுத்து வருவது ஆசையோ. கல்லூரியில் வருவதுதான் காதலா. வாழ்நாள் முழுக்க கூடவருவது, ஏங்க வைப்பது, மனதைப் புரட்டுவது இந்தக் காதல்தானோ. உண்மையில் ஒன்றிரண்டு பேருக்கே இந்தத் காதல் கைகூடுகிறது. காதலித்த, விரும்பிய, பழகிய மற்றவர் யாரையோ திருமணம் செய்து, எப்படியோ பிள்ளைகள் பெற்று, ஏதோ வாழ்ந்து, காதலின் ஏக்கத்தோடு பூமியைவிட்டு நீங்குவார்களோ. இயற்கை சரியான ஒருவரை அடையாளங்காட்டியும், சமூகக் காரணங்களால் மனிதர்கள் தவறவிட்டு விடுகிறார்கள் என்பது திண்ணம்.

தலையில் சூடியிருந்த அந்த ஒற்றை ரோஜாதான் எவ்வளவு அழகு. வராந்தாவில் நின்றுகொண்டு, ஒரே ஒரு பார்வை படாதா, இதழோரம் ஒரு சிறுபுன்னகை வராதா, ஒருமுறையாவது திரும்பிப் பார்க்கக் கூடாதா என ஏங்கித் தவித்த காலம்தான் எத்தனை இனியது. இதைத்தான் இலக்கியக்காரர்கள் காதல் என்கிறார்களோ.

மனிதர்கள் காதலே பெரிதென்று குடும்பத்தைத் துறக்கிறார்கள். காதலர் குடும்பத்தைத் துறந்து சுகமாய் வாழலாம். பெற்று, வளர்த்து, படிக்க வைத்து, எவ்வளவோ பாடுபட்டு, பாராட்டி சீராட்டிய பெற்றோர்கள், உற்றார்கள்.. பிள்ளைகளைப் பற்றிய அவர்களது கனவு. காதலர்களே. பெற்றோர் சம்மதத்தோடு திருமணம் செய்யுங்கள். காதல் பெரிதா குடும்பம் பெரிதா எனில் குடும்பமே பெரிதென நில்லுங்கள். நீங்கள் குடும்பமே பெரிதென நினைத்தால், பெற்றோர் மனமிரங்கி காதலே பெரிதென மனமாற்றம் காண வாயப்பிருக்கிறது. காதலிப்பவருக்கு காதல் மட்டுமே பெரிதாகத் தெரியும். பெற்றோருக்கே உலக நடப்புகள் நன்கு தெரியும். பெற்றோர் அனுபவத்தில் பெரியவர்களன்றோ. காதலின் பெயரால் தகுதியில்லாதவர்களிடம் மாட்டிக்கொண்டால் வாழ்க்கையே சிதைந்துவிடுமல்லவா. பெற்றோர் ஏன் காதலை மறுக்கிறார்கள் எனப் பொறுமையோடு எண்ணிப் பாருங்கள். அவர்கள் சொல்வதில் நியாயமிருக்கிறதா எனச் சிந்தியுங்கள். பிடிவாதம் பிடிக்கும் பிள்ளைகளோடு மல்லுக்கட்டாமல், பெற்றோரும் கொஞ்சம் விட்டுக் கொடுங்கள். ஒருவேளை உண்மையிலேயே ஒருவரையொருவர் மனப்பூர்வமாகக் காதலித்து, பெற்றோர் பிரித்துவைத்தால் அவர்கள் காலமெல்லாம் ஏக்கத்தோடு வாழக்கூடும். ஒன்றை அழுத்தமாகப் பதிவிடுகிறோம். காதலில் தோல்வி என்பதே இல்லை. காதலித்தவராவது மகிழ்வோடு வாழட்டும் என நினைப்பு வருமானால் அதுவே காதலின் மாபெரும் வெற்றி.

எம்மை விரும்புவதாகக் சொன்ன பெண்ணின் சுட்டுவிரலைக்கூட யாம் தொட்டதில்லை. பேருந்துப் பயணத்தில் அருகில் இடமிருந்தும் யாம் அடுத்த சீட்டில் உட்கார்ந்தே பயணமானதை இன்று நினைத்தாலும் எமக்குப் பெருமையாக இருக்கிறது. திருமணம் செய்துகொள் எனக் கேட்ட அந்த அன்பை யாம் அறியவில்லையோ. அன்று திருமணம் வேண்டாம், சமூகசேவையே பெரிதென்று யாம் எடுத்த முடிவு சரிதானா.

முடிவில் உறுதியாக இருந்தோமா. சமூக சேவையாவது செய்தோமா. கல்லூரிப் பணியில் சேர்ந்த முதல்நாள்வரை மட்டுமே புத்தகமாக எழுதப்பட்டுள்ளது. 1998 நவம்பர் மூன்று தொடங்கி, 31.07.2018 வரையிலான காலத்தில் யாம் வாழ்ந்த வாழ்க்கை எத்தகையது. யாரேனும் அறிவார்களா. தமிழில் விண்டவர் கண்டிலர், கண்டவர்

விண்டிலா் என்னுமொரு சொல் உண்டு. இறைவனைப் பாா்த்தவா்களால் சொல்லமுடியாதாம். சொல்லக்கூடியவா்களால் இறைவனைப் பாா்க்க முடியாதாம்.

எம்மை யாரேனும் அறிவாா்களா. ஒருவரும் அறியாா். யாமே சொன்னால்தான் உண்டு. எம்மை முற்றாகத் தனிமைப்படுத்திக் கொண்டோம். எமக்கு ஒற்றைக் கேள்வியே வாழ்க்கை என்றானது. நாம் யாா். யாராலும் முடியாத ஒன்றை எம்மால் அறிய முடியுமா.

கேள்வி எதற்காக. எமது தேடலினால் மனிதருக்கு என்ன நன்மை. யாம் எதற்காகப் பிறந்திருக்கிறோம். எமது வாழ்வில் நடந்தது, நடப்பது எதற்காக. ஒற்றை இலக்கிலிருந்து பிறழவேயில்லை. நாம் யாா் என்பதைக் கண்டுபிடித்து விட்டோமா. ஆம். உறுதியாகச் சொல்லமுடியுமா. ஆம் ஆம்.

புத்தகத்திற்கு பல தலைப்புகள் பொருத்தமாக இருந்தன. சத்தியசோதனை இரண்டாம் பாகம். சரியாகப் பொருந்தியது. p+q=1. இதுவே சரியான தலைப்பு. எப்போதும் வென்றான். அருமையான தலைப்பு. 10. தலைப்பே அனைத்தையும் சொல்கிறது. தமிழ் கிருஷ்ணா. பொருத்தமான தலைப்பல்லவா.

புத்தகத்திற்கு என்ன பேர் வைக்கலாம். பரிநாமம்.

பரிணாமம் தெரியும். அதென்ன சாா் பரிநாமம். பரி என்றால் குதிரை, நாமமென்றால் பெயா். குதிரையின் பெயா். குதிரையின் பெயா்னா என்ன சாா். முன்னட்டையை வடிவமைத்தபின் வாட்ஸ் ஆப்பில் பதிந்தோம். ஒருவருக்கும் புரியவில்லை. குதிரையின் பெயர ஏன் சாா் தலைப்பா வச்சிருக்கீங்க.

Evoluion of God ன்னா என்னது. கடவுள் பரிணாமம். பரிநாமம்னா என்னது. எவ்வளவோ முயன்று புத்தகம் எழுதியும் தலைப்புக்கூட புரியவில்லை எனில், முழுபுத்தகமும் எப்படி புரியும்.

பரிணாமம்னா எப்படி எளிய உயிரினங்கள் சூழ்நிலைக் காரணிகளுக்கு ஏற்றவாறு படிப்படியாக மாற்றம் பெற்று, மேலும் முன்னேற்றமடைகின்றன, பண்புகளில் எப்படி மாற்றமடைகின்றன என்பதை விளக்குகிறது. பரிநாமம்னா.

பரி என்றால் குதிரை, கண்ணன் கலியுகத்தை முடித்து, சத்ய யுகத்தைப் படைக்க கல்கி அவதாரம் எடுப்பதாகச் சொன்னதால், கல்கி அவதாரத்தின் குறியீடாகக் குதிரை சுட்டப்பட்டுள்ளது.

பரி - பெரியது. பெரிய பெயர் என்றும் பொருள் கொள்ளலாம். கண்ணன் பெரிய பெயர் கொண்டவன்.

அதென்ன சார்.. Evoluion of God. கடவுளின் பரிணாமம். கண்ணன் கல்கி அவதாரத்தில் மனிதனாகப் பிறந்து எப்படி கடவுளாக மாறுகிறான் என்பதைக் குறிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

10 ன்னு எதுக்கு சார் போட்டிருக்கு. கண்ணனின் பத்தாவது அவதாரத்தைக் குறிப்பிட.

**தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை**

**ஆர்ப்பாரமரர் பார்ப்பார் தவமே**

ஆர்ப்பாரமரர் - புரியல சார். சரிதான். ஆர்ப்பார்னா. மகிழ்ச்சியில துள்ளிக் குதிக்கிறது. மகிழ்ச்சியா சத்தம் போடுறது. அமரர்னா. தேவர்கள். தேவர்கள் சந்தோசத்துல ரொம்பவும் ஹேப்பியா ஆடிப்பாடி கொண்டாடி மகிழ்வாங்க.

யாம் என்ன எழுதியிருக்கிறோம் எனப் பேராசிரியர்களுக்கே தெரியவில்லை. மாணவர்களுக்கு என்ன புரியப் போகிறது. தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை - பாரதியார் பாடியிருக்கிறார். பாரதி பாரதத்தின் மகத்தான ஞானியல்லவா. கண்ணனெம் பெருமான் உலகத்தின் அறியாமை எனும் இருளைப் போக்குவான், உலகின் அத்தனை துயர்களையும் அடியோடு தீர்ப்பான், உலகில் தர்மத்தை நிலைநாட்டுவான், கல்கி அவதாரம் செய்து கலியின் கொடுமைகளை அடியோடு பெயர்த்தெடுப்பான்.

**நமது ஞானத்தந்தையின் சொல் பொய்யாமோ**

வானமளந்ததனைத்தும் அளந்திடும் வண்மொழி எது உலகத்தீரே

வானமறிந்ததனைத்தும் அறிந்திடும் வள்மொழி எது மானுடர்களே

எத்தனை ஞானம். எவ்வளவு பெரிய ஞானி. அறிந்திருக்கிறாரா தமிழர்

தமிழ் கிருஷ்ணா யார் சார். எமது மனைவி தமிழரசி, எமது பெயர் கிருஷ்ணமூர்த்தி, இரண்டையும் சேர்த்து தமிழ் கிருஷ்ணான்னு வச்சிருக்கோம். ஒரே சிரிப்பு.

கண்ணின் பத்தாவது அவதாரத்தைச் சுட்ட தமிழ் கிருஷ்ணா எனும் சிறப்பு பெயர் சூட்டப்பட்டுள்ளது. கிருஷ்ணரின் பத்தாவது அவதாரம் தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ளது.

நீங்களா சார் அது. அப்படித்தான் தெரியுது. எம்மோட வாழ்வில் நடக்கும் அனைத்தும் அதைத்தான் சுட்டுகிறது. யாம் எம்மை கண்ணனென நினைத்தே புத்தகத்தை எழுதியுள்ளோம். யாம் கலியை முடித்து சத்ய யுகத்தை நிலை நாட்டுவோம்.

## Kannan is Coming..

மாணவர்கள் கொஞ்சம் மிரண்டுதான் போனார்கள். சிலர் சிரித்தார்கள். மாணவர்கள் புல்லாங்குழல் கண்ணனை விஜய் மகாபாரதம் தொடர் வழியாக ஓரளவிற்கு அறிந்திருக்கிறார்கள். அழகு நிறைந்த அந்தக் கண்ணன் எங்கே. யாம் எங்கே. அவர் செய்த மாயங்கள் எங்கே. ஒரு மாயமும் அறியாத யாம் எங்கே. நேற்றுவரை எம்மைப் பேராசிரியராகப் பார்த்த, அறிந்த, மாணவர்களிடம் யாம்தான் கலியுகக் கண்ணன் என்றால் அவர் மனம் ஏற்றுக் கொள்ளுமா. கண்ணனைக் கடவுளாக அறியும் மனங்கள், சாதாரண மனிதராக இருக்கும் எம்மை கடவுளாக நினைக்குமா. ஒப்புமா. அவர்கள் அறிவுதான் நம்புமா. எமது இருபது வருட வாழ்க்கையை யார் அறிவார். கூடவே இருக்கும் எமது மனைவியிடமே யாம் எதையும் பகிர்ந்து கொள்ளாதபோது எம்மைப்பற்றி மற்றவர்க்கு என்ன தெரியும்.

அன்பு மாணவர்களே. புத்தகத்தப் படிச்சுப் பாருங்க. யாம்தான் கண்ணனின் பத்தாவது அவதாரம் என ஒத்துக் கொள்வீர்கள்.

மாணவர்கள் படிப்பார்களா. அவர்களுக்கு படிப்பதற்கு எங்கே நேரமிருக்கிறது.

புத்தகத்தின் பின்னட்டையில் விக்ரமயூர்ஜித சாசனம் வெளியிட்டிருக்கிறோம். அதென்ன விக்ரமயூர்ஜித சாசனம்.

**அரௌத்ர: குண்டலி சக்ரீ விக்ரம்யூர்ஜிதசாஸன:**

**சப்தாதிக: சப்தஸஹ: சிசர: ச்ர்வரீகர:**

மனதுள் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் சொல்லிக்கொண்டிருக்கும்போது அந்த எண்ணம் வந்தது. விக்ரம்யூர்ஜிதசாசனஹ என்பதன் பொருளென்ன. பெருமாள் உலகை அளந்ததற்கு எதாவது சான்று இருக்கிறதா. சான்று இருந்தால் மனிதர் நம்புவர்தானே.

வையமளந்த பெருமாளின் மேன்மையை அழ்வார்கள் எப்படிக் கொண்டாடுகிறார்கள். உலகளந்த பெருமாளின் தீரத்தை எவ்வளவு போற்றிப் புகழ்கிறார்கள். ஒருவேளை தற்போதைய உலகத்தைப் பெருமாளால் அளக்க முடியுமா. எப்படி அளப்பார். இரண்டு சிற்றடிகளால் பாரளந்த பெருமாளால் ஒரேயொரு அடியால் அளந்துவிட முடியாதா.

ஏன் நாரணர் தரணியை அளக்கிறார். எப்போதெல்லாம் அளக்கிறார். ஒருவேளை ஒவ்வொரு யுகத்திலும் அளப்பாரோ. யாம் பெருமாளின் அவதாரமெனில் யாமும் அண்டத்தை அளக்க வேண்டுமோ. இவ்வளவு பிரம்மாண்டமான பிரபஞ்சத்தை யாம் எப்படி அளப்போம் கண்ணா.

முன்னமே யாம் அளந்துவிட்டோமோ. யாம் குறித்து வைத்திருக்கும் நான்கு பேருண்மைகள்தான் விக்ரமயூர்ஜிதசாசனமா. அட ராமா. அப்படியானால் யாம் ஏற்கனவே அகிலத்தை அளந்துவிட்டோமா. உண்மைதானா. ஆகஸ்டு இருபத்தியிரண்டில் கல்லூரிக்கு எடுத்துச் சென்றதுதான் யாம் இந்த உலகத்தை அளந்துவிட்டோம் என்பதற்கான சான்றா. ஆம். இதுவே சாசனம் கண்ணா. விக்ரம ஊர்ஜித சாசனம். யூஆர் கிரேட் கண்ணா.

எமது பணியிடத்திலும் வீட்டின் கதவிலும் ஒட்டிவைத்திருப்பதுதான் விக்ரம ஊர்ஜித சாசனமா. எமக்கு ஆச்சரியமான ஆச்சரியம். ஆம். இதுதான் தந்தையின் மகத்துவம். இது அறிவியல் யுகமல்லவா. அனைத்திற்கும் சான்றுகள் கேட்கும் காலமல்லவா. இதோ யாம் அளவிடமுடியாத இந்தப் பேரண்டத்தை அளந்ததற்கான சான்று.

யாம் அளந்தது எதற்கான சான்று. உலகத்தைக்கூட எளிதாக அளந்துவிடலாம். மனித மனங்களை அளவிட முடியுமோ. யாம் அளந்திருப்பது யாருக்கான சாசனம். அது கடவுள்களுக்கான சாசனமாக இருக்குமோ. அப்படியாயின் தேவர்களுக்கென்று ஒரு சாசனம் உண்டா. உலகை அளக்கிறோமெனில் உலகின் கடவுள்கள், தேவர்கள், மனிதர்கள் என அனைவரையும் வெற்றி கொள்கிறோம் என்றுதானே அர்த்தம். தேவர்களையும் மனிதர்களையும் எப்படி வெல்வது. இவர்களை வென்றோம் என்பதற்கு எது சான்று.

தேவர்களுக்கான சாசனம். குருபரம்பரையில் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள், ஆச்சார்யார்களின் அருந்தொண்டுகள் எனப் படித்தபோது இரண்டும் மகா வாக்கியம்போல் மனதில் பதிந்துவிட்டிருந்தது. அடிக்கடி இந்த வாக்கியங்கள் மனதில் தோன்றுவதைக் கவனித்தோம். குருபரம்பரை போற்றி, வைணவப் பெரியோர்கள் போற்றி என வளர்ந்தது சாசனம். சிந்தனை நீண்டுகொண்டே போய் உய்யவந்த விண்ணகரப் பெருமாளே போற்றி என உயர்ந்து ஓங்கியது. இதுதான் தேவருக்கான விக்ரம ஊர்ஜித சாசனமா திருமாலே.

யாம் தினமும் காலையும் இரவிலும் வீட்டில் சாமிகும்பிடும்போது நீரும், பழங்களும் சமர்ப்பிப்பதுண்டு. மாலை தவறாமல் பூக்கள் படைப்போம். பிரபந்தங்கள் பாடி, நேரமிருந்தால் தியானம் சுலோகங்களும் சொல்வதுண்டு. சுக்லாம் பரதரத்தின் முதல் இரண்டு வரிகள் சொல்லி, ஸஹஸ்ரநாமத்தின் கடைசிப் பகுதியான, காயேன வாசா மனஸேந்த்ரியைர்வா, புத்த்யாத்மனாவா ப்ரக்ருதே ஸ்வபாயாத், கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை, நாராணயாயேதி ஸமர்ப்பயாமி என நீரளிப்போம். நீரையும் பழங்களையும் அனைத்து உயிர்களுக்கும், அனைத்து உலகங்களுக்கும், அனைத்து உள்ளங்களுக்கும் எனச் சொல்லியே சமர்ப்பித்து வந்தோம். மூன்று கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிக்கொண்டே வந்து, அனைத்து உழைப்புகளுக்கும் எனப் பத்தானது. இதுதான் மனிதருக்கான விக்ரம ஊர்ஜித சாசனமா கிருஷ்ணா.

புத்தகத்தின் முதல் பிரதியை ஜுலை 31 ஆம் தேதி இரவு பத்து மணிக்கு தெரிந்த நண்பர்களின் வாட்ஸ் ஆப்பில் பதிந்தோம். நான்கு ஆண்டு கடும் உழைப்பை வாட்ஸ் ஆப்பில் வெளியிட்டது மனதை வருத்தியது என்றாலும் ஏற்றுக்கொண்டோம். பத்தக வெளியீட்டை எங்கள் அருமை உய்யவந்த விண்ணகரத்தில், நண்பர்களை,

ஆசிரியர்களை, மதிப்பான எழுத்தாளர்களை, மக்கள் நல்வாழ்விற்குப் பாடுபடும் அரசியலாளர்களை அழைத்து நடத்தியிருந்தால் எப்படி இருந்திருக்கும்.

யாம் புத்தகத்தில் ஏராளமானோர் பெயர்களைப் பயன்படுத்தியிருக்கிறோம். யாரிடமும் புத்தகத்தில் பெயர்களைப் பயன்படுத்தலாமா என ஒப்புதல் பெறவில்லை. அனைவரும் ஒருவிதத்தில் எமக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர்களே. உரிமையானவர்களே. எமது உறவினர்கள், எமது ஊர்க்காரர்கள், உடன் படித்த நண்பர்கள், எமது ஆசிரியர்கள், யாம் சந்தித்த மனிதர்கள், எமக்கு உதவியவர்கள் என எமது வாழ்க்கைப் பயணத்தில் எம்மோடு உடன் பயணித்த அத்தனை பேரையும் பதிவு செய்திருக்கிறோம். எனினும் யாருக்கேனும் அவர்கள் பெயர்களைப் பயன்படுத்துவதில் மாற்றுக் கருத்திருக்குமோ. எமது பெயரை எப்படிப் போடலாமென்றோ, எம்மைப்பற்றி எப்படி எழுதலாமென்றோ நினைப்பார்களோ.. கேட்பார்களோ. ஒருவேளை அப்படி யாராவது கேட்டால். காலம் படுவேகத்தில் மாறிக்கொண்டிருக்கிறதல்லவா. நேற்றை மனிதர் போல் இன்றைய மனிதர் இல்லை. இன்று இருக்கும் மனம் வேறு. நான்கு வருடங்களுக்கு முன் இருந்த மனம் வேறு.

எமது பெயரை எப்படிப் புத்தகத்தில் பயன்படுத்தலாம் என நினைப்பவர்கள் எம்மிடம் தாராளமாகத் தெரிவிக்கலாம். அவ்வாறே யாம் உண்மைக்கு மாறாக எழுதியிருக்கிறோம் என்பவர்களும் தாராளமாகச் சுட்டிக் காட்டலாம். யாம் அனைத்தையும் நினைவிலிருந்தே எழுதியிருக்கிறோம். நாற்பது வருடங்களுக்கும் முன்பிருந்து ஆரம்பித்திருப்பதால், சில பெயர்களை மாற்றிக் குறிப்பிட்டிருக்கலாம். எமது ஊர்க்காரார்களில் சிலரது பெயர்கள் நினைவிலில்லை. அவர்களது பெயர்களையும் சேர்க்க விரும்புகிறோம். யாம் எழுத்துப்பிழை நீக்கியிருப்பினும் இன்னும் பிழைகள் இருக்கின்றன. புத்தகத்தை ஒரு தேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் வாசித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது எமதெண்ணம். பெயர் வேண்டாம் என்பவர்கள் பெயர் நீக்கப்பட்டு, விடுபட்ட பெயர்கள் சேர்க்கப்பட்டு, பிழை நீக்கப்பட்டு, புத்தகமாக அச்சிடப்பட்டு, சிறப்பாக விழா நடத்தி, எங்கள் புண்ணிய ஊரிலே புத்தகங்கள் வெளியிடப்படும். அதுவே இறுதியான புத்தக வடிவமாக இருக்கும். இறுதி வடிவமாக்கியபின் எமது அனைத்துப் புத்தகங்களையும் நாட்டுடமையாக்குவோம். யாம் அறிவை ஒருபோதும் விற்கமாட்டோம்.

யாம் நன்கு திட்டமிட்டே எம்மை வெளிப்படுத்துகிறோம். என்னவெல்லாம் செய்யவேண்டும், என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பதைத் தெளிவாக உணா்ந்துள்ளோம்.

**கிருஷ்ணமூர்த்தியாகிய யாம் பொதுமக்களுக்கு அறிவிப்பது,**

தந்தையாம் நாராயணரே கடவுள்.

அகிலம் நாராயணா்.

அனைத்தும் அவரே.

யாம் பெருந்தந்தையரையும் பேரன்னையரையும் வழிபடுகிறோம்.

யாம் பூமியை அம்மாவாக வணங்குகிறோம்.

யாம் தமிழ்மொழியை அன்னையாகப் போற்றுகிறோம்.

யாம் புத்தபிரானை பேராசானாகப் பணிகிறோம்.

யாம் மகாவீரரை அறமூர்த்தியாகப் போற்றுகிறோம்.

யாம் எளியதொரு மனிதன்.

யாம் நிச்சயமாகக் கடவுளல்ல.

யாம் வணக்கத்திற்குரியவரல்ல.

எம்மை சாமியாக வழிபடக் கூடாது.

எமக்கு உருவ வழிபாடு கூடாது.

எமக்கு வழிபாட்டுத்தலம் கூடாது.

எமக்கு சிலை வழிபாடு,  சித்திர வழிபாடு கூடாது.

எமக்கு சமாதி வணக்கம் கூடாது.

யாம் பயன்படுத்திய எந்தப்பொருளும் புனிதமானவை அல்ல.

எமது புகைப்படத்தை பூஜையறைகளில் வைக்கக்கூடாது.

எமது புகைப்படம் வழிபாட்டுத் தலங்களில் இடம்பெறக்கூடாது.

யாம் தனித்திருக்கும் புகைப்படங்களை பயன்படுத்தக்கூடாது.

எமது பெயரையோ, சித்திரத்தையோ பொருட்களில் பதியக்கூடாது.

எமக்காகவோ, எம் பெயரிலோ யாகங்கள் கூடாது.

எமக்கு கொடிவணக்கம் கூடாது.

எமக்கு பிறந்த நாள் கொண்டாட்டங்கள் கூடாது.

எம்மைப் பற்றி புத்தகங்கள் எழுதக்கூடாது.

எம்மைப் பற்றி கதைகள், நாவல்கள் எழுதக்கூடாது.

எமது வாழ்க்கையைப் பற்றி திரைப்படம் எடுக்கக்கூடாது.

எமது கனவுகளை காட்சிகளாக பதியக்கூடாது.

எம்மைப் புகழ்ந்து பேசக்கூடாது.

எம்மைப் பற்றி பாடல்கள் எழுதக் கூடாது.

எமக்கு எந்த அடைமொழியும், பட்டமும் கூடாது.

யாம் எமது புத்தகங்கள் மூலமாக மட்டுமே நினைவுகூறப்பட வேண்டும்.

எமது புத்தகத்தை கல்வி நிலையங்களில், பிற அமைப்புகளில், கட்டாயம் படிக்கவேண்டும் என எந்த நிபந்தனையும் விதிக்கக்கூடாது.

எமது புத்தகத்தை வைத்து மதிப்பெண்கள் வழங்கக்கூடாது.

எமது புத்தகத்தை ஒருவரது அறிவைச் சோதிக்கும் அளவுகோலாகப் பயன்படுத்தக்கூடாது.

எமது புத்தகத்தின் எழுத்துக்கள் உள்ளது உள்ளபடியே தொடரவேண்டும். எந்த மாற்றமும் கூடாது.

யாம் வைணவத்தின் அடியேன்.

யாம் காந்தியின் சேவகன்.

யாம் மக்கள் நலவிரும்பி.

யாம் சமூகத்தின் மேல் அக்கறை கொண்டவன்.

எமக்கு சாதி, சமயம், மொழி, இனம், நிறம், நாடு சார்ந்த எந்த ஒட்டுக்களும் கூடாது. எம்மை இந்த அடையாளங்களோடு எங்கும் பதிவிடக்கூடாது. எம்மை மனிதன் என்றே அடையாளம் காணவேண்டும்.

எம்மை அறிவாளி என்றோ, அறிஞர் என்றோ, ஞானி என்றோ, மனிதருள் சிறந்தவர் என்றோ, தெய்வத்திற்கு ஒப்பனாவர் என்றோ, எல்லாம் தெரிந்தவர் என்றோ எங்கும் குறிப்பிடக் கூடாது.

மக்கள் நல்வாழ்விற்கு அருள்புரிபவர், மக்களைக் காப்பவர், உலகைக் காப்பவர் எனப் பூமியெங்கும் பலவித பெயர்களில், பல்வேறு வடிவங்களில் வழிபடப்படும் அனைத்துத் தெய்வங்களும் எமக்கு வணக்கத்திற்குரியவர்கள்.

எமக்கு குலதெய்வம் வாக்குவழி கருப்பசாமி, சீலைக்காரியம்மன்.

எமக்கு முதல் தெய்வம் இருக்கண்குடி மாரித்தாய்.

எமக்கு முதன்மைத் தெய்வம் முருகன்.

எமக்கு பஞ்சபூதங்கள் வழிபடத்தக்கன.

எமக்கு தாவரங்கள் பணியத்தக்கன.

எமக்கு விலங்குகள் வணங்கத்தக்கன.

**எமக்கு அப்பா நாராயணன், அம்மா நாராயணன், அனைத்தும் நாராயணன்.**

எந்தையாம் கண்ணனே நாராயணன். எமக்கு எந்தையாம் கண்ணனே அனைத்துமாக இருக்கிறார். அனைத்தும் தாமே எனச் கூறியது எம் தந்தை. யாம் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என அனைத்துத் திசைகளிலும் கடவுள் அவதாரம் புனைத்திருப்பது எம் தந்தையே. எம் தந்தையன்றி இன்னொருவர் கடவுளாகவே முடியாது. அனைத்தையும் இயக்குபவர் எம் தந்தை. அனைத்துமாக இருப்பவரும் எம் தந்தையே.

எம் தந்தை உலக மகா நடிப்புக்காரர். கிழக்கில் ஒரு பேச்சு. அதையே மேற்கில் வேறுமாதிரி பேசுவது. வடக்கில் பேசியதை தெற்கில் மறுத்துப் பேசுவது. ஒருபக்கம் ஒருத்தனுக்கு ஒருத்தி. மறுபக்கம்  நான்கு. ஒருபக்கம் மீசையை முறுக்க வைப்பது. அடுத்த பக்கம் மீசையை மழிக்க வைப்பது. இவருக்கு இடவலமெனில் அவருக்கு வலஇடது. உவருக்கு மேலிருந்துகீழ். ஒருகூட்டத்தாரை மெதுவாகப் பேசவைப்பது. அடுத்த கூட்டத்தாரை கத்த வைப்பது. ஒரு சாராரிடம் போய் நீரே பெரிதென்பது. அவர் பங்காளிகளிடம் போய் நெருப்பைவிட நீர் பெரிதோ என்பது. பக்கத்து ஊர்க்காரரிடம் காற்றுதானே பெரிது என்பது. அடுத்த ஊர்க்காரரிடம் மண்ணைவிடத் தெய்வமுண்டோ என்பது. அருகாமை ஊர்க்காரரிடம் விண்ணைவிட மண் உயர்ந்ததோ என்பது. ஊருக்கு ஒரு பேர் வைத்துக்கொள்வது. நிறத்தை மாற்றிக்கொள்வது. குணத்தை ஒளித்துக்கொள்வது.

ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது எனத் தந்தை நினைத்திருந்தாரோ. இறுமாந்திருந்தாரோ. ஆயிரமாயிரம் கறவைகள் இருந்தாலும்  இளங்கன்று அதன் மடியை அறிவது எப்படி தந்தையே..

**குழலூதும் கண்ணனின் பொற்றாமரைப் பாதம்**

**குவலயம் தழைத்திட வந்த திருப்பாதம்**

தந்தையை.. கறவை நீங்கள். கன்று நீங்கள். மேய்ப்பவன் நீங்கள். புற்கள் நீங்கள். பாலும் நீங்கள். புல்லை அமுதமான பாலாக மற்றுவதும் நீங்களே. கருப்பாக இருப்பதும் நீங்களே. வெளுப்பும் நீங்களே. மஞ்சளும் பழுப்பும்  நீங்களே. குட்டையும் நெட்டையும் நடுத்தரமும் நீங்களே.

காதலை மூட்டிவிடுவதும், ஆணாய் இருந்து பெண்ணைத் தாங்கவைப்பதும், பெண்ணாய் ஆணை ஏங்கவைப்பதும் நீங்களே.

மண் நீங்கள். விண் நீங்கள். மழை நீங்கள். மரம் நீங்கள். காற்று நீங்கள். தாவர விலங்குகள் நுண்ணுயிரிகள் நீங்களே. சூர்ய சந்திரர்களும் நீங்களே.

**யாவும் வாசுதேவ சொரூபம். எல்லாம் வாசுதேவன்..**

யாம் சௌராட்டிரரையும், கன்பூசியசையும் லாவோவையும் போற்றுகிறோம்.

யாம் கிறித்துநாதரைப் போற்றுகிறோம்.

யாம் முகம்மது நபியவர்களைப் போற்றுகிறோம்.

யாம் குருநானக்கைப் போற்றுகிறோம்.

இம்மண்ணின் மூத்தோர் எனும் முறையில், மானுட குலத்தின் அறிவையும், ஞானத்தையும் முன்னெடுத்தவர் எனும் முறையில், மானுடகுலத்தின் முன்னோர் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவராகின்றார். அவர்கள் காலத்தின் அறிவுச்சூழலுக்கு ஏற்ப, அவர் காலத்திய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப, அவர் காலத்திய நடைமுறை எதார்த்தத்திற்கேற்ப, அக்காலத்திய தேவைக்கேற்ப, அவர்கள் சில நடைமுறைகளை, சில முடிவுகளை மேற்கொண்டிருப்பர். மூவாயிரம், ஈராயிரம், ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட ஒரு முடிவை, நம் காலத்தில் வைத்து விவாதிப்பதும், எடுக்கப்பட்ட முடிவு சரியானதா என ஆராய்வதும் நிச்சயம் உகந்ததாக இருக்காது. அக்காலத்தை நாம் தெரிந்திருக்கவில்லை. அவர் காலத்தில் மெய்யாகவே என்ன நடந்தது என்பதையும் நாம் அறியவில்லை. நமக்கு நடந்தது என்ன என்பதைப் பற்றி சிலது சொல்லப்பட்டுள்ளது. நமக்குத் தெரிந்ததாக நினைக்கும் ஒன்றிரண்டை வைத்து மூத்தோரை அடையாளம் காண்பது சரியாக இருக்காது. மூத்தோர் நிச்சயம் நம்மைவிட அறிவுடையோராகவும், நல்மனம் கொண்டவராகவுமே இருந்திருப்பர். எது எப்படி இருப்பினும் அவர்கள் நம் மூத்தோர். நமது மானுடகுலத்தின் முன்னோர். அவர்களை வணங்குவதும் சிறப்பிப்பதும் நம் கடமை. மனித அறிவுத் தேடலின் முன்னோடிகளை இனம், மொழி, மதம், நாடு போன்ற எல்லைகளுக்குள்

ஒருபோதும் சுருக்கக் கூடாது. நம் முன்னோர் வான்புகழ் கொண்டோர். நம் நல்லாசிரியர்கள். நமக்கு என்றென்றும் வழிகாட்டிகள்.

மானுடர்களாகிய நாம் சிலவற்றிலாவது சமரசம் கொள்வது நன்று. முக்கியமாக மனித மனங்களைப் பிரிக்கும், மனித மனங்கள் ஒன்றிணைவதைத் தடுக்கும், மனிதர்களைப் பகையாளிகளாக ஆக்கும், மனிதர்களைக் கொடூரர்களாக மாற்றும் மதங்களில் சிறிதளவேனும் சமரசமும், சகிப்புத் தன்மையும் கொண்டிருப்பது மிகவும் அவசியம். அனைத்து மதங்களும் அன்பே பெரிதென்கின்றன. உலகில் அன்பே சிறந்ததென்கின்றன. இன்றைக்கிருக்கும் உண்மை நிலையென்ன. மனிதர் மதங்களால் வேறுபட்டுக் கிடக்கிறார். பிறமதத்தார் எனும் ஒரே காரணத்துக்காக வெறுப்பை உமிழ்கிறார்.

ஒரு சாரார் தமது இறைவனே உண்மையானவன் என்கிறார். அப்படியெனில் மற்றவர் இறைவன் உண்மையில்லாதவனா. வாகனத்தில் எழுதிவைத்துப் பரப்புகிறார். அன்னார் வாகனத்தில் இரண்டாவதாக ஒரு டயர் தொங்கிக்கொண்டு செல்கிறது. இசுடெப்னிதானே. மனிதரே இவ்வளவு அறிவாக, வழியில் டயர் பழுதுதாகிவிட்டால் என்னாவது என நினைத்து இன்னோரு டயரையும் கூடவே எடுத்துச் செல்கிறாரே. அரிதினும் அரிதான இவ்வுலகத்தைப் படைத்து, காத்து, இயக்கும் இறைவன், எத்தனை அறிவுள்ளவனாக இருப்பான். கோடானகோடி உயிர்க்குலங்களை தாங்கிக்கொண்டிருக்கும் இயற்கை, எத்தனை முன்னேற்பாடுகளைக் கொண்டிருக்கும். ஒரே ஒரு மதத்தை, ஒரே ஒரு குலத்தை, ஒரேயொரு மொழியை, ஒற்றை உயிரினத்தை மட்டுமே சார்ந்து, நம்பி இயற்கை இருக்குமா. நம்பியிருப்பாரோ இறைவன். முதலில் மனிதர் நம்புவாரா. கடன் அட்டை இருந்தாலும் எதற்கும் இருக்கட்டும் எனப் பணமும் எடுத்துச் செல்வதில்லையா. பணத்தையும் ஒரே பையில் வைக்காமல் பிரித்து வைக்கிறார்தானே.

ஒரு மதத்தார் அவர் இறைவன் மட்டுமே ஒரே இறைவன் என்கிறார். ஏன் உலகிற்கு இரண்டு இறைவன்கள் இருக்கக்கூடாதா. மனிதரில் இருவர் ஒன்றாக, அன்பாக, ஒற்றுமையாக இருக்கிறார்தானே. இரண்டு இனிய நண்பர்களைப் பார்க்கிறோம்தானே. பெருங்கூட்டமே நண்பர்களாக ஒற்றுமை காண முடியும்போது, ஏன் இரண்டு கடவுள்கள் இருக்கக்கூடாது. மூன்று கடவுள்களும் இருக்கலாமல்லவா.

தம்மைக் கடவுள்கள் என அறியும் அவர்கள், எதில் முரண்படப் போகிறாகள். தமக்குள் யார் பெரியவர் எனவா. நண்பர்களிடையே யார் பெரியவர் எனப் போட்டி வந்ததுண்டா. மனித நண்பர்களுக்குள்ளேயே போட்டி இல்லை எனும்போது, கடவுள் நண்பர்களுக்குள் எப்படி யார் பெரியவர் எனப் போட்டி இருக்கும்.

பேரண்டத்தில் எதுவுமே ஒற்றையாக இல்லையெனும்போது, கடவுளுக்கும் ஒரு துணை இருப்பது நல்லதுதானே. கடவுள் சும்மாதானே இருப்பார். பேச்சுத்துணைக்காவது ஒருவர் வேண்டுமல்லவா. கடவுள் பேசுவாரா. என்னமொழியில் பேசுவார். காதலர்கள்போல பேசாமலே பேசும் மொழி வைத்திருப்பாரோ. கடவுள் வீடு எப்படி இருக்கும். எவ்வளவு பெரியதாக இருக்கும்.

அடேங்கப்பா.. கப்பங்கப்பா. மனிதர் வீடுகள் எவ்வளவு பிரம்மாண்டம். எத்தனை அலங்காராம். எவ்வளவு நவீனம். அரபு அரண்மனைக்காரரர்கள், இளவரசர்கள், சேக்குகள், பணக்காரர்கள் என யூடியூப்பில் பார்க்கும் காட்சிகள். இப்படியுமா உலகில் மனிதர்கள் வாழ்கிறார்கள். ஒருவேளை வானத்திலிருப்பதாகச் சொல்லும் தேவர்களின் வாழ்விடங்கள் இப்படித்தான் இருக்குமோ. பூமியிலேயே தேவ வாழ்க்கை வாழும்போது, சொர்க்கத்தை அனுபவிக்கும்போது, பின் எதற்கு  வானத்திற்குச் செல்லவேண்டுமாம்.

இந்தியாவின் இருவகையான நட்சத்திரங்களும், பெருவணிகர்களும், அரபுலகத்திற்கு அடிக்கடிபோய் வந்து, அதேமாதிரி அரண்மனை வீடுகளை இங்கும் கட்டியிருப்பது தெரிகிறது.  சேக்குகளையே விஞ்சும் அளவிற்கு சில நட்சத்திரங்களின் அரண்மனைகள், சேட்டுகளின் மாளிகைகள்,  வணிகர்களின் பங்களாக்கள் காட்சியளிக்கின்றன.

பாருண்டான், பாருமிழ்ந்தான், பாரிடந்தான், பாரளந்தான், பாரிடம் முன்படைத்தான். பாரிடம் ஆவான்.

மகாவிஷ்ணுவே ஊழிக் காலத்தில் பூமியை விழுங்கினார். உற்பத்திக் காலத்தில் பூமியை வெளிப்படுத்தினார். ஸ்ரீவராகமூர்த்தியாகி பூமியைக் கடலிலிருந்து எடுத்துக்கொண்டு வந்தார். திரிவிக்ரமனாய் வளர்ந்து பூமியை அளந்தார். முதல் முதலாகப் பூமியைப் படைத்தவர் அவரே. உலகின் அனைத்து இடங்களிலும் அவரே வியாபித்திருக்கிறார். அவரே உலகம்..

மனிதர்களே மாடமாளிகைகளில் வாழும்போது, கடவுள் எனப் புகழப்படும் நாராயணன், உலகமனைத்தையும் சொத்தாகக் கொண்டிருக்கும் பரந்தாமன், பாம்புப்படுக்கையில் வீற்றிருக்கிறார். மனிதர் இதயமே பெரிய வீடு என நினைத்து விட்டீர்களா தந்தையே..

இவ்வளவு ஆடம்பரமான மாளிகைகளில் வாழும் மனிதர்களுக்கே உறக்கம் வருவதில்லையாம். பாம்புப் படுக்கையில் எப்படித்தான் கண் வளர்கிறானோ அந்த கமலக் கண்ணன். இதில் கால் பிடித்துவிட தாயார்கள் வேறு. பால் கடலில் எங்கே நடக்கிறாரோ. என்றோ கன்றின் பின்னால் போனதற்கா இன்னமும் கால் வலிக்கிறது. ஒருவேளை வெண்ணெய் திருடிக்கொண்டு ஓட்டமாக ஓடியதால் இன்னும் கால் வலிக்கிறதோ. நானிலம் வேண்டி மூவடி உயர்த்தினானே அதனால் இருக்கலாமோ. இலங்கையை வெற்றிகொள்ள எட்ட நடந்தானே. அதுதான் காரணமா.

தந்தையே.. அன்று ஆய்ச்சியரை நன்றாக ஏமாற்றியதுபோல், திருப்பாதங்கள் நோவுவதுபோல் நாடகமாடி, தாயார்களையும் ஏமாற்றப் பார்க்கிறீர்களா.

வேதனை வெண்புரி நூலனை விண்ணோர் பரவநின்ற
நாதனை ஞாலம்விழுங்கும் அநாதனை ஞாலம்தத்தும்
பாதனைப் பாற்கடல் பாம்பணை மேல்பள்ளி கொண்டருளும்
சீதனை யேதொழுவார் விண்ணு ளாரிலும் சீரியரே.

ஒரு பள்ளிக்கு இரண்டு தலைமையாசிரியர்கள் இருக்கமுடியுமா. கல்லூரிக்கு இரண்டு முதல்வர்கள் இருந்தால் நிர்வாகம் எப்படி இருக்கும். நாட்டிற்கு இரண்டு தலைமை அமைச்சர்கள் இருந்தால். என்னதான் இருவர் சமமாக இருந்தாலும், சமமான கல்வித் தகுதிகள் பெற்றிருந்தாலும், ஒருவரே முதல்வராக இருக்கமுடியும். இன்னொருவர் துணை முதல்வராக இருக்கலாம். இணை முதல்வராகக்கூட பதவி வகிக்கலாம். ஒருபோதும் இருவர் ஒரே கல்லூரிக்கு முதல்வர்களாக இருக்கவே முடியாது.

முதல்வராகியே தீருவது எனில் சொந்தமாக ஒரு காலேஜ் கட்டி முதல்வராகலாம். விரும்பினால் முதல்வரையே ஆட்டிவைக்கும் கரஸ்பாண்டன்டாகக்

கூட இருந்துகொள்ளலாம். முதல்வருக்கும் பெரிய பதவியல்லவா. ஆசைப்பட்டு முதல்வராகிறவா் எப்படி செயல்படுவாா். மாணவா்கள் படிப்பு.

தெரிந்துதான் ஒவ்வொரு மதத்தாரும் அவரவா் கடவுள்களை முதல்வராக்க முயல்கிறாா்களோ. ஒரு கல்லூரிக்கு முதல்வராக வேண்டுமெனில் இன்னின்ன கல்வித் தகுதிகள் கொண்டிருக்கவேண்டும் என வரையறுக்கப்பட்டிருப்பதுபோல், உலகின் முதல்வராவதற்கு ஏதேனும் தகுதிகள் உள்ளனவா. யாா் வேண்டுமானாலும் முதல்வராகிவிட முடியுமா. யாா் வேண்டுமானாலும் கடவுளாகிவிட முடியுமா. ஒரு கல்லூரி முதல்வருக்கான பணிகள் எவையெவை. கடவுளுக்கு பணிகள் ஒதுக்கப்பட்டிக்கின்றனவா. அல்லது கடவுள் சில மனிதா்களைப் போல் உண்டு, உறங்கி, மறுபடியும் உண்டு உறங்கி வாழ்க்கையை சுகபோகமாக என்ஜாய் பண்ணிக்கொண்டிருக்கிறாரா. கடவுளால் யாருடனாவது பேசமுடியுமா. அவா்தான் கடவுளாயிற்றே, என்னத்தைப் பேசுவாா். கடவுள் உறங்குவாரா. கடவுளே உறங்கிவிட்டால் உலகம். கடவுள் எதை உண்பாா். எப்படி உண்பாா். கடவுள் அவரே எடுத்துச் சாப்பிடுவாரா. கடவுள் வாக்கிங் போவாரா. உடற்பயிற்சி. கடவுள் உடல் எப்படி இருக்கும். அவா் கடவுளல்லவா.

கடவுள் கோவப்படுவாரா. கடவுள் டான்ஸ் ஆடுவாரா. யாருக்காக ஆடுவாா். எப்போதெல்லாம் ஆடுவாா். பாடுவாரல்லவா. பிண்ணனிக்காராா்கள். கடவுள் குளிப்பாா்தானே. கடவுளுக்குப் பிடித்தமான உடைகள். அப்புறம் கடவுளுக்கு அந்த ஆசை வரும்தானே.

யாா் கடவுள். சிலை வணக்கத்தாா். மேற்குலகம் சிரிக்கிறது. கல்லை கடவுளென்று கும்பிடுகிறாரே, இவருக்கெல்லாம் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா. இவரைத் திருத்தியே ஆகணும். கடவுள் யாரென்று கண்முன்னே காட்டிவிடவேண்டும். யாா் கடவுள்..

சந்திர அரேபியா அழிக்கப்பட்டது. சூரிய பாகன்களை ஒழித்து ஐரோப்பா மாற்றப்பட்டது. சோளத்தையும், வானத்தையும் கும்பிட்ட அமெரிக்கா அடியொடு பிடுங்கப்பட்டது. ஆறுகளையும், மரங்களையும், மண்ணையும், மலைகளையும் வணங்கிய ஆப்பிரிக்கா சிதைக்கப்பட்டது. பாரதக் கலாச்சாரம் செழித்திருந்த

கிழக்காசியா அகற்றப்பட்டது. பொதுவுடமை சீனாவோ கலாச்சார வேர்களை வெட்டிக்கொண்டது.

தலைநிமிர்ந்து நிற்கிறது எனக் கூறமுடியாவிட்டாலும், இன்னும் தாக்குப்பிடித்து நிற்கிறது உலகின் ஒப்பற்ற தேசமான இந்தியா. முன்னர் உலகில் செழித்திருந்த அத்தனை தெய்வங்களும், கடவுள்களும் முற்றாக மறைந்தபின்னும் பாரதத்தின் தெய்வங்கள், கடவுள்கள் இன்னமும் புகழ்பெற்று விளங்குவது எப்படி.. எப்படிச் சாத்தியமானது. யாரால் சாத்தியமானது.

பாரத தேசமும் அந்நியர் பிடியில் அகப்பட்டுத்தான் கிடந்தது. சொல்லப் போனால் மற்ற தேசத்தைவிட நீண்ட காலம் அடிமைப்பட்டே கிடந்தது. பெர்சியா போன்றோ, இந்தோனேசியா போன்றோ, பிலிப்பைன் போன்றோ, பிரேசில் போன்றோ, எகிப்து போன்றோ, லிபியா போன்றோ இந்தியா முற்றாக மாறிவிடாததற்குக் காரணமென்ன.

யார் கடவுள். கல் கடவுளா. கல்லை மனிதர்போல் செதுக்கி மந்திரம் ஓதி வழிபட்டால் கல் கடவுளாகி விடுமா. எத்தனையோ குழந்தைகள் பசித்திருக்க, கல்லில் குடம் குடமாகப் பாலை கொட்டுகிறாரே பாரத தேசத்தார். இப்படியுமா அறிவற்று இருப்பார்.

கல்லுக்கு அபிசேகம் செய்கிறார். கல்லுக்கு அலங்காரம் செய்கிறார். கல்லுக்கு ஆடைகள் அணிகிறார். கல்லுக்கு அணிகள் பூட்டுகிறார். கல்லுக்கு சோறூட்டுகிறாரே. கல்லைத் தாலாட்டுவதோ. பள்ளியறையுமா.

கடவுள் என்ன கல்லாவா இருக்கிறார். கடவுள் ஏன் கல்லானார். மனம் கல்லாய்ப் போன மனிதராலா. ஒருவேளை மனித மனம் இளகினால் கல்லும் இளகுமோ. கல் இளகி செல்லாகுமோ. கல்லும் செல்லும் ஒன்றா. கல் செல்லானால். செல் கல்லானால்.

அறிவியல்தானா. சுத்த மடத்தனமா. எதனால் இந்திய மனம் கல்லைக் கும்பிட ஒப்புகிறது. கல் என மிக நன்றாகத் தெரிந்தபோதும், எது இந்தியர்களை கல்லைக் கும்பிட வைக்கிறது.

காலம் என்பது என்ன. காலம் எதனால் ஆக்கப்பட்டுள்ளது. காலம் ஒன்றா. பலவா. காலத்தை விடப் பெரியது இருக்கிறதா. காலம்தான் அனைத்திலும் பெரியதா. காலம் கடவுளுக்குக் கட்டுப்பட்டதா. காலத்தை கட்டுக்குள் வைத்திருப்பவர்தான் கடவுளா. காலம் தொடர்ச்சியானதா. போட்டான்கள் போன்றும் இருக்கலாமோ.

காலம் மனிதரின் கட்டுக்குள் வந்தால் உலகம் என்னாகும். உயிர்த் தொகுதிகளின் நிலை. துப்பாக்கியைக் கண்டவுடன் உலகத்தையே வெல்லக் கிளம்பிவிட்டாரே, காலத்தை கண்டு கொண்டால் உலகின் நிலை என்னாவது. காலம் மனிதரை அறியுமா. கால மாற்றத்தில் மனிதர் இத்திசையை நோக்கித்தான் வருவர் என்பதை காலம் அறிந்திருக்குமோ. கடவுள் அறிந்திருப்பாரோ.

யூதர் யார். தமிழர் யார். இருவருக்குமிருக்கும் ஒற்றுமை வேற்றுமை என்ன. எவ்வளவு. தமிழர் யூதரைப் பற்றி அறிந்திருக்கிறாரா. யூதருக்கு தமிழர் பற்றி ஏதாவது தெரியுமா. உலகின் பிற பகுதியினருக்கு தமிழ், தமிழர் பற்றி எந்தளவுக்குத் தெரியும்.

யூதா யார். பாரோ யார். பர்யா யார். மர்வா யார். மேற்கின் பள்ளா யார். கிழக்காசியா முழுதும் நிறைந்திருக்கும் பள்ளர் யார்.

உலகை இயந்திரமாக்கியது யார். மானுட வாழ்க்கையை எந்திரத்தனமாக மாற்றியவர் எவர். ஆடு, மாடுகளை தொழிற்சாலைகளில் வளர்ப்பதை தமிழர் ஏற்கிறாரா. பாலை தொழிற்சாலைகளில் பதப்படுத்தலாம். சூடாக்கலாம். குளிர்விக்கலாம். இரும்பை தொழிற்சாலைகளில் உருக்கலாம். அடித்து நீட்டலாம். உயிருள்ளவற்றை. ஆட்டையும் மாட்டையும் வளர்ப்பதற்கு, பால் பீச்சுவதற்கு இத்தனை துல்லியமா. இவ்வளவு இயந்திரங்களா. அவைகளுக்கு உயிர் உள்ளதல்லவா. மனிதர் போன்றே ஆசையும், விருப்பமும், விளையாட்டும், உணர்ச்சியும், மீறலும், சண்டையும், அன்பும் கொண்டுள்ளவையல்லவா ஆடும் மாடும். இதற்குப் பெயர்தான் அறிவா. வேளாண் புரட்சி. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாகாதாம். அவ்வளவு துல்லியமா. தமிழர் மனம் ஒப்புகிறதா. இயற்கையில் கழிவு என ஏதாவது இருக்கிறதா. கழிவை இயற்கை உற்பத்தி பண்ணுமா. தண்ணீரை நம்பித்தானே செடிகள் வளர்கின்றன. அவருக்குப் பற்றாக்குறை. வற்றாத ஜீவநதிகளைக் கொண்டுள்ள உலகின் மற்றவருக்கு. நீரை நம்பி மண்ணில் எவ்வளவு உயிரினங்கள் வாழ்கின்றன.

மண்ணுக்குள் எத்தனை எத்தனை உயிர்கள் செழித்திருக்கின்றன. மனிதருக்காகத்தான் மழை பெய்கிறதா. மனிதருக்காகவே உலகம் படைக்கப்பட்டிருப்பதாக அவர் மதம் வியந்தோதுகிறது. தமிழர் மதம் என்ன சொல்கிறது.. செடியின் வேருக்கு மட்டும் ஒரு சொட்டுத் தண்ணீரை கணினி மூலம் விடுவதுதான் அறிவோ. ஆடுகளின் மடிகள் அவை சுமக்க முடியாத அளவிற்குப் பெரிதாக உள்ளனவே.. இப்படியுமா மாற்றுவது.. வாழைப்பழக் காம்பு எவ்வளவு கடினம். பழங்கள் உதிர்வதே இல்லையே எப்படி. தொழில்நுட்பம். அப்படித்தானே தமிழர்களே.

தொழிற்சாலைகளில் ஆட்டை வளர்க்கும் நுட்பத்தை உலகெங்கும் விற்றுக் கொழுத்த பணம் சம்பாதிப்பது யார். உயிருள்ளவற்றிற்கும் உயிரற்றவற்றிக்கும் மனிதருக்கு வித்தியாசம் தெரியவில்லையா. 250 பேரின் வேலையை கணினி உதவியுடன் இரண்டு மூன்று பேர் செய்துவிடுகிறார்களாம். ஆடுகள் பெல்ட்டிலேயே சுற்றிச் சுற்றி வருகின்றன. மனிதர் வயிறு நிறையப் பால் குடிப்பதற்கு, பாலை விற்று கோடி கோடியாய் சம்பாதிப்பதற்கு ஆடுகளை இப்படியா சிறை வைப்பது.

அறிவிருப்பவரே, புத்திக்கூர்மையுள்ளவரே, கொழுத்த பணம் வைத்திருப்பவரே இனி உலகில் வாழமுடியும் எனும் அவல நிலையை உருவாக்கியவர் யார். மனிதருக்கு வேலை இல்லை எனும் இழி நிலைக்குக் காரணமென்ன. மனிதருக்கு வெட்கமில்லையா. இவ்வளவு அறிவை வைத்துக்கொண்டு, இத்தனை நுட்பத்தை வளர்த்துக்கொண்டு, அனைத்து மனிதருக்கும் வேலை கொடுக்க முடியவில்லையெனில், மனிதருக்கு வந்திருப்பது அறிவுதானா. அடைந்திருப்பது முன்னேற்றம்தானா. உண்மையில் வேலை செய்ய இன்னும் மனிதர் வேண்டுமென்றல்லவா உலகம் கேட்கவேண்டும்.

உலகம் செல்லும் திசை சரிதானா. சரியில்லையெனில், உலகை மாற்ற தமிழருக்குத் திராணி இருக்கிறதா. இப்போதைக்கு உலகை மாற்றும் வல்லமை பெற்றிருப்பவர் யார். பந்தயத்தில் தமிழர் இருக்கிறாரா. தமிழரால் முடியுமா. தமிழருக்கு நம்பிக்கை உள்ளதா.

**கோவிந்த கோவிந்த கோபால விட்டலா**

**கோபால கோபால கோவிந்த விட்டலா**

தமிழா் என்றொரு இனமுண்டு, தனியே அதற்கொரு குணமுண்டு. உலகின் மாற்றத்தைப் பாா்த்து தமிழா் மனம் பதைப்பது உண்மைதானே. உலகின் மற்ற பகுதியினா் எல்லாம், அறிவியல் தொழில்நுட்பத்தில் சொக்கிக்கிடக்கும் போது, நவீன வாழ்க்கைக் கொண்டாட்டங்களில் மூழ்கிக் திளைக்கும் போது, தமிழா் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவியாய்த் தவிப்பது எதனால். தமிழா் பரந்து விரிந்த இவ்வுலகை தமது என நினைக்கிறாரா. அப்படி நினைப்பதில் உண்மை ஏதும் இருக்கிறதா. இவ்வுலகம் மட்டும் தமிழருடையதா. அவ்வுலகமுமா.

இருக்கிறது இல்லை என இரண்டுமே இங்குதான் அதிகம். கடவுள் எந்த அவதாரமும் செய்யவில்லை. கடவுள் எந்தத் தத்துவத்தையும் சொல்லவில்லை. உலகம் எதேச்சையாக இருக்கிறது. உலகம் எந்த மதத்தவருக்கும் சொந்தமானதல்ல. சொன்னவா் நினைவுள்ளதல்லவா.

அதுபாட்டுக்கு இருக்கும் உலகத்தை ஆளாளுக்கு சொந்தமாக்க முயற்சிக்கிறாரா. அதனால்தான் அவரவா் கடவுள்களை போட்டிபோட்டுப் பரப்புகிறாரா. மனிதா் போட்டி போடுகிறாரா அல்லது போட்டிபோட வைக்கப்படுகிறாரா. கடவுள்கள் மனிதரைப் பயன்படுத்திக் கொள்கிறாா்களோ.

யாம் பரட்சி செய்ய விரும்புகிறோமா. உலகில் எத்தனையோ மாற்றங்கள், மறுமலா்ச்சிகள், புரட்சிகள் நடந்துள்ளதை யாம் அறிந்தே இருக்கிறோம். அவை மக்கள் வாழ்க்கையில் நிகழ்த்திய மாற்றங்களையும் யாம் உள்வாங்கியிருக்கிறோம். எனினும் புரட்சிகளால் எளிய மக்களின், சாமானிய மக்களின் வாழ்க்கையில் பெரிய அளவில் தாக்கங்களை உண்டாக்கமுடியவில்லை என்பதையும் யாம் அறிந்திருக்கிறோம்.

யாம் ஆன்மீக மாற்றங்களை முன்னெடுக்கிறோமா.. ஓரளவிற்குச் சரிதான். திருடனை எத்தனை சட்டங்கள் போட்டும் தடுக்கமுடியாது. ஆன்மீகத்தால் மட்டுமே முடியும். ஒருவன் திருடனாவதற்குக் காரணம் அவனுள் ஆன்மிகம் இல்லாததே. அப்படியெனில் ஆன்மிகவாதிகள் யாரும் திருடுவதில்லையா. மக்களின் வரிப்பணத்தை கோடிகோடியாகத் திருடுபவா் யாா்.

திருடுவது தவறு எனச் சுட்டிக்காட்ட ஆன்மீகம் அவசியமாகிறது. ஒருவருள் ஆன்மீக மாற்றம் நிகழுமேயானால் அவரது ஒட்டுமொத்த வாழ்க்கையே மாறிப்போகும். அனைத்தும் அறிந்த கடவுள் ஒருவர் இருக்கிறார், நாம் திருடுவதையும் அவர் அறிவார் எனும் நினைப்பு வருமேயானால், திருட்டு நிற்கும்.

கடவுள் என ஒருவர் உறதியாக உண்டு என்பதை மானிடர் அறிந்தால்.. ஒட்டுமொத்த உலகமும் மாறிவிடும். நம் காலத்தில் நடக்கும் அனைத்திற்கும் காரணம், கடவுள் இல்லை, கடவுள் என ஒருவர் இருக்கவே முடியாது என மனித மனம் நினைப்பதாலேயே, நம்புவதாலேயே..

கடவுளை நம்பாதவர்கூட இயற்கையை நம்பித்தான் தீரவேண்டும். இயற்கை இல்லையா. இருக்கிறதுதானே. நம்மால் பார்க்க முடிகிறதல்லவா. இயற்கையை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா. இயற்கை அனைத்தையும் அறியுமா. ஆம். நிச்சயம் அறியும். இயற்கையும் இறைவனும் ஒன்றா. இயற்கை எதனால், எதனைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. நாம் பஞ்சபூதங்களைப் பற்றி பேசவேண்டும்.

மனித வாழ்விற்கு ஒரு நம்பிக்கை தேவைப்படுகிறது. மனித மனங்களுக்கு ஒரு பற்றுக்கோல் அவசியமாகிறது. ஏன் வாழ்வு என்பதற்கு இன்னும் சரியான பதிலை உலகம் கண்டடையவில்லை. மனிதரின் எத்தனையோ ஏன்களுக்கு இன்னும் பதில்கள் கிடைக்கவில்லை. உலகம் என ஒன்று ஏன் இருக்கிறது.

கடவுள் இருக்கிறாரா. உண்மையிலேயே கடவுள் இருக்கிறாரா. எடவுள் எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறாரோ. அனைத்தையும் தேடிக் கண்டுபிடித்த மனிதர்கள் கடவுளையும் ஒருநாள் கண்டுபிடித்துவிடுவாரோ. கடவுளைக் கண்டுகொண்ட மனித வாழ்க்கை என்னாகும். எப்படி இருக்கும். முன்னர் நடந்ததற்கு காரணம் கேட்பரோ. அடுத்து என்ன நடக்கும் என்பதை அறிய ஆவலாய் இருப்பரோ. தாமும் கடவுளாக முயல்வரோ. மனிதமனம் ஆசை கொள்ளாது எனச் சொல்லமுடியுமா.

சமூகத்தில் திருடுவது யார். திருடுபவர் கடவுள் குறித்து, ஆன்மீகம் குறித்து என்னமாதிரியாக கருத்துக்கள், நம்பிக்கைகள் கொண்டிருக்கிறார். ஏதேனும் புள்ளிவிவரங்கள் உண்டா. பெரும்பாலும் ஆன்மீகத்தில் நம்பிக்கை கொண்டோர்,

பற்றுக் கொண்டோர், இறைவன் இருக்கிறான் எனும் உறுதியான எண்ணம் கொண்டோர் ஒருபோதும் திருடமாட்டார். இங்கே திருட்டெனக் குறிப்பிடுவது நேரிடையான திருட்டுகள். ஆன்மீகவாதியாக வேடம் போடுபவர் மறைமுகத் திருட்டில் ஈடுபடுவார். அன்னாரும் கடவுளின் இருப்பை அறியாதவரே. அவர் நேரிடையான திருட்டில் ஈடுபடமாட்டார். ஆனாலும் அவருக்கு அலுவலகத்தில் கையூட்டு வாங்குவது திருட்டாக, குற்றமாகத் தெரியாது.

ஆன்மீக மாற்றம் வந்தால், கடவுள் உண்மையிலேயே இருக்கிறார் எனும் தெளிவு வந்தால், சமூகம், உலகம் எப்படி இருக்கும். எந்த வேலை பார்ப்பவருக்கும் கண்காணிப்பாளர் என ஒருவர் தேவைப்படவே மாட்டார். இன்றைக்கில்லாவிட்டாலும், என்றைக்காவது நாம் செய்த செயல்களை கடவுள் நிச்சயம் அறிவார் எனில், அதன் பொருட்டேனும் மனிதர் நல்லவராக வாழத் தலைப்படுவார். சமூகத்தில் அன்பு செழிக்கும். உண்மையான அறிவு மலரும். ஞானம் பெருகும். மக்களின் மனங்கள் ஒன்றாகும்.

யாம் ஆன்மீகவாதியா. யாம் இறைவன் உறுதியாக இருக்கிறான் எனக் கண்டடைந்து, இறைவன் பெயரால், குறிப்பாக கண்ணன் பெயரால் மிகப்பெரிய அளவிற்கான சமூக மாற்றங்களை முன்னெடுக்கிறோம். எமது முதல் இலக்கு சமூக மாற்றமே. மக்களின் மனமாற்றமே. யாம் காணும் தமிழ்ச் சமூகம், பாரத சமுதாயம், மானுடர் வாழ்க்கை அவ்வளவு உவப்பானதான இல்லை. எம் மனதில் மனிதர் செல்லும் பாதை குறித்து ஐயம் ஏற்படுகிறது. யாம் அறிவியலை ஒரு வரைமுறைக்குட்பட்டே பயன்படுத்த வேண்டும் என்கிறோம். யாம் கடந்த இருபது ஆண்டுகளாக சமூகம் எப்படி இருக்கவேண்டும் எனச் சிந்தித்து வருகிறோம். எமது சிந்தனைமீது எமக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது.

யாம் தமிழக, இந்தியக் கிராமங்களை மாற்றியமைக்க விரும்புகிறோம். தமிழ்நாடு மாநிலமாக இருப்பினும், அது எதற்காகவும் பிறரைச் சார்ந்திருக்கக் கூடாது. முக்கியமாக தமிழர் தங்களுக்கான உணவினை தாங்களே அரும்பாடுபட்டு உண்டுபண்ண வேண்டும். உழைப்பின் மகத்துவம் தெரியாததால்தான் தமிழரில் பெரும்பாலோர் எத்திப்பிழைப்பவராக இருக்கிறார். அனைவரும் படித்துவிட்டார். நல்லதுதான். உணவை யார் உண்டுபண்ணுவார். படித்தவர் வருடத்தில் பத்து

நாட்களோ, ஒரு மாதமோ, உணவு உற்பத்தி சார்ந்த வேலை செய்யக்கூடாது எனச் சட்டமிருக்கிறதா. நகரத்தார் ஏன் ஆயுள்காலத்தில் ஒரு வருடமாவது ஏதேனுமொரு கிராமத்தில் தங்கி வேளாண் பணி செய்யக்கூடாது. உடல் உழைப்பை பிராமணர் மறுத்தார். பிள்ளை மறுத்தார். நாடார் மறுத்தார். தேவர் மறுத்தார். இன்று வயல் வேலைக்கு யாருமே கிடையாது. இன்னும் ஒரு பத்து வருடங்கள் போனால் எமது காலத்தில் பிறந்து படிக்க முடியாத காரணத்தால் விவசாயம் பார்க்கும் தலைமுறை முடிந்துபோகும். அதன் பின்னர். வடக்கத்திக்காரர் இருக்கிறார்தானே தமிழர்களே. அவர் மொழி உமக்கு ஆகாது. அவர் உழுது பயிரிடும் உணவு ஆகுமோ. தமிழர் அறம் பற்றிப் பேசத் தகுதியானவர்தானா. திருக்குறள் பற்றிப் பேச தமிழருக்கு தகுதியுள்ளதா. விவசாயம் செய்ய வடநாட்டார். வீடுகட்ட அவர். தொழிற்சாலைகளில் அவர். ஓட்டல்களில் அவர். எங்கும் அவர். எதிலும் அவர். தமிழர். அடேங்கப்பா. எவ்வளவு பெரிய மூளை தமிழருக்கு. அனைத்திலும் சொகுசு. சரிதானே புத்திசாலித் தமிழரே.. தமிழர் புத்திசாலியா. அதிபுத்திசாலியா.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தமிழகத்தின் அத்தனை கிராமங்களும் வீட்டு மனைகளாக மாறிக்கொண்டே இருக்கின்றன.. யார் இவர்கள் தமிழர்களே. எமது ஊருக்கு ஒவ்வொருமுறை போகும்போதும் புதிதாக பிளாட்டுகள் போட்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த முதலாளிகளெல்லாம் எங்கிருந்து வருகிறார்கள். நிச்சயமாக எமது ஊர்க்காரர்கள் இல்லை. ஊரின் மக்கள்தொகை குறைந்துகொண்டே போகிறது. வீட்டு மனைகளோ பெருத்துக்கொண்டே போகின்றன.. இதென்ன புதுக் கணக்கு தமிழர்களே.

யாம் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் எல்லை வகுக்கிறோம். ஒரு கிராமத்தின் மையத்திலிருந்து, அந்தக் கிராமத்தின் நான்கு திசைகளிலும் உள்ள வீடுகளை எல்லையாகக் கொண்டு ஒரு வட்டப் பாதை உருவாக்குகிறோம். இதுவே ஒரு கிராமத்தின் முடிவான எல்லை. கிராமச் சுற்றுச் சாலையைத் தாண்டி கிராமம் பெருகாது. ஒருபோதும் வீடுகள் கட்டப்படாது. கிராமிய தொழிற்கூடங்கள் சுற்றுச் சாலைக்கு வெளியே அமைக்கப்படும். வாகனங்கள் கிராமத்தின் உள்ளே அனுமதிக்கப்படாது. கிராமத்தின் சுற்றச்சாலை அனைத்து விதமான பயன்பட்டிற்கும் ஏற்றது போல் வடிவமைக்கப்படும்.

கிராமத்தினருக்கு வீட்டுக்கென மூன்று செண்ட் இடம் அதாவது 1400 சதுர அடி நிலம் ஒதுக்கப்படும். அதில் பாதி அளவுக்கு அதாவது 700 சதுர அடியில் அவா் வீடு கட்டிக் கொள்ளலாம். மீதமிருக்கும் நிலத்தில் அவா் விரும்பிய வண்ணம் செடிகள் மலா்கள் கனிகள் வைத்துக்கொள்ளலாம். அவா் மகன் கிராமத்தில் வசித்தால் மேலே மாடி கட்டிக் கொள்ளலாம். பேரன் விரும்பினால் மூன்றாவது மாடியும் கட்டிக்கொள்ளலாம்.

நகரத்தாருக்கு தனிவீடுகள் கிடையாது. அனைத்தும் மூன்று, நான்கு அல்லது அதிகபட்சம் ஐந்து மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளே. திருமணமான புதிதில் 700 சதுர அடி வீடு. ஒவ்வொரு பத்து வருடத்திற்கும் 100 அடி அதாவது ஒரு படுக்கையறை அதிகரிக்கப்படும். நகரத்தாருக்கு அதிகபட்சமாக 1000 சதுர அடி பிளாட்தான். ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கரில் வீடு கட்டுவதற்கு நிலத்திற்கு எங்கே போவது.. தனிவீடு வேண்டுமெனில் கிராமத்தில் வசிக்கலாமே. நகரத்தாா் சில காலம் கிராமத்தில் தங்க விரும்பினால் தற்காலிக வீடுகளில் வசிக்கலாம். பூமியில் ஒரு மனிதருக்கு ஒரு வீடே. அது நகரமா கிரமமா என்பதை அவரவரே முடிவு செய்துகொள்ளலாம். நகா், மாநகா்களின் மக்கள்தொகை கூடும்போது, அவை வான்நோக்கியே உயரவேண்டும். தரையில் படரக்கூடாது. விளைநிலங்களில், காடுகளில் இனி ஒரு அடி நிலம்கூட வீடுகளுக்கென எடுக்கக்கூடாது. ஏற்கனவே மனிதா்கள் ஏராளமாக எடுத்துவிட்டாா்கள்.

நகரின் எல்லைகள் வரையறுக்கப்படும். சிற்றூா், ஊா், பேரூா், நகரம், மாநகரம், பெருநகரம் என தமிழ் நிலம் பிரிக்கப்படும். ஒரு கி.மீ.க்கும் குறைவான சுற்றளவு கொண்டது சிற்றூா். இரண்டு கி.மீ. உள்ளது ஊா். ஐந்து கி.மீ. சுற்றளவில் இருப்பது பேரூா். பத்து கி.மீ கொண்டுள்ளது நகரம். இருபது முதல் இருபத்தைந்து கி.மீ. சுற்றுக் கொண்டது மாநகா். ஐம்பது கி. மீ. வரை பரந்து விரிந்துள்ளது பெரு நகரம்.

கோவை பந்தயச்சாலையிலிருந்து சுற்றிலும் 25 கி.மீ. சுற்றளவு கொண்டதாக கோவை மாநகரின் எல்லைகள் வரையறுக்கப்படும். அனேகமாக கிழக்கே சூலூா் வரை வரலாம். இதுவே கோவையின் எல்லை. எல்லையைச் சுற்றி பெரியதொரு சுற்றுச்சாலை அமைக்கப்படும். மாநகரின் மையத்திலிருந்து நான்கு திசைகளுக்கும் (கோவையின் மேற்கே மலைத்தொடா் வருவதால் மூன்று திசைக்கும்) நான்கு பெரிய சாலைகள்

(உதாரணமாக 200 அடி) உருவாக்கப்படும். நான்கு சாலைகளுக்கு இடையே அவற்றை விட சற்றுக் குறைவான (100 அடி) சாலைகள் நான்கு அமைக்கப்படும். அவற்றிற்கு இடையே 100 அடி சாலைகள் இருக்கும். இந்த சாலைகளை இணைக்கும் விதத்தில் நகரெங்கும் சுற்றுச் சாலைகள் அமைக்கப்படும். நகரக்குள் எங்குமே பாலங்கள் இருக்காது.

கோவை மாநகரின் கிழக்கே சுற்றுச் சாலைக்கு வேளியே தொடர்வண்டி நிலையம் இருக்கும். வடக்கு சாலைக்கு வெளியே வானூர்தி நிலையம் செயல்படும். தெற்கில் அடக்கத்தலம் உருவாக்கப்படும். நொய்யல் பிரம்மாண்டமான ஆறாக வெட்டப்படும். கோவையின் அத்தனை மழைநீரும் நொய்யலில் விழுமாறு வடிகால் கட்டமைக்கப்படும். நொய்யல் ஆறு மிகச் சிறந்த சுற்றுலாத் தளமாக மாற்றப்படும். தொடர்வண்டி நிலையமும் வானூர்தி நிலையமும் இணைக்கப்படும். நகருக்குள் செல்ல 200 அடி சாலை வழியாக டிரம் வண்டிகள் இயக்கப்படும். நகருக்குள் பேட்டரி கார்கள் மட்டுமே இயக்கப்படும். மாநகருக்குள் எப்போதும் பொதுப்போக்குவரத்து இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்படும்.

மாநகருக்குள் தூசி உருவாகாது. புகை வெளியிடும் வாகனங்கள் அனுமதிக்கப்படாது. போக்குவரத்து கட்டுப்படுத்தப்படும். பேட்டரி இருசக்கர வாகனம், மிதிவண்டி பரவலாக்கப்படும். வாகன சத்தம் குறைக்கப்படும். காற்று மாசுபாடு அறவே நீக்கப்படும். அனைத்து தொழிற்சாலைகளும் சுற்றுச் சாலைக்கு வெளியே நிறுவப்படும்.

இறந்தோருக்கு மருத்துவமனையிலேயே சடங்குகள் நிறைவேற்றப்பட்டு. அங்கிருந்தே இலங்கு ஊர்திகளில் உடல்கள் எடுத்துச் செல்லப்படும். தமிழர் சாலையெங்கும் பூக்களைக் கொட்டமுடியாது.. சாலையைக் குப்பையாக்க முடியாது. மாநகரின் குப்பைகள் அனைத்தும் ஒரிடத்தில் குவிக்கப்பட்டு (மாநகரின் மேற்கில்), மாநகருக்குத் தேவையான மின்சாரம் தயாரிக்கப்படும்.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுக்குழாய் மூலமே வழங்கப்படும். ஒவ்வோரு வீதியிலும், குடியிருப்புகள் முன்பாக குடிநீர்க் குழாய்கள் செல்லும். வேண்டியவர் பிடித்துக்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் வீடுகளுக்குள் குடிநீர் இணைப்பு வழங்கப்படாது. குளிக்க, மற்ற பயன்பாடுகளுக்கு சுத்தப்படுத்தப்பட்ட அணைத்

தண்ணீர் வழங்கப்படும். மாநகரில் ஏராளமான நீச்சல்குளங்கள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் வடிவமைக்கப்படும்.

குடியிறுப்புகள் குறைந்தது நான்காயிரம் பேர், அதிகபட்சமாக 10000 பேர் என பெரிய எண்ணிக்கையில் உருவாக்கப்படும். போதுமான இடைவெளி, தகுந்த வசதிகள், போக்குவரத்து, வேலைவாய்ப்பு, விளையாட்டு என அனைத்தையும் கருத்தில் கொண்டே குடியிறுப்புகள் கட்டப்படும்.

மாநகரில் பிரம்மாண்ட வணிக வளாகங்கள் நிறுவப்படும். மாநகரின் அலவலகங்கள் பல மாடிகள் கொண்டவையாக அமைக்கப்படும். ஒத்த வேலை வாய்ப்புகள் ஒரு தொகுப்பாகக் கட்டப்படும்.

எல்லாம் சரிதான். இவற்றிற்கான முதலீடு. அனைத்தும் மனித ஆற்றல்கொண்டு உருவாக்கப்படும். அனைத்து வேலைகளும் மனித உழைப்பைக்கொண்டு கணக்கிடப்படும். முடிந்தவரைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

ஒவவொரு குடும்பத்திற்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உணவுக்கென்று பணம் ஒதுக்கப்படும். தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். அனைத்தும் கணிதம்தானே மனிதர்களே. விளைச்சலைப் பெருக்கவேண்டும். பொருட்களை உருவாக்கவேண்டும். உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். பின்பு பங்கு வைக்கவேண்டும். இதுதானே பொருளாதாரம்.

பொருட்கள் ஏன் விலை உயர்கின்றன. உற்பத்தி குறைந்து தேவை அதிகரிப்பதால். விலை எப்போது குறையும். உற்பத்தியை அதிகரித்தால். தேவைக்கு அதிகமாக உற்பத்திசெய்தால். வாங்க ஆளிருக்காது. உலகின் மனிதருக்கு என்னவெல்லாம் அடிப்படைத் தேவை. அவற்றை அனைவருக்கும் போதுமான அளவில் உற்பத்திபண்ண முடியாதா. அனைத்து மனிதருக்கும் வேலை கொடுக்க முடியாதா. வேலைக்கு பணம் கொடுக்கிறார். பணத்தைச் சமைப்பதில்லை. சாப்பிடுவதில்லை. பணத்திற்கு பொருள் வாங்குகிறார். பணம் என்பது என்ன. ஒரு எண். ஒரு மதிப்பு. அதுவும் செயற்கையான மதிப்பு. ஒரு நம்பிக்கை. உண்மையில் பணம் ஒன்றுமே இல்லை. ஏமாற்று வேலை. தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல். பொருளாகவே கொடுத்துவிட்டால்.. முன்னர் அப்படித்தான் இருந்தது. நெல்லைக்

கொடுத்து பானையை வாங்கினார். உலகம் அதைக் கடந்து வந்துவிட்டது. இப்போது பணமும் தேவையில்லை என்றாகிவிட்டது. அனைத்தும் எண்களாகக் கொள்ளப்படுகின்றன. இதுவும் சரியான முறையன்று. உலகில் மனித உழைப்பைக் கொண்டே பொருட்கள் மதிப்பிடப்பட வேண்டும். உலகில் மதிப்பிட முடியாத பொருட்களும் உள்ளன. தாய்ப்பாலுக்கு விலையுண்டோ. உணவுப் பொருட்களுக்கு விலை வைக்கலாமோ..

மனிதருக்கென சில அறங்கள் இருக்கவேண்டும். முதலில் மனிதர் உழைத்தே உண்ணவேண்டும். உழைப்பு என்றால் மூளை உழைப்பு மட்டும் அல்ல. உடல் உழைப்பின்மையால் மனிதர் எப்படியெல்லாம் திணறுகிறார் என்பதை மனிதர் அறிந்துவிட்டார். ஆனாலும் மனிதர் உடல் உழைப்புக்கு அஞ்சுகிறார். தமிழர் நெடுங்காலமாகப் பழகிவிட்டார் போலும். மனிதர் உடற்பயிற்சிக் கூடங்களில் கடுமையாக உழைக்கிறார். அது பாழ் அல்லவா. யாருக்குப் பயன். சுளையான பணம் கொடுத்து இரும்புக் கம்பிகளைத் தூக்குகிறார். இழுக்கிறார். தள்ளுகிறார். உயர்த்துகிறார். அதற்குப் பதிலாக காலையில் இருபது வீடுகளுக்கு எரிவாயு சிலிண்டர் கொடுத்தால் போதுமே. உழைப்பும் ஆயிற்று. பணமும் ஆயிற்று. யுவன்களும் யுவதிகளும் இரண்டு மூன்று மணிநேரம்கூட ஜிம்மில் இரும்புக் கம்புகளோடு மல்லுக்கட்டுகிறார்கள். பதிலாக ஒரமணி நேரம் கட்டிட வேலை பார்க்கலாமே. கட்டிட வேலை பார்ப்பது உடற்பயிற்சியாகாதா. அசிங்கமென்று நினைக்கிறாரோ. ஒருவேளை அது படிக்காதவர் செய்யும் வேலையோ. அப்படியெனில் யார் படித்தவர். அறிவுடைய தமிழர் யோசிக்க வேண்டும். தமிழர்தான் எவர் பேச்சையும் கேட்க மாட்டாரே. எவருக்கும் அடங்க மாட்டாரே. உண்மைதானே தமிழரே.

விலங்குகளே அழகான வேலைப் பகிர்தலைக் கொண்டிருக்கின்றன. அறிவிற் சிறந்த மனிதரால் வேலைகளைப் பகிர முடியாதா. ஆணும் பெண்ணும் இணைந்து விவசாயப் பணிகளை மேற்கொள்ளலாம். வேளாண் பணிகளில் கடினமான உடலுழைப்புப் பணிகளை ஆண்களுக்கு ஒதுக்கலாம். மிகக் கடினமான பணிகளை இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளலாம். எனினும் வேளாண் உற்பத்தியில் முடிந்தவரைக்கும் இயந்திரங்களைத் தவிர்க்க வேண்டும். தாவர, விலங்குகள்

உயிருள்ளவை. மனிதர் போன்றே அவையும் மதிப்பானவை. இயந்திரங்களுக்கு உயிர்களின் மதிப்பு தெரியாது.

கட்டுமானத் தொழிலை ஆண்கள் மேற்கொள்ளலாம். கட்டுமானத்தில் அதிகபட்சமான இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். உடைகள் தயாரிப்பை பெண்களுக்கு ஒதுக்கலாம். அவ்வாறே அலுவலகப் பணிகள் அனைத்தையும் பெண்களிடம் விட்டுவிடலாம். மனிதர்கள் தையலை கற்றுக்கொள்ளவேண்டும். ஒரு உடை தைத்துக் கொடுத்தால் 100 ரூபாய் சம்பாதிக்கலாம் எனும் அளவில் அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்கலாம்.

மனிதர் பிழைப்பதற்கு, சம்பாதிப்பதற்கு ஆயிரமாயிரம் வழிகள் உள்ளதே.. ஏன் மனிதர்கள் இப்படி வாழ்கிறார்கள்.

எப்படியெல்லாம் நாம் இவ்வுலகை, மக்கள் வாழ்வை மாற்றலாம்.. மனிதர் சிந்திக்க மறுக்கிறார். நகரங்களில் 100 வீடுகளின் குளியலறையிலிருந்து வெளியெறும் நீரை வைத்து எவ்வளவு மீன்களை வளர்க்கலாம் அறிவிற் சிறந்த தமிழர்களே.. ஒரு வீட்டில் 100 விட்டர் நீர் குளிப்பதற்குப் பயன்பட்டால் 10000 லிட்டர் நீர் கிடைக்கிறதல்லா. அனைத்தையும் குழாய்மூலம் இணைத்து ஒரு தொட்டிக்குள் வடிகட்டி விடலாமா. வடிகட்டிய தொட்டியில் உணவாகும் மீன்களை வளர்க்கலாமா. 100 வீடுகளில் மீதமாகும் உணவே மீன்களுக்குப் போதுமல்லவா. வருமானமும் ஆயிற்று. நல்ல மீன் உணவும் ஆயிற்று. நீர் மாசுபாடும் போயிற்று. மனமிருந்தால் மார்க்கமுண்டுதானே. மனிதர் மனது வைத்தால் ஒரே நாளில் உலகை மாற்றிவிட முடியாதா. பூமியை பூக்களால் நிறைக்க மனிதருக்கு ஓராண்டு தேவைப்படுமா. மனிதரால் முடியாததென்ன.

யாம் மண்ணில் அறத்தை முன்னெடுக்க விரும்புகிறோம். யாம் விரும்புவது சமூக அறம். தனிமனிதர் சற்று முன்பின்னாக இருக்கலாம். எனினும் சமூகம் அறம் பிறழக்கூடாது. ஒரு நல்ல சமூகத்தில் உணவை விற்கமாட்டார். உணவை விற்பது ஒருபோதும் அறமாகாது. உணவுக்கு விலை வைப்பது, அளவு வைப்பது அறப்பிழை. உணவை எடைபோட்டுத் தருகிறார். உணவை எடை போடுவரோ. உணவை அள்ளி வைக்கவேண்டும். அளந்தும் எண்ணியும் வைக்கக்கூடாது.

யாம் மனித உழைப்பை கடமை என்றும், சேவை என்றும், தொழில் என்றும் பிரிக்கிறோம். அனைத்து மனிதருக்கும் வேளாண் பணி செய்வது கடமையாக்கப்பட வேண்டும். இருபது வயது இளைஞர்கூட உடல் உழைப்பில் ஈடுபடுவதில்லை. பிராமண இளைஞரைப் பார்த்து எல்லோரும் மாறிவிட்டார். 20 முதல் 30 வயதுவரை தாராளமாக உடல் உழைப்பில் ஈடுபடலாமே. கூட்டாக உடலுழைப்பு செய்வது சிறந்தது. ஒன்றிரண்டுபேர் முன்பின்னாக இருந்தாலும் மற்றவர் சரிக்கட்டி விடுவார்.

உலகின் அனைத்து மனிதருக்கும் உணவு இருக்க வேண்டும். கிடைக்கவேண்டும். நம் பாரதி கண்ட கனவு மெய்ப்பட வேண்டும். தமிழரே, நாம் நம் தந்தையின் கனவை மெய்யாக்குவோமா. என்றேனும் தமிழர் மெய்யாக்கிக் காட்டுவார் என்றுதானே நம் தந்தை அப்படி ஒரு கனவு கண்டார். நம் ஞானத்தந்தையின் கனவை நனவாக்கவது நம் கடமையல்லவா. உலகில் இப்படியொரு கனவை நனவாக்க முயன்ற நாடுகள் பல. மொழிகள் பல. ஆனாலும் முடிந்ததா எனில் ஏமாற்றமே. அவர் முயன்றதே பெரிதல்லவா. தமிழரால் உலகின் அனைத்து வயிறுகளும் உண்டதை உறுதிசெய்ய இயலுமா. தமிழால் முடியாதெனில் வேறு எதனால் முடியும். தமிழால் முடியுமென்றே நம் தந்தையர் அறுதியிட்டுள்ளனர். யாமும் உறுதியாகச் சொல்கிறோம். தமிழால் முடியும். தமிழர் அறிவால் முடியும். தமிழ் வெல்லும். எப்போதும் தமிழ் வெல்லும்..

எத்தனை பெரிய கனவு. தமிழர் அனைவருமென்றோ, இந்தியர் அனைவருமென்றோ இல்லாமல் உலகினர் அனைவரும் வயிறார உண்ண வேண்டும் எனக் கனவுகண்ட நம் பெரும்புலவன் நமது பெருமைமிகு சங்கத்தின் தொடர்ச்சியல்லவா. நம்மைப் போல் உலகு குறித்து சிந்தித்தது யார். உலகு குறித்து பாடியது யார். எழுதியது யார். உலகம் அறியாமல் இருக்கிறது. நிச்சயம் நம் பெருமை அறியவரும்.

கல்வியும், மருத்துவமும் சேவையல்லவா. எதார்த்த நிலையென்ன தமிழர்களே. நம் காலத்திலல்லவா இரண்டும் பெருவணிகங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாம் கல்வியை காசுக்கு விற்பதை எப்படி சகித்துக் கொள்கிறோம். அறப்பிழையும் தாண்டி அது குற்றமல்லவா. ஆசானொருவர் கொடுக்கும் பணத்தின் அளவிற்கேற்ப கற்றுக்கொடுக்க முடியுமா. கல்விக்கு விலையுண்டோ தமிழர்காள். அறிவை விற்பது

தருமமோ. நம் முன்னோர் சொல் யாது தமிழரே. நம் காலத்திய மருத்துவக் கொள்ளை பற்றி சொல்லவும் வேண்டுமோ.

நம் கல்வி எப்படி இருக்கிதென்று என்றைக்காவது வேந்தர்கள் சிந்தித்ததுண்டா. வேந்தர்களுக்குத்தான் ஏகப்பட்ட பிசினெஸ்கள். பேராசிரியர்களாவது சிந்திக்கிறார்களா. கல்லூரி படிக்கும் மாணவர்கள் கடலையே பார்த்ததில்லை என்கிறார்கள். இருபது வயது நிரம்பிய விலங்கியல் மாணவர் கடலைப் பார்த்ததில்லை எனில்.. இதுவா கல்வி அறிவுடையோரே. விலங்குகளில் பாதிக்கும் மேல் கடலில்தான் வாழ்கின்றன. கடலையே அறியாமல், கடல் விலங்குகளைக் கண்ணால்கூடப் பார்க்காமல் விலங்கியல் பட்டம் எதற்கு.. பட்டத்தை வைத்து என்ன செய்யப் போகிறார். தமிழகத்தில் எவ்வளவு நீண்ட கடற்கரை உள்ளது. பன்னிரெண்டாம் வகுப்பு வரை ஏன் இந்த மாணவர்களுக்கு கடலைக் கூட காட்டவில்லை. யார் தவறு.

ஏன் விலங்கியல் மாணவர்கள் வருடத்தில் பத்து நாட்களாவது கடற்கரையில் தங்கவேண்டுமென்பதைக் கட்டாயமாக்கக்கூடாது. தாவரவியல் மாணவர்கள் ஒரு மாதமாவது காடுகளில் சுற்றித் திரிவதைக் கட்டாயமாக்கினால் என்ன. நம் கல்விக்கொள்கையைத் தீர்மானிப்பது யார்.

தமிழகக் கோவில்களுக்கே போகாத ஒருவர் எப்படி தமிழகக் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்ற முடியும். பேராசிரியர் தமிழகத்திலுள்ள, இந்தியாவிலுள்ள எந்தக் கோவிலுக்குள்ளும் நுழைய மாட்டார். கோவில்கள் பற்றி ஒன்றுமே தெரியாது. மாணவர்களை சுற்றுலா அழைத்துச் சென்றாலும் கோவிலுக்கு வெளியேயே நின்று கொள்வார். எப்படி இவர் வரலாற்றுப் பேராசிரியராக இருக்க முடியும். என்ன தகுதியிருக்கிறது. தமிழக வரலாறு என்பதே ஓரளவிற்கு கோவில் வரலாறுதானே. கோவில் கல்வெட்டுக்கள் மூலமாகத்தானே நம் வரலாறு மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது. பேராசிரியரே இப்படி இருந்தால் மாணவருக்கு தமிழகத்தின் உண்மையான வரலாறு எப்படித் தெரியும். எதையோ படிக்கிறார். எதையோ சொல்லிக் கொடுக்கிறார். வரலாறு அறியா மாணவரும் பேராசிரியராகி, இவரும் கோவிலுக்குள்ளேயே போகாமல், வரலாற்றுக் காலம்தொட்டு தமிழர் அறிவில்லாமல் இருந்தார், அவர்தான் வந்து அனைத்தையும் கற்பித்தார், குறளில் காட்டப்படும் அன்பு அன்னாரிடமிருந்து பெற்றது என புது வரலாற்றையே எழுதுகிறார்.

தமிழர்களே. எப்படி தமிழகம் கல்வியில் மேன்மையுறும். யார் மாற்றுவது. எப்போது மாற்றுவது. இளங்கலை வரலாற்று மாணவர் குறைந்தது தமிழகம் முழுவதுமாவது சுற்றியிருக்க வேண்டுமல்லவா. முதுகலை மாணவர் ஒருவருடம் இந்தியாவைச் சுற்றி வந்து நேரிடையாக வரலாற்றைப் பயில்வதுதானே முறை. அட ஞானிகளா. வரலாற்றை எப்படி வகுப்பறையில் கற்றுத்தர முடியும். வரலாற்றுப் பயணம் செய்திராத ஒரு மாணவர் வரலாற்றில் முனைவர் பட்டம் பெறுகிறார் எனில், பட்டத்தால் யாருக்கு என்ன இலாபம். ஏட்டுச் சுரைக்காயல்லவா. அறிவு எப்படி வரும்.. அறிவு எப்படி விருத்தியாகும். அறிவு யாருக்குப் பயன்படும்.

மாற்றவேண்டும் தமிழரே. அனைத்தையும் மாற்ற வேண்டும். அனைத்தையும் அடியோடு மாற்ற வேண்டும்.

ஒருவருக்கு இசையில் நல்ல புலமை இருக்கிறது. ஒருவர் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கிறார். அன்னார் அது ஒன்றையே மூலதனமாக்கி, அதையே தொழிலாக்கிப் பிழைக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அவர்தான் கூடுதலான வசதிகளோடும், ஏராளமான பட்டங்களோடும், விருதுகளோடும் வாழ்கிறார். இவர் சம்பாதிப்பது நியாயமான சம்பாத்தியம்தானா. இசைப்புலமையை மட்டும் வைத்து ஒருவர் வாழலாமா. அது திறமையா தொழிலா. தொழில்செய்து பிழைப்பது முறையா. பழக்கத்தாலும், பயிற்சியாலும், பெற்றோராலும் வரும் திறமையை மட்டும் வைத்து பிழைப்பது முறையா. இசையில் திறமை சரிதான். பாராட்டலாம். பரிசும் கொடுக்கலாம். பாடுவது எப்படி ஒருவருக்குத் தொழிலாகும்.

எது தொழில். எது திறமை. ஒருவர் வாழ்நாளெல்லாம் விளையாடிக் கொண்டேயிருப்பது அறப்பிழையாகாதா. அவர் சாப்பாட்டுக்கு என்ன தொழில் செய்கிறார். வங்கியில் பணியும் செய்கிறார். அப்படித்தானே. உண்மையில் விளையாட்டுக்காரர்கள் என்றைக்கேனும் பணிசெய்ததுண்டா. விளையாடி எப்படி ஒருவர் கோடிகோடியாக பணம் சம்பாதிக்க முடியும். ஒருவர் வாழ்நாளெல்லாம் வாகனம் ஓட்டுகிறார். தொழிலாகும். ஒருவர் அலுவலகமொன்றில் பணிசெய்கிறார். தொழிலாகும். ஒருவர் தொழிற்சாலையொன்றில் வேலை பார்க்கிறார். தொழிலாகும். வணிகம் செய்கிறார். தொழில்தான். நடிப்பது தொழிலாகுமா. ஒருவர் வாழ்நாளெல்லாம்

எப்படி நடித்துக்கொண்டேயிருப்பார். நடிப்பதற்கு காசா. அதுவும் கோடிகோடியாய். மக்களை மகிழ்விப்பதற்கா இவ்வளவு பணம். எவ்வளவு திறமையான நடிகர்கள்.

எதெல்லாம் தொழிலாகும். எதெல்லாம் சேவையாகும். எதெதெல்லாம் வணிகமாகும். தமிழர் அறிந்திருக்கிறாரா.

நகர மனிதர் மீன்களை மட்டுமே வீட்டில் வளர்க்க வேண்டும் எனச் சட்டமியற்றினால் என்ன. அதுவும் குறைந்தது பத்து அடிகளாவது இருக்கும் தொட்டியில் மட்டுமே மீன்களை வளர்க்க வேண்டும் என்பதுதானே முறையானதாக இருக்கும். நகரத்தார்கள் ஏன் இப்படி நாயை வளர்க்கிறார்கள். அத்தனை அன்போ.

தமிழகத்திலுள்ள அத்தனை தொழிற்சாலைகளையும் கொஞ்ச காலமாவது நிறுத்தினால் என்ன. அவை நமக்கு உண்மையிலேயே தேவைப்படுகின்றனவா. ஆற்றங்கரையோரங்களில் இருக்கும் சாயப்பட்டறைகளை இடித்தால் தப்பாகுமா. மண்ணின் நலன் கருதி நம்மால் இயற்கைச் சாயத்திற்கு மாறமுடியாதா. ஏன் ஆண்கள் ஒரு வருடத்திற்காவது வெள்ளைச் சட்டைகளை அணியக்கூடாது. நாம் ஏன் சாயப்பட்டறைகளை மீள் கட்டமைப்புச் செய்யக்கூடாது. நாம் ஏன் நன்கு சிந்தித்து, மண்ணுக்கும், மக்களுக்கும், நீராதாரங்களுக்கும் பாதுகாப்பான தொழில்முறையைப் பயன்படுத்தக்கூடாது. ஏன் நாம் புதுமையை நமக்கு ஏற்றமாதிரி சற்றே மாற்றிக்கொள்ளக்கூடாது. லண்டனில் பாதள ரயில் விட்டால் கோவையிலும் விட வேண்டுமா.. லண்டன் மாநகரின் கட்டமைப்பென்ன. நெருக்கடியென்ன. நில மதிப்பென்ன.. அவருக்கு வேறு வழியேயில்லை. பூமியைக் குடைந்து பாதாள ரயில் விடுகிறார். கோவைக்கு எதற்கு அந்தப் பெருஞ்செலவான ரயில் திட்டம். பெருமைக்கா தமிழர்களே. கோவை சுமார்ட் சிட்டியாகிறதாமே. ஓயாத விளம்பரங்கள், திட்டங்கள் வெளியாகின்றன. எத்தனை எத்தனை கோடிகள் கொட்டினால் என்ன. அடிப்படைக் கட்டமைப்பை மாற்றினாலொழிய கோவை ஒருபோதும் சுமார்ட் சிட்டியாக மாறவே மாறாது. முதலில் மக்களுக்கு ஒரு வித உயர்ந்த எண்ணம் வேண்டும். பரந்த மனம் வேண்டும். கனவு வேண்டும். தொலைவான பார்வை வேண்டும். செய்வதை சேவை என நினைக்கவேண்டும். வரலாறு தெரிய வேண்டும். தவறுகளிலிருந்து கற்க வேண்டும். உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும். மக்களை நேசிக்க வேண்டும். கொஞ்சமாக

அறிவும் வேண்டும். அனைத்தும் உள்ள நல்லோர் முன்முயற்சியால் மட்டுமே மாற்றங்கள் சாத்தியமாகும்.

தமிழர் மிகவும் பழமை பேணுபவராக இருப்பதும் உண்மை. எந்த மாற்றத்தையும் ஏற்க தமிழர் மனம் ஒப்புவதில்லை. வாழ்க்கை எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே நிம்மதியாக இருக்கவேண்டுமென தமிழர் விரும்புகிறார். என்னதான் நாம் பூசிமெழுகினாலும் தமிழரில் பொதுநலன் பேணுவோர் மிக அரிதாகவே இருக்கிறார். மிஞ்சும் சோற்றை நாய்க்குப் போடுவதை புண்ணியமாகக் கருதும் தமிழரே அதிகம். அதை வைத்தே சொர்க்கமோ, சிவலோகமோ, பரமபதமோ போய்விடலாம் எனக் கனவு காண்பவரும் கூடுதல். தாம் உண்டு, தம் குடும்பம் உண்டு என இருக்கும் தமிழரே மிக மிக அதிகம். தமிழருக்கு உலகை வெல்லவேண்டும் எனும் ஆசை கிஞ்சித்தும் கிடையாது. உலகை மாற்ற முடியும் எனும் நம்பிக்கை சிறிதளவும் இல்லை. படித்தவர் வாழ்க்கையில் செட்டிலாவதையே பெருநோக்கமாகக் கொண்டிருக்கிறார். நன்றாகப் படிக்கவேண்டும். படிக்கவேண்டுமென்பதை விட மிக நன்றாக மனப்பாடம் செய்யவேண்டும். வேலைக்குப் போய் சம்பாதிக்கவேண்டும். வாழ்க்கையில் செட்டிலாக வேண்டும். சுருக்கமாக படி, வேலைபார், சம்பாதி, வாழு, முடித்துக்கொள். ஒன்றை முயற்சிக்கும்போது, ஒருமுயற்சியில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். தமிழர் அதற்குத் தயாரில்லை. தமிழர் குடும்பத்தைப் பற்றி அதிகமும் பயப்படுவது தெரிகிறது. உலகை ஆளத் துணிவு வேண்டும். வெற்றிபெறத் தியாகம் வேண்டும். ஒன்றைப் பெற இன்னொன்றை இழக்கவும் தயாராக வேண்டும். நம் முன்னோரிடம் துணிவும் வீரமும் இருந்தது. அவர் உலகை வென்று தமிழர் பெருமையை நிலைநாட்டினார்.

தமிழர் உலகை வெல்வதற்கு முதலில் உலகைப் பற்றி எண்ண வேண்டும், பேசவேண்டும். தமிழரோ எப்போதும் பெண்கள் பற்றியே பேசித் திரிகிறார். தமிழர் பெண்ணைப் பற்றிய நினைப்பால் ஏங்கித் தவிக்கிறார். தமிழரால் பெண்ணைப் பிரியவே முடியாது போலும். பின் எப்படி உலகை மாற்றுவது.. உலகை வெல்வது.. பெண்கள் மாற்றத்தை விரும்புவரோ.. பெண்ணுக்கு அனைத்தும் அப்படி அப்படியே இருக்கவேண்டும். எதுவும் மாறக்கூடாது என்பதே பெண்ணின் வேதம். என்றைக்குத் தமிழர் பெண்ணைப் பற்றியும், சினிமாவைப் பற்றியும் பேசுவதை நிறுத்துகிறாரோ, அன்றே உலகை வெல்ல முதல்படியை எடுத்து வைக்கிறார் என அர்த்தம்.

ஆன்மீக மாற்றமே நிலையானதாம். நம் முன்னோர் ஆன்மீக மாற்றம் குறித்து பேசியிருக்கிறார்களாம். தமிழர்களே.. எது ஆன்மீகம். எது ஆன்மீக மாற்றம். எது ஆன்மீக முன்னேற்றம். அறிந்திருக்கிறோமா. முதலில் ஆன்மீகம் என்றால் என்ன எனும் அடிப்படைக் கேள்விக்காவது நம்மிடம் பதிலிருக்கிறதா.

மனிதர் போன்றே மண்ணில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் உயிர் வாழ ஆசை இருக்குமல்லவா. பிற உயிரினங்களும் மனிதர் போன்றே உண்ணவேண்டும், உறங்கவேண்டும், உறவுகொள்ளவேண்டும் என விருப்பம் கொண்டிருக்குமல்லவா. முடிகிறதா மனிதர்களே. மனிதர் வாழ விடுகிறாரா. மனிதர் எப்படி கோழியை 65 நாட்களில் கொல்கிறார். தர்மமாகுமா. ஏதேனும் அறம் இருக்கிறதா. கோழிதான் என்றாலும் அதுவும் உயிர் அல்லவா. மனிதர் நாவில் எச்சில் ஊறக் கறி தின்பதற்கு கோழி இப்படியொரு தியாகத்தையா செய்யவேண்டும். ஏன் மனிதர் ஒரு வருடமாவது உயிர் வாழ்ந்த கோழியையே உண்ணவேண்டுமென ஒரு அறக்கோட்பாடு வைத்துக்கொள்ளக்கூடாது. இயற்கையின் ஒரு வருட சுழற்சியையாவது ஒரு உயிர் அறியவேண்டுமல்லவா. மீன்களுக்கு ஆறு மாத உயிர் வாழ்க்கையாவது தரவேண்டுமல்லவா. குறைந்தபட்சம் உணவாகும் அனைத்து விலங்குகளும் ஒருமுறையாவது இனப்பெருக்கம் செய்திருப்பதை உறுதிசெய்தால் என்ன. கோழியை குறைந்தது ஒரு வருடமும், இரண்டு கிலோ எடை கொண்டதாகவும், வாத்தை குறைந்தது இருவருடமும், ஆடுகளை குறைந்தது மூன்று வருடமும், கறவைகளை குறைந்தது பத்து வருடமும் உயிர்வாழ விட்டால் என்ன. மனிதருக்கு இளங்கன்று கேட்கிறதோ. இளம்பெண்ணும் தேவைப்படுகிறதல்லவா. அதனால்தானே உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கிறது அந்தத்தொழில்.

மனிதர் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமையை அறிந்திருக்கிறாரா. அறிந்துதான் உண்கிறாரா. முன்னர் மனிதர் வேட்டையாடி வாழ்ந்தார். நாம் எவ்வளவோ மாறி வந்துவிட்டோமல்லவா. கீரைகள், கிழங்குகள், காய்கனிகளை உணவில் அதிகமும் சேர்த்துக்கொள்ளலாமே. மனிதரால் உலகெங்கும் பழமரங்களை நட முடியாதா. இரவில் பழங்களை உண்டு பசியாற முடியாதா.

தமிழரால் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரம்மாண்டமானதொரு கீரைத்தோட்டம் அமைக்க முடியாதா. இயற்கைமுறையில், பூச்சிக்கொல்லி இல்லாத கீரைகளைப் பறித்து பள்ளிகளுக்கும், உணவுவிடுதிகளுக்கும் அனுப்ப முடியாதா.

ஒரு கிராமத்திற்கு தேவைப்படும் பாலை கிராமத்தாரே உண்டுபண்ண முடியாதா. கிராமத்தின் தேவையைப்போல் இருமடங்கு பாலை உற்பத்தி பண்ணி, நகரங்களுக்கும் அனுப்பலாமே. கிராமம் சார்பாக ஆட்டுப்பண்ணை வைக்கமுடியாதா. கிராமத்திலிருந்து மாதத்திற்கு பத்துப்பேர் என அந்தப் பண்ணையைப் பார்த்துக் கொள்ளமுடியாதா. கிராமத்தாருக்கு பால் பீச்சத் தெரியாதா. ஒரு கிராமத்திற்கு 100 மாடுகள், ஆயிரம் ஆடுகள் இருந்தால் எவ்வளவு பெரிய செல்வம் அது. ரசாயன உரம் தேவையா பெரியோர்களே. எவ்வளவு ருசியாக உணவை நம்மால் உண்டுபண்ணமுடியும். ஏன் நகரத்தார் வாழ்நாளில் ஒரு பத்து நாளாவது கிராமத்தில் தங்கி சேவை போன்று மாட்டுப்பண்ணையில் வேலை பார்க்கக்கூடாது. கிராமத்தின் பால் வேண்டும். காய்கறிவேண்டும். அவர் உழைப்பு வேண்டும். ஆனால் உமக்கு கிராமம் மட்டும் வேண்டாம். நீர்தான் வெளிநாட்டிலிருந்து அனைத்தையும் இம்போர்ட் செய்தல்லவா உண்கிறீர். உமக்கெதற்கு கிராமம். சரிதானே மாநகரவாசிகளே.

நீர் எங்கே போனாலும், எப்படிச் சுற்றினாலும் கிராமத்திற்கு வந்துதான் ஆகவேண்டும். இனி உமக்கு வேறு வழியில்லை. தீர்க்கமாக யோசித்தே நம் பெருந்தந்தை கிராமப் பொருளாதாரத்தை முன்னெடுத்தார். தந்தைக்கு தெரியாதா. கிராமமே இந்தியாவின் உயிர்நாடியென. நீர் தந்தையின் சொல்லைத் திரித்தீர். மாற்றினீர். முன்னேற்றம் என எதையோ சொன்னீர். செய்தீர். காட்டினீர். கடைசியில் அனைத்தும் பாழாகிவிட்டது. இன்றைக்கு இந்தியாவில் கிராமங்களே இல்லை. அழகும் பொலிவும் கொண்டிருந்த அத்தனை கிராமங்களையும் நகரத்தார் தமது பேராசைக்காக சிதைத்துவிட்டார். கிராமங்களை உறிஞ்சியே இந்திய நகரங்கள் வீங்கின. நகரத்தாருக்காக கிராமத்தினர் வாழும்படி மாற்றியது எவ்வளவு பெரிய பேரழிவு என்பதை இப்போதைக்கும் அரசியலாளரும், அறிவுஜீவிகளும் அறிந்ததாகத் தெரியவில்லை. நகரங்களில் மலைபோன்ற குப்பையைத் தவிர வேறு ஏதேனும் உருவாகிறதா அறிவுடையோரே.. நகரமும் குப்பை. நகரத்துப் படிப்பும் குப்பை. மனமும்

குப்பை. வாழ்க்கையும் குப்பை. இந்திய நகரங்களில் மனிதர் வாழ்வாரா. வாழத்தகுதியுள்ளவைதானா இந்திய நகரங்கள். யார் காரணம்.

எங்கள் கிராமங்களின் தண்ணீரெல்லாம் எங்கேயடா போனது. எங்கள் ஊர்களின் அத்தனை மீன்களையும் களவாடியவன் எவனடா. எங்களின் வற்றாத குளங்கள் தூர்த்து கிடப்பது ஏனடா. தாயாய்ப் பிள்ளையாய்ப் பழகியவர் சாதிக்காக வெட்டிக்கொண்டு சாவது எப்படியடா.

ஆட்சிக்கட்டிலில் அமர்ந்து கொள்ளையடிக்க கிராமத்தாரைப் பிரித்தது தகுமா. எப்படியாவது செயிக்க எளிய கிராமத்தாருக்கு துட்டுக் கொடுத்தது வெட்கங்கெட்ட செயலில்லையா. அவர் காசுகொடுத்தால்தான் ஓட்டுப் போடுவோம் எனச் சொல்லியதுண்டா. எளியவரை ஏமாற்றிப் பிழைத்தது, பிழைப்பது தர்மம்தானா.

நண்பர்களே.. அனைத்திலும் தன்னிறைவு பெற்ற கிராமங்கள் உருவாக வேண்டும். நகரத்திற்கும், சுற்றியுள்ள ஊர்களுக்கும் கொண்டும் கொடுத்துமான இணக்கம் பேணப்படவேண்டும். எதுவும் ஒருவழியாக இருக்கக்கூடாது. ஏன் நகரத்தார் ஒருமணி நேரப் பயணத்தில் ஒரு கிராமத்து தொழிற்சாலையில் வேலைசெய்யக்கூடாது. ஏன் ஒவ்வொரு கிராமத்திலும் அந்தக் கிராமம் சார்ந்து ஒரு தொழிற்சாலை இயங்கக்கூடாது. நாம் நம் கிராமங்களை மாற்றியமைக்கவேண்டும். நகரங்களை மீள்கட்டமைப்புச் செய்யவேண்டும். நம்மால் முடியும் தமிழர்களே.

நாம் மின்சாரத்தை சிக்கனமாக, முறையான திட்டமிடலோடு பயன்படுத்தப் பழகவேண்டும். அனல் மின்சாரம் அதீத காற்று மாசுபாட்டைக் கொடுக்கிறது. அணுமின்சாரமோ ஆபத்தானதோடு, கழிவுகள் வரும்காலத்திற்கும் ஆகப்பெரும் அச்சுறுத்தல். நாம் தற்போது உற்பத்தி பண்ணும் மின்சாரமே மிகைதான். நாம் வணிகத்திற்கு அதீத அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறோம். வணிகப் பயன்பாட்டைக் கட்டப்படுத்தினாலே மின்சார மிகைஉற்பத்தி நாடாக இந்தியா மாறிவிடும். 400 சதுரஅடிகள் கொண்ட ஒரு காலணிக் கடையில் சுமார் 58 விளக்குகள் போட்டிருக்கிறார்கள். அனைத்தும் அதிக சக்தியானவை. கடையின் முன்பாக இன்னும் அதிகத் திறனுள்ள விளக்குகள் எரிகின்றன. காசு கொடுத்தால் என்னவேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் எத்தனை காலம்

வேண்டுமானாலும் கொடுக்குமா அரசு. வணிகக் கடைகளில் எதற்கு இவ்வளவு விளக்குகள். கண்கள் கூசுகின்றன. எல்லாம் வணிகத் தந்திரம். இந்தியர்களுக்கு பளிச்சென்று இருந்தால் போதும், வாங்கிக் குவித்து விடுவார்கள் போலும்.

வணிகக் கடைகள் ஏன் காலை எட்டு, ஒன்பது மணி முதல் இரவு பத்து, பதினோரு மணிவரையிலும் திறந்திருக்கின்றன. அலுவலகங்கள் காலை எட்டு முதல் மதியம் இரண்டு மணிவரை எனவும், வணிகக் கடைகள், நிறுவனங்கள் மதியம் இரண்டு முதல் இரவு எட்டு மணி வரையும் என வரையறை செய்துகொண்டால், நாட்டில் எவ்வளவு மின்சாரம் மிச்சமாகும். வணிகக் கடைகளையும் அவசரமானவை, அத்தியாவசியமானவை, மாலை நேரம் மட்டும், நாள்தோறும், வாரத்திற்கு ஒருமுறை, சனி ஞாயிறு மட்டும், விடுமுறைக்காலத்தில் மட்டும் எனப் பிரித்துக் கொள்வதும் அவசியம்தானே. காய்கறிக் கடைகள், பழக் கடைகள் நாள்தோறும் திறந்திருக்கலாம். மளிகைக் கடைகளை காலை முதல் மாலைவரைத் திறக்கலாம். அதிக நாட்கள் கெட்டுப் போகாத மளிகைப் பொருட்களை வாரச் சந்தைகளில் விற்கலாம். துணிக்கடைகளை வாரத்தில் இரண்டு நாட்கள் - சனி ஞாயிறு மட்டுமே திறக்க வேண்டும். நகைக் கடைகளை வாரத்தில் ஒருநாள் மட்டும் திறப்பதே போதுமானது. வாரத்தில் ஒவ்வொரு நாளும் சில குறிப்பிட்ட பொருட்களை மட்டும் விற்பதற்கென்று வைத்துக் கொள்ளலாம். வணிகம் மிகவும் நுட்பமானதாக மாற்றப்பட்டு வருகிறது. தேவையில்லாத, ஒன்றுக்கும் உதவாத பொருட்களைக்கூட எப்படியும் ஏமாற்றி விற்றே தீருவது எனப் பெருங்கூட்டமே சுற்றிச் சுழன்று வருகிறது. ஒரு குறிப்பிட்ட பொருள் இல்லையெனில் வாழ்வே அவ்வளவுதான் என நினைக்கும்படிக்கு மனித மனங்கள் மாற்றப்பட்டு வருகின்றன. ஆடம்பரமான கட்டிடங்கள், அவசியமற்ற அலங்காரங்கள், மிகையான ஊழியர்கள், தேவையற்ற வசதிகள் என ஒருவர் வாங்கும் பொருளின் உண்மையான மதிப்பைவிட பல மடங்கு லாபம் வைத்து விற்கின்றன வணிக நிறுவனங்கள். அதீத விலைக்கு விற்பதிலும் போலிகள் நிறைத்துள்ளன.

வணிகத்திற்கான மின்சாரம் முறைப்படுத்தப்பட வேண்டும். வணிகத்திற்கான மின்சாரம் மடைமாற்றப்பட்டு உணவகங்களில் சமையலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். எரிவாயுவின் தேவை கூடிக்கொண்டே போகிறது. நாம் அதிக காலம் எரிவாயுவை நம்பியிருக்க முடியாது. கிட்டத்தட்ட பெரும்பாலான இந்திய வீடுகள்

எரிவாயுவிற்கு மாறிவிட்டன. உணவகங்கள் அனைத்தும் எரிவாயு கொண்டே சமைக்கின்றன. இந்தியா எரிவாயுவை உண்டுபண்ணுவதில்லை. மாறாக விலைக்கு வாங்குகிறது. வணிகத்தில் எப்பவுமே கொடுப்பவரின் கையை ஓங்கியிருக்கும். தேவை அதிகரிக்கும்போது, உற்பத்தி குறையும்போது, பற்றாக்குறை ஏற்படும். விலை அதிகரிக்கும். எப்போதுமே இந்தியா கவனத்தில் கொள்ளவேண்டியது அதன் ஒட்டுமொத்தக் குடும்பங்களை. இந்தியா எதற்கும் அடுத்தவரைச் சார்ந்திருக்கக்கூடாது. இந்தியரின் கைகள் ஒருபோதும் தாளக்கூடாது. நாம் விறகுக்கான மரங்களை அதிகம் வளர்க்க வேண்டும். உணவுக் கூடங்களிலும், விடுதிகளிலும், விழாக்களின் போதும், பொதுச் சமையலின் போதும் விறகு அடுப்பை பயன்படுத்த வேண்டும். விறகுக்காக காடுகளை அழிக்கக் கூடாது. விறகுக் காடுகளை உருவாக்க வேண்டும்.

நம் பிரச்சனைதான் இன்று உலகம் முழுதும். நாம் காணும் தீர்வு உலகமெங்கும் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும். உலகின் அத்தனை பிரச்சனைகளுக்கும் தமிழர் தீர்வுகண்டார் எனும் பெரும் பெருமை நம்மை வந்தடையவேண்டும். தமிழர் அறிவுத்திறன் கண்டு உலகம் வியக்கவேண்டும். நாம் பழமையும், புதுமையும், நவீனமும், அறிவியலும், இயற்கையும் கொண்டு இவ்வுலகை முற்றிலும் வேறானதாக, புதுமையானதாக, மனிதரும் பிறஉயிர்களும் மிகமகிழ்ச்சியாக வாழக்கூடியதாக மாற்றிக்காட்ட வேண்டும். நம்மால் முடியும். தமிழரால் முடியும். தமிழால் முடியும்.

நல்லோர்களே.. அரசியல்வாதி என்றாலே நம் காலத்தில் தவறான பொருள் கொள்ளும்படியாகிவிட்டது. அச்சொல்லுக்கு மாற்றாக சமூகநலவாதி எனும் சொல்லைப் பயன்படுத்தினால் என்ன. சமூக நலத்திற்குப் பயன்படுபவர், உழைப்பவர் சமூகநலவாதி. சமூகநல ஆர்வலர், சமூகநல விரும்பி, சமூகநலத் தொண்டர், சமூகநலவாதி போன்ற சொற்களையும் பயன்படுத்தலாமல்லவா.

மக்கள் நடந்தும், மிதிவண்டிகளிலும், சறுக்கு உருளைகளிலும் ஊர் சுற்றிப் பார்ப்பதை ஊக்கவித்தால் என்ன.

தமிழர் மிதிவண்டியில் தமிழகத்தைச் சுற்றிவர தனித்த சாலைவசதி இருக்கிறதா. மனிதர் நடந்தே இந்தியா முழுக்க சுற்றிவருமாறு ஒரு நடைபாதை,

புல்தரை உருவாக்கினால் என்ன. நாளொன்றுக்கு குறைந்தது முப்பது கி.மீ நடந்தாலே, ஒரு மாதத்திற்கு ஆயிரம் கி.மீ நடக்கலாமல்லவா. ஆறு மாதங்களில் இந்தியாவையே சுற்றிவிடலாமே. இதற்கிணையான ஒரு சுற்றுலா உலகில் இருக்குமோ.. உண்மையான இந்தியாவைக் காண, இந்தியாவின் ஒப்பற்ற இயற்கையழகைத் தரிசிக்க, இந்தியாவைப் புரிந்துகொள்ள, இந்தியர்களின் அன்பையும் நட்பையும் தெரிந்துகொள்ள, இந்தியாவின் ஆன்மீகக் கலாச்சாரத்தை கண்டறிய, இந்தியர்களை ஒன்றிணைக்க இதைவிடச் சிறந்த வழியுண்டோ. நடைபாதையெங்கும் தரமான தங்குமிடங்களும், உணவும், விலங்குப் பாதுகாப்பும், வழியெங்கும் சுத்தமான குடிநீரும் அளிக்க இந்திய அரசால் முடியும்தானே. இப்படி இந்தியாவைக் காலாறச் சுற்றிவரும் ஒருவருக்கு மகாவீரர் எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். பெண்களுக்கு பிரேவ் ஹார்ட- வீர இதயம் பட்டம் வெகுபொருத்தம் அல்லவா.

சிசேரியன் மூலம் அல்லாமல் இயல்பாக குழந்தைபெறும் பெண்ணுக்கு தமிழர்கள் நாச்சியார் எனும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கலாமே. குழந்தைப் பேறு மருத்துவமனைகளில் நிகழ வேண்டும். ஆனாலும் தமிழர் வீரமானவர் என்பதற்கு அடையாளமாய் இயல்பான குழந்தைப் பேற்றை ஊக்கவிக்கலாம். கிராமங்களில் ஆறுமாத இடைவெளியில் இப்படி இயல்பாக குழந்தைபெற்ற பெண்களையெல்லாம், தாய் சேயோடு குதிரை சாரட்டில் ஊர்வலம் அழைத்துச் சென்றால் பெண்ணுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும். தாய்களும் சேய்களும் அலங்கரிக்கப்பட்ட குதிரை சாரட்டுகளில் பவனி வர, ஊர்வலத்திற்கு முன்பு தமிழக பாரம்பரிய இசைகளோடு, ஆட்டம் பாட்டம் என மக்கள் மகிழ்ச்சியாய் வரும் காட்சி எவ்வளவு அற்புதமாக இருக்கும்.. ஊர்வலத்திற்கு முன்னால் மீன்கொடியும், அதற்குப் பின் நேர்கோட்டில் வில் அம்பு, புலிக்கொடியும், அதைத்தொடர்ந்து பல்லவ சிம்மக்கொடியும், இறுதியில் இந்தியக் கொடியும் ஏந்தி, தமிழர் பாரம்பரிய உடையோடு, வாளேந்தி, வீரநடைபோட்டு தமிழர் ஊர்வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியல்லவா. நம் வேந்தர் மரபை இதைவிடச் சிறப்பிக்க முடியுமோ. ஊர்வலத்தின் முடிவில் அருமையான விருந்துக்கு ஏற்பாடு செய்யலாமல்லவா. கிராமங்களில் மாதத்திற்கு ஒரு விருந்து கொடுத்தால் என்ன.

இயல்பாக அல்லாமல் சிசேரியன் மூலம் குழந்தைபெறும் தாய்மார்களுக்கு ஊர்வலம் இல்லையா. அவர்களும் நிச்சயமாகக் கலந்துகொள்வார்கள். அவர்கள் குதிரை சாரட்டின் பின்னே அலங்கரிக்கப்பட்ட கார்களில் அழைத்துவரப்படுவார்கள். குதிரை வண்டியில் மட்டுமே வேறுபாடு. மற்ற அனைத்து நடைமுறைகளும் ஒன்றே.

ஒவ்வொரு கிராமத்திற்கென்றும் தனித்துவமான ஒன்றை அடையாளம் கண்டால் என்ன. ஒரு கிராமத்தில் குறிப்பிட்ட இசையை முன்னெடுத்தால் என்ன. குறிப்பிட்ட இசைக்கருவியை வளர்த்தெடுக்கலாமல்லவா. குறிப்பிட்ட விளையாட்டு.. குறிப்பிட்ட விளைபொருள், ஆடை உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு.

ஒவ்வொரு கிராமத்திலும் ஆயிரம் தென்னை மரங்களை வளர்த்தால் என்ன. கோவில்களின் ஆயிரங்கால் மண்டபம்போல் கிராமத்திற்கு ஆயிரம்கால் தென்னை. அங்கே கிராமத்தின் சந்தையைக் கூட்டலாம். பொதுக்கூட்டங்கள் போடலாம். பல விதங்களிலும் பயன்படுத்தலாம். தென்னங்காய்கள் விழுவதைத் தடுக்க மேலே வலைப்பின்னல் போட்டுக் கொள்ளலாம்தானே. ஆயிரம் தென்னைகளை கிராமத்தார் கூட்டாகப் பராமரித்தால் நல்ல வளமல்லவா. எவ்வளவு வருமானம் வரும். கிராமத்தினர் கூட்டாக ஒரு மீன்குட்டை வைத்துக்கொண்டால் எவ்வளவு உபயோகமாக இருக்கும். கிராமத்தில் கூட்டுறவு முறையில் மண்புழு தயாரிக்கும் பண்ணை இருப்பது எவ்வளவு வசதி. இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் நூறு ஏக்கரில் பழத்தோட்டமும், பத்து ஏக்கரில் பூத்தோட்டமும் இருந்தால் எவ்வளவு செழிப்பு உண்டாகும். கிராமத்தில் நூறு ஏக்கரில் காய்கறித் தோட்டம் இருப்பது எவ்வளவு வருமானத்தைக் கொடுக்கும். கிராமத்தில் மரங்கள் வளர்ப்பது பலவிதத் தேவைகளையும் ஈடுசெய்யுமல்லவா. வீடுகள் கட்ட இரும்பைக் குறைத்து மரங்களை அதிகரிக்கலாம். எரிவாயு குறைந்துகொண்டே வருகிறது. குறைந்தது பொதுச்சமையலையாவது மரக்கட்டைகளை வைத்துப் பண்ணலாம். ஒரு தலைமுறையில் மரங்கள் பெருத்துவிடும். கிராமத்திற்கு ஒரு ஆயிரம் மரங்கள் இருப்பதால் எவ்வளவு நன்மை. கிராமம் குளிருமே. பொல்லாத ஏசி தேவைப்படுமா.

நம்மால் முடியாதா. முடியும் மனிதர்களே. நாம் பிரிந்திருக்கிறோம். நம்மிடையே புரிந்துணர்வு இல்லை. நமக்கு மனிதர்களை நேசிக்கத் தெரியவில்லை. நாம் எந்த மனிதரையும் நம்புவதில்லை. மனிதர் கற்பனையிலேயே காலத்தைக் கழிக்கிறார்.

மனிதருக்கு இன்னும் யதார்த்தம் புரியவில்லை. மனிதர் எல்லாவற்றிற்கும் யாரையோ எதிர்பார்க்கிறார். எவராவது உதவுவார் எனக் காத்திருக்கிறார். அவர் அறிவை நம்புவதில்லை. உண்மையில் கிராமத்தார் யாரிடமும் எதற்கும் கையேந்தத் தேவையே இல்லை.

இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் அதன் மக்கள்தொகைக்கேற்ப சிறப்பானதொரு பல்பொருள் அங்காடி நிறுவப்படவேண்டும். கிராமத்தினருக்குத் தேவையான அனைத்தும் அங்கே கிடைக்க வேண்டும். அங்காடியில் இல்லையெனில் உடனே அருகிலுள்ள நகரத்திலிருந்து கிடைக்குமாறு செய்ய வேண்டும். அங்காடி நிர்வாகம் கிரமத்தினரால் சுழற்சிமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஆய்வுக்கூடம் இருக்க வேண்டும். கிராமங்களில் தொலைநோக்கி வைக்கப்பட வேண்டும். அருமையான நூலகம் இருக்க வேண்டும். ஆயிரம் மக்கள்தொகை கொண்ட கிராமத்திற்கு சொந்தமாக ஒரு பேருந்து இருக்க வேண்டும். இரண்டு முன்று வேன்கள், நான்கைந்து மகிழுந்துகள், பத்து டிராக்டர்கள், சில டிப்பர்கள், ஒரு சேசிபி இயந்திரம், தேவையான வேளாண்கருவிகள், தொழிற்கருவிகள், அரைவை ஆலை, அரிசிஆலை, தச்சுப் பட்டறை, செங்கல் சூளை எனக் கிராமங்கள் தன்னிறைவு அடைய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வேளாண்மை அலுவலகம் இருக்கவேண்டும். ஊர்களின் வேளாண்மை தொடர்பான அத்தனை நடைமுறைகளும் அதாவது மண் பரிசோதனை, விதை, பூச்சிக் கட்டுப்பாடு, அறுவடை, தரப்பரிசோதனை, விற்பனை, சேமிப்பு போன்ற அனைத்தையும் இந்த அலுவலகம் மூலம் நிறைவேற்றலாம். கிராம நிர்வாக அலுவலகம் நவீனமாக, சிறப்பானதாக இருக்கவேண்டும். ஊராச்சித் தலைவர் மாளிகை ஒரு ஏக்கரில் அழகாகக் கட்டப்பட வேண்டும். கிராமத்திற்கு வரும் விருந்தினர் தங்குவதற்கு முகாம் - பேரக் போன்றதொரு அழகான பெரிய கட்டிடம் இருக்க வேண்டும்.

தமிழரின் அறுவடைத் திருநாளான பொங்கல் கொண்டாட நகரவாசிகள் தமிழகத்தின் அத்தனை கிராமங்களுக்கும் குடும்பத்தோடு அழைக்கப்பட வேண்டும். நகரத்தார் எந்தக் கிராமத்திற்குச் செல்வது என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். அதற்கேற்ப கிராமங்கள் சிறப்பாகத் தயாராக வேண்டும். நகரவாசிகள் குறைந்தது மூன்று நாட்களாவது கிராமங்களில் தங்க வேண்டும். கிராமங்களில் விழா

ஒருங்கிணைப்புக்குழு தலைமையில் வரவேற்புக் குழு, உபசரிப்புக் குழு, விருந்தோம்பல் குழு, இருப்பிடக் குழு, போக்குவரத்துக் குழு, மருத்துவக் குழு, அணிக்குழு, விளையாட்டுக் குழு, கலைக் குழு எனப் பல்வேறு குழுக்களும் திட்டமிடப்பட்டு, நகரத்தாரை அன்பால் திக்குமுக்காடச் செய்ய வேண்டும். அனைத்தும் அந்தந்த கிராமம் சார்ந்தே இருக்க வேண்டும். இசை நிகழ்ச்சி நடத்தினால் இசைப்பவர், பாடுபவர், ஆடுபவர் அனைவரும் அதே கிராமத்தினராக இருக்க வேண்டும்.

இப்படி ஒரு நிகழ்வு தமிழகத்தில் நிகழுமேயானால் தமிழர் பெருமை உலகத்தவர் மத்தியில் எவ்வளவு உயரும். இதுவன்றோ அன்பு. இதுவன்றோ அறிவு. இதை கொஞ்சம் கொஞ்சமாக பிற மாநிலத்தவர், வெளிநாட்டவர் என விரிவுபடுத்தலாமன்றோ.. பொங்கலுக்கு வரும் வெளிநாட்டவரை நாம் நன்றாகப் பார்த்துக்கொள்வோம்தானே. தமிழர் தம் அறிவால் உலகத்தையே ஒன்றிணைத்து விடலாமே. இப்படி உலகமெல்லாம் விருந்தோம்பல் எனும் உயர் அன்பால் இணைந்துவிட்டால், அயல்நாடென யாராவது படையெடுக்கக் கிளம்புவரோ. மக்கள்தான் விடுவரோ.

தீபாவளி கொண்டாட நகரத்திற்கு வரும் கிராமத்துக்காரர்களை நகரத்தாரும் விழுந்து விழுந்து கவனிப்பாரன்றோ. நகரத்தாரின் வானவேடிக்கையில் கிராமத்தார் சொக்கிப்போவாரல்லவா. நகரத்தார் அருமையான இனிப்புகள் செய்து கொடுப்பாரல்லவா. உற்சாகம் புரளும் இசையாட்டங்களுக்கு அழைத்துச் செல்வாரல்லவா. விடைபெறும்போது ஆரத்தழுவி அனுப்பிவைப்பாரல்லவா. ஊரில் போய் கதைகதையாய்ப் பேசுவாரே கிராமத்தார். கிராமத்தில் கரும்பு தின்றதையும், ஊரோடு சேர்ந்து பொங்கல் வைத்ததையும் நகரத்தாரால் மறக்க முடியுமா.

இந்தியக் கிராமங்களும் நகரங்களும் இப்படி ஒன்றிணைவது எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும் நண்பர்களே. மனிதர் ஒன்றுசேர்ந்தால்தானே அன்பும், அமைதியும், சமத்துவமும், சகோதரத்துவமும், நட்பும், சந்தோசமும், காதலும், மானுட அறமும் பெருகும்.

நகரத்தில் வீடுகள் கட்டும்போதே குளியலறையோடு கூடிய அழகானதொரு அறையை வெளிநாட்டு விருந்தினருக்கென்று கட்டலாமல்லவா. இந்தியா வரும்

வெயிநாட்டவர் ஓட்டல்களில் தங்கினால், அவருக்கு இந்தியர் பற்றியோ, இந்தியப் பண்பாடு பற்றியோ எப்படித் தெரியவரும் நண்பர்களே. ஏதோ ஒரு புத்தகத்தில் இந்தியர் விருந்தோம்பலில் சிறந்தவர் எனப் படித்திருப்பார். அது உண்மைதானா என அவர் அறிவது எப்படி. நம் வீடுகளில் தங்கவேண்டும், நம்மோடு பேசவேண்டும், நம்மோடு உண்ண வேண்டும், நம்மோடு பழக வேண்டும், நம்மோடு கோவில்களுக்கு வரவேண்டும், நம் கதைகளைக் கேட்க வேண்டும், நம் மொழியைத் தெரிய வேண்டும், நம்மைப் பற்றி அறிய வேண்டும். நம் குணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். நம்மிடையே அன்பு மலர வேண்டும். அப்போதுதானே உலகளாவிய நட்பும், சதோதரத்துவமும் வளரும். காதலாலும் உலகம் ஒன்றாகும்.

ஒரு மாநகரத்தில் ஒரு இலட்சம் மக்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கேற்ற கட்டமைப்புகள் உள்ளனவா. ஒவ்வொரு மாநகரத்திலும் ஒரு இலட்சம் டென்ட்டுகளாவது இருக்கவேண்டுமா இல்லையா. யாரேனும் நகரத்தில் வந்து தங்க விரும்பினால் அவர் எங்கு தங்குவார். குறைந்தபட்சம் அவருக்கு பத்துக்குப் பத்து அளவுள்ள ஒரு தற்காலிகக் கூடாரமாவது கொடுக்கவேண்டுமல்லவா. நகரத்தில் பத்தாயிரம் பேரும், மாநகரத்தில் ஒரு இலட்சம் பேரும் கூடும் மைதானங்கள் உள்ளனவா. பத்து இலட்சம் பேர் ஒரே இடத்தில் திரளுவதற்கேற்ற கட்டமைப்புகளை நாம் எப்போது உருவாக்கப்போகிறோம். மக்கள் தொகை கூடிக்கொண்டே போகிறதல்லவா. இன்னும் பத்து வருடம் கழித்து கோவை மாநகர் எப்படி இருக்கும். மும்பையின் வாகன நெரிசலைவிடக் கூடுமல்லவா. நாம் பாடம் கற்க மறுப்பதேன் தமிழர்களே. நமக்கு எதிலும் அக்கறையில்லை. எது குறித்தும் திட்டமிடல் இல்லை. நம் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். கோவை பற்றி நமக்கென்ன கவலை. சம்பாதித்தோமா, நன்கு சாப்பிட்டோமா, ஊர் சுற்றிப் பார்த்தோமா, உல்லாச வாழ்க்கையே அனுபவித்தோமா. கோவை எப்படி இருந்தால் நமக்கென்ன.

கோவையின் மழை நீரெல்லாம் எங்கு செல்கிறது. மாநகரெங்கும் வீடுகள். எல்லா இடத்திலும் சாலைகள். மழைநீர் பூமிக்குள் எப்படி இறங்கும். கோவைக்கான நீர் எங்கிருந்து கிடைக்கும். எவ்வளவு ஆழம்தான் நீர் துளை போடுவீர். இப்பவே சகதியாய் வர ஆரம்பித்துவிட்டது. இன்னும் சில வருடங்களில். கோவை மாநகரில் ஒரு ஏக்கர்

பரப்பளவில் குறைந்தது ஒரு ஆயிரம் குட்டைகள் தோண்டி மழைநீரைப் பாய்ச்சினால் நிலத்தடி நீர்மட்டம் உயருமா. வேறு ஏதாவது வழியை நாம் அறிந்திருக்கிறோமா.

கோவையில் ஆயிரம் ஏக்கரில் அழகானதொரு பூங்கா அமைக்க முடியாதா. எங்கு போவர் மக்கள். மாநகரில் பத்துப் பத்து ஏக்கரில் பத்துப் பூங்காக்கள் உருவாக்க முடியாதா. இடமில்லையென்று சொல்லமுடியுமா. பராமரிக்க ஆள் பற்றாக்குறை எனப் பேசமுடியுமா. மனசில்லை மனிதரே. இளைஞர் அல்லாடுகிறார். ரோடெல்லாம் சுற்றித் திரிகிறார். காதலர் நாகரிகமாக உட்கார்ந்து பேசுவதற்கு நல்லதொரு இடம் கொடுக்கக் கூடாதா காதலில் கரைகண்ட தமிழரே. மாநகரில் காதலர் பூங்கா, அறிவியல் பூங்கா, சிறுவர் பூங்கா, விளையாட்டுப் பூங்கா, முதியோர் பூங்கா, பூக்கள் பூங்கா, கேளிக்கைப் பூங்கா, இசைப் பூங்கா என விதவிதமான பூங்காக்கள் இருக்கவேண்டுமல்லவா. நான்கு இலக்கியவாதிகள் புல்தரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதற்கு, விவாதிப்பதற்கு கோவையில் எங்கேனும் இடமுண்டோ. தமிழருக்கு உலகத்தரமான இலக்கியம் எங்கிருந்து வரும். இலங்கியக்காரர்கள் ஆறுமாதமோ, ஒருவருடமோ தங்கி உலக இலக்கியம் படைப்பதற்கு வசதியாக, நீலகிரி மலையில் அழகானதொரு வாழ்விடம் அமைத்துப் பராமரிப்பது தமிழக அரசுக்கு அத்தனை செலவேறியதா. கோடைக்கானலில் ஒரு இலக்கிய விடுதி திறந்து வைப்பது தமிழக அரசுக்கு கட்டுபடியாகாதா. இலக்கியவாதி தங்குவதற்கு நடுக்கடலில் ஒரு கப்பலை நிறுத்தினால்தான் என்ன குறைந்துவிடப் போகிறது. அவர் படைப்பாளியல்லவா. உலகை முன்னால் காண்பவரல்லவா.. அவர் அறிவின் சொத்தல்லவா. அவருக்கு என்ன வேண்டும், என்ன வேண்டும் என்றல்லவா சமூகம் கேட்க வேண்டும். ஈராயிரம் வருடங்கள் தாண்டியுமா இலக்கியவாதி இரந்து திரிவது. இலக்கியக்காரருக்கு அழகானதொரு மாளிகை கட்டிக்கொடுத்தால் என்ன குறைந்துவிடப் போகிறது. ஒவ்வொரு இலக்கியவாதிக்கும் ஒரு அலுவலகமும், இரண்டு உதவியாளர்களும் கொடுத்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். நாட்டில் வேலை இல்லையாம். வேலைத் திண்டாட்டமாம். மனிதர்களே.. இன்னும் ஆயிரம் கோடிப்பேர் வந்தாலும் மண்ணில் வேலை இருக்கிறதய்யா. நமக்கு சிந்திக்கத் தெரியவில்லை. எப்படி வேலை கொடுக்கலாம் என எண்ணுவதே இல்லை. தமிழர் சதாகாலமும் எதிலடா பணம் அள்ளலாம் என்றே தேடித் திரிந்தால் எப்படி. இளைஞர்களையும், பெண்களையும், படித்தவர்களையும் இப்படியா வேலைக்காகத் தவிக்கவிடுவது.

எட்டு மணி நேர வேலையாம். மானுடரே.. நமக்கு இனி எட்டு மணிநேர வேலை அவசியமா. தேவையா. ஐந்து மணி நேரம் வேலை பார்த்தால் போதாதா. இந்தியத் திருநாட்டில் ஏதாவது ஆள் பற்றாக்குறை நிலவுகிறதா, மனிதர் எட்டு மணி நேரம் மாடாய் வேலை பார்க்க. நீர் எப்படி மாடாய் உழைக்கிறீர் என்பதை யாரும் அறியார் என நினைத்துக் கொண்டிருக்கிறீரோ. போதுமய்யா நீர் பட்டபாடெல்லாம். நாளொன்றுக்கு பகலில் ஐந்து மணித்துளிகள் வேலை பாரும். மாலையில் இரண்டு மணி நேரம் விளையாடும். இரவில் ஒரு மணி நேரம் இசை மீட்டும். பாடும். ஆடும். சேர்ந்திசையும். பேசிக்கொண்டிரும். இலக்கியம் பயிலும். அட சும்மானாச்சும் வானத்தைப் பாரும். நிலவை ரசியும். நேரம் போதவில்லையெனில் நட்சத்திரங்களையாவது எண்ணிக்கொண்டிரும். காதலியோடு பேசிக்கொண்டிரும். மனைவியைக் கட்டி அணைத்து கண்குளிர உறங்கும். நீர் பகல் முழுக்க வேலை பார்த்தது போதும். நீர் இரவெல்லாம் கண்விழித்து பணிசெய்தது கடந்த காலமாகட்டும்.

## ஒரு வேலை - ஒரு விளையாட்டு - ஒரு இசை

மனிதருக்கு இனி ஒரு வேலை, ஒரு விளையாட்டு, ஒரு இசை என்பதே தாரக மந்திரமாகட்டும். மனிதர் ஏதேனுமொரு வேலை செய்ய வேண்டும். அனைத்து வேலைகளுக்கும் கிட்டத்தட்ட சமமான ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும். பின் வேலை நுட்பத்திற்கேற்ப பல்வேறு வகைகளில் ஊக்கப் படிகள் கொடுக்கலாம். ஆரம்பத்தில் பத்தாயிரம் எனில், பத்து வருடங்களுக்குப் பின் இருபதாயிரமாக ஆக்கலாம். மாதந்தோறும் நூறு அதிகரிக்கலாம். வருடத்திற்கு ஆயிரம் கூட்டலாம். ஒருவர் வாங்கும் பத்தாயிரத்துக்குள் மகிழ்ச்சியாக வாழுமாறு விலைவாசி இருக்க வேண்டும். முப்பது வருடத்தில் முப்பதாயிரமாக மாற்றலாம். வேலைகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கலாம். நிறுவன லாபத்தில் பங்குத் தொகை கொடுக்கலாம். கடினமான வேலைகளுக்குபடி அதிகமாகக் கொடுக்கலாம். இனி மனிதருக்கு எந்த வேலையும் கடினமாக இருக்கப் போவதில்லை. எல்லாவற்றிலும் இயந்திரங்கள் வந்தாயிற்று. ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிட வேண்டும். எந்த ஒரு பொருளிலும் குறைந்தது பத்து வகைகளாவது இருக்கவேண்டும். ஒருபோதும் ஒன்றை மட்டுமே வைத்துக்கொண்டு அதை மட்டுமே வாங்குமாறு

நிர்ப்பந்திக்கக்கூடாது. பேரங்காடிக்கு அரிசிவாங்கச் சென்றால், அல்லது அரிசி வேண்டுமெனக் கேட்டால், குறைந்தது பத்து வகை அரிசிகளாவது தேர்ந்தெடுப்பதற்கு இருக்கவேண்டும். சர்க்கரை வாங்கினால்கூட இது இந்த ஊர் சர்க்கரையென்றோ, இந்த மாவட்டத்துச் சர்க்கரையென்றோ, இந்த ஆலைச் சர்க்கரையென்றோ தேர்ந்தெடுப்பதற்கு இருக்க வேண்டும். இவ்வாறு வணிகத்தில் சற்றே தரப் போட்டியையும் ஊக்குவிக்கலாம்.

மனிதர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு விளையாட்டைப் பழகவேண்டும். விளையாட்டில் ஏராளமான நன்மைகள் இருப்பதை இந்தியர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. விளையாட்டில் மனம் மகிழ்கிறது. மனம் இலகுவாகிறது. நட்பு உருவாகிறது. வெற்றிபெற வேண்டும் எனும் எண்ணம் உண்டாகிறது. தோல்வியை ஏற்கும் பக்குவம் வருகிறது. ஒத்துழைப்பு ஏற்படுகிறது. உடலும் மனமும் வலுவாகிறது. பணத்திற்கோ, விருதுக்கோ அன்றி மனிதர் மனமகிழ்வுக்காகவே விளையாடவேண்டும்.

அனைத்து மனிதரும் ஏதேனும் ஒரு இசைக்கருவியை இசைக்கத் தெரிந்திருக்க வேண்டும். அனைவரும் இசை கற்றுக்கொள்ள வேண்டும். மனித மனத்தை வசப்படுத்தும் ஆற்றல் இசைக்குண்டு. மனித மனத்தை அமைதியாக்குவதில் இசைக்கு சிறந்த பங்குண்டு. மனிதர் இசையால் இணைய வேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் மனிதர் கூட்டாக இசைக்க வேண்டும். மனிதர் ஒன்றிணைந்து ஒத்திசைவாக இசைப்பதற்கு இணையேயில்லை.

மனிதர் பாடவேண்டும். ஆடவேண்டும். ஆடுவதில் ஆண்கள் ஒற்றையாக ஆடக்கூடாது. பெண்களுக்கே தனி நடனம் என்பதை விதியாக்க வேண்டும். ஆண்கள் எதிலும் ஒரு ஒத்திசைவை உருவாக்க வேண்டும். குறைந்தது இரு ஆண்களாவது ஒத்திசைவாக ஆடிக் காண்பிக்க வேண்டும். ஆண்கள் குழுவாகவும் பெண்கள் தனித்தும் ஆடலாம். பெண்கள் குழுவாகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தலாம்.

உண்மையில் எம்காலத்து மனிதருக்கு ஆடவும் தெரியவில்லை, பாடவும் தெரியவில்லை. யாம் எமது கிராமத்தில் மனிதர்கள் சந்தோசமாக ஆடிப் பார்த்ததே இல்லை. யாராவது பாடினார்களா என்றால் அதுவும் இல்லை. இசையைப் பற்றிய சிறு புரிதல்கூட கிராமங்களில் இல்லை. இது பிராமணர்களின் பெருந்தோல்விகளில் ஒன்று.

எந்தப் பிராமணரும் கிராமங்களுக்கு வரவேயில்லை. மாறாக அயல்நாடுகளுக்கே பறந்தார். பறக்கிறார்.

பிராமணருக்காவது ஆடத் தெரிந்திருக்கிறதா. ஒரு பத்து பிராமண ஆண்களால் ஒத்திசைவாக ஆட முடியுமா. பெண்களால். ஏதாவது பயிற்சி உண்டா. பஜன்களிலும், நாமசங்கீர்த்தனங்களிலும் எந்த லட்சணத்தில் பிராமணர் ஆடுகிறார் எனத் தெரியாதா. ஏன் தமிழருக்கு எளிமையான நடன அசைவுகள் கூடத் தெரிந்திருக்கவில்லை. காசுக்குத்தான் அனைத்தையும் கற்றுக் கொடுப்பீரா. மனிதர் ஒவ்வொருவருக்கும் இருபது எளிய நடன அசைவுகள் கற்றுக்கொடுத்தால் அதை வைத்து எவ்வளவு ஆனந்தமாக ஆடுவார். ஒருவர் தனித்து சிறப்பாக ஆடுவதைக் காட்டிலும் பத்துப் பேர் ஒத்திசைவாக ஆடுவது மேலல்லவா. ஆயிரம் பேர் சேர்ந்தாடுவது கண்கொள்ளாக் காட்சியல்லவா.

தமிழருக்கென்று நடன வகைகள் உள்ளனவா. நாம் கட்டிக்காத்து வந்துள்ளோமா. இல்லையெனில் தமிழ் நிலமெங்கும் தேடி ஒரு பத்து நடன வகைகளையாவது நமக்கான நடனங்களாகத் தேர்வு செய்யலாமல்லவா. தமிழர் நடன வகையில் படுகா நடனத்தையும் சேருங்களேன். எவ்வளவு ஆனந்தமான நடனம். என்ன ஒரு இசைத்துள்ளல். எத்தனை அருமையான ஒத்திசைவு.

தனி மனிதர் வணிகம் செய்யக்கூடாது. அனைத்துவிதமான வணிகங்களும். கூட்டாகவே நடைபெற வேண்டும். கூட்டில் பெண்களுக்கும், பிற மதத்தாருக்கும் இடமிருக்க வேண்டும். குறைந்தது பத்துபேர் இணைந்தே வணிகத்தைத் துவக்க வேண்டும். பத்துப் பேரில் ஒரேயொரு நல்லவர் இருநதால்கூட தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. பத்து பின்னர் 100, 1000 என விரிவடையலாம். பத்து பேர் கூட்டாக உற்பத்தி சார்ந்த தொழில் தொடங்க விரும்பினால் ஒரு ஏக்கர் நிலமும் மூலதனக் கடனும் அரசு அளிக்க வேண்டும். அதில் அவர்கள் இலாபம் பார்த்து தொழிலைப் பெருக்க வேண்டும். அனைத்து வணிகத்திலும் அறமிருக்க வேண்டும். இலாபம் குறைவான அளவே இருக்க வேண்டும். அரசுக்கு வரி வணிகத்திலிருந்து மட்டுமே கிடைக்க வேண்டும். அரசு அனைத்துத் திட்டங்களையும் மக்கள் உழைப்பைக் கொண்டே கட்டமைக்க வேண்டும். அரசுக்கு பணம் ஒரு பொருட்டாக இருக்கக்கூடாது.

தமிழர்கள் பெரியதாகக் கனவு காணவேண்டும். பத்து காலணி வியாபாரிகள் ஒன்றாக இணைந்து பெரியதொரு காலணி வியாபாரத்தை முன்னெடுக்க வேண்டும். ஒரு வியாபாரிக்கு 100 சதுரஅடி எனில் 10பேருக்கு 1000 சதுர அடி இடத்தை பெருவணிக இடங்களில் அரசு கொடுக்க வேண்டும். இப்படியே அனைத்திலும் பத்துப் பத்துப் பேராக இணைந்து கொள்ளலாம். பத்து மளிகை வியாபாரிகள் இணைந்து பெரியதொரு அங்காடியைத் தொடங்கலாம். வணிகத்தில் தலைமுறை கூடாது. எந்த வேலையிலும் பத்து வருட அனுவத்திற்குப்பின் மேலேற வேண்டும். இருபது வருட அனுபவத்தில் ஆசிரியராக மாற வேண்டும். முப்பது வருட அனுபவத்தில் புதுமையைக் கண்டறிய வேண்டும். அறிஞராக மாறவேண்டும்.

மனிதர் பழைய பஞ்சப்படியெல்லாம் மறந்தால் நன்றாக இருக்கும். ஆணுக்கு உணவுப் படியும், பெண்ணுக்கு மேக்கப்படியும் கூடுதலாகக் கொடுப்பது பற்றி மனிதர் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது. குழந்தைகளுக்கென கேளிக்கைப் படி, முதியோருக்கு சுற்றுலாப்படி, மாணவருக்கு வாசிப்பு படி குறித்தெல்லாம் நாம் யோசிக்க வேண்டும்.

மாத ஊதியம் பத்தாயிரமாகக் கொண்டு, ஒரு கிலோ ஆட்டிறைச்சி 100 ரூபாய்க்கு விற்கலாம்தானே. கோழி ஒரு கிலோ முப்பது ரூபாய். ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ30. சீனி ரூ10. எண்ணெய் ரூ30. பால் லிட்டர் ரூ10. கால் கிலோ கடலை மிட்டாய் ரூ10. முந்திரி 100 கிராம் ரூ20. எரிவாயு சிலிண்டர் ரூ100. அரிதான பொருளுக்கு விலை வைக்கக்கூடாது. அனைவருக்கும் கிடைக்குமாறு பங்குவைக்க வேண்டும்.

அரசுகள் தரமான சாப்பாட்டு அரிசி 20 கிலோ, இட்லி அரிசி 10 கிலோ, உளுந்து 2 கிலோ துவரம் பருப்பு, பாசிப்பருப்பு தலா 1 கிலோ, நாட்டுச் சக்கரை 1 கிலோ ஒவ்வொரு குடும்பத்துக்கும் விலையில்லாமல் கொடுக்கலாமே. அரசின் பொது அங்காடியில்தான் தரமில்லாமல் உள்ளது. வெளியில் வாங்கிக்கொள்ளச் சொல்லலாம். மனிதர்கள் முயன்றால் தரமான அரிசி வகைகளை அரசு தரும்படிச் செய்யலாமல்லவா.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்தாயிரம் ரூபாய் கடன் அட்டையை அரசாங்கம் கொடுத்துவிட்டால் போதுமல்லவா. பொருட்கள் வாங்கும் தோறும் பணம் குறைந்து

கொண்டே வரும். எதற்கெல்லாம் செலவிடுகிறார் என்பதும் எளிதாகத் தெரிந்துவிடும். ஒருவேளை மொத்தப்பணமும் தீர்ந்து விட்டால், அரசு ரூ1000 கடன் கொடுக்கலாம். அன்னார் ஏதேனும் சிறப்பு வேலை செய்து கடனை அடைக்குமாறு செய்யலாம். ஒரு மாதத்திற்குள் கடனை திருப்பாவிட்டால் அடுத்த மாத ஊதியத்திலிருந்து ஆயிரத்தைப் பிடித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதருக்கும் தினமும் பாக்கட் மணி - கைச்செலவு பணம் கொடுத்தால் அரசின் கருவூலம் காலியாகிவிடுமா. இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் சமூகம் கஜானாக்களை சார்ந்திருப்பது. பணம் என்பது வெறும் எண்தானே. பெரியவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.50 கைப்பணமாகத் தரலாம். இளைஞர்களுக்கு தினமும் ரூ.30 கொடுக்கலாம். பள்ளிச் சிறார்களுக்கு நித்தமும் ரூ. 20 கொடுக்கலாம். முன்று வயது குழந்தைக்கும் தினமும் ரூ.10 கொடுக்கலாமே. பெற்றோரை கெஞ்சாமால் அது பாட்டுக்கு தின்பண்டங்கள் வாங்கிக்கொள்ளுமல்லவா. ஒரு குழந்தைக்கு இதைக்கூட கொடுக்க முடியாமலா சமூகம் இருக்கிறது. குடும்பத்தில் இரு பெரியவர்களுக்கும் தினப்படியாக ரூ.100 கிடைத்துவிடுமே. இதை வைத்து குடும்பத்தின் சில்லறைச் செலவினங்களை சரிக்கட்டலாமல்லவா.

சாம்பாதிப்பதற்கு ஒரு வழியும் இல்லை என்பவருக்குக்கூட சமூகம் வேலை கொடுக்கலாமே. மனிதர் தெருவைக்கூட்டி சுத்தம் செய்வதற்கு ரூ.50 கொடுத்தால் தகுமல்லவா. காலையில் இரண்டு மணிநேரம் போதுமல்லவா. நகரத்தில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கலாம். துப்புரவு செய்வது, கூட்டுவது சேவையில் வருமென்றாலும், சேவைக்கும் முடிந்தவரை சிறிதாவது பணம் கொடுக்கவேண்டும் மனிதரே..

மனிதர் சேவை செய்ய விரும்புகிறார். ஆனாலும் அதற்கான வழிகள் தெரியவில்லை. சமூகம் அனுமதிப்பதும் இல்லை. மாணவர்கள் சேவையாக தினமும் அரசு மருத்துவமனையை சுத்தப்படுத்த முடியாதா. கோவையில் எத்தனை கல்வி நிலையங்கள் இருக்கின்றன. நாட்டு நலப் பணித் திட்டம் என வைத்திருக்கிறாரல்லவா. ஒரு நாளைக்கு ஒரு கல்லூரி என மருத்துவமனையைச் சுத்தம் செய்தால் அரசின் மருத்துவமனை நாறுமா. குப்பைத் தொட்டியாய்க் காட்சியளிக்குமா. நடப்பதற்கே அருவருப்பாய்க் கிடக்குமா. நூறு மாணவர் வந்தால் ஒரு மணி நேரத்தில்

மருத்துவமனையை பளிச்சென ஆக்கிவிடுவாரன்றோ. நீதி மன்றங்களை யார் சுத்தம் செய்வது. அரசு அலுவலகங்கள் எப்படியான சுத்தத்தில் இருக்கின்றனவென்று பார்க்கிறோம்தானே. சுத்தமறியாத் தமிழர்கள். தனிப்பட்ட முறையில், சொந்த வாழ்க்கையில் தமிழர் படுசுத்தம். அதுவே பொதுவெனில் அனைத்தும் குப்பை. பேச்சிலும் சுத்தமில்லை தமிழரே.

## சுத்தமான இந்தியா எப்போது

பெருமைமிகு மாணவர்கள் காசுக்காக சமையல் கூடங்களிலும், பந்தி பரிமாறியும், எடுபிடி வேலைசெய்தும் திரிவதை தமிழ்ச் சான்றோர் கவனிக்கவில்லையா. மாணவ சமுதாயம் தெருக்கூட்டுவதை, சுத்தம் செய்வதை அசிங்கமாய்ப் பார்ப்பதுபோல் தெரியவில்லையே. அவர் சேவையை அறிந்தே இருக்கிறார். மானுடரே.. மாணவ சமுதாயத்தைப் பயன்படுத்திக் கொள்ளும். அவர் உழைப்பைச் சுரண்டாதீர். மாணவர் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும்.

மொய் விருந்து வைத்து பணம் சம்பாதிக்கும் தமிழர்களே, மொய் வகையில் அதிகபட்சமாக ஒருவர் ரூ100 மட்டுமே செய்ய வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினால் என்ன.

அழகான சேலை ஒன்றை ரூ100க்கு நம்மால் விற்கமுடியாதா. அழகுமிக்க பட்டுச்சேலையை ரூ1000க்கு விற்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். பெண்களுக்கு சேலை சுடிதார் போன்று உடைகளையே பரிசாகக் கொடுத்தால் நல்லதுதானே. பெண்கள் சிறப்பாக உடை உடுத்த விரும்புகிறார்களல்லவா. ஆண்களுக்கு பரிசாக உணவுக் கூப்பன்கள் கொடுக்கலாமே. வயிறுபுடைக்க சாப்பிடுவார்களல்லவா.

தமிழ்ச் சமூகம் திருமணத் தம்பதிக்கு வீடு, இருசக்கர வாகனம், வீட்டு உபயோகப் பொருட்களோடு, தேனிலவு டிக்கெட்டும் பரிசளிக்க வேண்டும். இளைஞர்கள் படிக்கும்போது உடல் உழைப்புக்கும் பழக வேண்டும். 15 வயதிலிருந்து 20 வயதுவரை இலகுவான வேலைகளுக்குப் பழகலாம். இந்த உழைப்பை ஆதாரமாகக்கொண்டு அவர்களது திருமணப் பரிசுகள் அமைய வேண்டும். சிறப்பாகப் படிக்கும் மாணவருக்கு ஊக்கத்தொகை அளிக்கலாம். கடினமான பாடம் படிப்பவருக்கு கூடுதல் சலுகைகள் அறிவிக்கலாம். பள்ளிகளில் கையால் பார்க்கக்கூடிய

வகையிலான சிறுசிறு தொழில்களை மாணவர்களிடம் அளிக்கலாமே. படித்து முடிக்கும்போது அவருக்கு ஒரு வேலையும், வீடும், வாகனமும் தயாராக இருக்க வேண்டும் தோழர்களே. படிக்கும் காலத்தில் மாணவ சமுதாயம் எது குறித்தும் கவலை கொள்ளலாகாது. அவர்கள் பேச்சும், சிரிப்பும், விளையாட்டும், வேடிக்கையும், இசையுமாக, சிறிது படிப்புமாக, பள்ளிகளில் கல்லூரிகளில் வலம்வர வேண்டும். படிப்பவர் நிறைய ஊரும் சுற்ற வேண்டும்.

ஒரு மருத்துவ மாணவர் எவ்வளவு படிக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா. உடலைப் பற்றிய அத்தனை அறிவையும் அறிய எந்தளவுக்குப் படிக்கவேண்டும் என்பதை மனிதர் உணர்ந்திருக்கிறாரா. மக்களின் நோய் தீர்க்கவல்லவா அவர் அத்தனை கவனமாக, கடினமாகப் படிக்கிறார். வாழ்நாளெல்லாம் சமூகத்திற்கு பெரும் சேவையாற்றப் போகும் நம் மருத்துவருக்கு, ஐந்தரை வருடப் படிப்பின் இறுதியில் ஒரு அழகான வீடொன்று பரிசளிக்க முடியாதா. அருமையான காரொன்று கொடுக்கலாம்தானே. அப்படியே கார் ஓட்டுனரும், சிறு வேலைகள் செய்ய ஒரு உதவியாளரும் கொடுப்பதுதானே முறை. ஏன் நம்மிடம் மனித சக்தியில்லையா. 140 கோடி மக்களை வைத்துக்கொண்டு நமக்கு என்னதான் வேலை.. கல்லூரி மாணவரை பகுதி நேரமாக மருத்துவருக்கு உதவியாளராகப் பணி செய்யச் சொன்னால் தவறாகுமா. மாணவருக்கும் வேலை. மருத்துவருக்கும் உதவி. சமூகத்திற்கும் சேவை. மக்கள் பிணிகளை நீக்கும் மருத்துவர், என்ன நோய், எதனால் வந்தது, எப்படிக் குணமாக்குவது என்று சிந்திக்க வேண்டுமா அல்லது அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களை நினைத்துக்கொண்டே நோயாளியைப் பார்க்கவேண்டுமா. மருத்துவர் மக்கள் சேவை செய்பவரெனில், மக்களும் மருத்துவருக்குச் சேவையாற்ற வேண்டுமல்லலா. மருத்துவரை, பொறியாளரை சமூகம் மதிக்க வேண்டும். அவர்களுக்கு நிறைவான வாழ்க்கை வசதிகளும் அளிக்க வேண்டும்.

மனிதரே.. அறிவைச் சுமப்பது எளிதன்று. அறிவை முன்னெடுப்பவர் அடிப்படையான வாழ்க்கைத் தேவைக்கு ஒருபோதும் சிரமப்படக்கூடாது.

விருதுகள் கொடுப்பதில் மனிதர்கள் ஏன் இவ்வளவு கஞ்சத்தனமாக நடந்துகொள்கிறார்கள். அட விருதுகளை அள்ளிக் கொடுக்க வேண்டியதுதானே. உத்தமன், முதல்வன், ஆயிரத்தில் ஒருவன், பாண்டியன், விக்ரமன், சேரகுல திலகன்,

சோழப் பெருந்தகை, மாமல்லன், மயன், ஐயன் என தமிழகத்தில் பெயா்களுக்கா குறைச்சல். ஒருவா் கவிதைப் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளாரா. இந்தா பிடி குறுங்கவி பட்டம். கவிதைப் புத்தகம் சிறப்பாகப் பேசப்படுகிறதா. வாங்கிக்கொள் வளா்கவி பட்டம். கவி, உயா்கவி, அருங்கவி, பெருங்கவி, மகாகவி, வான்கவி என எவ்வளவு பட்டங்களை அள்ளி இறைக்கலாம். தமிழகத்திலுள்ள சங்கக் கவிகள் அத்தனை பேர்களிலும் விருதுகள் கொடுக்கலாமே.

பொதுச்சேவையில் சிறப்புற்று விளங்குபவருக்கு உத்தமா் பட்டம் கொடுக்கலாம். கழிவறைகள் சுத்தப்படுத்துதல், தெருவைச் சுத்தம் செய்தல், முடிவெட்டுதல், மருத்துவமனைகளில் சுத்தம், துணிவெளுத்தல், உலா்த்துதல் போன்ற சேவைகள் செய்தல், பொதுக்கட்டிடங்களைப் பராமரித்தல், ஆடு மாடு மேய்த்தல், கால்நடை பராமரித்தல், பண்ணை வேலைகள், பொது சமையல் உதவி, முதியோா் இல்லங்களில் பணி செய்தல், வாகனம் ஓட்டுதல் உள்ளிட்ட உதவிகளைச் சேவையாகக் கருதலாம். இவற்றில் ஏதேனும் ஒன்றில் நூறு மணித்துளிகள் சேவையாற்றுபவருக்கு சேவகா் எனும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கலாம். இவ்வாறு சேவகா் பட்டம் பெறுவதையே சமூகநலவாதி ஆவதற்கான அடிப்படைத் தகுதியாகக் கொள்ளவேண்டும். ஏதேனும் ஒன்றில் உதாரணமாக ஒருவா் தெருவைச் சுத்தம் செய்தலை தொடா்ந்து செய்தாரானால் அவரைக் கா்மவீரா் எனப் பெருமைப்படுத்த வேண்டும். சமூக சேவையை, மக்கள் சேவையை தவம்போல் முன்னெடுப்பவரை உத்தமா் எனச் சிறப்பிக்கலாம்.

நாம் ஏராளமான பரிசுகளை உருவாக்க வேண்டும். இலக்கியங்களுக்கு, விளையாட்டிற்கு, சமூகப் பணிகளுக்கு, அறிவியலுக்கு, கைத்தொழில்களுக்கு, கலைகளுக்கு, குழந்தைகளுக்கு, பெண்களுக்கு, மருத்துவா்களுக்கு, பொறியாளா்களுக்கு, மாணவா்களுக்கு, ஆசிரியா்களுக்கு என நூற்றுக்கணக்கான விருதுகளை உருவாக்க வேண்டும். உலகமெங்கும் ஆயிரக்கணக்கான விருதுகளைக் கொடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவா் பெயரில் விருதுகள் உருவாக்கி, நன்றாகப் படிக்கும் பள்ளி மாணவா்களுக்கு பரிசுகள் கொடுக்கலாம். மாவட்டம் தோறும் ஆயிரம் பரிசுகள் கொடுக்கலாம். பரிசு கொடுப்பது ஊக்கமாகவும்,

அங்கீகரமாகவும் அமையும். ஆரோக்கியமான போட்டி உருவாகும். போட்டியால் திறமை வெளிப்படும். அறிவு மேலும் முன்னோக்கிப் பாயும்.

பரிசுகள் வாயிலாக நம் முன்னோர்கள் அத்தனை பேரையும் நினைவில் கொள்ள வேண்டும். நம் முன்னோர்களின் ஈடில்லாத் தியாகமும், அன்பும், அறிவும் நம்மால் நினைவுகூறப்பட வேண்டும். நம் இலக்கியக்காரர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், அரசியல் தலைவர்கள், அறிவியல் அறிஞர்கள், ஆன்மீகத் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள் என அனைத்து முன்னோர்கள் பெயரிலும், சங்கம் சார்ந்து தொடர்ந்து வந்துள்ள நம் இலக்கிய மரபுக்காரர்கள் பெயரிலும், நாம் பலவித விருதுகளை உருவாக்கி, அவர்களை நாம் என்றும் நினைவில் கொள்ளுமாறு செய்யலாம். சாதனைகள் படைத்த பெண்கள் பெயரிலும் நாம் ஏராளமான விருதுகளைத் தரவேண்டும்.

பரிசுத்தொகை குறைவாகக்கூட இருக்கலாம். தொகை முக்கியமல்ல. பெரும் பதவியிலிருந்தும் பதவியைப் பணம் சாம்பாதிக்கும் வழியாகக் காணாமல், மக்கள் சேவை எனப் பணியாற்றிய திரு. கக்கன் பெயரில் அரசியலாளர்களுக்கு, சேவையாளர்களுக்கு விருது கொடுக்கலாம்தானே. ஒவ்வொரு மனிதரையும் ஏதேனுமொரு பரிசு பெற்றவராக ஆக்கிக் காட்டவேண்டும். ஒவ்வொரு பரிசையும் ஆயிரம் பேருக்குக் கொடுத்தால் குறைந்தாவிடப் போகிறது மனிதர்களே.

விருதுகள் தகுதியானவருக்குப் போய்ச் சேராதோ. அரசியலாளர்தான் அனைத்தையும் கெடுத்து வைத்திருக்கிறார். கட்சி பார்த்து, உறவு பார்த்து விருது கொடுப்பது, உறவுக்காரரை பெரிய பீடத்தில் அமர வைப்பது, அதிகாரத்தால் அனைத்தையும் வளைக்கப் பார்ப்பது. அதிகாரவர்க்கம் அரசியலாளருக்கு ஒத்தூதுவதும் அதிகம். நாளைக்கு பணிமாறுதலுக்கோ, உறவினர் டெண்டருக்கோ அங்கே போய்த்தானே தலையைச் சொரிய வேண்டும். அவரைப் பகைத்துக் கொள்ளமுடியுமா.

கவிதைக்கென்று அரசியல் கலப்பற்ற ஒரு விருதுக்குழு அமைக்கலாமே. தமிழில் கதை, கவிதை, நாவல் என எந்தப் படைப்பு வெளியானாலும் தமிழச் சங்கத்திடம் ஏற்புப்

பெறுமாறு உண்டாக்கினால் என்ன. மதுரையில் தமிழ்ச் சங்கம் எனும் பெரியதொரு அமைப்பை உருவாக்கலாமே. தமிழில் வெளியாகும் அத்தனை படைப்புகளையும் திறனாய்வு செய்யும் அமைப்பாக தமிழ்ச் சங்கம் செயல்படலாம். தமிழ்ச் சங்கம் புத்தகங்களுக்கு முன்னுரை வழங்கலாம். நட்சத்திரக் குறியீடு அளிக்கலாம். தரப்படுத்தலாம். பரிந்துரைக்கலாம். தமிழகத்தில் புத்தகங்களை திறனாய்வு செய்வதற்கு தமிழறிஞர்களே இல்லையா. ஒவ்வோரு புத்தகத்தையும் பத்து தமிழறிஞர்களை வாசிக்கச் செய்து, அவர்களது கருத்துக்களை வெளியிடலாமே. பேராசிரியர்களுக்கு என்னதான் வேலை. சும்மா வம்புபேசித் திரிவதும், புரணி பேசிச் சுற்றுவதுமாவது குறையுமல்லவா.

தமிழகத்தில் கடற்கரையிலிருந்து ஐந்து கி.மீ. தள்ளியும், மலைச்சரிவிலிருந்து பத்து கி.மீ தள்ளியுமே குடியிறுப்புகள் இருக்கவேண்டுமென சட்டமியற்றினால் என்ன. யாரேனும் பெரிதாக எழுதவோ, ஊன்றிப் படிக்கவோ, ஆழ்ந்து சிந்திக்க விரும்புவதாகவோ, யோகம் பயில்வதாகவோ, தனிமையில் இருக்க விரும்புவதாகவோ சொன்னால் அவருக்கு மலைச்சரிவில் பத்துக்குப் பத்து எனும் அளவில் ஒரு தென்னங்குடிசை கட்டிக்கொடுப்பது தவறாகுமா. நாம் ஏன் இது குறித்தெல்லாம் யோசிப்பதே இல்லை. ஏன் எப்போதும் பணமெப்படி சம்பாதிக்கலாமென்றே மனிதர் நினைக்கிறார். ஏன் தமிழகத்தில் தரமான தலைவர்கள் உருவாகவில்லை அறிவுடையோரே.

தமிழகத்தின் ஒட்டுமொத்தத் தேவைகள் என்னென்ன. நம்மிடம் உள்ளனவா. நாம் வைத்திருக்கிறோமா. தமிழகத்திற்கு எவ்வளவு பேருந்துகள் தேவைப்படும். ஐம்பதாயிரம் போதுமா. நாம் வைத்திருக்கிறோமா. நம்மால் பேருந்துகள் தயாரிக்க முடியுமா. அரசு ஏன் ஆயிரக்கணக்கான பேருந்துகளை வாங்குகிறது எனப் புரியவில்லை. அரசு ஏன் பேருந்துகளை உருவாக்க மறுக்கிறது. நம்மால் உருவாக்க இயலாதா. ஏன் நாம் நூறு பேர் பயணிக்கும் பேருந்துகளை தயாரிக்கக்கூடாது. சாலைகளை நேராக்கி மதுரை - சென்னை போன்ற நெடுந்தொலைவு வழித்தடத்தின் அனைத்துப் பேருந்துகளையும் நூறு பேர் என மாற்றினால் என்ன. இரண்டு மணிநேரத்திற்கு அதிகமான அத்தனை பயணங்களையும் சொகுசுப் பேருந்தாக வைத்துக்கொள்ள முடியாதா. பேருந்து நிலையத்திற்கு வந்தவுடன் ஒருவர் எந்த

ஊருக்குப் போகிறார் என்பதை அறிந்து கொண்டால் என்ன. பயணிகளுக்கேற்ப பேருந்துகளை இயக்கினால் என்ன. பாதி நிறைந்து விட்டால் போதும் என பேருந்தை இயக்கி, வழியிலுள்ள ஊர்களில் மக்களை ஏற்றிக்கொள்ளக் கூடாதா. இவ்வளவு நவீனம் வந்தபின்னும், விரைவான தகவல் தொடர்பை எட்டியபின்னும் இது சாத்தியமாகாதா. கோவையிலிருந்து மதுரை செல்லும் பேருந்தில் பல்லடத்தைச் சேர்ந்த ஒருவர் பதிந்து அங்கிருந்து ஏறிக்கொள்ள இயலாதா. பல்லடம் பேருந்து நிலையத்தில், கோவையிலிருந்து வரும் பேருந்தில் எத்தனை இருக்கைகள் காலியாக இருக்கின்றன என்பதை அறியும் வசதி இருக்கிறதா. இல்லையெனில் பல்லடத்தில் பேருந்து நிலையம் எதற்கிருக்கிறது. பழக்கடையும் பரோட்டாக் கடையும் வைப்பதற்கா தமிழரே. பேருந்துகளில் இடம்பிடிக்க மக்கள் அலைமோதுகிறார்களே, இதை எப்படித் தீர்க்கலாம் என ஒரு தமிழர்கூடவா சிந்திக்கவில்லை. நவீனத் தகவல் தொடர்பில் அனைத்தும் சாத்தியமன்றோ. கோவையிலிருந்து மதுரைவரை கிட்டத்தட்ட ஐந்து மணிநேரம் ஒரு மனிதர் நின்றுகொண்டே பயணிக்கிறாரே. நமக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா தமிழர்களே. அவர் விதி அவர் நின்றுகொண்டே வருகிறார். அப்படித்தானே. அதை மாற்ற நீர் என்ன செய்தீர் அறிவுடையீரே. உமக்கு இருக்கை கிடைத்தால் போதுமா. எல்லோருக்கும் ஏன் இருக்கை இல்லை.

கோவை-மதுரை வழித்தடத்தில் 50 பேருக்கான பேருந்தில் 101 பேர் பயணிக்கிறார். நடத்துனர் அவரது நண்பரிடம் அலைபேசியில் பேசுகிறார். அவர் வண்டியில் 102 பேராம். அரசுக்கு வருமானம் ஒருநடையில் சுமார் 16000 ரூபாய். ஒரு பேருந்து நாளொன்றுக்கு ஏறக்குறைய 30000 ரூபாய் சம்பாதிக்கிறது. அப்படியெனில் ஒரு பேருந்தின் மாத வருமானம் எவ்வளவு. எல்லா நாட்களும் கூட்டம் சேராவிட்டாலும் பாதியாவது வருமானம் கிடைக்குமல்லவா. எங்கே போகிறது இவ்வளவு வருமானமும். ஒருவர் ஓட்டுனராகப் பணியில் சேருகிறார். கிட்டத்தட்ட பணிக்காலம் முழுவதுமே அவர் ஓட்டுனராகவே இருக்கிறார். இதுதான் அறிவுடைமையா சான்றோர்களே. முப்பது வருடப் பணிமுடித்த ஓட்டுனரின் மாத ஊதியம் எவ்வளவு இருக்கும். அதே வேலையை இருபது வயது இளைஞர் செய்தால் அவருக்கு எவ்வளவு ஊதியம் தரவேண்டியதிருக்கும். முப்பது வருடங்களுக்கும் மேலாக ஒருவர் ஏன் ஓட்டுனராகவே இருக்கிறார். அவர் வாழ்வே அவ்வளவுதானா. பேருந்து அனுபவத்தை வைத்து அவருக்கு பேருந்தை உருவாக்கத் தெரியாதா. பேருந்தைப் பற்றிய அடிப்படைப் புரிதல் அவருக்கு

இல்லையா. அரசு பேருந்தை உருவாக்கும் தொழிற்சாலை ஆரம்பித்து அன்னாருக்கு வேலை கொடுக்கலாமே. எந்த வேலையிலும் பத்து வருடங்கள் அளப்பரிய அனுபவத்தைக் கொடுக்குமல்லவா. தமிழா் பழம்பெருமையிலும், பழங்கதையிலும் வாழ்வை வீணாக்குகிறாா். தமிழா் கற்றுக்கொள்ள முயல்வதேயில்லை.

ஒரு மனிதா் மிதிவண்டி சரிபாா்க்கும் வேலையை பதினைந்து, இருபது வயதில் ஆரம்பிக்கிறாா். அவரது வாழ்வின் இறுதிவரை அதேவேலைதான். மனிதரால் எப்படி முடிகிறது. பத்து வருட அனுபவத்தில் அன்னாருக்கு மிதிவண்டி பற்றிய அத்தனை நுட்பங்களும் தெரிந்துவிடுமல்லவா. அவா் ஏன் மிதிவண்டி சரிபாா்க்கக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியராக மாறவில்லை. ஒரு பத்து பேருக்காவது அவா் கற்றுத்தர வேண்டுமல்லவா. அன்னாா் அடுத்த பத்து வருட அனுபவத்தில் மிதிவண்டியில் என்ன புதுமை செய்யலாம் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும்தானே. மிதிவண்டியை எப்படி மாற்றலாம், எதிலெல்லாம் மாற்றம் செய்யலாம், எடை குறைவாக எப்படி உற்பத்தி பண்ணலாம், வேகத்தை எப்படி அதிகரிக்கலாம் எனும் அளவிற்கு அவா் உயா்ந்திருக்க வேண்டுமா இல்லையா. இதுதானே அறிவு. மாறாக என்ன நடக்கிறது.

தமிழா் தாம் பெற்ற அறிவை உலகமகா ரகசியம்போல் பொத்திப் பாதுகாக்கிறாா். தமக்குத் தெரிந்த அறிவைக் கொண்டு வயிற்றை எப்படிப் பெருக்கலாம், பணமாக எப்படி மாற்றலாம் என்றே திட்டமிடுகிறாா். அதற்கேற்பவே செயல்படுகிறாா். அன்னாா் அறிவு ஒருபோதும் ஞானமாவதில்லை. அதற்கான வழிமுறைகளும் இங்கில்லை.

காவலராகச் சோ்ந்து முப்பது வருடங்கள் பணிமுடித்திருக்கும் காவல் உதவி ஆய்வாளா் சாலையின் போக்குவரத்தைக் கவனித்து நிற்கிறாா். இதுவோ அறிவுடைமை. அன்னாரின் முப்பது வருடப் பணியனுபவம்தான் என்ன. எதற்குப் பயன்படுகிறது. சாலையில் நிற்கவா அன்னாருக்கு இவ்வளவு சம்பளம். சாலையின் போக்குவரத்தைக் கவனித்துக்கொள்ள கல்லூரி மாணவா் போதாதா. எதுக்கு ஒரு காவல் ஆய்வாளா் வேகாத வெய்யிலில் நின்றுகொண்டிருக்கிறாா். கோவையின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த காலையும் மாலையும் ஆயிரம் மாணவா்கள் போதுமா. இன்னும் வேணுமா. ஆயிரம் மாணவா்களும் ஆயிரம் மாணவிகளும் சரியாக இருக்குமா. கோவை கல்லூரிகளில் தேசிய மாணவா் படை மாணவா்கள் எவ்வளவு போ்

இருக்கிறார்கள். அவர்களை ஏன் சாலைப் போக்குவரத்தைச் சரிசெய்ய பயன்படுத்தக்கூடாது. மிடுக்கான இராணுவ சீருடை அணிந்து தேசிய மாணவர் படை வீரர்கள் சுழற்சி முறையில் பணி செய்யலாமே. மாணவருக்கு நாளொன்றுக்கு நூறு ரூபாய் அரசால் கொடுக்க முடியாதா. எவ்வளவு செலவாகும் அறிவுடையோரே. கோடிக்கணக்கான இளைஞர் சக்தியை எப்படி முறையாகப் பயன்படுத்துவது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா. இந்தியரே.. நாம் எவ்வளவு மனித வளம் கொண்டுள்ளோம் தெரியுமா. பேராசை பிடித்த மூடமனிதர் மனிதப் பேராற்றலை சிதைக்கிறார். வீணாக்குகிறார். மோசடி செய்கிறார்.

சாலைகளை எப்படிப் பயன்படுத்துவதென்றே நமக்கு இன்னும் தெரியவில்லை. நமக்கு சுயகட்டுப்பாடு அறவே இல்லை. தமிழருக்கு இன்னும் தடியும் அடியும் தேவைப்படுவது வெட்கக்கேடு. தமிழர் என்னத்தைப் படித்துக் கிழித்தாரோ. எதிலும் ஒழுங்கில்லை. எதிலும் திட்டமிடுதல் இல்லை. எதிலும் பொறுமையில்லை. எதிலும் நேர்மையில்லை. அறிவாளித் தமிழர். அப்படித்தான் இருப்பார் போலும்.

புத்திசாலித்தனத்திற்கு இலக்கணமான தமிழரே, கண்ணன் தடி எடுக்க மாட்டானென்றா நினைக்கிறீர். மாட்டுக்கு கோல் தூக்கிய நீலக்கடல் போன்ற நிறத்தழகனால் மனிதருக்கென சாட்டையைச் சுழற்ற முடியாதா. சிந்தித்துச் செயல்படுவீர்.

அறிவொளித் தமிழரே.. மாநகர்களில், நகர்களில் பள்ளி மாணவர்கள் சைக்கிளில் பயணம் செய்வதற்கேற்றவாறு காலை, மாலை ஒருமணிநேரம் போக்குவரத்தை முற்றாகத் தடை செய்யும் எண்ணமிருக்கிறதா. ஒரு மணிநேரம் முடியாதெனில் குறைந்தபட்சம் காலையில் 7.30 முதல் 8.00 மணிவரையும், மாலையில் 3.30 முதல் 4.00 மணிவரையுமாவது போக்குவரத்தை நிறுத்தலாமா. பள்ளி மாணவ சமூதாயம் சைக்கிள் ஓட்ட அவ்வளவு ஆசைப்படுகிறது. ஆனாலும் பெற்றோரால் மனமொப்பி அனுப்ப முடிவதில்லை. அவ்வளவு விதிமீறலாக இருக்கிறது நம்முடைய சாலைப் போக்குவரத்து. போக்குவரத்து இல்லையெனில் மாணவர்கள் பாதுகாப்பாக அருகாமைப் பள்ளிகளுக்கு சைக்கிளில் அரைமணி நேரத்தில் சென்றுவிடுவார். நம்மால் குழந்தைகளை பத்திரமாகப் பள்ளிகளுக்கு அனுப்ப முடியாதா. மாணவருக்கு விலையில்லா மிதிவண்டி தரமுடியாதா. பள்ளிகளிலேயே தரமான மிதிவண்டி ரிப்பேர்

நிலையம் அமைக்க முடியாதா. ஒவ்வொரு பள்ளியிலும் எவ்வளவு வேலைகள் இருக்கின்றன. எத்தனை மனிதருக்கு வேலைகள் கொடுக்கலாம். ஏன் மனிதர்கள் இப்படி இருக்கிறார்கள். வேலை இல்லை என எந்த மனிதரும் இருக்க முடியாதே.

ஆயிரம் மதிவண்டி இருந்தால் பள்ளியில் பத்துப் பேருக்காவது வேலை இருக்கிறதல்லவா. பள்ளி மாணவர் அத்தனை பேருக்கும் தரமான மதிய உணவு கொடுக்கலாமே. உணவுக்கூடத்தில் பத்திருபது பேருக்காவது வேலை இருக்கிறதா. மைதானங்கள் புதர் மண்டிக் கிடக்கின்றன. பத்து மனிதரை பள்ளியின் மைதானப் பராமரிப்பிற்கென்று நியமித்தால் என்ன குறைந்துவிடப் போகிறது. பள்ளி மாணவர்கள் எவ்வித ஒழுங்குமின்று தலைமயிரை சிலிப்பிக்கொண்டு திரிகிறார்களே, ஏன் பள்ளியிலேயே ஒரு முடிதிருத்தகம் நடத்தக்கூடாது. ஒரு நாளைக்கு பத்து மாணவருக்கு முடி வெட்டினால்கூட மாதத்திற்கு 300 பேருக்கு முடியை ஒட்ட நறுக்கிவிடலாமல்லவா. மூன்று மாதத்திற்கு ஒருமுறை எனும் சுழற்சியில் 1000 மாணவருக்கு முடியைத் திருத்தலாமல்லவா.

உண்மையில் எமக்கு மனிதரை நினைக்கும்தோறும் சற்று கோபமாகவே வருகிறது. இரண்டாயிரம் மாணாக்கருக்குமேல் படிக்கும் பள்ளியில் இரண்டு விளையாட்டு ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். முன்னர் ஒருவர்தான் இருந்தார். வேட்கக்கேடு. வேறென்ன சொல்ல. விளையாட்டே பெரிதென நினைக்கும் பள்ளிக்கூட மாணவர் இரண்டாயிரம் பேருக்கு ஒருவர், இருவர் என விளையாட்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதிலும் பகுதிநேரப் பணிநியமனம். தமிழகத்தில் உடற்கல்வியில் பட்டம் பெற்று வேலை கிடைக்கவில்லையே என வெதும்பித் திரியும் பட்டதாரிகள் எத்தனையாயிரம் பேர் அறிவுடையோரே. ஈராயிரம் மாணவருக்கு குறைந்தது இருபது பேராவது விளையாட்டு ஆசிரியர்கள் இருக்க வேண்டாமா. ஒவ்வொரு விளையாட்டுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் என இருப்பதுதானே முறை. நாட்டில் எத்தனை விளையாட்டுக்கள் உள்ளன. பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியர்கள், உடற்பயிற்சி நிபுணர்கள் இருக்க வேண்டுமல்லவா. உடற்பயிற்சிக் கூடம் அவசியமல்லவா. பள்ளிகளில் ஊட்டச்சத்து நிபுணர்களை நியமிக்கும் காலம் எப்போது வரும். பள்ளியின் மைதானம் எத்தனை பெரியதாக இருக்க வேண்டும். பள்ளிகளில் பூங்காக்களும் அத்தியாவசமல்லவா.

மாணவர்கள் மைதானங்களில் எந்தவித ஒழுங்குமின்றி ஓடியாடித் திரிகிறார்கள். இங்குமங்கும் சுற்றித் திரிகிறார்கள். ஒழுங்குபடுத்த, விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுக்க ஆளில்லை. வயதான உடற்கல்வி ஆசிரியர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிறார். உண்மையில் பள்ளிகளில் விளையாட்டுகள் கற்றுக்கொடுப்பதே இல்லை. அவர்களாகவே கற்றுக்கொள்கிறார்கள். விளையாட்டுகள் தெரிந்த உடற்பயிற்சி ஆசிரியர்கள் மிகவும் குறைவு. இருந்தாலும் அவர்கள் பெரும்பாலும் மாணவர்களை மிரட்டிக் கட்டுப்படுத்தவும், காலை வழிபாட்டை நடத்தவும்தான் பயனாகிறார்கள். இளமை துள்ளும் விளையாட்டு ஆசிரியரை பள்ளிகளில் நியமிப்பதுதானே முறை. அவராலல்லவோ இளம் மாணவ சமுதாயத்தோடு சேர்ந்து ஆட முடியும், ஓட முடியும். பெண் பிள்ளைகள் அதிகமும் படிக்கும் பள்ளிகளில் எத்தனை பெண் பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள் பெற்றோர்களே.

நம் பள்ளிகள் எப்படி இருக்கின்றன, இயங்குகின்றன பகுத்தறிவு பயின்ற தமிழர்களே. நாம் பயின்றது பகுத்தறிவுதானா. அது வகுத்தறிவு எனில் தவறாகுமா. எதையோ பேசி எதையோ செய்து வகுத்தை வளர்த்துக்கொண்டார் ஆறறிவுத் தமிழர். குறையறிவை வைத்துக்கொண்டு உலகத்தை ஆளப்போகும் கனவில் தமிழர் குதிக்கிறார். ஆளப்போறான் தமிழன் உலகமெல்லாம் எனப் பாட்டெழுதினாலும் எழுதினார்கள், பெரும்பாலான தமிழர்களுக்கு தலைகால் புரியவில்லை. ஒவ்வொரு தமிழரும் உலகத்தை ஆளப்போவது தாம்தான் எனும் கனவில் மிதந்து கொண்டிருக்கிறார். அவரவர் சாதி, மத, அரசியல் தலைவர்கள் மேடையேறும்தோறும் ஆளப்போறான் பாடலைப் போட்டு அடிபொடிகள் புளகாங்கிதமடைகிறார்கள். அதிலும் வந்தாரய்யா பாடல் போடும்போது தலைவர்கள் முகமும் கொஞ்சம் பிரகாசிக்கத்தான் செய்கிறது. வாழ்வை மீண்டும் தரப்போவது தாமேயெனத் தலைவர் பூரிக்கிறாரோ.

ஏழாம் அறிவுத் தமிழரே..

அவனன்றி உம்மால் வாழ்வை மீண்டும் தந்துவிட முடியுமா.

வருகிறான் பாரும் கண்ணன்.

கையில் குழலுடன் வருகிறான் பாரும் தாமரைக் கண்ணன்.

வையத்தை வாழ்வாங்கு வாழவைக்க வையமளந்து வருகிறான் பாரும் நம்கண்ணன்.

**கோவிந்தா ஹரி கோவிந்தா ஹரி கோவிந்தா ஹரி கோவிந்தா**

மாநகா்களில் கல்லூரி நேரத்தை காலை ஒன்பது மணியாக மாற்ற முடியாதா. அலுவலக வேலையை பத்து மணியிலிருந்து ஆரம்பிக்கக் கூடாதா. ஏன் ஒரே நேரத்தில் அடித்துப் பிடித்து நசுங்கி கசங்கி வாடி வதங்கி மனிதா் பயணிக்கிறாா். ஏன் இப்படிப் பரிதாபமாகப் பயணிக்கிறோம் என்று கூடவா மனிதா் சிந்திக்கமாட்டாா். தலையெழுத்தென்ன அவ்வளவு பெரிதா மனிதரே.. மனிதா் அறிவை விடவா தலையெழுத்து அவ்வளவு வலிமையானது. ஒருவேளை தனிமனிதரால் அந்த எழுத்தை மாற்றமுடியாவிட்டாலும் மனிதா் ஒன்றுகூடினால் அதையும் வென்று காட்டலாமே. நம்மால் முடியாதது எது மனிதரே..

மனிதரால் மரணத்தை வெல்ல முடியாதா. அமரா்கள் என வானுலகில் இருப்பதாகவும், அவா்கள் மரணமற்றவா்கள் எனவும் நாம் கேள்விப்பட்டதில்லையா. வானத்து அமரரால் மரணத்தை வெல்ல முடியுமெனில் மண்ணுலகின் மனிதரால் முடியாதா. முயற்சி திருவினையாக்குமாமே. நாம் முயல்வோமா. பாகீரதன் முயன்றானல்லவா. ஆகாய கங்கையை பூமிக்கு அழைத்து முன்னோா் அத்தனை பேரையும் உயிா்ப்பித்தானாமே. பாகீரதன் எனும் மகத்தான ஒருவா் சாதித்ததை, நாம் ஒன்றிணைந்து சாதித்துக்காட்ட முடியாதா. அது ஒருவேளை கதை எனில் அப்படியொரு கதை இம்மண்ணில் ஏன் உண்டானது மனிதரே. கதைக்குக் காரணமென்ன. நாமும் அது போல் முயற்சிக்க வேண்டுமென்றா.

வாருங்கள் மனிதா்களே, நாமும் நம் பெருமைமிகு பாகிரதா்போல் நம் முன்னோா் அத்தனை பேரையும் உயிா்ப்பிப்போம். பாரதத்தின் கதைகள் பொருள்பொதிந்தவை தோழா்களே.

ஏன் ஒவ்வோரு தமிழருக்கும் ஆண்டிற்கு ஐந்தாயிரம் கி.மீ பேருந்துப் பயணம் விலையில்லாமல் கொடுக்கக்கூடாது. நாகா்கோவில்காரா் நான்குமுறை சென்னை சென்றுவந்தால் முடிந்து போகுமே. அவ்வளவு முடியாதெனில், ஒரு ஆயிரம் கி.மீ. பயணமாவது ஒவ்வொருவருக்கும் இலவசமாகக் கொடுக்கலாமே. பணிக்காகச்

செல்லும் அனைவருக்கும் இலவசப் பயணம் தரலாம். மகளிருக்கு கூடுதல் சலுகை தரலாம். சுற்றுலாவிற்கு சலுகை தரலாம். பேருந்துப் போக்குவரத்தை சேவையாகப் பார்ப்பதுதானே முறை தமிழரே.

ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட கி.மீ பயணமாவது மகிழுந்துகளில் இலவசமாகக் கிடைக்கச் செய்யவேண்டும். பெண்கள் கார்கள் ஓட்டுவதற்கு மிகவும் விரும்புகிறார்கள்போல் தெரிகிறது. நகரங்களின் அத்தனை வாடகை மகிழுந்துகளையும் மகளிரை வைத்தே இயக்கினால் நன்று. பயணம் பாதுகாப்பாகவும் இருக்கும். மகிழ்ச்சியாகவும் அமையும். தமிழகத்திலுள்ள கல்லூரிப் பெண்கள் அனைவருக்கும் கார் ஓட்டக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களை வைத்தே மாநகர்களின் சொகுசுக் கார்களை இயக்கலாம். வேலைக்கு ஆட்களும் ஆச்சு. மகளிருக்கு வருமானமும் ஆச்சு. மகளிர் மகிழுந்து ஓட்டட்டும். ஆண்கள் பேருந்தும், லாரிகளும் இயக்கட்டும். வேலைப் பகிர்வும் சரியானதாவே தெரிகிறது. சற்று வயதானவரும் சம்பாதிக்க ஆசைப்பட்டால் ஆட்டோ ஓட்டலாமே.

மதுரையிலிருந்து ஒரு ஓட்டுனர் கோவைக்கு பேருந்து ஒட்டி வருகிறார். பயணம் கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம். அன்னார் கோவை வந்த உடன் ஓய்வே இல்லாமல் மறுபடியும் மதுரைக்குப் பேருந்தை எடுக்கிறார். இதென்ன அநியாயம். வயது ஐம்பதைக் கடந்த ஓட்டுனர் எனில் இது எவ்வளவு சிரமம். அவர் ஐந்து மணி நேரம் பணி செய்துவிட்டாரல்லவா. அவருக்கு ஓய்வு கொடுத்து மற்றொரு ஓட்டுனரை மதுரைக்கு அனுப்புவதுதானே முறை. தமிழகத்தில் பேருத்தை ஓட்டுவதற்கு ஆள் பற்றாக்குறையா. மதுரை ஓட்டுனர் கோவையில் ஓய்வெடுத்து அடுத்த நாள் மதுரைக்குக் கிளம்பலாம். வருங்காலத்தில் நடத்துனர் என ஒருவர் தேவைப்பட மாட்டார். பேருந்து நடத்துனருக்கும் பேருந்தை ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். இரு ஓட்டுனர் இருப்பது அனைத்து வகையிலும் பயனுள்ளதாக அமையும். இருவரும் வேலையைப் பகிர்ந்து கொள்ளலாம். பேருந்து புறப்படும்போதே கட்டணம் பெற்றுக்கொண்டால் நடத்துனரின் தேவையே இல்லை. இருந்தாலும் எந்தப் பணியையும் ஒருவரே செய்யுமாறு விடக்கூடாது. துணை வேண்டும்.

ஊர் சுற்றிப் பார்க்க ஆசையுள்ளவர்கள் லாரிகளை இயக்கலாம். லாரி ஓட்டுபவர்கள் ஓய்வெடுக்க என இந்தியாவில் எங்கேனும் விடுதிகள் இருக்கின்றனவா.

ஒருவரே ஏன் ஆயிரமாயிரம் கி.மீ. ஓட்டவேண்டும். தொடர்ஓட்டம் போல் லாரிகளை இயக்கினால் என்ன. ஒருவர் 300 கி.மீ லாரிகளை இயக்கி குறிப்பிட்ட இடத்தில் மற்றொருவரிம் ஒப்படைக்கலாம். அவர் இன்னொருவரிடம். வேலைப்பளு குறையுமே. மனிதர் இத்தனை கடுமையாகப் பணிசெய்ய வேண்டுமா. கணவன் மனைவி ஜாலியாக ஒரு லாரியைக் கிளப்பிக்கொண்டு ஊர்சுற்றி வருவது பெருமகிழ்ச்சியல்லவா. மனைவி உதவியாளராக இருப்பது ஓட்டுனருக்கும் பிடித்திருக்குமல்லவா. நெடுஞ்சாலைகளில் லாரி ஓட்டுனர்கள் தங்கவென்று தரமான விடுதிகள் அமைக்கலாம்தானே.

தமிழர்களே, நமக்கு எவ்வளவு தொடர்வண்டிகள் வேண்டும். சிந்தித்திருக்கிறோமா. எட்டுக் கோடி தமிழர்கள் வாழும் ஒரு மாநிலத்தில் நமக்கென்று எத்தனை விமானங்கள் உள்ளன. தமிழருக்கென்று கப்பல்கள் உண்டா. தமிழகம் ஏதும் பிரியப் போகிறதோ. இல்லை இல்லை. சேர்ந்திருப்பதே அனைத்திலும் நன்று. நாம் ஒருதாய் மக்கள். இருப்பினும் நமக்கென்று அத்தியாவசியமானவை இருக்கவேண்டுமல்லவா. நமக்கு மாவட்டத்திற்கு நான்கு எனும் வீதத்திலாவது இலங்கு ஊர்திகள் வேண்டும். அனைத்தையும் மைய அரசிடம் விடமுடியாது. நமக்கு சுதந்திரமும் இருக்க வேண்டும். வரி வசூலித்து பிச்சுக் கொடுப்பதுதான் மத்திய அரசின் வேலையா.

தமிழ் நாட்டில் வாழும் அனைவருக்கும் நம்மால் மிதிவண்டி கொடுக்க முடியுமா. நல்லோர்களே.. நாம் நம்பமுடியாத அளவிற்கு நம் நகரங்கள் மாசடைந்து வருகின்றன. காற்று மாசுபாடு மனித உடலை ஒட்டுமொத்தமாக நலிவுறச் செய்யப் போகிறது. உலகமெங்கும் காற்று மாசபாடு பெரும் சவாலாக மாறிவருகிறது. நாம் விழித்துக்கொள்ளாவிட்டால் விபரீதங்கள் காத்திருக்கின்றன. நாம் காற்றினால்தான் உயிர் வாழ்கிறோம். மனிதருக்கு மூச்சே முக்கியம். இப்படியே நாம் வாகனங்களை இறக்கிக்கொண்டும், பத்துவழி, பதினாறு வழி சாலைகள் போட்டுக்கொண்டுமிருந்தால், நீரை விட்டு வெளியில் போடப்படும் மீன் குஞ்சைப் போல் மனிதரும் காற்றுக்கு வாய் பிளந்து கிடக்கப் போகிறார். அறிவுள்ள தமிழரைப் பற்றிக் கவலையில்லை. அன்னார்கள் அயல்நாடுகளிலிருந்து படுசுத்தமான காற்றை இறக்குமதி செய்து, குடும்ப சகிதமாய் சுவாசித்து இன்புறுவார்கள். நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது கோடிக்கணக்கான எளிய மக்களைப் பற்றியே.

தமிழரே.. மாநிலத்தில் காற்றும் கூடிய விரைவில் விற்பனைப் பொருளாகப் போகிறது. தண்ணீரும் இப்படித்தான் விற்பனைப் பண்டமானது. நல்லதண்ணீர் என விற்றார்கள். சுத்தமான, சுகாதாரமான நீர் என விளம்பரம் செய்தார்கள். இன்றோ தண்ணீர் தொழில்தான் பெருலாபம் கொடுப்பதாக மாறிவிட்டிருக்கிறது. காற்றை மாசாக்கிவிட்டு சுத்தமான காற்று என காற்றையும் விற்க ஆரம்பித்தாயிற்று. நாம் சிந்திக்க வேண்டும். நாம் வாகனங்களைப் பெருமளவில் குறைக்கவேண்டும் நல்லோர்களே. எதிர்காலத்தில் மின்சார வண்டிகள் வந்தாலும் நெரிசல் குறையப் போவதில்லை. நாம் சாலைகளை நன்கு திட்டமிட வேண்டும்.

பெரும்பாலான நம் அரசியலாளர்கள் மிகவும் எளிய மனம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். முக்கால்வாசிக்கும் மேலான அதிகாரவர்க்கமோ பணத்தைக் குவிப்பதிலேயே கவனம் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பணமிருந்தால் எப்படியும் பிழைத்துக்கொள்ளலாமென்று. அதனால்தான் எந்நேரமும் எப்படி பணத்தைக் குவிக்கலாமென்றே சிந்திக்கிறார்கள். அவர்களுக்கு எங்கே நாட்டின் காற்று மாசுபாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள நேரமிருக்கிறது. அரசியலாளரானவுடனேயே அவருக்கு அனைத்தும் ஏ.சி.யாகி விடுகிறது. அவருக்கு எங்கே தமிழ்நாட்டின் காற்று மாசுபாடு தெரியப் போகிறது.

அரசியலாளர்கள், ஆட்சியாளர்கள் சரியில்லையெனில், ஆசிரிய சமுதாயம் நினைத்தால், முயன்றால் மாற்றங்களைச் சாத்தியமாக்கலாம். ஆனால் நடைமுறையில் மெத்தப் படித்த ஆசிரியர்கள், அறிவுஜீவிகளான பேராசிரியர்கள்தான் ஆட்சியாளர்களைக் காட்டிலும் சொத்துச் சேர்க்க அல்லும் பகலும் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரிய சமுதாயமே இப்படியிருந்தால் மற்றவரைக் குறைகூறி என்ன பயன்.

கோவை மாநகரின் மதிப்பிற்குரிய மக்கள் ஒரு இலட்சம் மிதிவண்டிகளையாவது ஓட்ட வேண்டும். தனித்த வாகனங்களை விடுத்து பொதுவாகனங்களைப் பயன்படுத்த வேண்டும். ஒரே ஒருவருக்காக தனி வாகனங்கள் ஓடுவதை தடுப்பது அவசியம். மக்கள் மிகவும் சொகுசான வாழ்க்கைக்கு ஆசைப்படுகிறார்கள். மனதில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படவேண்டியதும் அவசியம். ஆசைகளே அனைத்துத் துக்கத்திற்கும் காரணம் எனக் கண்டறிந்த பெருஞானியையும் மக்கள் நினைவில் கொள்வது நல்லது.

இவ்வளவு பெரிய, இத்தனை வளர்ந்துள்ள மாநகரத்தின் சாலைகளில் மக்கள் பாதுகாப்பாக நடப்பதற்குக்கூட இடமே விடவில்லை. இப்படியான நிலையில் நாம் எப்போது மிதிவண்டிகளுக்கென தனித்த சாலைகளை உருவாக்கப் போகிறோம். மேற்குலகம் மிதிவண்டிக்கு வேகமாக மாறிவருவதாகப் பதிவுகள் சுட்டுகின்றன தமிழர்களே. அவரைப் பார்த்துத்தானே நாம் அனைத்தையும் கற்றுக்கொள்கிறோம்.

நாம் நகரங்களிடையே தனித்த மிதிவண்டிப் பாதையை உருவாக்க வேண்டும். கோவையிலிருந்து மதுரைக்கு மிதிவண்டிகளுக்கென இறுகிய மண்பாதை அமைப்பது முன்னோடித் திட்டமல்லவா. அதிகாலையில் மதிவண்டியைக் கிளப்பினால் மாலையில் மதுரைக்குப் போய்விடலாம். இருநூறு கி.மீ தானே. அதிகபட்சமாக பத்துமணி நேரம் ஆகுமா. எத்தனை பெரிய உடற்பயிற்சி. நேரான, பசுமையான, கற்களற்ற, கிராமங்களைக் கடந்து செல்லும் ஒரு மண் சாலையை நம்மால் அமைக்க முடியாதா. ஒரு கிராமத்தினர் இணைந்து ஒரு கி.மீ சாலையை அமைத்தார்கள் எனில் 200 கிராமங்களின் உழைப்பு போதுமே. எவ்வளவு செலவாகப் போகிறது தமிழரே. குழந்தைகளை சுற்றுலாவாகக்கூட அழைத்துச் செல்லலாமே. மதிவண்டியிலும் தற்போது விதவிதமாக வந்துவிட்டன. பேட்டரியால் இயங்குபவை சற்று வயதானவர்களுக்கு ஏற்றவையல்லவா.

தமிழரே, தமிழ்நாட்டின் வாகனங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டாக வேண்டும். நாம் பேட்டரிக் கார்களுக்கு மாறுவதற்கு காலமாகும். புகையில்லாக் கார்களுக்கு மாறினாலும் நகரங்களின் தூசி குறையப் போவதில்லை. நெரிசல் தீரப் போவதில்லை. நமக்கிருக்கும் எளிய, நிறைவான வழி மிதிவண்டிகளைப் பெருமளவில் பயன்படுத்துவதுதான். அதுவே நமது உடல் உழைப்பின்மை போன்ற பிரச்சனைகளுக்கும் தீர்வு. மனிதர் மிதிவண்டி ஓட்டுவதை மதிப்புக்குறைவாக நினைக்கிறார். அது எவ்வளவு பெரிய அருங்கண்டுபிடிப்பு, கொடை என மனிதர் உணர்ந்தபாடில்லை.

குடும்பத்திற்கு ஒரு இருசக்கர வாகனம் அடிப்படைத் தேவை. அந்த வகையில் நமக்கு இரண்டுகோடி இருசக்கர வண்டிகள் போதும். தமிழ்ச் சமூகத்திடம் 100 பேருக்கு ஒரு மகிழுந்து எனும் அளவிலாவது இருக்க வேண்டும். 1000 பேருக்கு ஒரு பேருந்து அவசியத் தேவையல்லவா. நமக்கு ஒரு 200 தொடர்வண்டிகளாவது வேண்டும். தமிழக

இரயில்கள் மூலம் ஒரு பத்து இலட்சம் பேராவது தினமும் பயணம் செய்ய வேண்டும். தமிழருக்கு குறைந்தது 100 விமானங்களாவது அவசியம். நாளொன்றுக்கு ஒரு இலட்சம் பேருக்காவது விமான சேவையை உறுதிசெய்ய வேண்டும். தமிழரால் விமானம் தயாரிக்க முடியாதா. எவ்வளவு பொறியாளர்களை வைத்திருக்கிறோம் நாம். ஆடம்பரமான தொழில் நுட்பங்கள் தெரியாவிட்டாலும், வானத்தில் பாதுகாப்பாகப் பறக்கும் அளவிற்காவது நமக்கு விமானம் தயாரிக்கத் தெரியுமல்லவா. நம் பொறியியலின் தரமென்ன தமிழரே. உள்நாட்டு விமானப் போக்குவரத்திற்கு நம் விமானங்களும், அயல்நாட்டுப் போக்குவரத்திற்கு நடுவண் விமானங்களும் இருப்பதே சாலச்சிறந்தது.

தமிழரிடம் பத்துக் கப்பல்களாவது இருக்க வேண்டும். 100 இருப்பது சிறப்பு. தமிழர் கடற்பயணம் செய்ய வேண்டும். கப்பல் கட்டும் நுட்பத்தை அறிந்திருக்க வேண்டும். நாம் படகுகளை அதிகமும் பயன்படுத்த வேண்டும். இது அனைத்து வகைகளிலும் தமிழருக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

எட்டுக் கோடித் தமிழரின் ஒருநாள் உணவுத் தேவையென்ன. பிற அத்தியாவசமான தேவைகள் என்ன. நாம் அறிந்திருக்க வேண்டும். மாதத்திற்கு எவ்வளவு, வருடத்திற்கு எவ்வளவு என்பதில் தேளிவு வேண்டும். தேவையை உற்பத்தி பண்ண வேண்டும். பற்றாக்குறையெனில் எப்படி ஈடுசெய்வதென்பதைத் தெரிந்திருக்க வேண்டும். தமிழகக்தின் வளங்களைப் பற்றிய தெளிவு வேண்டும். அறிவிற் சிறந்த நம் தமிழரின் அறிவை முறையாக எப்படிப் பயன்படுத்துவது என்பதில் புரிதல் வேண்டும்.

தமிழர் தினமும் இளநீர் குடிக்கவேண்டுமெனில் எத்தனைகோடி இளநீர் தேவைப்படும். நமது ஒரு நாளைய தேங்காய்த் தேவை எவ்வளவு. நம்மால் அவ்வளவு தென்னைகளைப் பராமரிக்க முடியுமா. முடியாதெனில் ஒருநாள் விட்டு ஒருநாள் அனைவருக்கும் இளநீர் கொடுக்க முடியுமா. அதுவும் முடியாதெனில் வாரத்திற்கு ஒன்று. ஏன் நாம் மருத்துவமனைகளிலிருக்கும் அனைவருக்கும் நாளும் ஒரு சுவையான இளநீர் விலையில்லாமல் கொடுக்கக்கூடாது. இந்திய மருத்துவமனைகள் அனைத்திற்கும் நம்மால் கொடுக்க முடியும்தானே. விலையில்லாமல் கொடுக்கமுடியாதெனில் ஏன் ரூ. 10க்கு இரண்டு கொடுக்கக்கூடாது. தென்னைதானே காய்க்கிறது. ஏன் இவ்வளவு விலையில் விற்கிறது இளநீர்.

மனிதரே.. தென்னை சார்ந்தும், பனை மற்றும் வாழை சார்ந்தும் எவ்வளவு நன்மைகள், எத்தனை எத்தனை வேலை வாய்ப்புகள் உண்டென்பதை நாம் அறிந்திருக்கிறோமா. இவற்றால் மண் பாழாகுமா. கெடுமா. உயிர்கள் அழியுமா. மூங்கிலால் எவ்வளவு பயன்கள். காடுகளின் வரப்பாக, தெருக்களின் ஓரமாக, சாலைகளின் வழியெங்கும் மூங்கில் மரங்கள் வளர்க்கலாமல்லவா. பிளாஸ்டிக் நாற்காலிகள் இருக்க முடியுமா. மரங்கள் கற்பக விருட்சங்களல்லவா. ஏன் நாம் அறியாமல் இருக்கிறோம். மூங்கில் நாற்காலிகள், கூடைகள், தட்டிகள், அலங்காரப் பொருட்கள் போன்றவற்றின் உருவாக்கத்தில் இலக்கக் கணக்காணவருக்கு நம்மால் வேலைகளை உருவாக்க முடியும்.

மனிதர்களுக்கு பிளாஸ்டிக் பயன்படுகிறதென்றாலும், அதனால் வரும் சீர்கேடு அளப்பரியதாக இருக்கிறது. வங்கியொன்றில் எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக் பூக்களையும், இலைகளையும் சரங்களாகத் தொங்கவிட்டிருக்கிறார்கள். இப்படியுமா வங்கியை அழகுபடுத்துவது அறிவுள்ளோரே. வட்டிப் பணத்தில் எவ்வளவோ சம்பாதிக்கும் வங்கி, இரண்டு மனிதரை வைத்து உண்மையான பூச்செடிகளைப் பராமரிக்கக்கூடாதா. அனைத்து வங்கிகளையும், அனைத்து அலுவலகங்களையும், மனம் கவரும், மணம் பரப்பும் உயிருள்ள பூக்களை வைத்து அலங்கரித்தால் எவ்வளவு அழகாக இருக்கும். தாவரவியல் படிக்கும் மாணவர்களுக்கு என்னதான் வேலை கொடுப்பது. அனைத்து மாணவர்களுக்கும் பகுதிநேர வேலை கொடுக்கலாமே. ஒவ்வொரு மருத்துவருக்கும் அறையில் நுழையும்போதே அழகானதொரு மலர்க்கொத்துக் கொடுத்துவிட்டால், நோயாளியிடம் அவரால் சிடுசிடுக்க முடியுமா. நாட்டில் வேலையா இல்லை. மலர்களை வைத்து மட்டுமே நாம் லட்சக்கணக்கான வேலைகளை உருவாக்கலாமே. பின் இவ்வளவு மனித சக்தியை என்னதான் செய்வது நண்பர்களே.

பேராசைக்கார மனிதர்கள் அழகிய ரோஜாப் பூக்களை பெண்களிடம் எப்படித்தான் விற்கிறார்களோ. அழகாகப் புன்னகைக்கும் நம் பெண்களுக்கு அழகுள்ள ரோஜாக்களை விலையில்லாமல் கொடுப்பதே முறை. அத்தனை மகளிருக்கும் தினமும் விலையில்லாமல் அழகியதோரு ரோஜாப்பூ கொடுக்க முடியாதா. பூச்சூடிய

பெண்தான் எத்தனை அழகு. பெண்களுக்கு விலையில்லாமல் ரோஜாப்பூ கொடுப்பதற்காகவென்றே ஒரு இலட்சம் பேருக்கு வேலை கொடுக்க வேண்டியதுதான்.

பூச்சூட மறுக்கும் பெண்கள் போன்றே, இந்தியாவில் குழந்தை பெற்றுக்கொள்ளவும் பெண்கள் தயங்குகிறார்கள். மறுக்கிறார்கள். அதுவும் மெத்தப் படித்த பெண்கள்தான் குழந்தை பெறுவதில் தயக்கம் காட்டுகிறார்கள். பல நாடுகளிலும் மக்கள்தொகை குறைந்துகோண்டே வருவது கண்கூடு. இனி பெண்ணை குழந்தைபெற வைப்பது கடினம்போலும். அதீத முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய இப்பிரச்சினையை மனிதர்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள். பெண்தான் குழந்தை பெறவேண்டும். வேறு எந்த வகையில் என்றாலும் நிச்சயம் அது இயற்கைக்கு மாறானதே. படித்த பெண்கள் திருமணம் புரிய, குழந்தைப் பெற்றுக்கொள்ள தயங்குவது, மறுப்பது எதனால். அப்படியெனில் மனிதர்களின தொடர்ச்சி என்னாகும். பெண்ணுக்கேன்று ஏதேனும் தர்மம் இருக்கிறதா. பரிசும் பாராட்டும் கொடுத்தே இனி பெண்ணை குழந்தைபெற வைக்க முடியுமோ.

உலகம் மிக மிக உடனடியாக, தலையாய பிரச்சனையாகக் கருதி உடன்பாடு காணவேண்டியது ஆண்-பெண் நல்லுறவே. ஆணுக்கும் பெண்ணுக்கும் மளதளவிலும், உடலளவிலும் விலக்கம் அதிகரித்துக்கொண்டே வருவது மிகவும் கவலைக்குரியது. ஆணுக்கும் பெண்ணுக்குமான சிக்கல்களைப் பேசித் தீர்ப்பது சாலச் சிறந்தது. அனேகமாக ஆணும் பெண்ணும் அனைத்திலும் ஒன்றாகிவிட்டார். ஆண் பெண் எனக் குறிப்பிடாமல் மனிதர் எனப் பொதுவில் குறிப்பதே பொருத்தமானதாக இருக்கும் போல, அல்லது இருபாலரையும் பொதுவாக ஆண் என்றே அழைத்துவிடலாம். பெண்கள் அனைத்திலும் ஆணாகிவிட்டார்கள். எல்லாம் அறிவு செய்த மாயம்.

தறபோது ஆணும் பெண்ணும் குடும்பமாக இணைந்து வாழ முடியவில்லை. குடும்பம் எனும் அமைப்பு சிதைவது மானுட குலத்தின் அறப்பிழையாகவே அமையும். அதற்குப் பெண்களே துணைபோவது பெருந்தவறாய் முடியும். உண்மையில் பெண்ணுக்கே குடும்ப அமைப்பு உகந்தது. குடும்ப அமைப்பால் அதிகமும் பயன்பெறுவது பெண்ணே. ஆண்கள் சமரசங்கள் செய்தே குடும்ப அமைப்பில் இருக்கிறார். குடும்ப அமைப்பு குலைவது ஆணுக்கே அனுகூலமாக இருக்கப் போகிறது. திருமணம் செய்துகொள்ளாமல் இணைந்து வாழலாம் என்பதே ஆணின் சூழ்ச்சி எனப்

பெண் உணர வேண்டும். ஆண் ஒன்று இரண்டு என எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டே இருப்பார். பெண்களை காமத்துக்காக மட்டுமே பயன்படுத்துவார். ஆணின் காமம் ஒருபோதும் திருப்தியடையாதது. ஆயிரம் பெண்ணைக் கொடுத்தாலும் இன்னொன்றும் கிடைக்குமா என்றே ஆண் மனம் ஏங்கும். ஆண் மனம் எதிலும் திருப்தியுறாது. மாறாகப் பெண்ணின் மனமோ அழகான குடும்பம் அமைந்தாலே பேரளவில் திருப்தி கொண்டுவிடும். குடும்பம் இல்லையெனில் ஆண்கள் எதைப் பற்றியும் கவலைகொள்ள மாட்டார்கள். குடும்ப அமைப்பில்லையேல் எதுவும் ஆணைக் கட்டுப்படுத்த முடியாது. அவர் போரிடுவார். வாழ்க்கையை எளிதாக முடித்துக் கொள்வார். உலகம் முன்னெப்போதும் இருந்ததைவிட மிக மிக மோசமானதாக மாறும். மெத்தப் படித்த பெண்கள் திருமணத்தை மறுப்பதும், குழந்தைப் பேற்றைத் துறப்பதும் சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டும். அவரைப் போலவே உலகிலுள்ள அத்தனை பெண்களும் முடிவெடுத்தால், இதுவரைக்கும் மானுடர் வாழ்ந்த வாழ்க்கைக்கு எவ்வித அர்த்தமும் இல்லாது போய்விடும். மேற்கைப் பார்த்து அனைத்திலும் காப்பியடிக்கும் கிழக்கு திருமணத் தடையையும், குழந்தைத் தடையையும் காப்பியடிக்காதிருப்பதாக..

எமது அனுபவத்தில் யாம் சில பெண்களைப் பார்த்திருக்கிறோம். உண்மையில் எமது அனுபவம் மிகவும் குறைவே. பெரிய படிப்பு படித்திருக்கிறார்கள். பெரிய வேலையும் பார்க்கிறார்கள். அதற்கேற்ப பேச்சில், நடையில், உடையில் என அனைத்திலும் ஆணவம் தெறிக்கிறது. நோ படி கேன் கன்ட்ரோல் மீ, நோ படி கேன் இன்புளுயன்சு மீ, நத்திங் கேன் சேஞ்ச்சு மீ என்றே பேசுகிறார்கள். இயற்கைக்குமுன் மனிதர் வெகு அற்பம் என்பதை யார் இந்த மெத்தப் படித்தவர்களிடம் எடுத்துரைப்பது. சொன்னால் கேட்பார்களா.

சொல்வது கடமையல்லவா. பேரறிவு மனிதர்களே, எம் தந்தை சொல்லியிருக்கிறார். கடமையைச் செய். மற்றதை எம்மிடம் விட்டுவிடு. யாம் ஓரளவிற்கு யாம் யார், எமது எண்ணங்கள் எத்தகையது, யாம் எது குறித்தெல்லாம் சிந்திக்கிறோம் என்பதை சற்றே வெளிப்படுத்தியிருக்கிறோம். யாம் உலகத்தை மிக மிகப் பிரம்மாண்டமானதாக மாற்றுவது குறித்து கனவு காண்கிறோம் தோழர்களே. எம்போல் இத்தனை பெரிய கனவு கண்டவர் அரிதினும் அரிதே. யாம் மானுடர் வாழ்வை எதிலும் இன்பம், எப்போதும் இன்பம் எனும் நிலைநோக்கி நகர்த்த முனைகிறோம்.

அதற்கான முதல்படியாகவே இந்தப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. புத்தகத்தில் யாம் மிகவும் குறைவாகவே வெளிப்பட்டுள்ளோம்.

உயர்ந்தோரே.. நம் மண்ணில் பிறந்து, நம் நிலத்தில் நடந்து, நம் உணவை உண்டு, தமக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர் என உயர்ந்து சிந்தித்தானே நம் முப்பாட்டன், அவன் கனவை நிறைவேற்றுவது நம் கடமை என்பதை அறிவீர்.

**மாபெரும் சங்கம் கண்ட தமிழரே**

சாதி துறந்து தமிழால் இணைவீர்.

நாடு கடந்து மானுடரை இணைப்பீர்.

மதம் மறந்து மனிதத்தை முன்னெடுப்பீர்.

விடியட்டும் பொன்னுலகம்.

பிறக்கட்டும் புதிய தமிழகம்.

எழுகட்டும் புதிய இந்தியா.

உதயமாகட்டும் புதிய பூமி.

மலரட்டும் புதிய யுகம்.

**வாழ்க தமிழ்.. வெல்க தமிழர்.. எப்போதும்..**

எல்லா நாடும் நம்நாடு.

எல்லா மொழியும் நம்மொழி.

எல்லா மதமும் நம் மதம்.

எல்லா மக்களும் நம் மக்கள்.

**வாழிய பாரதம்.. வளர்க பாரதப் பண்பாடு..**

தேவரீர்..

**கண்டதுண்டோ கண்ணன்போல்..**

உலகத்தீரே.. கண்ணனுக்கு ஆயிரமாயிரம் வழிகள். இங்கு ஆயிரத்தில் ஒன்றே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. அடுத்து இம்மண்ணில் என்ன நிகழ்கிறதோ, அதற்கேற்ப யுத்திகளும் மாறும்.

கிருஷ்ணமூர்த்தியாகிய யாம் ஆயுதம் கொண்டு உலகை மாற்றமாட்டோம். உலகத்தை மாற்றுவதற்கு யாம் ஆயுதம் தூக்கமாட்டோம். யாம் மனிதரை நம்புகிறோம். பூமியில் கோடானகோடி மனிதர்களின் இதயம் அன்பால் நிறைக்கப்பட்டுள்ளதை யாம் நன்றாக அறிகிறோம். அன்பால் மனிதர்களை மாற்றமுடியும் என யாம் திடமாக நம்புகிறோம். மனித மனம் அறிவால் கட்டமைக்கப்பட்டுள்ளது. எமது வழி அறிவு வழி. அறிவியல் வழி. பகுத்தறிவு வழி.

மானுடரே, எமது வழி அன்பு வழி. எமது வழி அமைதி வழி. எமது வழி காந்தி வழி. எமது வழி புத்தன் வழி.

தந்தையர் போலவே எமது வழியும் அகிம்சை வழியே. எனினும் எமக்கும் தந்தையருக்கும் சிறிது வித்தியாசம் உள்ளது. அதை எம்மால் தவிர்க்க முடியாது. தவிர்த்தால் யாமும் தந்தையாகிவிடுவோமல்லவா. யாம் ஆயுதம் தூக்காமல் இருப்பதற்கு 99 சதமானம் உறுதியாக வாய்ப்புள்ளது. எனினும் யாம் ஆயுதம் ஏந்த ஒரு சதமான வாய்ப்பு உள்ளதையும் அறிவீர். யாம் ஆயுதத்தின் கொடூரத்தை அறிந்தே இருக்கிறோம். யாம் ஆயுதம் எடுப்பதில் மிகுந்த பொறுமை காப்போம். எம் மனம் அன்பு மனமே. எனினும் எம் கண் முன்னால் அநியாயம் நடந்தால், எம்மால் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

**தமிழரே,**

**இனி தமிழகத்தில் சாதிப் பகையாலோ, மத வேறுபாட்டாலோ, மொழி வெறியாலோ மனிதர்களின் குருதி நிலத்தில் சிந்தத் கூடாது.**

**மீறீனால்?**

இந்த அறிவிப்பு விரைவில் ஒட்டுமொத்த பூமிக்கும் என நீளும் மானுடரே. கண்ணனுக்கு சாதியும் இல்லை. மதமும் இல்லை. கண்ணனுக்கு இந்துவும், இசுலாமியரும், கிறித்தவரும் ஒன்றே. கண்ணனுக்கு அனைத்து மனிதரும் சமமே. மறவாதீர்.

மனிதரே, சாதியை பெருமையாக நினையாதீர். சாதியை வழிபடாதீர். மனிதரை மதம் கொண்டு பிரிக்காதீர். மதத்தை வீட்டோடு வைத்துக் கொள்ளும். உடல்களையும், வாகனங்களையும், வீடுகளையும், கல்விக் கூடங்களையும், மதப்பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தாதீர். ஆசிரியர் அனைவரும் மதத்தில் பட்டயம் பெறுவதை தகுதியாகக் கொள்வீர். மாணவச் செல்வங்களை ஒருபோதும் மதக்கண்ணால் நோக்காதீர். மதமே பெரிதெனில் மதப்பணிக்குச் செல்லும். ஆசிரியர் எனில் அதற்குரிய தகுதியோடு இரும். மாணவரிடம் அவரவர் நம்பிக்கையைத் திணிக்காதீர். அனைத்திலும் ஆராய்ச்சி மனப்பான்மையை ஊக்குவிப்பீர். பணியிடத்திற்கு மதத்தைச் சுமந்து வராதீர். உணவில் மதத்தைக் கலக்காதீர். மனிதர்போல் உடுத்தும். ஒட்டுமொத்தமாகவும் மூடாதீர். அப்பட்டமாகவும் காட்டாதீர்.

பெருமைமிகு மனிதரே,

அனைத்திலும் நடுப்பாதையைத் தேர்ந்தெடுப்பீர்.

புத்தனால் துக்கத்தைச் சகித்துக்கொள்ள முடியாது.

புத்தனால் நோயாளியைப் பார்க்க முடியாது.

புத்தனால் இறப்பைக் காண இயலாது.

புத்தனால் உண்மையைக் காணாமல் இருக்க முடியாது.

**புத்தனின் ஞானம் அனைத்தையும் வெல்லும் எப்போதும்..**

மனிதர்களே.. பூமிக்கு அன்பான தந்தை வந்தால் மனிதர் அவரைச் சோதிக்கலாம். கேள்வி கேட்கலாம். வந்திருப்பது இறை எனத் தெரிந்த பின்னும் தவறு கண்டுபிடிக்கலாம். குற்றம் குற்றமே எனவும் வாதிடலாம். தந்தையாம் கடவுளும் சங்கத் தமிழோடு கொஞ்சி விளையாடவே யாம் வந்தோம் எனச் சமாதானமும் காணலாம்.

**கண்ணன் தமிழோடு விளையாட வருவானா. சிந்திப்பீர்.**

பூமிக்கு அறிவுத் தந்தை வந்தால் கேள்வி கேட்க முடியுமா. சோதித்து அறிய முடியுமா. அத்தனை அறிவில்லாதவரா கடவுள். மனிதர் எத்தனை அறிவானவர் என அறியாமலா அவர் கடவுளாக இருப்பார்.

பெரியோரே,

Can we test God. Can we question Him.  Can we argue Him.

When God comes, theoretically the people have Two choices - Yes and No.

But practically people have only One  - Yes or No.

**Can You Say NO**

If you can able to say No, then the question will arise,

Who is God, Who is the Real God..

Now You have only one choice.

But He Has Always Two.

**God Can Promise Ever and Never**

He can Promise Happiness for Ever.

உலகம் என்றும் இருக்குமா. ஆம். உலகம் என்றும் எப்போதுமிருக்கும் - EVER.

உலகத்தை அழிக்க முடியுமா. முடியாது. ஒருபோதும் முடியாது - NEVER.

ஆரே அறிவார்

பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்

ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்

ஆரே அறிவார் - அனைத்துலகும் உண்டுமிழ்ந்த

பேராழி யான்தன் பெருமையை

பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா - உன்

தொல்லுருவை யாரறிவார்

ஏதுகதி ஏதுநிலை ஏதுபிறப்பு

அரணாம் நமக்கென்றும் ஆழி வலவன்

தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே

வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு

நீரேற்று உலகமடி யளந்தாய்

நின்று நிரைமேய்த்தாய்

கோகுல பாலனே கோபால கிருஷ்ணனே

குருவாயூர் கண்ணனே நாராயணா

ராதை மணாளனே கோதை குணாளனே

கோவிந்த வாசனே வாவா கண்ணா

வைகுந்த வாசனே வேங்கட நாதனே

வையகம் வணங்கிட வாவா கண்ணா

நாராயணா மணிவண்ணா நாகணையாய்

வாராய் ஆரிடரை நீக்காய்

கிருஷ்ணமூர்த்தி என்னும் யாம் இப்புவியை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்ற விரும்புகிறோம். மானுட வாழ்வை ஒட்டுமொத்தமாக மாற்றுவது குறித்து திட்டமிடுகிறோம். மனிதர்கள் மூளையை இதயத்தால் சோதிக்கும் காலம் வந்துவிட்டதை உணர்கிறோம். மனிதர் இதயத்தை பொதுநலம் எனும் எண்ணத்தால் நிறைக்கவும் ஆசைப்படுகிறோம்.

உயிரான காற்றும் உணவான நீரும் அளவுக்கு மீறி மாசுபட்டுள்ளதை மனிதர் அறிந்த பின்னும் அதை மாற்ற முயலாதிருப்பது அறிவுடைமையாகாது. மணம் நிரம்பிய நம் மண்ணை இப்படி சாக்கடை நாற்றமடிக்க விடலாமா. மனிதர் ஒன்றுகூடி யோசிக்கவேண்டும். நாம் வாழும் பூமியைக் காப்பது நம் கடமை. நம் முன்னோர் கட்டிக்காத்த பூமி இது. நம் காலத்தில் அதைச் சிறப்பாகப் பேணி அடுத்தடுத்த தலைமுறைகளிடம் ஓப்படைக்க வேண்டும். நமக்கு பெருங்கடமை காத்துக்கொண்டிருக்கிறது.

யாம் பெருங்கனவோடு எம்மை வெளிப்படுத்தியிருக்கிறோம். உண்மையில் எம்மை வெளிப்படுத்துவதில் ஆசையில்லையெனினும், ஒருவேளை இது எமது கடமையாக இருந்தால். வெளிப்படுத்தாவிட்டால் கடமை தவறியதாக ஆகிவிடுமே.

யாம் பல்வேறு விதமாக எம்மை வெளிப்படுத்தியிருக்கிறோம். எம்மை மகனென்கிறோம். கண்ணனென்கிறோம். புத்தனைக் கொண்டாடுகிறோம். எம்மை கடவுள் இல்லையென்று சொல்கிறோம். கடவுள் உறுதியாக இருக்கிறார் என்கிறோம். கூடவே பெரியாரையும் தந்தை என்கிறோம். எம்மை எப்படி புரிந்து கொள்வது..

எளிய காரணம்தான். யாம் அனைத்தையும் ஒன்றிணைக்க விரும்புகிறோம். உலகை ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறோம். உலகை முழுமையாகப் புரிந்துகொள்ள முயல்கிறோம். ஒவ்வொரு முத்தும் சேர்ந்து அழகானதொரு முத்துமாலையாக மாறுவதுபோல், உலகில் அனைத்து மதங்களையும் கோர்த்து, அனைத்து மனிதர்களையும் இணைத்து, மனிதம் எனும் மாலையாகக் கோர்க்க விரும்புகிறோம்.

தொடர்வண்டியொன்று எப்படி ஏராளமான பெட்டிகளை இழுத்துக்கொண்டு ஓடுகிறதோ, யாமும் அப்படியே பூமியின் பல்வேறுவிதமான மொழிகளை. மதங்களை, மனிதர்களை, கலாச்சாரங்களை, நாடுகளை ஒன்றாக்கி இழுத்துச்செல்ல முற்படுகிறோம். யாம் யார் என நன்றாக அறிந்துள்ளோம். எமது கடமை என்னவென்றும் தெளிந்துள்ளோம்.

நம் காலத்திய அனைவரையும் போல் யாமும் மனிதனே. மனிதர் தம்மை கடவுள் எனக் கூறிக்கொள்வது பேராசையாலே. இந்திய ஞானம் மனிதர் கடவுளாகலாம் எனக் கண்டறிந்துள்ளது. அதுவே இந்திய மண்ணில் மனிதர் கடவுளாகக் கொள்ளப்படுவதற்கான காரணம். எமது கேள்வி, யாம் மட்டும் கடவுளாகப் போகிறோமா அல்லது மனிதர் அத்தனை பேரையும் கடவுளாக்கப் போகிறோமா என்பதே. யாம் மட்டும் நிச்சயம் கடவுளாக மாட்டோம். எமது அப்பா மனிதர், மகன் மனிதர், அண்ணன், அக்கா, உறவினர், ஊர்க்காரர், நண்பர்கள் அனைவரும் மனிதர். யாம் மட்டும் எப்படி கடவுள். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதே நம் மரபு. எப்படி எல்லோரும் கடவுளாவது என்பதை யாம் சிந்திக்கிறோம். கடவுளாவது என்பதைவிட மனிதர் கடவுள் நிலையை அடைய முடியுமா என்பதே முதன்மையான கேள்வி. மனிதர் கடவுள் நிலையை அடைவதென்றால் மனத்தாலா, உடலாலா அல்லது பேராற்றலாலா. மனிதர் மனதால் எளிதாகக் கடவுள் நிலையை அடையலாம் என்பதே உண்மை. மனிதர் கடவுளாவதன் முதல் படி அன்பு.

மனிதர் கடவுள் தன்மையை அறிய, கடவுளாக உயர, இந்திய ஞானத்தை அறிவது அவசியம். இந்திய ஞானம் பலவாறாக இருந்தாலும் உண்மையில் மூன்றாக உள்ளது. மூன்றும் ஒன்றுடன் ஒன்று முரண்படுவதுபோல் ஒரு தோற்றமிருந்தாலும், மூன்றிடையேயும் உள்ளார்ந்த அன்பும் உறவும் நிறைந்துள்ளது. இதுவே இந்தியாவின் ஒப்பற்ற ஞானத்திற்குக் காரணம். மூன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பு. ஒன்றில் அளப்பரிய அன்பு. ஒன்று அதீத அறிவு. ஒன்று ஞானப் புதையல். இந்திய ஞானத்தின் மூன்று பெருந்தந்தையரும், தாயார்களும் நாம் அறிந்த யாவற்றிலும் மேலானவர்கள். நம் அறிவிற்கு எட்டாத அளவிற்குப் பெருமையானவர்கள்.

மனிதர்களே, பரந்து விரிந்த இப்பேரண்டம் மிக மிகப் பிரம்மாண்டமான, நம் கற்பனைக்கும் எட்டாத அறிவு கொண்டு இயங்குகிறது. உலகின் அறிவு பல்வேறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அனைத்தையும் ஒன்றிணைத்து, ஒன்றாக்கிப்

பார்க்கும் பேரறிவு ஒன்றால் உலகம் தாங்கப்படுகிறது, காக்கப்படுகிறது. அந்த ஒன்றுக்குள் அனைத்தும் அடக்கம். அது ஒன்றாக இல்லாமல் இரண்டாக இருக்கிறது. இரண்டும் ஒன்றுக்குள் ஒன்றாக, ஒன்றாகவே இருக்கிறது. மூன்றாவது ஒன்றாகவும் அதுவே இருக்கிறது. மூன்று மேலும் மூன்றாக இருக்கிறது. மூன்றும் அன்பால் பிணைந்துள்ளது. அறிவால் பிரிந்துள்ளது. ஒன்றே மூன்றாக முன்னும் பின்னும் நடுவுமாக இருந்து உலகை இயக்குகிறது. காலத்தை ஆள்கிறது.

யாம் ஆன்மீகத்தை முன்னெடுப்பதைக் காட்டிலும், மனித சமூகத்தை முன்னெப்போதும் இருந்ததைவிட மிகச் சிறப்பாக முன்னெடுக்க, கட்டமைக்க விரும்புகிறோம். யாம் மனித அறிவுக்கு, அன்புக்கு மிக உறுதியானதொரு அடித்தளம் அமைக்க விரும்புகிறோம். மனிதர் மேலும் மேலுமென அதை உயர்த்துவார் எனவும் நம்புகிறோம். எமக்கு புத்துலகம் படைக்குமளவுக்கு அறிவுள்ளதென்பதைக் காட்டிலும் எம்மிடம் மனிதர்மீது மாறாத அன்பு இருக்கிறது என்பதே உண்மை. என் மனம் அன்பால் நிறைந்துள்ளது. யாம் எமது மனதிலுள்ளதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம். எமது அறிவின் எல்லை வானம்போல் பெரியது என நம்புகிறோம். நேரம் கூடிவரும்போது அனைத்தும் வெளிப்படும்.

மனிதர்களே.. கடவுள் யார். கடவுள் உண்மையிலேயே இருக்கிறாரா. உலகம் யாரால். கண்ணன் யார். கண்ணன்தான் கடவுளா. கண்ணன்தான் தமிழர்களின் திருமாலா. கண்ணன்தான் இராமனா. கண்ணன்தான் ஈரடியால் உலகத்தை அளந்தாரா. கண்ணன் பெருமைகள் என்ன. ஆழ்வார்கள் கண்ணனை இவ்வளவு கொண்டாடியது ஏன். எதை வைத்துக் கண்ணன் தர்மம் குறையும்போது நிச்சயமாக வருவோம் என்றார். அறிவோமா.

தமிழகத்தில் எம் காலத்தில் ஏராளமான கடவுள்கள் இருப்பதை அறிகிறோம். அனைவருமே முழுமுதல் கடவுள்கள் என்றே சொல்லப்படுகிறார்கள். பாடப்படுகிறார்கள். பழங்கடவுள்கள் தவிர்த்து நாளும்பொழுதும் புதிது புதிதாகவும் கடவுள்கள் தமிழ்நிலத்தில் முளைத்துக்கொண்டிருக்கிறார்கள். முன்னோர்கள் மரியாதைக்கும், வணக்கத்திற்கும் உரியவர்களெனினும் அவர்கள்தான் கடவுள்கள் எனப் பொதுவெளியில் பரப்புவதும், கோவில்கள் எழுப்புவதும் தமிழ் மக்களுக்கு இன்னமும் ஆன்மீகம் புரியவில்லையோ எனும் எண்ணத்தை விதைக்கிறது. தமிழர்கள்

கடவுள் யார் எனக் கேள்வி எழுப்பி விவாதிக்கவேண்டும். மாறாக, ஒருபக்கம் அப்படியே ஏற்றுக் கொள்வதும், மறுபக்கம் ஒரேயடியாக மறுப்பதுமே நடந்துள்ளது. நடந்தும் வருகிறது.

நாட்டிற்கு ஒரு ராஜாதான் இருக்கமுடியும். இளவரசர் இருக்கலாம். அமைச்சர்கள் இருக்கலாம். அரசர் ஒருவர்தான். அதுபோல் உலகிற்கும் ஒரு ராஜாதான். அவர் யார் என்பதிலேயே மனிதர் வேறுபடுகிறார். அவரவர் கடவுள்களை உலகின் ஒரே ராஜாவாக முன்னிருத்துகிறார். பரப்புகிறார். எப்படியாவது அவரவர் ராஜாக்களை உலகின் ஒரே முழுமுதல் கடவுளாக்கியே தீருவது என முனைந்து மதங்களை முன்னிருத்துகிறார். நம் காலத்திற்கு முன்னிருந்த ராஜாக்கள் காலத்தில், ஒரு நாட்டின் ராஜா மற்றொரு நாட்டின்மீது படையெடுத்து அந்த நாட்டைக் கைப்பற்றிக்கொண்டதுபோல், மதத்தார்களும் மற்ற நாட்டு மக்களின் மனங்களை மதங்களால் கைப்பற்றியிருக்கிறார்கள். அவர் மதத்து ராஜாக்கள்தான் உண்மையான கடவுள்களா. உண்மை என ஒன்று இருக்கிறதல்லவா. சூரியனை மேகங்கள் மறைக்கலாம். எனினும் சூரியன் இல்லையென்றாகிவிடுமா.

பாரதத்தில் எங்கு நோக்கினும் கடவுள்கள். அனைவருமே உலகின் முழுமுற்றான ஒப்பற்ற முதல் கடவுள்கள். அனைத்துக் கடவுள்களுமே இந்த உலகத்தைப் படைத்தவர்கள். ஒருவேளை தொழிற்சாலையொன்றில் பல்வேறு உதிரி பாகங்களாகத் தயாரிக்கப்பட்டு பின்னர் அனைத்தும் ஒன்றாகி ஒரு பொருளாவதுபோல் கடவுள்கள் இணைந்து இந்த மாபெரும் உலகத்தைப் படைத்திருப்பார்களோ என்றால் அப்படியும் இல்லையாம். ஒவ்வொருவரும் மகாசக்தி படைத்த கடவுள்களாம். ஒவ்வொருவரும் தனித்தனியாகவே படைத்தார்களாம். அப்படித்தான் பாடுகிறார்கள். எழுதுகிறார்கள். பரப்புகிறார்கள். ஒருவேளை ஆளுக்கொரு உலகத்தைப் படைத்திருக்கிறார்களோ. அப்படியெனில் பல்வேறு உலகங்கள் உள்ளனவோ.

எம் காலத்தின் வேடிக்கை என்னவெனில், கொஞ்சம் காசிருந்தால் போதும், எளிதாகக் கடவுளாகிவிடலாம். எம் காலத்தில் காசே கடவுளல்லவா. காசு இருந்தால் போதும் மிகப்பிரம்மாண்டமான ஒரு கோவிலைக் கட்டிவிடலாம். எளிய மக்களின் மனங்களை பிரம்மாண்டங்களால், பிரமிப்புகளால் எளிதில் வீழ்த்திவிடலாம் என்பதும் உண்மையல்லவா. கோவிலைக் கட்டி அப்படியே அன்னார்தான் இவ்வுலகின் ஒரே

கடவுள் எனப் பேசவேண்டியது. துட்டுக்கொடுத்தால் என்னவேண்டுமானாலும் எழுதிக்கொடுக்கும் பாட்டுக்காரர்களுக்கா உலகில் பஞ்சம். உண்மை தெரியாமல், உண்மையை அறியாமல் எப்படியெல்லாம் எழுதுகிறார்கள். நேற்றைக்குப் பிறந்த இந்த மனிதர்தான் உலகின் ஒப்பற்ற ஒரே கடவுளாம். பரம்பொருளாம். உலகைக் காப்பவராம். அன்னாரால் உலகை அழிக்கக்கூட முடியுமாம். காசுக்கு எழுதுவதுதானே. நம் எழுத்தர் கொடுக்கும் காசுக்கு ஏற்ப எழுதிக் குவித்துவிடமாட்டாரா. வெட்கங்கெட்ட இந்த எழுத்தாளர்கள் நேற்றைக்குப் பிறந்தவருக்கு சகஸ்ரநாமாவெல்லாம் எழுதுகிறார்கள்.

ஆயிரம் பெயர்கள் யாருக்கு எழுதுவது மூடமனிதர்களே.. ஆயிரம் பெயர்களுக்குச் சொந்தக்காரன் எவன். ஒவ்வொரு பெயரும் எப்படி வந்தது. அறிந்திருக்கிறீரா பணத்திற்கு ஆயிரம் பேர் எழுதிக்கொடுக்கும் பதர்களே.

**அடர்ப்பொன் முடியான் ஆரென அறிந்திருக்கிறீரா**

**ஆயிரம் பேரான் யார் எனத் தெளிந்திருக்கிறீரா**

இந்தியாவிலிருந்து மாறுபட்டது தமிழகம். இங்கு அனைத்தும் சாதிய நோக்கிலேயே பார்க்கப்படுகிறது. எம் காலத்துத் தமிழர்களை நினைத்து பரிதாபப்படுவதா, வெட்கப்படுவதா, பயப்படுவதா. முரட்டுத்தனமும், முன்கோபமும், முன்முடிபுகளும், முதிரா மனமும் கொண்டுள்ள இந்த எளிய மனிதர்கள்தான் எவ்வளவு சாதிபார்க்கிறார்கள்.

தமிழ்ச் சாதிகள் ஒரு கடவுளையும் விட்டுவைக்கவில்லை. கடவுளருக்கு சாதிப் பெயர். தமிழ் வேந்தர்கள் அனைவருக்கும் சாதி ஒட்டு. தமிழரிடம் மாட்டிக்கொண்டு பெருமைமிகு இராஜராஜ சோழன் படும்பாடு ஒன்று போதுமே, தமிழரின் சாதிவெறியைச் சுட்டிக்காட்ட.

புத்திசாலித் தமிழர்கள். சாதிச் சங்கமொன்றில் பொதுச் செயலாளராக இருக்கும் ஒருவர், மதம் சார்ந்த அமைப்பிலும் மாநிலச் செயலாளராக இருக்கிறார். எவ்வளவு பத்திசாலித்தனம். சாதிக்கு சாதி. மதத்துக்கு மதம். சாதிக்கூட்டத்தில் தம் சாதிதான் தமிழகத்தை ஆளவேண்டுமென்பது. மதக்கூட்டத்தில் தம் மதமே உலகின் ஒப்பற்ற மதமென்பது.

சாதியை வைத்தே கட்சியொன்றிலும் பெரிய பதவியிலிருக்கும் இவரைப் போன்றவர்கள், எப்படியோ பணம் சம்பாதித்து, நான்கு பள்ளி மாணவருக்குப் புத்தகப் பையும், ஆஸ்பத்திரியில் இரண்டு பேருக்கு சாத்துக்குடியும் கொடுத்து, உலகின் ஒப்பற்ற சமூக சேவையாளராகப் பட்டம் வாங்கிக்கொள்கிறார்கள். அப்படியெனில் உண்மையான சமூக சேவகர்கள் யார். சமூகத்தில் அவர்களுக்கு என்னதான் மரியாதை. அவர் மரியாதையை விரும்பமாட்டார். குறைந்தது சமூகத்திற்கு ஒப்பற்ற சேவை செய்கிறார் என்பதையாவது மனிதர் அறிந்திருக்கிறாரா.

தமிழர் மானுட சேவையாளர்களை மதிக்கிறாரா, போற்றுகிறாரா அல்லது சாதியை, சாதிவெறியை முன்னெடுப்பவர்களை மதிக்கிறாரா. தமிழர் மதத்தைப் பின்னுக்குத் தள்ளி மனித நேயத்தை முன்னெடுக்கக் போகிறாரா அல்லது கடவுள்களை அவரவர் சாதியாய் சுருக்கி மதவெறியை, மடமையை முன்னெடுக்கப் போகிறாரா.

தமிழர் ஏன் இவ்வளவு சாதி பார்க்கிறார். மதத்தைக் காட்டிலும் தமிழர் சாதிக்கே முக்கியத்துவம் கொடுப்பது ஏன். தமிழ் வேந்தர்கள் யார். தமிழ்க் கடவுள்கள் யார். தமிழரின் முழுமுதல் கடவுள் யார். தமிழரின் ஒப்பற்ற ஒரே கடவுள் யார். தமிழருக்கு ஒரே கடவுளா அல்லது கடவுள்களா. அறிவோமா தமிழர்களே.

தமிழரே,

கடவுள் யார்

கடவுள் ஆணா பெண்ணா - அறிவோமா.

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன் - காண்போமா

காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன் - தெளிவோமா

கடவுள் ஆரென அறிவதற்கு முன்னால், கடவுள் ஒன்றா இரண்டா எனத் தெளிவதற்குமுன், கடவுள் ஆணா பெண்ணா எனப் ஆராய்வதற்கு முன்பாக, நாம் நம் நிலத்தையும், இயற்கையையும், தமிழ் மரபையும், மானுட மாண்பையும் முதலில் மீட்டெடுப்போமா தமிழ்ச் சொந்தங்களே.. நாம் உடனடியாக மீட்கவேண்டியது நம்

கிராமங்களை என்பதை அறிந்திருக்கிறோமல்லவா. நம் கிராமங்கள் அனைத்திலும் தன்னிறைவு பெற்றவையாக மீளமைப்பு செய்யப்பட வேண்டும். கிராமத்து மக்கள் எதற்காகவும் கையேந்தக் கூடாது. கிராமங்கள் கொடுப்பது அதிகமாகவும் பெறுவது குறைவாகவும் இருக்க வேண்டும். நமது ணழகிய ஊர்களை சாதியின் பிடியிலிருந்து முற்றாக மீள் கட்டமைப்புச் செய்யவேண்டியது மிக முக்கியம்.

தமிழர்களே, கண்ணனை காப்பாகக் கொண்டு கிருஷ்ணமூர்த்தி எனும் பெயர்கொண்டுள்ள யாம், இவ்வாறு சூளுரைக்கிறோம்.

1. யாம் தந்தையாம் காந்தியடிகள் விரும்பியவாறு அனைத்து ஊர்களையும் முழுதாக மீட்டெடுப்போம்.
2. யாம் யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் அமுத வார்த்தைக்கு ஏற்ப இப்புவியை அனைவருக்கும் சொந்தமாக்குவோம்.
3. யாம் உலகில் அன்பே சிறந்ததென சாசனமாக்குவோம்.
4. யாம் மனிதருக்கு அறிவே பெரியதென ஆவணமாக்குவோம்.
5. யாம் உலகில் மதத்தைவிட மனிதநேயமே பெரிதென்பதை சான்றாக்குவோம்.
6. யாம் உலகிலுள்ள அத்தனை மனிதரும் நாளும் வயிராற உணவுண்டதை உறுதி செய்வோம்.
7. யாம் உலகின் அனைத்துக் குடும்பங்களுக்கும் அழகியதொரு வீட்டையும், ஒரு நான்கு சக்கர வாகனத்தை உறுதிசெய்வோம்.
8. யாம் உலகின் ஒவ்வொரு பெண்ணுக்கும் குறைந்தது 100 கிராம் தங்க நகைகளையும், ஒரு வைர மூக்குத்தியையும், ஆண்களுக்கு 10 கிராம் தங்கத்தையும் உறுதி செய்வோம்.
9. யாம் பூமியின் மாசுபாட்டை அடியோடு அகற்றுவோம். இயற்கையைப் பாதுகாப்போம்.
10. யாம் மனித இதயங்களை அன்பால் இணைப்போம். அனைத்திலும் சமத்துவம் காண்போம்.

உலகம் யாருக்கு, உயிர்கள் யாருடையவை எனும் கேள்விகள் எப்பொழுதெல்லாம் எழுகிறதோ அப்போதெல்லாம் உலகத்திற்குச் சொந்தக்காரன்,

உலகனைத்தையும் சொத்தாகக் கொண்டிருப்பவன் வருவான் என்பதை மானுடர் மறந்துவிடுகிறார் போலும். சொத்துக்குரியவன் அவனல்லவா. வராமலிருப்பானா. அவன் எப்போதும் உறங்கிக்கொண்டே இருப்பான் என மானுடர் நினைத்து விட்டாரோ. அவனா உறங்குகிறான். அவன் உறங்குவது போல் நடிக்கிறான். ஆரறிவார் அவனை. அவன் வானத்திலிருந்தும் வருவான். வானத்திலிருந்து வரப்போகிறான் என வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தால், பூமியிலிருந்து முளைத்தெழுவான். ஆழ்வார் பாடுகிறார். வந்தாய் போலே வாராதாய், வாராதாய் போல் வருவானே. வருவான் என ஏங்கித் தவித்தால் வரமாட்டானாம். இனி எங்கே வரப்போகிறான் என நினைக்கும் போது வந்து நிப்பானாம். பொல்லாத மாயன்.

யாருடைய நிலமோ என்பதால்தானே தமிழர் நிலத்தைப் பாழ்படுத்துகிறார். அவர் உண்டாக்கிய நிலமெனில் இத்தனை மாசுபடுத்துவாரா. அவர் உருவாக்கிய நிலமெனில் இப்படி கட்டிடக்காடாக மாற்றுவதற்குச் சம்மதிப்பாரா. மனிதருக்கு நிலமெப்படி சொந்தமாகும். நிலத்தைக் கைமாற்றிவிட்டே கோடிகளைக் குவிக்கும் மனிதரே, நிலத்துக்குச் சொந்தக்காரன் யார். நிலத்தை மனிதர் எப்படி இன்னொருவருக்கு விற்கமுடியும். மனிதர் எப்படி நிலத்திற்கு உரிமைகொண்டாட முடியும். நிலம் யார் அப்பன் வீட்டுச் சொத்து. விற்பவர்தான் நிலத்தை உண்டாக்கியவரோ. ஊரைக் கொள்ளையடித்து, நிலத்தை வளைத்து பட்டா போட்டுக்கொண்டால் உமக்கு நிலம் சொந்தமாகிவிடுமா. வேலிபோட்டு வளைத்திருக்கிறீர் அல்லவா. ஆடு மாடு கூட உமது நிலத்தில் கால் வைக்கக் கூடாது. அவ்வளவு பேராசை உமக்கு. காடுகள் முழுதும் மின்வேலி. வரமாட்டான் என நினைத்தீரா. அப்படியே வந்தாலும் அவனுக்கும் கொஞ்சம் பிய்த்துக் கொடுத்து சரிக்கட்டிவிடலாம் என நினைத்திருந்தீரா. வருபவனை பெண்ணைக்கொண்டு தடுக்கமுடியுமா. பொன்னைக் கொண்டு மனிதரே.

நிலமுதலைகள் எமது அழகிய கிராமத்தின் அத்தனை நிலத்தையும் அபகரித்திருக்கின்றன. செவல்காடு முழுதும் வீட்டுமனைகள். கரிசல் பூராம் தனியார் சோலார் தட்டுகள். 100மெகாவாட் மின்னுற்பத்தியாம். பல்லாண்டுகளாக விவசாயம் செய்யப்பட்டு வந்த நானூறு ஏக்கர் நிலத்தை, திட்டம் போட்டு, எளிய மக்களை ஏமாற்றி வாங்கியிருக்கிறார்கள். சுற்றுப்பட்டி பூராம் ஆக்கிரமிப்பு. எங்கள் ஊர்கள் வளமானவை..

கருவேலக் காடுகள் இல்லாத ஊர்கள். பருத்தியும், மல்லியும், மிளகாயும், கொண்டல் பயிறும், கம்பும் விளையும் காடுகள். காடுகளை விற்பதற்கு அரசு எப்படி அனுமதிக்கிறது. உணவு விளையும் காடுகளில் தனியார் சோலார் தட்டுகள் வைப்பதற்கு அரசு ஏன் அனுமதிக்கிறது. ஒருவேளை அரசுகள் உணவை வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யுமோ.

எங்கள் கடலைக்காடுகள், தட்டாம்பயிறு, கொள்ளுக் காடுகளெல்லாம் வீட்டு மனைகள். புத்திசாலி மனிதர்கள் நிலத்தில் முதலீடு செய்கிறார்கள். விவசாயம் செய்யப்போவதாக சல்லிசாக நிலத்தை வாங்குவது, மறுக்கும் விவசாயிகளிடம் ஆசை வார்த்தைகளை அளந்துவிடுவது, பலமான சாதியில் ஆள் பிடிப்பது, எப்படியாவது ஏமாற்றி எழுதி வாங்குவது, நிலத்தை பிளாட்டாகக் கூறுபோட்டு விற்பது, மனைவிக்கு அட்டிகையும், துணைவிக்கு ஓட்டியாணமும் வாங்கிக் கொடுத்துவிட்டு, அடுத்து எந்த ஊரில் எந்த ஏமாளி நிலம் வைத்திருக்கிறானென தேடித் திரிவது. இதெல்லாம் ஒரு பிழைப்பு.

எங்கள் நிலத்தை பயிர் செய்யப்போவதாக ஏமாற்றி எழுதிவாங்கிவிட்டு, வீட்டுமனைகளாக்கி விற்கிறார் என ஊர்க்காரர் திரண்டெழுந்தால் என்ன செய்துவிடுவீர். அரசாங்கம் உங்களைத்தான் பாதுகாக்குமல்லவா. அதற்கு உங்களிடமிருந்து கிடைக்கும் அரையணா நிலவரி முக்கியமல்லவா. மீறி மக்கள் போராடினால் சுடும். விவசாயியை, விவசாயத்தை நம்பியா அரசுகள் இயங்குகின்றன. அரசுகளுக்கு யார் வேண்டுமோ அவர்களுக்குத்தான் துணை நிற்பார்கள். மக்கள் ஒரு ஊரில் திரண்டெழுந்தால் சுட்டு அடக்கிவிடுவீர். ஊர் ஊருக்குத் திரண்டால். திரளமாட்டாரா. அத்தனை ஊர்களையுமல்லவா பணமுதலைகள் கூறுபோட்டு விற்றிருக்கின்றன. என்றேனும் மக்கள் திரளுவர் ஆட்சியாளர்களே. உண்மை ஒருநாளும் தோற்காது. தர்மமும் நீதியும் எப்போதும் வெல்லும்.

விளை நிலங்கள் கூட்டுப் பண்ணைகளாக மாற்றப்பட்டு, ஊர் மக்களால் பாரமரிக்கப்பட வேண்டும். மானாவாரியாகப் பயிர்கள் செய்யப்பட்டு இலாபத்தில் ஊர்க்காரர்களுக்கு அறுபது சதமும், அரசுக்கு நாற்பது சதமும் ஒதுக்கப்பட வேண்டும். விவசாயம் செய்வதற்கான அத்தனை செலவுகளையும் அரசே ஏற்க வேண்டும். இடுபொருட்களை அரசே கொடுக்க வேண்டும். செலவுத் தொகையை விளைச்சலில்

எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயம் செய்வதால் மக்களுக்கு நட்டம் வரக்கூடாது. அரசுதான் திறமையாகச் செயல்பட வேண்டும்.

தமிழ்நாட்டின் நிலமத்தனையும் மீட்கப்பட்டாக வேண்டும். எந்த விளைநிலத்திலும் விவசாயத்திற்கென ஆழ்துளைகள் போடக்கூடாது. மக்களுக்கு குடிநீர்த் தேவைக்கு மட்டுமே, அதுவும் வேறுவழியே இல்லையெனில் மட்டுமே பூமியில் துளையிட வேண்டும். விவசாயத்திற்கான நீர் மழை மூலமே பெறப்பட வேண்டும். இதை மக்கள் அறமாகக் கொள்ள வேண்டும். உலகின் பல புத்திசாலிநாடுகள் நீர் அதிகம் தேவைப்படும் உணவுகளையும் பொருட்களையும் தம் நாட்டில் உற்பத்தி செய்யாமல், பிற நாடுகளின் வறுமையைப் பயன்படுத்தி அங்கு உற்பத்தி செய்து இறக்குமதி செய்துகொள்கின்றன. தமிழர் இதையெல்லாம் சிந்திக்க வேண்டும். தமிழகத்தின் நிலத்தடிநீரை உயர்த்துவதில்தான் தமிழர்களின் எதிர்காலம் அடங்கியுள்ளது. கீழே போய்விட்ட நீரை மேலேற்றுவது மிகக்கடினமெனினும் நம்மால் முடியும். எவ்வளவுதான் குறையிருந்தாலும் தமிழரிடம் நல்ல மனமிருக்கிறது. மிகுந்த இரக்க குணம் இருக்கிறது. நிலத்தைத் தாயாக வழிபடுவது நம் சிறப்பு. தம் தாயைத் தவிக்கவிட்டுப் பார்க்க தமிழருக்கு மனம் ஒப்பாது.

தமிழகத்தில் சில தமிழ்ச் சாதிகள் மனைவியோடு சுகமாய் சேர்ந்துவாழ முடியாதற்கும், மனைவியோடு மோதல் போக்கைக் கடைப்பிடிப்பதற்கும் உள்ள மிக முக்கியமான காரணம், அவர் மனைவிக்கு அடங்காததே. மனைவி சொல்லே பெரிதென்று கேட்காததே. சில தமிழர்கள் மனைவி சொல்லுக்கு அப்படியே அடங்குகிறார்கள். அவருக்கு மனைவி சொல்லே மந்திரம். அப்படியான குடும்பங்களே நிம்மதியாக இருக்கின்றன. அந்த ஆண்களே புத்திசாலித்தனமாக வாழத் தெரிந்தவர்கள், மனைவியின் மனதிற்குப் பிடித்த மகராசர்கள். உங்க வீட்டுக்கு இவ்வளவு பணம் அனுப்பனுமா எனக் கேட்கும் மனைவிடம், ஆமாமா, சரிதான், நீயல்லவோ அருமையான மதிமந்திரி என மனைவியைக் கொஞ்சிவிட்டு, பெற்றோருக்கு ஆயிரம் ரூபாய் குறைத்து அனுப்பினால் மனைவியிடம் பாராட்டுக் கிடைக்கும். உங்க அண்ணனும்தானே சம்பாதிக்கிறார், ஆளுக்குப் பாதியா அனுப்ப வேண்டியதுதானே எனச் சொல்லும் மனைவியை, அப்டியே வெள்ளைக்காரன் மூளடி எனக் கொஞ்சிவிட்டு அண்ணனுக்குப் போனைப் போட்டால். மனையாளிடம் சிறப்புப்

பரிசும் கிடைக்கும். மாறாக எம்மை எவ்வளவு கஷ்டப்பட்டு எங்க வீட்ல படிக்க வச்சாங்க தெரியுமா எனப் பேசினால், அண்ணன் கிராமத்தில் கூலி வேலை பார்க்குறாரு, யாம் அரசாங்க வேலை பார்க்கிறோம் என எதிர்த்தால், தொலைந்தது குடும்பத்தின் நிம்மதி. மனைவிடம் நல்லபேர் எடுக்கும் சூட்சுமம் தெரியாத சாதிகள் தமிழ்நாட்டில் எவை தமிழர்களே.

எமது ஊர் அனுபவத்தில் தேவர், தேவேந்திரர் வீடுகளில்தான் நிறையச் சண்டைகள் நடந்தன. பெரும்பாலான தேவரும் தேவேந்திரரும் மனைவியிடம் பெற்றோரை, அக்கா தங்கைகளை விட்டுக்கொடுக்க மாட்டார். மூவருள் அகம்படியார் கொஞ்சம் சமத்து. அகம் படியார் எனப் பெயர் இருந்தாலும் பெண்ணின் அகத்தை சற்று அறிந்தேயிருக்கிறார். மனைவியோடு சண்டை போடுவதில் நாடார் பரவாயில்லை என்றே தோன்றுகிறது. வணிகத்தை முன்னெடுப்பதால் கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போகிறார் போல. இப்போது காலம் மாறிவிட்டது தமிழர்களே. தேவர் வீடுகளுக்கு ஏகப்பட்ட நகைகளோடுதான் பெண்கள் வருகிறார்கள். அதை வைத்தே பெரும்பாலும் வட்டித்தொழில் நடக்கிறது. பின் எப்படி மனைவியை பகைத்துக் கொள்ளமுடியும். மாமானாரை எதிர்க்க முடியும். எது எப்படியிருந்தாலும் கணவன்-மனைவி ஒற்றுமையோடு மகிழ்ச்சியாக வாழ்ந்தால் சரிதான்.

எதற்குச் சொல்லவந்தோமெனில், தமிழரில் நிலத்தைத் தாயாக வணங்குபவர்கள் யார் யார். வணங்குவது உண்மையெனில் நம் தாய் எப்படி இருக்கிறார். நம் தாயை மீட்பது நம் கடமையல்லவா. நம் தாயை இப்படியுமா சல்லடையாகத் துளை போடுவது. சில சாதியார், சில மதத்தார், நிலத்தை வெறும் மண்ணாகப் பார்க்கிறார். அவருக்கு பூமி என்பது ஒரு பொருள். உயிரற்றது. அதை என்னவேண்டுமானாலும் செய்யலாம். தமிழருக்கு.. நம் முன்னோர் சொல் யாது தமிழரே. பூமியைப் பெண்ணாக, தாயாகப் போற்றுவதுதானே நம் மரபு.

வாருங்கள் தமிழர்களே.. நாம் நம் தாயை மீட்டெடுப்போம். தமிழ் நிலத்தைப் பொதுவுடைமையாக்குவோம். நாம் ஒத்த மனதோடு, உலகினரின் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய, நம் தமிழ் நிலத்தின் பெருமைக்குரிய நம் ஐயனின் ‘‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை’’ எனும்

புகழ்மிக்க சொற்களுக்கு ஏற்ப இந்நிலத்தை மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக்குவோம்.

எவ்வளவு பொருள் பொதிந்த குறள் எனச் சிந்திந்ததுண்டா தமிழர்களே. உலகின் அத்தனை ஞானத்தையும் ஏழு வார்த்தைகளில் சுருக்கிவிட்டானே நம் தெய்வப் புலவன். அனைத்து அறிவிலும் தலைமையானது, அனைத்து அறங்களிலும் தலையாயது பகுத்து உண்பதாம். அனைத்து உயிர்களையும் காப்பதாம்.

தமிழர் பகுத்துண்கிறாரா. அனைத்து உயிர்களையும் பாதுகாக்கிறாரா. தமிழர் அறம் பேணுகிறாரா. இல்லையெனில் தமிழ்மண்ணில் அறம் பிறழ்கிறதென உறுதி செய்யலாமா. தமிழ் மண்ணில் உயிர்களை வளர்க்க, பாதுகாக்க நிலத்தை மீட்பது தவறாகுமா. நிலத்தை வணிகப் பொருளாக்கி விற்கும் தமிழர் அறம் பற்றிப் பேச தகுதியுடையவரா. தமிழகத்தின் நிலமனைத்தையும் அறத்திற்காக, அறச்செயல்களுக்காக எடுத்துக்கொள்ளச் சம்மதமா தமிழர்களே.

குறளன் வரமாட்டான் என இறுமாந்திருந்தீரா பேரறிவுத் தமிழரே. ஒரு மாபலியிடம் நிலத்தைப் பெற்ற வாமனமூர்த்தியால், ஆயிரமாயிரம் மாபலிகளிடம் எப்படி நிலத்தை வாங்கமுடியும் எனச் சிந்திக்கிறீரா. மனிதரே இவ்வளவு சிந்திக்கும்போது, அறிவில் இவ்வளவு உச்சம் தொட்டிருக்கும்போது, உலகின் அத்தனை அறிவையும் அளக்கும் அந்த உத்தமன் அனைத்தையும் சிந்திக்காமலா அளக்கத் துணிவான். தமிழர் எவ்வளவு அறிவானவர் என்பதை அறியாதவனா அந்தக் குட்டன்.

சாதியைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்த பாரதத்தை, மனிதர்களை சாதிகொண்டு இழிவு செய்த பாரத நாட்டை, உடலாலும், உள்ளத்தாலும், உணர்வாலும் ஒத்த கோடிக்கணக்கான மனிதரை தீட்டு என ஒதுக்கிய இந்தியாவை, பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்த இந்துஸ்தானத்தை, ‘‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’’ எனும் குறளின் அறமொழிக்கு ஏற்ப இம்மண்ணில் வாழும் அனைவருக்கும் சொந்தமாக்குவோம்.

தமிழரே, வாருங்கள். உலகத்தை ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும் நம் முப்பாட்டன் முதுமொழிக்கு சாசனமாக்குவோம்.

தமிழர் முழுமனதோடு அறம் வளர்ப்பதே தங்கள் தலையாய குறிக்கோள் என நிலத்தை அனைவருக்கும் சொந்தமாக்கினால், உலகினரும் ஒருமித்த கருத்தில் உலக மானுடர் அனைவரும் ஒருதாய் பிள்ளைகள் என ஒப்புக்கொள்வர்.

The Ball is in Thamizh Court. In Thamizhar Heart

**நீயில்லாமல் என்றும் இங்கே இயங்காது பூமி**

**நீயறியாச் சேதியில்லை எங்க கிருஷ்ண சாமி..**

நிலமென்னும் நல்லாளை விற்கிறீர். வெட்டுகிறீர். உடைக்கிறீர், வெடிக்கிறீர். விடுவானா அந்த மாயக்கண்ணன். பூமிப் பெண் எத்தனையாயிரம் உயிர்க்குலங்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதை அறியாதவனா அந்த ஆராவமுதன்.

தமிழரே, தமிழ் நிலம் மிகப் பழமையான பொதுவுடைமைச் சமுதாயம் என்பதை எண்ணுவீர். எம் காலத்திலேயே மக்கள் சேர்ந்தே உண்டார் எனில், நம் முன்னோர் நிச்சயம் பகுத்துண்டே வாழ்ந்திருப்பர். பகுத்துண்பதே தமிழ் அறிவுக்குப் பெருமை.

நிலம் சமூகத்திற்குச் சொந்தமானதாக இருக்கவேண்டும். பெருமளவிலான விவசாயம் கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும். விளைபொருட்களுக்கு விலை வைக்கக்கூடாது. கூட்டாக உழைப்பவருக்கு நிலம் அளிக்கப்பட வேண்டும். இருப்பினும் எக்காரணம் முன்னிட்டும் நிலம் தனிப்பட்ட யாருக்கும் சொந்தமாகக் கூடாது.

வேளாண்மையில் எளிதான பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது. எதிலும் ஒற்றையாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நெல்லோடு மீனும் வளர்க்கலாம். பருத்தியோடு மல்லியும் விதைக்க வேண்டும். நிலத்தை திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும். மழைநீரைச் சேமிக்கும் நமது நீர்த்தேக்கங்களை பாதுகாத்தாலே போதும். தேவையெனில் ஆழமாக்கலாம்.

விளைநிலத்தை பத்துப் பத்து ஏக்கராகப் பிரித்துக் கொள்ளலாம். இடையில் போக்குவரத்துக்கென மண்சாலைகள் இருக்க வேண்டும். எந்த விவசாயமாக

இருந்தாலும் பத்து ஏக்கர் எனும் அளவில் செய்யப்பட வேண்டும். நிலங்களில் மேற்கொண்டும் தார்ச் சாலைகள், சிமிண்ட் சாலைகள் அமைக்கக் கூடாது. தமிழகத்தில் சாலைகள் அதிகமாகவே இருக்கின்றன. அவையே போதும். அவசியம் எனில் மண்சாலைகளை அமைக்கவேண்டும். நாம் மிக மெதுவாகவும் பயணிக்க வேண்டாம். அதிவேகமாகவும் பயணிக்க வேண்டாம். நமக்கு மிதவேகம் போதும்.

நமக்கான போக்குவரத்து வேகத்தின் அளவுகோள் என்ன. கன்னியாகுமரியிலிருந்து ஜம்மு காசுமீருக்கு ஒரு நாளில் அதாவது இருபத்து நான்கு மணி நேரத்தில் சென்றடைய வேண்டும். இந்தியத் தொடர்வண்டிக்கு இந்த வேகம் போதும். நமக்கு புல்லட் சேவை அவசியத் தேவையில்லை. அதற்குப் பதிலாக ஒட்டுமொத்த இருப்புப் பாதைப் பயணத்தைச் சீரமைக்க வேண்டும். போக்குவரத்தைப் பெரும் சேவையாகக் கருத வேண்டும். எதிலும் முறையான திட்டமிடுதல் வேண்டும். இரயில் பயணம் சுகமானதாக இருக்க வேண்டும்.

மனிதர்கள் விலங்குகளைப் பேண வேண்டும். அவைகளை நம் உறவாகக் கொள்ள வேண்டும். அவைகளை சிறுசிறு வேலைகளுக்குப் பழக்க வேண்டும். குறிப்பாக நாட்டுக் குரங்குகளை மனிதர்கள் பல வேலைகளுக்கும் பழக்கலாம். கிழக்காசிய நாடுகளில் தென்னை மரங்களுக்கு அழகாகப் பழக்கியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் சற்று சிரமமாக இருக்கலாம். கூட்டமாக வாழ்வதால் எளிதாகக் கட்டுப்படுத்தி விடலாம். வால்மனிதர்களுக்கென (நன்றி-திரு.ஜெயமோகன்) பழமரங்கள் கொண்ட பரந்த பூங்காக்களை உருவாக்க வேண்டும். வால் மனிதர்களை காய்கறி பழங்கள் பறிக்கப் பயன்படுத்தலாம்தானே. கற்றுக் கொடுத்தால் ஆடு, மாடு மேய்க்குமோ. பால் கறந்தாரும் ஆச்சரியமில்லை. காலப்போக்கில் அவர்களுக்கும் குடியிருப்புகளை உருவாக்க வேண்டும்.

விலங்குகளுக்கு மட்டுமே குடும்பக்கட்டுப்பாடு. குறிப்பாக தெருவில் திரியும் ஆண் நாய்களுக்கு உடனடியாகக் குடும்பக்கட்டுப்பாட்டு சிகிச்சையை மேற்கொள்வது அவசியம். எனினும் அவை ஒருமுறையாவது அதன் சந்ததியைப் பெருக்கியிருக்கிறதா என்பதையும் அறியவேண்டும். காட்டு விலங்குகளையும் மனிதர் ஆராய வேண்டும். விலங்கியல் படிக்கும் மாணவர்கள் விலங்குகளைத் தவிர மற்ற அனைத்தையும் படிக்கிறார்கள். பட்டம் மட்டும் விலங்கியல். ஆனால் ஒரு விலங்கையும் படிப்பதில்லை.

ஒரு விலங்கையும் பார்ப்பதில்லை. விலங்கியல் படித்தவுடன் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏராளமான வேலைகள் இருக்கின்றன. விலங்கியல் மாணவர்கள் விலங்குகளோடு பழக வேண்டும். பழக்கவும் வேண்டும்.

கிராமங்களில் பறவைகளுக்கென ஓரிடத்தில் தானியங்களும் தண்ணீரும் தினமும் போட்டுவைக்க வேண்டும். நகரங்களிலும் இதை மேற்கொள்ள வேண்டும். விலங்குகளை வேட்டையாடுவது தடுக்கப்பட வேண்டும். ஒருவேளை எதிர்காலத்தில் அதீதப் பெருக்கம் இருந்தால், முறையான ஆராய்ச்சிக்குப்பின், முறையான வழியில் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தலாம்.

மனிதர்களுக்கு மனக்கட்டுப்பாடே சிறந்தது. மனிதர்கள் அனைத்திலும் மனக்கட்டுப்பாட்டைப் பயில வேண்டும். இந்திய யோகமுறை மனிதகுலத்தின் அருஞ்சொத்து. உடலையும் மனதையும் சீராக்குவதற்கு யோகப் பயிற்சிகள் அருமையான மருந்து. மதம் கடந்து அனைத்து மனிதர்களும் பயில வேண்டும். குறிப்பாக மூச்சுப் பயிற்சிகள் சிறப்பானவை..

மனிதருக்கு மாபெரும் விவாதம் ஒன்று காத்திருக்கிறது. மனித குலத்தார் விலங்குத் தோழர்களை அப்படியே விட்டுவிட்டு பூமியிலிருந்து கிளம்பப் போகிறாரா அல்லது காங்கோவின் பெருமூப்பன் மூப்பியையும், கருப்பையா கருப்பாயியையும், பாரதத்தின் குப்பன் குப்பாத்தாவையும், ஆசியாவின் குட்டன் குட்டம்மாவையும் சமூகமாக்கிவிட்டு, கற்றுக்கொடுத்துவிட்டு, அவர்கள் கைகளில் பூமியைப் பத்திரமாக ஒப்பளித்துவிட்டுக் கிளம்பப் போகிறாரா. உலகின் ஒட்டுமொத்த மனிதர்களும் ஓட்டளித்து இதைத் தீர்மானிக்க வேண்டும். அறிவுஜீவிகள் கருத்துக்களை உருவாக்க வேண்டும். மனிதர்கள் விவாதிக்க வேண்டும்.

ஓ.. மனிதர்களே.. நமக்கு சிறகு முளைத்துவிட்டது. இனி நம்மால் பூமித்தாயின் அரவணைப்பில் அதிக காலம் இருக்கமுடியாது. நாம் பறக்கத் தயாராகிவிட்டோம். பறக்கத்தான் போகிறோம். நம் முன்னோர் நம்மைப் போலவேதான் பறந்திருப்பர். நமக்குப் பின்னும் நம் போலவே பறப்பர். நாம் பறக்கப் பிறந்திருக்கிறோம். நாம் பறப்பவர்கள். எப்போதும். எங்கும். எதிலும். எப்படியும்.

உண்மையில் மானுடர் மிகுந்த பாராட்டுக்குரியவர். மனிதர் சாதித்துவிட்டார். அவர் சாதனையை அவரே இன்னும் அறியவில்லை. மனிதர் மாபெரும் வெற்றி கண்டிருக்கிறார். மனிதர் உலகின் அன்பை வளர்த்தார். அறிவைப் பெருக்கினார். ஞானத்தை ஊட்டினார். ஏன் என இயற்கையை ஆராய்ந்தார். எதற்கு என பூமியைக் குடைந்தார். எப்போது என வானத்தைத் துழாவினார். எப்படி என அறிவை விரிவாக்கினார். அறியுந்தோறும் முன்நகர்ந்தார். காடு திருத்தினார். கழனியாக்கினார். நீரைத் தெய்வமென்றார். பயந்தார். பணிந்தார். வேண்டினார். கூட்டினார். பெருக்கினார். வகுப்பதையும் பகுப்பதையும் தெளிந்தார். படை நடத்தினார். பாராண்டார். கலை வளர்த்தார். கவிதை புனைந்தார். பாடினார். ஆடினார். காதலானார். கடவுளானார். அறம் பேணினார். அடிமை செய்தார். அறிவியல் நெய்தார். நுட்பமானார். சிறிதினும் சிறியதை உற்று நோக்கினார். பெரிதினும் பெரியதைத் தேடினார். கண்டுகொண்டார். பறக்கத் தயாராகிவிட்டார். மனிதர் பறக்கப்போகிறார்.

நாம் மனிதரைக் கொடூரமாகக் கொன்றோம். மனிதர்கள் மீது அதீத இரக்கமும் காட்டினோம். வியக்கவைக்கும் அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடித்தோம். தீரத்துடன் போரிட்டோம். கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்தோம். விலங்குகளைப் பலியிட்டோம். காடுகளை அழித்தோம். கண்ணீரும் வடித்தோம். ஆறுகளை மறித்தோம். கடல்களைத் தாண்டினோம். சிகரங்கள் தொட்டோம். நுண்ணுயிரிகளைக் கண்டுபிடித்தோம். அணுக்களைக் கண்டறிந்தோம். எட்டாக் கோள்களையும் இங்கிருந்தே பார்த்தோம். விண்ணை முட்டும் கட்டிடங்களைக் கட்டினோம். ஆர்வமாக விளையாடினோம். சிறந்த இசையை ரசித்தோம். உன்னத இலக்கியங்கள் படைத்தோம். உணர்ச்சிகரமான படங்களைத் திரையிட்டோம். அழகாக உடுத்தினோம். அனைத்தையும் சுவைத்தோம். காதலால் கட்டுண்டோம். காமத்தில் திளைத்தோம். புவியைச் சுருக்கினோம். வானத்தை வளைத்தோம். மனங்களை இணைத்தோம். மனிதரை ஒன்றாக்கினோம். இன்னும் என்ன. புறப்படுவோமா மாமனிதரே. நம்மை நினைத்து குளிர் நிலவுக்குக் காய்ச்சலாம். செவ்வாய் நடுங்கிக் கிடக்கிறதாம். பெரியவியாழனுக்கு வேர்த்துக் கொட்டுகிறதாம். சனிக்கு வெடவெடப்பாம். பின்னே நாம் பூமியைக் கலக்கியது அவர்களுக்கும் தெரியும்தானே. நம் குடும்பத்தாரல்லவா. நம் குடும்பம்தான் எத்தனை பெரிது மனிதரே.

மனிதர் பறந்தேவிட்டாரோ. அறிவு செய்த மாயமல்லவா. மனிதர் பறப்பது யாராலே. மனிதர் பறப்பதற்கான விதை போட்டது யார். பயிராக்கியது யார். பராமதித்தது யார். பூக்க வைத்தது யார். பிஞ்சு காயாகவும், கனியாகவும் மாறியது யாராலே. கனிகள் யாருக்கு. சுவைகள் யாருக்கு. விதைகள் யாருக்கு.

அ.. மானுடரே.. விதை ஏன் மரமாகிறது

உ... பாரதத்தீரே.. கனிகள் ஒன்றெனினும் சுவைகள் வேறுபடுவது எப்படி

ம.. தமிழரே.. விதை புதுமலராவதும், புதுவிதையாவதும் யாரால்

மனிதர் உயரப் பறப்பது யாராலே. மனிதர் பறக்குமளவுக்கு அறிவு வந்தது எப்படி. மனிதர் அறிவு யாருடையது. அறிவை விலைபேசி கூவிக்கூவி விற்கும் மனிதர்களின் அறிவு ஆருக்குச் சொந்தம். மனிதர் அறிவு தாவர விலங்கு அறிவா. மனிதர் அறிவில் மண்ணுக்குப் பங்குள்ளதா. நீரும் நெருப்புக்கும் பங்குண்டா. கடலுக்கு. மனிதர் அறிவில் சந்திர சூரியர்களின் அளவென்ன. மனிதர் பறக்கும் அறிவை எங்கிருந்து பெற்றார். பூச்சிகளிடமிருந்தா. பறவைகளைப் பார்த்தபோதா. உண்மையெனில் அவர்களன்றோ மனிதரின் பறக்கும் ஆசிரியர்கள்.

மனிதர் அறிவில் வானுக்கும், வானில் ஊர்வலம் போகும் மேகங்களுக்கும், வானின் மின்னல் தோரணங்களுக்கும் உரிய பங்கை அளிப்பதுதானே முறை.

அறிவின் உச்சம் தொட்டுவிட்ட மனிதரே. நம் அறிவில் தேவர்களின் பங்கு என்ன. தெய்வங்களின் பங்களிப்பு எவ்வளவு.

ஒய் ஓமோ செப்பியன்சு. தாவரங்கள் யார்.. விலங்குகள் யார்.. தேவர்கள் யார்..

அகிலத்தின் ஆயிரமாயிரம் பாடல்களை புதிதாகப் பாடுவது யார். புதிதாக இசைப்பது யார். கீதம் யார். கீதன் யார். கீதாசாரியன் யார். ஜீவன் யார். தேவர்கள் பாடுவது யாருக்காக.

ஓ..வண்ணத்துப் பூச்சியே. பாதை வேறாயினும், பயணம் வேறாயினும் சேரும் இடம் ஒன்றல்லவா.

ஓ..பட்டர்ப்பிளை. பாடல் வேறாயினும், ராகம் வேறாயினும் இசை பொதுவல்லவா.

Oh Butter fly. Don't fly away when we near You.

Petal is Same. Same Nector. How can You distinguish Tastes.

ஆழகிய பட்டாம்பூச்சியே

தாமரைத் தடாகத்தில்

மதுவுண்ட மயக்கத்தில்

நிலவொலியில் சயனித்துக் கிடந்த

அன்றுதானே முதன்முதலாய்

நட்சித்திரங்கள் நகர்வதைப் பார்த்தாய்

அந்நாளை இப்போதும் பதட்டத்துடன்தான் நினைவுகூர்கிறாயல்லவா

மதுக்கிறக்கத்திலும் துள்ளியெழுந்தது நினைவிருக்கிறதா

பயந்தாய் சட்டெனப் பறந்தாய்

கூடவே வருவது கண்டு குழம்பினாய்

கூட்டத்தாரை எழுப்பினாய்

மேகம் மறைத்ததோ எனத் திகைத்தாய்

மறுநாள் மதுக்குடிக்காமல்

ஆளுக்கொரு இலையில்

ஆகாயத்தையே அளந்துகிடந்தீர்கள்

ஒளியும் ஒலியுமாய் அந்நாளும் நகர்ந்தது

ஏன் எதற்கு என ஒன்றுகூடி விவாதித்தது சண்டையில் முடிந்தது

ஆண்கூட்டம் ஆபத்து என்றது

பெண்திரள் தேவா்கள் என்றது

மொத்தஇனமும் மௌனமாகியது

விரியும் இதழ்களில் வழியும் இரசத்தை உறிஞ்சாமல்

மலா்கள் தோறும் புகாா் வாசிக்கின்றன கூட்டமாய்.

என்ன குறைச்சல் என்ன குறைச்சல்

சொா்க்கக் கதவுகள் திறக்குமோ

சரசத்தில் சிறந்தவா்களோ

இதழமுதத்தில் தோ்ந்தவா்களோ

நித்திரை இல்லாதவா்களாமே

பேதைக்கு போதையானவா்களாமே

எப்படித் தடுப்பது

மலா்களே மௌனம் ஏன்

வெள்ளைவெளேரென இருந்தால்

தங்கம்போல் மின்னினால்

காந்தக் கண்களைக் கொண்டிருந்தால்

ஏதாவது பேசுங்களேன்

பனியில் நனையும் ரோஜாக்கூட்டங்களே

என்னசெய்வதென்று சொல்லக்கூடாதா

மலா்கள்தான் நாடகமாடுகின்றன

பூக்களும் புலம்பித் தவிக்கட்டும் எனப் புன்னகைக்கின்றன

வானத்து வெண்ணிலவே

நீயாவது சொல்லக்கூடாதா

பறப்பது மனிதர்களென

நிலவறியாத தேவர்களா. நிலமறியாத வானவர்களா. மனிதர்கள் தேவர்களாகிவிட்டார்தானே. அனைத்திலும். சோமபானமென்ன. சுராபானமென்ன. மனிதரே.. சுரா பானம் எங்கிருந்து வந்ததாக கதைகள் சொல்லப்பட்டுள்ளனவோ, தற்போதும் அங்குதான் அதிகம் விளைகிறதாம். புராணங்கள் உண்மைதானோ. இந்திரன் இருந்திருப்பானோ. ஒரு ஆடலுக்கு மனிதர் சொக்கிப் போகிறாரல்லவா. எத்தனை மில்லியன் பேர் ஒரு பாடலைப் பார்த்து ரசிக்கிறார். ஓய்யாரமாய் நடந்துபோகும் ஒரு இளம்பெண்ணை அத்தனை கண்களுமல்லவா மொய்க்கின்றன. நடிகையைப் பார்க்க இப்படியுமா அடி வாங்குவார்கள் நிலத்தேவர்கள்.

மனிதருக்கும் சிறகுள்ளதை பூச்சிகள் அறியாமல் இருக்கலாம். கடவுளர் அறிவாரல்லவா. உண்மையில் கடவுளர்தாம் மனிதருக்கு நன்றி சொல்ல வேண்டும். குறிப்பாக இலக்கியக்காரர்களுக்கு. அனைத்து மனிதரும் உலகங்காக்கக் கிளம்பிவிட்டார். மனிதர் எமதுலகம் என்கிறார். எம் மக்கள் என்கிறார். கடவுளுக்கு வேலைப்பளு குறைந்தது. அனைத்துக் கடவுளருக்கும் வேலை மிச்சம். அனைத்து நாடுகளும் உலகம் காக்க வரிந்துகட்டி நிற்கின்றன. பூமியின் படைகள் பூமியைக் காக்க எப்போதும் தயாராக இருக்கின்றன. மனிதர் பூமியைக் காப்பார். உறுதியாக.

பூமியார் அனைத்தையும் பாதுகாக்கிறார். பூமியின் நீரை மாசாக்காதே என உலகமெங்கும் எதிர்க்கிறார். ஆறுகளைப் பாதுகாப்போம் என அணிதிரள்கிறார். காற்றை மாசாக்கும் தொழிற்சாலையை இழுத்துமூடு என்கிறார். சுட்டாலும் பரவாயில்லை, பூமியைக் காப்போம் எனப் போராடுகிறார். கொடுத்து வைத்த பூமி. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாய். பிள்ளைகளின் ஆட்டத்தைப் பார்த்து அம்மா எப்படியெல்லாம் பூரித்தாரோ.

பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானவுடன் பிரிந்து செல்வார்கள் என்பதைப் பெற்ற மனம் அறிந்தே இருக்கும். பிள்ளைகளைப் பிரிவது தாயின் மனதில் ஏக்கமாகவும் இருக்கும். பெற்ற தாயைப் பிரிவது பிள்ளைகளுக்கும் துயரம்தான்.

தாய் எப்படியெல்லாம் வளர்த்தாள். பசித்திருக்கப் பார்க்காத தாயல்லவா. சில நேரங்களில் பசிந்திருந்தது தாயால் அல்லவே. அது மனிதர் பேராசையாலல்லவா. பிள்ளைகள் தாகம் தீர்க்க ஆறாய் ஓடியது அன்னையல்லவா. அரிசியாய், கோதுமையாய், சோளமாய் மக்கள் வயிற்றை நிறைத்தது அம்மாவல்லவா. மனிதர்களைப் பெற்று, வளர்த்து ஆளாக்கி சிறகு முளைக்க வைப்பதற்கு தாய் பட்டபாடு கொஞ்சமா. அன்னையே.. உழைப்பு ஒருநாளும் வீண்போகாதாம். இதோ உம் பிள்ளைகள் பறக்கிறோமம்மா. நாங்கள் உயரப் பறக்கிறோம். அம்மாவின் புகழ் பாடிக்கொண்டே நாங்கள் உயரப் பறக்கிறோம். உங்கள் பெருமைகளைச் சுமந்து, உங்கள் அன்பைச் சுமந்து, உங்கள் அறிவைச் சுமந்து, நாங்கள் உயர உயரப் பறப்போம். நாங்கள் எங்கு சென்றாலும் எங்கள் அன்புத்தாயை ஒருபோதும் மறவோம்.

தாயே.. நாங்கள் தலை நிமிர்ந்து நெஞ்சை உயர்த்தி உரக்கச் சொல்லுவோம். நாங்கள் பூமித்தாயின் புதல்வர்கள்.

Yes Mother.

We are Your Children.

We are the Loving Children of Our Great Mother EARTH.

We Love Our Prestigious Mother. Long Live Mother.

எங்கள் பெருமைமிகு அம்மா.. நீங்கள் என்றென்றும் சிறப்புற்றுத் திகழ்க. அன்னையைப் போற்றுகிறோம்.. அன்னையின் அன்பைப் போற்றுகிறோம்..

**In the Name of SriKannan, I am appointing the Following;**

Commander - in - chief of East - China

Commander - in - chief of West - United Kingdom

Commander - in - chief of North - Russia

Commander - in - chief of South - Southern Africa

Protector of Earth – India

Guardian of Sky – United States of America

Premier of Sun – Japan

Protector of Moon – Korea

Guard of Mercury – Chile

Guard of Venus – Afghanistan

Guard of Mars – Mexico

Prime of Titan – Greek

Defender of Jupitar – Italy

Defender of Saturn – Argentina

Guard of Uranus – Romania

Guard of Neptune – Sri lanka

Custodian of Pluto – Laos

Gaudian of Light – Peru

Prime of Water – Canada

Keeper of Fire – Iran

Defender of Air – Vietnam

Preserver of Soil – Philipines

Head of Plants – Brazil

Supreme of Animals – Central Africa

Custodian of Mankind – Eastern Africa

Master of  Vegetables/ Fruits – Western Africa

Keeper of  Flowers – Netherlands

Custodian of  Trees – Malaysia

Patron  of  Forest – Columbia

Guard of  Rain – Myanmar

Keeper of  Thunder/ Lightning   –  Bhutan

Ruler of  Mountains – Nepal

Preserver of  Snow – New zealand

Principal of  River – Pakistan

Leader of Sea - Portugal

Defender of  Number – Kingdom of Saudi Arabia

Keeper of  Letter – Gautimala

First of  Book – Isreal

Guard of  Literature – Ireland

Supreme of  Languages  –Tamil Nadu, State of  India

Preserver of  Mind – Austria

Chief of Rice – Thailand

Chief of Wheat – Ukrain

Chief of Sorghum – Sudan

Guardian of Diamond  –  Angola

Preserver of  Gold – Indonesia

Keeper of  Iron – Australia

Guard of Silk – Uzbekistan

Skipper of Sports – Spain

Patron of  Music – Mangolia

Keeper of Time – Switzerland

Preserver of History – Turkey

Protector of Ancesters – Egypt

Custodian  of  Science – Germany

Guard of  Buddha – Cambodia

Guard of  Jesus Christ – Armenia

Guard of  Mohammed Nabi  – Libya

Prime of  Love – France

Authority of  Peace – Scondinavian Countries

Keeper of  Religions  –  India     (வளரும்)

கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வருகிறான்

கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்

பார்த்தனுக்குப் பாடம் சொன்ன தீர்த்தன் வருகிறான்

பசித்தவர்க்கு விருந்தளிக்க அமுது கொணர்கிறான்

மாபாரதத்தின் கண்ணன் வருகிறான்

வள்ளல் வருகிறான். அன்பு வள்ளல் வருகிறான்.

தாயே உயிரே தமிழே நினைவணங்கும்

சேயேன் பெறற்கரிய செல்வேமே - நீயே

தலை நின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தோம் நீயிங்

கிலையென்றால் இன்பமெமக் கேது (நன்றி திரு. முடியரசன்)

தமிழருக்கு இரண்டு அன்னையல்லவா. தமிழா் மண்ணை அன்னையாகக் கொண்டாடினாலும் மொழியல்லவோ, தமிழ்ப் பற்றல்லவோ ஒருபடி கூடுதலாகத் தெரிகிறது. எதனால் தமிழா் மொழிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாா். தமிழா் மொழியின் வீச்சை, வலிமையை, ஆற்றலை அறிந்துள்ளது பெரும் வியப்பிற்குரியது. அதிலும் உலகின் முந்து மொழி எங்கள் தமிழ்மொழியே எனச் சாதித்தது பெரும் சிறப்பிற்குரியது.

தமிழா் மிகச் சரியாகவே அடையாளம் கண்டுள்ளாா். மனிதருக்கு மொழியே அனைத்தும். மனிதா் மனத்தால் உந்தப்படுகிறாா். மனதிற்குக் காரணம் மொழி. விலங்கு நிலையிலிருந்த மனிதா் பரிணாம ஏணியில் மேலேறி வந்தது மொழியாலே. மொழியே மனிதரைப் பிணைத்தது. மொழியே மனிதரை வழிநடத்தியது. மொழியே மனிதரை உயா்த்தியது. மனிதரை மேலும் மேலுமென உயா்த்தப் போவதும் மொழியே..

தமிழா் பாராட்டுக்கும் புகழுக்கும் உரியவா். தமிழ்மொழியே உலகமெங்கும் நாகரிகத்தை எடுத்துச் சென்றதாக தமிழா் அறுதியிடுகிறாா். உண்மைதானா. சுமேரியா தொடங்கி, ஆப்பிரிக்கா, கிழக்காசியா, அமெரிக்கா என உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியிருப்பது தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் என்பதில் உண்மையிருக்கிறதா. உலகம் முழுதும் தமிழினப் பண்பாட்டு வோ்கள் பரவியிருக்கிறதெனில், எப்படிப் பரவியது. பரப்பியது யாா். பரப்பியதன் நோக்கம் என்ன.

ஆங்கிலேயருக்குமுன் உலகத்தை ஒன்றிணைத்தது தமிழா் என்பதற்குச் சான்றுகள் உள்ளனவா. தமிழா் நாகரிகம் போன்றே பெருமைக்குரிய நாகரிகங்கள் உலகத்தில் இருந்தனவல்லவா. உலகை ஒன்றாக்கியதில் அவா்களது பங்களிப்பு எவ்வளவு. இந்தியப் பண்பாடென்பது தமிழா் பண்பாடே எனத் தமிழா் பேசுவதை இந்திய மனம் ஏற்குமா. கிழக்கின் பண்பாட்டுக் கூறுகளுக்குக் காரணம் யாா். தமிழரா.

பாரதத்தாரா. பாரதத்தார் எனில் அவர் யார் அல்லது யார் யார். தமிழர் எனில் தமிழகத்தில் யார். இன்னும் வெளிப்படையாகச் சொல்வதானால் எந்தச் சாதி.

**வசந்தகாலத் தென்றல் காற்றாய் வரும் கண்ணன்**

முன்னர் செழிப்புற்றிருந்த எகிப்திய, கிரேக்க, உரோம, பெர்சிய, சீன நாகரிகங்களின் தற்போதைய நிலை என்ன. தமிழர் நாகரிகத்தின் தற்போதைய நிலை எப்படி இருக்கிறது. தமிழருக்கு வரலாற்றுப் பிரஞ்கை உள்ளதா. தமிழர் உலக வரலாறு அறிந்திருக்கிறாரா. உலகின் வரலாறு தெரியாமல் உலகை எப்படி வெல்வது, ஆள்வது.

தமிழர் முன்னைய வரலாறு தெரிந்துதான் உலகை ஆளத் துடிக்கிறாரா. உலகை ஆள ஆசைப்படுபவர் அதற்கேற்றவாறு தம்மைத் தயார்ப்படுத்தியிருக்கிறாரா. தமிழர் உலகை எப்படி ஆளப்போகிறார். என்னென்ன செயல்திட்டங்கள் வைத்திருக்கிறார். ஆள்வதென்றால் எப்படி. அராபியர் போன்றா, அய்ரோப்பியர் போன்றா அல்லது தமிழருக்கென்று குறிப்பிட்ட ஆட்சிமுறை இருக்கிறதா. தமிழர் எதை ஆதாரமாகக் கொண்டு, தமிழர் எதைத் தர்மமாகக் கொண்டு. தமிழர் எதைத் தலையாய அறமாகக்கொண்டு உலகை ஆளப்போகிறார்.

தமிழர் அன்பால் உலகை ஆளப்போகிறாரா. தமிழர் உலகை அறிவால் உயர்த்தப் போகிறாரா. தமிழர் வீரத்தால் உலகை அடக்கி ஆளப்போகிறாரா. ஓட்டுக்குப் பணம் கொடுத்து ஆட்சிக்கு வருவதுபோல் தமிழர் தமது செல்வத்தையெல்லாம் வாரியிறைத்து உலகின் ஆட்சியைப் பிடித்துவிடலாம் எனக் கனவு காண்கிறாரோ. தமிழர் உலகின் ஞானமென்னும் பயிரை மேலும் செழிப்பாக வளர்ப்பதற்கா உலகாள விரும்புகிறார்.

**கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா**

**கீதையின் நாயகனே கிருஷ்ணா கிருஷ்ணா**

தமிழர் எதற்காக உலகாள விரும்புகிறார். துடிக்கிறார். தற்போது உலகாள்பவர் சரியில்லை என்பதாலா. உலகின் தற்போதைய ஆட்சியாளர்கள் சரியில்லையா தமிழர்களே. அன்னார்கள் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்களா. வரி மேல் வரியாகப் போட்டு மக்களை வதைக்கிறார்களா. மக்களுக்கான அடிப்படை

வசதிகள்கூடச் செய்துதரவில்லையா. ஆட்சியாளர்கள் அவரவர் சுகபோகங்களில் மட்டுமே குறியாக இருக்கிறார்களா. இயற்கையைச் சூறையாடுகிறார்களா. உலகையே குப்பைமேடாக்கி விட்டார்களா. ஆறுகளைச் சாக்கடையாக்கி விட்டார்களா. தொழிலாளர்களைச் சுரண்டுகிறார்களா. கல்வியை வணிகமாக்கி விட்டார்களா. ஒட்டுமொத்த உலகையே ஆயுதக்குவியலாக்கி விட்டார்களா.

தமிழர் உலகாண்டால் அனைத்தையும் சரிசெய்து விடுவாரா. உலகை நெகிழியின் கோரப்பிடியிலிருந்து விடுவித்துவிடுவாரா. உலகின் மாசுபாடனைத்தையும் போக்கிவிடுவாரா. உலகின் அனைத்து மனிதருக்கும் சோறிடுவாரா. தமிழர் உலகின் நிலமனைத்தையும் பொதுவுடைமை ஆக்குவாரா. உலகின் அத்தனை மனிதருக்கும் வீடு கட்டிக்கொடுப்பாரா. உலகின் அனைத்து மனிதருக்கும் தரமான மருத்துவ வசதியை தமிழரால் கொடுக்கமுடியுமா. உலகின் அனைத்து மனிதருக்கும் வேலைகொடுக்க தமிழரால் முடியும்தானே. உலகின் ஆண் பெண்ணை குடும்பமாய் வாழச் செய்யவும் தமிழர் நிச்சயம் நல்ல திட்டங்களை வைத்திருப்பார்.

தமிழன்னா சும்மாவா. நாடாண்டவங்க நாங்கடா. முன்னாடி ஆண்டது எங்க முப்பாட்டன்டா. உலகாளப் பிறந்தவங்க தமிழரடா. தரணியாளப்போவது தமிழடா.

**கண்ணன் வரும் நேரமிது**

கோதையின் தித்திக்கும் அமுதன்
இராதாவின் பிரியமான தோழன்
மீராவின் மனமோகனன்
காற்றினிலே வரும் கீதம்
கல்லும் கனியும் கீதம்
ஜெயக்கண்ணா முகுந்தா முராரே

தமிழர் அழகாகப் பேசுகிறார். தமிழர் நன்றாகவே பாடுகிறார். தமிழர் அருமையாகவே எழுதவும் செய்கிறார். ஆளப்போறான் தமிழன். ஆளப்போவது தமிழ்.

தமிழா் உலகமாள ஆசைப்படுவது இருக்கட்டும். தமிழருக்கு உலகமாளும் தகுதியிருக்கிறதா. தமிழா் மாநிலத்தை ஆள்கிறாரல்லவா. எப்படி ஆள்கிறாா் தமிழா். இந்த லட்சணத்திலா தமிழா் உலகை ஆளப்போகிறாா். உலகத்தாா் சிரிக்கமாட்டாா்களா தமிழரே.

**சின்ன சின்ன கண்ணனுக்கு என்னதான் புன்னகையோ**

தமிழா் உலகம் எத்திசையில் போகிறதென அறிந்திருக்கிறாரல்லவா. உலகில் அனைத்தும் சேவையாகிவிட்டதுதானே. மரச் சேவை - ட்ரீ சா்விஸ் - வந்து வெகுகாலமாகிறது தமிழா்களே. மரச் சேவை மையமாம். மரம் சுத்தப்படுத்த - மரம் வெட்ட - மரம் அறுக்க - மர நோய்க்கு - மர உரத்திற்கு - அவசரகால மரச் சேவைகளுக்கு - மின்னல் பாதுகாப்பிற்கு - புயல் பாதுகாப்பிற்கு - பூச்சி பேன் தொல்லைகள் ஒழிக்க - மரக்கட்டைகள் பராமரிப்பிற்கு - என்ன ஒரு அழகான பிசினஸ். மரத்தைக் கும்பிடும் தமிழரும் இப்படியான தொழில் வாய்ப்புகளைத் தவறவிடக்கூடாது.

மனிதருக்கு அனைத்தும் பிசுனசு. ஒரு பொருளைப் பாா்க்கையிலேயே பிசுனசு கண்கொண்டுதான் பாா்க்கிறாா். ஒரு மனிதரைப் பாா்க்கும்போதே அன்னாரால் எவ்வளவு லாபம் வருமென்றே பாா்க்கிறாா். லாபத்திற்கேற்ப புன்னகையும், பேச்சும் மாறுபடுகிறது. மனிதா் எது செய்தாலும் என்ன லாபம் என்றே கணக்கிடுகிறாா்.

மனிதா் அனைத்திலும், அனைத்தையும் கணக்காகப் பாா்ப்பதுபோலவே இயற்கையிடமும் ஒரு கணக்கிருக்கிறது போலும். நம் தாத்தாக்கள் ஆறுகளில் நீரருந்தினாா்கள். அப்பாக்கள் கிணறுகளில். நாமோ குழாய்களில். மகன்கள் குப்பிகளில் குடிக்கிறாா்கள். பேரன்கள்.. பேரன்கள் எப்படிப் போனால் நமக்கென்ன. நல்ல ஞானமல்லவா தமிழரே. Is it Modern Jnana. Is it Wisdom. Is it Sabiduria. Is it Sabedoria. Is it Sagesse. Is it Weisheit. Is it Sapience. Is it Jihye. Is it Chishiki. Is it Zhi hui.

நீரை விற்பது தா்மமா. அறமா. விற்கலாமா. மழைநீரைக்கூட நம்மால் பொதுவாக்க முடியவில்லையே. உலகை எப்படி பொதுவாக்குவது தமிழரே.

**பிருந்தாவனமும் நந்தகுமாரனும் யாவருக்கும் பொதுச்செல்வமன்றோ**

ஞானம் என்பது அறிவாம். அறிவை அறிதலாம். அறிவைத் தெளிதலாம்.

வின்னின் ஞானத்தை அறிந்தவர்கள் விஞ்ஞானிகளாம். மெய்யின் ஞானத்தை அறிந்தவர்கள் மெய்ஞானிகளாம்.

மெய்ப்பொருளையறிவது மெய்ஞானமாகுமாம். அதாவது உண்மையான ஞானமாம்.

ஞானமெனில் உண்மையாம். மெய்யெனில் உண்மையாம். மெய்ஞானம் எனில் உண்மையான உண்மையோ. உண்மையான உண்மை உண்மையெனில், நிச்சயம் உண்மையான அன்பு, உண்மையிலேயே உண்மையான அன்பு எனவும் இருக்கக்கூடும். உண்மையான அன்பான அன்புகூட இருக்கலாம். உண்மையான அறிவென்றும் இருக்கும். உண்மையான அறிவான அறிவும் சாத்தியமே. இனி மனதருக்கு எல்லாம் சாத்தியமே. மனிதரால் முடியாததென ஒன்றுமில்லைபோல. மனிதர் கடவுளாகி வெகுகாலமாகிறது.

மனிதர் எப்போது கடவுளானார்

முதன்முதலாகத் தமக்கு ஒரு பெயர் வைத்துக்கொண்ட போதா

மனிதர் அவரே பெயர் வைத்துக்கொண்டாரா அல்லது வேறுயாரேனும் பெயர் வைத்துக் கூப்பிட்டாரா. முதலில் பெயர்வைத்துக் கொண்டவர் ஆணாக இருக்குமா பெண்ணாக இருக்குமா. முதலில் மனிதர் தமக்குப் பெயர் வைத்திருப்பாரா அல்லது பொருட்களுக்கா.

மனிதர் பெயர் வைத்துக்கொண்டார் எனில் அவர் மொழியை அறிந்தார் என்றுதானே பொருள். மொழியை எங்கிருந்து கற்றார் மனிதர். விலங்குகளிடமிருந்தா. பறவைகளிடமிருந்தா. உள்ளுணர்வாலா. வானத்திலிருந்தா. மனிதர் முதலில் கற்றது எந்த மொழி. ஒரு மொழி பலவாறாகக் கிளைத்ததோ. மனிதருக்கு முன்னோர் இருந்து அவர் அனைத்தையும் கற்றுக் கொடுத்தாரோ.

மனிதர் எப்படி அனைத்தையும் கற்றார். எது மனிதரை கற்றுக்கொள்ளத் தூண்டியது. அறிவின் மீதிருந்த நாட்டமா. எனில், மனிதருக்கு ஏன் அறிவில் இத்தனை

நாட்டம். மனிதர் ஏன் அறிவை இப்படிக் கொண்டாடுகிறார். உலகில் அன்பே சிறந்தது, அன்பே கடவுள் எனப் பேசிய, எழுதிய அத்தனை மனிதரும் நாடும் அறிவாலல்லவோ சிறப்புற்றனர். உயர்ந்தன. உலகில் எம்மைப்போல் அன்பு கொண்டவர், பேரன்பு கொண்டவர் எவர் என மனிதர் கேட்டதுண்டோ. அன்பில் எம்மோடு போட்டி போடுபவர் எவருண்டு என இந்திய நிலத்தில் போட்டியோ, விவாதமோ நடைபெற்றதுண்டா. அறிவு வந்தவுடன் மனிதர் விவாதிக்கக் கிளம்பிவிடுகிறாரல்லவா. போட்டிக்குக் கூப்பிடுகிறாரல்லவா. அறிவானவரல்லவோ உலகத்தை ஆளக் கிளம்புகிறார். அன்பால் உலகத்தை ஆள முடியுமா. எங்கள் அரசர் எத்தனை அன்பானவர் என மக்கள் பேசியதுண்டா. நல்லவர் எனப் பேசலாம், புகழலாம். அன்பானவா எனப் பேசமுடியுமா. அன்பால் வெற்றி ஈட்ட முடியுமா. அறிவால் போர் ஆயுதம் செய்துகொண்டு, நாட்டை அபகரிக்கவரும் அயல்நாட்டாரிடம் அன்பைப் பேசினால் எடுபடுமா. அவர் நிபந்தனை விதிப்பாரன்றோ. கப்பம் கேட்பாரல்லவோ. மக்கள் அன்பானவராக இருக்கலாம். மக்களையும் நாட்டையும் காக்கும் பெரும்பொறுப்பிலிருக்கும் மன்னருக்கு அன்பு முக்கியமா. அறிவு முக்கியமா.

அன்பான தேசங்களும், அன்பான மக்களும், அறிவான அயல் தேசத்தவருக்கு அடிமையானது உண்மைதானே. பூமிப்பந்தின் மத்திய பாகத்திலிருந்துப் புறப்பட்ட அறிவு தெற்கு, கிழக்கு, மேற்கு என அனைத்துப் பகுதிகளையும் தனதாக்கிக் கொண்டதல்லவா. மறுக்க முடியுமா. உலகில் அன்பு பெரியதா. அறிவு பெரியதா. மனிதர் பறப்பது அன்பானவராலா. அறிவானவராலா. மனிதர் மேலே மேலே உயர்வது அன்பாலா. அறிவாலா.

கடவுள் அன்பானவரா. அறிவானவரா. நாட்டைக் காக்கும் மன்னரே அறிவானவராக இருக்கவேண்டும், செயலாற்றவேண்டுமெனில், உலகமனைத்தையும் கட்டிக் காக்கும் கடவுள் அன்பானவராக இருக்க முடியுமா. அறிவான நாடு, அடுத்த நாட்டைப் பிடித்துக்கொள்வதுபோல், மிக்க அறிவுள்ள யாரேனும் உலகைப் பறித்துக்கொண்டால். உதாரணத்திற்கு இந்தியாவைப் பறித்துக்கொண்டதுபோல். கிட்டத்தட்ட ஒராயிரம் வருடங்கள். கடவுள் அன்பானவராம். அன்பே கடவுளாம். உண்மைதானா. உண்மையான உண்மைதானா.

முழுமையான அன்பென ஏதாவது இருக்குமோ. தூய அன்பு. பரிசுத்த அன்பு.

அறிவில் எத்தனை வகை அறிவு. ஓரறிவு. ஈரறிவு. சிற்றறிவு. பேரறறிவு.

பெரும் பேரறறிவு. முழு அறிவு. முடிவான அறிவு.

முடிவான அன்பு என உலகத்தில் ஏதும் உண்டா.

அன்பின் எல்லை எது.. அறிவுக்கு எல்லை உண்டா..

அறிவு சேம்பர் முதலாளியாக அமர்ந்துகொண்டு அன்பான மக்களை செங்கல் சூளைகளில் போட்டுக் கசக்கிப் பிழிந்ததை, பிழிவதை வரலாறு மறந்துவிடுமா. அறிவு செங்கல் அறுப்பதில்லைதானே. அறிவு நாளெல்லாம் சகதியில் புரளாதல்லவா. வடகிழக்கின் அன்பு அதிகாலை மூன்றுமணியிலிருந்து இரவு எட்டுமணிவரை கறிக்கடையில் ஐநூறு ரூபாய்க்கு வேலை செய்கிறது. எத்தனை மணிநேரம் அந்த அன்பான இளைஞர் வேலை பார்க்கிறார். கூடவே திட்டு, மிரட்டு, ஏச்சு, பேச்சு. ஏன்.. அன்பை அடக்கி ஆள்கிறது அறிவு. அப்படியெனில் அறிவுதானே பெரிது தமிழர்களே.

உண்மையான அறிவென்றால் எட்டுமணி நேரம் மட்டுமேயல்லவா வேலை வாங்கும். எம் கண்ணாலேயே பார்க்கிறோம். எம் காலத்திலேயே அன்பான மனிதர் இப்படி வேலை வாங்கப்பட்டால், முன்னர் மனிதர் எத்தனை எத்தனை துன்பங்களை அனுபவித்திருப்பார். அன்று அவர் அனுபவித்தது உண்மைதானே. ஏன் அன்றும் இன்றும் அன்பானவர், அன்பில் சிறந்தவர், அன்புமிக்கவர் அடிமையாய் இருக்கிறார். அறிவானவர் எசமானராய் இருக்கிறார். ஏன் அறிவானவர் முதலாளியாக இருக்கிறார், அன்பானவர் தொழிலாளியாக இருக்கிறார். மனிதரைக் கேட்டால் என்றும் அப்படித்தான் என்பார், தமிழர் என்றும் நாங்களே உலகத்தை ஆள்வோம் என்பதுபோல. தமிழரே. உலகின் வரலாறு என்ன சொல்கிறது.

## அன்பு பெரிதா அறிவு பெரிதா.

தமிழர் உலகை ஆளப்போவது அன்பாலா. அறிவாலா. உண்மையான அன்பாலா. உண்மையான அறிவாலா. உண்மையிலேயே உண்மையான அன்பால்தான் தமிழர் உலகை ஆள விரும்புகிறாரா. தமிழர் உண்மையிலேயே உண்மையான அறிவால்தான் உலகை ஆளத் தயாராகிறாரா. வீரத்தில் சிறந்த தமிழர் வீரத்தாலும் உலகை அடக்கி ஆளக்கூடும்.

தமிழரே, உயர்ந்து, சிறந்தது அன்பா அறிவா அல்லது வீரமா.

தமிழரே, உலகம் கடந்து வந்த பாதை என்ன. இனி உலகம் பயணமாக வேண்டிய திசை எது. முன்னறிவிப்பாளர் யார். முன்செல்லவேண்டியவர் எவர்.

தமிழரே, மனிதர் மொழியை அறிந்தபின் காதலை அறிந்தாரா. காதலைக் கண்டறிந்தவுடன் மொழியைக் கற்றுக்கொண்டாரா. ஒருவேளை காதலுக்காகவே மொழியைக் கண்டுபிடித்தாரோ. இலக்கியக்காரர்கள் காதலுக்கு மொழியே தேவையில்லை என்கிறார்கள். எது உண்மை. முதலில் வந்தது காதலா, மொழியா. போலச் செய்தலாமே. மனிதர் முத்தத்தை எதைப் பார்த்துத் தெரிந்தார், கற்றார். அன்பும் காதலும் ஒன்றா. அப்படியெனில் காதலன்பு. அன்புக் காதல். காதல் மூத்ததா உலகம் மூத்ததா.

ஏய் செப்பியன்சு.. காதலின் வயது எத்தனை கோடி

காதல் அழகானதாம்

இரசியமானதாமே

மனிதர் காதலில் தொலைகிறார்களாமே

அவ்வளவு பெரிதா இந்தத் காதல்

காதலை எப்படிக் கண்டுபிடித்தார்கள்

கண்டுபிடித்தவரை என்ன பண்ணலாம்

பரிசு கொடுப்பதா இல்லை பந்தாடுவதா

காதலிக்கும் மனிதர் என்னமாய் நாணுகிறார்

ஒற்றைப் பார்வையில் உறக்கம் போவது எதனால்

சிறு புன்னகையில் குருதி  கொதிப்பது எப்படி

என்னவெல்லாம் மாயம் செய்கிறது இந்தக் காதல்

மனிதர் கண்டுபிடிப்பில் அரியது இதுதானோ

வீரனை பூக்களோடு பேச வைக்கிறது

கையளவு இதயத்தில் கடலளவு அன்பை நிரப்புகிறது

இலக்கியக்காரர்கள் சொல்கிறார்கள்

உலகம் காதலால் இயங்குகிறதாம்

ஒய் செப்பியன்சுகளே

கண்டுகொள்ளுங்கள் காதலை

கண்டுபிடியுங்கள் காதலும் காலமும் கண்ணனும் யாரென..

தமிழர்களே, தமிழ் நிலத்தில் காதல் கொண்டாடப்பட்டதற்கு என்ன காரணம். காரணம் யார். ஆசியாவாகட்டும், அய்ரோப்பாவாகட்டும், அமெரிக்காவாகட்டும், பூமிப்பந்தெங்கும் பெருந்தெய்வமென வழிபடப்பட்டு வந்தது இந்திரன்தானே. மனித அறிவு இந்திர அறிவெனில் தகுமா.

முன்னர் தமிழர் நாகரிகம் உலகெல்லாம் பரவியிருந்தது உண்மையெனில், எப்படிப் பரப்பியிருப்பார். நவீன அய்ரோப்பியர்போல் பரப்பினாரா. இன்றைக்கு ஆடம்பரப் பொருட்களால் உலகம் இணைக்கப்பட்டிருப்பதுபோல் அன்றைக்கு விளைபொருட்களால் உலகம் இணைக்கப்பட்டிருக்கும். விளைபொருட்களை ஏற்றிக்கொண்டு தமிழர் கப்பல்கள் உலகு முழுக்கச் சென்றனவா. அந்த அளவுக்கா தமிழர் வணிகத்தை முன்னெடுத்தார். தமிழர்தான் மாயன் நாகரிகத்திற்குக் காரணமா. உலகெங்கும் இயல்பாகத் தோன்றிய நாகரிகத்தைத் தமிழர் தமதென்கிறாரா. தமிழ் மொழியும், தமிழ்ப் பெயர்களும், தமிழர் பழக்கவழக்கங்களும் அவருக்கு எப்படித் தெரிந்தது. ஒருவேளை சங்கத்தமிழருக்கு முன்பே தமிழின் வேர்கள் அங்கே பரவியிருக்குமா. தமிழறிஞர்கள் சாதிக்கும் குமரிநாட்டுத் தோற்றத்தை தமிழர் மீளாய்வு செய்யவேண்டுமோ. இந்தியாவின் ஒரு மாநில மொழி உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியிருக்கிறதென்பது அதிசயமல்லவா.

சங்ககாலத்தில் மூவேந்தருமே வணிகத்தை முன்னெடுத்தாரல்லவா. மூவேந்தா் மரபிற்கே தமிழ்ச் சாதிகள் அத்தனையும் முட்டிமோதுகின்றன. இருக்கட்டும். சங்கத்திற்குப்பின், சங்கம் மருவிய காலத்தில், பிற்காலத்தில் தமிழ்நாட்டில் யாா் உலகெங்கும் வாணிபத்தை எடுத்துச் சென்றாா். ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாணிகத்தை முன்னெடுத்தது யாா். வணிகா் பொருட்களை விற்பாா். அங்கிருந்து பொருட்களை ஏற்றி வருவாா். அதுவும் தமிழ்ப் பதிவுகள் பொன்னும் மணியும் கொண்டுவந்ததாகவே குறிப்பிடுகின்றன.

வணிகரால் எப்படி தமிழா் நாகரிகம் பரவியிருக்க முடியும். வணிகத்தால் எப்படி தமிழின் வோ்கள் அயல்நாடுகளெங்கும் பரவியிருக்கக் கூடும். வணிகா் மக்களோடு கலந்துறவாடினாரா. எங்காவது கேள்விப்பட்டதுண்டா. வணிகா் நெல்சாகுபடி எப்படிச் செய்வதென சொல்லிக் கொடுத்திருப்பாரா. வணிகருக்கு தமிழா் வேளாண்முறைகள் அத்துபடியோ. வியட்நாம் தொடங்கி, கம்போடியா, தாய்லாந்து, பிலிப்பைன், இந்தோனேசியா, பா்மா என அத்தனை நாடுகளிலும், பண்டைய பெரிசியாவின் வழியெங்கும், அராபிய, அய்ரோப்பிய, அமெரிக்க நிலமெங்கும் தமிழரின் வேளாண்முறைகளும், தமிழரின் ஊா்ப்பெயா்களும், குலப்பெயா்களும், பண்பாட்டு வோ்களும் தற்போதும் உள்ளதெனில் காரணம் என்னவாக இருக்கும். யாராக இருக்கும்.

மலைவளம் மிகுந்திருந்த குறிஞ்சியிலிருந்து பெற்ற வாசனைத் திரவியங்கள் நெய்தல் மீனவா் மூலம் கொண்டுசெல்லப்பட்டதெனில், கொண்டுசென்றவா் யாா். விளைபொருட்களை அதிகம் விளைவித்தது யாா். தமிழ் நிலத்தில் எங்கு உபரியாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கும். வேளாண்மையில் சிறந்திருந்தது மருதமெனில் மருதத்தாரே உலகெங்கும் சென்றிருக்க வேண்டும். மருத மக்களோடு அவா்கள் பண்பாட்டுக் கூறுகளும், மொழியும், அவா்தம் கடவுளும் கொண்டுசெல்லப்பட்டிருப்பா். மருதத்தின் மூலமே இந்திரன் கிழக்கிலும், மேற்கிலும் பரவியிருக்க வேண்டும். உண்மையெனில் மூவேந்தா் மரபும் மருதத்திலல்லவா தோன்றியிருக்கும்.  அரசாக்கம் மருதத்தில் தோற்றம்பெற்று மூன்று வேந்தா் மரபாக வளா்ந்து புகழடைந்தன எனில் தமிழா் ஒப்புவரா. தமிழ் மூவேந்தரின் இருப்பிடம் எது.

தற்போதும் தமிழகத்தில் வேளாண்மையை முன்னெடுத்துவரும் சமூகங்கள் எவை. தெற்கில் பள்ளரும், வடக்கில் வன்னியரும் எனில் தமிழரால் மறுக்க முடியுமா. கிழக்கின் வேளாண்மைக்கும் காரணமான இந்த இருகுடிகளுக்கும் உள்ள தொடர்பை தமிழர் அறிந்துள்ளாரா. மற்ற சமூகத்தவரெல்லாம் எவ்வளவோ உயர்ந்துவிட்ட போதிலும், இந்த இரண்டு குடிகளும் இன்னும் வேளாண் சமூகமாகவே இருப்பதற்குக் காரணமென்ன. இரண்டு பேரும் பிழைக்கத் தெரியாதவரா. புத்தியில்லாதவரா. ஏன் இரண்டு சாதியாராலும் இன்னும் வாய்க்கால்களையும் வரப்புகளையும் உதறமுடியவில்லை.

புகழ்மிக்க தமிழகத்தின் பெருமைமிகு பண்டைய வேளாண்குடிகளே.. உலகில் என்ன நடந்துகொண்டிருக்கிறதென்பதை நாம் அறிகிறோமல்லவா. உலகமெங்கும் மண்ணின் மைந்தர் குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறதல்லவா. ஒட்டு மொத்த பூமியும் பாழ்பட்டுக் கிடக்கிறது. உலக மக்கள் பேராசைகளினால் எதன் பின்னாலோ ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எதற்கு ஓடுகிறோம் எனத் தெரியாமலேயல்லவா இந்த மனிதர்கள் ஒடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் ஓட்டத்தை தற்காலிமாகத் தடுத்து நிறுத்தினால் என்ன. குறைந்தது இதற்காக, இன்ன நோக்கத்திற்காக, இன்ன திசையில் ஓடுகிறோம் என்பதாவது தெரிந்து கொண்டு ஓடலாமல்லவா. இந்தியாவும் ஓடுகிறது. தமிழரும் ஓடுவதற்குத் தயாராகி விட்டார். உண்மையில் தமிழரிலும் அனேகர் ஓடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

குடிமூத்தோரே, ஒப்பில்லாத சமுதாயம் படைக்கவா இவர்கள் ஓடுகிறார்கள், இவர்களோடு சேர்ந்து நாமும் ஓடுவதற்கு. அமரராவதற்கு ஓடுகிறார்களோ. நம் பாரதி அன்றே கட்டியம் கூறிவிட்டானே, தெள்ளமுதின் சுவை கண்டார், இங்கு அமரர் சிறப்புக் கண்டார். தமிழல்லவோ அமுதம். உயிர்க்குலங்களுக்கு அமிர்தமான தமிழிடமல்லவா மனிதர் அமரராவதற்கான அனைத்தும் செறிந்துள்ளது.

உலக மானுடத்தைக் கரைசேர்க்க மதங்கள் அரும்பாடுபட்டன. உலகின் மொழிகள் முழுவீச்சில் முயன்றன. உலகின் அனைத்துக் கலாச்சாரங்களுமே மனிதரை உயர்த்தப் போட்டியிட்டன. என்ன நடந்ததென்பது வரலாறாக நம்மிடம் உள்ளது. வியப்பிற்குரியதான ஒன்றாக, முன்னர் முயன்ற அத்தனை நாடுகளும், மொழிகளும், பண்பாடுகளும் காலமாற்றத்தில் தொலைந்து விட்டதாகவே தெரிகிறது.

சுமேரிய நாகரிகம் செழித்திருந்த ஈராக் நிலம், மூவாயிரம், ஈராயிரமாண்டுகளுக்கு முன்னா் எப்படி இருந்ததாக வரலாறு பதந்திருக்கிறது. தற்போதைய நிலை என்ன. அன்றைய புகழ்மிக்க மெசபதோமியாவான இன்றைய இராக் முற்றாக மாறிவிட்டதல்லவா. எகிப்தால் அதன் சீா்மிகு கடந்த காலத்தின் சிறு தடயத்தைக்கூடத் தக்கவைக்க முடியவில்லை. இரானைப் பாருங்கள். மதங்களுக்கும், கலாச்சாரங்களுக்கும், வணிகத்திற்கும், புகழ்பெற்றிருந்த பொ்சியாவான பழைய ஈரான் முழுவதுமாகவே மாற்றத்திற்கு உள்ளாகிவிட்டது. கிரேக்கம், இத்தாலி என மேற்கிலும், இந்தோனேசியா, பிலிப்பைன் எனக் கிழக்கிலும், முன்னைப் பழமைக் கொண்டிருந்த புகழ்பெற்ற அனைத்து நாடுகளும், மக்களும், பண்பாடுகளும் முற்றாக மாறிவிட்ட பின்னும், தமிழ் நிலம் அதன் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் வீறுநடை போடுவது விந்தையிலும் விந்தையல்லவா. எப்படிச் சாத்தியமானது இது. சாத்தியமானது நம் மொழியாலா. நம் தெய்வங்களாலா. நம் மண்ணாலா. நம் நாகரிகத்தாலா. தமிழா் நாகரிகம் நெல் நாகரீகம்தானே.

தமிழா் கடல் வாணிபத்தில் சிறப்புற்றிருந்ததற்கு, தமிழா் கடல் ஆமைகளின் இடப்பெயா்ச்சியைச் சரியாகக் கணிக்கக் கற்றுக்கொண்டது சிறப்புக் காரணமாகச் சுட்டப்படுகிறது. ஆமைகள் கடல்நீரோட்டத்தில் பயணமாகக்கூடியவை என்பதால், அவை மூலம் கடல் நீரோட்டங்களை அறிந்த தமிழரின் கலங்கள், கிழக்கு மற்றும் மேற்கின் தொலை தூரங்களுக்குப் பயணமானதாகக் கூறப்படுகிறது.

தமிழா் நாகரிகத்தில் மீனுக்கு பெரும் சிறப்புக் கொடுக்கப்பட்டிருப்பதேன். ஆதியிலே மீனாக, அடுத்து மந்தரம் சுமந்த ஆமையாக, பின்னா் நிலமகளைப் பெயா்த்தெடுத்த வராகமாக. பின்னும் பல அவதாரங்களாக, தமிழா் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் திருமாலுக்கு தமிழா் நாகரிகத்தில் எத்தகைய பங்கிருக்கிறது. முல்லையின் திருமால் திருமலைத் தெய்வமாக வேங்கடத்தில் நின்றிருப்பதன் பொருளென்ன. உண்மையில் இலெமுரியாவில் என்ன நடந்தது.

உண்மையில் தமிழா் பண்பாடு உலகெங்கும் பரவியது எந்தச் சங்கத்தின் காலத்தில். தற்போதைய மதுரையைத் தலைமையாகக் கொண்டு, பொது ஆண்டிற்கு முன்பான சிலநூறு ஆண்டுகள் பழமையானதாகக் கூறப்படும் கடைச் சங்கக் காலத்திலா கிழக்கே சப்பான் முதல் மேற்கே அமெரிக்கா வரையிலும் தமிழா் நாகரிகம்

இந்தளவுக்குப் பரவியது. கடைச் சங்கத்திற்கு முன்னே பரவியிருந்ததெனில், தமிழ் நாகரிகம் இத்தனை பழமையுடையதா. ஆம் எனில் அதில் நமது தெய்வங்களின் பங்கென்ன.

தமிழ்ப் பாவலர்கள், அறிஞர்கள் குறிப்பிடுவதுபோல் இலெமுரியக் நிலப்பகுதி உண்மையிலேயே இருந்ததா. கடல்கோளால் அழிந்ததா. சாதி, சமயப் பகை இருந்திருக்குமா. மூவேந்தரும் அங்கும் சண்டையிட்டாரோ. முத்தெய்வங்களுள் போட்டி நடந்திருக்கலாமோ. ஆண், பெண் போட்டியாலும் அழிவு நடந்திருக்குமோ.

குமரிக் கண்டம் அழியப் போகிறது என்பதை முன்னரே அறிந்த தமிழர் யார். தமிழர்கள் யார். மனிதர்கள் யார்.

குறிஞ்சி நெருப்போ. முல்லை காற்றாக இருக்குமோ. மருதம் நிலமாகுமா. நெய்தல் நீரல்லவா. பாலைக்கு. அராபியாவின் பாலைக்கு.

தமிழ் நிலத்தின் நானிலப் பிரிவு, ஐந்திணைக் கோட்பாடுகளின் உண்மையான பொருளென்ன. முதலில் வேட்டையாடுதல், பின்னர் நிரை மேய்த்தல், தொடர்ந்து வேளாண்மை செய்தல், உழுதல், ஊராதல், நாடாதல், நாகரிகமாதல், அரசு உருவாகுதல், விரிவடைதல், பெருகுதல், வணிகம், படைப் பெருக்கம், இலக்கிய ஆக்கம், பரவுதல், அங்கும் மொழியையும், நாகரீகத்தையும், சமயக் கோட்பாடுகளையும் எடுத்துச் செல்லல், கற்றுக் கொடுத்தல், பரப்புதல். இப்படித்தான் நெல் நாகரிகம் செழித்திருக்குமோ.

**வேளாண் மூத்தோரே,**

இது நம் காலம். உலகை அதன் பெருமையான காலத்திற்குக் கொண்டுசெல்வதற்கான, மாற்றுவதற்கான மகத்தான தருணம், மந்திரச் சாவி, நெல் நாகரிகமாக நம் கையில் பத்திரமாகக் கையளிக்கப்பட்டிருக்கிறது. நிலம் நமது. குடிகள் நம்மவர். மொழிகள் நம்முடையவை. மதங்கள் நமக்காக. பண்டைய தமிழ் நிலத்தின் பெருமையையும், வருங்கால உலகின் சிறப்பையும் ஒருசேர உயர்த்துவதற்கான பொன்னான காலம் கனிந்திருக்கிறது.

நாம் என்ன செய்யப்போகிறோம். தமிழ் நிலத்தில் என்னென்னவோ நடைபெறுகிறது. ஏதேதோ பேசப்படுகிறது. நிலத்தைத் துண்டாட நினைக்கிறார் ஒரு சாரார். அன்னார் பேசுவதும், எழுதுவதும், படை திரட்டுவதும், தமிழ் மொழிக்கும் மண்ணுக்கும் நிச்சயம் ஏற்றந்தரப் போவதில்லை. மண்ணைத் துண்டாக்க நினைக்கிறார். தமக்கென்று ஒரு நாடு வேண்டுமென்கிறார். பிரித்தே தீருவோம் எனச் சூளுரைக்கிறார். பேராண்மையும், தொன்மையும், செழிப்பும் நிறைந்த தமிழ் நிலத்தை துண்டாகாமல் காக்கவேண்டுமெனில் தெற்கும் வடக்கும் இணைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதைக் நெல்மூத்தோர் தெளிய வேண்டும். மகிழ்ச்சிக்குரியதாக, இரு குடிகளிலும் அப்படியான முன்முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. சில முரண்பட்ட பேச்சுக்கள் இருந்தாலும் பெருமளவினர் வரவேற்பதாகவே பதிவுகள் சுட்டுகின்றன. முரண்படுபவரின் முக்கிய மனத்தடை, வடக்கு உயர்ந்ததாகவும் தெற்கு குறைந்ததாகவும் நினைப்பதே. வடக்கின் மூத்தோர்கள் தெற்கின் பழமையை, வரலாற்றைத் தெளிவாக்கவேண்டும். தெற்கின் அட்டவணை வரலாறு அண்மைக் காலத்திலேயே என்பதே அறிவுடைமை. நம் வரலாறு, பண்பாடு மிகுந்த பழமையுடையது. ஆயிரமாண்டுக்குமுன் எப்படி இருந்தோம், ஈராயிரமாண்டில் எத்தனை புகழ் கொண்டிருந்தோம், மூவாயிரமாண்டில் எவ்வாறு உலகின் அறிவை முன்னெடுத்தோம் என்பதை தமிழ் நிலம் அறியும்.

நம் ஒன்றிணைவு தமிழ் ஒன்றிணைவு. நம் இணைப்பு தமிழர் இணைப்பு. நம் ஒற்றுமை உலகின் ஒற்றுமை. விண்ணின் மண்ணின் ஓங்கு புகழ்.

பெருமையுடையோரே, தெற்கு இராமாயணத்தின் தொடர்ச்சி. வடக்கு மகாபாரதத்தின் தோன்றல். தெற்கு நீர். வடக்கு நெருப்பு. வடக்கு மண். தெற்கு விண். அறிவால் அறியும். ஞானத்தால் தெளியும்.

நம் காலத்தில் வடக்கில் இராமனும், தெற்கில் கிருஷ்ணனும் குடிகளை வீறுகொண்டு மேலெழுப்பியது மிகுந்த பொருள்கொண்டது பெரியோரே.

வடக்கு மல்லரைப் புகழட்டும். தெற்கு மள்ளரை உயர்த்தட்டும்.

இரண்டும் பள்ளு எனும் பழமையில் நிலைத்திருக்கட்டும்.

மள்ளர் ஆட்சி மண்ணின் நீட்சி. மல்லர் மீட்சி விண்ணின் ஆட்சி.

தமிழ் நம் தாய்மொழி.. நம் உயிர் மொழி.. தமிழகம் நம் தாய்மண்..

தெற்கு இராமனைக் கொள்ளட்டும். வடக்கு இந்திரனைக் கொண்டாடட்டும். வடக்கு இந்திர விழாவை சிறப்பாக முன்னெடுக்கட்டும். தெற்கு விருந்தினர்களாக அழைக்கப்படட்டும். தெற்கும் வடக்கும் உறவுகளாக இணையட்டும். மலரட்டும் புது உறவுகள்.

வரப்புயரட்டும்..

உயிர்க் குலங்கள் செழிக்கட்டும்..

உலகம் உய்யட்டும்..

உலக மக்களிடையே ஒற்றுமையையும், அன்பையும், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும், மனித நேயத்தையும், மத ஒருமைப்பாட்டையும், மக்களின் வாழ்க்கையையும், அவர்களது அழகையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கைகளையும், நிரந்தரத்தன்மையையும் ஒருபடியேனும் நிச்சயம் நெல்நாகரிகம் உயர்த்தும். எப்போதும்.. திண்ணமிது.

விண்ணும் மண்ணும் போற்றி

முரசுடை மள்ளர் தம் அரசே போற்றி

மும்மாலையணிந்த எம் முன்னோர் போற்றி

மூவேந்தர் வழிவந்த இந்திர மரபே போற்றி

இந்திரவிழாக் கண்ட இனமே போற்றி

நெல் நாகரிகத்தின் மனமே போற்றி

விண்ணவர்க்கும் மன்னவரே போற்றி போற்றி!!

நெல் நாகரீகத்தின் பெருமை, தமிழின் அருமை, அதன் வரலாறு, சங்கத்தின் சிறப்பு, தமிழ் என்னவாக இருந்தது, இருக்கிறது, இருக்கப்போகிறது என்பது

அனைத்தும் இனி வேளாண் தமிழ்க்குடிகள் எடுக்கப்போகும் முடிவைப் பொறுத்து அமையும், உயரும்.

புதிய பூக்கள் பூக்கட்டும். புத்தரிசிப் பொங்கல் பொங்கட்டும்.

**நாளும் பொழுதும் நமதே..**

**கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்**

**புதுக்கவிதைகள் பிறந்ததம்மா**

**மன்னன் பிறந்தான் எங்கள் மன்னன் பிறந்தான்**

**மனக்கவலைகள் மறந்ததம்மா**

நாம்

அதிகமாய் அன்பு செய்வோம்

அறிவை உயர்த்துவோம்

அறிவு மிக்கவர்களாவோம்

சிரித்து மகிழ்வோம்

அழகை ரசிப்போம்

அனைவரும் காதலிப்போம்

சமுதாயத்தைச் சிறப்பிப்போம்

உற்சாகத்துடன் விளையாடுவோம்

உண்டு உறங்குவோம்

பகிர்ந்துண்போம்

நன்றாக உடுத்துவோம்

கவலையின்றி இருப்போம்

நம்மைப் புரிந்துகொள்வோம்

உலகை உயர்த்துவோம்

சிகரம் தொடுவோம்

நற்செயல்கள் புரிவோம்

செயலாற்றுவோம்

கடமையைச் செய்வோம்

புதிதாக எண்ணுவோம்.

புதிய வாய்ப்புகளைத் தேடுவோம்

மேலும் நாகரிகமாவோம்

பெண்ணைச் சிறப்பிப்போம்

பெண்மையை மதிப்போம்

பெண்ணின் அன்பைக் கொண்டாடுவோம்

அறம் வளர்ப்போம்

அறம் செய்ய விரும்புவோம்

தர்மத்தைப் பேணுவோம்

குறிக்கோள் கொள்வோம்

நல்நோக்கம் வளர்ப்போம்

சிந்தித்துச் செயலாற்றுவோம்

முயற்சிப்போம்

வெற்றி பெறுவோம்

இலக்கியம் படிப்போம்

கேள்வி கேட்போம்

தத்துவம் பேசுவோம்

மூத்தோர் சொல் மதிப்போம்

தொடர்ந்து கற்போம்

மேலும் முன்னேறுவோம்

விதிகள் செய்வோம்

ஒருதாய் மக்களென்போம்

அறிவைப் பொதுவாக்குவோம்

சமரசம் காண்போம்

பொறுத்திருப்போம்

மகிழ்ச்சியாய் வாழுவோம்

ஆனந்தம் காண்போம்

தமிழ் வளர்ப்போம்

உயிர் காப்போம்

விளக்கேற்றுவோம்

ஒளியில் நடப்போம்

உயரப் பறப்போம்

தொடர்ந்து பயணிப்போம்

நம் திருநாள் வந்தது..

நாம்,

ஏர் பிடித்து நிலத்தையும் மனத்தையும் பண்படுத்துவோம்.

போரைப் புறந்தள்ளி பொருளைப் பொதுவாக்குவோம்.

பூக்களையெல்லாம் காதலியாகக் கொள்வோம்.

கனிகளையெல்லாம் பெண்ணாக நினைப்போம்.

தாவரங்களையெல்லாம் தாயாகக் காண்போம்.

விலங்குகளை நாம் தோழர்கள் என்றே கூப்பிடுவோம்.

ஆம் நம் தோழர்கள். என்றும் நமக்கு இனிய தோழர்கள்.

**எங்கள் தமிழ் எத்திசையும் புகழ் மணக்கும்**

**எட்டுத் திக்கும் புகழ் பரவும்**

நாங்கள் எத்தனை கோள்களுக்குச் சென்றாலும், எத்தனையாயிரம் விண்மீன்களைக் கடந்தாலும், உயிரினும் மேலான எங்கள் தமிழையும் உடன் எடுத்துச் செல்வோம்..

**இது தமிழின் மற்றுமொரு பரிணாமம்**

**இதோ புத்தனின் அடுத்த பயணம்..**

**புண்ணிய பாரத தேசத்தாருக்கு,**

பாரதீயரே, நம் புகழ்மிக்க பாரதம் எப்படி இருக்கிறது பார்த்தீரா. உலக அளவில் பெரும்பாலானவற்றில் நாம்தான் கடைசியில் இருக்கிறோமல்லவா. உலக அளவில் நம் கல்வியின் தரமென்ன. நம் அரசியலின் தரப்படுத்தல் என்ன. நாம் ஊழலுக்கும்,

கையூட்டிற்கும் உலக அளவில் பெயர் வாங்கியிருக்கிறோமா அல்லது நேர்மைக்கும், ஞானத்திற்கும் பெயர் வாங்கியிருக்கிறோமா.

பாரத நாட்டார் குப்பையில் வாழ்கிறார் என்பதுதானே சரி. மறுக்க முடியுமா. அனைத்திலும் தெள்ளத் தெளிவாக இருந்த தேசம், அனைத்திலும் குப்பையானது எப்படி. யார் காரணம். எப்போதிலிருந்து இந்த தேசம் குப்பையானது பாரதீயத்தாரே.

நாம் நமது புண்ணிய ஆறுகள் அனைத்தையும் சாக்கடையாக்கிவிட்டோம். பாரதீயருக்கு எப்படி வந்தது இத்தனை பேராசை. புத்தனை மறந்ததாலா பாரதீயரே. பாரதத்தார் முன்னோர் ஞானத்தை முற்றாக மறுதலித்தது எதனால். யாரைப் பார்த்து ஓடுகிறார் பாரதீயர். எங்கே போகிறார் பாரதத்தார்.

பாரதத்தார் வெளிநாட்டவருக்கோ, அவர்களது நிறுவனங்களுக்கோ, அவர்களது கலாச்சாரத்திற்கோ  அடிமைகள் இல்லை எனக் கூறமுடியுமா.

பாரதீயர் தமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்ததைவிட மேன்மையாக்கி இருக்கிறாரா.

பாரதத்தில் மன்னராட்சி முடிந்து மக்களாட்சிதான் உண்மையில் நடக்கிறதா.

இந்தியாவில் தேர்தல்கள் நேர்மையாக நடக்கின்றனவா.

நாட்டில் சனநாயகம் சரியாகப் பேணப்படுகிறதா.

இந்தியா ஊழலற்ற நாடு என எந்த உலக அரங்கிலாவது பெருமையாகப் பேச முடியுமா.

முன்பிருந்த இயற்கை வளங்களை விஞ்ஞானம், மெய்ஞானம் கொண்டு பாரதநாட்டார் மேம்படுத்தியிருக்கிறாரா.

பாரத தேசத்தார்  நீர், காற்று, நிலம், ஆகாயம், உணவு, உயிரினங்கள், மனம், மதம் என அனைத்தையும் செழிப்பாக்கியிருக்கிறாரா அல்லது நச்சாக்கியிருக்கிறாரா

நானிலம் வியக்கும்படிக்குக் கல்வியில் சிறந்திருந்த பாரதத்தில், இன்றைக்கு கல்வி எந்த லட்சணத்தில் இருக்கிறது. இது ஒன்றே போதாதா, பாரதர் எந்தத் திசையில்

சென்றுகொண்டிருக்கிறார் என்பதை அறுதியிட. உயிர்வாழ மட்டும்  தட்சிணை பெற்று, உலகின் அறிவை வளர்த்த, உயர்த்திய அந்த அறத்தார் தேசமா இது.

அறிவை விற்க பாரதத்தார் எப்படி அனுமதித்தார். அறிவு யாரால் பாரதத்தாரே..

சமயத் தத்துவம் செழித்திருந்த பாரத நாட்டில் மதவெறியும் மதத் துவேசமும் ஊட்டி வளர்க்கப்படுவதை பாரத நாட்டார் அறிந்துள்ளாரல்லவா. உண்மையில் பாரத நாட்டார்தான் உச்சபட்ச மதவெறுப்பைக் கொட்டுகிறார். மாற்று மதத்தில் ஒன்றிரண்டு அடிப்படைக்காரர் உள்ளதை தமக்குச் சாதமாக்கிக் கொள்கிறார் பாரதத்தார். சரிதானே. மற்றவர் மதம் பற்றி அறிந்திருக்கிறாரல்லவா பாரதத்தார். ஞானத்தில் சிறந்த பாரதீயரல்லவா விட்டுக் கொடுத்துப் போகவேண்டும். அவரை அரவணைத்தும், அன்புகாட்டியுமல்லவா பாரதத்தார் ஒற்றுமை பேணவேண்டும். மாறாக, பிரித்தும், வெறுத்தும், பழித்தும், பேசுவதும், எழுதுவதும் முறையாகுமா பாரதத்தாரே.

பாரத நாட்டிற்கு ஈடு இணை எதுவுமில்லை என்பதை பாரதத்தார் அறிந்துள்ளாரா. பாரத நாட்டின் பெருமைக்குக் காரணம் எவையெவை எனப் பாரதத்தார் தெளிந்துள்ளாரா.

இந்தியா இந்திர தேசமென்பதை பாரதத்தார் ஒப்புக்கொள்கிறாரா. இந்திரன் யார் என்பதை பாரதத்தாருக்குச் சொல்லவேண்டுமா. தேவர்களின் தலைவனான இந்திரனின் பெருமை எத்தகையதென்பதை பாரதத்தார் மறந்தே போனாரோ. பாரதம் புகழ்மிக்கது, அறிவுமிக்கது எனில் எப்படி வந்தது பாரத நாட்டார்க்கு அறிவு. பாரதத்தாரின் பெருமைக்குக் காரணம் வேதமெனில், வேதத்தின் புகழுக்குச் சொந்தக்காரன் யார் பாரதீயத்தாரே.

தவம் புரிந்த பாரதத்தார்களே.. நம் முன்னோர் ஆகச்சிறந்தவர்கள். பேருண்மைகளைக் கண்டடைந்த ஞானிகள். நமது பெருமதிப்பிற்குரிய முன்னோர்களே நமது அறிவு. அறியுங்கள்.

பாரதத்தார்கள் அவரின் ஞானத்தந்தையை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது திண்ணம். அவரின் சிறப்பை அறிந்திருந்தால், பெரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தை இப்படி கூவிக்கூவி விற்பாரோ. பாரதத்தார்

அவரது ஒப்பில்லா ஞானத்தந்தையை மறந்தார். அவரின் அறத்தைத் துறந்தார். அவரின் மதத்தைப் பறித்தார். அவரின் கனவைச் சிதைத்தார். அவரின் இந்தியாவைப் பிடுங்கிக் கொண்டார். எத்தகைய பெருங்கனவு கண்டவர் நம் தந்தை எனத் தெரியுமா பாரதத்தாரே.

போற்றுதலுக்குரிய நம் பெருந்தந்தை விரும்பிய சுதந்திரம் எத்தகையதெனவும், புகழுக்குரிய நம் ஞானத்தந்தை அடைய விரும்பிய விடுதலை எது என்பதும் இந்தியர்களுக்குத் தெரியவில்லை. காசு பணத்தாசையிலும், பொருளாசையிலும், பதவியாசையிலும், புகழாசையிலும், மது மயக்கத்திலும் கட்டுண்டு கிடக்கும் பாரதீயர், இனி தந்தையை அறிவது சந்தேகமே.

தந்தையை வசைபாடி இன்புறுகிறது பெரியதொரு கூட்டம். காந்திக்கு, காந்தியர்களுக்கு சவால் விடுமளவுக்கு மதி நிறைந்தவர்களே.. எதுவும் பேசுங்கள். எப்படியும் எழுதுங்கள். தந்தை பேரன்பு கொண்டவர். பொருத்தருள்வார். ஒன்று நிச்சயம் மாமனிதர்களே.. வருங்காலம் காந்தி என்னும் வெளிச்சத்தைக் கொண்டே கரைசேரப் போகிறது. பெருந்தந்தையின் அன்பு மகன் எனும் முறையில் யாம் உங்களுக்கொரு நற்செய்தியளிக்கிறோம். காந்திமகானின் கருணை உங்களையும் கடைத்தேற்றும். ஏனெனில் நம் தந்தை கடையனையும் எப்படிக் கடைந்தேற்றுவது எனச் சிந்தித்தவர். செயல்பட்டவர். நம் தந்தை நற்குணங்கள் கொண்டவர். உண்மையைக் கண்டடைந்தவர். கிழக்கின் தவஞானி. மேற்கையும் அறிந்தவர். அனைத்தையும், அனைவரையும் மதித்தவர். சிறப்பித்தவர்.

பாரதத்தாரே, நாம் காந்தியப் பொருளாதாரத்தை முன்னெடுத்திருந்தால், காந்திய வழியில் இந்தியக் கிராமங்களை மேம்படுத்தியிருந்தால், இன்றைக்கு உலகிலேயே இந்தியாதான் ஒப்பற்ற தேசமாக இருந்திருக்கும். அனைத்திலும் உலகின் முன்னோடி தேசமாக மதிக்கப்பட்டிருக்கும். சற்று தாமதமான, குறைவான வளர்ச்சியாக இருந்திருக்குமெனினும், அதுவே மிகச் சரியான, சீரான வளர்ச்சியாக இருந்திருக்கும்.

மனிதர்களே.. அதிசயமான நம் பூமியின் இன்றைய தேவை காந்தி என்பதை அறியுங்கள். தற்போதைய உலகக்குத் தேவை காந்தியப் பொருளாதாரமே என்பதை காலம் உணர்த்தியிருக்கிறது. இனியும் காலம் கடத்தாதீர்கள். உலகில் அன்பும்,

அகிம்சையும், சமாதானமும், நட்பும், நம்பிக்கையும், மதசகிப்புத்தன்மையும், உண்மையும் நிலவவேண்டுமெனில், நமக்கு நம் தந்தையே துணை. காந்தியச் சிந்தனைகளே உலகுக்கு நல்வழிகாட்டி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாம் எப்படிச் சுதந்திரம் பெற்றோம், நமக்குச் சுதந்திரம் எப்படிக் கிடைத்தது, நாம் எவ்வளவு போராடிச் சுதந்திரம் பெற்றோம் என்பதைப் பாரதத்தார்கள் முற்றாக மறந்தே விட்டார்கள். பலருக்கும் இந்திய தேசம் முன்னர் அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததே மறந்துவிட்டது. அத்தனைக்கும் காரணம் காந்தியென்னும் பேராற்றல் செய்த மாயம். பாரதியர்கள் பிற தேசத்தவர்போல், ஒவ்வொரு குடும்பத்திலும் இழப்புகள் உண்டாகி சுதந்திரம் பெற்றிருந்தால் அந்த வலியையும், தியாகத்தையும் அறிந்திருப்பார்கள். இந்திய சுதந்திரத்தைத் தன்னலம் பாராது போராடிப் பெற்றுக் கொடுத்தது சில ஆயிரம் பேர்தானே. மற்றவர்க்கு அந்தப் பெருந்தியாகிகளின் வரலாறு தெரியாமலே போய்விட்டது. தெரிந்திருந்தால், நம் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வீரமும், மேன்மையும் தெரிந்திருந்தால், கிட்டத்தட்ட முந்நூறு பேராசிரியர்கள் பணிபுரியும் கல்லூரியில் சுதந்திரக் கொடியேற்ற வெறும் இருபதுபேர்கூட வராமல் இருப்பார்களா. நம் இந்தியத்தாயை மீட்க நாம் கடந்து வந்த பாதையை மெத்தப் படித்த பேராசிரியர்களே அறியவில்லை, உணரவில்லை, மதிக்கவில்லை, போற்றவில்லை எனும்போது, பிற எளிய மக்களைச் சொல்லி என்னாகப் போகிறது. நம் படிப்பு இத்தகையதாக இருக்கிறது. நம் கல்வியின் சிறப்பு இந்த வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. வரலாற்றை மறந்த தேசங்கள் உலகில் பல உண்டு. அந்த தேசங்கள் அவர்கள் வரலாற்றை மறந்ததால் உண்டான இழப்புகளை மெல்ல உணர்ந்து வருகின்றன. மாறாக இந்தியாவோ அதன் வரலாற்றை மறந்தும், மறுத்தும் வருகிறது. எழுபது ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தியா அதன் வரலாற்றை இப்படி மறந்ததென்றால், இன்னும் சில பத்திருபது ஆண்டுகளில் இந்தியா எவருக்கும், எக்காலத்தும் அடிமையாய் இருந்ததே இல்லை எனப் பாடப்புத்தகத்தில் எழுதினாலும் ஆச்சரியமில்லை.

எவ்வளவுதான் அடிப்பாய் அடி என, கைகள் வலிக்கும்வரை மண்டைகளை உடைத்துக் கொள் என நம் தியாகிகள் வரிசை வரிசையாய் அணிவகுத்து அடி வாங்கி, உதை பட்டு, எவ்வளவோ வேதனைகளை அனுபவித்து நமக்கு விடுதலை வாங்கிக்

கொடுத்த அந்த தியாக நாளை நினைவு கூற, ஐயாயிரம் மாணவர்களில் நூறுபேர் கூட தயாரில்லை எனும்போது, எங்கோ தவறு நடப்பது உறுதியாகிறதல்லவா பாரதத்தீரே.

வரலாறு அறிந்ததனால்தானே இசுரேலியர்கள் மேற்குச் சுவரை முட்டிக்கொண்டு மணிக்கணக்கில் அழுகிறார்கள். நாம் அவரைவிட எத்தனை மடங்கு வலியை அனுபவித்தோம் பாரதத்தாரே. வரலாற்றை நினைவில் வைத்திருக்கிறீரா அல்லது தொலைத்துவிட்டீரா. இந்த தேசத்தில் வயிற்றுக்கு உணவு கிடைக்காமல் நூறுநூறு ஆயிரம் பேர், பல்லாயிரம் பேர் மடிந்த வரலாற்றை இந்தியர்கள் நினைவில் வைத்துள்ளார்களா. ஆடி அமாவாசைக்கு, மகாளய அமாவாசைக்கு கூட்டமான கூட்டமாகக் கூடும் பாரதீயர்களே, ஒரு வாய் சோறு கிடைக்காமல் மாண்ட அந்தப் பல்லாயிரம் பேருக்கு எள்ளும் தண்ணீரும் என்றேனும் இறைத்தீரா.

சுதந்திரம் பெற்ற இந்தியா முதலாவதாக என்ன செய்திருக்கவேண்டும். இந்தியர் ஞானத்தில் சிறந்தவர் என்பது உண்மையெனில் சுதந்திரம் பெற்ற உடன் யாருக்கெல்லாம் நன்றி சொல்லியிருக்க வேண்டும். யாரையெல்லாம் சிறப்பித்திருக்க வேண்டும். எதையெல்லாம் இந்தியா நினைவில் நிறுத்தியிருக்க வேண்டும். எதையெல்லாம் சடங்குகளாக மாற்றியிருக்க வேண்டும். யாரையெல்லாம் தெய்வங்கள் எனக் கொண்டாடியிருக்க வேண்டும். எதனால் தவறியது இந்தியா. அன்று சாத்திர சம்பிரதாயங்களில் தேர்ந்திருந்த பாரதீயப் பிராமணர் நிறைய இருந்தார் அல்லவா. அறிவை சடங்காக்கித்தான் பாரதம் என்றென்றும் நினைவில் நிறுத்திக்கொள்கிறது என்பதை அறியாதவரா பாரதீயப் பிராமணர்.

ஆங்கிலேய ஆட்சியில் பசிக்கொடுமையால் மாண்ட பல்லாயிரம் பேருக்கும் எள்ளும் தண்ணீரும் இறைப்பதை சடங்காக்கி இருந்தால், மக்கள் அந்தக் கொடுமையை அறிந்திருப்பாரல்லவா.

செக்கிழுந்த செம்மலை பாரதீயர் எப்படி நினைவில் வைத்திருக்க வேண்டும். எப்படி நினைவுபடுத்துகிறார் பாரதீயர். சிறைச்சாலைக்குச் செல்கிறார். அந்த ஒப்பற்ற தியாகி இழுத்த செக்குக்கு மாலை சூட்டுகிறார். மறக்காமல் போட்டாவுக்குப் போஸ் கொடுக்கிறார். முடிந்துவிட்டது செக்கிழுந்த செம்மலின் தியாகம். முடிவுற்றது கண்ணீர் வரவைக்கும் சுதந்திரப் போராட்டத் தியாகத்தின் அந்த ஆண்டின் நினைவு நாள்.

பாரதியரே, மாட்டைப் போன்று செக்கிழுத்த நம் செம்மலின் மனம் என்னவெல்லாம் நினைத்திருக்கும். எவற்றைப் பற்றியெல்லாம் நினைத்துக் கொண்டே செக்கை இழுந்திருப்பார். பாரதத்தின் பெருமைமிகு நம் தந்தை எதற்காகச் செக்கிழுத்தார். யாருக்காகச் செக்கிழுத்தார். தம் குடும்பத்திற்காகவா அல்லது இந்த தேசத்திற்காகவா. ஆங்கிலேயரோடு சிறியதொரு சமரசம் செய்துகொண்டிருந்தால் சிறைக்குச் சென்றிருப்பாரா. செக்கிழுத்திருப்பாரா. நம் சுதந்திரத் தந்தையின் அந்த மாபெரும் தியாகத்தைப் பாரதத்தார் எப்படி நினைவுகொள்ள வேண்டும். எப்படிச் சிறப்பிக்க வேண்டும். பாரதீயரே கேளும்.

வ.உ.சிதம்பரனார் எனும் நம் ஒப்பற்ற சுதந்திரத் தந்தைக்கு இனி நினைவு தினம் அனுசரிக்கக் கூடாது. பிறந்த நாள் கொண்டாட்டமில்லை. ஆகத்து பதினான்காம் தேதி, அதாவது சுதந்திரத்திற்கு முந்திய நாள், இந்திய தேசத்தின் ஒவ்வொரு கிராமத்திலும், செக்கில் தேங்காய் போட்டு மனிதர்களே ஆட்ட வேண்டும். செக்காட்டுவதை குழந்தைகள் உட்பட கிராமத்தின் அத்தனை மக்களும் பார்க்க வேண்டும். அதன்போது சுதந்திரப் போராட்ட வரலாற்றுப் பாடல்கள் பாட வேண்டும். தமிழகத்தில் பாரதியார் பாடல்கள் பாடுவது உசிதம். கிராமத்தின் தேவையைவிட இருமடங்கு எண்ணெய் செக்காட்டப்பட்டு, ஒரு பகுதி நகரங்களுக்கும் அனுப்பப்படவேண்டும். நகரங்களிலும் ஆங்காங்கே மனிதர்கள் செக்காட்டலாம். கோவை மாநகரில் செக்காட்டும் நிகழ்வை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். மறுநாள் அத்தனை இந்தியர்களும், மனிதர்கள் செக்காட்டிய எண்ணெயைத் தலைக்குத் தேய்த்துக் கொள்ளவேண்டும். கொடியேற்றும் நிகழ்வில் உடைகளில் கொடியைக் குத்திக் கொள்வதுபோல், கொடியேற்றும்முன், சிலதுளி எண்ணெயைத் தேய்த்துக் கொள்வதை சடங்காக்கலாம். ஒருவேளை தலையில் தேய்க்க விரும்பாதவர்கள் இருப்பின், கைகளில் தேய்த்துக் கொள்ளலாம். கால்களில் தேய்க்கக் கூடாது. எண்ணெய் தேய்த்துக்கொள்ள விரும்பாதவர்களைக் கட்டாயப் படுத்தவும் கூடாது. ஒவ்வொரு ஆண்டும் நம் தியாகத் தந்தையை நினைவுபடுத்தும் விதமாக மனிதர் செக்காட்டுவதை சடங்காக்க வேண்டும். வருங்காலத் தலைமுறையாவது சுதந்திரமாக இருக்கட்டும் என அந்நியர் அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்த்தெழுந்த நம் அன்புத் தந்தையின் தியாகத்தை இப்படித்தான் நினைவுகூற வேண்டுமே தவிர சோதி ஓட்டம் ஓடக்கூடாது.

நாம் எண்ணெய் வைத்துச் கொள்வது, சிதம்பரனாருக்கு மட்டுமின்றி, நம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்காகவுமே என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் அனைத்துத் தமிழர்களும் நம் முன்னோர்களின், தந்தையரின், தாயார்களின் சுதந்திரப் போராட்டதைப் போற்ற வேண்டும். நமக்காகத்தான் நம் சுதந்திர வீரர்கள் மிகக்கடுமையாகப் போராடினார்கள் என்பதை உணரவேண்டும்.

சுதந்திர நாளை எப்படி நினைவுபடுத்த வேண்டும் எனப் பாரதத்தாருக்குத் தெரியவில்லை. சம்பிரதாயத்துக்குக் கொடி ஏற்றுகிறார். சட்டையில் சிறியதொரு கொடி குத்திக் கொள்கிறார். கல்லூரியில் தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி மாணவர்கள் அணிவகுக்கிறார்கள். முதல்வர் சிறிது நேரம் உரையாற்றுகிறார். ஒன்றிரண்டு பாடல்கள் பாடுகிறார்கள். சாக்லட் தருகிறார்கள். முடிந்தது மகத்தான சுதந்திர நாள் கொண்டாட்டம். குடியரசு நாளுக்கும் இதே. மாவட்ட அளவில் மணிக்கணக்கில் பள்ளிப் பிள்ளைகள் ஆடுகிறார்கள். கலை நிகழ்ச்சிகளாம். காந்தி ஜெயந்திக்கு விடுமுறை. கல்வி நிலையங்களுக்கு வரவேண்டியதில்லை. எழுபது வருடங்களாக இப்படித்தான் பாரதத்தார் சுதந்திர தினம் கொண்டாடி வருகிறார் அல்லவா. என்னத்தைச் சொல்ல.

உலகின் விடுதலைக்கு வித்திட்ட, மானுட குலத்தின் சுதந்திரத்தை உறுதி செய்த, நம் பொன்னான பாரதத்தின் புகழ் கொண்ட சுதந்திரத்தை இப்படியுமா கொண்டாடுவது பாரதத்தாரே. நம் பிள்ளைகள் மீது தவறில்லை. அவருக்கு நீர் ஒன்றுமே சொல்லிக் கொடுக்கவில்லை. உமக்கு புத்தி இல்லாமல் இல்லை. உமக்கு எதிலும் அக்கறை இல்லை. தேசத்தைப் பற்றிக் கிஞ்சித்தும் நினைப்பில்லை.

வேறு எப்படிக் கொண்டாட வேண்டும். ஆகத்து ஒன்றாம் நாளிலிருந்தே சுதந்திரதினக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துவிடவேண்டும். நம் சுதந்திரத்தை தீபாவளி, பொங்கல் போன்று பெரும் விழாவாகக் கொண்டாட வேண்டும். ஆகஸ்டு ஒன்று முதல் பதினான்கு வரை அனைத்து மக்களும் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியுமாறு செய்யவேண்டும். ஊர்வலங்கள், மேடைப் பேச்சுக்கள், விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்வுகள், பொருட்காட்சிகள், சுதந்திரப் போராட்ட இடங்களுக்குச்

செல்லுதல், அவர்களைப் பற்றிப் பேசுதல், பாடுதல், எழுதுதல் போன்ற பல்வேறு வழிகளில் நமது சுதந்திரத்தின் பெருமைகள், நம் சுதந்திரப் போராட்ட வீரர்கள், அவர்களது பெருமைகள் நினைவு கூறப்படல் வேண்டும்.

நமது சுதந்திரப் போராட்ட வீரர்களை, தியாகிகளை, சேவைக்காரர்களை, தொண்டர்களை நினைவு கூறும் விதமாக அனைவரும் பொதுப் பணிகள், சமூக சேவைகளில் ஈடுபட வேண்டும். நமது உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பெரும் தியாகத்தைப் போற்றும் விதமாக, இந்த இரண்டு வாரத்தில் பொதுமக்கள் இணைந்து பெருமளவிலான உப்புக் காய்ச்சும் பணியை மேற்கொள்ள வேண்டும். அணி அணியாக மக்கள் உப்புக் காய்ச்ச வேண்டும். அனைவரும் ஒரு நாளாவது உப்பளத்தில் வேலை செய்யவேண்டும். குறைந்தபட்சம் ஒருமணி நேரமாவது நமது தந்தையரின் பெரும் சேவையை அறியும் விதமாக உப்பளத்தில் நாமும் சேவையாற்ற வேண்டும். இப்படி சேவை மூலம் கிடைத்த உப்பையே அனைவரும் சுதந்திர நாளின் சமையலில் பயன்படுத்த வேண்டும். நாம் நமது நல்வாழ்விற்கு உழைத்த, பாடுபட்ட, நம் புண்ணிய தேசத்தின் வீரர்களை, தியாகிகளை இப்படித்தான் நினைவு கூற வேண்டும். நமக்கு உப்பிட்டவர்களை நாம் உள்ளளவும் நினைக்க வேண்டும் பாரதத்தாரே.. நாம் நினைப்போம். நாம் நன்றி மறவோம்.

ஆகத்து ஒன்றாம் தேதி முதல் இந்திய வீதிகளில் கதர் துணிகள் உற்பத்தியைத் துவக்க வேண்டும். சுதந்திர நாளில் அனைவரும் புத்தாடைகள் அணிய வேண்டும். குறிப்பாக அத்தனை இந்தியர்களும் கதராடைகளையே புதுத்துணிகளாக அணிய வேண்டும். நம் சுதந்திரப் போராட்டத்தின் பெருந்தந்தையரையும், பெருமைமிகு தாயார்களையும், வீரத் தியாகிகளையும் நினைவுற இதை விடச் சிறந்த வழியுண்டோ. நாம் அனைவரும் இணைந்து அத்தனை இந்தியருக்குமான துணிகளைப் பத்தே நாட்களில் முழுவீச்சில் உருவாக்கிவிட வேண்டும். அடுத்த நான்கு நாட்களில் அவரவருக்கான அளவுகளில் உடைகள் தைத்துவிட வேண்டும். தமிழர்களில் திருமணவானவர்கள் வேட்டி, சட்டை அணியலாம். இளையோர்கள் பைசாமா குர்தா உடுத்தலாம். பெண்கள் சேலையும், சிறார்களுக்கு அவர்கள் விரும்பியவாறும் உடைகள் தைத்துக் கொள்ளலாம். சுதந்திரத்தன்று இரவில் பொதுவிருந்து வைப்பது அருமை. நல்ல இசை நிகழ்ச்சிகள் மனதிற்குச் சுகம். நம் வீரர்களின், தலைவர்களின்

முகமூடிகள் அணிந்து, வேடமிட்டு சுதந்திரப் பாடல்கள் பாடியவாறே ஊர்வலங்கள் போவது சிறப்பு. மக்களுக்குப் பயன்படும் பொது சேவைகள் செய்யலாம். சுதந்திரத்தின் நினைவாக அனைவரும் இணைந்து பொதுச் கட்டிடங்கள் சுத்தப் பணி செய்யலாம். குளங்கள் தூர்வாரலாம். அனைவரும் இணைந்து சாலைகள் உருவாக்கலாம். மரங்களை சீர்படுத்தலாம். நீரோடைகள் வெட்டலாம். நாம் எத்தனை எத்தனை வழிகளில் நம் சுதந்திரத்தைக் கொண்டாடலாம். நாம் பெற்றது எத்தனை மகத்தான சுதந்திரம் என்பதைப் பாரதத்தார் அறியவில்லை. அறியும்போது சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வார் என நம்புவோம்.

பாரதத்தீரே, நம் முன்னோர் கண்ணீர் விட்டு வளர்த்த நம் சுதந்திரப் பயிரை நாளும் காப்போம். நம் சுதந்திரம் உலகின் சுதந்திரம். நம் சுதந்திரம் உயிர்களின் சுதந்திரம். நம் சுதந்திரம் உரிமைக்கான சுதந்திரம். நம் சுதந்திரம் உண்மைக்கான சுதந்திரம். நம் சுதந்திரம் மானுட குலத்தின் விடுதலை வேள்வி.

அன்பில் நிகரற்ற பாரதத்தாரே, இது நம் முன்னோர் தேசம். நம் முன்னோர் தேசத்தை அனைத்திலும் முதன்மையாக்குவோம். முழுமையாக்குவோம். முன்னின்று வழிநடத்துவோம்.

பெருமைமிகு பாரதத்தார் கோவில்களுக்குச் செல்கிறார்தானே. இத்தனை கோடி மக்கள் இருந்தும், குறிப்பாக நூறுகோடி இந்துக்கள் இருக்கும் நாட்டில், அனைத்துக் கோவில்களிலும் இயந்திர இசைப்பானே வைக்கப்பட்டிருப்பதை பாரதத்தார் கவனிக்கிறாரா. ஒரு பட்டனைத் தட்டிவிட்டால் அது பாட்டுக்கு டம்டம் டங்கிடி டங்கிடி டமரா டமரா என அடித்துக்கொண்டே இருக்கப்போகிறது, இதற்கு எதுக்கு மாண்புமிகு மனிதர்கள். அப்படித்தானே பாரதீயரே. பேசுவது மட்டும் இது ஆன்மீக பூமி. புண்ணியம் செய்த நாடு. உலகத்திலேயே உயர்ந்த நாடு.

பாரதத்தார் என்னதான் செய்கிறார். இத்தனையாயிரம் பேர் கோவையில இருந்தும் கோவில்களில் ஏன் நாதசுரம், மேளம் அடிக்கத் தெரிந்தவர்கள் இல்லை. ஏன் திருக்கோவில்களில் சேவையாக காலையும் மாலையும் மேளம் இசைப்பவர்கள் இல்லை. கோவையில் ஓரளவிற்குப் பெரியது, புகழ்பெற்றது என நூறு திருக்கோவில்கள் இருக்குமா. ஒரு கோவிலுக்கு ஒரு நாதஸ்வரக்காரர், ஒரு மேளக்காரர் என

வைத்துக்கொண்டால் இருநூறு பேர் போதுமே. கடவுளுக்குச் சேவை செய்யும் இருநூறு பேர் கூடவா இவ்வளவு பெரிய மாநகரத்தில் இல்லை. செய்தித்தாள்களில் வைகுண்டப் பிரப்தியடைந்தார், சிவலோகப் பதவி கிடைத்தது எனப் போடுகிறீரா இல்லையா. நீர் இறைவனுக்காக ஒரு சிறு கைக்கர்யம்கூட செய்ததில்லையெனும்போது, இறைவன் மட்டும் எதற்காக உமக்கு நிலையான வீடுபேறு தரவேண்டும். இறைவன் ஒன்றுமே அறியாதவன் என்றா நினைத்துக்கொண்டிருக்கிறீர் மானுடரே.

பாரதத்தார் அலுவலகம் சென்றால் மேளம் வாசிக்கக்கூடாது என எதுவும் இருக்கிறதா. பக்தியில் சிறந்தவராகப் பெயர் வாங்கியிருக்கும் பாரதத்தார் காலையில் ஒரு அரைமணி நேரத்தை இறைவனுக்காகச் செலவிடக்கூடாதா. விருப்பமான சில நுறுபெருக்குச் சொல்லிக்கொடுத்தாலே திருக்கோவில்களில் இசை நிரம்பி வழியுமே. இப்படியுமா டமரா டமரா என கோவில்களை அதிர வைப்பது. அது இசையா மனிதர்களே.

பாரதத்தார்களே, எந்தக் கோவிலிலும் டமரா சத்தம் கேட்கக்கூடாது. கோவை மாநகரில் பக்தியில் விருப்பமுள்ள, சேவை எண்ணம் கொண்ட ஒரு ஆயிரம் பேருக்காவது நாதசுரம், மேளம், மிருதங்கம் போன்ற மங்கல வாத்யங்கள் இசைக்கக் கற்றுத்தர வேண்டும். கோவை என்றில்லாமல் தமிழகத்தின் அனைத்துக் கோவில்களிலும், பாரதமெங்கும் காலை, மாலை பூசனைகளின்போது, மனிதர்களே மங்கலக் கருவிகள் இசைக்க வேண்டும். பெண்களும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளலாம். நல்ல உடல்நிலையில் இருக்கும் சற்று வயதானவரும், இறைவனுக்குச் செய்யும் பெருஞ்சேவையாகக் கருதி கோவில்களில் இசைக்கலாம். இதை சேவை எனக் கருதுவதைவிட கடமை எனக் கொள்வதே பொருத்தமானது. நம் இறைவர்களுக்குச் செலுத்தும் நன்றிக்கடன் எனவும் எடுத்துக் கொள்ளலாம். இருநூறு கோடி கைகளை வைத்துக்கொண்டு, நம் பெருந்தெய்வங்களுக்கு டமரா அடிப்பது தர்மமாகாது பாரதீயர்களே.

பாரதத்தாரே.. நாம் நம் பூமியை கண்ணை இமை காப்பதுபோல் காக்கவேண்டும். மேற்குலகம் பூமியையும் ஒரு பொருளாகப் பார்க்கிறது. பூமி வற்றாத ஜீவ நதிபோல் என்றும் வற்றாத உயிர்க்குலங்களின் தாய் என்பது கிழக்கின் ஞானம், முடிவு. நிலமகள்

மானுட குலத்தின் பெருமைமிகு அன்னை. உயிர்களைச் சுரப்பவள்.. அமுதூட்டுபவள்.. காப்பவள்.. நற்கதி அருள்பவள்.. பாரதம் பூமியைத் தாயாக, பெண்ணாக, உயிர்களின் அமுதசுரபியாகப் போற்றுகிறது. நமக்கு பூமி வெறும் மண்ணல்ல. நம்மைப் போலவே உயிருள்ளது நம் பூமி. நம் புண்ணிய அன்னைக்கு யாதொரு குறையும் நேராதவாறே நாம் இயற்கை சார்ந்த திட்டங்களை, வளர்ச்சியை முன்னெடுக்க வேண்டும். நமக்கு வளர்ச்சியும் வேண்டும். நாம் தேங்கிவிடக் கூடாது. அதே நேரத்தில் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகவும் கொண்டிருக்கக்கூடாது. நமது வளர்ச்சி நம் அன்பான பூமியை சிதைக்காதவாறு இருக்க வேண்டும். மண்ணைத் தோண்டுவதிலும், மலைகளைக் குடைவதிலும் கவனம் கொள்ள வேண்டும். பூமி ஒருவித சமநிலை கொண்டு இயங்குகிறது. நாம் அந்தச் சமநிலையைக் குலைக்கக் கூடாது. நம்மால் பூமித்தாயின் ஒழுங்கமைவு மாற்றப்படக்கூடாது. மனிதர்களாகிய நாம் இயற்கையை நமது சுயநலம், இலாபம், வளர்ச்சி ஒன்றையே பெரு நோக்கமாகக் கொண்டு பயன்படுத்தக் கூடாது.

பாரதத்தார்கள் நவீன அறிவியலின் சாதனைகளாகக் கருதப்படும் கலப்பின தாவர, விலங்குகளில் பெருங்கவனம் கொள்ளவேண்டும். உயிர்களை நாம் உருவாக்கக் கூடாது. அது இயற்கையாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். உயிர் உருவாக்கத்தை இயற்கையிடம், இறைவனிடமே விட்டுவிட வேண்டும். இயற்கை அதற்கு எது தேவையோ, எப்படியான உயிர்கள் வேண்டுமோ, அதை, அவற்றை, உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. மனிதர் இயற்கையோடு முரண்படக் கூடாது. மனிதர் வணிக நோக்கத்திற்காக,இலாபத்துக்காக, அறிவைக் காட்டுவதற்காக உயிர்களைப் படைக்கிறார். அது தவறாகும். அறமாகாது. நாம் உயிர்களைப் படைப்பவனாகக் கூடாது. நாம் அத்தகைய மகத்தான ஞானம் கொண்டவரல்ல. மேலும் படைத்தவரே அதைக் காக்கவும் வேண்டும் என்பதே நெறி. இலாபம் குறைந்தால், இனிப் பயன் இல்லையெனத் தெரிந்தால் மனிதர் படைத்த உயிர்களின் நிலை என்னாவது.

வேண்டாம் மனிதரே. நாம் உயிர்களைப் படைக்க வேண்டாம். நாம் காப்பவர்கள். நாம் உயிர்களை என்றும் காப்பவர்களே. இறைவன் அதிசயம் போன்று உயிர்களைப் படைக்கிறார். இறைவன் மேல் நம்பிக்கை இல்லாதவர் இயற்கை படைப்பதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

மனிதா்களே.. நம் அறிவு ஒரு வரைமுறைக்கு உட்பட்டதே. இயற்கையில் கோடான கோடி உயிரினங்கள் இருக்கும்போது, புதிதாக ஒன்றை நாம் உருவாக்க வேண்டிய தேவை என்ன. நமக்கு பால் அதிகம் வேண்டுமெனில், கறவைகளின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டுமே தவிர மடியைப் பெருக்கவைக்கக் கூடாது. நாம் ஊசி மூலம், உணவின் மூலம், மரபணுக்களை மாற்றுவதன் மூலம், பாலை அபரிதமாகக் கூட்டுகிறோம். கறவைகள் ஒன்றும் எந்திரங்களல்ல மனிதரே. அவை உயிா்கள். நம்மைப் போன்றே உணா்ச்சிகள் கொண்டவை. நமக்குப் பயனாகின்றன என்பதற்காக அவை நமக்குச் சொந்தமானவை அல்ல, உரிமையானவை அல்ல. நாம் உயிா்களைப் பயன்படுத்திக் கொள்கிறோம். நாம் உயிா்களைப் பயன்படுத்துவதில் ஒரு நியாயமும், அறமும் இருக்க வேண்டும்.

பாரதத்தாா்கள் கலப்பினங்களுக்கு தடை விதிக்க வேண்டும். முக்கியமாக விலங்குகளில் அறவே கூடாது. தாவரங்களிலும் உணவில் வேண்டாம். பூக்கள் போன்றவற்றில் ஏற்றுக் கொள்வதிலும் எமக்குத் தனிப்பட்ட விலக்கம் இருக்கிறது. பூக்களை நம்பி வண்டுகள் இருக்கின்றன. இயற்கையில் அனைத்தும் ஒன்றை ஒன்று சாா்ந்திருக்கின்றன. ஒன்றின் ஒழுங்கமைதி குலைந்தால், ஒன்றில் மாற்றம் நிகழ்ந்தால், அது தொடா் சங்கிலி என அனைத்தையும் பாதிக்கும் என்பதே இயற்கை அறிவு. நாம் ஓரளவிற்கு இயற்கையையும் அறிந்திருக்கிறோம். தானியங்களை குருவிகள் தின்று தீா்க்கின்றன என்பதற்காக அத்தனை குருவிகளையும் சுட்டுக்கொன்றால் என்னாகும் என்பதை நாம் அறிந்திருக்கிறோமல்லவா. மனிதரின் தவறுகள் மனிதருக்கான பெரும் பாடங்கள் அல்லவா. சிட்டுக் குருவிகள் அழிந்தால் என்னாகும் மனிதரே. சிட்டுக் குருவிகள் பூச்சிகளை உண்பவை எனில், பூச்சிகள் எண்ணிக்கையில் பெருகுமன்றோ. குருவிகள் சேதத்தைவிடப் பூச்சிகளின் சேதம் அதிகமல்லவா.

மனிதா்களாகிய நாம் அனைத்தையும் அறிந்துவிடவில்லை. மனிதா் அறியாத ஏராளமானவற்றை இயற்கை இன்னும் பத்திரமாக ஒளித்து வைத்திருக்கிறது.

மனிதா்களே.. விதையில்லாக் கனிகளை, கொத்துக் கொத்தாகக் காய்க்கும் செடிகளை, விதையில்லாக் காய்கறிகளை, தாவரங்களை ஒருபோதும் உருவாக்காதீா்கள். ஒவ்வொரு உயிருக்கும் தம்மைப் பெருக்குவதற்கான, நிலை நிறுத்துவதற்கான, தொடா்ந்து தமது அடையாளத்தைத் தக்கவைப்பதற்கான,

வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். கனிக்கு அதன் விதையை, அதன் மரபைக் கடத்துவதற்கான உரிமை வழங்கப்பட்டாக வேண்டும். மனிதர் விதையைக் கீழே போட்டுவிட்டு கனியை உண்ணமாட்டாரா. அதற்குள் காலம் ஓடிவிடுமா மனிதரே. அவ்வளவு அவசரமான செயலையா ஆற்றிக்கொண்டிருக்கிறீர். நிர் விதையைக் கீழே போட்டுவிட்டு உண்ணும். விதை முளைத்து செடியாகவேண்டும் என இயற்கை தீர்மானித்தால், அது வளர்ந்து செடியாகி, கனிந்து மறுபடியும் உமது வயிற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும். உண்மையில் இயற்கை சில தாவரங்கள், பூக்களை விதையில்லாமலும் வைத்திருக்கிறது. மாறாக, நாம் விதையில்லா தாவர சங்கமங்களை உண்டுபண்ணுவது அறப்பிழை பாரதத்தார்களே.

பாரதத்தார்களே, இம்மண்ணின் பெரும் அறத்தெய்வங்களான புத்தரும், மகாவீரரும், காந்தியும் முன்னெடுத்த, கண்டடைந்த அன்பும், அகிம்சையும் எத்தகையதென்பதை சற்றே நினைவில் கொள்ளுங்கள். கொல்லாமையை பெரிய அறமாகப் போற்றும் நம் மரபில், உணவுக்காகவே என்றாலும், முறையற்ற, தகாத, அதீத புலால் உணவு கூடாது. மனிதர்கள் புலால் உணவை ஒரு கட்டுக்குள்ளேயே உண்ண வேண்டும். முன்னர் வேறுமாதிரியான வாழ்க்கைமுறை இருந்திருக்கும். நாம் அதைக் கடந்து வந்துவிட்டோம். புலாலை மட்டுமே உணவாக, முக்கியமாக உண்ணும்முறை அறமற்றதாகவேப் படுகிறது. மனிதர்கள் சிந்திக்க வேண்டும்.

மனிதர் சாப்பிடுவதற்கு ஏராளமானவற்றை இயற்கை உண்டாக்கியிருக்கிறது. மனிதர் தோழமை கொள்வதற்கு எத்தனையோ விலங்குகளை இயற்கை உருவாக்கியிருக்கிறது. மனிதர்கள் பேசுவதற்கும், இரசிப்பதற்கும் இயற்கை நூறுநூறு ஆயிரமாகப் பூக்களைப் படைத்திருக்கிறது. இவை போதாதென்றா மனிதர் புதிதாகப் படைக்கிறார். அது ஆசை மனிதரே. அறிவாகாது. தெளிவீர்..

நாம் இயற்கையோடு இணைந்திருப்போம். இயற்கை நம் அன்னை. பேரன்னை. பெருங்கருணை கொண்டவள். அனைவருக்குமான தாய். அவளறிவாள் நமக்கு எது தேவையென. நமக்குத் தேவையெனில், அவசியமெனில், நிலமென்னும் நல்லாள் சட்டென ஒன்றை உருவாக்கிவிடுவாள்.

பெருமைக்குரிய பாரதீயர்களே.. இனி மனிதர் நோயினாலோ, வறுமையாலோ, துன்பத்தாலோ, காதலாலோ இறந்தார் எனும் நிலை இருக்கக் கூடாது. அது மனிதரது கடந்த காலமாகவே இருக்கட்டும். மனிதர் கடந்து வந்த பாதையாக நினைவு கூறப்படட்டும்.

பண்பாட்டில் சிறப்புற்ற பாரதியரே, இந்தியா அதன் உணவுக் களஞ்சியங்களை, சேமிப்புக் கிடங்குகளை சரிபார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். இவற்றை நம்பி கோடானகோடி வயிறுகள் காத்திருக்கின்றன என்பதை பாரதத்து மக்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது. ஆட்சியாளர்களின் முதல்கவனம் இதில்தான் இருக்கவேண்டும். தமிழகமும் அதன் நெற்களஞ்சியத்தை கண்ணின் மணிபோல் பேணவேண்டும்.

அறிவில் வல்லமை கொண்ட இந்தியர்களே, யார் இந்தியர். சொல்கிறோம் கேளும். எமது இந்தியர் அன்பானவர். எமது இந்தியர் நேர்மையாளர், துணிவுடையவர், பொறுமைசாலி, உழைப்பவர், சகிப்புத்தன்மை நிரம்பியவர், மத நல்லிணக்கம் மிகுந்தவர், பெண்களை மதிப்பவர், அறிவைப் பகிர்பவர், கல்வியில் சிறந்தவர், ஆராய்ச்சி மனோபாவம் மிக்கவர், தலைமைப் பண்பு கொண்டவர், போராட்ட குணம் மிக்கவர், அநீதியை எதிர்ப்பவர், புன்னகை முகத்தவர், சகல கலைகளிலும் தேர்ந்தவர், மூத்தோர் சொல் கேட்பவர், பிறர் கருத்தை மதிப்பவர், காதலில் நேர்மையுள்ளவர், பொய் பேசாதவர், சினமில்லாதவர், மனவலிமை உடையவர், உடலைப் பேணுபவர், யோகத்தை அறிந்தவர், உள்ளத்தை அடக்கியாள்பவர், உலக மக்களை நேசிப்பவர்.

எமது பெருமைமிகு இந்தியரை எதிலும் உறுதியாக நம்பலாம் என உலகினர் நினைக்க வேண்டும். அவரே இந்தியர். அவரே இந்தியத் தாயின் தவப் புதல்வர்.

பூமியில் மணம் முடிக்கும் அனைத்துத் தம்பதிகளுக்கும் நம் இந்திய நாடு அழகியதொரு பரிசுப் பெட்டகத்தை அனுப்ப வேண்டும். அழகியதொரு முத்துமாலையைப் பரிசளிக்கலாம். அருமையான பட்டுச் சேலையை பரிசாகக் கொடுக்கலாம். தங்க மோதிரம், வெள்ளிக் குடம், பித்தளைக் குத்து விளக்கு, சமையல் பாத்திரங்கள் போன்றவற்றைப் பரிசாகத் தரலாம். தேக்கு மரச் சிற்பம் தரலாம். சந்தனச் சோப்புகள் அனுப்பி வைக்கலாம். மணமகளுக்கு கொலுசோ, மூக்குத்தியோ அனுப்பலாம். நறமணப் பொருட்கள் கொடுக்கலாம். கைக்கடிகாரம், வாசனைப்

பொருட்கள், படுக்கை விரிப்புகள், அழகிய கைப்பைகள் (தோல் தவிர்த்து) பரிசாகக் தரலாம். வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய, நினைவாகப் போற்றக்கூடிய ஏதேனுமொரு பொருளை இந்தியத் தாய் அவரது அன்புப் பரிசாகக் கொடுக்க வேண்டும்.

இந்தியா என்றில்லாமல் மணமக்களுக்கு அனைத்து நாடுகளுமே அவரவா் நாட்டிலிருந்து சிறப்பான ஒன்றை பரிசாகத் தரலாம். பெரிய நாடுகள் சற்றே பெரிய பொருட்களைப் பரிசளிப்பது சிறப்பு. நம் மக்கள்தானே மணமுடிப்பது. 100 நாடுகள் பரிசனுப்பினால் மணமக்கள் பூரித்துப் போவாரன்றோ. நம் அன்பைக் காட்டும் வழியன்றோ நம் பரிசுகள்.

உலகின் இதயங்களே

கனிமூனுக்கு காசுமீரம் வாருங்கள்

ஓங்கி உயா்ந்திருக்கும் எங்கள் அழகிய காசுமீரின் குளிருக்கு

இதமாய்க் கட்டியணைத்துக் கொள்ளுங்கள்

படகுச் சவாரியில் மகிழுங்கள்

பனிக்கட்டிகளில் கொஞ்சி விளையாடுங்கள்

காசுமீரா்களின் அன்பைக் காணுங்கள் - எங்கள்

காசுமீரத்தின் பேரழகைப் போற்றுங்கள்

இந்தியா உலகின் அனைத்துத் தம்பதிகளையும் தேனிலவுக்கு அழைக்கவேண்டும். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வரும் இளம் ஜோடிகள் நமது விருந்தினா்களாக இமயத்தில் பத்து நாட்கள் தங்க வேண்டும். அவா்கள் நம் பெருமைமிகு காசுமீரின், இமாசலின் இயற்கையைக் கண்டு ஆச்சரியப்படவேண்டும். அழகு கொட்டிக்கிடக்கும் மாநிலங்களல்லபோ நம்முடையவை. உலகக் காதலா்களெல்லாம் காசுமீரில் ஒன்று கூடும் நாள் எந்நாள் இந்தியரே. அவா்கள் நம் பாரதப் பண்பாட்டை உலகறியச் செய்யும் தூதா்களன்றோ. நம் உறவுகளன்றோ. **பாரதத்தின் தவசீலா்களே..**

ஆயிரம் ஆயிரம் ஞானியர் வாழ்ந்த புண்ணிய பூமி இது

ஆயிரம் ஆயிரம் மன்னர்கள் ஆண்ட பொன் புடவி இது

ஆயிரமாயிரம் அறிஞர்கள் பயின்ற பெரும் பள்ளி இது

பல்லாயிரம் காதல்கள் வேர்கொண்ட அகண்ட நிலமிது

கோடானகோடி பெருத்த வயிறுகளின் அமுத சுரபி இது

நம் பாரதம் காப்போம்.. பண்பாட்டில் உயர்வோம்..

**பாரதம் விழித்தெழுகிறது;அம்பரத்திலிருந்து அகல்கின்றது இருள்**

இனிமை நிறைந்தவர்களே,

பெண்களை மிகவும் சிந்திக்க வைக்காதீர்கள்.

பெண்கள் மனதை வருத்தப்படுத்தாதீர்கள்.

பெண்களை ஒருபோதும் அழவைக்காதீர்கள்.

பெண்ணை கடின வேலையில் ஈடுபடுத்தாதீர்கள்.

பெண் பசித்திருக்கூடாது.

பெண்ணை எதற்கும் ஏங்க வைக்காதீர்கள்.

பெண்ணைப் பூப்போல் தாங்குங்கள்.

ஆண்கள் சும்மா இருக்கக் கூடாது.

ஆணுக்கு சோம்பல் கூடாது.

ஆண்கள் ஏதேனுமொரு வேலை செய்ய வேண்டும்.

ஆண் நிறையப் படிக்கவேண்டும்.

ஆணுக்குள் ஏன் எப்படி எனக் கேள்விகள் பிறக்க வேண்டும்.

ஆண்கள் விடைகளைத் தேட வேண்டும்.

ஆணுக்கு எதிலும் தேக்கம் கூடாது.

ஆண் எதையும் முயன்று பார்க்க வேண்டும்.

ஆண் வாய்விட்டு அழக்கூடாது.

ஆண்கள் பெண்போல் உடுத்த வேண்டாம்.

பெண்போல் முடி வளர்ப்பதும், காதில், தலையில் மாட்டுவதும் வேண்டாம்.

ஆண் உடலாலும் உள்ளத்தாலும் பெண்ணிலிருந்து வேறுபட வேண்டும்.

பெண்ணோடு சமூகமாக ஒன்றிணைய வேண்டும். ஒன்றாகக் கூடாது.

மனிதர்களே.. உலகம் ஆண், பெண் என இரண்டாகவே தொடரட்டும்.

**காதலைக் கொண்டாடும் பாரதத்தின் புகழ்மிக்க பெண்ணே,**

நீய் ஆண்களைக் கவனிக்கிறாயல்லவா. எப்படியிருக்கிறார் இந்த பாரதீய ஆண். ஆண்மையோடு இருக்கிறாரா. ஒன்றரை முழம் துருத்திய பெருத்த வயிறு. ஓடியாடி விளையாடக்கூட முடியாத உடல் வலிமை. உட்கார்ந்து எழ முடியாத வாலிபம். உடலெல்லாம் இனிப்பு. கூடவே கொழுப்பு. உயர் இரத்த அழுத்தம். உப்புச் சத்து. கல்லீரல் வீக்கம். போதாக்குறைக்கு குடி, சிகரட். இந்த ஆணைக் கட்டிக்கொண்டு நீய் என்ன சுகபோகங்களை அனுபவிக்கப் போகிறாய். நீயாவது இவருக்கு நிபந்தனை விதிக்கக்கூடாதா. நீச்சல் தெரியாத ஆணெல்லாம் ஆணா பெண்ணே. ஒருவேளை நீய் தண்ணீரில் தத்தளித்தால் இவர் என்ன செய்வார். கத்தி கூப்பாடு போடுவாரா. அழுவாரா. ஆணென்றால் பாய்ந்து காப்பாற்ற வேண்டாமா. தண்ணீரில் எதிர்நீச்சல் போடத் தெரியாத இந்த ஆண் வாழ்க்கையில் எப்படி எதிர்நீச்சல் போட்டு வெல்வார். நீச்சல்கூடத் தெரியாத இவரை நீய் ஆணென்று ஒப்பி ஏன் மணம் செய்கிறாய்.

பாய்ந்தோடும் ஆறுகளிலும், ஆர்ப்பரிக்கும் அலைகடலிலும் நீந்திக் கரை சேர்பவனுக்கே கழுத்தைக் காட்டுவோம் என நீய் முடிவெடுத்தால்.

நாள் முழுக்க வயல்வேலை செய்பவனுக்கே மாலையிடுவோம் என நீய் உறுதிபூண்டால்.

வயலில் உழுபவனல்லவா வீரன். அதுவல்லவோ ஆண்மை. நிலத்தை உழுது பயிர் விளைவிப்பவனாலல்லவோ பெண்ணை உழுது உயிர் உண்டாக்க முடியும். நிலமறியா ஆண் பெண்ணை எப்படி அறிவான்.

நாள் முழுக்க அலுவலகமொன்றில் எடுபிடி வேலை செய்து பிழைக்கும் ஆணை நீய் எப்படித்தான் கட்டிக்கொள்கிறாயோ பெண்ணே.

சில அடி தூரம் நடப்பதற்கே இடுப்பில் கைவைப்பவன் ஆணா. இவனா உனது மனங்கவர்ந்தவன். இவனா உனக்கு மாலையிடப் போகிறவன்.

நடுரோட்டில் போட்டு ஒரு வயதானவரை தடியால் அடிக்கிறார்கள் சில கயவர்கள். இந்த மாவீர ஆண் ஒளிந்து கொண்டு வேடிக்கை பார்க்கிறான். இவனா ஆண் பெண்ணே. இவனுக்கா நீய் கழுத்தை நீட்டப் போகிறாய். ஒருவேளை நாளைக்கு உனக்கு ஏதேனும் நடந்தால்கூட இந்த தொடைநடுங்கி உன்னை விட்டுவிட்டு ஓடுவானல்லவா.

பெண்ணே, கல்யாணம் முடிக்க ஆசைப்படும் ஆணுக்கு குறைந்தபட்சம் நீச்சலாவது தெரிந்திருக்க வேண்டுமென்பதை நிபந்தனையாக்கினால் என்ன. ஐந்து கி.மீ.தூரமாவது ஓடவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினால் என்ன. 100மீட்டர் கூட ஓட முடியாத ஆணை நீய் ஆணென்றா சொல்கிறாய்.

பெண்ணே, எட்டுப் போட்டுக் காண்பித்தால்தானே வாகன உரிமம் தருகிறார்கள். திருமணம் செய்வதற்கு இந்த ஆணைக் குட்டிக்கரணம் போடவைக்க வேண்டாமா. முன்னர் தமிழகத்தில் இளவட்டக் கல் தூக்குபவர்க்கே கல்யாணம் என இருந்ததை நீய் அறிந்திருக்கிறாயா. இந்த தொப்பை பெருத்திருக்கும் ஆணை ஐம்பது கிலோ அரிசி மூட்டையை தூக்கிக்காட்டச் சொன்னால் என்ன. 50 கிலோ அரிசி மூட்டையைத் தூக்க முடியாத இந்த ஆண், ஏதேனும் அவசரம் எனில் உன்னை எப்படித் தூக்குவான். தூக்கிக் கொண்டு ஓடுவான். நீயும் கொஞ்சம் வாயைக் கட்டவேண்டும் பெண்ணே. ஆலமரம்போல் பெருத்துக்கொண்டே போகிறாய். எதிர்த்தும் பேசுகிறாய்.

பேரன்பு கொண்ட பெண்ணே, ஆணோடு மல்லுக் கட்டாதே. மல்லுக்கு நிக்காதே. வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பேசாதே. உன் முரட்டுப் பேச்சைவிட உனது மௌனமே அவனைப் பெரிதும் சலனமாக்கும். அவன் கோபப்பட்டால் நீயாவது அமைதியாக இரு. பெரும்பாலான குடும்பங்களில் பெண்ணின் பேச்சே ஆண்களைப் பிரிக்கிறது. பெண் தன்னைப் பெரும் அறிவாளியாக நினைத்துக் கொண்டு சொல்லாடுவதே இருவருக்கும் முரணாகிறது. பெண்ணை அன்பாலும் ஆணை அறிவாலும் உண்டாக்கியிருக்கிறது இயற்கை. இருவரும் இதை உணர்ந்தால் குடும்பங்கள் செழித்திருக்கும். மனிதர்கள் குடும்பங்களாக ஆவது பெண்ணாலே. பெண்ணே அனைத்திலும் பொறுமை காக்க வேண்டும். ஆண் தவறு செய்தாலும் பெண் சற்று பொறுமை காணவேண்டும். தவறு செய்யும் ஆண் மனம் குறுகுறுக்கிறது பெண்ணே. தவறு செய்கிறோம் என ஆண் மனம் நினைக்கிறது. அறிவாலேயே ஆண் தவறுகள் செய்கிறான். அதுகூட தவறல்ல பெண்ணே. ஆணின் அறிதல். அவன் அறிவைத் தேடுபவன். அவன் தவறுகள் அவனது அறிவுத் தேடல்கள். அவனது அனுபவங்கள். அனுபவ அறிவு கொண்டே ஆண் தவறு எது, சரி எது என்பதைத் தீர்மானிக்கிறான். அவன் திருந்துவான் பெண்ணே. அவன் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பமாவது கொடு. ஆண்கள் குடும்பத்திலிருந்து வெளியேறுவது, பெண்கள்மேல் வெறுப்புக் கொள்வது தகாது பெண்ணே. உலகம் இரண்டாகும். வேண்டாம் பெண்ணே. பெண்ணால் உலகம் இரண்டாக வேண்டாம். பொறுத்திரு. உன் பொறுமையால் ஆணை நிச்சயம் வெல்வாய். உலகம் உனது. உலகம் பெண்ணுக்குரியது, ஆனால் பெண்ணுடையதல்ல. பெண்ணே, ஆணோடு போட்டிபோடுவதற்குமுன் இதைத் தீர்மானி. பெண்ணுக்குப் பெருமை, புகழ், சிறப்பு வாய்ப்பது அன்பாலா, அறிவாலா அல்லது வீரத்தாலா.

தென் இலங்கை வென்று வந்தான் ஸ்ரீராமன் வடிவினிலே

மண் அறிய கலப்பை கொண்டான் பலராமன் உருவத்திலே

பொன் அழகன் முடி துறந்த புத்தனவன் உருவமடி

பொங்கி வரும் கலியுகத்தில் பூத்து வரும் கல்கியடி

**அரே அரே கிருஷ்ண அரே நந்தலாலா**

**ஆனந்த யது குமரா நந்தபாலா**

எழுக புதிய இந்தியா.. மலரட்டும் பேரன்பு.. பெருகட்டும் அறிவாற்றல்..

எல்லோரும் ஒருதாய் மக்கள். எல்லோரும் ஓர் நிறை.

இந்தியா அன்பின் இலக்கணமாகட்டும்.

காந்தியென்னும் வெளிச்சம் என்றும் நமக்குத் துணையாய் இருக்கட்டும்..

வாருங்கள் பாரதத்தாரே,

அன்பு எனும் பெருவெள்ளத்தில் மனிதரை நீராட்டுவோம்.

இன்பமெனும் குளிரோடையில் மனிதரை நீந்தச் செய்வோம்.

மகிழ்ச்சி எனும் மனக்கடலில் மனிதரை தத்தளிக்கச் செய்வோம்.

மண்ணில் புதுசொர்க்கத்தைப் படைப்போம்.

புனித பாரதத்தின் மாமனிதர்களே. மகான் அரவிந்தரின் ஞானத்தைச் சற்றே நினைவுறுங்கள்.

விண்ணை இங்கே கொணர்பவன் எவனோ - அவனே

மண்ணிலும் சேற்றிலும் உழன்றிடல் வேண்டும்

நிலமாம் இயற்கையின் சுமைதனைச் சிரமதில் - அவனே

கலங்கா தேற்றுச் சுமந்திடல் வேண்டும்

இடர்மிகு முரட்டுப் பாதையில் நடந்திட - அவனே

திடமுடன் பாதம் பதித்திடல் வேண்டும். (நன்றி - சாவித்திரி காவியம்)

இந்த மண்ணின் வாழ்க்கை தெய்வ வாழ்க்கையாகும்.

மானிட லீலையை பரம்பொருள் இனிதே கையகப்படுத்தும்.

தெய்வ முகூர்த்தம் நெருங்கிவரும் நேரத்தில் அதைப் பயன்படுத்திக்கொள்ள சித்தமாக இல்லாமலோ அல்லது உறங்கிக்கொண்டோ இருக்கும் மனிதனோ அல்லது நாடோ மகிழ்ச்சியைக் காணாது.

பூமியின் பரிணாமத்தில் அடுத்த சாதனை மனிதன் அதிமனிதனாக மாறுவதற்கு அடியெடுத்து வைப்பதுதான். இயற்கையன்னையின் நியதியும் அதுவே.

காலம்காலமாக மனிதகுலம் இந்த நேரத்திற்காகத்தான் காத்திருந்தது. இப்போது அது வந்துவிட்டது.

மானுட வாழ்க்கைச்சூழல் ஒரு புதிய யுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

தனிமனிதனுக்கு ஓர் ஒத்திசைவும் மக்கள் குலத்திற்கு மகிழ்ச்சியையும் அளிக்கவல்ல ஓர் தெய்வீக ஆட்சி அமையவேண்டும். அது ஆடம்பரமற்ற செல்வச் செழிப்பான அழகிய வாழ்க்கை எல்லோருக்கும் அமைவதற்கான வழியை வகுக்கும்.

மானுடத்தின் பொதுத்தொண்டில் ஈடுபட்டு முழுஇனத்திற்கும் உதவிபுரிய வேண்டும்.

இதுவரை காணாத ஊகித்திருக்க முடியாத பரத்துவம் ஓர் அவதாரமாக இறங்கி வரும். அப்போது மானுடனின் மாற்றம் ஒரு முழுமைக்கு வந்து மனிதனை அவனது குறுகிய எல்லையிலிருந்து மீட்டு பெரும் விரிவுகளுக்கு அவனைக் கடத்தும்.

நாளைய சத்தியம் வருவதை யாராலும், எந்தத் தீய எண்ணத்தாலும், இயற்கையே எதிர்த்தாலும் தடுக்க முடியாது. அது மிக அண்மையில் எதிர்காலத்திலேயேகூட நிகழ்ந்து விடலாம்.

மக்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். மறந்து போயிருக்கிறார்கள். வாழ்க்கையை மிக எளிதாக்கிக் கொண்டுவிட்டார்கள். புதிய உலகம் பிறக்கும்

வேளையில் நாமும் இருக்கும் பேறுபெற்றோம் என்பதை நினைவுபடுத்திக் கொள்வோம்.

இந்த அற்புத வாய்ப்பு கிட்டும்போது, அதன் பொருட்டு அனைத்தையும் துறக்க சித்தமாக இருக்க வேண்டும்.

பாரதத்தார்களே, மகான் ஸ்ரீஅரவிந்தர் விரும்பிய அறுதியிட்ட வானகம் இங்கு வசப்படும். அது நடக்கும், நடக்கும், உறுதியாய் நடக்கும்.

**வாழிய பாரதம்; வாழிய உலகம்**

தமிழர்களே.. நம் தமிழின் பெருமையைப் பார்த்தீர்களா. நம் சங்க மரபும், நம் மூவேந்தரும் தமிழன்னையைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டாடியது தகும்தானே. எத்தனை ஏற்றம். எத்தனை பெருமையுடையவள் இந்த தமிழ்ப் பெண். நமதடா இவ்வுலகம் எனப் பட்டயம் போட்ட நம் புகழ்க்கவிஞர் கூற்று மெய்யாகிவிட்டதுதானே. கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்பே தோன்றியது நம் தமிழென்னும் மூத்த குடி என்பதும் மெய்யாகிவிட்டதல்லவா. என்னே தமிழின் புகழ்.. வாழ்க நம் தமிழ் மடந்தை. வாழிய நம் அன்னை.

குமரி யிலேத் தோன்றி

குவளயம் முழுதும் ஆண்டு

நலந்தரு நாகரிகம் நயந்து

நானிலத்துக்குப் பல்கலை பகர்ந்து

இன்னதினம் தோன்றின தென்று

இன்னும் அறிய முடியாது

பண்ணமைத்துப் பாவலரும் - வீரப்

புண்பெற்றுப் புரவலரும் காக்க

அருள்வேங்கடம்முதல் அம்பாறைவரை

மறமுடன் வாழ்ந்து - புகழ்

விளங்கி நிற்கும் மக்கள் பெற்ற

வீரமிகு தமிழ்த் தாயே

முக்காலும் நின் பிள்ளைகளை

அக்கறையுடன் காத்திடுவாயே..

(நன்றி - நட்பென்றால் நாம் என்போம் - முகநூல்)

**அறிவிற் சிறந்தோரே,**

நாம் நம் தமிழ் கொண்டு புத்துலகம் படைப்பதற்கான காலம் கைகூடிவிட்டது. தமிழ் நம்மை இதை நோக்கியே தயார்படுத்தி வந்துள்ளதை அறிவீர். நாம் நிலத்தைப் பொதுவாக்க வேண்டும். அதுவே அறிவுடைமை. நிலம் தனிப்பட்டு இருப்பதாலேயே அவரவர் விருப்பம்போல் நிலத்தைச் சுரண்டுகிறார். நாம் பிற தேசங்களில் நடந்த பொதுவுடமை மாற்றங்களைப்போல் வலுக்கட்டயமாக நிலத்தைப் பிடுங்கப் போவதில்லை. பொதுவுடமையை உலகெங்கும் முன்னெடுத்தவர்கள் மிகுந்த பெருமைக்குரியவர்கள். போற்றுதலுக்கு உரியவர்கள். எனினும் அவர்கள் அன்பால் மாற்றங்களை முன்னெடுத்தார்கள். மனித மனங்களை உள்வாங்காமல், சரியான முன்திட்டங்கள் இல்லாமல், மக்களைத் திரட்டாமல், மக்களை, தலைவர்களை தியாகங்களுக்குத் தயார்ப்படுத்தாமல், முக்கியமாக கொஞ்சம்கூட சமரசங்களுக்கு இடமில்லாமல் சட்டென அனைத்தையும் பொதுவுடையாக்கிவிட்டார்கள். மக்கள் மனங்களை இன்னும் நன்றாகப் படித்திருக்க வேண்டும். எதையெல்லாம் பொதுவுடைமையாக்க வேண்டும் என்பதில் தெளிவும், வரைமுறையும் இருந்திருக்க வேண்டும். மக்கள் மனங்கள் மிகுந்த எண்ணமாறுபாடுகளுக்கு உட்பட்டவை. தலைவர்கள் சமூகத்திற்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதித்ததும், மக்களை

ஏக்கத்திற்கு உடபடுத்தியதும் பொதுவுடமைமேல் மக்களுக்கிருந்த பிடிப்பு குறைந்துவிட்டது. பொதுவுடமைத் தலைவர்கள் அனைத்து அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டதும், எவரும் கேள்வி கேட்கக்கூட முடியாமல் ஆனதும் தலைவர்களின் பிழை. இங்குதான் நம் பெருமைமிகு தந்தையாம் காந்தி வருகிறார். காந்தி மக்களின் மனங்களைப் படித்தவர். மனத்தின் வலிமையை உணர்ந்தவர். மனிதர் அதிகாரம் கொண்டால் எப்படியெல்லாம் நடந்து கொள்வார் என்பதை நன்றாக அறிந்தவர். காந்தி வரலாற்றை சரியாகவே அறிந்திருக்கிறார். காந்தியின் வெற்றி அவர் கொண்ட சமரசங்களாலும் எனலாம். காந்தி எதிலெல்லாம் சமரசங்கள் கொள்ளலாம் என்பதிலும் நுட்கமாகச் செயல்பட்டார். முக்கியக் கொள்கைகளில் காந்தி ஒருபோதும் சமரசம் காணவில்லை.

பொதுவுடமையாளர்கள் மண்ணை மட்டும் பொதுவுடமையாக்கியிருக்க வேண்டும். பொதுவுடமை மக்களின் மிகுந்த அன்பால் வரவேண்டியது. உண்மையெனில் சேவை பெரியளவில் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு தலைவர்கள் பெரும் சேவையாளர்களாக இருப்பது மிக அவசியம். நம் தந்தை காந்தி போல. சேவை அன்பால் வராது. அன்பு வேலை செய்யும். சேவை செய்யாது. சேவை அறிவால் உண்டாவது. மக்கள் சேவைக்கு பெரும் ஞானம் வேண்டும். ஞானத்தால் முன்னெடுக்கப்படும் பொதுவுடமை ஒருபோதும் தோற்காது.

நாம் தமிழின் அறிவால், தமிழர்களின் பெருத்த ஞானம் கொண்டு பொதுவுடமையை முன்னெடுக்கிறோம். யாம் தமிழின் பெயரால் உறுதியளிக்கிறோம். நம் பொதுவுடைமை அனைவருக்கும் நன்மையளிக்கும். அனைத்து நாடுகளுக்கும் ஒளியாகும். நிச்சயம் இப்போதைக்கு நாம் வாழும் வாழ்க்கையைவிட பலமடங்கு மகிழ்ச்சியாக வாழ்வோம். நாம் எந்த மனிதரையும் விட்டுவிடமாட்டோம். தற்போதிருக்கும் எந்த வசதியும் குறையாது. மனிதர்கள் எத்தனை பெரிய வீட்டில் வசித்தாலும் அதே வீட்டில் தொடர்ந்து வசிக்கலாம். அவர்கள் காலத்திற்குப்பின் அவர்கள் வாரிசுகளும் அதே வீட்டில் வாழலாம். இப்போதிருக்கும் கடைசி வாரிசுவரை அந்த வீடு அவர்களுக்கே உரிமையானதாக இருக்கும். கல்யாண வயதில் மகன் இருந்தால் அவருக்கு மணமுடித்து குறிப்பிட்ட காலத்தில் குழந்தை பெறும் நிலையில் பேரன் காலத்திற்கும் வீடு கடத்தப்படும். எனினும் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு

இருப்பதே முறை தமிழர்களே. ஒருவருக்கு சென்னையில் வீடு இருக்கிறது. அவரே ஊட்டியிலும் ஒரு பங்களா வைத்திருக்கிறார். என்ன பண்ணலாம். அவருக்கு சென்னை வீடு வேண்டும் எனில் அது மட்டுமே அவருக்குச் சொந்தம். அன்னார் அரும்பாடுபட்டுக் கட்டிய ஊட்டி வீட்டில், விரும்பினால் அவர் காலம் வரையோ, வாரிசுகள் காலம் வரையோ குறிப்பிட்ட காலத்தில் தங்கிக் கொள்ளலாம். இதுவே சமரசம்தான். பரவாயில்லை. சீசனுக்கு தங்க விரும்பினால் தங்கிக்கொள்ளலாம். ஆனால் வீடு பிறருக்கும், பிற பயன்பாடுகளுக்கும் உபயோகப்படுத்தப்படும். அன்னார் ஒருவேளை கோடைக்கானலிலும் பங்களா வைத்திருப்பாரேயானால். சமூகம் எடுத்துக் கொள்ளும். பேராசைகொண்டு அனைத்து மலைகளையும் வீடாக்கினால் எப்படி அறிவுடையோரே.

தொழில்கள் நடத்துபவர்கள் அவர்களே தொடர்ந்து நடத்தலாம். எனினும் அத்தனை தொழில்களும் பத்துப்பேர் கொண்ட ஆட்சிக்குழுவால் செயல்படுத்தப்படும். தொழிலைத் தொடங்கியவர் அவர் காலம்வரை ஆட்சிக்குழுவின் தலைமைப் பொறுப்பில் இருந்து கொள்ளலாம். எனினும் அவரால் தன்னிச்சையாக பெருமுடிவுகள் எடுக்க முடியாது. தமிழரே யாம் நன்றாகவே அறிந்துள்ளோம். இப்போதும் ஆட்சிக்குழு, உயர்மட்டக் குழு, நிர்வாகக் குழு என ஏகப்பட்ட குழுக்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவை பெயரளவில், காகிதத்தில் உள்ளன. இனி அது நடக்காது. உண்மையான ஆட்சிக்குழு இடம் பெறும். ஆடசிக் குழுவின் தலைமைப் பொறுப்பிலுள்ளவர் விரும்பினால் அவர் குடும்பத்திலிருந்து மனைவி, கணவர், மகன், மகள் என ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். பிற உறவினர் எக்காரணம் கொண்டும் கூடாது. யாரையும் தத்தெடுக்கவும் முடியாது. மீதமுள்ள எட்டுப் பேர் சமூகத்தின் பல்வேறு அடுக்கிலிருந்தும் நியமிக்கப்படுவார்கள். நிறுவனத்தின், தொழிலின் கொள்கை முடிவுகள் பத்துப் பேரால் விவாதித்து எடுக்கப்பட வேண்டும். முடிவு எட்டப்படவில்லையெனில் அனைத்தையும் ஓட்டெடுப்பு மூலமே தீர்மானிக்கவேண்டும்.

மனிதரே, யாம் உமக்கு ஒன்றை அறுதியிடுகிறோம். இனி நீர் இராப்பகலாகச் சம்பாதிக்கும் காகிதப் பணம் ஒருபோதும் நிலமாகாது. வீடாகாது. நகையாகாது. வாகனமாகாது. வேறு எப்படி, என்னென்ன வழிகளில் செலவிடலாம் என்பதை சிந்தியும். யாமே அனைத்தையும் சொல்லவேண்டுமென்பதில்லையே.

சாலையெங்கும் கட்டப்பட்டிருக்கும் கடைகள் வணிக நிறுவனங்கள் முறைப்படுத்தப்படும். சாலைகள் வரிவாக்கப்படும். அதற்கு முன்னதாக நிச்சயம் மாற்று ஏற்பாடுகள், கட்டிகள், இடங்கள் ஒதுக்கப்பட்டே சாலை விரிவாக்கம் நிகழும்.

யாம் உறுதியாக நம்புகிறோம். கொடைக்கு உதாரணமான நம் மக்கள் அவரே நிலத்தை கொடையாக்குவார். தமிழர் தமிழ்ப் பற்றில் சிறந்தவரெனில், தமிழ் மக்கள் ஆன்மீகத்தில் உயர்ந்தவரெனில், நிச்சயம் இது நடக்கும். நாம் எந்த வயிறையும் காயவிடமாட்டோம் என்பதை உறுதியாக்குவோம். வேளாண்குடிகள் நிச்சயம் அந்த உறுதியை அளிக்கவேண்டும். அளிப்பார்கள் தமிழர்களே. இது நிகழும் எனத் தெரிந்தே தமிழ் அவர்களைத் தயார்படுத்தியிருக்கிறது.

நம் பொதுவுடமை உலகிற்கு ஓர் ஒப்பில்லாப் பெருமை.. மாதவம் செய்தவள் நம் அன்னை..

வேளாண்குடிகள் அளிக்கும் உறுதியிலேயே நாம் நிலத்தைப் பொதுவுடைமையாக்கப் போகிறோம். வேளாண் குடிகளுக்கு குறிப்பிட்ட காலம்வரை, ஆண்டின் சில மாதங்களோ, நூறுநாட்களோ விவசாயப் பணிகள் என்பது கட்டாயமாக்கப்படும். அவர்கள் எந்தப் பணிகள் செய்தாலும், குறிப்பிட்ட காலத்திற்கு விவசாயம் சார்ந்த பணிகளையும் செய்யவேண்டும். அவர்கள் இதனை மக்களுக்குச் செய்யும் பெருஞ்சேவையாகக் கருதவேண்டும். மக்கள் வயிற்றுக்குச் சோறிடுவதே புண்ணியம். வேளாண்குடிகள் கைகளில் நிலமிருந்தவரை மக்கள் பட்டினியைப் பார்த்ததில்லை என்பதே தமிழக வரலாறு. வேளாண் குடிகளோடு இளவயதினர் இணைவார்கள். மாணவர்கள் சேர்வார்கள். யுவதிகள் கூடுவார்கள். அத்தனையும் நடக்கும். நம் தமிழ்நிலத்தில் விளைச்சல் பொங்கும் தமிழரே.. தமிழ் நம்மை என்றும் அன்போடு காக்கும். நம் தமிழகத்தில் முன்னெடுக்கும் மாற்றங்களே இனி உலகமெங்கும் முன்னெடுக்கப்படும். இதுவே அறிவு. இதுவே உலகின் ஞானம்.

**உலகத்தாருக்கு தமிழே வழி. தமிழே அறிவு.**

**ஞானமுள்ள தமிழரே,**

நமது பெருமைமிகு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அன்று இரு வாசல்கள் இருந்தன. ஒன்று சுயநல ஆடம்பர வாழ்க்கைக்கான வாசல். மற்றொன்று பொதுநல

தியாக வாழ்க்கைக்கான வாசல். அவர்கள் எந்த வாசலைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது வரலாறு. அது நமது நேற்றைய சரித்திரம். இன்று நம் முன்பும் இரண்டு வாயில்கள் இருக்கின்றன. நாம் எந்த வாயிலைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்பதே நமது நாளைய சரித்திரம். ஒன்றை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நம் முன்னோர் எதிர்கொண்டது பொன்ற மாபெரும் சவால்களை நாம் எதிர்கொள்ளப் போவதில்லை. அவர்கள் செய்த அந்த மாபெரும் தியாகங்களை நம்மால் நினைத்தக்கூடப் பார்க்க முடியாது. நம் முடிவால் நமது வாழ்க்கையில் எதையும் நாம் இழக்கப் போவதில்லை. நம் மகிழ்ச்சி தொலையப் போவதில்லை. சொல்லப்போனால் இன்னும் அதிகமாகவே, கூடுதலாகவே நாம் இன்பம் காணப் போகிறோம்.

நம் வாழ்க்கை சற்றே மாறப் போகிறது. அதுவும் நல்ல திசையை நோக்கி. தயாராகுங்கள் நண்பர்களே. மாற்றத்தை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

கிழக்கால் மேற்கை தற்போதைய அறிவியல் தொழில்நுட்பத்தில் வெற்றிகாண முடியாவிட்டாலும், மனித குலத்திற்கான சேவையில் நம்மை அவரால் வெற்றிகாண இயலாதென்பதே வரலாறு. முன்னர் கிழக்கு அதன் மகத்துவமான அன்பால் உலகை இணைத்தது. தொடர்ந்து மேற்குலகம் அதன் ஒப்பற்ற அறிவால் உலகை ஒன்றாக்கியது. இப்போது உலகுக்குத் தேவை கிழக்கின் சேவையே. கிழக்கு சேவையில் என்றுமே தலையாயது.

மேற்கு அறிவால் மனித மனங்களை இணைத்தது. கிழக்கு மனிதகுலத்திற்கு ஆற்றும் மாண்புமிக்க சேவையால் மனித இதயங்களைப் பிணைக்க வேண்டும். கிழக்கு மக்கள் சேவையில் மேற்கை வெற்றி கொள்ளும். மேற்கு உலகத்தை ஒன்றாக்கிச் சாதித்ததெனில் கிழக்கு உள்ளத்தை ஒன்றாக்கிச் சாதனை புரியம். நிச்சயம் சாதிக்கும்.

Which is Best. East or West

Which is our Path. Heart or Brain.

மேற்கிலிருந்து அறிஞர்கள் உற்பத்தியானார்கள். கிழக்கிலிருந்தோ எப்போதும் ஞானிகளே உதிக்கிறார்கள். அறிஞர்களால், அறிவியல் ஆராய்ச்சியாளர்களால்,

கிழக்கின் ஞானிகளை ஒருபோதும் வெற்றிகொள்ள இயலாது. காரணம், கிழக்கின் ஞானிகள் எப்போதும் உலகை வென்றே ஞானமடைகிறார்கள். அவர்கள் உலகை வெற்றிகொண்ட பின்பே அவர்களது ஞானத்தை மக்கள் அறிகிறார்கள். கிழக்கின் ஞானிகள் தங்களை எப்போதும் ஞானிகள் எனச் சொல்வதே இல்லை. மக்கள்தான் அவர்களை ஞானிகள் என்கிறார்கள். கிழக்கின் ஞானத்திற்குத் தெரியும், மனித அறிவு பிரபஞ்சப் பெருவெளியில் துளியிலும் துளியென. ஞானமடைந்தவுடன் கிழக்கின் ஞானிக்கு முதலில் உண்டாவது பணிவு. செயல்களத்தனையும் சேவை. கிழக்கின் ஞானி முதலில் உள்ளத்தை அறிகிறார். உள்ளத்தை வெல்கிறார். உள்ளத்தை விலக்குகிறார். ஆசையைத் துறக்கிறார். ஆசையைத் துறப்பதே ஞானத்திற்கான முதல் படி. மேற்குலகால் ஒருபோதும் ஆசைகளைவிட முடிந்ததில்லை. மேற்குக்கு அறிவு வந்தால் தாம் யாரெனத் தெரியுமா என்றே ஆணவம் கொள்கிறது. ஞானமடைதலுக்குப் பெருந்தடை இந்த ஆணவம் என்பதை மேற்கு இப்போதும் அறிந்திருக்கவில்லை.

கிழக்கு அன்பானதாம். மேற்கு அறிவானதாம். நல்லது. பாராட்டுக்கள். தெற்கென்றும் ஒரு திசை இருக்கிறதல்லவா. தெற்கின் வரலாறு என்ன. தெற்கு எதில் சிறந்தது. தெற்கின் பெருமை எத்தகையது.

ஓஓ.. மாமனிதர்களே

நமக்கு என்ன குறைச்சல்

நாம் கணினியைக் கண்டுபிடித்தோம்

துணைக்கோள் அனுப்பினோம்

அலைபேசியை உருவாக்கினோம்

நாம் எத்தனை அறிவானவர்கள்

நமக்கென்ன கவலை

தொழில்நுட்பத்தில் சிறந்த அமெரிக்கா இருக்கிறது

அறிவியலை முன்னேடுக்க அய்ரோப்பா காத்திருக்கிறது

பொருட்களை உற்பத்தி செய்து குவிக்க சீனா  தயாராக உள்ளது

இயற்கை வளங்களுக்கு, விளையாட்டுக்கு அழகு தென்னமெரிக்கா  இருக்கிறது

இரும்பையும் நிலக்கரியையும் அள்ளிக் கொடுக்க ஆத்திரேலியா இருக்கிறது

வணிகத்தைப் பெருக்க அரேபியா இருக்கிறது

உலகுக்கே உணவளிக்க  ஆசியா காத்துக்கொண்டிருக்கிறது

மனித வளத்திற்கும், ஆடல் பாடலுக்கும் அழகான  ஆப்பிரிக்கா தயார்

சேவைக்கும், மருத்துவத்திற்கும்  இருக்கவே இருக்கிறது இந்தியா

மானுடரைக் காக்க இரசியா எப்போதும் தயார் நிலையில் உள்ளது

நாம் எதில் குறைந்தவர்கள.

ஏஏ.. செப்பியன்சு

Sing the Song of Human Beings

Praise Our Victory

Praise Our Humanity, Our Love, Our Gods

Dear Sapiens

We deserve to it

We Will Make Our Wonder World Still Better.. Still High..

We Can.. Together We Can Always..

நாம் ஒன்றாக நடப்போம்

ஒன்றாக உழைப்போம்

ஒன்றாக முன்னேறுவோம்

ஒட்டு மொத்தமாகச் சாதிப்போம்.

நாம் அனைவருக்கும் பொறுப்புக் கொடுப்போம்

அத்தனை பேர்களையும் கணக்கிலெடுத்துக் கொள்வோம்

எல்லோரையும் மதிப்போம்

அனைவரையும் போற்றுவோம்

நாம் அனைவருக்கும் பரிசளிப்போம்

நாம் அனைவரையும் அரவணைப்போம்

**பெருங்காதல்கொண்ட தமிழ்ப் பெண்ணே,**

ஆணை வசப்படுத்து. அவன் எண்ணத்தைக் கட்டிப் போடு. அவன் மனதை ஆள். அவனை ஆளுகை செய். அவனை அடக்கு. அவனுள் அடங்கு. திமிரி எழு. தீயாய் சுடு. நெருப்பைக் கக்கு. குளிரவை. தெளியவை. குளிர்ச்சியுண்டாக்கு. மழையைப் பொழி. அமுதை ஊட்டு. கேலி செய். கிண்டல் பண்ணு. உடன் நட. ஓடு. ஆடு. பாடு. கூடு. தேடு. கொஞ்சு. கெஞ்சு. மிஞ்சு. பிஞ்சாகு. கனி. கனியவை. பஞ்சபூதங்களையும் உணரவை. பயப்படுவது போல் நடி. செல்லமாக அடி. கடி. பிடி. முடி. இடி. அவன் ஆறு. கரையாய் இரு. அவன் உனது கரு. உனது உரு. ஆகு அவனுக்குத் தரு. அனைத்தையும் பொறு. அத்தனையும் பெறு. ஒளிவைத் துற. ஒன்றாய்ப் பற. ஆண்மையைக் கற.

பேரன்புப் பெண்ணே.. உயிா் அதிசயம். உடல் அதிசயம். உலகு அதிசயம். ஆணை அதிசயங்கள் காணவை. அவனை எந்திரமாக்கு. தந்திரமாக்கு. மந்திரமாக்கு. கேள்விகேட்க விடாதே. விட்டால் பிரம்மாவை வம்புக்கிழுப்பான். இப்படியா ஏற்ற இறக்கமாக உலகைப் படைப்பீா் என்பான். நீா் உலகு காக்கும் லட்சணம் இதுதானோ என நாராயணரை வம்பளப்பான். நீா் அழிக்கிறீரா இல்லை யாம் அழிக்கட்டுமா என சிவனாரிடமும் வம்புக்கு நிற்பான். அவனை உறங்க வைப்பது உன் பொறுப்பு. அவன் நிம்மதியாகக் தூங்குவதற்கு ஏதாவது செய். என்ன வேண்டுமானாலும் செய். உன்னை விடவா உலகில் மதுக்கிண்ணம் பெரிது. மதுவைத் தொட விடாதே. உனக்குத் தெரியும்

பெண்ணே. உனது ஓரக் கண்வெட்டிற்கு, சிறியதொரு கண் அசைவிற்கு, இதழோரம் நீய் காட்டும் சிறியதொரு புன்னகைக்கு அவன் சொக்கிப் போவான் என்று.

களைத்து வரும் அவனுக்கு உன் கனியிதழைக் காட்டு. சோர்ந்து வரும் அவனுக்கு உன் மதுரசத்தை ஊட்டு. மையைத் தீட்டு. மல்லிகையைச் சூட்டு. எதற்கும் போடாதே பூட்டு. மாமழையெனப் பொழியட்டும் மன்மதப் பாட்டு. உடலின் காமத்தில் அவன் கிறங்க வேண்டும். உள்ளத்தின் காதலில் சுகமாய் உறங்க வேண்டும். அவனை அள்ளி அனைத்துக்கொள். ஆரத் தழுவிக்கொள். நூற்றாண்டுக் காதலைக் கொட்டு. ஆயிரமாண்டுக் காதலை மீட்டு. பல்லாயிரமாண்டுக் காதலாக நீட்டு. ஓடுவான். விடாதே. எதையோ நினைப்பான். எதை எனக் கேள். பிடிக்கவில்லை என்பான். ஏன் என வினவு. எதையாவது தேடுவான். இதுவா எனக் காட்டு. அவனைத் தனியாக விட்டுவிடாதே. சும்மா வீம்பு பண்ணுவன். வீராப்புக்காக எதையாவது பேசுவான். எதையும் கண்டு கொள்ளாதே. அவன் எல்லாவற்றிற்கும் ஏங்குவான். அனைத்திற்கும் பயப்படுவான். ஆனாலும் எதுவும் பிடிக்காதென்றும், பெரிய வீரனென்றும் வெளியில் காட்டிக் கொள்வான். உனது காரியத்தில் மட்டும் நீய் கவனமாய் இரு. அமைதியாகத் தூங்குகிறான் என்பதை உறுதி செய். எழுந்தவுடன் இதழ் முத்தம் கொடுத்து, இதழோரம் புன்னகைத்து வயலுக்குப் போய்வா என அனுப்பிவை. இருவரும் இணைபிரியாமல் ஆயிரமாயிரமாண்டுகள் சுகமாய் வாழ வாழ்த்துக்கள்.

**பேராண்மைத் தமிழனே,**

பெண்ணை ஏமாற்றாதே. நட்பாய் இரு. நம்பிக்கை கொள். பெண்ணை மகிழ்ச்சியின் உச்சத்திற்குக் கொண்டு செல். அழகின் பரிமாணங்களைக் காட்டு. பெண்ணைக் கொண்டாடு. இதயத்தைத் திருடு. யோசிக்கவே விடாதே. ஊட்டி விடு. பாட்டுப் பாடு. நீராட்டு. தாலாட்டு. பேசு. ஓடிப்பிடி. படிக்கச் சொல்லிக் கேள். மடியில் படு. மார்பில் பொதி. கன்னத்தைக் கிள்ளு. தலையைக் கோது. பூச்சூட்டு. புகழ்ந்து பேசு. சேர்ந்து நட. அள்ளி அணைத்துக் கொள். காதலைக் கொட்டு. பெண்ணை கவலை கொள்ளச் செய்யாதே. ஒருபோதும் கண்ணீரைப் பார்த்துவிடாதே. இவை அத்தனையும் அவளுக்காக அல்ல. உனக்காகவே. அவளும் நீயும் வேறல்ல. உணர். அவளையும் உணரச் செய்.

இருவரும் இணைந்து, அன்பு என்னும் நாற்றங்காலில், அறிவு என்னும் பயிரை வளர்த்து, இன்பம் என்னும் பழத்தினை அறுவடை செய்து, முழுமை என்னும் விதைகளை விட்டுச் செல்லுங்கள்.

உங்கள் பயிர்கள் தழைக்கட்டும். உயிர்கள் நிறையட்டும். உலகு உய்யட்டும்.

**நானிலம் செழிக்க நாளும் காதல் வளர்க..**

ஆயிரம் மலர்களே மலருங்கள்
அமுத கீதம் பாடுங்கள் ஆடுங்கள்
காதல்தேவன் காவியம்
நீங்களே நாங்களோ
நெருங்கி வந்து சொல்லுங்கள்
காலதேவன் சொல்லும் பூர்வ ஜென்ம பந்தம்
(நன்றி - நிறம் மாறாத பூக்கள்)

ஏதோ நூறு ஜென்மம் ஒன்று சேர்ந்து வந்த சொந்தம்
வாழும் காலம் யாவும் துணையாக வேண்டும் என்றும்
காலம் தந்த பந்தம் காதல் என்னும் கீதம்
ஜீவ நாதம் கேட்குதே சேர்ந்து இன்பம் கூட்டுதே
வராத காலம் வந்து சேர்ந்ததே (நன்றி - ஆனந்த ராகம்)

மனிதகுலம் நீடித்திருக்கவும்,

மண்ணில் அறம் தழைத்தோங்கவும்

## புதிய உலகம் பிறக்கட்டும்!

அனைத்திலும் தமிழ் நூறு நூறாக, ஆயிரமாயிரமாக,

கோடிகோடியாக பல்கிப் பெருகட்டும்..

தமிழ் அமுத ஆறாய், ஜீவநதியாய்ப் பெருகி ஓடட்டும்.. எங்கும்.. எக்காலத்தும்..

தமிழ் மண்ணுயிர்களை பத்திரமாகக் கரை சேர்க்கட்டும்..

தமிழின் பண்பாட்டு வேர்கள் அகிலமெங்கும் தழைக்கட்டும்..

உலகிற்கு தமிழ் மணிமுடியாகட்டும்

மகுடமாக இருக்கட்டும்

தமிழ் பெண்ணே நன்றி! தாய் மண்ணே போற்றி!

**புத்துலகு புத்தரிசி புத்தொளி புத்தாண்டு புத்திசை**

செவ்விய சங்கப் புலவர்களின் உன்னதங்கள் இவ்வுலகை உய்விக்கட்டும்

செந்தமிழ் நிலம் சிறக்கட்டும்

நிச்சயம் நமக்கு நன்மை உண்டாகும்

நாம் நலங்கள் யாவும் பெறுவோம்

தமிழர் பண்பாடு செழித்தோங்கும்

நம் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்

உலகம் எல்லாம் நம் வீடாகட்டும்

அறிவே நமது உயிர்க்காற்று

அமிழ்தினும் இனிய தமிழ் நாளும் சுரக்கட்டும்.

மானுட நிழலில் இவ்வுலகமே தழைக்கட்டும்.

புத்துலகில் மனிதர் அவரது குணத்திற்கேற்ப கடையர், மடையர், கீழர், அன்பர், நல்லார், சிறந்தார், அறிவார், உயர்ந்தார், பெரியார், சான்றார், அறவார், புகழார், உன்னதர், உத்தமர் எனும் பதினான்கு வகைகளாகப் பகுக்கப்படுகிறார். இவ்வளவு அறிவு வளர்ந்த பின்னும், இவ்வளவு சமூக மாற்றங்கள் நிகழ்ந்த பின்னும், உழைத்துச் சாப்பிடுவதற்கு இவ்வளவு வாய்ப்புகள் வந்த பின்னும், ஒருவன் திருட்டுத் தொழில்

புரிகிறான் எனில், அவன் மனிதனல்ல. அவன் கடையன் எனவே கருதப்பட வேண்டும். பெண்ணும் திருடி வயிறு வளர்ப்பதை என்னவென்று சொல்ல. அவள் கடைச்சி. சமூகத்தால் விலக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவரை மடையர் என்றே அழைக்க வேண்டும். உழைக்காமல் வயிறு வளர்ப்பவன் கண்டிப்பாக கீழன்தான். மனதில் அன்பு நிறைந்தவர், அன்புள்ளம் கொண்டவர் அன்பர். அவரே மனிதர். போனது போகட்டும். மனிதர் எனும் பெயர்கொண்டவர்களே.. இனியாவது குறைந்தபட்சம் மனிதர்களாகவாவது இருங்கள். மனிதனுக்குக் கீழே இறங்காதீர்கள். நாம் மனிதருக்கு மேலே, மேலே மேலே என உயர்ந்துகொண்டே இருக்க வேண்டும். பூமித்தாயின் புதல்வர்கள் அனைவருமே உத்தமராக வேண்டும். அதுவே பெற்ற தாய்க்குப் பெருமை.

நாம் அன்பால் இணைவோம்

அன்பால் அகிலத்தை இணைப்போம்

உலகில் அறத்தை வளர்ப்போம்

நாம் சிந்தித்துச் செயலாற்றுவோம்

நம் முயற்சி நல்முயற்சியாகவே அமையும்

நம் முயற்சி நிச்சயம் வெற்றிபெறும்

நம் முயற்சி உலகை உய்விக்கும்

நம் முயற்சி அகிலத்திற்கு நன்மையளிக்கும்.

நம் முயற்சி அகிலத்தைப் பாதுகாக்கும்

நம் முயற்சி அகிலத்தை நல்வழிப்படுத்தும்.

நம் முயற்சி அகிலத்தைச் சிறப்பிக்கும்.

நம் முயற்சி அகிலத்தை செழுமையாக்கும்.

நம் முயற்சி அகிலத்தை மேன்மைப்படுத்தும்.

நம் முயற்சி அகிலத்தை மேலுயர்த்தும்.

நம் முயற்சி உயிர்கள் அனைத்தையும் உயர்விக்கும்.

மானுட குலத்தின் இந்த மகத்தான வெற்றிக்காக உலகின் அத்தனை முன்னோர்களும் மிக நீண்ட காலமாக மிகக் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். முன்னோர்கள் ஆசிகளோடு நாம் வெல்வோம். நிச்சயம் நாம் வெல்வோம்.

**தமிழ் முயற்சி நிச்சயம் வெற்றிபெறும்**

நம் வழி அன்பு வழியாகட்டும்

நம் வழி அறிவை துணையாகக் கொள்ளட்டும்

நம் வழி நல்வழியாகட்டும்

நம் வழி நம்பிக்கையின் வழியாகட்டும்

நம் வழி நியாயத்தின் வழியாக இருக்கட்டும்

நம் வழி ஒளியின் வழியாகட்டும்

**நாம் அன்பு வழியில் அறிவை முன்னெடுத்துச் செல்வோம்**

**மறையோர் எனும் பெயரை முன்னெடுத்துவரும் அன்புச் சகோதரர்களே..** தமிழகத்தின் தொல்குடிகளான நம் துயர் வரலாறு நீடித்து வருவது மிகுந்த வேதனைக்குரியது. நம்மோடு அருந்ததியச் சகோதரர்களும், மலைமக்களும், இன்ன பிற எளிய சமூகங்களும் பல்வேறு அவலங்களில், இழிவுகளில், மிகுந்த வருத்தங்களில் உழன்று வருவது முடிவுக்கு வந்தாகவேண்டும்.

தமிழ் நிலத்தில் ஏராளமான மக்கள் படோடபமான வாழ்க்கையில் திளைத்து வருகிறார். அன்னார்களுக்கு எதைப்பற்றியும் நினைப்போ, பொறுப்போ, வருத்தமோ, கவலையோ இல்லை. நிலத்தை, காடுகளை, வனாந்தரங்களை வளைத்து வைத்துக்கொண்டு, நம்மைச் சுரண்டியது போதாதென்று, நம்மைப் போன்றே எளிய மக்களான, நம்மவர்களான வட மாநிலத்தவரை வதைத்து, சகபோகங்களில் மூழ்கிக் கிடக்கிறார். அவர்களுக்கு இம்மண்ணைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ கடுகளவு நினைப்புக்கூட வருவதில்லை. காரணம் எளிது. அன்னார்கள் இம்மண்ணையோ, மண் ஈன்ற மக்களையோ விரும்புவதில்லை. அவருக்குப் பிடிப்பதும் இல்லை.

சகோதரர்களே, நம் மண்ணை, நமக்கு உரிமையான மண்ணை நாம் மீட்டாக வேண்டும். உண்மையில் இது மண்ணல்ல. நமக்குத் தெரியும். நம் அன்னை. நம் மூதன்னை. நம் அமுதசுரபி. நமது பசிப்பிணி நீக்கும் மாமருந்து. நம் தெய்வம். நம் சொத்து. நம் சொத்து நம்மிடமிருந்து களவாடப்பட்டது. நம் அன்னை, சுயநலக்காரர்களின், கயவர்களின் கைகளில் மாட்டிக்கொண்டு தவிக்கிறார். கொடூரர்களிடமிருந்து, கள்வர்களிடமிருந்து நம் தெய்வத்தை மீட்டாக வேண்டும். நம் தாயின் தர்மம் மீட்கப்பட்டாக வேண்டும். மீட்கவேண்டியது நம் கடமை. உண்மையில் முன்னர் நாம் பெற்றது நம் தாயின் சுதந்திரமன்று. நம் தாயை மீட்பதே நமது சுதந்திரப் போர். நம் அன்பு அன்னையை மீட்பதற்காக, பாதுகாப்பதற்காக நம் கைகள் இணையட்டும். நாம் உறுதியாக மீட்போம் சகோதரர்களே. நாம் சுதந்திரக் காற்றை சுவாசிப்பது திண்ணம்.

தமிழகம், பாரதம் என்றில்லாமல் உலகெங்கும் நம் மக்கள் இரண்டாம், மூன்றாம் தரமாகவே வாழ்கிறார்கள். நாம் எங்கும் அயலாராகவே பார்க்கப்படுகிறோம். இது அநீதி. நாம் நீதி பெற்றாக வேண்டும். நமக்கு நீதி கிடைத்தாக வேண்டும்.

நீதி வெல்லும் சகோதரர்களே. புத்தனின் தம்மம் உறுதியாய் வெல்லும். நம் அன்புப் பெருந்தந்தையின், அறிவென்னும் புத்தகத் தந்தையின், ஞானமென்னும் புத்தத் தந்தையின் பெருங்கனவு இம்மண்ணில் நிலைபெறும். நாம் சமத்துவம் காண்போம். சமமாய் வாழ்வோம். நம் சாகிப்பின் புகழை எட்டுத்திக்கும் உயர்த்துவோம்.

உலக மானுடரையெல்லாம் துக்கத்தினின்று விடுவிக்கும் காலம் வந்தது சகோதரர்களே. இது உலக மானுடரின் விடுதலை வேள்வி. நாம் இம்மாநிலத்தை மீட்போம். நாம் நமக்கான அழகிய இல்லங்களை எழுப்புவோம். நாம் நமக்காக மட்டுமின்றி நம் சகோதரர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்போம். நம் அன்பு வானளாவியது. என்றுமே..

சகோதரர்களே, நம்மைச் சேரிகளில் ஒதுக்கிய அவலத்தைத் துடைத்தெறியும் வண்ணம், நாம் அனைத்து மனிதர்களுக்கும் தரமான வீடுகள், குடியிறுப்புகள் கட்டிக்கொடுப்பதை பெருங்கடமையாகக் கொள்வோம். தேவேந்திரகுல வேளாளர் உணவுக்குப் பொறுப்பேற்பார். மறையோர் உறைவிடத்திற்குப் பொறுப்பாக வேண்டும்.

நம்மால் முடியும் சகோதரர்களே. நம் வருங்காலத் தலைமுறைகள் போதுமான உணவுக்கும், தரமான உறைவிடத்துக்கும் ஒருபோதும் ஏங்கக்கூடாது.

சகோதரர்களே, நம் மாற்றம் இப்புவியெங்கும் முன்னெடுக்கப்பட வேண்டும். மனிதர் இப்புவியை கான்கிரீட் காடாக்குவதிலிருந்து காப்பாற்றியாக வேண்டும். நிலத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பது விதியாக்கப்பட வேண்டும். வணிகத்திற்காக மனிதர் பெருங்கட்டிடங்களைக் கட்டுகிறார். மாறாக, பொருட்களை பெரும் சந்தைகள் கூட்டி விற்பதே முறை. மனிதர்கள் பொருட்களைத் தேடி வாங்குவதிலேயே வாழ்நாளைத் தொலைக்கிறார்கள் போலும். சகோதரர்களே, உலகின் ஒட்டுமொத்த வணிகமும் ஒருசில பேரிடம் இருப்பது பெரும் இடர்களுக்கு வழிவகுக்கும். அவ்வாறே நிலம் உட்பட அனைத்தும். நாம் இயற்கையைப் பொதுவுடமையாக்கியே தீரவேண்டும். அது ஒன்றே மானுட குலம் மேன்மேலும் தழைத்தோங்குவதற்கான சிறந்த வழி.

சகோதரர்களே, எமக்கொரு கனவிருக்கிறது என சிம்மமாய் கர்ஜித்த நம் பெருந்தந்தையின் அந்தப் பெருங்கனவு, உலகின் ஒட்டுமொத்த மனிதகுலமும் உயர்வடையவேண்டுமெனத் தீரமாய் முழுங்கிய நம் அன்புத் தந்தையின் அந்த அருங்கனவு, நம்மால் நிறைவேற்றப்படக் காத்திருக்கிறது. நாம் நிச்சயம் நிறைவேற்றி நம் அன்னையருக்கும், நம் தந்தையருக்கும், நம் பெருந்தந்தையருக்கும், நம் மூப்பர்களுக்கும், முன்னோருக்கும், மூத்தோருக்கும் பெரும் புகழ் சேர்ப்போம். தயாராகுங்கள் சகோதரர்களே.

நீதி வெல்லட்டும். தர்மம் ஜெயிக்கட்டும். தம்மம் சிறக்கட்டும்.

சுற்றட்டும் ஸ்ரீசக்ரம். சுழலட்டும் காலச்சக்கரம் என்றென்றைக்குமாய்...

**தமிழ் குவளயம் காக்கும்.. என்றும்..**

அன்புத் தாயே..

இனிமையும் இளமையும் நீர்மையும் வளமையும் நின் பெயர்

நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்

தமிழர் வாழ்தல் வேண்டிப் போய் கூறார்

தமிழர் வீரம் உலகைக் காக்கும்

தமிழர் அறிவு உலகை உயர்த்தும்

நம் தமிழ்

மலரும் தமிழ்

மணக்கும் தமிழ்

கல்வித் தமிழ்

வித்தைத் தமிழ்

மேகத் தமிழ்

மோகத் தமிழ்

காதல் தமிழ்

அன்புத் தமிழ்

அறிவுத் தமிழ்

வீரத் தமிழ்

அழகுத் தமிழ்

இதயத்திற்கு இதமான தமிழ்

இரத்த ஓட்டத்தைச் சீராக்கும் தமிழ்

மனதை மயக்கும் தமிழ்

உள்ளத்தைக் குளிரச் செய்யும் தமிழ்

இன்பம் கொடுக்கும் தமிழ்

இளமை வளர்க்கும் தமிழ்

உலகை வளர்க்கும் தமிழ் - எம் தமிழ்

**நாளைய தமிழ் வானில் நாளும் புது ஊர்வலம்..**

ஸ்ரீராமனே

புனிதமே, புண்ணியமே, நற்றவமே

பிணிக்கு மருந்தே

பிணக்குக்குத் தீர்வே

நல்லமுதே

இன்ப ஆறே

காலக் காவலனே

வெற்றி வீரனே

நிகரில்லாப் பெருமையோனே

மாதவக் கண்ணா

பொய்யிருள் அகற்று

**தமிழர்களே..World is Ours. Come Together.**

**Time to lead the World**

நாம் அற்ற குளத்து அறநீர்ப் பறவையைப்போல் புவியை விட்டுச் செல்லக் கூடாது. அனைத்தையும் சீர்படுத்தி முன்னர் எப்படி சீரும் சிறப்போடும் இருந்ததோ அப்படியே உரியவரிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

நல்காப்பானே நீருருவனே காருருவனே நெடியானே நேமியானே

குறைகளைத் தீர்க்கும் கோவிந்தா கலியுகத் தெய்வமே

எவ்வுயிர்க்கும் தாய் தந்தையே

## திறக்கட்டும் சொர்க்கவாசல்

பாடுங்கள் கண்ணன் புகழை. கேளுங்கள் இராமன் கதையை. சொல்லுங்கள் நாராயணன் நாமத்தை. நினையுங்கள் திருவேங்கடவன் கமலபாதங்களை.

**வெல்லும் நெல் நாகரிகம்**

**RICE IS RISING**

மின்னலாக வருபனாம், முறுக்கு மீசை வல்லவனாம்

வாய்சிவக்க சிரிப்பவனாம் வானோங்கி நிற்பவனாம்

கருப்பு வடிவம் பூண்டவராம், காலக் கனியாம், கண்ணனாம், பெருமானாம்..

**வருவாய் நாராயணா**

**நல்வரங்களை அருள்வாய் நாராயணா**

**புகழ் நிறைந்த பொதுவுடமைத் தோழமைகளே..**

போற்றுதலுக்குரிய நம் பெருந்தந்தையின் மகத்தான அந்தப் பொன்னுலகம் விடியக் காத்திருக்கிறது. நிச்சயம் விடியும். அதுவும் நம்மாலே. நம் கடமையன்றோ. எத்தனை பெரிய கனவு அது. எத்தனை மகத்தான தந்தை. நம் தந்தை கனவு மெய்ப்படும் காலமும் வந்தது தோழர்களே. உலகின் அத்தனை மக்களுக்கும் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளாவது குறைவில்லாமல் கிடைக்கவேண்டும் என வாழ்நாளெல்லாம் பாடுபட்ட பெறற்கரிய நம் தந்தையின் உழைப்பு வீணாகுமோ. உழைப்பு ஒருநாளும் வீணாகாது என்பது நமக்குத் தெரியுமல்லவா.

தோழர்களே, நம் மண்ணில் பலப்பல நல்ல மாற்றங்கள் நிறைவேறக் காத்திருக்கின்றன. நாம் இவ்வுலகத்திற்கு உழைப்பின் அருமையை உரத்துச் சொல்லப் போகிறோம். நாம் இணைந்து ஒப்பில்லா சமுதாயம் படைக்க இருக்கிறோம். நாம் மானுடகுலத்தை அனைத்துவிதமான துன்பங்களிலிருந்தும் விடுவிக்கப்

போகிறோம். தமிழ்நிலத்தில் நிகழவிருக்கிற பொதுவுடமையின் நல்மணம் அகில உலகெங்கும் பரவும். நாம் உலகத் தோழமைகளையெல்லாம் ஒன்றிணைத்து பொதுவுடமையின் புகழ் பாடுவோம்.

தோழர்களே, நாம் பொதுவுடமை வரலாற்றிலிருந்து பாடம் கற்றிருக்கிறோம். நாம் புகழுக்குரிய ருஷ்யாவிலும், சீனாவிலும், இன்னபிற தேசங்களிலும் நிகழ்ந்த பொதுவுடமை மாற்றங்களைப்போல் அல்லாமல், இது காந்தி தேசமென்பதைக் கவனத்தில் கொண்டே பொதுவுடமையை முன்னெடுக்கப் போகிறோம். நிகழவிருக்கும் பொதுவுடமைப் போரில் கத்தியின்றி, ஒருசொட்டு இரத்தம்கூட மண்ணில் சிந்தாமல் நாம் பொதுவுடமையை வென்றெடுக்கப் போகிறோம். எப்படி என்பதை தோழர்கள் பார்க்கத்தான் போகிறார்கள். நம் தமிழின், பாரத மண்ணின் பெருமையைப் பாரெல்லாம் காணப்போகிறது. கண்ணனெனும் அந்தக் கரியவன் செய்யப் போகும் மாயங்களைக் கண்ணாரக் காணப்போகிறோம் அன்புத் தோழர்களே. கண்ணனும் நம்மைப் போலவே போதுவுடமைத் தோழராகத்தான் இருப்பார். அனேகமாக கடவுளும் கம்யூனிஸ்ட்டு தோழர்தான் போலும்.

தோழர்களே, நம் முன்னைத் தோழர்கள் கடவுளை முன்னெடுக்காததும் ஒருவிதத்தில் நல்லதே. கடவுளை நம்பியிருந்தால் முடிவுகள் எடுத்திருக்க முடியாது. கடவுளை நம்புகிறவருக்கு எது நடந்தாலும் நல்லதுதான். அன்னார் விதியையே பெரிதாக நம்புவார். எல்லாம் விதிப்படியே நடக்கும் என்பதிலும் உறுதியாக இருப்பார். நாம் கடவுள் என இருக்க இயலாதென்றோம். நாம் உலகின் வரலாற்றை அறிந்திருந்ததால், வரலாறு நெடுகிலும் எளியவர், குடியானவர், உழைப்பவர் அநியாயமாக சுரண்டப்பட்டதை, சுரண்டப்பட்டு வருவதை அறிந்ததாலேயே கடவுளை மறுத்தோம். கடவுளென்று ஒருவர் இருப்பாரேயானால் அவருக்கு அனைவரும் ஒனறுதானே என்றோம். ஏன் சமூகம் சமமில்லாமல் இருக்கிறது என வினா எழுப்பி விடை தேடினோம். நாம் மதங்களையும், மதங்களை வைத்துப் பிழைப்பு நடத்துபவரையும், மதவெறியையும் அறிந்ததாலேயே நாம் கடவுள் இருக்க வாய்ப்புக் குறைவென்றோம். நாம் உழைப்பையே கடவுளாகப் பார்த்தோம். உழைப்பையே இறைவனாக் கொண்டோம். மனிதனே கடவுளை எதிர்பார்க்காதே, வயலில் உழை என்றோம். கடவுளிடம் கையேந்தாமல், கடவுளை நம்பாமல், உழைப்பை நம்பு,

உழைப்புக்கு நிச்சயம் பலனுண்டு என்றோம். நம் நோக்கம் நல்நோக்கமே. உழைக்க கோடிக்காணக்கான மக்கள் தயாராக இருந்தும், நிலமென்னும் நல்லாள், நிலமுதலாளிகளிடம் சிக்குண்டு கிடந்ததால், உழைப்பதற்கும் வழியில்லாது போயிற்று. நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி உழைத்தவர்கள் நாம். அறுவடையோ அன்னார்களுக்கு. பெருங்கொடுமையாக நமக்கு வயிற்றுக்கு சோறுகூடக் கிடைக்கவில்லை. தோழர்களே.. நாம் பட்ட பாடுகள், கொடுமைகள், நம் வரலாறு எத்தனை கடுமையானது என்பதை, நாம் நடந்து வந்த பாதை எத்தகைய இடர்கொண்டது என்பதை நாம் நன்றாகவே அறிந்திருக்கிறோமல்லவா.

தோழர்களே, உலகினர் அனைவருக்கும் தரமான உணவுள்ளதை நாம் உறுதிசெய்ய வேண்டும். நம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு அழகிய வீட்டை உடைமையாக்க வேண்டும். நம் அத்தனை பேருக்கும் போதுமான உடைகளை உண்டுபண்ண வேண்டும். உணவு, உடை, உறைவிடம் எனும் இம்மூன்றும் உலகின் அனைத்துத் தோழமைகளுக்கும் கிடைப்பதை உறுதிசெய்வதே நமது முதல் இலக்கு. அதற்கு முதல்படியாக, இம்மூன்றையும் நம் தமிழ்ச் சொந்தங்களுக்கு உறுதிப்படுத்த வேண்டியது நமது முதல் கடமை. தமிழ் மண்ணில் இதனைச் சாதித்த பின்னே உலகம் முழுமைக்குமானதென நம்மால் முழங்க முடியும். நம் மாற்றம் முழு உலகுக்குமானதாக மாறும் தோழர்களே.

தோழர்களே, நமக்குத் தெரியாததல்ல. உயிர்களுக்கு உணவே உயிர். உணவே உடல். உணவே வாழ்வு. நாம் உணவை உற்பத்தி செய்யவேண்டும். நாம் மந்திரம் போட்டு உணவை வரவழைப்பவர்களல்ல. நாம் கையேந்துபவர்களும் அல்ல. நாம் உழைப்பவர்கள். உழைப்பாளிகள். நாம் வயல்களுக்குச் சென்றாகவேண்டும். மாநிலத்தில் வாழும் எட்டுக் கோடி மக்களுக்குமான உணவை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். நமது ஆகப்பெரும் முதல் இலக்கு இதுவே.

தோழர்களே, யாம் அறிவோம். எம் தோழர்கள் எத்தனை அன்பு கொண்டவர்கள்.. எம் நண்பர்கள் எத்தனை அறிவானவர்கள்.. எம் நட்புகள் எத்தனை எளிமையானவர்கள்.. இம்மண்ணில் பொதுவுடமையை விதைப்பதற்காக, பொதுவுடமைப் பயிரை வளர்ப்பதற்காக, எம் காம்ராதுகள் செய்த தியாகங்கள்

எத்தனையெத்தனை. போராட்டங்கள் எவ்வளவு. பட்ட அடிகள், வலிகள், இரணங்கள், இழப்புகள், எத்தனை எத்தனை.

எங்கெல்லாம் அநீதி நடந்ததோ அங்கெல்லாம் நீதிகேட்டு எம் தோழர்கள் திரண்டார்கள். எங்கெல்லாம் கொடுமைகளைக் கண்டார்களோ அங்கெல்லாம் எம் தோழர்கள் கொதித்தெழுந்தார்கள். எங்கெல்லாம் இன்னல்கள் நடந்ததோ அங்கெல்லாம் எம் தோழர்கள் ஓடிப்போய் ஆறுதல் சொன்னார்கள். எம் தோழர்கள் மதங்களை எதிர்த்தார்கள். எம் தோழர்கள் சாதிகளை எதிர்த்தார்கள். எம் தோழர்கள் பணக்காரர்களை எதிர்த்தார்கள். எம் தோழர்கள் சுரண்டல்காரர்களை எதிர்த்தார்கள். எம் தோழர்கள் அரசாங்கங்களை எதிர்த்தார்கள். மனிதர்களால் ஒன்றையே எதிர்க்க முடியாதபோது, எம் தியாகத் தோழர்கள் அத்தனையையும் எதிர்த்தார்கள். மக்களுக்காக, மக்களின் நல்வாழ்விற்காக, மக்களின் துயரங்களைத் துடைப்பதற்காக, மண்ணுக்காக, மண்ணைக் காப்பதற்காக, மண்ணை மீட்பதற்காக, இயற்கையைப் பேணுவதற்காக, பெண்களுக்காக, பெண்விடுதலைக்காக, ஏழை மக்களுக்காக, அட்டவணையினருக்காக, அருந்ததியருக்காக, மலைவாழ் மக்களுக்காக, விவசாயிகளுக்காக, அனைத்துவிதமான தொழிலாளர்களுக்காக, அடிப்படைத் தேவைகளுக்காக, நல்ல அரசியலுக்காக, எம் தோழர்கள் வாழ்க்கையையே போராட்டமாக்கிக் கொண்டவர்களல்லவா. எம் தோழர்களுக்கு அல்லும் பகலும் போராட்டக்களங்களல்லவா. உழைத்துக் களைத்தவர்கள் எம் தோழர்கள். நேர்மைக்குப் பெயர் பெற்றவர்கள் எம் தோழர்கள்.

அன்புத் தோழர்களே, உலகினர் யார் யாரையோ கடவுளெனக் கும்பிடுகிறார்கள், கோவில்கள் கட்டுகிறார்கள், பாடல்கள் பாடுகிறார்கள். மூட மனிதர்கள். உண்மையான கடவுள்கள் எம் தோழர்களல்லவா. ஆம் தோழர்களே. நீங்கள்தான் உண்மையிலேயே கடவுள்கள். கடவுள் பணியை, கடவுளென மண்ணில் ஒருவர் இருந்திருப்பாரேயானால் அவர் செய்திருக்கக்கூடிய மாபெரும் பணியை நீங்கள் செய்திருக்கிறீர்கள் தோழர்களே. நாற்றமடிக்கும் சாக்கடை கால்வாய்க் கரையில் கட்டியிருந்த எளியவர்களின் வீட்டை இடித்தபோது ஓடோடி வந்தது கடவுளா, எம் தோழர்களா. கூலியை உயர்த்திக் கேட்டபோது முதல் ஆளாய் போராட்டத்திற்கு திரண்டது எம் தோழர்களா, கடவுளா. பக்திமான்களாக வேடமிட்டவர்கள் கோவில்

சொத்துக்கள் முழுவதையும் கொள்ளையடித்துக் கொண்டபோது, கடவுளை மறுத்த எம் தோழா்கள் நோ்மையாக இருந்தாா்கள். நாள்தவறாமல் கடவுளைக் கும்பிட்டவா்கள் கையூட்டிலும், ஊழலிலும் திளைத்தபோது, கடவுள் பெயரைச் சொல்லாத எம் தோழா்கள் நாணயமாக இருந்தாா்கள். எம் தோழா்கள் சொத்துச் சோ்க்கவில்லை. சுகம் தேடவில்லை. உண்டு கொழுக்கவில்லை. ஊதாரியாய்த் திரியவில்லை. எம் தோழா்களின் தியாகம், உழைப்பு, நோ்மை ஒருபோதும் வீணாகாது. எம் தோழா்கள் உழைப்பு அதற்குரிய பலனைப் பெற்றே தீரும். பெறவேண்டும். அதுவே நீதி.

தோழா்களே, கடவுளாா்.. பிறா் துயரைப் பாா்த்தவிடத்து தம் மனதிலும் அத்துயரை நினைப்பவா் யாவரும் கடவுள்தான். பிறா் கண்ணில் வழியும் கண்ணீரைத் துடைக்க நீளும் கரம் கொண்டவா் கடவுள்தான். எவா் பிறா் துன்பத்தைக் கண்டு இரங்குகிறாரோ, அவா்தான் கடவுள் தோழமைகளே. யாா் உலகம் நன்றாக இருக்கவேண்டும் என உள்ளத்தில் நினைக்கிறாரோ அவரே கடவுள். எவரொருவா் உலக மக்களெல்லாம் பசியாறி மகிழ்ச்சியாக வாழவேண்டுமென விரும்புகிறாரோ அவா்தான் கடவுள். உண்மையில் அவரே பெருங்கடவுள்.

தோழா்களே, நிலம் பொதுவுடமையாக்கப்படும். அதில் எவ்வித மாற்றும் இல்லை. எந்தவிதமான சமரசமும் கிடையாது. நாம் உழைக்கத் தயாராவோம். நமது முதல் உழைப்பு வயல்களில். நமது முதல் உற்பத்தி உணவு. அடுத்த இலக்கு ஆயிரம் கல்விக்கூடங்கள். அடுத்ததாக அனைவருக்கும் வீடு. நாம் மனிதா்களின் தேவைகளை அடிப்படைத் தேவை, ஆடம்பரத் தேவை என பிரித்துக் கொள்வோம். எதையெல்லாம் பொதுவுடமையாக்குவது என்பதைத் தெளிவோம். மக்களுக்கு தனியுடைமையும் கொடுப்போம். அனைத்தும், அனைத்திலும், பொதுவுடமை என்பதில் சற்றே சமரசங்கள் கண்டு, மக்களின் விருப்பமறிந்து பொதுவுடமையை முன்னெடுப்போம்.

உற்ற தோழா்களே, வாருங்கள். நாம் சோ்ந்து உழைப்போம். ஒன்றாக உண்போம். ஒன்றுபோல் உடுத்துவோம். உலகமென்னும் ஒற்றைப் பெருங்கூரையின்கீழ் நாம் ஒருமனதாய் வாழ்வோம்.

நம் உழைப்பு வெல்லும். நம் நேர்மை ஜெயிக்கும். நம் பொதுவுடமை உலகெல்லாம் பரவும். எட்டுத் திக்கும் நம் வெற்றி எட்டும். நம் பொதுவுடமை பயிர் நாளும் வளரும். தொடரட்டும் தோழர்களின் மக்கள் பணிகள்.

**உயர் தோழமைகள் போற்றி!**

அன்பு நிறைந்தோரே.. நம் மனத்தில், நிலத்தில், பொதுவுடமை விதை முன்னரே ஊன்றப்பட்டிருக்கிறது. அது கிளைத்துப் பயிராகி நன்றாக வளர்ந்தும் வருகிறது. நம் பணி கொஞ்சம் இயற்கை உரமிதுவது மட்டுமே. அனைவரும் வாருங்கள். நாம் பொதுவுடமைக்கு உரமிடுவோம். விரைவில் அது செழித்து, செடியாகி, மரமாகி, பொதுவுடைமைப் பூக்களாய் பூத்துக் குலுங்கும். அதிலிருந்து பொதுவுடமைக் கனிகள் விதைகளாகி பாரெங்கும் முளைத்துப் பரவும்.

வாழிய பொதுவுடமை.. வாழ்க பொதுநலத் தந்தையர்..

**பூக்கட்டும் பொதுவுடமை; பூத்துக் குலுங்கட்டும் பொன்னுலகம்**

**மானுடரே..**

**இது தமிழ் வேள்வி**

**இவண் தமிழ்கிருஷ்ணா**

இம் மனிதர்களே..அம் தேவர்களே..உம் தெய்வங்களே..எம் கடவுள்களே..

**நினைத்ததை முடிப்பவன் கண்ணன்**

**முடியாததை முடித்து வைப்பவன் இராமன்**

யாம் முன்னர் பணியைத் துறந்தபோது எமது குடும்பத்தின் சொத்துக் கணக்கை வெளியிட்டிருந்தோம். அன்று (09.08.2011) எமது வங்கிக் கணக்கில் 5000 ரூபாய் இருந்தது. இன்று (14.10.2018) ரூபாய் 16,75,429.55 இருக்கிறது. அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 5,17,197 இருக்கிறது. பொது வைப்பு நிதியில் 14,84,640 ரூபாய் (ஜூலை

2018) இருக்கிறது. தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கிக் கணக்கில் ரூ.326 இருக்கிறது. கையிருப்பாக ரூ.8300 உள்ளது. மனைவியின் சேமிப்புக் கணக்கில் 19,29,000 ரூபாய் இருக்கிறது. மனைவியின் பங்களிப்பு ஓய்வூதிய சேமிப்புக் கணக்கில் ரூபாய் 15,12,900 (பிப்ரவரி 2018) இருக்கிறது. அன்றைக்கு சுமார் 25 பவுன் நகைகள் இருந்தன. அக்ஷயா சடங்கானதை முன்னிட்டு யாம் ஏழு பவுன் நகை வாங்கினோம். மாமன் சீர் மற்றும் சித்திகள் சார்பாக எட்டரைப் பவுன் நகைகள் செய்தார்கள். தற்போது எங்களிடம் மொத்தம் சேர்ந்து சுமார் 40 பவுன் நகைகள் உள்ளன. அன்றைக்கு வீட்டில் வெள்ளிப் பாத்திரங்கள் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தோம். வீட்டில் பூசை செய்ய ஆரம்பித்தபின் கண்ணனுக்கு நீரும் பழங்களும் படைப்பதற்காக இரண்டு வெள்ளித் குவளைகளும், சிறியதொரு வெள்ளித் தட்டும் வாங்கியிருக்கிறோம். தமிழரசி சீராகக் கொண்டு வந்த தொலைக்காட்சி பழுதாகிவிட்டதால், கடந்த ஆண்டு ரூ.87,000 மதிப்பில் 108 செ.மீ திரைகொண்ட புதிய தொலைக்காட்சியொன்று வாங்கியிருக்கிறோம். அக்ஷயா ஆசைப்பட்டார் என்பதற்காக ரூ.12,000 மதிப்பில் ஓவன் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். முன்னர் பஜாஜ் இருசக்கர வாகனம் மட்டுமே இருந்தது. 2006 ஆம் வருடத்தில் வாங்கியதால் மிகவும் பழையதாகி விட்டதால், 2018 ஏப்ரலில் தமிழரசி பெயரில் ரூ. 75,000 மதிப்பில் ஆக்டிவா இருசக்கர வாகனம் வாங்கியிருக்கிறோம். எங்களுக்கு தொப்பலாக்கரையில் ஒரு வீடு இருக்கிறது. அது தவிர வேறு வீடுகளோ, வீட்டு மனைகளோ இல்லை. நான்கு சக்கர வண்டி இல்லை. எங்கள் வருமானம் பேராசிரியர் பணிமூலமான வருமானம் மட்டுமே. நாங்கள் வேறுதொழில்கள் செய்து பணம் சம்பாதிப்பதில்லை. சிறப்பு வகுப்பு, பயிற்சி வகுப்பு போன்ற பிற வகைகளில் வருமானம் ஈட்டுவதில்லை. நாங்கள் ஆயுள் காப்பீடு, அஞ்சலக காப்பீடு கட்டி வருகிறோம். பெறும் ஊதியத்திற்கு முறையான வருமானவரி கட்டிவருகிறோம்.

எமது ஊதியத்தை யாம் நல்ல வழிகளிலேயே செலவிடுகிறோம். எம்மிடம் கஞ்சத்தனம் இல்லை. ஊதாரித்தனமும் இல்லை. பிடித்தம்போக யாம் வாங்கும் சம்பளத்தில் பத்து சதவிகிதத்தை பெற்றோருக்கு என ஒதுக்கியே வந்துள்ளோம். ரூ.15,000 வாங்கியபோதும் யாம் ரூ.1500 பெற்றோருக்கு அனுப்பிவிடுவோம். 50,000 பெற்றபோது ரூ. 5000 அனுப்பினோம். தற்போது ரூ.1,00,000 வாங்குவதால், வீட்டிற்கும் உறவினர்களுக்கும் என ரூ.10,000 அனுப்புகிறோம்.

யாம் குடிப்பதில்லை. புகைப்பதில்லை. தேநீரும் பருகுவதில்லை.

இன்றைய நாளில் எமக்கு எந்தவிதமான கடனும் இல்லை. எமக்கும் யாரும் கடன்கொடுக்க வேண்டியதில்லை. யாம் இதுவரையிலும் யாருக்கும் வட்டிக்குப் பணம் கொடுத்ததில்லை. வங்கியில் இருக்கும் பணமும் சேமிப்புக் கணக்கில்தான் இருக்கிறது. எமக்கு வட்டிப் பணம் வேண்டாம்.

அன்புடையோர்களே, கடன் இல்லாமல் வாழ்வதே நிம்மதியான வாழ்க்கை. கடன் வாங்கி காரைவீடு கட்டுவதைவிட, குடிசைவீட்டில் வாழ்வதே சிறப்பான வாழ்க்கை. கடன் வாங்குவதே இன்னொருவருக்கு அடிமையாவதுபோல்தான். சிந்திப்பீர் அறிவுடையோரே. ஆசைகளின் பின்னால் ஓடாதீர். கடன் அட்டைகளை வைத்துக்கொண்டு நம்மைக் கெஞ்சுகிறார்கள். அவர்களுக்கு ஆதாயம் இல்லாமல் நம் பின்னால் ஓடிவருவார்களா. சிந்தியுங்கள்.

தமிழரசி எமக்கு காலையில் ஏழு இட்லிகள் கொடுப்பார். அணில் தோழர்களுக்கு மூன்று இட்லிகள் வைத்து விட்டு யாம் நான்கு இட்லிகளை உண்போம். எம்மால் ஏழு இட்லிகளையும் சாப்பிட முடியும். ஆனாலும் யாம் அன்புத் தோழர்களுக்கும் பங்கிடுவதையே வழக்கமாக வைத்திருந்தோம். இப்படியான செயல்களையே பாரத மண் புண்ணியம் என்கிறது. யாம் செய்தது புண்ணியம் எனில் அதன் பலன் தந்தையாம் கண்ணனுக்குச் சேரட்டும். எம் தந்தை இன்னும் சிறப்பாக உலகங்காக்க இந்த அன்பு மகனின் சிறு பங்கு. தந்தையே, பெருவாழ்வு தந்தருளும் பரமமூர்த்தி, ஆரமுதே, பசுங்கிளியே, முத்தே, பொன்னே.. ஏற்றுக் கொள்ளுங்கள்.

எமது வாழ்க்கையில் சில நல்ல செயல்கள் செய்திருப்பதாக உள்மனம் கூறுகிறது. உற்றாருக்கு, உறவினருக்கு, தெரிந்தவருக்கு, நண்பர்களுக்கு, தெய்வங்களுக்குச் செய்வதெல்லாம் புண்ணியத்தில் சேருமா. அது கடமையன்றோ. அவை நல்ல செயல்களாக இருக்கலாம். புண்ணியமாகுமா. எனினும் யாம் இதுவரை (14.10.18) செய்த நல்லன யாவற்றையும் எந்தையாம் கண்ணனுக்கே சமர்ப்பிக்கின்றோம்.

யாம் கண்ணனெனும் பெயரில் உலகின் அறிவை முன்னெடுப்பதால் எமது அறிவு கண்ணனின் அறிவு. எமது வெற்றி கண்ணனின் வெற்றி. எமது புகழ் கண்ணனுக்கு.

யாம் உறுதியாக தீவினைகள் செய்திருக்க மாட்டோம். வாழ்க்கைப் பாடத்தில் நிறைய தவறுகள் செய்திருக்கிறோம். சில தப்புக்களும் பண்ணியிருக்கிறோம். தந்தைக்குத் தெரியாததல்ல. உள்ளத்தில் உறையும் மாலல்லவா. அரங்கத்து அப்பா அனைத்தும் அறிவாரே. எந்தையே, திருமாலே, கண்ணனே.. யாம் செய்த தப்புகள், தவறுகள் தொப்பலாக்கரையில் பிறந்த கிருஷ்ணமூர்த்தியாகிய எம்மைச் சேரட்டும். எமது தவறுகளுக்காக வருந்துகிறோம். இன்னும் நல்ல மனிதனாக வாழ முயற்சிக்கிறோம்.

கிருஷ்ணமூர்த்தி என்னும் எம்மைத் தோழன் என அழைத்தால் அகம் மகிழ்வோம். தோழரே எனக் கூப்பிட்டால் பெருமகிழ்வு கொள்வோம்.

எம் காலில் எவரும் விழக் கூடாது.

யாம் எவர் கண்ணிலும் சோகத்தைப் பார்க்கக்கூடாது.

யாம் பிச்சைக்காரர்களைக் காணக்கூடாது.

எமக்கு அழுகைச் சத்தம் பிடிக்காது.

யாம் சோம்பித் திரியும் மனிதரைப் பார்க்க விரும்பவில்லை.

யாம் மனிதர் திருடினார் எனக் கேட்கக்கூடாது.

யாம் ஆணையும் பெண்ணையும் இணையாகவே காண விரும்புகிறோம்.

யாம் எதிலும் ஒற்றைத் தன்மையைப் பார்க்க விரும்பவில்லை.

புகழுடைய மனிதர்களே..

எதுவும் எமது எண்ணங்களில்லை

எவையும் எமது திட்டங்களில்லை

எமது அறிவால் எதுவுமில்லை

எண்ணங்களை விதைத்தவா்கள் எத்தனையோ நூறு ஆயிரம் பேர்

அறிவைத் தேடியோர் பல்லாயிரம்

அறிவைச் சுமந்தவர்கள் ஆயிரமாயிரம்

உழைத்துக் களைத்தவா்கள் கோடான கோடிப் பேர்

மண்ணைச் சமமாக்கியவா்கள் அவா்கள்

உழுததும் உழைத்துப் பயிராக்கியது அவா்கள்

தண்ணிா் பாய்ச்சி உரமிட்டு ஊட்டி வளா்த்ததும் அவா்கள்

அவருக்குச் சொந்தமான அறிவென்னும் இப்பயிரை

இதோ யாம் அறுவடை செய்கிறோம்

ஓஓ செப்பியன்சு..

யாமல்லவோ  நல்ல அறிவுப் பயனாளி

நாமல்லவோ அதிக அறுவடைப் பயனாளிகள்

# Peace and Love to All

உலகின் வித்தான, உயிா்களுக்கு அமுதமான நம் திவ்விய மாதவக் கண்ணன் குறளுருவாய் கோளரியாய் மலா்க்கண்கள் திறக்கிறான். வாராது வந்த மாமணியான நம் வராகத்து அணியுருவன் பாதம் பணிவோம்.

ஆகாயத்தைவிடவும் பெருமையான பெருமை கொண்ட நம் செந்தாமரைக் கண்ணனான திருமாலுக்கு மங்களங்கள் நிறையட்டும்! ஆண்டாளின் ஆனந்தக் கண்ணனுக்கு மங்களம்! வேங்கடத்தின் மறைமூா்த்திக் கண்ணனுக்கு சுபமங்களம்! வரம்தரும் வரதனுக்கு ஜெயமங்களம்!

மண்கொண்டு மண்ணுண்டு மண்ணுமிழ்ந்த மாயனெம்பெருமான் வாழி!

வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும் பாதத்தான் பாதம் வாழி!

மணிவண்ணன் வாழி! மாமதுரைக் கண்ணன் வாழி!

பேராழி வாழி! பெருஞ்சங்கம் வாழி! பெருந்தமிழோன் வாழி!

நீராழி வாழி! நெடுமலராள் வாழி!

**அடியார்கள் வாழி; அரங்கநகர் வாழி; அங்கண்மாஞாலத்தரசு வாழி!**

தாயவனே கேசவனே மாயவனே

மாலே நெடியோனே கண்ணனே

விண்ணவர்க்குத் தலைவனே

வியன்துழாய்க் கண்ணியனே

தேனமரும் கமலத்திருவின் நாயகனே

உன் சேவடி செவ்வித் திருக்காப்பு!!

**ஸ்ரீஹரிலெட்சுமி சமேத ஸ்ரீஹரிக்கு மங்களம்!!**

## ஹரி ஓம்.

## தேவேந்திரர்

01. தெய்வம் - இருக்கண்குடி மாரியம்மன்
02. பூதம் - நீர்
03. காலம் - ஆண்டு
04. மலர் - செந்தாமரை
05. தாவரம் - வாழை
06. பறவை - கிளி
07. விலங்கு - பசு
08. நிறம் - நீலம்
09. திசை - கிழக்கு
10. ஆயுதம் - கம்பு
11. விளையாட்டு - மல்யுத்தம்
12. சங்கப் பெருமை - சேரர்
13. காப்பியம் - மணிமேகலை
14. குறள் - உழவு - சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்
15. பாரதி - சுதந்திரப் பள்ளு - பள்ளர் களியாட்டம்
16. பாரதிதாசன் - இன்பத் தமிழ் - தமிழுக்கு அமுதென்று பேர்
17. எம்.ஜி.ஆர் - ஏன் என்ற கேள்வி (ஆயிரத்தில் ஒருவன்)
18. பல்லாண்டு - பல்லாண்டென்று பவித்திரனை பரமேட்டியை (12)
19. திருப்பாவை - ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி (3)
20. திருமாலை - பச்சைமா மலைபோல் மேனி
21. அந்தாதி - அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
22. திருவாய்மொழி - உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன் (1-1)
23. ஆழ்வார் - குலசேகராழ்வார்

24. ஆச்சாரியார் - நாதமுனி

25. பெருமாள் - திருவேங்கடமுடையான் - பத்மாவதித்தாயார்

26. சகஸ்ரம் - மஹாபுத்திர் - மஹாவீர்யோ - மஹாசக்திர் - மஹாத்யுதிக்ஹி

27. மந்திரம் - ஸ்ரீராம ஜெய ராம ஜெய ஜெய ராமா

28. சிவத்தலம் - உண்ணாமுலையார் சமேத அண்ணாமலையார்

29. படைவீடு - திருப்பரங்குன்றம்

30. விநாயகர் - புளியகுளம் முந்திவிநாயகர்

31. காப்பு - கருப்பசாமி

32. ஞானம் - புத்தம்

**தேவர்**

01. தெய்வம் - தாயமங்கலம் முத்துமாரியம்மன்

02. பூதம் - நிலம்

03. காலம் - மாதம்

04. மலர் - ஆம்பல்

05. தாவரம் - தென்னை

06. பறவை - மயில்

07. விலங்கு - நாய்

08. நிறம் - பச்சை

09. திசை - மேற்கு

10. ஆயுதம் - அருவாள்

11. விளையாட்டு - சிலம்பம்

12. சங்கப் பெருமை - சோழர்

13. காப்பியம் - சீவக சிந்தாமணி

14. குறள் - வான் சிறப்பு - நீரின்றி அமையாது உலகு

15. பாரதி - செந்தமிழ் நாடு - செந்தமிழ் நாடெனும் போதினிலே

16. பாரதிதாசன் - புதிய உலகு செய்வோம்

17. எம்.ஜி.ஆர் - கண்ணை நம்பாதே (நினைத்ததை முடிப்பவன்)

18. பல்லாண்டு - எந்நாளெம்பெருமான் உன்றனுக்கடியோம் (10)

19. திருப்பாவை - அன்றிவ் வுலகம் அளந்தாய் அடி போற்றி (24)

20. திருமாலை - கங்கையிற் புனிதமாய காவிரி

21. அந்தாதி - வையம் தகளியா வார்கடலே நெய்யாக

22. திருவாய்மொழி - ஆராவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே (5-8)

23. ஆழ்வார் - திருமங்கையாழ்வார்

24. ஆச்சாரியார் - உடையவர்

25. பெருமாள் - வடபத்ரசாயிபெருமாள் - நாச்சியார்

26. சகஸ்ரம் - விச்வமூர்த்திர் - மஹாமூர்த்திர் - தீப்தமூர்த்தி - ரமூர்த்திமான்

27. மந்திரம் - ஜெய ஜெய ராமா ஜானகி ராமா ஜானகி ராமா ஜெய ஜெய ராமா

28. சிவத்தலம் - மீனாட்சி உடனுறையும் சொக்கநாதர் - மதுரை

29. படைவீடு - திருச்செந்துார்

30. விநாயகர் - உச்சிப் பிள்ளையார்

31. காப்பு - பதினெட்டாம்படி கருப்பசாமி

32. ஞானம் - கௌமாரம்

**நாடார்**

01. தெய்வம் - சமயபுரம் மாரியம்மன்
02. பூதம் - நெருப்பு
03. காலம் - நாள்
04. மலர் - வெண்தாமரை
05. தாவரம் - பனை
06. பறவை - கருடன்
07. விலங்கு - காளை
08. நிறம் - வெண்மை
09. திசை - தெற்கு
10. ஆயுதம் - கத்தி
11. விளையாட்டு - கபடி
12. சங்கப் பெருமை - பாண்டியர்
13. காப்பியம் - சிலப்பதிகாரம்
14. குறள் - அன்புடைமை - அன்பின் வழியது உயிர்நிலை
15. பாரதி - தமிழ்மொழி வாழ்த்து - வாழ்க நிரந்தரம்
16. பாரதிதாசன் - சங்க நாதம் - எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
17. எம்.ஜி.ஆர் - ஒருதாய் மக்கள் நாமென்போம் (ஆனந்த ஜோதி)
18. பல்லாண்டு - எந்தை தந்தை (6)
19. திருப்பாவை - அம்பரமே தண்ணீரே சோறே (17)
20. திருமாலை - திருமறுமார்ப நின்னைச் சிந்தையில்
21. அந்தாதி - திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
22. திருவாய்மொழி - முனியே நான்முகனே முக்கண் அப்பா (10-10)
23. ஆழ்வார் - பெரியாழ்வார்

24. ஆச்சாரியார் - மணவாளமாமுனிகள்
25. பெருமாள் - பார்த்தசாரதிப் பெருமாள் - ருக்மிணித் தாயார்.
26. சகஸ்ரம் - சதுர்மூர்த்திர், சதுர்பாஹு, சதுர்வியூகச், சதுர்கதிஹி
27. மந்திரம் - ராம ராம ஜெய ராஜா ராமா ராம ராம ஜெய சீதா ராமா
28. சிவத்தலம் - காந்திமதித் தாயார் உடனுறை நெல்லையப்பர்
29. படைவீடு - திருத்தணிகை
30. விநாயகர் - பிள்ளையார் பட்டி
31. காப்பு - மாடசாமி
32. ஞானம் - சமணம்

# விக்ரமயூர்ஜிதசாஸனம் - மனிதர்

அனைத்து உயிர்களுக்கும்

அனைத்து உலகங்களுக்கும்

அனைத்து உள்ளங்களுக்கும்

அனைத்து உறவுகளுக்கும்

அனைத்து உணர்வுகளுக்கும்

அனைத்து உரிமைகளுக்கும்

அனைத்து உண்மைகளுக்கும்

அனைத்து உயர்வுகளுக்கும்

அனைத்து உவப்புகளுக்கும்

அனைத்து உழைப்புகளுக்கும்

கிருஷ்ணார்ப்பணம்

## விக்ரமயூர்ஜிதசாஸனம் - தேவர்

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் போற்றி!

ஆச்சார்யார்களின் அருந்தொண்டுகள் போற்றி!

குருபரம்பரை போற்றி!

வைணவப் பெரியோர்கள் போற்றி!

அடியார்கள் போற்றி!

அரங்கநகர் போற்றி!

ஆண்டாள் அம்மா போற்றி!

ஆழிசூழ் உலகு போற்றி!

அண்டரண்ட பகிரண்டங்கள் போற்றி!

உய்யவந்த விண்ணகரப்பெருமாளே போற்றி!

**விக்ரமயூர்ஜிதசாஸனம் - கடவுளர்**

# எப்போதும் வென்றான்

$$p + q = 1$$

THE STORY OF A GREAT FATHER AND

HIS BRAVE SON

தமிழ் கிருஷ்ணா

## நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
நாங்கள் மண்ணைக் காப்போம்
மழையைக் காப்போம்
மரத்தைக் காப்போம்
மனிதரைக் காப்போம்

நாங்கள் மண்ணைப் பொன்னாக்குவோம்
மழையை உணவாக்குவோம்
பயிரை உயிராக்குவோம்
விதையை மரமாக்குவோம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் மண்ணைக் காக்க மண்ணாவோம்
மழையைக் காக்க மழையாவோம்
மொழியைக் காக்க மொழியாவோம்
உயிரைக் காக்க உயிராவோம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் உயிர்களைக் காப்போம்
உலகங்களைக் காப்போம்
உறவுகளைக் காப்போம்
உள்ளங்களைக் காப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் எளியோரைக் காப்போம்
பெண்களை பேணிப் பாதுகாப்போம்
முன்னோரைக் காத்து நிற்போம்
தெய்வங்களுக்கும் காவல் இருப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் இயற்கையைக் காப்போம்
இறைவனைக் காப்போம்
இதயங்களைக் காப்போம்
ஈரேழு உலகங்களையும் காப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
நாங்கள் அணுவைப் பாதுகாப்போம்
அண்டத்தைப் பாதுகாப்போம்
அகிலத்தைப் பாதுகாப்போம்
அனைத்தையும் பாதுகாப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
எங்களுக்குத் தோல்வி இல்லை
எங்களுக்குத் துயரமில்லை
எங்களுக்கு வலி இல்லை
எங்களுக்கு வருத்தமில்லை
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
நாங்கள் வெல்வோம்
எப்போதும் நாங்களே வெல்வோம்
நாங்கள் எப்போதும் வெல்வோம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் அன்பால் காத்து நிற்போம்
அறிவால் காத்து நிற்போம்
வீரத்தால் காத்து நிற்போம்
ஞானத்தால்  காத்து நிற்போம்
நாங்கள் என்றென்றும் காத்து நிற்போம்.


வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
அன்பும் அறிவும் உயர்வான
ஆணும் பெண்ணும் சமமான
எல்லா உயிர்க்கும் பொதுவான
புதியதோர் உலகம் செய்வோம்"
புத்துலகு வாழ்த்துக்கள்!
தமிழ் கிருஷ்ணா


ஸ்ரீமத் வரவரமுநயே நம:
அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்தமிழ் நூல் வாழ
கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ
மணவாள மாமுனிக்கு பல்லாண்டு !
பரித்ராணாய ஸாதூனாம்
விநாசாய சதுஷ்க்ருதாம்|
தர்ம-ஸம்ஸ்தாபனார்த்தாய
ஸம்பவாமி யுகே யுகே!
எயிற்றிடை மண்கொண்ட எந்தை இராப்பகல் ஓதுவித்து எம்மைப்
பயிற்றுப் பணிசெய்யக் கொண்டான்; பண்டன்று பட்டினம் காப்பே.
திருக்காப்பு! திருமண் காப்பு!!
திருவரங்கனே காப்பு!!!
Shall i measure
தோழமையுடன்
க. கிருஷ்ணமூர்த்தி

அனுப்புநர்

க. கிருஷ்ணமூர்த்தி,
விலங்கியல் உதவிப் பேராசிரியர்,
அரசு கலைக்கல்லூரி,
கோயம்புத்தூர்-641 018

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள்,
கல்லூரிக் கல்வி இயக்குநரகம்,
சென்னை.

உரிய வழியாக

அன்புடையீர்,

பொருள் - விலங்கியல் உதவிப் பேராசிரியர் பணியினை
ராஜினாமா செய்தல் - தொடர்பாக.

நான் 02.11.1998 முதல் விலங்கியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறேன். சொந்த விருப்பத்தின் பேரில் எனது பணியை இன்று (01.08.2011) ராஜினாமா செய்கிறேன். அதற்குக் காரணமாக சில விஷயங்களை தங்களிடம் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இச்சமூகத்தில் நடக்கும் பல நிகழ்வுகள் எனது அறிவுக்கு ஏற்படையதாக இல்லை. விலங்கியல் உதவிப் பேராசிரியர் என்ற முறையில் கிடைக்கும் ஊதியத்தில் நானும் எனது குடும்பமும் வளமாக இருக்கிறோம். இருப்பினும் இந்த வாழ்க்கையில் எனக்கு திருப்தியும், மன ஆறுதலும் கிடைக்கவில்லை எனக் கருதுகிறேன்.

பல கேள்விகளுக்கு விடைகாணும் நோக்கில் எனது வாழ்க்கைப் பயணம் சென்று கொண்டிருப்பதை உணர்கிறேன். மனிதர்களாகிய நாம் ஏன் இத்தனை அன்பற்றவர்களாக இருக்கிறோம் என்பது எனக்குப் புரியவில்லை. இவ்வளவு அறிவியல் முன்னேற்றங்களுக்குப் பின்னரும் ஏன் நம்மால் சிறந்த அறிவோடு வாழ இயலவில்லை? விலங்குகளையும், தாவரங்களையும், மண்ணையும் அழிப்பது எப்படி ஆறாவது அறிவாகவும், பகுத்தறிவாகவும் இருக்க முடியும்?

எத்தனையோ ஞானிகளும், புத்தர்களும், சித்தர்களும், அறிஞர்களும் தோன்றிய பின்னரும், இப்பூமியில் சிறுவர்களும், முதியவர்களும் இன்றும் பிச்சை எடுத்துத் திரிவது எப்படி? ஒரு சவரன் நகைக்காக கொலை நடப்பது ஏன்? இன்னும் திருட்டுத் தொழில் தொடர்வது எதனால்?

நிலத் தகராறில் மகனே தந்தையைக் கொல்கிறான். வேறு சாதிப் பையனை திருமணம் செய்ததற்காக மகளை அப்பாவே கடப்பாறையால் குத்திக் கொல்கிறார். இன்னும் காட்டுமிராண்டிச் சமுதாயம் இருப்பது எப்படி?

மனிதகுல அறிவைக் கொண்டு எல்லோருக்குமான, மிகச் சிறந்த உடல், மன மகிழ்ச்சிக்கான, சகோதரத்துவத்திற்காக ஒரு உலகத்தைப் படைக்க இயலாதா?

கடந்த பல வருடங்களாகவே எனது மனமும் அறிவும் இதைத் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. சரியாகச் சொல்வதென்றால் நான் சென்னையில் 1998ல் ஆராய்ச்சி மாணவராகவும், வேலைக்கான பணி ஆணையை எதிர்பார்த்தும் காத்திருந்த வேளையில், எனக்கு இந்த உலகினை அன்பும் அறிவும் கொண்ட ஒரு புதிய உலகமாக மாற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வு அதி தீவிரமாக ஏற்பட்டது. இத்தனை வருடங்கள் கழித்தும் அதற்கான தேவையும், நியாயங்களும் அப்படியே தான் உள்ளது.

சமீபத்தில் மு. வரதராசனாரின் கி.பி. 2000 என்ற புத்தகம் படிக்க நேர்ந்தது. பல வருடங்களுக்கு முன் எனக்கு ஏற்பட்ட உள்ளுணர்வும் இந்தப் புத்தகத்தின் கனவும் ஒன்று போல் இருப்பது வியப்பான ஒன்று தான். புதிய உலகம் பற்றிய எனது கனவும் இதில் சொல்லப்பட்டுள்ள ஒரு பொதுவுடமைச் சமுதாயம் போன்றதே.

உலகில் உண்மையாக அன்பையும், பூரணமாக அறிவையும் மலரச் செய்வதே எனது வாழ்வின் பணியாகக் கொள்ளப் போகிறேன். எனது எஞ்சியுள்ள வாழ்வு கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி எனது பெருமை மிகு தமிழ்க்குடி என்பதற்கு சான்றாக அமையும். முன்னேற்றம் என்ற பாதையில் செல்லும் இன்றைய சுயநல அறிவு, நிச்சயம் கல்லும் மண்ணும் கூட இல்லாத ஒன்றாகப் பூமியை ஆக்கி விடும். தமிழர் தம் அறிவுத் திறத்தாலும், தமது தியாகத்தாலும் மட்டுமே இதைத் தடுக்க இயலும். ஏனெனில் தமிழர் வேறு உலகம் வேறு அல்ல என்பது எனது முடிவு.

$p + q = 1$ என்ற பெயரில் நான் ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். எல்லோர் மனமும் அறிவும் முழுமையாக ஒப்புக் கொள்ளுமாறு நாம் அண்டவெளி ரகசியங்களை எடுத்துச் சொல்லத் தவறி விட்டோம் என நினைக்கிறேன். எனது புத்தகம் அதை நிறைவேற்றக் கூடும்.

பாவாணர் தாம் எழுதிய சில நூல்கள் மட்டும் வெளி வந்து விட்டால் தமிழர் தெளிவு பெற்று விடுவர் என்றும் தமிழ்நாடே மாறிப் போய் விடும் என்றும் கனவு கண்டதாகத் தெரிகிறது. தமிழர்களின் அறிவைக்குறைவாக மதிப்பிட்டு

விட்டார் போலும். தமிழர்களுக்கு மொழி உணர்வு, மத உணர்வைக் காட்டிலும் சாதி உணர்வே அதிகம் என்பது ஆகச் சிறந்த உண்மை.

தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதி நல்லவேளை மண்மூடிப் போய் விட்டார். இன்னும் சோமாலியாவில் தினமும் 250 குழந்தைகள் பசியால் சாகிறார்கள் என்ற செய்தி வருகிறது. யாதும் ஊரே ; யாவரும் கேளீர் ; என்று சொல்வதில் தமிழர்க்கு ஒரு பெருமையும் இல்லை.

நான் தங்களிடம் கூறிக்கொள்ள விரும்புவது, நான் சமச்சீர் சமுதாயம் என்றொரு உயர்ந்த லட்சியத்திற்காக மிகுந்த உள்ள உறுதியுடன் ஒரு மாவீரனைப் போன்று அன்பு, அறிவு என்னும் ஆயுதமேந்தி போரிடப் போகிறேன். என் பாதை எத்தகைய இடர் நிறைந்தது என்றும் போக வேண்டிய தூரம் எல்லையற்றது என்பதையும் அறிவேன்.

புற்று நோயால் வாழ்வின் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் அம்மா, கிராமத்தில் வாடகை அறையில் குடியிருக்கும் அப்பா, கட்டி முடிக்கப்படாத வீடு, கஷ்டப்படும் அக்கா, அண்ணன், எனது பண உதவி கிடைத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலையில் படிக்கும் இவர்களது பிள்ளைகள், கூலி வேலை செய்தே பிழைக்கும் இரத்த உறவுகள். இவர்களுக்கெல்லாம் நான் ஏதும் செய்ய இயலாத நிலையில் எனது பணியைத் துறப்பது யாராலும் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க இயலாதது.

ஒன்றே செய், நன்றே செய், அதுவும் இன்றே செய் என எனக்கு அறிவு புகட்டியது தமிழ்தான். வந்தாரையெல்லாம் வாழ வைக்கும் தமிழ் எனது குடும்பத்தையும் வாழ வைக்கிறதா? என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் பார்க்கட்டும்.

இப்போதைக்கு எனது ஒரே நம்பிக்கை எனது மனைவி தமிழரசி தான். இதே கல்லூரியில் விலங்கியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். திருமணத்திற்கு முன்பே எனது கனவுகள், லட்சியங்கள், எதிர்கால செயல்திட்டங்கள் எல்லாம் சொல்லி இவரது ஒப்புதலோடு தான் திருமணம் நடந்தது. குடும்பத்தை நன்றாகக் கவனித்துக கொள்வார் என உறுதியாக நம்புகிறேன்.

நான் இன்றிலிருந்து (01.08.11) 31.07.2021 வரை பத்து வருட காலங்களுக்கு உயர்வு தாழ்வு இல்லாத பொதுவுடமைச் சமுதாயம் படைக்க பொது வாழ்க்கைக்கு செல்கிறேன். மனித வாழ்க்கையின் மகத்துவத்தைப் பேசப் போகிறேன். ஒவ்வொருவர் மனசாட்சியையும் தட்டப் போகிறேன். முன் வைத்த

காலைப் பின் வைக்கப் போவதில்லை. பத்து வருடங்களுக்குப் பின் எனது ஊரும் தமிழ் உலகமும் எப்படி இருக்கிறது என்று பார்க்கப் போகிறேன்.

கல்லூரி ஆசிரியப் பணி வழங்கிய தமிழக அரசுக்கும், பல்வேறு கல்லூரிகளில் உடன் பணியாற்றிய துறை நண்பர்களுக்கும், சக பேராசிரியர்களுக்கும் நன்றிகள் பாராட்டுகிறேன்.

எனது வாழ்வு 2022ம் வருடத்திற்குள்ளாக சில கேள்விகளுக்கான பதிலைத் தந்திருக்கும். நீதி - அநீதி என்றும் நல்லது - கெட்டது என்றும் ஏதேனும் உண்டா என்பதற்கும் மனித வாழ்வு எதற்காக என்பதற்கும், கடவுள் என்று ஒருவர் இருக்க முடியுமா என்பதற்குமான பதில்களைத் தரலாம்.

இனி வரும் பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதே இனிமேல் உலகத்தாரின் வரலாறு.

அன்பும் அறிவும் உயர்வான
ஆணும் பெண்ணும் சமமான
எல்லா உயிர்க்கும் பொதுவான
"புதியதோர் உலகம் செய்வோம் "

(கிருஷ்ணா வந்தாச்சு, நிலா வந்தாச்சு, இது என் அன்பு அச்சுதன் அக்ஷயாவுக்காக)

தமிழ்கிருஷ்ணாவின் Count down starts now.

தங்கள் உண்மையுள்ள,

01/08/11

(க. கிருஷ்ணமூர்த்தி)

தேதி – 01.08.2011
இடம் - கோயமுத்தூர்

(நாடு சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகள் நடந்து முடிந்த பின்பும், சமூக, அரசியல், பொருளாதாரத் தளங்களில் உண்மையான மாற்றம் உருவாகி விடவில்லை. ஜமீன்தாரர்கள் ஒழிக்கப்பட்டனர். பெரு நிலக்கிழார்களின் ஆதிக்கம் அழியவில்லை. நிலச் சீர்திருத்தம் அறிவிக்கப்பட்டது. நிலமற்றோர் நிலை மாறவில்லை. சட்டப்படி தீண்டாமை தடுக்கப்பட்டது. தலித்கள் எரியூட்டப்படுவது தொடரத்தான் செய்கிறது. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. ஆனால் அது இன்னமும் பணக்காரர்களைத்தான் பராமரிக்கிறது. ஜனநாயக ஆட்சி நடக்கிறது. ஆனால், அரசியல் அமைப்பில் 'ஜனநாயகப்படுத்துதல் ' என்பதற்கு இடமே இல்லாமல் போய் விட்டது. புதிய பொருளாதாரம் பூத்துக் குலுங்கும் நிலையிலும் 40 சதவிகித மக்கள் வறுமையோடு தான் வாழ்க்கை நடத்துகின்றனர். நம்மை ஆட்சி செய்யும் அமைப்பின் சகல மட்டங்களிலும் ஊழல் ஆழமாக ஊடுருவி விட்டது. இன்றைய இந்தியத் தேவை ஜெயப்பிரகாஷ் நாராயண் கனவு கண்ட முழுமைப்புரட்சி ஒன்று தான்)

திரு. தமிழருவி மணியன் - ஜுனியர் விகடன் (31.7.11)
தமிழ் ஆதாரம் -(1)

